Digitization by eGangotri-South Center

IMAGE™
COPIER

bilt

SELECTED BUSINESS Superbrand

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

Size :210x297mm.
G.S.M. :70
Sheets :500 Nos.
Product: Paper

IMAG
COPI

Ballarpur Industr
Unit : Sewa Gaganapur, P.O.: Jeypore-76
Registered Office : Ballarpur Paper Mills, Dist.
BILT Image Copier is the Trademark

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சிமைய வெளியீடு

உ

சிவமயம்

சிவஞானபோதம்

(தெளிவுரை)

உரையாசிரியர் :

' செந்நெறிச் செல்வர் ', ' மெய்ஞ்ஞான வள்ளல் '

திரு. கு. வைத்தியநாதன்.

இயக்குநர்.

திருவாவடுதுறை ஆதீன

சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம்

திருவிடைமருதூர்

(மூன்றாம் ஆண்டு)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மெய்கண்டதேவ நாயனார்

பண்டை மறை வண்டு அரற்றப், பசுந்தேன் ஞானம்
பரிந்து ஒழுகச் சிவகந்தம் பரந்து நாறக்,
கண்ட இருதய கமல முகைகள் எல்லாம்
கண் திறப்பக், காசினிமேல் வந்த அருட் கதிரோன்,
விண்டமலர்ப் பொழில் புடைசூழ் வெண்ணெய் மேவும்
மெய்கண்டதேவன், மிகு சைவ நாதன்
புண்டரிக மலர் தாழச் சிரத்தே வாழும்
பொற் பாதம் எப்போதும் போற்றல் செய்வாம்.

—அருள்திரு உமாபதி சிவாச்சாரியார்.

Sri Namasivayamoorthy Offset Press,
Thiruvavaduthurai.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அருள்திரு மெய்கண்ட சிவம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சிவமயம்

பொருளடக்கம்

முன்னுரை பக்கம்

சிவஞானபோதம் - தெளிவுரை

சிறப்புப்பாயிரம் 6

மங்கல வாழ்த்து 10

அவையடக்கம் 12

I. பொது அதிகாரம்

1. பிரமாண இயல்

சூத்திரம்-1. அவன் அவள் அது எனும் 14

,, - 2. அவையே தானே ஆய் 41

,, - 3. உளது இலது என்றலின் 76

2. இலக்கண இயல்

சூத்திரம்-4, அந்தக்கரணம் 98

,, -5, விளம்பிய உள்ளத்து 129

,, -6, உணர்உரு அசத்து எனின் 143

II. உண்மை அதிகாரம்

3. சாதன இயல்

சூத்திரம் -7, யாவையும் சூனியம் 166

,, -8, ஐம்புலவேடரின் 184

,, -9, ஊனக்கண் பாசம் ....

4. பயனியல்

சூத்திரம் - 10. அவனே தானே ஆகிய 246

,, - 11, காணும் கண்ணுக்கு 268

-12, செம்மலர் நோன்றாள் 296

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ

சிவமயம்

முன்னுரை

'' சிவஞானம்'' என்பது, ஆகமத்தால் நிகழும் ஞானத்தை உணர்த்துவது ஆகும். ஆகமங்களின் பொருள் ஒற்றுமையை நிறுவி உணர்த்தும் காரணத்தால் '' சிவஞான போதம் '' எனப்பெயர் ஆயிற்று. '' சிவஞான போதம் '' என்பதற்குச் சிவபெருமான் அருளிச்செய்த பொருள். ' சிவம் என்னும் ஒரு பொருளைத் தேர்ந்து தெளிதல் ஆகும் ' என்பதே. இவ்வாறு திருவாதவூரடிகள் புராணம் கூறுகின்றது. எனவே சிவபெருமானைப் பற்றிய ஞானத்தை நமக்குப் போதிக்கும் (உணர்த்தும்) நூல் சிவஞான போதம் எனப்படும்.

ஏறத்தாழ எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பு, திருவெண்ணெய் நல்லூரில் எழுந்தருளியிருக்கும் மெய்கண்ட தேவ நாயனார், தமிழ் கூறும் நல்லுலகம் உய்யும் பொருட்டுத் தமிழில் சிவஞான போதத்தை அருளிச் செய்தார்கள். ஆயினும் இந்நூல் அநாதியே சிவபெருமான் திருக்கரத்தில் இருக்கிறது. வாதவூரடிகளுக்கு அருளுதற் பொருட்டுச் சிவபெருமான், மானுடச்சட்டை தரித்துக் கயிலையினின்றும் எழுந்தருளி வந்து, திருப்பெருந்துறையில் குருந்த மரநிழலின்கீழ் வீற்றிருந்த பொழுது, அவரது திருக்கரத்தில் தாங்கப்பெற்று இருந்தது, இந்தச் சிவஞானபோதமே ஆகும். இதிலிருந்து இந்நூல் எத்துணைப் பெருமை உடையது என்பது புலப்படும்.

இந்நூலுக்குத் தற்காலத்தில் பல உரைநூல்கள் தோன்றியுள்ளன. ஆயினும் அவற்றிற்கெல்லாம் மூல உரை நூலாகத்திகழ்வது, திருவாவடுதுறை ஆதீனத்தின் குலதெய்வம் எனப் போற்றப்பெறும் தவத்திரு மாதவச் சிவஞான முனிவர் அருளிச்செய்த திராவிட மாபாடியம் எனப்படும் சிவஞானபோதப் பேருரையும் சிவஞானபோதச் சிற்றுரையுமே ஆகும். மாதவச் சிவஞான முனிவர் அவர்களின் காலத்திற்கு முன்பு எழுதப்பட்ட'' சிவஞானபோதம் -பாண்டிப்பெருமாள் விருத்தி '' என்றோர் உரைநூல் உள்ளது. ஆயினும் மாதவச் சிவஞான முனிவர் அவர்கள் உரைநூல்களே,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சைவசித்தாந்த உண்மைகளைச் சற்காரியவாதஅடிப்படையில் நிறுவுவதில் தலையாயனவாக விளங்குகின்றன.

மாதவச் சிவஞான முனிவர் அவர்கள் அருளிச்செய்த சிவஞானபோதச் சிற்றுரையினை அடியொற்றித், திருவாவடுதுறை ஆதீன சைவப் பிரசாரகராக இருந்த தூத்துக்குடி பொ. முத்தையா பிள்ளை அவர்கள் '' சிவஞானபோதச் சிற்றுரை விளக்கம்'' என்னும் அரியதொரு நூலைச் செய்திருக்கிறார்கள், மேற்படி விளக்க நூலைத் தழுவி அதில் உள்ள செய்திகளை நடைமாற்றம் செய்து, சந்தி பிரித்து இந்தத் தெளிவுரை எழுதப்பெற்றுள்ளது. எளிதில் மாணவர்கள் புரிந்து கொள்ளும்பொருட்டுச் சில குறிப்புரைகளும் இடையில் எழுதப்பட்டுள்ளன.

'' என்னைஇப் பவத்தில் சேரா
வகை எடுத்து என்சித் தத்தே
தன்னை வைத்து அருளி னாலே
தாள்இணை தலைமேல் சூட்டும்''

என்று சிவஞானசித்தியாரில் அருணந்திசிவம் அருளிச் செய்தபடி, அடியேனின் 'ஞானத்தந்தை' ஆகிய திருவாவடுதுறை ஆதீனத்து இருபத்து மூன்றாவது குரு மகாசந்நிதானமாக எழுந்தருளிச் சிவஞானச் செங்கோல் ஓச்சிவரும் சீர்வளர் சீர் சிவப்பிரகாச பண்டாரச்சந்நிதி அவர்கள் இந்த அடிமையையும் ஒரு பொருட்டாகக் கருதி, இந்தச் சீரிய பணியில் முயக்குவித்து அருளிச்செய்துள்ள பேரருட் பேற்றினை நினைந்து நினைந்து, அவர்கள் பொன்னார் திருவடிகளை அடியேன் சிரமேற்கொண்டு, மனம் மொழி மெய்களால் போற்றி வழிபடுகின்றேன்.

சீர்வளர் சீர் குரு மகாசந்நிதானம் அவர்களது திருவருளை மாணவர்களும் சிந்தையில் கொண்டு, இந்நூலினை ஆழ்ந்து கற்றுப் பயன் பெறுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

திருவிடைமருதூர் அடியேன்,
9.1.97. கு. வைத்தியநாதன்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையிற் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

—தவத்திரு மாதவச் சிவஞான யோகிகள்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

திருவாவடுதுறை ஆதீனம்

குருமுதல்வர்

அருள்திரு நமசிவாயமூர்த்திகள்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ

சிவமயம்

சிவஞான போதம்
(தெளிவுரை)

சிறப்புப் பாயிரம்

சைவ ஆகமங்களில், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்கள் உள்ளன. அவற்றுள் ஞாதனபாதத்தில், பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்கள் பற்றிய ஆராய்ச்சி செய்யப்படுகிறது. இதனைக் கேட்க விரும்புபவர்க்கு முதற்கண் சில ஐயங்கள் ஏற்படுவது இயல்பு. அந்த ஐயங்கள் வருமாறு ;

1. இதனுள் கூறப்படும் பயன் யாது?
2. இதனைக் கேட்பதற்கு உரிய தகுதி உடையவர் யார்?
3. இந்நூலில் சொல்லப்படும் பொருள் யாது?
4. இந்நூலைக் கற்பதற்கு முன்பு, கருவி நூலாக இன்றியமையாது கற்கவேண்டிய நூல் யாது?
5. இந்நூற்கு இதன் ஆசிரியர் இட்டபெயர் யாது?
6. இந்நூல் எந்த எல்லைக்கு உட்பட்ட இடத்தில் வழங்குகிறது?
7. இந்த நூலுக்கு முதல் நூல் யாது?
8. இந்த நூலைச்செய்த ஆசிரியர் யாவர்?

இந்த ஐயங்கள் நீங்கினால் அன்றி, இந்நூலைக் கேட்பவருக்கு, அதனைக் கேட்பதற்கான ஊக்கம் ஏற்படாது. எனவே, இந்தச் சிறப்புப் பாயிரத்தால் இந்த ஐயங்களை நீக்குகிறார். இந்நூலுக்குள்ள சிறப்புப்பாயிரம் வருமாறு ;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மலர் தலை உலகின், மா இருள் துமியப்
பலர் புகழ் ஞாயிறு படரின் அல்லதைக்
காண்டல் செல்லாக் கண்போல், ஈண்டிய
பெரும் பெயர்க் கடவுளின் கண்டு, கண் இருள் தீர்ந்து
அரும் துயர்க் குரம்பையின் ஆன்மா நாடி
மயர்வு அற நந்தி முனி கணத்து அளித்த
உயர் சிவஞான போதம் உரைத்தோன்
பெண்ணைப் புனல்சூழ் வெண்ணெய்ச் சுவேதவனன்
பொய் கண்டு அகன்ற மெய்கண்ட தேவன்
பவ நனி வன்பகை கடந்த
தவர் அடி புனைந்த தலைமை யோனே

இதன் பொருள்:

மலர் தலை உலகின் - விரிந்த இடத்தை உடைய உலகில் உள்ள, **மா இருள் துமிய** - பெரிய புற இருள் கெடும்படி, **பலர் புகழ் ஞாயிறு படரின் அல்லதைக் காண்டல் செல்லாக் கண் போல்** - பல சமயத்தவர்களாலும் புகழப்படுகின்ற சூரியன், உதயகிரியிலிருந்து தோன்றி வந்தால் அன்றி, உருவத்தைக் காணும் ஆற்றலைப் பெறமாட்டாத கண் ஒளியைப் போன்று, **அரும் துயர்க் குரம்பையின்** - பொறுக்க முடியாத துன்பங்களுக்கு எல்லாம் ஓர் இடமாய் உள்ள உடம்பைக்கொண்டு, **ஆன்மா நாடி**-காணப்படாத சீவான்மாவையும் பரமான்மாவையும் அனுமானப்பிரம்மாணத்தால் ஆராய்ந்து, **கண் இருள் தீர்ந்து**-அவ்விரு பொருள்களின் பொது இயல்பை உணர்ந்து, அவ்வுணர்ச்சியால் கருதி உணரக்கூடிய அக இருள் ஆகிய ஆணவமலத்தினின்றும் நீங்கி.

ஈண்டிய பெரும் பெயர்க் கடவுளின் கண்டு- எல்லா நூல்களின் பொருளும் திரண்டு கூடிய பெரும் பெயர் எனப்படும் '' ஒரு வார்த்தை '' ஆகிய மகாவாக்கியத்தின் பொருளாய் விளங்கும் முதற்கடவுளின் திருவருளால், மேற்கூறிய சீவான்மா, பரமான்மா என்னும் இருபொருள்களின் சிறப்பு இயல்பை, அனுபவத்தால் கண்டு உணர்ந்து (அதன் பின்பு), **மயர்வு அற** - ஆணவ மலத்தின் வாசனை காரணமாக ஏற்படும் மயக்கம் அறவே நீங்கிச் சிவானுபவம் பெறுதல் பொருட்டு, **நந்தி முனி**

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கணத்து அளித்த - சீகண்ட தேவரிடத்துக் கேட்டு உணர்ந்த நந்தி பெருமான், சனற்குமார முனிவர் முதலிய முனிவர் குழாத்திற்கு, வழி முறையால் சென்று பயன்படும்படி அளித்தருளிய, **உயர்சிவஞான போதம்** - சரியை, கிரியை, யோகம் ஆகிய மூன்று பாதங்களைப் பற்றி ஆராயும் நூல்களுக்கு மேம்பட்டதாகிய சிவஞான போதம் என்னும் வடநூலை, **உரைத்தோன்** - தமிழில் மொழிப் பெயர்த்துக் கூறி 'வார்த்திகம்' என்னும் பொழிப்புரை செய்தவன்.

பெண்ணைப் புனல்சூழ் வெண்ணெய் - பெண்ணை ஆற்று நீரால் சூழப்பட்ட திருவெண்ணெய் நல்லூரில் அவதரித்து அருளிய, **சுவேதவனன்**-சுவேதவனப் பெருமாள் என்னும் பிள்ளைத்திருநாமம் உடையவன் ; **பொய்கண்டு அகன்ற மெய்கண்ட தேவன்** பொய்ச் சமயங்களின் பொருள் இது, இது என்று கண்டுகழிப்பித்து மெய்ச்சமயப் பொருளைத் தெளிந்த காரணத்தால் பெற்ற '' மெய்கண்ட தேவன்'' என்னும் சிறப்புத் திருநாமம் உடையவன். **பவ நனி வன்பகை கடந்த தவர்** - பிறவி என்னும் மிக்க வலிய பகையை வென்ற தவத்தோர், **அடி புனைந்த தலைமையோன்** - தனது திருவடிகளைத் தங்கள் தலைமேல் சூட்டிக் கொள்வதற்குக் காரணம் ஆகிய மேம்பாட்டினை உடைய அருட்குரவன் ஆவன்.

தெளிவுரை ;

உலகத்துப் புற இருளைப் போக்கும் சூரியன் தோன்றவில்லையானால், கண் எந்த உருவத்தையும் காண இயலாது, அதுபோல ஆன்மாவுக்குள்ள அக இருளைப் போக்கும் சிவஞானபோதம் தோன்றவில்லை ஆயின், ஆன்மா உண்மைச் சமயம் இஃது என்பதை அறியமாட்டாது.

புற இருளை நீக்கும்சூரியர் பன்னிருவர் உளர் ; அதுபோல அகஇருளை நீக்குதற்கு அருளிய இந்தச் சிவஞானபோதம் பன்னிரண்டு நூற்பாக்களைக் (சூத்திரங்கள்) கொண்டுள்ளது.

சூரியன் உதவியால், கண்ணுக்குள்ள இருள் நீங்குதல், பொருள்களைக் காணுதல் ஆகிய இரண்டு பயன்கள் ஏற்படுகின்றன. அவ்வாறே, இந்நூலின் உதவியால் ஆன்மாக்களின் அறியாமை நீங்குதல், மெய்யுணர்வு எய்துதல் ஆகிய இரு பயன்கள் உண்டாகின்றன.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அறிவு இருவகைப்படும். ஒன்று ஆராய்ச்சி அறிவு; மற்றொன்று அனுபவ அறிவு. சீவான்மா, பரமான்மாக்களின் பொது இயல்புகளைஅறியும் அறிவு, ஆராய்ச்சி அறிவு ஆகும் ;, அவற்றின் சிறப்பு இயல்புகளை அறியும் அறிவு அனுபவ அறிவு ஆகும்.

அனுமானப் பிரமாணத்தால் (கருதல் அளவை!) இறை, உயிர், தளை ஆகிய முப்பொருள்களின் பொது இயல்பை, முதல் ஆறு நூற்பாக்களாலும், அம்முப்பொருள்களின் சிறப்பு இயல்பை, இறைவன் திருவருளால், பின் ஆறு நூற்பாக்களாலும் அறியப்படும்.

முப்பொருளின் **பொது இயல்பு,** கேட்டல், சிந்தித்தல் என்னும் இரு திறத்தால் அறியப்படும் ; **சிறப்பு இயல்பு** கேட்டல், சிந்திதல், தெளிதல், நிட்டை கூடுதல் (உறுதியாக நிற்றல்) என்னும் நான்கு திறத்தால் உணரப்படும். பொது இயல்பு **பிரமாண இயல், இலக்கண இயல்** என்னும் இரு இயல்களாலும், சிறப்பு இயல்பு **சாதன இயல், பயன் இயல்** என்னும் இரு இயல்களாலும் காணப்படும்.

சிவாகமங்களில், பொருள்களைப் பற்றிக் கூறும்போது, சுவாயம்புவம் ' என்னும் ஆகமத்தில் பொருள்கள் ஏழு என்றும், '' பௌட்கரம் '' முதலிய ஆகமங்களில் பொருள்கள் ஆறு என்றும், 'பராக்கியை ' முதலிய ஆகமங்களில் பொருள்கள் ஐந்து என்றும், 'சர்வநானோத்தரம்' முதலியவற்றில் பொருள்கள் நான்கு என்றும் 'இரௌரம் '. 'மிருகேந்திரம் ' முதலியனவற்றுள் பொருள்கள் மூன்று என்றும் கூறப்பட்டுள்ளன. ஆகமங்களின் பொருள் ஒற்றுமையை நிர்ணயித்து இந்நூல் உணர்த்துகின்றது.

'சிவஞானம் ' என்பது சிவாகமத்தையும், 'போதம்' என்பது உணர்த்துதலையும் குறிக்கும். சிவபெருமானைப் பற்றிய ஞானத்தை ஆன்மாக்களுக்கு உணர்த்துவதால், இந்நூல் ' ''சிவஞான போதம் '' என்னும் பெயர் பெற்றது. இஃது '' **ஆகமச்சாரம்** '' என்றால், அது மிகையாகாது.

இந்நூலைச் சமயதீக்கை பெற்றுச், சிவாகமங்களை ஓதி, சைவ ஒழுக்கத்தில் நின்று, மனத்தூய்மையுடன் கற்க வேண்டும். உலகத்தில் மீண்டும் பிறப்பதற்கு அஞ்சி, வீடுபேறு பெறுவதற்கு விருப்பம் உடையவர்கள் இந்நூலைக் கற்பதற்கு உரிய தகுதியைப் பெற்றவர் ஆவர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இந்தச் சிறப்புப் பாயிரத்தைச் செய்தவர், அருணந்தி சிவாசாரியார் என்பது செவிவழிச் செய்தி ஆகும். அது யுத்திக்கும் பொருந்துவதாக உள்ளது.

மங்கல வாழ்த்து

கல்லால் நிழல் மலைவு
இல்லார் அருளிய
பொல்லார் இணை மலர்
நல்லார் புனைவரே,

இதன் பொருள் :

கல் ஆல் நிழல் - (அருள் வடிவாகிய) கல் ஆல மர நிழலின் கண் எழுந்தருளி இருந்து, **மலைவு இல்லார்** - (நந்தி பெருமானுக்குச் சிவாகமங்களின் பொருள் பற்றி எழுந்த) ஐயங்களை இந்நூலினால் தீர்த்து அருளிய சிவபெருமான் ஆகிய முதல் ஆசிரியர், **அருளிய** - மேலும் மேலும் கருணைகூர்ந்து அருளுதற் பொருட்டு, **பொல்லார் இணை மலர்** - பொள்ளாத சுயம்பு மூர்த்தியாக எழுந்தருளியுள்ள பிள்ளையாருடைய ஞானசத்தி, கிரியா சத்தி என்னும் இரண்டு திருவடித் தாமரை மலர்களை, **நல்லார்** - கேட்டுச் சிந்தித்துத் தெளிந்த மெய்யன்பர்கள், **புனைவர் (ஏ)** - தம்முடைய ஞானசத்தி, கிரியாசத்திகளுக்கு வியாபகமாக் கொண்டு 'தாடலை' போல் அடங்கி நிற்பர் என்க.

தெளிவுரை :

வாழ்த்து என்பது, 'வாழி' என்று வாழ்த்துவதும், போற்றி ' என்று வணங்குவதும், இவ்விரண்டும் இன்றி வணங்கப்படும் பொருளின் இயல்பு உரைத்தலும் என மூவகைப்படும். அவற்றுள் இங்குக் கூறிய விநாயக வாழ்தது பொருள் இயல்பு உரைத்தல் ஆகும். அஃது எவ்வாறு எனின், இங்குப் பொருளாக இருப்பது விநாயகர் : இயல்பாக உள்ளது, சிவபெருமான் அருளும்படி செய்தல் ஆகும். அஃதாவது சிவபெருமானின் அருளைக் குறிக்கும் திருவடிகளைப் பெறுதற்கு உண்டாகும் இடையூறுகளை நீக்கி, இந்நூலை முற்றுப்பெறச் செய்தலால், இது மங்கல வாழ்த்து ஆயிற்று.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

'தாடலை' என்னும் உவமையால், தாள், தலை என்னும் இரண்டு சொற்கள், 'தாடலை ' என்னும் ஒரு சொல்லாய் அடங்கி, ஒன்றுபட்டு நின்றவாறு போலப், பிள்ளையாருடைய ஞானசத்தி கிரியாசத்திகளில் தம்முடைய ஞானசத்தி கிரியாசத்திகள் அடங்கி, ஒன்றுபட்டு நிற்பர் என்பதாகும்.

'அடங்கி நிற்றல்' என்பது, தன் அறிவுக்கு அவர் அறிவை இன்றி, அறியும் தன்மை நிகழாது என்றும், தன் செயலுக்கு அவர் செயலை இன்றித் தொழிற்பாடு இல்லை என்றும் உணர்ந்து, தன்முனைப்பு அற்று, அவர் அருள்வழியில் நிற்றலைக் குறிக்கும். இது திருவடி தீட்சையையும் குறிக்கும். இறைவன் திருவடியே அருள் வியாபகம்ஆகும்.

சிவபெருமான் அருளுதல் பொருட்டுப் பிள்ளையார் திருவடியில் அடங்கி நிற்பர் என்று கூறியருளியதன் நோக்கம், சிவபெருமானும் பிள்ளையாரும் உருவால் வேறாய் உளரே அன்றிப் பொருளால் ஒருவரே ஆவர் என்றமையாலேயே. இதனைச் சிவஞான சுவாமிகள்,

''அவ்விருவரும் தம்முள் வேற்றுமையின்மை பெற்றாம்''

என்று கூறியருளியுளளது நினைவில் கொள்ளத்தக்கது.

''பொள்ளார்'' என்னும் சொல் 'பொல்லார்' என மருவிற்று. உளியால் போழ்ந்து செய்யப்படாமல்தாமே சுயம்பு மூர்த்தியாக, உருக்கொண்டு தோன்றியவர் என்பது இதன் பொருளாகும். இங்குக் கூறப்படும் பொல்லாப் பிள்ளையார் திருவெண்ணெய் நல்லூரில் எழுந்தருளியிருப்பவர். நம்பியாண்டார் நம்பிகளுக்கு அருளிய பொல்லாப்பிள்ளையார், திருநாரையூரில் எழுந்தருளி இருப்பவர்.

இந்த மங்கல வாழ்த்து, கல், ஆல், நிழல். மலைவு, இல்லார், அருளிய பொல்லார், இணை, மலர், நல்லார், புனைவர்,ஏ -என்னும் பன்னிரு சொற்களால் ஆக்கப்பட்டுள்ளது. அது போல, இந்நூல் பன்னிரு நூற்பாக்களால் அமைந்தது.

இவற்றுள், ''கல்லால் நிழல் மலைவில்லார் அருளிய'' என்பது ஒரு வினை முடிவு ஆகவும், ''பொல்லார் இணைமலர் நல்லார் புனைவரே'' என்பது பிறிது ஒரு வினை முடிவு ஆகவும் ஆக, இருவினை முடிவுகள் உள்ளமையின், இந்நூல் 'பொது

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அதிகாரம்,' சிறப்பு அதிகாரம்' என்னும்இரு அதிகாரங்களைக் கொண்டுள்ளது.

கல், ஆல், நிழல் என்னும் மூன்று சொற்களும் இடத்தின் **உண்மை** கூறுதல் போல, இந்நூலின் முதல் மூன்று நூற்பாக்களும் **முப்பொருள் உண்மை** கூறுகின்றன. மலைவு, இல்லார், அருளிய என்னும் மூன்று சொற்களும் **செயல்** கூறுதல் போல, இந்நூலின் **4,5,6,** ஆகிய நூற்பாக்கள் **முப்பொருள் இயல்பு** கூறுகின்றன.

இரண்டாவது வினை முடிவில் வரும் பொல்லார், இணை, மலர் என்னும் மூன்று சொற்களும் **திருவடி** கூறுகின்றன. அதுபோல, பிறவிப் பெருங்கடலைக் கடப்பதற்குத்திருவடியே சாதனம் ஆகலின், **7,8,9** ஆகிய மூன்று நூற்பாக்களும் **சாதன இயல்** கூறுகின்றன. கல்லார், புனைவர், ஏ என்னும்மூன்று சொற்களும் திருவடி அடைதல் ஆகிய **பயன்** கூறுகின்றன; அதுபோல **10,11,12** ஆகிய மூன்று நூற்பாக்களும் **பயன்இயல்** கூறுன்றன.

நான்காவது சொல் ஆகிய 'மலைவு' என்பது, முதல் அடியையும் இரண்டாவது அடியையும் இணைத்து நிற்கிறது. அதுபோல இந்நூலின் மூன்றாவது நூற்பாவும் நான்காவது நூற்பாவும் பொதுவாக ஒருகருத்து உடையன ஆகி, முதல் இயல் ஆகிய உண்மையையும் இரண்டாவது இயல் ஆகிய இயல்பையும் இணைத்து நிற்கின்றன.

அவை அடக்கம்

தம்மை உணர்ந்து தமை உடைய தன் உணர்வார்
எம்மை உடைமை எமை இகழார் - தம்மை
உணரார் உணரார்; உடங்கு இயைந்து தம்மின்
புணராமை கேளாம் புறன்.

இதன் பொருள் :

தம்மை உணர்ந்து - உடைமைப் பொருள் ஆகிய தம் இயல்பினை முன் உணர்ந்து, **தமை உடைய தன் உணர்வார்** - தம்மை உடையான் ஆகிய தலைவனது இயல்பைப் பின்பு உணரும் சித்தாந்த சைவர்,**எம்மை உடைமை** - எம்மைத் தமக்கு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆளாக உடையவர் ஆகலின், **எமை இகழார்** - எம்மைக் குற்றங்கள் நீக்கித் குணம் கொண்டு கோதாட்டுதல் அன்றி, இகழ மாட்டார்; (எனவே, எம்மால் செய்யப்படும் இந்த நூலையும், அவர் அவ்வாறு ஏற்றுக்கொள்வரே அன்றி, இகழ்ந்து ஒதுக்க மாட்டார்) **தம்மை உணரார் உணரார்** - இவ்வாறு தம்மை உணரமாட்டாத ஏனைய சமயத்தவர்கள், தம்மை உடையவன் ஆகிய தலைவனையும் உணரமாட்டார்கள்; எனவே, **உடங்கு இயைந்து** - அவர்கள் ஓர் இடத்தில் கூட்டமாகக் கூடி, **தம்மில் புணராமை** - தமக்குள் ஒற்றுமை இன்றி ஒருவரிடமிருந்து ஒருவர் மாறுபட்டு நின்றே ஆரவாரிப்பர் ஆகலின், **புறம் கேளாம்** - அவர்கள் நம்மையும் நம்மால் செய்யப்படும் நூலையும், இகழ்ந்து உரைக்கும் புறம்பான சொற்களை, நாம் பொருளாகக் கொள்ளமாட்டோம்.

தெளிவுரை :

'' தன் உணர்வார் '' என்னும் தொடர், **தன்னை** அஃதாவது **தலைவனை** உணர்வார் என்று பொருள் செய்யப்பட்டது.

'' தம்மை உணரார்'' என்னும் தொடர், ' தாம் ஒரு பொருள் உண்டு ' என்பதை உணராத உலகாயதரையும், 'தம்மைக் **குணிப் பொருள்** ' என்று உணராத புத்தர், சாங்கியர், மாயாவாதிகளையும், 'தம்மை முதல்வனுக்கு உடைமைப் பொருள்' என்று உணராத ஏனைச் சமயத்தவரையும் குறிக்கும்.

' கேளாம் புறன் ' என்னும் தொடரில் உள்ள 'புறன்' என்னும் சொல், ''இரட்டுற மொழிதல்'' என்னும் உத்தியை உடையது. அஃதாவது 'புறன் ' என்பது, இரு பொருளைத் தரும். அவற்றுள் ஒன்று, இக்ழ்ந்து உரைப்பது; மற்றொன்று புறங்கூறுவது. 'இகழ்ந்து உரைப்பது ' என்பது புறச்சமயிகள் சித்தாந்த சைவத்திற்குப் புறம்பாய் நின்று, நேரிலேயே இகழ்ந்து கூறுவதைக் குறிக்கும். 'புறம் கூறுவது ' என்பது, புறச்சமயிகள், சித்தாந்த சைவர்களின் முன் நின்று கூறாமல், பின் நின்று இகழ்ந்து கூறுதலைக் குறிக்கும்.

சிந்தாந்த சைவர் அல்லாத பிற சமயங்களைப், புறப்புறம், புறம், அகப்புறம், அகம் என்று நான்கு விதமாக வகுத்துச் சிவஞானசுவாமிகள் கூறுகிறார்கள். இவற்றுள் முதல் மூன்றையும் முக்கூற்றுப் புறச் சமயம் என்றும், இவர்களே புறங் கூறுபவர் என்றும் கூறுகிறார்கள்; அகச்சமயிகள், சித்தாந்த சைவத்திற்குப் புறம்பாய் நின்று, நேரிலேயே இகழ்ந்து உரைப்பவர்கள் ஆவர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முதலாவது பொது அதிகாரம்

பிரமாண இயல்

முதல் சூத்திரம்

அவன் அவள் அது எனும் அவை மூவினைமையின்,
தோற்றிய திதியே; ஓடுங்கி மலத்து உளதாம் ;
அந்தம் ஆதி என்மனார் புலவர்.

இதன்பொருள் :

அவன் அவள் அது எனும் அவை - அவன், அவள், அது என்று கூறும் சொல்லும், அச்சொல்லுக்குரிய பொருளும் ஆக உரைக்கப்படும் சொற்பிரபஞ்சம், பொருட்பிரபஞ்சம் என இந்த உலகத் தொகுதி இரு திறப்படும். **மூவினைமையின்** - இந்த இருகூற்றுப் பிரபஞ்சம், தோன்றுதல், நிற்றல், ஒடுங்குதல் என்னும் மூவகைத் தொழிற்படும் தன்மையை உடையதாக இருப்பதால், **தோற்றிய திதியே** - அறிவற்ற சடம் ஆகிய இந்தப் பிரபஞ்சத்தைத் தொழிற்படுத்துவதற்கு ஒரு கருத்தா வேண்டப்படும். படவே, இந்தப் பிரபஞ்சம் ஒருவனால் தோற்றுவிக்கப்பட்ட உள்பொருளே ஆகும். **மலத்து உளதாம்** - அந்தக் கருத்தா ஒடுக்கிய பிரபஞ்சத்தை, உயிர்களின் ஆணவமலத்தை நீக்கும் பொருட்டு, மீண்டும் தோற்றுவிப்பன் ; **ஒடுங்கி (உளதாம்)** - எனவே, எவற்றையும் தன்னுள் ஒடுக்கி வைத்திருக்கும் சுதந்திரம் உடைய அக்கடவுளே, இந்தப் பிரபஞ்சத்தை மீண்டும் தோற்றுவிக்கவும் செய்யும், **அந்தம் ஆதி** - ஆகவே, பிரபஞ்சம் முழுவதையும் சங்கரிக்கும் கடவுளே, உலகிற்கு முதற் கடவுள் ஆகும். (சங்காரம் - ஒடுக்குதல்) **என்மனார் புலவர்** - இவ்வாறு பிரமாண நூல் உணர்ந்தோர் கூறுவர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை :

''அவை '' என்னும் சொல், அவன் அவள் அது என்னும் மூன்றையும் சுட்டி நிற்கவில்லை ; அம்மூன்றையும் சேர்த்துக் கூட்டி நிற்கும் தொகுதியைக் குறிக்கும்; எனவே, 'அவை' என்பது ' உலகத்தொகுதி ' எனப்பட்டது.

'' மூவினைமை '' என்பதில் உள்ள 'வினைமை' என்பது ''வினை உடைமை '' என்னும் பொருளைக் குறிக்கும் அஃதாவது முத்தொழில் செய்யும் தன்மை உடையதாகும்.

'' தோற்றிய '' என்னும் சொல், பிறவினை வாய்ப்பாட்டால் கூறப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. 'தன்வினை' என்பது தானே தொழிற்படுதல் ; 'பிறவினை' என்பது பிறரால் தொழிற்படுவது. எனவே இப்பிரபஞ்சம் கருத்தா ஒருவனால் முத்தொழிற்படும் தன்மையை உடையது என்பது பெறப்படும்.

'ஒடுங்கி ' என்பது, பிரபஞ்சம் ஒடுங்குவதற்கு ஆதாரமாய் நின்ற கடவுளைக் குறிக்கும். இது ' வீங்கி ' என்பது வீங்குதற்கு ஆதாரமாய் நின்றவனைக் குறிப்பது போல் ஆகும். மேலும், 'வங்கி 'என்பது பணத்தை வாங்குவதற்கு ஆதாரமாய் நிற்கும் நிறுவனத்தைக் குறிப்பது போல் ஆகும்.

' அந்தம் ' என்ற சொல், தனக்கு அந்தமே இல்லாத கடவுள், ஏனையவற்றிற்கு அந்தத்தைச் செய்வதால், சங்காரக்கடவுள் என்னும் பொருளில் வந்தது.

இந்த முதற் சூத்திரம், '' கடவுள் உண்டு '' என்று கூறுவதற்காக எழுந்தது. கண்ணினால் காண முடியாத கடவுள் உண்மை கண்ணினால் காணக் கூடிய உலகத்தைக் கொண்டு நிறுவப்படுகிறது. மண் சடப்பொருள் ஆதலால், அம்மண் தானே குடம் ஆகமாட்டாது. மண்ணைக் குடமாகச் செய்தவன் ஒருவன் இருக்க வேண்டும்; அதுபோல, உலகம் சடம்; அது தானே தோன்றாது; அதனைத் தோற்றுவித்தவன் ஒருவன் இருக்க வேண்டும்.

பொது அதிகாரமும் உண்மை அதிகாரமும்:

சிவஞான போதத்தில் பன்னிரு சூத்திரங்கள் உள்ளன. அவற்றுள் முதல் ஆறு சூத்திரங்கள் பொது அதிகாரம் எனப்படும். ஏழுமுதல் பன்னிரண்டு வரையுள்ள சூத்திரங்கள், உண்மை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அதிகாரம் எனப்படும். பொது இயல் கூறுவது பொது அதிகாரம்; சிறப்பு இயலைக் கூறுவது உண்மை அதிகாரம். பொது அதிகாரம், ஆராய்ச்சி அறிவால் அறியப்படுவது, உண்மை அதிகாரம் அனுபவ அறிவால் உணரப்படுவது.

அளவை நூலில் கூறும் 'பொது இயல்பு' என்பது ஒரு பொருளுக்குச் சொல்லப்படும் இலக்கணம், பிற பொருள்களிலும் இருப்பது ஆகும்; ' சிறப்பு இயல்பு' என்பது, ஒரு பொருளுக்குச் சொல்லப்படும் இலக்கணம், அப்பொருளில் மட்டும் இருப்பதாகும்.

ஆகமத்தில் கூறும் பொது இயல்பு என்பது, ஒரு பொருளின் தூல நிலை ஆகும். சிறப்பு இயல்பு என்பது ஒரு பொருளின் சூக்கும நிலை ஆகும். 'தூலநிலை' என்பது, பிற பொருளோடுசம்பந்தப்பட்டு இருத்தல்; சூக்கும நிலை என்பது பிற பொருளோடு சம்பந்தப்படாமல் தனித்து இருத்தல் ஆகும். தூலநிலை என்றாலும் தடத்த இலக்கணம் என்றாலும் ஒரு பொருளே: சூக்கும நிலை என்றாலும் சொரூப இலக்கணம் என்றாலும் ஒரு பொருளே ஆகும்.

இந்த முறையிலேயே பொது இயல்பு, சிறப்பு இயல்புகளுக்கு நாம் பொருள் கொள்ள வேண்டும். இந்த வகையில் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களுக்கும் உள்ள பொது இயல்பு, உண்மை இயல்புகள் வருமாறு.

பதிக்குப் பொது இயல்பு, உயிர்களோடு ஒன்றாயும்வேறாயும் உடனாயும் நிற்றல் ஆகும்; சிறப்பு இயல்பு. சச்சிதானந்தமாய் நிற்றல் ஆகும். (சச்சிதானந்தமாய் நிற்றலும் எண்குணனாய் நிற்றலும் ஒரு பொருளே ஆகும்). பசுவுக்குப் பொது இயல்பு, கருவி கரணங்களுடன் கூடி நிற்றல்; சிறப்பியல்பு கருவி கரணங்களினின்றும் நீங்கி, உடனாய் நிற்கும் சிவமாய் நிற்றல் ஆகும். பாசத்திற்குப் பொது இயல்பு காரிய ரூபமாய் நிற்றல்; சிறப்பு இயல்பு காரண ரூபமாய் நிற்றலாகும்.

பொது இயல்பு பிரமாணத்தினாலும் இலக்கணத்தினாலும் அறியப்படும். எனவே, இவ்விரண்டும் பொது அதிகாரத்தில் இடம் பெறும். சிறப்பு இயல்பு சாதனத்தினாலும் பயனினாலும் அறியப்படும். எனவே, இவ்விரண்டும் உண்மை அதிகாரத்தில் இடம் பெறும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சூத்திரங்கள்	இயல்	அதிகாரம்
1,2,3,	- பிரமாண இயல்	பொது அதிகாரம்
4,5,6,	- இலக்கண இயல்	
7,8,9,	- சாதன இயல்	உண்மை அதிகாரம்
10,11,12,	-பயன் இயல்	

பாசத்திற்குச் சொன்ன பொது, சிறப்பு இயல்புகள், ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களுக்கும் பொருந்தும்.

அதிகரணம் பற்றிய விளக்கம் :

அதிகரணம் என்பதும்கூறு என்பதும் ஒரு பொருட் சொற்கள். சிவஞானபோதச் சூத்திரம் ஒவ்வொன்றும், பல பகுதிகளை அல்லது கூறுகளை உடையது. அதிகரணம் என்பது நிலைக்களம் ஆகும். எவற்றிற்கு நிலைக்களம் ?

ஓர் அதிகரணத்தில் ஐந்து பொருள்கள் உள்ளன; இந்த ஐந்து பொருள்களுக்கும் நிலைக்களமாக இருப்பது அதிகரணம் ஆகும். அந்த ஐந்து பொருள்கள் வருமாறு:

1. தன்னால் கூறப்படும் பொருள் (தன் பட்சம்).
2. அப்பொருளினிடத்து ஏற்படும் ஐயப்பாடு (அதன்கண் ஐயம்).
3. அந்த ஐயப்பாட்டின் கண் பிறர் கூறும் பொருள். (பிறர் கூறும் விடை) இது 'பூர்வபட்சம்' எனப்படும். இஃது ஆய்வுக்கு முன்பு தோன்றும் கொள்கை ஆகும்.
4. பிறர் கூறும் பொருளை மறுத்து உரைக்கும் சித்தாந்தத் துணிபு (சித்தாந்தம்). இஃது ஆய்வுக்குப் பின்பு துணிந்த முடிபு. முடிந்த முடிபு.
5. அவ்வாறு துணிந்த முடிபுக்கு எடுத்துக்காட்டும் இயைபு (இயைபு).

இவ்வைந்து பொருள்களையும் நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

இந்த ஐந்து பொருள்களையும், ஒவ்வொரு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அதிகரணத்திலும், கீழ்க்காணும் முறையில் வகுத்துப் பொருள் கூறப்படுகிறது.

மேற்கோள் : தன்னால் கூறப்படும் பொருள், அப்பொருளிடத்து ஏற்படும் ஐயப்பாடு, பிறர்கூறும் பொருள் ஆகிய இம்மூன்றும் 'மேற்கோள்' என்னும் தலைப்பின்கீழ் அடங்கும்.

ஏது : பிறர் கூறும் பொருளை மறுத்து உரைக்கும் சித்தாந்தத் துணிபு இதனுள் அடங்கும்.

இயைபு அல்லது எடுத்துக்காட்டு : அவ்வாறு துணிந்த சைவ சித்தாந்த முடிபுக்குப் பொருத்தமான எடுத்துக்காட்டு கூறி விளக்குதல் இதில் அடங்கும்.

ஒவ்வொரு அதிகரணத்திலும் இந்த மூன்று உறுப்புக்கள் இருக்கும். இம்மூன்றும் மெய்கண்ட சிவாசாரியாரே செய்தருளினர் என்று பெரியவர்கள் கூறுகிறார்கள். இந்தஅடிப்படையில் வைத்து, ஒவ்வொரு சிவஞானபோதச் சூத்திரத்திற்கும் விளக்கம் அளிக்கப்படும்.

'வார்த்திகம்' பற்றிய விளக்கம்.

சிவஞானபோதச் செழுந்தமிழ் நூலை அருளிச் செய்த மெய்கண்ட சிவாசாரியார், அதற்கு ஒரு பொழிப்புரையையும் செய்தருளினார். அப்பொழிப்புரையே 'வார்த்திகம் எனப்படும்.

'' இதன் பொழிப்பு உரைத்துக் கொள்க '' என்று ஆசிரியர் மெய்கண்டசிவாசாரியார் திருவாய் மலர்ந்தருளியது ஆகும். பொழிப்புரை இரண்டு வகைப்படும். ஒன்று பிண்டப்பொழிப்பு; மற்றொன்று கண்ணழித்துரை. 'பிண்டப்பொழிப்பு' என்பது, சூத்திரத்தின் பொருள் முழுவதையும் ஒருங்கே திரட்டி உரைத்தல் ஆகும். 'கண்ணிழித்துரை' எ.ன்பது, பதங்களைப் பிரித்து ஒவ்வொரு முடிபையும் ஒவ்வொரு அதிகரணமரக வகுத்துக் கூறுவது ஆகும். (கண்ணழித்துரை - கணுக்களை அழித்துச் செய்யும் உரை ; கணு - பதம்) இந்தக் கண்ணழித்துரையே 'வார்த்திகம்' எனப்படுவது, இந்த வார்த்திக அடிப்படையிலேயே இந்நூலில் தெளிவுரை வழங்கப்படுகிறது. அனைத்துச் சூத்திரங்களிலும் இம்முறையே பின்பற்றப்படுகிறது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அடிப்படையிலேயே இந்நூலில் தெளிவுரை வழங்கப்படுகிறது. அனைத்துச் சூத்திரங்களிலும் இம்முறையே பின்பற்றப்படுகிறது.

முதற் சூத்திர அதிகாரங்கள்

முதல் சூத்திரம் மூன்று அதிகரணங்களை உடையது. இதனை 'முக்கூற்றுச் சூத்திரம்' என்பார் சுவாமிகள். அவை வருமாறு:

அதிகரணம்

1. அவன் அவள் அது எனும் அவை மூவினைமையின்
2. தோற்றிய திதியே ஒடுங்கி மலத்து உளதாம்
3. அந்தம் ஆதி என்மனார் புலவர்

முதற் சூத்திரம் முதல் அதிகரணம்

மேற்கோள்

ஈண்டு உளதாய் ஒருவன் ஒருத்தி ஒன்று என்று சுட்டப்பட்ட பிரபஞ்சம், உற்பத்தி திதி நாசம் உடைத்து என்றது;

இதன் பொருள் :

ஈண்டு - இந்த முதல் அதிகரணத்தில், ஒருவன், ஒருத்தி ஒன்று என்று சுட்டப்பட்ட பிரபஞ்சம் - ஒருவன் என்றும் ஒருத்தி என்றும் ஒன்று என்றும் இவ்வாறு பகுக்கப்படுகின்ற (1) அவயவப்பகுப்பு உடையதாயும், அப்பகுப்பு ஒவ்வொன்றும்வேறு வேறு ஆதலின், (2) பல்வேறு வகையாய்ச் சடமாயும், முயற்கொம்பு முதலியன போலச் சந்தேக விபரீதங்களால் சுட்டி அறியப்படுதல் போல் அன்றி, (3) உண்மையாய்ச் சுட்டி அறியப்படுவதாயும் இருப்பதால், இந்த மூன்று காரணங்களால், இந்த உலகம், உற்பத்தி, திதி, நாசம் உடைத்து என்றது - தோன்றி நின்று அழியும் தன்மை உடையது என்று கூறியது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை :

இந்த மேற்கோளில், 'உளதாய்ச் சுட்டப்பட்ட பிரபஞ்சம் ' என்று கூறாமல், 'ஒருவன், ஒருத்தி ஒன்று என்று உளதாய்ச் சுட்டப்பட்ட பிரபஞ்சம் ' என்று உடம்பொடு புணர்த்துக் கூறினார். 'உடம்பொடு புணர்த்தல் ' என்பது , ஓர் உத்தி. அஃதாவது, ஒரு வாக்கியத்தில் அதற்கு உரிய செம்பொருளே அன்றிக் குறிப்பால், பிறிது ஒரு பொருளைப் புணர்த்தி வைத்தல் ஆகும். வாக்கியம் உடம்பு ஆகும்; பொருள் உயிர் ஆகும், இந்த இடத்தில், '' ஒருவன், ஒருத்தி, ஒன்று '' என்ற வாக்கியம் ஆகிய உடம்பொடு, ஏதுப்பொருளைப் புணர்த்திக் கூறி இருப்பதால், உடம்பொடு புணர்த்தல் ஆயிற்று.

திரிபு என்பதன் பொருள், ஒன்றை மற்றொன்றாக அறிதல் ஆகும்; இதுவே 'விபரீதம்' எனப்படுவது. 'ஐயம்' என்பதன் பொருள், ஒன்றை அதுவோ இதுவோ எனச் சந்தேகித்தல் ஆகும். முயலினிடத்துக் கொம்பு இல்லை; அதன் செவியைக் கண்டு, கொம்பு உள்ளதாகக் காண்பது விபரீதம் ஆகும், கயிற்றினிடத்தில் பாம்பு இல்லை; மாலைப் பொழுதில் மயக்கத்தால், வளைந்து இருப்பதைக் கண்டு, இது கயிறோ பாம்போ என்று எண்ணுவது சந்தேகம் ஆகும். பிரபஞ்சம் அவ்வாறு விபரீதமாகவும் சந்தேகமாகவும் ஆதல் அன்றி, உள்ளவாறு உணரப்படுவதால், 'உளதாய்ச் சுட்டப்பட்ட பிரபஞ்சம்' எனப்பட்டது.

பிரபஞ்சம் முத்தொழில் படும் என்பதற்கு மூன்று ஏது கூறியது ஏன்? விளக்கம் வருமாறு.

1. அவயவப் பகுப்பு உடையது :

'அவயவம் ' என்னும் சொல் 'உறுப்பு' என்னும் பொருளை உடையது. ஓர் ஆடையைப் பல துண்டுகளாகக் கிழிக்கமுடியும்; நூல் நூலாகப் பிரிக்கவும் முடியும்: குடத்தைப் பல துண்டுகளாக உடைக்க முடியும். இவ்வாறு உலகமும், மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் எனப் பல பகுதிகளை உடையது; எனவே **உலகம் அவயவப் பகுப்பு உடையது** எனப்படுவது.

2. பல்வேறு வகையாய்ச் சடமாய் இருப்பது :

உலகம் பல்வேறு உறுப்புகளை உடையதோடு மட்டுமின்றி, பலவாயும் உள்ளது. பல்வேறு வகையாய் (மண்ணாய், நீராய்) இருக்கும் உலகம் , **வெவ்வேறு வகையாய்** இல்லை என்பதை வலியுறுத்தும் பொருட்டு, உலகம் **பல்வேறு வகையாய்** இருப்பது என்றார். உலகத்தின் உறுப்புக்கள் ஆகிய

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மண் நீர் முதலியன, பல்வேறு வகையாய் உள்ளது. உயிர் ஒவ்வொன்றும் வெவ்வேறு வகையாய் உள்ளது. எனவே, **'வேறு வேறு ஆதலும்' 'பலவேறு வகைத்து ஆதலும்' வேறாகும். உயிர்வேறு. உலகம்வேறு; எனவே உலகம் பல்வேறு வகைத்து; வெவ்வேறு அன்று**

3. உலகம் சுட்டி அறியப்படுவது :

அவன், அவள், அது என்னும் மூன்று பொருள்களின் உடல்களும் சுட்டி அறியப்படுவன. ' அவன் ' என்பது ஆணின் உடலையும், ' அவள் ' என்பது பெண்ணின் உடலையும் ' அது' என்பது, நிலம், நீர், முதலியவற்றையும், மிருகம், பறவை முதலியவற்றின் உடல்களையும் குறிக்கும். உயிர்கள் வியாபகம் உடையன. அவற்றைச் சுட்டி அறியமுடியாது. உலகில் நாம் காணும் பொருள்கள் அனைத்தும், ஓர்இடவரம்புக்கு உட்பட்டனவே ஆகும். எனவே இவ்வுலகம் சுட்டி அறியப்படுவது எனப்படுகிறது.

இவ்வாறு அவயவப்பகுப்பு உடையதாய், பலவாய்ச் சுட்டி அறியப்படுவதாகிய இவ்வுலகம் தோன்றி, நின்று, அழியும் தன்மை உடையது என்று மேற்கோளில், சைவ சித்தாந்தக் கொள்கை, காரண காரிய இயைபு படுத்தி நிறுவப்பட்டது.

இந்த மேற்கோளை அடுத்து வரும் ' ஏது' இந்த உலகம் இவ்வாறு முத்தொழில் படுதற்குக் காரணம் கூறுகிறது. இந்த மேற்கோளில் உடம்பொடு புணர்த்திக் கூறிய ஏது, **கருதல் அளவையினால்** மேற்கோளை நிறுவியதாகும். அடுத்து வரும் ஏது, **காண்டல் அளவையினால்,** கொள்கையை உறுதிப் படுத்துதற்காக எழுந்தது ஆகும்.

முதல் அதிகரணம் - ஏது

தோற்றமும் ஈறும் உள்ளதன்பாலே கிடத்தலின்

இதன் பொருள் :

தோற்றமும் ஈறும் - உலகத்தின் உற்பத்தியும் அழிவும் **உள்ளதன்பாலே கிடத்தலின்** - இது நம்மால் காணப்படும் நிலையில் இருப்பதனால் , உற்பத்திக்கும் அழிவுக்கும் இடையில் உள்ள நிலை ஆகிய இருத்தல் ஒன்றினாலேயே,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இவ்வுலகம் முத்தொழில்படும் என்பது பெறப்படுகிறது.

தெளிவுரை :

கண்ணுல காணப்படும் எந்த ஒரு பொருளும் நிலைத்து இருப்பதில்லை; அழிந்து விடுகிறது. அழிந்தவாறே ஒழிந்து போகாமல் மீண்டும் தோன்றுவதையும் கண்ணால் காணமுடிகிறது. உயிர்களுக்குள்ள உடல்கள் காணப்படுவது போல் என்றும் நிலைத்து நிற்பதில்லை; அவை அழிந்து போவதையும் காண்கிறோம். அந்த உடலிலிருந்து பிற உடல்கள் (வாரிசுகள்) தோன்றுவதையும் காண்கிறோம். இவ்வாறு காண்டல் அளவை மூலமாக, சுட்டியறியப்படும் பொருள்கள் அனைத்தும், தோன்றி நின்று அழியும் தன்மை உடையன என்பது நிறுவப்பட்டது. அடுத்து வருவது, இவ்வுண்மையை எடுத்துக்காட்டும் இயைபு ஆகும்.

(1) எடுத்துக்காட்டு வெண்பா

பூதாதி ஈறும் முதலும் துணையாகப்
பேதாய் திதி ஆகும்; பெற்றிமையின் - ஓதாரோ
ஒன்று ஒன்றின் தோன்றி உளதாய் இறக்கண்டும்
அன்று என்றும் உண்டுஎன்ன ஆய்ந்து.

கொண்டு கூட்டு :

பேதாய், பூதாதி திதி ஈறும் முதலும் துணையாக ஆகும்; ஒன்று ஒன்றின் பெற்றமையின் தோன்றி, உளதாய் இறக்கண்டும், என்றும் அன்று உண்டு என்ன ஆய்ந்து ஓதாரோ?

இதன் பொருள் :

பேதாய் - காண்டல் அளவையாலும் உண்மையை அறிய மாட்டாத மடவோனே, **பூதாதி** - பூதத்தை முதல் காரணமாக உடைய பிரபஞ்சத்திற்கு, **திதி ஈறும் முதலும் துணையாக ஆகும்** நிலைத்து நிற்கும் தொழில் நிகழும் போது, ஒடுக்கமும் உற்பத்தியும் தனக்குத் துணைக் காரணமாகக் கொண்டே நிகழும்; (எவ்வாறு எனில், இருக்கின்ற ஒன்று, தோன்றினால் அன்றிக் காணப்படாது; தோன்றுகின்ற ஒன்று, அது தோன்றுவதற்கு முன்பு, தோன்றாமல் ஒடுங்கியிருக்க வேண்டும். ஆகவே, ஒடுங்குதலையும் தோன்றுதலையும் துணைக் காரணமாகக்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கொண்டு, இருத்தல் காணப்படுவதை அறிவாயாக).

ஒன்று ஒன்றின் - (எப்போதும் இன்றி) ஒவ்வொரு காலத்தின் தனித் தன்மைக்கு ஏற்ப, **பெற்றிமையின்** - (எண்ணில்லாத பொருள்க்ள்) தத்தம் இனத்தின் தன்மை காரணமாக, (மழைக் காலத்துப் பயிர்களும் செந்துக்களும்) **தோன்றி உளதாய் இறக்கண்டும்** - ஒருங்கே தோன்றி, ஒருங்கே நின்று, (வேனில் காலத்தில்) அவையாவும் அழிவதைக் கண்கூடாகக் கண்ட பிறகும், **என்றும் அன்று உண்டு என்ன** - என்றாவது ஒருநாள் உலகத்திற்கும் அதுபோல ஒருசேர அழிவதற்குரிய காலம் வரும் என்று **ஆய்ந்து ஓதாரோ?** - மேலே சொன்ன காட்சியை ஆராய்ந்து கூறமாட்டாரா? அறிவுடையவர் நிச்சயம் சொல்லுவர்

தெளிவுரை :

இந்த வெண்பாவின் முதலில் வரும் 'பூதாதி ' என்ற சொல்லுக்குப் 'பூதம் முதலாக ' என்று பொருள் கொள்ளாமல், பூதத்தை முதற்காரணமாக உடைய பிரபஞ்சம் ' என்று பொருள் கொள்ளப்பட்டது, இதற்குக் காரணம், இந்த அதிகரணம் உலகாயதர் கொள்கையை மறுத்துக் கடவுள் உண்மையை நிலை நாட்டுதற்கு எழுந்தது ஆதலினாலும், உலகாயதர்க்குப் பூதத்திற்கு மேல் உள்ள தத்துவங்கள் உடன் பாடன்று ஆகலினாலும் ஆகும் இறக்கண்டும் என்பதற்கு ' அழிவதைக் கண்ட பின்பும் ' என்று பொருள் கூறப்பட்டது. இதன் மூலமாகக் காண்டல் அளவை நிறுவப்பட்டது.

இந்த அதிகரணத்தோடு வைத்துச் சிந்திக்கத் தக்க சிவஞான சித்தியார் பாடல்கள் வருமாறு:

பாடல் எண்	**தொடக்கச் சொற்கள்**
22 -	**உதிப்பதும் ஈறும் உண்டு**
23 -	**இயல்பு காண் தோற்றி மாய்கை**
24 -	**நிலம் புனல் அனல் கால்**
25 -	**சார்பினில் தோன்றும் எல்லாம்**
29 -	**ஓரிடம் அழியப் பின்னும்,**

ஒருவரது கொள்கையை மறுக்கும்போது, அவருக்கு உடன்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பாடான வழியில் சென்று மறுக்க வேண்டும். உலகாயதர் காண்டல் அளவையினை மட்டுமே உடன்படுவர், எனவே, இந்த அதிகரணத்தில் கருதல் அளவை, நூல் அளவை காட்டி மறுக்காமல், காண்டல் அளவை மட்டும்காட்டித் தெளிவுறுத்தப்பட்டது.

முதல் சூத்திரம் இரண்டாம் அதிகரணம்

மேற்கோள்

இனி இல்லதற்குத் தோற்றம் இன்மையின், உள்ளதற்குச் செய்வோர் இன்றிச் செய்வினை இன்மையின் ஒடுங்கின சங்காரத்தின் அல்லது உற்பத்தி இல்லை என்றது.

இதன் பொருள் :

இல்லதற்குத் தோற்றம்இன்மையின் - இல்லாத பொருள் என்றும் இல்லாதே அல்லாமல், அஃது ஒரு காலத்தும் உள் பொருள் ஆகாது: எனவே, **உள்ளதற்குச் செய்வோர் இன்றிச் செய்வினை இன்மையின்** - உள்பொருளாகிய உலகமும் ஒருவனால் செய்யப்பட்டதே ஆகும் ; ஆகவே, அவனை இன்றி இவ்வுலகம் இவ்வாறு பருநிலையில் தோன்றுவதற்குக் காரணம் இல்லை; எனவே, **ஒடுங்கின சங்காரத்தின் அல்லது உற்பத்தி இல்லை என்றது** - எது எங்கே ஒடுங்கிற்றோ, அஃது அங்கிருந்தே தோன்றும் ; அஃதன்றி, வேறு இடத்திலிருந்து தோன்றுவதற்குக் காரணம் இல்லை என்பது, தெளிவுறுத்தப்படுகிறது.

தெளிவுரை :

இந்த மேற்கோள், மூன்று உண்மைகளை நிறுவுகிறது. அவை வருமாறு :

1. இந்த உலகம் ஓர் உள்பொருள்

2. இது சடம் ஆகலின், இதனைத் தோற்றுவிப்பதற்கு ஒருவன் வேண்டும்.

3. அந்த ஒருவன் யாராக இருக்க முடியும்? எவனிடத்தில் இந்த உலகம் ஒடுங்கி இருந்ததோ, அவனிடத்திலிருந்தே இது தோன்றும். எனவே, இவ்வுலகம் ஒடுங்குதற்கு எவன் இடம் கொடுத்து இருந்தானோ, அவனே அந்த ஒருவன்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

(அவன் யார் என்பதை அடுத்த அதிகரணத்தில் துல்லியமாகக் காணலாம்)

இந்த இரண்டாம்அதிகரணம், மூன்று கூறுகளை உள்ளடக்கி அமைந்துள்ளது. ஒன்றுக்கு ஒன்று மேற்கோளும் ஏதுவுமாக அமைந்துள்ளது,

முதலாவது மேற்கோள்,

'' **இனி உலகம் உள்ளது என்றது**'' என்பதாகும் ; இங்கு ஏது, '' **இல்லதற்குத் தோற்றம் இன்மையின்** '' என்பதாகும்.

இரண்டாவது மேற்கோள், '' **இனி உலகம் செய்வோனை உடைத்து என்றது**'' என்பதாகும். இதற்கு ஏது, '**உள்ளதற்குச் செய்வோர் இன்றிச் செய்வினை இன்மையின்** '' என்பதாகும்.

மூன்றாவது மேற்கோள், '' **இனி ஒடுங்கின சங்காரத்தின் அல்லது உற்பத்தி இல்லை என்றது** '' என்பதாகும். இதற்கு ஏது, ''**ஆண்டு ஒடுங்குதலின்** '' என்பதாகும்.

இந்த மூன்று மேற்கோள் - ஏதுக்களுக்குப் பொருள் வருமாறு!

இல்லாத பொருள் தோற்றாது ஆகலின், தோற்றப்படும் உலகம் உள்பொருளே ஆகும். முயலுக்குக் கொம்பு இல்லை; இல்லாத முயற்கொம்பு என்றுமே உற்பத்தியாவதில்லை. உலகம் தோன்றுவதால், இஃது உள்பொருள் ஆகும்.

மண்ணிலிருந்து குடம் செய்யப்படுகிறது, குயவன் இல்லாமல், குடம் தோன்றாது. மண் சூக்குமப்பொருள் ; குடம் தூலப்பொருள்.குயவன் சூக்குமப் பொருளாகிய மண்ணிலிருந்து குடத்தைத் தோற்றுவித்ததுபோல, ' மாயை ' என்னும் சூக்குமப் பொருளில் அடங்கிக்கிடந்த உலகத்தை கருத்தா தோற்றுவித்தான், எனவே உலகம் உள்பொருளே ஆயினும், இவ்வுலகத் தோற்றத்திற்கு ஒரு கருத்தா வேண்டும் என்பது பெறப்பட்டது.

குடம் உடையும்போது, குடத்தின் தன்மை மண்ணிடத்து ஒடுங்கிக், குடம் மீண்டும்தோன்றும்போது, அந்த மண்ணினிடத்தில் நின்றே தோன்றுகிறது. அது போலவே, உலகம் ஒடுங்கும்போது, தூலமாய்க் காணப்படுவது கெட்டுச் சூக்குமமாகிய அதன் தன்மை, சங்காரக் கடவுளிடத்து ஒடுங்கி,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மீளத்தோன்றும் பொழுது, அக்கடவுளினிடத்து நின்றும் தோன்றும்.

இந்த உவமையில் ஒரு முக்கிய குறிப்பு கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்த இடத்தில் மண், கருத்தாவிற்கு உவமையாக நின்றது, மேலே சொன்ன உவமையில் (இரண்டில் இரண்டு) மண் மாயைக்கு உவமையாக நின்றது. இதனால் முரண்பாடு உளதாகக் கருத வேண்டா. மண், தானே குடமாகத் தோன்றாது. குடம் ஒடுங்குவதற்கும் தோன்றுவதற்கும் மண் ஆதாரம் ஆகிறது. மாயை, தானே உலகமாகத்தோன்றாது; உலகம் ஒடுங்குவதற்கும் தோன்றுவதற்கும் சங்காரக்கடவுளே ஆதாரம் ஆகலின், இங்கு மண் கருத்தாவிற்கு உவமையாய் நின்றது.

இந்த உவமையைத் தெளிவுறுத்தும் பொருட்டுச் சிற்றுரையில் சிவஞானசுவாமிள், '' அவினாபாவத்தால்'' என்னும் ஒரு சொல்லைக் கொண்டு விளக்குகிறார்கள். **அவினாபாவம்** என்பது விட்டு நீங்காமை ஆகும். குடம் மண்ணைவிட்டு நீங்காது ; அது போலப் பிரபஞ்சம், சங்காரக்கடவுளை இன்றித் தனித்து நில்லாது.

அவினாபாவத்திற்கு மேற்கூறிய உவமையே அன்றி, அக்கினியையும் அந்த அக்கினியை விட்டு நீங்காத புகையையும் கூறலாம். புகையைக் கொண்டு, அக்கினி உண்டு என்று நிச்சயித்தல் கூடும். அதுபோல, உலகம் தோன்றுதலைக் கொண்டே , அதற்கு இன்றியமையாத கடவுள் உண்டு என்ற அறிந்து கொள்ளுதல் கூடும். இது '' கடவுள் உண்டு'' என்னும் அளவிற்கே கூறும் கருதல் அளவை (அனுமானப் பிரமாணம்) ஆகும்.

(2) எடுத்துக்காட்டு வெண்பா

இலயித்த தன்னில் இலயித்ததாம் மலத்தால்
இலயித்த வாறு, உளதா வேண்டும் - இலயித்தது
அத்திதியில் என்னின் அழியாது அவை; அழிவது
அத்திதியும் ஆதியுமாம் அங்கு.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

(கொண்டு கூட்டு) இலயித்தது இலயித்த தன்னில் ஆம்; மலத்தால்இலயித்தவாறு உளது ஆக வேண்டும்; இலயித்தது அத்திதியில் என்னின், அவை அழியாது. அத்திதியும் ஆதியும் ஆம் அங்கு அழிவது.

இதன் பொருள்:

இலயித்தது - ஒடுங்கிய உலகம், **இலயித்த தன்னில் ஆ** - (மீண்டும் தோன்றும் காலத்தில்) முன்பு தான் ஒடுங்குவதற்கு இடமாய் இருந்த சங்கார காரணனிடமிருந்தே தோன்றும்.

(ஒடுங்கிய உலகம் ஒடுங்கியவாறே ஒழியாமல், மீண்டும் உண்டாக வேண்டுதல் எதற்காக எனின், உள்ளதாகிய உலகம்) **மலத்தால்** - உயிர்களின் கரும மலம் பரிபாகம் ஆதல் பொருட்டு ஒடுங்கி ஆணவமலம் பரிபாகம் ஆதல் பொருட்டு மீளத்தோன்றும். (அவ்வாறாயின், முன்பு காணப்பட்ட உலகம், சங்கார காலத்தில், அழிந்து போக, மீளப் படைப்புக் காலத்தில், வேறு உலகம் தோன்றும் என்று சொல்லாமல், முன்பு நின்ற உலகமே மீண்டும் தோன்றும் என்று சொல்வதற்குப் பிரமாணம் என்ன என்றால்) **இலயித்தவாறு உளதா வேண்டும்** - எந்தப் பொருள் எதனிடத்தில் எவ்வாறு ஒடுங்கிற்றோ. அந்தப் பொருள் அதனிடத்திலிருந்தும் அவ்வாறு உள்ளதாகும் என்பது எல்லோராலும் விரும்பப்படும் ஆகலின், அந்தத் தருக்கமே பிரமாணம் ஆகும்.

இலயித்தது அத்திதியில் என்னின் - உலகம், மூலப்பகுதி வடிவு என்னும் திதிகருத்தா ஆகிய விட்டுணுவினிடத்தில் ஒடுங்கியது என்று நீ கூறுவாய் ஆயின், **அவை அழியாது** - (நீ அவ்வாறு கூறினும், மூலப்பகுதிக்கு மேல் உள்ள வித்தியா தத்துவம் சிவ தத்துவங்களில் உள்ள உலகங்கள், அம்மூலப்பகுதியில் ஒடுங்குவது அன்றி, மாயா காரியம் ஆகிய உலகம் முழுவதும், அம்மூலப்பகுதியில் ஒடுங்குதல் இல்லை, (அவ்வாறாயின், அனைத்து உலகமும் எங்கு ஒடுங்கும் என்று கேட்பாய் ஆயின்).

அத்திதியும் ஆதியும் ஆம் அங்கு அழிவது - மேலே சொன்ன திதிக்கடவுள் ஆகிய விட்டுணுவும், படைப்புக் கடவுள் ஆகிய பிரமாவும் தோன்றுவதற்குக் காரணம் ஆகிய அந்தச்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சங்காரக் கடவுள் ஆகிய சிவபரம்பொருளின் இடத்தே, அவ்விருவரோடும் கூட அனைத்து உலகமும் ஒடுங்கும், (எனவே சங்காரக் கடவுள் ஆகிய சிவபரம்பொருளே முதற்கடவுள் என்பது பெறப்பட்டது).

தெளிவுரை :

இந்த வெண்பாவில், ''ஒடுங்கியவாறே உலகம் உளது ஆகும் '' என்னும் தருக்கம் (Logic) கூறப்பட்டுள்ளது. அந்த நியமம் இல்லை ஆயின், நெல்லினிடத்துக் கமுகும், கமுகினிடத்து நெல்லும் தோன்றுதல் வேண்டும். அவ்வாறின்றி, நெல்லினிடத்து நெல்லும் கமுகினிடத்துக் கமுகும் தோன்றுதற்குக் காரணம், நெல்லினிடத்து நெல்லின் தோற்றமும் கமுகினிடத்து கமுகின் தோற்றமும் ஒடுங்கி இருத்தலினாலேயே ஆகும். ஆகவே, சங்காரக் கடவுளிடத்து ஒடுங்கிய உலகம், மீண்டும் சங்காரக்கடவுளின் நின்று தோன்றும் என்பதை இந்தத் தருக்கம் அறிவுறுத்துகின்றது. ஆக, உலகம் தோன்றுதல், ஒடுங்குதல் என்னும் வேறுபாடுடன், என்றும் உள்பொருள் என்பதும் பெறப்பட்டது.

உள்ளதே காரியப்படும் என்று சொல்வதே **சற்காரியவாதம்** என்பதன் பொருள் ஆகும். இந்தச் **சற்காரியவாதமே சைவ சித்தாந்தம் ஆகும்.**

உலகம் ஒடுங்குவதனால் கன்மமலம் பரிபாகம் ஆகும்; உலகம் தோன்றுவதனால் ஆணவமலம் பரிபாகம் ஆகும் ; உலகம் நிலைத்தலினால் மாயாமலம் பரிபாகம் ஆகும். இஃது எவ்வாறு நிகழ்கிறது என்பதற்கான விளக்கம் வருமாறு.

கன்ம மலம் ஆகிய நல்வினை தீவினைகளின் பயன் இன்ப துன்பங்கள் ஆகும் ; வினை காரணம் : பயன் காரியம். இவ்விரு வினைகளும் பரிபாகம் ஆதல் என்பது, இவற்றின் காரியம் ஆகிய **இன்ப துன்பங்களில் உயிர்க்குச் சமபுத்தி தோன்றுதல்** ஆகும். இந்த இன்பதுன்பங்களை நெடுங்காலம் அனுபவித்து வரும் பொழுது, அவ்விரண்டிலும் கைப்பு தோன்றுதலால், இந்த சமபுத்தி ஏற்படும். அந்த அனுபவத்திற்கு ஏற்றவாறு உடல் முதலியவற்றை உயிர்க்கு மாற்றிக் கொடுக்க வேண்டுவது இன்றியமையாததாகும். அவ்வாறு மாற்றும் பொழுது ஏற்படும் **ஒடுக்கம்,** பக்குவமாய் இருக்கும் கன்மபலனை அனுபவித்துத்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தொலைப்பதற்குக் காரணமாக இருப்பதால் **ஒடுக்கம் கன்ம மல பரிபாகத்தின் பொருட்டு ஆயிற்று.**

ஆணவமலம் உயிர்க்கு அறியாமையைச் செய்வது; அவ்வாறு அறியாமையைச் செய்யும் ஆணவமலத்தின் ஆற்றல் கெடுதல், **ஆணவமல பரிபாகம்** ஆகும். அறியாமை என்பது அனாதி கேவலத்தில் ஆன்மாவின் அறிவிச்சை செயல்கள் தொழிற்படாமல் தடுக்கப்படுதலைக் குறிக்கும். உலகத் தோற்றத்தால், அத்தடை நீங்குவதால், **தோற்றம் ஆணவமல பரிபாகத்தின் பொருட்டு ஆயிற்று.**

மாயை என்பது, மயக்கத்தைச் செய்வதாகும். மயக்கம் என்பது, ஒன்றைப் பிறிதொன்றாக உணரும் விபரீத உணர்ச்சி ஆகும். அஃதாவது, நித்தம் இல்லாத உலகத்தை நித்தம் என உணர்தல் ஆகும். இந்த விபரீத உணர்ச்சியின் கேடு, **மாயாமல பரிபாகம்** எனப்படும். நித்தம் என்று எண்ணப்படும் உலகம் அநித்தம் ஆவதை அனுபவத்தில் கண்டால் அன்றி, இந்த விபரீத உணர்ச்சிக்குக் கேடு உண்டகாது. இதனை அனுபவத்தில் காண்பதற்குச் சிறிது காலமாவது, உலகம் நிலைத்து இருக்க வேண்டும். எனவே, **நிலைத்தல் மாயா மல பரிபாகத்தின் பொருட்டு ஆயிற்று.**

குறிப்பு : இந்த வெண்பாவை, மூல நூல்களில் இரண்டு தொடர்களாக வைத்து ஆய்வு செய்திருப்பதன் நோக்கம், ஒவ்வொரு தொடரும் தனித்தனி கொள்கையை உடையதாக இருப்பதனாலேயே ஆகும். முதல் தொடர், '' உலகம் உள்பொருள் ; அஃது ஒடுங்கித் தோன்றும் இயல்பு உடையது '' என்பதைக் கூறுகிறது. இரண்டாவது தொடர், '' உள்பொருள் ஆகிய உலகம் ஒடுங்கித் தோன்றுதல் ஒரு கருத்தாவினால் ஆகும்'' என்பதைக் கூறுகிறது. அது பற்றிய விளக்கத்தை இனிக்காண்போம்.

உலகம் ஒடுங்கும் பொழுது, அழிந்து விடாமல், அதற்கு முதற்காரணம் ஆகிய மாயையில் சூக்குமமாக நிற்கிறது. எனவே, இந்த வெண்பாவில் 'மாயை' என்னும் பொருள் ஒன்று உண்டு என்பதும் பெறப்பட்டது.

'' அவை அழியாது'' என்னும் தொடரில் உள்ள ' அவை ' என்பது பிரபஞ்சத் தொகுதியைக்குறித்து நின்றது, அது பன்மைப்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பெயர் அன்று.

''அத்திதியும் ஆதியும்'' என்னும் தொடரில் உள்ள 'திதி' என்பது, காத்தல் தொழிலைச்செய்யும் விட்டுணுவையும், 'ஆதி' என்பது, படைத்தல் தொழிலைச் செய்யும் பிரம்மாவையும் குறிக்கின்றன.

சங்காரக் கடவுளிடத்தே உலகம் ஒடுங்கும் என்று கூறியபொழுது; அக்கடவுள் நிமித்த காரணமாய் நிற்பது அன்றி, முதற்காரணமாய் நிற்றல் இல்லை என்பது நினைவில் கொள்ளத்தக்கது. அஃது எவ்வாறு பொருந்தும் என்றால், முதல்வன் முதற்காரணம் ஆகிய மாயைக்கு ஆதாரமாய் நிற்பவன் ஆகலின், அவ்வாறு ஆதாரமாகி நிற்கும் முதல்வனிடத்து உலகம் ஒடுங்கித் தோன்றும் என்பது பொருந்தும், இவ்வுண்மையைத் தெளிவு படுத்தி, அடுத்த வெண்பாவில், ''உலகம் ஒரு கருத்தாவை உடையது'' என்பது விளக்கப்படுகிறது.

(3) எடுத்துக்காட்டு வெண்பா

வித்து உண்டா மூலம் முளைத்தவா தாரகமாம்:
அத்தன் தாள் நிற்றல் அவர் வினையால் - வித்தகமாம்;
வேட்டுவனாம் அப்புழுப்போல் வேண்டுருவைத் தான்கொடுத்துக்
கூட்டானே மண்போல் குளிர்ந்து.

(கொண்டு கூட்டு) மண்போல் குளிர்ந்து வித்து உண்டா மூலம் முளைத்தவா தாரகம் ஆம்; அத்தன் தாள் நிற்றல் அவர் வினையால் வித்தகமாம்; வேட்டுவனாம் அப்புழுப்போல் வேண்டு உருவைத்தான் கொடுத்துக் கூட்டானே.

இதன் பொருள் :

மண் குளிர்ந்து - வித்துக்கு ஆதாரம் ஆகிய நிலம் குளிர்ச்சியை அடைந்த பொழுது, **வித்து உண்டா மூலம் முளைத்தவா** அந்த நிலத்தின் கண், வித்து இருப்பதால் , முளை தோன்றுகிறது. அதுபோல, **தாரகமாம் அத்தன் தாள் நிற்றல்** - மாயை தனக்கு ஆதாரமாகிய இறைவனது சத்தியின் இடத்து

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நிற்பதால், (சத்தி சங்கற்பிக்கும் பொழுது) **அவர் வினையால் வித்தகம் ஆம்** - அவரவர் வினைக்கு ஈடாக அவ்வக்காரியங்களைப் பிறழாமல் தோற்றுவிக்கும் திறனை உடையது ஆகும். **வேட்டுவன் ஆம் அப்புழுப் போல்** - (குளவிகளில் ஒரு சாதி) வேட்டை வாளி ஆவதை விரும்பும் மகப் புழுவுக்கு, அது விரும்பிய அந்த வடிவினை (புழுவை) எடுத்து வைத்திருக்கும் அந்த தாய்க்குளவி கொடுக்குமாறு போல **வேண்டு உருவைத் தான் கொடுத்துக் கூட்டானே** - அவரவர் விரும்பிய வண்ணம், விரும்புதல் ஆகிய வினைக்குத் தக்க வடிவையும் பயன்களையும், மாயையினின்று இறைவன் தோற்றுவித்துக் கூட்டுவன். ஆகலின் அது கொண்டு, அவனது சுதந்தரத்திற்கு இழுக்கு இல்லை என்பது பெறப்பட்டது.

தெளிவுரை :

மாயையிலிருந்து தோன்றிய உலகத்தைச் சத்தியினின்றும் தோன்றியதாகக் கூறுவதற்கு விளக்கம் வருமாறு;

தாமரை அதன் கிழங்கிலிருந்து தோன்றுகிறது. ஆயினும் தாமரையைச்சேற்றில் நின்று தோன்றியது என்று பொருள் கொள்ளும்படி. 'பங்கயம்' என்கிறோம். பங்கம் - சேறு; ஜம்- தோன்றுதல். பங்கஜம் என்னும் வடமொழி, தமிழில் பங்கயம் என்று ஆயிற்று. சத்தியில் தோன்றியது எனவே, சத்தி இறைவனில் பிரிப்பின்றி நிற்கும் ஆதலின்,இறைவனில் தோன்றியது எனக் கொள்ளப்படும்.

உலகம் சடப் பொருள்; எனவே சடப்பொருள் ஆகிய காரியத்துக்கு, முதற்காரணமும் சடமாய் இருத்தல் வேண்டுமே அன்றிச் சித்தாய் இருத்தல் கூடாது. எனவே, கடவுளிடமிருந்து உலகம் தோன்றுதல் இல்லை. சித்தில் நின்று சடமும், சடத்தில் நின்று சித்தும் தோன்றும் என்றல் பொருந்தாது. ஆயினும் அது பொருந்தும் என்று சிலர் கூறுகிறார்கள். அவர்கள் கூற்றுக்கு ஆதாரமாகச்சில எடுத்துக் காட்டுகளையும் கூறுகிறார்கள். அவை வருமாறு:

சிலந்தி சித்து; அதிலிருந்து நூல் ஆகிய சடம் தோன்றுகிறது; **மனிதன்** சித்து: அவனிடமிருந்து உரோமம் நகம் முதலிய சடப் பொருள்கள் தோன்றுகின்றன; **கோமயம்** சடம்: அதிலிருந்து சித்துப் பொருள் ஆகிய தேள், புழு முதலியன தோன்றுகின்றன.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அவ்வாறே கடவுள் ஆகிய சித்திலிருந்து உலகம் ஆகிய சடம்தோன்றும் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

நுணுகி ஆராயாக் குறையினால் அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்; எனவே அவர்கள் கூற்றுப் பொருந்தாது. அதனை மறுத்துக் கீழ்க்காணுமாறு விளக்கம் தரப்படுகிறது.

சிலந்தியின் உடல் ஆகிய சடத்திலிருந்து, நூல் ஆகிய சடம் தோன்றிற்றே அன்றி சிலந்தி உயிரிலிந்து நூல் தோன்றவில்லை. அவ்வாறே மனித உடல்ஆகிய சடத்திலிருந்து நகம் முதலியன தோன்றின. அடுத்துக் கோமயம் ஆகிய சடத்திலிருந்துதேள் முதலியவற்றின் உடல்ஆகிய சடம் தோன்றிற்றே அன்றி, தேளின் உயிர் கோமயத்திலிருந்து தோன்றவில்லை.

மேலும், சிலந்தியின் உடலிலிருந்து நூலும், மனித உட்லிலிருந்து நகம் முதலிய்னவும் தோன்றுவதற்கு, அவ்வுடல்களோடு உயிர்இருத்தல் வேண்டும். இல்லையேல், அவை தோன்றுமாறு இல்லை. ஆகவே உயிர் நிமித்த காரணமும் உடல் முதல் காரணமும் ஆகும்.

இவ்வாறே இறைவன் நிமித்த காரணமும், இறைவனை இன்றித்தனித்து நில்லாத மாயை முதற்காரணமும் ஆகி நிற்கும். அந்நிலையில், இறைவன் சிற்சத்தியின் வியாபார பேதத்தால், முதற்காரணம் ஆகிய மாயையிலிருந்து உலகம் தோன்றும். (வியாபார பேதம் - தொழில் வேறுபாடு).

இந்த் வெண்பாவில், நிலத்திற்குச்சத்தி உவமை. முளைக்கு உலகம் உவமை யாகும். 'நிலம் குளிர்ந்தது' என்பதற்குச் சத்தியின் செயல் சங்கற்பித்தது உவமையாகும். (சங்கற்பித்தல் - எண்ணுதல்).

மாயாவதிகள், மாயையை **அநிர்வசனம்** என்பர். அநிர்வசனம் என்பது. உ-றுதியாய்ச் சொல்லக் கூடாதது என்பதாகும். வசனம் - சொல்வது; நிர்வசனம் -நிர்ப்பந்தம் என்பதுபோல், உறுதியாய்ச் சொல்வது ; அநிர்வசனம் - உறுதியாய்ச் சொல்லக்கூடாதது. இந்த வெண்பாவினால் 'மாயை' உள்பொருள் என்று உறுதியாகச் சொல்லப்பட்டது; எனவே இதனால் மாயாவாதிகள் கொள்கை மறுக்கப்படுகிறது.

வைணவர்கள், மாயை இறைவனின் வேறில்லை என்பர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வித்து நிலத்தின் வேறு ஆதல் போல, மாயை இறைவனின் வேறு என்று நாம் நிறுவியதால், பாஞ்சராத்திரிகளின் கொள்கையும் மறுக்கப்படுகிறது. இவர்களைப் போலவே, சிவாத்துவித சைவரும் மாயை இறைவனின் வேறு அன்று எனக் கூறுவர். எனவே அவர்களும் மறுக்கப்படுகிறார்கள்.

உயிர்களின் வினைக்கு ஈடாக உலகத்தைகக் கூட்டும் சுதந்தரம் உடையவன் இறைவன் ஆகலின், தன்வயம் உடையவன் என்பது பெறப்பட்டது. இக்கருத்துபற்றியே அப்பரடிகள்,

''வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்''

என்று அருளிச் செய்தார்கள்,

உலகைத் தோற்றுவித்து நிலைப்பித்து ஒடுக்கும் முத்தொழல்களைச் செய்யும் இறைவன், அத்தொழில்களால் பந்தம் உறுவானல்லன் என்பதை அடுத்த எடுத்துக் காட்டில் நிறுவுகிறார்.

(4) எடுத்துக்காட்டு வெண்பா

நோக்காது நோக்கி நொடித்தன்றே காலத்தின்
தாக்காது நின்று உளத்தின் கண்டு இறைவன் - ஆக்காதே
கண்ட நனவு உணர்வில் கண்ட கனவு உணரக்
கண்டவனில் இற்று இன்று ஆம் கட்டு.

(கொண்டு கூட்டு) இறைவன், காலத்தில் தாக்காது நின்று, ஆக்காதே கண்டு, நோக்காது நோக்கி நொடித்து. அன்றே இன்று ஆம் கட்டு, உளத்தில் கனவு கண்ட, கண்ட நனவு உணர்வில் உணரக் கண்டவனில் இற்று

இதன் பொருள் :

இறைவன் - முதல்வன் ஆகிய சிவபெருமான், **காலத்தில் தாக்காது நின்று** - இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம், நாள், நாழிகை முதலியனவாக வேறு பட்டுக், காலம் விகாரம் இன்றி நிற்பது போல, (முதல்வனும்) விகாரப் படாமல் நின்று. **ஆக்காதே கண்டு** - பிரபஞ்சத்தைக் கருவிகரணங்களால்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

படைக்காமல், சங்கற்ப மாத்திரத்தானே படைத்து, **நோக்காது நோக்கி நொடித்து** - அவ்வாறே கருவிகரணங்களால் காவாமல், சங்கற்ப மாத்திரத்தால் காத்து, கருவிகரணங்களால் அழிக்காமல், சங்கற்ப மாத்திரத்தால் அழிப்பன்; ஆகலின், **அன்றே இன்று ஆம்கட்டு** - முதல்வனின் சங்கற்பத்தைத் தடுப்பதற்கு மலம் இன்மையால், சங்க்றப மாத்திரத்தால் செய்கிறான்; எனவே, இவ்வாறு செய்தலினால் அவனுக்குப் பந்தம்இல்லை ஆகும். (பந்தம் இல்லை என்பது எப்படி என்றால், ஒருவன் கற்ற நூலில் உள்ள சொல்லும், அச்சொற்குரிய பொருளும் மனத்தில் தோன்றும்போது) **உளத்தின்** - அம்மனம் அந்தச் சொல்லிலுங் பொருளிலும் கட்டுப் படாதது போலும், **கண்டகனவு** - கனவில் கண்டவை, **கண்ட நனவு உணர்வில் உணரக் கண்டவனின் இற்று** - நனவில் வந்த பொழுது, கனவில் கண்டவாறு விளக்கமாக அறிந்தாலும், அறிந்தவன் கனவில் கண்டவற்றில் கட்டுப்படாதவாறு போலும் ஆகும்.

தெளிவுரை :

சங்கற்ப மாத்திரை - எண்ணத்தின் அளவில் மட்டுமே (அனுபவத்தில் இல்லை என்பதாம்) உயிர்களின் பொருட்டு இறைவன் உலகத்தைப் படைத்துக் காத்து ஒடுக்குவதால் , அத்தொழில்களால் அவன் விகாரப்படுவது இல்லை என்பதை இந்த வெண்பா இரண்டு எடுத்துக் காட்டுக்கள் வாயிலாக விளக்குகிறது.

நாம் ஒரு நூலைப் படிக்கும்போது, நரகம் சுவர்க்கம், பூமி முதலிய சொற்களும் அவற்றிற் குரிய பொருள்களும் நமது உள்ளத்தில் தோன்றினாலும், நமது உள்ளம் நாகம் முதலியவற்றைப் பொருந்துவதில்லை. அவ்வாறே கனவில் யானை, கரடி முதலியவற்றைக் கண்ட ஒருவன், நனவில் இருக்கும் போது, அந்தக் கனவில் கண்டவற்றை நினைந்து அஞ்சுவதில்லை. நனவின் போது கனவை நினைத்தல் சங்கற்பம் ஆகும். இவ்விரு உவமைகளும், சங்கற்பத்தால் தொழில் செய்யும் முதல்வனுக்குப் பந்தம் இல்லை என்பது வலியுறுத்தின.

இந்த இரண்டாவது அதிகரணத்தோடு வைத்துச் சிந்திக்கத் தக்க சிவஞான சித்தியார் பாடல்கள் வருமாறு.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பாடல் எண்		தொடக்கச் சொற்கள்
26	-	உள்ளதும் இலதும் இன்றி
27	-	ஒரு பொருள் ஒருவன் இன்றி
29	-	ஓரிடம் அழியப் பின்னும்
30	-	காலமே கடவுளாக
34	-	தோற்றமும் நிலையுர்ம் ஈறும்
35	-	மாயையின் உள்ள வஞ்சம்
38	-	காரிய காரணங்கள்
39	-	விந்துவின் மாயை ஆகி
40	-	வைகரி செவியில்கேட்பதாய்
41	-	உள்ளுணர் ஓசையாகி
42	-	வேற்றுமைப் பட்ட வன்னம்
43		சூக்கும வாக்கது
49	-	மண்ணினில் கடாதி எல்லாம்
50	-	சிலமோ உலகம் போல
51	-	கற்றநூல்பொருளும் சொல்லும்
52	-	உயிர்அவை ஒடுங்கி
53	-	தோற்றுவித்து அழித்து
54	-	உரைத்த இத் தொழில்கள்
55	-	இறுதியாம் காலம்தன்னில்
56	-	சொன்ன இத்தொழில்கள்
57	-	அழிப்பு இளைப்பாற்றல்
81	-	சத்திதான் பலவோ என்னில்
82	-	சத்திதன் வடிவு ஏது என்னில்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முதல் சூத்திரம் மூன்றாம் அதிகரணம்

மேற்கோள்

இனிச் சங்காரமே முதல் என்றது.

இதன் பொருள் :

சங்கார கருத்தா ஒருவனே; அவன் ஒருவனே இந்த உலகிற்கு முதற்கடவுள். ஏனையோர் முதல்வன் ஆகார்.

ஏது

சுட்டு உணர்வு ஆகிய பிரபஞ்சம், சுட்டு உணர்வு இன்றி நின்ற சங்காரத்தின் வழியல்லது, சுதந்திரம் இன்றி நிற்றலான்.

இதன் பொருள் :

சுட்டுணர்வு ஆகிய - ஒரு சமயத்தில் ஒன்றை மட்டுமே குறித்து உணர்தல் என்னும் ஒன்று ஒன்றாய்ச் சுட்டி அறிவது ஆகிய, **பிரபஞ்சம்** - உருவும் அருவும் என்று இருவேறு வகைப்பட்ட சேதனப் பிரபஞ்சம் ஆகிய உயிர், **சுட்டுணர்வு இன்றி நின்ற சங்காரத்தின் வழியல்லது** - அவ்வாறு சுட்டி அறிதலின்றி, எவ்வுலகையும் ஒன்றாய் அறிந்து நின்ற சங்காரகருத்தாவின் வசப்பட்டு பரதந்தரமாய் நிற்பது அல்லாமல், **சுதந்தரம்இன்றி நிற்றலான்** - தனக்கு எனச் சுதந்திரம் உடையதாய் நிற்பதன்று. எனவே, சங்கார காரணன் ஒருவனே உலகிற்கு முதற் கடவுள் அன்றி, ஏனையோர் முதற் கடவுளர் அல்லர்.

தெளிவுரை :

சடப் பிரபஞ்சம் சுட்டி அறியப்படுவது ; எனவே, சுட்டுணர்வு ஆகிய பிரபஞ்சம், உயிர் எனப்பட்டது. உயிர் அருவமே ஆயினும் சகலர் பிரளயாகலர், விஞ்ஞானகலர் என மூவகைப்படும். அம்மூவகை உயிருள், விஞ்ஞானகலரும் பிரளயாகலரும் சகலரில் பிரம் விட்டுணு முதலிய தேவரும் சூக்கும சரீரம் உடையவர்; சகலரில் தேவர் நீங்கலாக உள்ள அனைவரும் தூலசரீரம் உடையவர். எனவே உயிர் உருவும் அருவும் என்று இருவேறு வகைப்படும் எனப்பட்டது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சுட்டுணர்வு ஆகிய ஏது, சுதந்தரம் இன்மையையும், சுட்டுணர்வு இல்லாமை ஆகிய ஏது, சுதந்தரம் உண்மையையும் குறிக்கும். அஃது எவ்வாறு எனின், சுட்டி உணரும்போது, சுட்டப்படும் பொருளின் வேறாய் நின்றே உணரவேண்டும்; அந்நிலையில் ஒன்றைச் சுட்டும்போது, பிறிதொன்றைச் சுட்ட முடியாது. ஒன்றை விட்டு, ஒன்றை அறிவதால் சுதந்தரம் இல்லை என்பது பெறப்பட்டது. கலந்து நின்று ஒரு சேர அறியும்பொழுது, அறிய வேண்டுவதும் அறியப்படாததும் இல்லாமையால் அவ்விரண்டும் உடைய பரதந்தரம் ஒழியும்; ஒழியவே, சுதந்தரம் உண்மை பெறப்பட்டது.

எல்லாத் தொழிற்கும் வினைமுதலாய் நிற்கும் சிவபெருமான், முதற்கடவுள் ஆகலின், அவன் ஒருவனே சங்காரகருத்தா என்பது தெள்ளிதின் பெறப்படும்.

(5) எடுத்துக்காட்டு வெண்பா

ஒன்றலா ஒன்றால் உளதாகி நின்றவாறு
ஒன்றலா ஒன்றில் அவை ஈறு ஆதல் - ஒன்றலா
ஈறே முதல்; அதனின் ஈறலா ஒன்றுபல
வாறே தொழும்பாகும் அங்கு.

(கொண்டு கூட்டு) அவை, ஒன்று அலா ஒன்றால், உளதாகி நின்றவாறு, ஒன்று அலா ஒன்றில் ஈறு ஆதல், ஒன்று அலா ஈறே முதல்; அதனின் ஈறு அலா ஒன்று, அங்கு பலவாறே தொழும்பு ஆகும்.

இதன் பொருள் :

அவை - உருவும் அருவும் என்னும் இருவகைச் சேதனப்பிரபஞ்சத் தொகுதி ஆகிய உயிர், **ஒன்று அலா ஒன்றால்** - (அந்த இருவகை உயிர்களுள்) ஒன்று அல்லாத சிவபெருமானால், **உளது ஆகி நின்றவாறு** - உடம்போடு கூடித் தோற்றுவிக்கப்பட்டு, நிலை நிறுத்தப்பட்டவாறே, **ஒன்று அலா ஈறே முதல்** - அந்த சங்காரக் கடவுள் ஆகிய சிவபெருமானே உலகிற்கு முதற் கடவுள் ஆகும். **அதனின் ஈறு அலா ஒன்று** -

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

(ஆயினும், வீடு பெற்ற பொழுது சுட்டுணர்வு இன்றிச் சிவமாய் நிற்கும் உயிர், முதற்கடவுள் என்று கூறப்பட்டு, முதற்கடவுளர் பலர் ஆவரோ என்றால்) அந்தப் பரம் பொருளைப் போல அழிவு இன்றி நித்தமாய் நிற்கும் உயிர், **அங்கு** - வீடுபேறு பெற்ற அந்நிலயிலும், **பலவாறு தொழும்பு ஆகும்** - பலவகைகளிலும் பரம் பொருளுக்கு அடிமையாயே நிற்கும். எனவே, **முதற் கடவுள் ஒன்றே** என்பது தெளிவு.

தெளிவுரை :

உலகம் சடம் ; உயிர்க்கு அறியாமையைச் செய்யும் மலத்தால் கட்டுப்பட்டு, உயிர் சுட்டுணர்வு உடையதாய் நிற்கிறது. எனவே உலகத்தை அசைப்பித்தற்கும், உயிர்க்கு அறிவித்தற்கும், இவ்விரண்டின் வேறு ஆகிய ஒரு முதற்கடவுள் வேண்டும் என்பது பெறப்படும். மேலும் உலகம் பல்வேறு விசித்திரமாய் காணப்படுவதால், இதனைப் பல வகையாக நடத்துகின்ற முதற்கடவுள், முற்றுணர்வும், அளவற்ற ஆற்றலும், பேரருளும் சுதந்தரமும் முதலிய மாறுதல் அடையாத உறுதியான குணங்கள் உடையவன் என்பதும் பெறப்படும். எனவே, இத்தன்மையன் ஆகிய முதற் கடவுள் ஒருவனே ஆதல் அமையும் ஆகலின், வேறும் அத்தன்மை உடைய கடவுளர் பலர் உண்டு எனக் கொண்டால், அது மிகை என்னும் குற்றம் ஆகும்.

இலக்கணத்துள் ஒருவாற்றாலும் வேற்றுமைஇல்லாத இடத்து, அவ்இலக்கணத்தை உடைய இலக்கியம், ஒன்று ஆதலே அன்றிப்பல ஆதல் செல்லாது.

பல ஆயின் இலக்கணத்தில் வேற்றுமை இருக்க வேண்டும். இக்கருத்துப் பற்றியே, சங்கரிக்கும் இலக்கணத்தை உடைய கருத்தா ஒருவனே, உலகத்திற்கு முதல்வன் அன்றி, அந்த இலக்கணம் இல்லாத பலர் முதல்வர் ஆதல்செல்லாது. எனவே தான், '' **ஒன்று அலா ஒன்று**'' என்று வரையறுத்து ஓதினார்

முந்தி பெற்ற நிலையிலும் ஆன்மா, முதல்வனுக்குப் பல வாற்றாலும் அடிமையே ஆகும். இவ்வாறு கூறுவதற்குக் காரணங்கள் வருமாறு:-

1. இருள் நீங்கிய பின்பும், கண்ணுக்குக் காணும் செயல் சூரியனின் உதவியாலேயே நிகழும். அவ்வாறே மலம் நீங்கியபிறகும், ஆன்மாவுக்குப் பேரின்பத்தை நுகரும் செயல்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சிபபெருமானின் உதவியாலேயே நிகழும்.

2. எக்காலத்தும் ஆன்மா தனித்து நிற்கும்தன்மை உடையதன்று; ஏதேனும் ஒன்றைப் பற்றியே நிற்கும் தன்மை உடைய ஆன்மா முத்திநிலையிலும் முதல்வனைச் சார்ந்து முதல்வனாய் நிற்பதன்றித்தனித்து நிற்பது இல்லை. எனவே முதல்வனைத்சார்ந்து நின்று. முதல்வனால் வழங்கப்படும் சிவானுபவத்தைத் துய்த்துக் கொண்டு நிற்குமே அன்றி, ஆன்மா அந்நிலையில் ஐந்தொழில் ஆற்றுதற்கு இடம் இல்லை என்பது தெள்ளிதின் பெறப்படும். முதல்வனைப்போல் தனித்து நிற்க மாட்டாத ஆன்மா எப்படி ஐந்தொழில் ஆற்ற முடியும்?

3. விளக்கு ஒளியோடு கலந்து காணும் கண்ணொளி; விளக்கு ஒளி விளங்கும் இடம் முழுவதும் கண்ணொளி ஒரு சேரக்கலந்து இருப்பதில்லை, இஃது எவ்வாறு எனில், விளக்கு ஒளி முன் புறமும் பின்புறமும் விளங்கும் பொழுது, கண்ணொளி முன்புறத்து ஒளியோடு மட்டுமே கூடிநிற்கிறது; கண்ணுக்குப் பின்புறத்தில இருக்கும் விளக்கு ஒளியோடு கண் ஒளி கூடுவது இல்லை. விளக்கு ஒளி வியாபகம்; கண்ணொளி விளக்கொளியுள் அடங்கி நிற்கும் வியாப்பியம். முதல்வன் அறிவை நோக்க, ஆன்ம அறிவு தூல அறிவு; அஃதாவது ஆன்ம அறிவு துணை கொண்டு அறியும் அறிவு. எனவே, முத்திநிலையில் ஆன்மா, முதல்வனின் துணை கொண்டே முத்தியின்பத்தை அனுபவிக்க முடியும். அந்நிலையில், முத்திபெற்ற ஆன்மா, முதல்வனிடத்து உள்ள இன்பத்தை அனுபவித்து, அவ்வின்ப மயமாய் நிற்றலே அன்றி, பிற உயிர்களையும்முதல்வனின் செயல்களையும் அறிய முடியாது; அவ்வாறு அறியமுயன்றால், முத்தியின்பம் முழுமையாகக் கிட்டாது; இதனை வலியுறுத்தியே,

''பர ஞானத்தால் பரத்தைத் தரிசித்தோர், பரமே
பார்த்திருப்பர்; பதார்த்தங்கள் பாரார்' 311

என்று சிவஞானசித்தியார் தெளிவுறுத்துகின்றது.

சைவ சித்தாந்தத்தில் ''சிவமாய் நிற்றல்'' என்பதற்குப் பொருள், ' தனக்கு என ஒருசெயல் இன்றிச் சிவன் அருள் வழி நிற்றலே' ஆகும். எனவே, முத்தி நிலையில் ஆன்மா ஐந்தொழில் ஆற்றும் என்னும் கொள்கை, எந்த வகையிலும் பொருந்துமாறு இல்லை என்பதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இது காறும் ஆய்வு செய்ததிலிருந்து, சிவபெருமான் ஒருவனே கடவுள்; வேறு எவரும் கடவுள் ஆகமாட்டார் என்பது தெள்ளிதின் பெறப்பட்டது.

இந்த அதிகரணத்தோடு வைத்துச் சிந்திக்கத் தக்க சிவஞான சித்தியார் மற்றும் சிவப்பிரகாசப் பாடல்கள் வருமாறு:-

பாடல் எண்		தொடக்கச் சொற்கள்
(சித்தியார் -சுபக்கம்)		
45	-	வித்தைகள் அவித்தை ஈசர்
46	-	மூவகை அணுக்களுக்கு
47	-	அருவினில் உருவம் தோன்றி
48	-	அரு உரு ஈனாதாகம்
64	-	பந்தமும் வீடும் ஆய
68	-	உலகினை இறந்து நின்ற
86	-	வித்தையோடு ஈசர்
90	-	சிவன் அரு உருவும் அல்லன்
36	-	கருது காரணம் உண்டாக
37	-	புத்திமற் காரியத்தால்
சிவப்பிரகாசம் :		
23	-	என்னை இது எனின்

முதல் சூத்திரத் தொகைப் பொருள்

உலகம் ஓர் உள் பொருள். அது தோன்றி நின்று ஒடுங்கும் தன்மை உடையது. உலகம் சடம், எனவே அதனைத் தோற்றுவித்து, நிறுத்தி, ஒடுக்குதற்குக் கருத்தா ஒன்று உண்டு. அந்தக் கருத்தா சங்காரகாரணன். இந்த உலகம், அந்தக் கருத்தாவின் வியாபகத்தில் நின்று தோன்றி ஒடுங்குவதால், அவன் ஒருவனே கடவுள்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இந்தச் சூத்திரத்தில் நிறுவப்படும் கொள்கைகள் வருமாறு :-

1. உலகம் உள் பொருள்

2. உலகம் தோன்றி நின்று ஒடுங்கும் தன்மை உடையது.

3. உலகம் செய்வோன் ஒருவனை உடையது.

4. உலகத்தை முத்தொழிற்படுத்துபவன் சங்கார காரணனே.

5. சங்கார காரணன் ஆகிய சிவபெருமான் ஒருவனே கடவுள் ஏனையோர் கடவுள் ஆகார்.

- முதல் சூத்திரம் முற்றிற்று-

இரண்டாம் சூத்திரம்

அவையே தானேயாய், இரு வினையின்
போக்கு வரவு புரிய, ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே

இதன் பொருள் :

அவையேயாய் - (முதல் சூத்திரத்தில் கூறப்பட்ட சங்கார காரணன் ஆகியமுதல்வன், உயிர்களின்பொருட்டு, உலகத்தைத் தோற்றுவிக்கும் பொழுது) உடல் இருப்பதற்கு உடலில் உயிர் கலந்து நின்று அவ்வுடலேயாய் நிற்பது போல, உயிர்கள் நிலைத்தல் பொருட்டு, உயிர்களிடத்து இறைவன் கலந்து நிற்பதால், அவ்வுயிர்களே ஆய்; அஃதாவது ஒன்றாய் **தானேயாய்** - கண்ணுக்குக் காணும் தொழில், நிகழ்தல் பொருட்டுத் துணையாய் நிற்கும் சூரியன், கண்ணின் நின்றும் வேறு ஆதல் போல, உயிர்கட்கு அறிதல் தொழில், நிகழ்தல் பொருட்டுத் துணையாய் நின்று அறிவித்தலினால், இறைவன் அவ்வுயிர்களின் வேறும் ஆய்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அவையே தானே ஆய் - கண் ஒளி பொருளைக் காணும் பொருட்டு, ஆன்ம அறிவு உடன் நின்று, கண் ஒளியோடு கூடப் பொருளில் செல்லுமாறு போல, உயிர்கள் இன்பதுன்பங்களை அனுபவித்தல் பொருட்டு அந்த இன்பதுன்பங்களுக்கு முன்னிலை ஆகிய விடயங்களில் உயிரோடு கூட இறைவன் செல்லுதலின் , உயிர்களோடு **உடனும் ஆய்,** இவ்வாறு **உயிர்களோடு இறைவன் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நின்று, ஆணையின் இரு வினையின்** - ஆணை என்னும் தன்னுடைய அருளாற்றலினால் (சிற்சத்தி) செலுத்தப்பட்டு வரும் இருவினைகளால், **போக்கு வரவு புரிய** - அவ்வுயிர்கள் இறத்தல் பிறத்தல்களை மேற்கொள்ளும் வண்ணம், **ஆணையின் நீக்கம் இன்றி நிற்கும் அன்றே** - அந்த ஆணை ஆகிய தன் அருளாற்றலில் பிரிப்பு இன்றி மறைப்பாற்றலே (திரோதான சத்தி) வடிவாய்த் தொன்று தொட்டு நிற்பன்.

தெளிவுரை :

இறைவனுக்கும் அருளுக்கும் உள்ள தொடர்புக்கு, எடுத்துக்காட்டாக, நெருப்பையும் சூட்டையும் கூறலாம். நெருப்பில் சூடு இருக்குமே அன்றிச் சூட்டில் நெருப்பு இராது. குணத்திற்குக் குணி ஆதாரம் ஆகும் அன்றிக் குணிக்குக் குணம் ஆதாரம் ஆகாது. அவ்வாறே இறைவனில் அருளாற்றல் இருக்குமேயன்றி, அருளாற்றலில் இறைவன் இரான்.

இறைவன் ஒன்றினும் தோய்வு இன்றிச் சுயம் பிரகாசமாய் நிற்கும் தன் உண்மையில் **''சிவம்''** எனவும், உயிர்களோடு ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நிற்கும் தன்மையில் **''சக்தி''** எனவும், ஐந்தொழில் செய்யும் தன்மையில் **''பதி''** எனவும் பெயர்பெற்று நிற்பன். இந்த இடத்தில் சத்தி என்றது, திரோதான சத்தியைக் குறிக்கும். இந்தத் திரோதான சத்தியும் சிற்சத்தியின் கூறு ஆகும். ஆகவே, உயிர்களோடு இறைவன் கலந்து நிற்கும் நிலையில், திரோதான சத்தி வடிவாய்ச் சிற்சத்தியில் பிரிப்பின்றி நிற்பன். ஆதலால், **ஆணையின் '' நீக்கமின்றி நிற்கும்''** என்று கூறினார்.

' உயிர்களின் பொருட்டு இறைவன், திரோதான சத்தி வடிவாகச் சிற்சத்தியில் பிரிப்பின்றி, வெளிப்படாமல் நிற்பன்' என்னும் உண்மையை யாவரும் உணர்ந்து கொள்ளுதல்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பொருட்டே, சிவாலயங்களில் அம்பிகை வடிவமாகத் திருமேனி கொண்டு அருளியிருக்கின்றான்.

சூத்திரத்தில் '' அவையே தானேயாய்'', என்று வரும் தொடரை, இரட்டுற மொழிந்து கொண்டு, "அவையேயாய்" ''தானேயாய் '' அவையே தானே ஆய் '' என்று உரைக்க இவற்றுள், '' அவையேயாய் '' என்பது இறைவன் உயிர்களோடு '' **ஒன்றாய்**'' ' தானேயாய்'' என்பது இறைவன் உயிர்களோ டு '' **வேறாய்**'' நிற்றலையும், "அவையே தானேயாய்'' என்பது, இறைவன் உயிர்களோடு ''**உடனாய்** '' நிற்றலையும் உணர்த்துகின்றது.

உயிகள் பல ஆகலின், 'அவை ' என்ற சொல்லால் குறிப்பிட்டார்.

''**போக்கு வரவு புரிய**'' என்னும் தொடரில், போக்கினை முதலில் வைத்து வரவினைப் பின்பு கூறியதன் பொருள், இந்நூலில் அநாதி கேவல நிலை பற்றிக் கூறாமல், மீளத்தோன்றுதல் (புனர் உற்பவம்) பற்றிக் கூறுதலினாலேயே ஆகும். ''**புரிதல்**'' என்னும் சொற்குப் பொருள், இடைவிடாமல் எப்போதும் மேற்கொள்ளுதல் ஆகும். உயிர்க்கு, இறப்பும் பிறப்பும் இடைவிடாது நிகழ்கிறது என்றவாறு.

''**ஆணையின்**''' என்னும் சொல், முன்னும் பின்னும் பார்க்கும் **சிங்க நோக்குப் போல்** நிற்கிறது; முன் உள்ள இரு வினையின் போக்கு வரவு புரிய, என்பதனோடும் பின் உள்ள, நீக்கமின்றி நிற்கும், என்பதனோடும் பொருந்தி, ''**ஆணையின்** இருவினையின் போக்கு வரவு புரிய, **ஆணையின்** நீக்கமின்றி நிற்கும்'' எனப்பொருள் தந்து நிற்கின்றது.

'' அன்றே '' என்ற சொல்லை அசைச்சொல் என்பாரும் உளர். இங்கு அவ்வாறு கூறாது, ''நிற்கும் அன்றே '' என்பதற்கு ''அனாதியே உயிர்களோடு இறைவன் இவ்வாறு நிற்பன் '' என்று பொருள் கொள்ளப்பட்டது.

இறைவன், உயிர்களோடு ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நின்று, உயிர்களுக்கு இறத்தலையும் பிறத்தலையும், மறைப்பாற்றல் வடிவாக, அருளாற்றலின் நின்றும் பிரிப்பின்றி வெளிப்படாமல் நின்று செய்கிறான் என்று இந்தச் சூத்திரத்தில் கூறப்பட்டுள்ளது. எனவே, இவற்றையெல்லாம் இறைவன்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கருவி கரணங்களால் அன்றிச் சங்கற்ப மாத்திரத்தால் செய்வன் என்பது பெறப்பட்டது. அருளாற்றலின் நின்று மட்டும் இறைவன் பிரிப்பின்றி நிற்கவில்லை; உயிர்களோடும் அவன் பிரிப்பின்றி நிற்கிறான்; எனவே, உயிர்களுக்குச் செய்ய வேண்டுவனவற்றைச் செய்வதற்கு, அவனுக்குச் சங்கற்ப மாத்திரமே போதும்.

உயிர்களோடு ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நிற்றலும், உயிர்கள் போக்கு வரவு புரியும்பொருட்டுச் சத்தியுடன் பிரிப்பின்றி நிற்றலும் ஆகிய இயல்பு இறைவனுக்குத் தடத்த இலக்கணம் எனப்படும்; இதுவே இறைவனுக்குப் பொது இயல்பும் ஆகும்.

இந்தச் சூத்திரம், நான்கு அதிகரணங்களை உடையது; அவை வருமாறு:

1. அவையே தானே ஆய்.
2. ஆணையின் இரு வினையின்.
3. போக்கு வரவு புரிய.
4. ஆணையின் நீக்கம் இன்றி நிற்கும் அன்றே.

''உலகெலாம் ஆகி வேறாய் உடனுமாய் '' என்னும் சிவஞான சித்தியார்ப் பாடல், இதனுடன் வைத்துச் சிந்திக்கத் தக்கது.

இரண்டாம் சூத்திரம் முதல் அதிகரணம்
மேற்கோள்

ஈண்டு இவ்வான்மாக்கள் பலவும், முதல்வன் தானேயாய் நிற்கும் என்றது.

இதன் பொருள் :

ஈண்டு - அதிகரணம் நான்கனுள்ளும் இந்த முதல் அதிகரணத்துள், **முதல்வன்** - இறைவன், **இவ்வான்மாக்கள் பலவும் தானேயாய் நிற்கும் என்றது** - உயிர்களோடு கலந்து நிற்கும் தன்மையினால் இவ்வுயிர்களேயாய், பொருளின் தன்மையினால்இவ்வுயிர்களின் வேறாய், உயிர்களோடு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உடனாய் நிற்கும் தன்மையால், இவ்வுயிர்கள் பலவும் தானேயாய் நிற்பன் என்றவாறு.

தெளிவுரை:

இறைவன் இவ்வாறு மூன்று விதமாய் நிற்றல் எதற்காக? உயிர்களுக்கு வேண்டுவனவற்றை யெல்லாம் செய்ய வேண்டுமாயின், இறைவன் இவ்வாறு மூன்று விதமாய் நிற்றல் இன்றியமையாததாகும். உயிர்களுக்கு வேண்டுவன, **நிலைத்தல், அறிதல், செல்லுதல்** என்னும் மூன்றுமே ஆகும். ஏனை யாவும் இம் மூன்றனுள் அடங்கும்.

ஒன்றாய் நிற்றலால் நிலைக்கவும், வேறாய் நின்று அறிவித்தலால் அறியவும், உடனாய் நின்று செலுத்துதலால் செல்லவும் செய்ய வேண்டுதலின், இறைவன் இம்மூவகை உதவியும் உயிர்கட்குச் செய்வேண்டி, மூன்று விதமாய் நிற்றல் வேண்டப்படுவதாயிற்று.

ஏது

அத்துவிதம் என்ற சொல்லானே, ஏகம் என்னில், ஏகம் என்று சுட்டுவது உண்மையின் அத்துவிதம் என்ற சொல்லே, அந்நிய நாத்தியை உணர்த்தும்ஆயிட்டு.

இதன் பொருள் :

அத்துவிதம் என்ற சொல்லானே - அத்துவிதம் என்ற சொல்லின் முன்பு நின்ற 'ந'கரம், **இன்மை, அன்மை, மறுதலை** என்னும் முப்பொருள் உணர்த்தும் : ஆதலால், அவற்றுள் இன்மைப் பொருள் பற்றி, 'அத்துவிதம்' என்ற சொல்லைக் கொண்டு மட்டும், **ஏகம் என்னில்** - பொருள் ஒன்றே என்று கூறுதல் பொருத்தமாகும் என்றால், **ஏகம் என்று சுட்டுவது உண்மையின்** - ஒன்று ஆகிய தானே தன்னை ஒன்று எனக்கருதும் பொருள் வேறு உண்டு என்பது பெறப்படும்; ஆகவே ஒன்று என்றல் பொருந்தாது. மேலும், **அத்துவிதம் என்ற சொல்லே அந்நிய நாத்தியை உணர்த்து மாயிட்டு** - எண்ணுப் பெயர்மேல் வந்த நகரம் அன்மைப் பொருளை மட்டுமே உணர்த்துகிறது. ஏனையவற்றில், இன்மை, அன்மை, மறுதலை என்னும் முப்பொருள்களைத்தரும் பொதுமையில் நிற்பதன்றி, ஏனைச்சொற்களின் மேல் வந்த நகரம்போல், இன்மை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மறுதலைப் பொருள்களை உணர்த்துதல் வழக்கில் இல்லை. எனவே ஒன்று எனக் கருதுவதாலும், எண்ணுப் பெயர்மேல் வந்த 'நகரம்' இன்மைப் பொருள் உணர்த்தாததாலும், **'அத்துவிதம்'** என்ற சொல், தானே வேறு காரணம் வேண்டாமல், உயிர்களோடு பிரிப்பின்றி நிற்றலை, உணர்த்தி நிற்கும் ; ஆகவே ஈண்டு இவ் ஆன்மாக்கள் பலவும் முதல்வன்.தானே ஆய் நிற்கும் என்று மேற்கோள் கூறியது.

தெளிவுரை :

'நத்துவிதம்' என்ற வடமொழிச் சொல்லில் உள்ள, நகரமெய் (ந்) கெட்டு, அதன்மேல் நின்ற அகரம் (அ) , முதலாக நின்று, தமிழில் ''அத்துவிதம்'' என வழங்கல் ஆயிற்று. இதுவே அத்துவிதம் என்ற சொல் வந்த வரலாறு.

அத்துவிதம் என்னும் சொல்லின் உள்ள 'அ'கரம், அன்மை, இன்மை, மறுதலை என்னும் மூன்று பொருளை உணர்த்தும், எடுத்துக்காட்டாக மூன்று சொற்களைக் கொண்டு இதனைக் காண்போம்.

1. **'' அப்பிராமணன்''** என்ற சொல், பிராமணத்தன்மை இல்லாத ஒருவனைக் குறிக்குமே அன்றி, இச்சொல்லுக்குப் பிராமணன் இல்லை என்று பொருள் கூறுவார் இல்லை. மேலும், ஒருவன் பிராமணனாய் இருந்தும், அவனிடம் பிராணமத்தன்மை (அஃதாவது பிராமணனுக்குரிய இயல்பு) இல்லாத நிலையை இச்சொல் குறிக்கிறது; எனவே, 'அப்பிராமணன்' என்னும் சொல்லில் உள்ள 'அ'கரம், **அன்மைப் பொருளில்** வந்தது எனப்படுகிறது.

2. **'' அமலம்''** என்ற சொல், மலம் இல்லாத தன்மையைக் குறிக்கும். இல்லாத தன்மை - இன்மை. எனவே

'அமலம்' என்னும் சொல்லில் உள்ள **'அ'**கரம், **இன்மைப் பொருளில்** வந்தது எனப்படுகிறது.

3. 'அநீதி' என்றசொல், நீதியின் மறுதலையைக் குறிக்கும். அஃதாவது நீதிக்கு மாறான ஒன்றைக் குறிப்பது. எனவே, 'அநீதி' என்னும் சொல்லில் உள்ள **'அ'** கரம் **மறுதலைப் பொருளில்** வந்தது எனப்படுகிறது.

'அ'கரம் பொதுவாகப் பொருளைப் பற்றிய பெயர்ச்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சொல்லில் வரும் பொழுது தான், மேற் சொன்ன **அன்மை, இன்மை, மறுதலை** என்னும் மூன்று பொருள்களைத் தரும்படி வரும்.

'அகரம்' எண்ணைப்பற்றிய பெயர்ச்சொல்லில் வரும் பொழுது, **அன்மைப் பொருளில் மட்டுமே நிற்கும்;** மற்ற இரு பொருள்களைத் தரும்படி அமையாது; அஃதாவது 'அ' என்னும் எதிர்மறைப் பொருளைத்தரும் எழுத்து, எண்களைக் குறித்து வரும் சொற்களின் முன் வரும்போது. அந்த எண்ணைக் குறிக்கும் பொருளின் தன்மையை வேறுபடுத்திக் காட்டுவதாகவே அமையும். எடுத்துக்காட்டாக, 'ஏகம்' என்னும் சொல்லுக்கு முன் அகரம் நின்று அனேகம் என்றாகி அன்மைப் பொருளைத்தரும். அது போல, ''துவிதம்'' என்னும் சொல்லுக்கு முன் அகரம் நின்று, அத்து விதம் என்று ஆகி, இரண்டும் வெவ்வேறு தன்மையை உடைய பொருள்கள் என்னும் பொருளைத் தரும்.

இக்கருத்தே பற்றி 'ஏகன்' ஆகிய கடவுளும் 'அநேகன்' ஆகிய உயிர்களும், **பொருள் தன்மையால்** இரண்டாக உள்ளன; ஆயினும், கண்ணொளியும் ஆன்ம போதமும் போல, இரண்டும் கலந்து நிற்பதால், இரண்டின் தன்மையும் பிரித்து அறிய வராது என்கிறது சைவசித்தாந்தம். அஃதாவது, 'ஏகம்' ஆகிய கடவுள் 'அநேகம்' ஆகிய பல உயிர்களோடும் **பிரிப்பின்றி கலந்து நிற்கும்** என்பதே 'அத்துவிதம்' என்ற சொற்குப் பொருள் ஆகும்.

'ஆயிட்டு' என்ற சொல், 'ஆகலான்' என்று பொருளைத் தருவது (''நீயோ செய்யாய் நின்மலன் ஆயிட்டு'' என்னும் இருபா இருபஃது தொடரைக் காண்க)

(1) எடுத்துக்காட்டு வெண்பா

கட்டும் உறுப்பும் கரணமும் கொண்டுள்ளம்
இட்டது ஒரு பேர் அழைக்க என்என்று ஆங்கு-ஒட்டி
அவன் உளம் ஆகில்லான் : உளம்அவனா மாட்டாது ;
அவன் உளம் ஆய், அல்லனும்ஆம்அங்கு.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இதன்பொருள் :

கட்டும் உறுப்பும் கரணமும் கொண்டு - உயிர், நரம்பு முதலியவற்றால் கட்டப்பட்டு இருக்கும் உடம்பையும், மெய், வாய் , கண்; மூக்கு, செவி, கை, கால், வாய், எருவாய், கருவாய் என்னும் கருவிகளையும், மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்னும் கரணங்களையும் பற்றி நிற்கும். **இட்டது ஒரு பேர் அழைக்க** - அவ்வாறு நிற்கும் பொழுது, அந்த உயிரின் உடம்புக்கு ஒரு பெயர் இடப்படும். அப்பெயர், உடம்பைக் கொண்டு இட்டதே அன்றி, உயிரைக் கொண்டு இட்டதன்று; இவ்வாறு உடலுக்கு இட்டபெயரால் அழைக்கும் பொழுது, (உடம்போடு கூடிய அந்த உயிர், அந்த உடம்பு வேறு, தான் வேறு என்று வேற்றுமை இன்றிக் கலந்து நிற்பதால்) **என் என்று ஆங்கு** 'ஏன்' என்று அழைத்தவரிடம் செல்லும் : அதுபோல, **ஓட்டி** - இறைவனும் உயிர்களுடன் கலந்து நிற்பன.

அங்கு அவன் உளம் ஆகில்லான் அவ்வாறு நிற்பினும், அவன் உயிர் ஆகிவிடமாட்டான். **உளம் அவன் ஆகமாட்டாது** - உயிரும் இறைவன் ஆகிவிட மாட்டாது. (இறைவன் வேறு; உயிர்வேறு), **அவன் உளமாய் அல்லனும் ஆம்** - இறைவன் உயிராயும், உயிரின் வேறாயும் நிற்க வல்லவன் ஆவான். இறைவன் **உயிரோடு கலந்து** நின்று, உயிர் செல்ல வேண்டுவதற்காக, உயிருடன் தானும் செல்வதால் **உயிராயும்,** உயிர்க்கு அறிவித்தலல்ல **உயிரின் வேறாயும்** நிற்பன். (ஆனால், உயிர் இறைவனாகவும் நில்லாது; இறைவனின் வேறாகத் தனித்தும் நில்லாது. ஆயினும் முத்திநிலையில், உயிர் முதல்வனாய்க் கலந்து நிற்கின்றதே அன்றி, முதல்வனைப்போல் தனித்து நிற்பது இல்லை. எனவே, உயிர்வேறு, இறைவன் வேறு என்பது பெறப்படும்.)

தெளிவுரை :

உடம்போடு உயிர் பேதம் இன்றிக் (அபேதமாய்) கலந்து நிற்பது போல, உயிரோடு இறைவன் அபேதமாய்க் கலந்து நிற்பன். இந்த வெண்பா, உயிர்களோடு இறைவன் ''ஒன்றாய்'' நிற்றலைக் காட்டுவதற்கு எழுந்தது.

''ஓட்டி'' என்ற சொல், உயிர்களோடு ஓட்டி நிற்பவனாகிய இறைவனைக் குறிப்பதால், இது பெயர்ச் சொல் ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சம்பந்தர் பதிகத்தின் முதற் பாட்டில் வரும் ''விடையேறி மதிசூடி'' எனவரும் சொற்களைப் போன்றது.

நமது பெயர் (Name) நமது உடம்புக்கு இடப்பட்டதே அன்றி, உயிராகிய நமக்கு இடப்பட்டதன்று என்பது கவனிக்கத்தக்கது.

(2) எடுத்துக்காட்டு வெண்பா

ஒன்று என்றது ஒன்றே காண்; ஒன்றே பதி; பசுவாம்
ஒன்று என்ற நீ, பாசத்தோடு உளைகாண் - ஒன்றின்றால்
அக்கரங்கள் இன்றாம் அகர உயிர் இன்றேல்
இக்கிரமத்து என்னும் இருக்கு,

இதன் பொருள் :

இருக்கு ஒன்று என்றது ஒன்றே காண் - வேதத்தில் ஒன்று என்றதற்குப் பொருள், ஒன்று என்பதே ஆம்; வேறு பொருள் படாது. **பதி ஒன்றே** - பொருள் ஒன்று என்பதற்கு கருத்து பதிப்பொருள் ஒன்றே என்பதாகும்; அஃது இரண்டு இல்லை என்பதேயாகும். (இவ்வாறு இரண்டு பதிப்பொருள் இல்லை, ஒரு பதிப் பொருள்தான் உண்டு என்பதே ''ஒன்று'' என்பதன் கருத்து என அறியாமல், பதிக்கு வேறான பொருள் இல்லை என்பது பொருந்தாது). **ஒன்று என்ற நீ பசுவாம்** - (ஏனென்றால்,' ஒன்றாக இருந்தால் அது தன்னை ஒன்று எனக் கருத வேண்டாம்; அவ்வாறு கருதினால், கருதும் பொருள் கருதப்படும் பொருளின் வேறாகவே இருக்க வேண்டும்; எனவே) ஒன்று என்று கருதுகின்ற நீ, அந்தப் பதிப்பொருளின் வேறு ஆகிய பசு (உயிர்) என்று அறிவாயாக. **பாசத்தோடு உளை** (பதியும் அறிவுடைய் பொருள்; யானும் அறிவுடைய பொருள்; இந்நிலையில் என்னை உயிர் என்றதற்கு என்ன காரணம் என்றால்) நீ மலத்தோடு கூடி நின்றாய் ஆகலின் பசு என்று சொல்லப்பட்டாய். (பாசத்தோடு கூடி நின்றதால். உயிர் பசு எனப்பட்டது). பதிப்பொருள் ஆகிய இறைவன் மலத்தோடு கூடாமல் நிற்றல் மட்டுமின்றி, மலத்தோடு கூடிய உன்னை, அம்மலத்தின் நின்றும் விடுவிக்கும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அருளும் ஆற்றலும் உடையவனாய் நிற்கிறான். இவ்வாறு இறைவனுக்கும் உயிர்க்கும் வேற்றுமை உண்டு என்று கூறுவது, 'பிரமம் இல்லை ஆயின் ஒரு பொருளும் இல்லை' என்னும் வேதத்தினோடு முரண்படுமோ என்றால் முரண்படாது;

அகர உயிர் இன்றேல் அக்கரங்கள் இன்று ஆம்

என்னும் இக்கிரமத்து, ஒன்று இன்று என்னும் -

அந்த வேதவாக்கியத்தியின் கருத்து, பிரமத்தைத் தவிர இரண்டாவது பொருள் இல்லை என்பது அன்று; வேதத்தின் கருத்து வருமாறு; ''அ'' கரம் என்னும் உயிர் எழுத்து இல்லை என்றால், எழுத்துக்களே இல்லை என்று கூறுவதைப் போலவே, பிரமப் பொருள் இல்லை என்றால் ஒரு பொருளும் இல்லை என்பதே ஆகும். இப்படிப் பொருள் கொள்ள வேண்டுமே அன்றி, இரண்டாவது பொருள் இல்லை என்று பொருள் கொள்வது பொருந்தாது.

தெளிவுரை :

இந்த வெண்பா, இறைவன் உயிர்களோடு வேறாயும் நிற்கிறான் என்பதை எடுத்துக்காட்ட எழுந்தது. எடுத்துக்காட்டு ; 'அ' என்னும் உயிர் எழுத்தும், பிற எழுத்துக்களுமே ஆகும். 'அ' என்னும் எழுத்து இறைவனுக்கு உவமை; பிற எழுத்துக்கள் உயிர்களுக்கு உவமை.

'அகர ஒலி' யினாலேயே ஏனைய ஒலி வடிவாகிய எழுத்துக்கள் (அக்கரங்கள்) எல்லாம் இயங்கும். அகர ஒலி இல்லையேல் அவை இயங்கா. அதுபோலவே, இறைவன் இருப்பதனாலேயே எல்லா உயிர்களும் இயங்குகின்றன. இல்லையேல் உயிர்கள் இயங்கா; பிரமம் இல்லையேல் ஒரு பொருளும் இல்லை' என்பதற்குப் பொருள் இவ்வளவே ஆகும். 'அகரம்' தனித்து நிற்கும் தன்மையது; ஏனைய எழுத்துக்கள் அகரத்தின் துணையின்றித் தனித்து நிற்கும் தன்மை உடையன அல்ல; அவ்வாறே, பிரமம் தனித்து நிற்கும் தன்மை உடையது; ஆனால் உயிர்கள் பிரமத்தின் துணையின்றித் தனித்து நிற்கும் தன்மை உடையன அல்ல.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

(3) எடுத்துக்காட்டு வெண்பா

பண்ணையும் ஓசையும் போலப் பழம் அதுவும்
எண்ணும் சுவையும் போல் எங்குமாம் - அண்ணல் தாள்
அத்துவிதம் ஆதல் அருமறைகள் ஒன்று என்னாது
அத்துவிதம் என்று அறையும் ஆங்கு

இதன் பொருள் :

பண்ணையும் ஓசையும் போல - பண்ணும் அதனோடு பிரிப்பின்றி நிற்கும் ஓசையும் போலவும், **பழ மதுவும் சுவையும் போல்** பழமும் அதனோடு பிரிப்பின்றி நிற்கும் சுவையும் போலவும் **எங்கும் ஆம் எண்ணும் அண்ணல் தாள்** - எல்லா இடத்தும் வியாபகமாக நிற்கின்ற முதல்வன் திருவருள், **அத்துவிதம்ஆதல்** - உயிர்களோடு பிரிப்பின்றி நிற்கும்; **அருமறைகள் ஒன்று என்னாது** - அவ்வாறு நிற்கும் முறைபற்றி, வேதங்கள் 'பிரமம் ஏகம்' என்று கூறியதோடு நில்லாமல் **அத்துவிதம் என்று அங்கு அறையும்** - அத்துவிதம் என்றும் சில இடங்களில் கூறும்.

தெளிவுரை :

பிரமப் பொருள் இரண்டு இல்லை; ஒரு பிரமமே உள்ளது; இவ்வுண்மையை உணர்த்தும் பொருட்டே வேதங்களில் 'பிரமம் ஏகம்' என்று கூறப்பட்டுள்ளது. **'ஏகம் அத்துவைதம்'** என்பது, 'அவையே தானே ஆய்' என்னும் பொருளைத் தரும். இந்த வெண்பா, இறைவன் உயிர்களோடு உடனாயும் நிற்கிறான் என்பதைக் காட்ட எழுந்தது. குணி வியாபகம்; குணம் அந்தக் குணியினுள் வியாப்பியம்; அஃதாவது, இறைவன், (குணி) எங்கும் வியாபகமாகவும், உயிர் (குணம்) அவ்வியாபகத்துள் அடங்கி வியாப்பியமாயும் இருக்கும் என்பதை உணர்த்தவே, குண குணி உவமை கூறப்பட்டது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

(4) எடுத்துக்காட்டு வெண்பா

அரக்கொடு சேர்த்தி அணைத்தஅக் கற்போல்
உருக்கி உடங்கு இயைந்து நின்று - பிரிப்பின்றித்
தானே உலகாம்; தமியேன் உளம் புகுதல்
யானே உலகு என்பன் இன்று.

இதன் பொருள் :

உருக்கி அரக்கொடு சேர்த்தி அணைத்த அக்கல் போல் - அரக்கை உருக்கி உருக்கப்பட்ட அந்த அரக்கினோடு கல்பொடியைச் சேத்துக் கூட்டினால், அந்தக் கல்பொடி அந்த அரக்கினோடு ஒன்றாய்க் கூடி, நீக்கம் இன்றி நிற்கும்; அதுபோல், **உடங்கு இயைந்து நின்று, பிரிப்பு இன்றித் தானே உலகு ஆம் -** முதல் வனும் உயிர்களோடு கூடி, நீக்கம் இன்றி உடனாய் நிற்பன், ''கூடி'' என்றதனால் ''ஒன்று'' ஆதலும் ''நிற்பன்'' என்றதனால் ''வேறு'' ஆதலும் ''நீக்கமின்றி'' என்றதனால் ''உடன்'' ஆதலும் பெறப்படும்.

தமியேன் உளம் புகுதல் யானே உலகு என்பன் இன்று-

அவ்வாறாயின் உயிர்களும் முதல்வன் போல், ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நிற்கும் இலக்கணம் உடையன என்று கொள்ள வருமே என்றால், வராது; எதனால் எனின், பாசக் கூட்டத்தினின்றும் நீங்கித் தனியாய் நின்ற உயிரின் அகத்து, அம்முதல்வன் சிவோகம் பாவனையால் புகுந்து, உயிர்வேறு தான் வேறு எனப் பிரிப்பின்றி, அவ்வுயிரேயாய் நிற்பதால், தன் அகத்தில் முதல்வன் நிற்கும் உரிமை பற்றி, அம் முத்திக்காலத்தில் யானே உலகெலாம் ஆயினேன் எனப்பட்டது. எனவே, முத்தியில் உயிர்கள், இறைவனைப் போன்ற இலக்கணம் உடையன என்று கூறமுடியாது.

தெளிவுரை :

''பாசக் கூட்டத்தினின்றும் நீங்கித் தனியாய் நின்ற உயிர்'' என்று உரையில்கூறியிருப்பதைக் கண்டு, 'உயிர் ஏதேனும் ஒன்றினைச் சார்ந்து நிற்பதன்றி தனித்து நில்லாது' என்னும் கொள்கைக்கு முரணாக இருக்கிறதே என்று எண்ணத் தோன்றும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இங்குத் 'தனித்து' என்ற சொற்குப் பொருள், பாசக் கூட்டத்தில் நீங்கி இருத்தல் மட்டுமே ஆகும்; அதனால் உயிரைவிட்டு இறைவன் என்றுமே பிரிந்து நிற்கவில்லை என்பது பெறப்படும்.

''சிவோகம் பாவனையால் புகுந்து '' என்று உரையில், கூறியிருப்பதால், முன்பு உயிரை விட்டுப் பிரிந்து, பின்பு இறைவன் உயிரில் புகுந்தான் என்று பொருள் கொள்ளலாகாது. ஏனெனில், அநாதியே இறைவன் உயிர்களோடு பிரிப்பின்றியே நிற்கிறான்; ஆணவமலமும் அநாதியே உயிர்களோடு கூடி நிற்பதால், இறைவன் முன்பு விளங்கித் தோன்றவில்லை; சிவோகம் பாவனையின் போது, ஆணவமலப் பற்று உயிர்க்கு இல்லாமை காரணமாக இறைவன் உயிர்க்கு விளங்கித் தோன்றுகிறான். இவ்வாறு விளங்கித் தோன்றுதலே 'புகுந்து' எனப்பட்டது.

இந்த அதிகரணத்தில் இறைவன் உயிர்களோடு ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நிற்றலின் இன்றியமையாமை தெளிவுறுத்தப்பட்டது. இதனைச் சிவப்பிரகாசத்தின் **''புறச்சமயத் தவர்க்கு இருளாய்''** எனத் தொடங்கும் பாடலில் கூறப் பட்டிருக்கும் உவமையிலிருந்து தெளிவு பெறலாம்.

இந்த அதிகரணத்தோடு வைத்துச் சிந்திக்கத் தக்க சிவஞான சித்தியார் பாடல்கள் வருமாறு:

பாடல் எண்		தொடக்கச் சொற்கள்
84	-	சீவனும் இச்சா ஞானச் செய்தியால்
91	-	உலகெலாம் ஆகி வேறாய்
92	-	ஒன்றென மறைகள் எல்லாம்
93	-	உருவொடு கருவி எல்லாம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இரண்டாம் சூத்திரம் - இரண்டாம் அதிகரணம் மேற்கோள்

இனி இவ்வான்மாக்களுக்கு இருவினை முதல்வன் ஆணையின் வரும் என்றது.

இதன் பொருள் :

மேலை அதிகரணத்தில் கூறியவாறு, முதல்வன் மூவகையுமாய் நிற்றற்கு, உரிமை உடைய உயிர்களுக்கு, முற்பிறவிகளில் சம்பாதிக்கப்பட்டு, மாயையில் கட்டுப்பட்டுக் கிடந்த புண்ணிய பாவங்களின் பலன்கள் ஆகிய சுக துக்கங்கள், இறைவனுடைய சிற்சத்தியால் வரும் என்றவாறு.

தெளிவுரை :

இந்த மேற்கோளில் உள்ள '' இருவினை '' என்ற சொல், நாம் முற்பிறப்புக்களில் செய்த நல்வினை தீவினைகள் பயனுக்கு வராமல், நுண் வடிவில் வெளிப்படத் தோன்றாமல் மாயையில் கட்டுப்பட்டு இருக்கும் சஞ்சிதத்தையே குறிக்கும்.

சஞ்சிதம் மாயையில் கட்டுப்பட்டு இருக்கும் என்று கூறுவதற்குக் காரணம் வருமாறு:

விளைகின்ற வித்து மண்ணில் கட்டுப்பட்டுக் கிடந்து, தண்ணீர் கூடிய பொழுது பயன் தருகிறது ; அந்த வித்து, பலன் தரும் நிலையில், விதைத்தவனிடம் கட்டுப்பட்டு இருந்தால், பயன் விளையாது; எனவே செய்த வினை உயிரிடத்தில் கட்டுப்பட்டு இருக்கவில்லை. இறைவனிடம் கட்டுப்பட்டு இருக்குமாயின், சடத்தின் தோற்றத்திற்கு இறைவன் முதற்காரணம் எனப்பட்டு, முதல்வன் சடம் ஆதல் வேண்டும். எனவே, வித்து மண்ணில் நின்று பயன் தருவது போல், வினையும் மாயையில் நின்று விளைகிறது. மண் மாயைக்கு உவமை; வித்து வினைக்கு உவமை; விளைவிக்கும் தண்ணீர் சிற்சத்திக்கு உவமை. இதனால் மாயை உண்டு என்பதும் பெறப்பட்டது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உலகத்தைத் தோற்றுவிப்பதற்கு முதற்காரணம் மாயை; துணைக்காரணம் வினை; நிமித்த காரணம் இறைவன், இறைவனின் ஆணையால் அவன் அருளாற்றல் தொழிற்படுவதால், இறைவன் நிமித்த காரணன் ஆவன்; எனவே, மேற்கோளில், '' இருவினை முதல்வன் ஆணையின் வரும் '' என்று கூறப்பட்டது.

ஏது

ஒரு நகரியைக் காப்பான் பாடிகாவல் இட்டாங்கு, அவை அவனது ஆக்கினை ஆகலான்.

இதன் பொருள் :

ஒரு பட்டணத்தைக் காக்கும் அரசன், பாசறையில் காவல் வைக்கும் தண்டத் தொழிலை, உரியவன் ஆகிய ஒரு அதிகாரியினிடத்தில் வைத்துச் செய்வது போல, இறைவன் புதுப்படைப்பைச் செய்யும் தன் சத்தியை, இருவினையின் இடமாக வைத்து நடாத்துவன்; ஆதலால் இனி இந்த உயிர்களுக்கு இருவினை, முதல்வன் ஆணையின் வரும் என்று மேற்கோள் கூறியது.

தெளிவுரை :

அரசன் முதல்வனுக்கு உவமை; மந்திரி முதலியஅதிகாரிகள், படைத்தல் முதலிய தொழில்களைச் செய்யும் அதிகார தெய்வங்களுக்கு உவமை; குடிமக்கள், உயிர்களுக்கு உவமை; சட்டம் வேதாகமங்களுக்கு உவமை.

'பாடிகாவல்' என்பது, ஒரு தண்டத் தொழில்; அஃதாவது பாசறையில் காவல் வைத்தல் ஆகும். இதனைக்

''கோடிக் காவனைக் கூறாத நாள்

எல்லாம் பாடி காவலில் பட்டுக் கழியுமே''

என்னும் அப்பரடிகள் அருளிச் செய்திருப்பதால் அறியலாம். இந்தத் தேவாரத்தில் 'பாடிகாவல்' என்றது, பாசறை போன்ற உடம்பில் கட்டுப்பட்டு இருத்தலைக் குறிக்கும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

(5) எடுத்துக்காட்டு வெண்பா

உள்ளதே தோற்ற உயிர் அணையும் அவ்வுடலின்
உள்ளதாம் முற்செய்வினை உள்அடைவே -வள்ளல் அவன்
செய்பவர் செய்திப் பயன் விளைக்கும் செய்யேபோல்
செய்வன் செயல் அணையா சென்று.

இதன் பொருள் :-

உள்ளதே தோற்ற - இல்லது தோன்றாது என முதல் சூத்திரம் இரண்டாம் அதிகரணத்து மேற்கோளில் நிறுவியிருப்பதால் முன் உள்ள நல்வினை தீவினை என்னும் சஞ்சிதவினையே, அதன் பயன் ஆகிய இன்பதுன்பங்களைும், அவற்றை அனுபவித்தற்கு உரிய உயிர் தங்கும் உடம்பினையும் தோற்றுவிக்கும்; **உயிர் அவ்வுடலின் அணையும்** - அப்பொழுது அந்த இன்ப துன்பங்களைச் சடம்ஆகிய உடம்பு அனுபவிக்காததால், சித்து ஆகிய உயிரே அந்த உடம்பைப் பொருந்தி அனுபவிக்கும்; அவ்வாறு அனுபவித்து ஒழிந்தால் மேல்வினை உண்டாவது எப்படி என்றால், அந்த வினைப்பயனை அனுபவிப்பதற்கு ஏதுவாகிய விருப்பு வெறுப்புகள் உண்டாவதால்,அவற்றால் மேலைக்கு வினை ஏற்படும்.

அப்படியானால், வினையே பயனாக வரும் என்று கூறினால் போதுமே; அவ்வினைப் பயனை உயிர்கட்கு ஊட்டுவதற்கு இறைவன் வேண்டும் என்று கூறுவதற்கு என்ன காரணம் என்றால் **செய்பவர் செய்திப் பயன் விளைக்கும் செய்யே போல்** - உழவர் செய்யும் தொழிற்குத் தக்க பயனை, விளை நிலம்விளைவிப்பதன்றி அத்தொழில் தானே விளைவிக்க மாட்டாது; அதுபோல, **வள்ளல் அவன் செய்வன்** - முன்வினையின் அனுபவமும் பின்வினைக்கு வித்தும் ஆகித தொன்று தொட்டு வரும்அவ்வினைப் பயன்களை வள்ளல் ஆகிய இறைவனே உயிர்களுக்குத் கூட்டுவன்; **செயல் சென்று அணையா** - அவ்வாறின்றி, வினைதானே உயிர்கட்குப் பயனாய் வந்து பொருந்த மாட்டாது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை :

உழவர் செய்யும் தொழிலுக்கு, விளைநிலம் பயன் கொடுப்பதுபோல், உயிர்கட்கு வினைப்பயனை இறைவன் தருவான். இறைவனை வள்ளல் என்று குறிப்பிட்டதற்குக் காரணம், வேண்டுவார் வேண்டுவன எல்லாம் தடைஇன்றிக் கொடுப்பது வள்ளலின் தன்மை என்பதனாலேயே ஆகும்.

இவ்வுண்மையை.

''வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்''

என்னும் அப்பரடிகள் வாக்கால்அறியலாம்.

இந்த வெண்பாவில், விளைநிலம் முதல்வனுக்கு உவமை; உழவுத்தொழில் வினைக்கு உவமை; உழவர் உயிர்க்கு உவமை. உவமைகள் அனைத்து ஏகதேசமே. ஏகதேசம் என்பது ஓர் அங்கத்தை மட்டுமே எடுத்து உவமையாகக் காட்டுவது ஆகும்.

(6) எடுத்துக்காட்டு வெண்பா

அவ்வினையைச் செய்வதனில் அவ்வினைஞர் தாம் சென்று அங்கு
அவ்வினையைக் காந்த பசாசம்போல் - அவ்வினையைப்
பேராமல் ஊட்டும் பிரானின் நுகராரேல்,
ஆர் தாம் அறிந்து அணைப்பார் ஆங்கு.

(கொண்டு கூட்டு) காந்த பசாசம்போல், அவ்வினையைப் பேராமல் ஊட்டும் பிரானின், அவ்வினைஞர் தாம், அவ்வினையை செய்வதனில் சென்று, அங்கு அவ்வினையை நுகராரேல், ஆர்தாம் அறிந்து அணைப்பார் ஆங்கு.

இதன் பொருள் :

காந்த பசாசம் போல் - இரும்பை இழுத்துக் கொள்ளும் ஆற்றல், காந்தத்தினிடம் இருந்தாலும், இரும்பு நேராக இல்லையானால், இரும்பு இருக்கும் இடம் சென்று, காந்தம் இரும்பை இழுப்பது இல்லை. ஒருவன் காந்தத்தின் நேராக இரும்பைக் காட்டும்போது, காந்தம் இரும்பை இழுத்துக் கொள்ளும், அது போல, **அவ்வினையைப் பேராமல் ஊட்டும்**

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பிரானின் - வினைப்பயனை அனுபவிக்கும் ஆற்றல் ஆன்மாவினிடத்தில் இருந்தாலும், வினையை எடுத்துக்கொள்ளும் பேரறிவு ஆன்மாவிற்குக் கிடையாது; இறைவன் அவரவர் செய்த வினையை அவரவருக்குப் பிறழாமல் கூட்டும் பொழுது,

அவ்வினைஞர் தாம் அவ்வினையைச் செய்வதனில் சென்று அங்கு அவ்வினையை நுகராரேல், ஆர்தாம்அறிந்து அணைப்பார் ஆங்கு - அவ்வினைப்பயனை அனுபவிப்பதற்கு உரிய உடம்பினை உயிர்கள் பொருந்தி அனுபவிக்கும். இறைவன் கூட்டவில்லையானால், சிற்றறிவு உடைய உயிருக்கு வினைப்பயனை வேறு யார் தான் கூட்டுவர். (முற்றறிவுடைய இறைவனை இன்றிச், சிற்றறிவுடைய உயிருக்கு வினைப் பயனைக் கூட்டுவார் ஒருவரும் இல்லை என்றபடியாம்).

தெளிவுரை :

இறைவன் அறிவித்தால் அன்றித், தாமேஅறியும் சுதந்தர அறிவு, ஆன்மாக்களுக்கு இல்லை ஆகலின் வினைப்பயனைத் தாமே அறிந்து எடுத்துக் கொள்ள மாட்டா. வினை சடம் ஆகலின், உயிரைத் தானே வந்து கூடமாட்டாது. வினைப்பயனைத் தோற்றுவிக்கும் மாயை, தனக்கு ஆதாரம் ஆகிய இறைவன் சத்தியில் நிற்கும். இவ்வாறு பதி பசு பாசம் என்னும் மூன்றனுள் பசு ஆகிய உயிருக்கும் பாசம் ஆகிய மாயை வினைகளுக்கும், வினைப்பயனைக் கூட்டும் உரிமை இல்லை என்பது பெறப்பட்டது; படவே, இறைவனுக்கே அவ்வுரிமை உண்டு எனப் ''பாரிசேட அளவை'' யால் கூற எண்ணி, ''பிரானின் நுகராரேல், யார்தாம் அறிந்து அணைப்பார்'' என்றார்.

'பாரிசேட அளவை' என்பது, மூவரில் இருவர் திருடவில்லை என்றால், மற்றவன் திருடினான் எனக் கொள்ள வைப்பதாகும். இந்த அளவையின் வாயிலாக, **உயிர்களுக்கு வினைப்பயனை ஊட்டுபவன் இறைவன் ஒருவனே** என்பது அறுதிட்டு உறுதிசெய்யப்பட்டது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

(7) எடுத்துக்காட்டு வெண்பா

**நெல்லிற்கு உமியும் நிகழ் செம்பினில் களிம்பும்
சொல்லில் புதிதுஅன்று தொன்மையே - வல்லி
மலகன்மம் அன்று உளவாம்; வள்ளலால் பொன்வாள்
அலர்சோகம் செய்கமலத்து ஆம்.**

(கொண்டு கூட்டு) - கமலத்து அலர் சோகம் பொன்வாள் செய் வள்ளலால் ஆம்.

இதன் பொருள்:

நெல்லிற்கு உமியும் நிகழ் செம்பினில் களிம்பும் சொல்லின் புதிது அன்று; தொன்மையே-நெல்லில் உமியும், செம்பில் களிம்பும் என்று ஏற்பட்டன என்பதை ஆராயும் பொழுது, அந்த நெல்லும் செம்பும் உள்ள அன்றே உமியும் களிம்பும் உள்ளனவே அன்றி அவை இடையில் வந்தனவல்ல. அதுபோலவே, **வல்லிமல கன்மம் அன்று உளவாம்** - மாயை ஆணவம் கன்மம் என்னும் மும்மலங்களும் ஆன்மா உள்ள அன்றே உள்ளனவே அன்றி, அவை இடையே வந்தன வல்ல; **கமலத்து அலர் சோகம் பொன்வாள் செய் வள்ளலால் ஆம்**-ஆயினும், அந்த மும்மலங்களும் தத்தம் செயல்களைத் தாமே செய்யா; இறைவனாலேயே செய்யும். அவ்வாறு செய்தல் எது போல என்றால்; முன்பே உள்ள தாமரைமலர் சூரியனால், முன்பு விரியாதது விரிதலும், முன்பு விரிந்தது வாடுதலும் போல் ஆகும்.

தெளிவுரை:

மாயை இறைவனுக்குப் பரிக்கிரக சத்தி;எனவே மாயையை 'வல்லி' என்று பெண்பாலாகக் கூறினார். 'பரிக்கிரக சத்தி' என்பது 'வைப்பு ஆற்றல்' ஆகும். அஃதாவது, வேண்டும் போது பயன்படுவதாய்த் தன்னுள் அடங்கி இருக்கும் ஆற்றல் ஆகும்.

மாயையோ சட ஆற்றல்; சித்துப் பொருள் ஆகிய இறைவனிடத்துச் சட ஆற்றல் எப்படிப் பொருந்தும் என்றால், சித்துப் பொருள் ஆகிய உயிரினிடத்துச் சட ஆற்றல் ஆகிய 'மந்திரசத்தி' அடங்கி இருத்தலைப் போன்றது ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆணவ மலத்தின் காரியம், மோகம், மதம், இராகம், கவலை, தாபம், வாட்டம், விசித்திரம் என ஏழு வகைப்படும்; இருவினையின் காரியம் இன்பத் துன்பங்கள்; மாயையின் காரியம், தனுகரணபுவன போகம் என்பன ஆகும். தனு ஆவது தூல உடம்பு; கரணம் ஆவது இந்திரியம் அந்தக்கரணம் முதலிய சூக்கும உடம்பு; புவனம் ஆவது உலகம்; போகம் ஆவது உலகத்தில் உள்ள அனுபவப் பொருள்கள் அனைத்தும் 'நுண்ணுடல்' என்பது மனம் புத்தி அகங்காரம் என்னும் கரணங்கள் மூன்றும், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் தன்மாத்திரகள் ஐந்தும் ஆகிய எட்டு முதல்கள். இங்குச் சூக்கும உடம்பு என்று கூறியது, தூல உடம்பு ஆகிய பூதங்கள் ஐந்து. அறிகருவிகள் ஐந்து, செயற் கருவிகள் ஐந்து, என்னும் பதினைந்து கருவிகள் நீங்கிய, பிற பதினாறு கருவிகளையும் சேர்த்துக் கூறியது ஆகும்.

மும்மலங்களை அநாதியே இறைவன் காரியப்படுத்துவதால், திரோதான சத்தியும் அநாதியே உள்ளது என்பது பெறப்பட்டது. திரோதானம் என்பது மறைத்தல். அஃதாவது, உயிர்களுக்குப் பக்குவம் வரும் பொருட்டு, அனுபவிக்க வேண்டிய வினைப் பயன்களைக் கூட்டுவித்து, அனுபவிக்கச் செய்யும் இறைவனுடைய சத்தி, அனுபவிக்க வேண்டிய பொருள்களில் உள்ள குணங்களையும் குற்றங்களையும், அவ்வுயிர்களுக்குத் தெரிய வொட்டாமல் மறைப்பது மறைப்பாற்றல் அல்லது திரோதானசத்தி எனப்படும்.

அனுபவிக்க வேண்டிய பொருள்களின் குணங்குற்றங்களை மறைக்க வில்லையானால், உயிர்களுக்கு அனுபவம் கூடாது. அனுபவம் கூடாமற் போனால், மும்மலங்களைச் செயற்படுத்தியும், பயன் இல்லாமற் போகும். எனவே திரோதான சத்தியின் இன்றியமையாமை அதனால் பெறப்படும். ஆணவமலத்தின் வழியாய் நின்று மலத்தைச் செயற்படுத்துவதால், திரோதான சத்தியை மலம் என்று உபசரித்துக் கூறுகிறார்கள். ஆகவே, ஆணவம், கன்மம், மாயை, திரோதானம், மாயாகாரியம், என்னும் ஐவகைப் பாசம் உண்டு என்பது, இந்த வெண்பாவால் அறியப்படும்.

இருவினையும் அதன் காரியமும், ஆணவமலமும் அதன்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

காரியமும் வேறு வைத்து எண்ணப்படாமல், மாயையும் அதன் காரியமும் மட்டும் இரண்டு மலங்களாக வைத்து எண்ணப்பட்டதன் நோக்கம் வருமாறு; ஆணவமும் கன்மமும் தத்தம் காரியத்தின் வேறாய் நின்று தொழில் செய்வது இல்லை. மாயையோ தன் காரியம் ஆகிய தனு கரணாதிகளைத் தோற்றுவித்து, அவற்றின் வேறாய் நின்று மயக்கத்தையும் செய்வதால், இருமலமாக எண்ணப்பட்டவாறு ஆகும். இந்தப் பஞ்சமலங்களையும் மும்மலங்களுள் அடக்கிக்கூறும் பொழுது, மாயா காரியத்தை மாயையிலும், திரோதான சத்தியை ஆணவமலத்திலும் அடக்கி, ஆணவம், கன்மம், மாயை என மூன்றாகக் கூறுவர்.

மும்மலங்களுள் மாயை, சுத்த மாயை அசுத்த மாயை என்று இருவகைப்படும். சுத்த மாயையிலிருந்து, நிவிர்த்தி பிரதிட்டை, வித்தை சாந்தி சாந்தியதீதை என்னும் ஐந்து கலைகளும், சூக்குமை, பைச்தி, மத்திமை, வைகரி என்னும் நான்கு வாக்குகளும், சுத்தவித்தை, ஈசுவரம், சாதாக்கியம், சத்தி, சிவம் என்னும்சிவதத்துவம்ஐந்தும், சுத்த காலம் முதல் சுத்த நிலம் முடிவாகத் தத்துவம் முப்பத்து ஒன்றும் தோன்றும். அசுத்த மாயையிலிருந்து அசுத்த காலம் முதல் அசுத்த நிலம் முடிவாக முப்பத்து ஒரு தத்துவங்களும் தோன்றும்,

சுத்த தத்துவம் முப்பத்தொன்றும், சுத்தமாயா புவன, வாசிகள்ஆகியவிஞ்ஞானகலர் பிரளயாகலர் என்னும் இருவகை ஆன்மாக்கட்கும், அசுத்த தத்துவம் முப்பதொன்றும், அசுத்த மாயா புவன வாசிகள் ஆகிய சகல வருக்கத்து உயிர்கட்கும் பொருந்துவனஆகும்.

சிவ தத்துவத்தில், சுத்தம் அசுத்தம் என்னும் பேதம் கிடையாது. அது சுத்தமாயையின் காரியமே ஆகும். அசுத்தமாயா புவனத்தில் வசிப்பவர்களுக்கும் பிரகிருதிமாயா புவனத்தில் வசிப்பவர்களுக்கும்,சிவதத்துவம்.சுத்த மாயாகாரியமே ஆகும். பிற தத்துவங்கள் சுத்தம், அசுத்தம் என இருவகைப்படுவதற்கும், சிவதத்துவமவ்வாறு ஆகாமைக்கும் காரணம், பிறதத்துவங்களைத் தோற்றுவித்துத் தொழிற்படுத்தும் கடவுளர், அனந்தேசுவரரும் சீகண்டபரமேசுவரரும்ஆவர்; சிவ தத்துவத்தைத் தோற்றுவித்துத் தொழிற்படுத்தும் கடவுள் சிவபெருமானே ஆவன்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முப்பத்தாறு தத்துவங்களும் புறத்தில் தனித்தனி புவன வடிவாய் இருக்கும்; அகத்தில் சூக்கும தேக வடிவாய் இருக்கும். முப்பத்தாறினுள், பஞ்ச பூதத்தின் காரியமே தூலதேகமாகத் தோன்றும்; புவனங்களில் பிருதிவி தத்துவ புவனம் மட்டுமே தூலமாய்க் காணப்படும்; மற்ற புவனங்கள் சூக்குமமாய் உள்ளன.

இந்த தத்துவங்கள் எல்லாம், **பொது, சிறப்பு, பொதுச்சிறப்பு** எனத் தனித்தனியே மூவகைப்பட்டு, உயிர்கள்தோறும் வெவ்வேறாக விளங்கும். அஃது எவ்வாறு என்றால், **'புவன வடிவு'** ஆகிய தத்துவங்கள் எல்லோருக்கும் பயன் தருவதால், பொது எனப்படும். **'சூக்கும தேகவடிவு'** ஆகிய தத்துவங்கள், தனக்கு மட்டும் போகம் அனுபவிப்பதற்குக் கருவியாய் இருப்பதால், **'சிறப்பு'** எனப்படும். **'தூலதேக வடிவு'** ஆகிய தத்துவங்கள், தனக்குப் போகம் அனுபவிப்பதற்கும், மனைவி, மக்கள் முதலியவர்க்குச் சந்தனம், பூமாலை போல அனுபவிக்கவும் படுவதால், 'பொதுச் சிறப்பு' எனப்படும்.

கன்மமும், பிரபஞ்சம் போலப் **'பிரவாக அனாதி'** எனப்படும். பிரவாக அனாதி என்பது, இடையறாது ஒழுகும் நீரோட்டத்தில், முன்வந்த நீர் இது, பின் வந்த நீர் இது என்று பிரித்து அறியப்படாதவாறு போல, முன் செய்த கன்மம் இது, பின்செய்த கன்மம் இது என்று பிரித்து அறிய வராது, பண்டைக் காலம் தொட்டு, அவ்வாறு வருதலைக் குறிக்கும். ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம் என்னும் மூவகை வினைகளுக்கும் முதற்காரணமாகிய மூலகன்மம் ஒன்று அநாதி நித்தமாய் உண்டு என்பர். இந்நூலின் நான்காம் சூத்திரத்து இரண்டாம் அதிகரணத்தில் இதுபற்றிய விளக்கத்தைக் காணலாம்.

ஆகாயமிய கன்மம் என்பது, மந்திரம், பதம், வன்னம், தத்துவம், புவனம், கலை என்னும் ஆறு அத்துவாக்களில் நின்று, மனம்,. வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் செய்யப்படும் நல்வினை, தீவினை என்னும் இருவினைகள் ஆகும். இது 'தூலகன்மம்' எனப் பெயர் பெறும்.

சஞ்சித கன்மம் என்பது, அவ்வாறு செய்யப்பட்ட இரு வினைகள், பக்குவம் அடையும்வரை, புத்திதத்துவத்தைப்பற்றி,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மாயையில் கட்டுப்பட்டுக் கிடப்பது ஆகும். அந்நிலையில்அது 'சூக்கும கன்மம்' எனப் பெயர் பெறும். இந்த சஞ்சித கன்மம், அபூர்வ புண்ணிய பாவம் என்னும் பெயரையும் பெறும். கட்டுப்பட்டு இருக்கும் கன்மத்திற்கு முற்பாடு பிற்பாடு கூறமுடியாமையால், அபூர்வம் என்ற பெயரைப் பெறும்; இன்பத்துன்பங்களைத் தருவதற்குக் காரணமாய் இருத்தலால், புண்ணிய பாவம் எனவும் பெயரைப் பெறும். கட்டுப்பட்டிருக்கும் சஞ்சித கன்மம், மறுபிறப்பில் வெவ்வேறு இனங்களில் பிறப்பதற்கும் ஆயுட்காலத்தில் இன்பத்துன்பங்களை அனுபவிப்பதற்கும் ஏதுவாய் இருக்கும்.

பிராரத்த கன்மம் என்பது. கட்டுப்பட்டு இருந்த சஞ்சித கன்மம், இன்ப துன்பம் ஆகிய பயனைத்தர அனுபவிப்பது ஆகும். அனுபவிக்கும் காலத்தில், ஆதி தைவிகம், ஆதி ஆன்மிகம், ஆதி பௌதிகம் என முத்திறப்படும். **ஆதி தைவிகம்** என்பது பிறப்பு, இறப்பு, நரை, திரை, நோய் முதலியவாய், உயிர்கள் மூலமாக அன்றி, தெய்வம்மூலமாக வருவதாகும். **ஆதிஆன்மிகம்** என்பது மனிதர், மிருகம் முதலிய உயிர்கள் மூலமாக வரும்இன்பத் துன்பங்கள் ஆகும். **ஆதி பௌதிகம்** என்ப்து, மின்னல், இடி, காற்று, மழை, தீ, நிலநடுக்கம் முதலிய பூதங்கள் மூலமாக வரும்இன்பத்துன்பங்கள் ஆகும்.

இருவினைகளுள் **நல்வினை** என்பது, உலகவினை, வைதிகவினை, அத்தியான்மிகவினை, அதிமார்க்கவினை மாந்திரவினை என்று ஐவகைப்படும். அவற்றுள் **உலகவினை** என்பது, கிணறு, தண்ணீர்ப்பந்தல் முதலியன அமைத்தல் ஆகும்; **வைதிகவினை** என்பது, வேள்வி முதலியன செய்தல் ஆகும்; **அத்தியான்மிகவினை** என்பது, சிவபூசை முதலியன செய்தல் ஆகும்; **அதிமார்க்கவினை** என்பது; யோகம் செய்தலைக் குறிக்கும்; **மாந்திரவினை** என்பது மந்திரம் செபித்தல், ஞானநூல் ஓதல், ஓதுவித்தல் முதலியவாகும். இவ்வைந்தும் ஒன்றற்கு ஒன்று ஏற்றம் உடையன ஆகும். இந்த ஐவகை நல்வினைகளுக்குள்ள கலைகளும் போகங்களும் வருமாறு:

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வினை	அடங்கும் கலை	தகும் போகங்கள்
உலகவினை -	நிவிர்த்தி கலை	அசுத்த போகங்கள்
வைதிக வினை-	பிரதிட்டா கலை	
அத்தியான் மிக வினை -	வித்தியா கலை	சுத்தமும் அசுத்தமும் கலந்த போகங்கள்
அதிமார்க்க வினை -	சாந்தி கலை	
மாந்திர வினை -	சாந்தியதீத கலை	சுத்த போகங்கள்

இந்த ஐவகை நல்வினைகளுக்கு மாறுபட்டவை, தீவினைகள் என்பது பெறப்படும்.

இந்த அதிகரணத்தோடு வைத்துச் சிந்திக்கத் தக்க சிவ ஞான சித்தியார்ப் பாடல்கள் வருமாறு:

பாடல் எண்		தொடக்கச் சொற்கள்
94	-	**இருவினை இன்பத் துன்பத்து**
97	-	**இம்மையின் முயற்சியாலே**
98	-	**இருவினைச் செயல் காண்**
99	-	**பேறு இழவு இன்பமொடு**
100	-	**உடல் செயல் கன்மம் இந்த**
101	-	**முற்செயல் விதியை இந்த**
102	-	**மேலைக்கு வித்துமாகி**
103	-	**இதம் அகிதங்கள் என்பது**
104	-	**இறைவன் இங்கு ஏற்பது**
105	-	**நிக்கிரகங்கள் தானும்**
106	-	**தந்தை தாய் பெற் ற தத்தம்**
107	-	**செயல்களே பலத்தைச் செய்யும்**

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

110 - செய்தவர் மனத்தே எல்லாச்
111 - தானம் செய் பொருள்
112 - உலகு உடல் கரணம் காலம்
115 - யாதொரு தெய்வம் கொண்டீர்
116 - இங்கு நாம் சிலர்க்குப் பூசை
117 - காண்பவன் சிவனே ஆனால்
118 - தாபர சங்கமங்கள்
119 - அரனடிக்கு அன்பர் செய்யும்
123 - அருளினால் உரைத்த நூலின்
124 - மருத்துவன் உரைத்த நூலின்
125 - மண்ணிலே சில வியாதி
129 - தன்மமோடு அதன்மம் ஆகி
143 - நித்தமாய் அருவாய் ஏக
144 - மாயையில் காலமோடு
146 - நியதிப்பின் தோன்றிக்கன்ம
147 - வரு குண வடிவாய் மூல
148 - சித்தமாம்அவ்வியத்தம்
149 - ஆங்காரம் புத்தியின் கண்
150 - மனம் அது தைசதத்தின்
151 - நற்செவி துவக்குக் கண் நா
152 - வாக்கொடு பாதம் பாணி
154 - ஓசை நற் பரிசு ரூபம்
155 - சாற்றிய பஞ்ச தன்மாத்
170 - ஒன்றதாய் அநேக சத்தி
176 - மும்மலம் நெல்லினுக்கு
177 - மாயையின் காரியத்தை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இரண்டாம் சூத்திரம் - மூன்றாம்அதிகரணம்
மேற்கோள்

இனி இவ்வான்மாக்கள் மாறிப் பிறந்து வரும் என்றது,

இதன் பொருள் :

இருவினைப் பயன்களை அனுபவித்தற்கு உரிய உயிர்கள் இறந்து, மீளப் பிறந்து இவ்வாறே வரும் என்றவாறு.

தெளிவுரை :

'வரும்' என்று கூறியதனால், அநாதி தொட்டு இவ்வாறு இறந்து பிறந்து வரும் என்பது பெறப்படும். ஏனெனில், 'வருதல்' உள்ளதற்கே அன்றி இல்லதற்குக் கூடாது ஆதலினாலேயே ஆகும். ஆகவே, என்றும் உள்ள உயிருக்கு மாறிப்பிறத்தல் என்றும் உள்ளதாகும். வீடுபேறு அடையும் போது, மாறிப் பிறத்தல் நீங்கும்.

'' மாறிப்பிறந்து'' என்னும் தொடரில் உள்ள 'மாறுதல்' என்னும் சொல் இறத்தலைக் குறிக்கும், சூத்திரத்தில் 'போக்கு வரவு புரிய' என்று வந்த தொடரில், 'போக்கு' என்ற சொல் இறத்தலைக் குறித்து நின்றது போல் இஃதும் ஆகும். இச்சொல்லே ஏதுவில் 'ஈறு' எனவும், வெண்பாவில் 'கெட்டு எனவும் இவ்வாறு பொருந்தி வரும். 'மாறும்' என்ற சொற்கு, உடலை விட்டு உயிர் மாறும் என்று பொருள் கொள்ள வேண்டும்.

ஏது

தோற்றமும் ஈறும் உள்ளதற்கு அல்லது, உளது ஆதல் இன்மையான்.

இதன் பொருள் :

உற்பத்தி, நாசம் ஆகிய இரண்டும் தொடர்ச்சியாக உடைய பொருளுக்கு மட்டுமே தோன்றுதல் கூடும்; அத்தொடர்ச்சி இல்லாத பொருட்குத் தோன்றுதல் கூடாது; எனவே இவ்வான்மாக்கள் மாறிப்பிறந்து வரும் என மேற்கோள் கூறியது.

தெளிவுரை :

தொடர்ச்சியாக உள்ள பொருள், இங்கு உயிர் ஆகும்; உயிர் தோன்றி அழிதல் இல்லை ஆகலின், வினைக்கு ஈடாக உடலை எடுத்தலும், அவ்வுடலினின்று பிரிதலுமே உயிர்க்குத் தோன்றி அழிதல் என்பதுதானே பெறப்படும். உயிர்க்கு மறுபிறப்பு உண்டு என்பதை இந்த அதிகரணம் தெளிவுறுத்துகின்றது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

(8) எடுத்துக்காட்டு வெண்பா

**கண்ட நனவை கனவுணர்வின் தான் மறந்து
விண்படர்ந்து அத்தூடு வினையினால் - கண்செவி கெட்டு
உள்ளதே தோற்ற உளம் அணுவாய்ச் சென்றுமனம்
தள்ள விழும் கருவில் தான்.**

(கொண்டு கூட்டு) கண் செவி கெட்டு உள்ளதே தோற்ற, உளம் அத்தூடு விண்படர்ந்து. கண்ட நனவைக் கனவு உணர்வின் மறந்து, மனம் தள்ள, வினையினால் அணுவாய்ச் சென்று கருவில் விழும்.

இதன் பொருள் :

கண் செவி கெட்டு உள்ளதே தோற்ற - கண் செவி முதலிய உறுப்புக்களை உடைய இந்தப் பருஉடம்பு கெட்டபொழுது, (படைப்புக் காலம் தொடங்கி, மகாசங்கார காலம்அளவும் நிலைபெற்று இருக்கும் நுண்ணுடல், தேவலோகத்திற்குரிய **பூதாசார** உடம்பாகவும், நரகலோகத்திற்குரிய **யாதனா** உடம்பாகவும், மண்ணுலகத்திற்குரிய **பூத** உடம்பாகவும் வினைக்கு ஏற்றவாறு காரியப்பட்டுத் தோன்றும். மகாசங்காரம் என்பது இங்குச் சூக்கும தேகமும்அழிகின்ற முத்திக் காலத்தைக் குறிக்கும்.)

உளம் அத்தூடு விண் படர்ந்து - உயிரானது சூக்கும தேகத்தின் நின்றும் காரியப்படுவது ஆகிய அந்த பூதசார சரீரத்தையும் யாதனா சரீரத்தையும் பொருந்திச் சுவர்க்க நரகங்களில் சென்று, இன்பதுன்பங்களை அனுபவிக்கும். **கண்ட நனவைக் கனவு உணர்வின் மறந்து** - அனுபவித்த பின்பு, நனவில் கண்டவற்றைக் கனவு காணும் காலத்து மறந்து, அறிவு வேறுபட்டால் போல (சுவர்க்க நரகங்களுக்குச் செல்வதற்கு முன்புள்ள உடல் கெட்டதையும் அந்த உடல் கெட்ட பொழுதும் நிலைத்து இருந்த சூக்கும தேகமே பூதாசாரம்முதலிய சரீரங்களாய்த்தோற்ற, அச்சரீரங்களைப்பற்றிச் சுவர்க்கம் முதலியவற்றில் சென்றதையும், அந்த இடங்களில் அனுபவித்ததையும் மறந்து, அறிவு வேறுபட்டு, **மனம் தள்ள வினையினால் அணுவாய்ச் சென்று கருவில் விழும்** - முன்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உடம்பு இறக்கும் பொழுது, பக்குவப்பட்டுஇருக்கும் வினைகாட்டும் கதியை ஆன்மா விரும்பும்படி மனம் செலுத்துதலால், தேவகதி மக்கட்கதி, விலங்கின் கதி, நரகர்கதி என்னும் நான்கனுள் ஒன்றிலே, செல்வதற்கு ஏதுவாய்ச் சுவர்க்க நரகங்களில் அனுபவித்து, எஞ்சி நின்ற நல்வினை தீவினைக்கு ஏற்ப, சூக்கும தேக மாத்திரையாய் இந்த மண்ணுலகில், அந்த மனம் தள்ளிய கதிக்கு ஏற்ற கருவில் சென்று தங்கும்.

தெளிவுரை :

உயிர் கேவலத்திலிருந்து நீங்கும் போது பெறும் **நுண்ணுடல் முத்தி அடையும் வரை உள்ளது.** அந்த நுண்ணுடலில் இருந்து வினைக்கு ஈடாகத் தோன்றி அழியும் பரு உடல்களில் உயிர் பொருந்துவதால், உயிர்க்கு மறுபிறப்புண்டு என்பது பெறப்படும்.

ஐம்பெரும் பூதங்களின் காரியம் எனப்படும் தூல உடம்பைச், சூக்கும உடம்பின் காரியம் என்று கூறுவதற்குக் காரணம், பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் ஐம்புதங்களும் சத்தம், பரிசம், ரூபம், இரதம்,கந்தம் என்னும் ஐந்து தன்மாத்திரைகளின் காரியம் என்பதனால் ஆகும். தன் மாத்திரைகள் சூக்கும பூதம் என்றும், பிருதிவி முதலிய பூதங்கள் தூலபூதம் என்றும் கூறப்படும். இந்த தூல பூதம் அகத்துச் சரீர ரூபமாகவும், புறத்து உலக ரூபமாகவும் விளங்கும்.

உலக ரூபமாய் விளங்குகின்ற பூதத்தின் காரியங்கள், உலகத்தில் காணப்படும் பொருள்கள் சரீர ரூபமாய் காணப்படும் தூல பூதம் ஐந்தும் சூக்கும சரீரத் தத்துவத்துள் வைத்து எண்ணப்படும். அந்தத் தூல பூதத்தின் காரியமாய்க் காணப்படும் பொருள், பூதசார சரீமும் யாதனா சரீரமும், தூல சரீரமும் ஆகும். அன்னத்தின் காரியம் ஆகிய வீரியம் தூல சரீரத்திற்கு துணைக் காரணம் ஆவது. ஆகவே, தூல பூதம் எனப்படுவது. சூக்கும தேகம் எனப்பட்டுத், தூல பூதத்தின் காரியம் ஆகிய உடம்பைச் சூக்கும தேகத்தின் காரியம் எனக் கூறினார். எனவே, பூதத்தின காரியம் சூக்குமத்தின் காரியம் ஆதல் கூடுமோ என்னும் ஐயப்பாட்டக்கு இடம்இல்லை.

எனவே, சூக்கும உடம்பு கேவ்லத்தின் நின்றும் நீங்கி, முத்தி அடையும் வரை, என்றும் ஓர் உடம்பாய் உள்ளதாக, அந்தச்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சூக்கும உடம்பின் ஒரு பகுதி ஆகிய ஐந்து தூல பூதத்தின் காரியம் ஆகிய பூதாசார உடம்பு, யாதனா உடம்பு, பூத உடம்பு என்னும் தூல உடம்புகள் தோன்றி மறையும்.

சூக்கும உடம்பிலிருந்து தூல உடம்பு தோன்றும் பொழுது எப்படித் தோன்றும் என்பதைச்

''சூக்குமம் கெட்டுத் தூலம் '' *(138)*

எனத் தொடங்கும் சிவஞானசித்தியார்ப் பாடலில் விளக்கிக் கூறப்பட்டுள்ளது. விரிவான செய்தியை அந்நூலில் காணலாம்.

தூல உடல் புதிது புதிதாகத் தோன்றும் என்பது உண்மையே ஆயினும், அவ்வாறு தோன்றுவதற்குச் சூக்கும தேகம் உள்ளதாய் இருப்பதால், ''இல்லது தோன்றாது; உள்ளதே தோன்றும்'' என்னும் சற்காரிய வாதத்தின் அடிப்படையில், உயிர்க்கு மறு பிறப்பு உண்டு என்பது நிறுவப்பட்டது. எனவேதான் வெண்பாவில் ''உள்ளதே தோற்ற'' என்னும் தொடர்வந்தது.

(9) எடுத்துக்காட்டு வெண்பா

அரவு தன் தோல் உரிவும் அக்கனவும், வேறு
பரகாயம் போய் வரும்அப்பண்பும், - பரவில்;
குடாகாய ஆகாயக் கூத்தாட்டாம் என்பது
அடாது; உள்ளம் போமாறு அது.

இதன் பொருள் :

அ ர வு த ன் தோ ல் உ ரி வு ம் அ க் க ன வு ம் பரகாயம்போய்வரும்அப்பண்பும், பரவில்வேறு - தூல உடம்பு கெட்ட பொழுது, சூக்கும உடம்பில் நின்றும், தேவலோகம் முதலியவற்றிற்குரிய உடம்புகள் தோன்ற, அவற்றை உயிர் பற்றும். அவ்வாறு பற்றுதற்குப பாம்பு முன் உள்ள தோலை உரித்துப், புதியதொரு தோலைப் போர்த்துச் செல்லுதல், புருடன் நனவு உடலை நீங்கிக் கனவு உடலைப் பொருந்துதல், யோகிகள் தம் உடம்பை விட்டு வேறு உடம்பில் சென்று மீளுதல் ஆகியன, உவமைகள் ஆகும். இந்த உவமைகள் மிகுதியும் வழங்குகின்றன; ஆயினும் இவற்றை விட்டுக்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

குடாகாயம் , குடாகாய ஆகாயக் கூத்தாட்டு ஆம் என்பது - குடம் உடந்த பொழுது, மகாகாயத்தோடு கூடுவது போல், தூல உடம்பு நீங்கிய போது உயிர், பிரமத்தோடு கூடுவதோர் கூத்தாட்டு ஆகும் என்று கூறுவது பொருந்தாது. உள்ளம் போமாறு அது - அந்தக் குடாகாய உவமை, சூக்கும உடம்பை விட்டுப் போவதற்கே கூறியது ஆகும்.

தெளிவுரை :

குளம் + ஆம்பல் = குளாம்பல் என்று மருவி வழங்குவது போல், குடம் + ஆகாயம் = **குடாகாயம்** எனமருவி நின்றது. எனவே இது தமிழ் நூல் முடிபாகும். 'கூத்தாட்டு' என்பது, ஒருவன் பல வேடம் கட்டி ஆடும் நடனத்தைக் குறிக்கும்.

'பாம்பு தோல் உரித்தல்' முதலிய உவமைகள், உயிர் தூல உடலை விட்டுப் போவதற்குக் கூறப்பட்டன. 'குடாகாய உவமை' உயிர் சூக்கும உடம்பை விட்டுப் போவதற்குக் கூறப்பட்டது. இவ்வேறுபாட்டைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த உவமையை ஏகான்ம வாதிகள் வேறு விதமாகக் கையாள்கிறார்கள். அது வருமாறு:

மகாகாயமே குடத்தில்அடங்கிய பொழுது, குடாகாயம் எனப் பட்டால்போல, பிரமமே உடம்பில் கட்டுப்பட்ட பொழுது சீவன் ஆயிற்று என்பர் ஏகான்ம வாதிகள். அவர்கள் மதத்தின் படி, மகாகாயம் பிரமத்திற்கு உவமை; குடாகாயம் உயிருக்கு உவமை. அது பொருந்தாது. எவ்வாறு என்றால் குடத்தைச் செய்வதற்குப் பிரமத்தின் வேறாய் ஒரு பொருள் இருக்க வேண்டும் என்று ஆகிறது. பிரமமே உடம்பைச்செய்து, அதில் கட்டுப்பட்டு உயிர் ஆயிற்று என்றால், பிரமம்குடத்தைச் செய்து அதனுள் கட்டுப்பட்டதா என்று கேட்டால் ஏகான்மவாதிகள் என்ன பதிலைக்கூறுவார்கள்? இஃது அவன் இல்லை என்று கூறினால், உடம்பு நீங்கிப் பிரமம் ஆன பின்பும், இல்லையானால் உடம்பைச் செய்யவும் அதில் கட்டுப்படவும் கூடும். அதனால், உயிர்கள் வழிபாடு செய்தல் முதலியன, பயனற்ற வீண்செயல் என்று கருத வேண்டிவரும். எனவே, இந்த உவமையை ஏகான்மவாதிகள் கையாளும் முறை, பகுத்தறிவுக்குப் பொருந்துவதன்று.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இந்த வெண்பாவில் வரும் ''உள்ளம் '' என்னும்சொல், சூக்கும உடம்பைக் குறித்து நின்றது.

இந்த அதிகரணத்தோடு வைத்துச் சிந்திக்கத்தக்க சிவஞான சித்தியார்ப் பாடலகள் வருமாறு:

பாடல் எண்		தொடக்கச் சொற்கள்
131	-	சங்கம தாபரங்கள்
132	-	நரர்களாய்த் துய்ப்பர்
133	-	வண்டுகள் ஆகி மாறும்
134	-	அகலிகை கல் அது ஆனாள்
135	-	செப்பினாய் மாற வேறு
136	-	அவ்வவ யோனி தோறும்
138	-	சூக்குமம் கெட்டுத் தூலம்
139	-	விதிப்படி சூக்குமத்தே
140	-	தூலமாம் உருவினுக்கு
178	-	மலம் மாயை கன்மம் மாயேயம்
126	-	பூதனா சரீரம் போனால்
127	-	உடல்விடா யோனி பற்றி
128	-	பன்னகம் அண்டசங்கள்

இரண்டாம் சூத்திரம் - நான்காம் அதிகரணம் மேற்கோள்

இனி நீக்கம் இன்றி நிற்கும் அன்றே என்றது.

இதன் பொருள் :

முதல்வன் தன் ஆணை ஆகிய சிற்சத்தியோடு பிரிப்பின்றிச் சமவேதம்ஆகிய திரோதான சத்தி வடிவாய் நிற்பன் என்றவாறு.

தெளிவுரை :

சமவேதம் என்பது சமவாய சம்பந்தத்தில் இருப்பது ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சமவாயம் என்னும்வடசொல், தமிழில் 'நீக்கம் இன்றி நிற்றல்' என மொழிப் பெயர்த்து வழங்கப்படும். படவே, நீக்கம் இன்றி நிற்றல் 'சமவாயம்' எனவும், ' நீக்கம் இன்றி நிற்பது' 'சம்வேதம் ' எனவும் கூறப்படுகிறது. அஃதாவது, முதல்வனுடனும் சிற்சத்தியுடனும் **சமவாயசம்பந்தத்தால்** இருக்கும் **சமவேதம்** ஆகிய திரோதானசத்தி வடிவாய், முதல்வன் சிற்சத்தியில் பிரிப்பின்றி நிற்பன். உயிர்களோடு கலந்து நிற்கும்இறைவன் நிலை, **திரோதானசத்தி** எனப்படும்; அருளோடு கலந்து நிற்கும் நிலை, **சிற்சத்தி** எனப்படும்.

சைவ சித்தாந்தத்தில், ' சமவாயம்' என்பது தாதான்மிய சம்பந்தத்தைக் குறிக்கும். இந்தச் சம்பந்தம் இருவகைப்படும். **ஒன்று குணத்திற்கும் குணிக்கும் உள்ள ஒற்றுமைச்சம்பந்தம்; மற்றொன்று, இரண்ட பொருள்களுக்குள்ள ஒற்றுமைச் சம்பந்தம்.** அவற்றுள், குணம் குணிகளுக்கு உள்ள ஒற்றுமை, **'தாதான்மியம்'** எனப்படும்; இரு பொருள்களுக்கும். உள்ள ஒற்றுமை, **'அத்துவிதம்'** எனப்படும். இங்குக் கூறிய ஒற்றுமை குணகுணிகளுக்குள்ள தாதான்மியம் ஆகும். சிவம் குணி; சத்தி - குணம் ;சிவமும் சீவனும் கலந்திருக்கும் ஒற்றுமை, அத்துவிதம் எனப்படும்.

ஏது

அவன் ஏகாநேகம் இரண்டும் இன்றிச் சர்வ வியாபியாய் நிற்றலான்.

இதன் பொருள் :

இறைவன், தானும் சத்தியும் ஒன்றே என்றாவது, வேறே என்றாவது எண்ணுதற்கு இன்றி, அவ்விரண்டற்கும் பொதுவாய், எங்கும் வியாபியாய் நிற்றலால், இனி ஆணையின் நீக்கம் இன்றி நிற்கும் அன்றே என மேற்கோள் கூறியது.

தெளிவுரை :

எவ்விடத்தும் வியாபித்தல் சத்தியின் காரியம் ஆதலால், சத்தியில் நீக்கம்இன்றி நிற்பன் என்பது கருத்து. இறைவன் சத்தியை விட்டு நீக்கம்இன்றி நிற்பதோடு மட்டுமன்றி, சர்வ வியாபகமாகவும் நிற்கிறான் என்பது இந்த ஏதுவால் பெறப்பட்டது. இன்னும், இறைவன் சத்தியின் "நீக்கம் இன்றி

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நிற்றலை விட்டு நீங்காது இருப்பது சருவ வியாபகம்'' என்பதைக் குறிக்கவே ''ஏகாநேகம் இரண்டும் இன்றி'' என்று ஏதுவில்கூறினார்.

(10) எடுத்துக்காட்டு வெண்பா

எங்கும் உளன் என்ற அளவை ஒன்று அன்று; இரண்டு என்னில்
எங்கும் உளன் அன்று ; எவற்று எவனும் - அங்கண்
அவை அவன் அன்று இல்லைப், பொன் ஒளிபோல் ஈசன்;
அவை உடைமை ஆளாம் நாம் அங்கு.

இதன் பொருள் :

எங்கும் உளன் என்ற அளவை ஒன்று அன்று எவ்விடத்தும் வியாபியாய் நிற்பன் என மேற்கூறிய ஏதுவினால், முதல்வன் ஒரு பொருள் ஆதல் கூடாது; ஒரு பொருள் ஆயின், கங்கைக் கரையில் நின்ற ஒரு மானுடனே காவிரிக் கரையிலும் ஒரே சமயத்தில் நிற்க மாட்டான். அது போல, முதல்வன் ஒரு பொருளாயின், ஓர் இடத்தில் இருத்தலே அன்றி எவ்விடத்தும் வியாபித்து நிற்க மாட்டான் அதுபோல, முதல்வன் ஒரு பொருளாயின், ஓர் இடத்தில் இருத்தலே அன்றி எவ்விடத்தும் வியாபித்து நிற்க மாட்டான். **இரண்டு என்னில் எங்கும் உளன் அன்று** - ஆதலால் முதல்வன் இரு பொருளாய் நிற்பன் எனக்கொள்வோம் என்றால், அவ்வாறு கொண்டால், எவ்விடத்தும் வியாபித்து நிற்றல் கூடாது; ஏனென்றால், தன் இடத்தே இருபொருளாய் நிற்கும் வேற்றுமை உள்ள பொழுது. பிற பொருளோடு வேற்றுமையின்றி வியாபித்து நிற்றல் எவ்வாறு கூடும்? கூடாது.

இவ்வாறு ஒரு பொருள் ஆதலும், இரு பொருள் ஆதலும், ஒன்றோடு ஒன்று முரணுதலால், முதல்வன் ஒரு பொருள் எனவும், எவ்விடத்தும் வியாபியல்லன் எனவும் கொள்வோம் என்றால், அதுவும் பொருந்தாது; எதனால் எனின், **எவற்று எவனும் அங்கண் அவை அவன் அன்று இல்லை** -அகர உயிர்இல்லை ஆயின், மற்ற எழுத்துக்கள் இல்லாதவாறு போல

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இறைவன் இல்லையாயின், எவ்விடங்களிலும் உள்ள எல்லாப் பொருள்களும் இருக்கமாட்டா, எனவேஇறைவன் எவ்விடத்தும் வியாபியல்லன் என்றல் பொருந்தாது.

ஆதலால் முடிபுதான் என்ன எனின், ஈசன் பொன் ஒளி போல் - சூரியனும் அதன் ஒளியும், ஒன்று என்றாவது, இரண்டு என்றாவது, பிரித்து அறிய வாராது, வியாபித்து நிற்குமாறுபோல, முதல்வனும், சிவம் சத்தி என ஒன்று ஆவதற்கும் இரண்டு ஆவதற்கும் பொதுவான தாதான்மிய சம்பந்தத்தைப் பொருந்திச் சர்வ வியாபியாய் நிற்பன். (அவ்வாறாயின் பசு பாசங்களும் வியாபகம் எனக் கூறுவதால், அவையும் இம்முறைபோலத் தத்தம் சத்திகளோடு தாதான்மியமாய் நிற்கும் என்பது பெறப்படும். ஆகவே , இவை முதல்வனோடு சமம் என்று கூறலாமோ என்றால் கூறலாகாது; ஏனென்றால்) அவை உடைமை ஆம்; நாம் ஆள் ஆம் அங்கு - பசு பாசங்கள் வியாபகம் ஆயினும், முதல்வனது வியாபகத்தை நோக்க வியாப்பியம் ஆகும். ஆகவே அறிவில்லாத் பாசங்கள் முதல்வனுக்கு உடைமையும் சிற்றறிவுள்ள பசுக்கள் ஆகிய நாம் முதல்வனுக்கு அடிமையும் ஆவோம்.

தெளிவுரை :

இறைவன் ஒரு பொருள் என்றும், இரு பொருள் என்றும் பிரித்து அறிய வாராமல், சிவம் சத்தி என்னும் இருதன்மையாய் எவற்றினும் வியாபித்து நிற்பன், இதனால் 'கடவுள் ஒருவரே' என்னும் கொள்கை மாறுபடவில்லை.

கடவுள் ஒரு பொருளே; அவன் இரண்டு தன்மையை உடையவன் என்பது இந்த வெண்பாவில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. (1) கடவுள் ஒரு தன்மை உடையவனாக இருந்தால், ஓரிடத்தில் தான் இருக்க முடியும்; (2) இரண்டு தன்மை உடைய பொருள், இரண்டு ஆகித் தம்முள் வேற்றுமை உடையதாக இருக்கும். எனவே, இவ்விரண்டு விதமாக இன்றிக் கடவுள் பொருளால் ஒன்றாயும் தன்மையால் இரண்டாயும், சூரியனும் அதன் ஒளியும் போல நிற்பன் என்னும் கொள்கை இங்கு நிறுவப்பட்டது.

'பொன்' என்பது, பொன் போன்ற சூரியனைக் குறித்து நின்றது. " பொன் ஒளி போல் ஈசன் " என்னும் உவமத்தொடர்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நினைவில் கொள்ளத்தக்கது.

இந்த அதிகரணத்தோடு வைத்துச் சிந்திக்கத்தக்க சிவஞான சித்தியார்ப் பாடலகள் வருமாறு

பாடல் எண்		தொடக்கச் சொற்கள்
164	-	சிவம்சத்தி நாதம்விந்து
165	-	சத்தியாய் விந்து சத்தியாய்
166	-	சத்திதான் நாதமாதி தானாகும்
167	-	சிவம் சத்திதனை ஈன்றும்.

இரண்டாம் சூத்திரத் தொகைப் பொருள்

இறைவன், உயிர்களோடு ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நின்று, உயிர்கள் செய்த இருவினையினாலும், அவ்வினையை உயிர்க்குக் கூட்டும் தனது சத்தியினாலும், அவ் உயிர்கள் இறத்தல் பிறத்தல்களைப் பொருந்தும் வண்ணம் செய்வன்.

1. முதல் அதிகாரத்தில் ஏகான்மவாதிகள், மாத்துவர்,. பாஞ்சராத்திரர்கள் ஆகியவர்களின் அத்துவிதக் கொள்கைகளை மறுத்துச் சித்தாந்த சைவத்தின் அத்துவிதக் கொள்கை நிறுவப்பட்டது.

2. இரண்டாம் இதிகரணத்தில், இறைவன் உயிர்களுக்குப் புதிய படைப்பைச் செய்யும் பொழுது, இறைவனுக்கு இருவினை, மாயை முதலிய துணைக் காரணமாக வேண்டப்படும் என்பது தெளிவுபடுத்தப்பட்டு,. அதனால், இறைவனின் சுதந்தரத்திற்கு இழுக்கு இல்லை என்பது நிறுவப்பட்டது.

மேலும், உயிர்களுக்கு வினைப்பயனை இறைவனே, தன் சத்தியால் கூட்டுவன் என்பதும், ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களும் சடம்ஆகலின் , அநாதியே உள்ள அப்பொருள்கள் இறைவனாலேயே செயல்படும் என்பது சாதிக்கப்பட்டன.

3. மூன்றாம் அதிகரணத்தில், உயிர்களுக்கு மறுபிறப்பு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உண்டு என்னும் கொள்கை நிறுவப்பட்டது. குடாகாய உவமை, ஆன்மா நுண்ணுடலை விட்ட நிலையில், இறைவனோடு ஒன்று பட்டு நிற்கும் என்பதற்கே கூறப்பட்டதன்றிப், பருவுடலைப் விட்டுப் போவதற்குக் கூறப்படவில்லை என்பது தெளிவு படுத்தப்பட்டது.

4. நான்காம் அதிகரணத்தில், இறைவனும் அருளும் (சத்தியும்) பொருளால் ஒன்றாயும், தன்மையால் இரண்டாயும் நிற்கும் என்பது நிறுவப்பட்டது.

- இரண்டாம் சூத்திரம் முற்றிற்று. -

மூன்றாம் சூத்திரம்

உளது, இலது என்றலின், எனது உடல் என்றலின்,
ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின், கண்படில்
உண்டிவினை இன்மையின், உணர்த்த உணர்தலின்
மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா.

இதன் பொருள் :

(உயிர்) 'இலது' என்றலினாலும், (உயிர்) ' எனது உடல்' என்றலினாலும், (உயிர் ஐம்புலன்களை அறிதலினாலும், ஐம்புலன்களும் ஒடுங்கிய கனவை (உயிர்) அறிதலினாலும், உறக்கத்தில்இன்பத் துன்ப அனுபவமும், உடம்பு இயங்குதலும் (உயிர்க்கு இல்லாமையாலும், (உயிர்) அறிவிக்க அறிதலாலும், மாயா காரியம் ஆகிய உடல் முதலியவற்றிற்கு வெவ்வேறு பெயர் இருத்தலினாலும், சூனியம், உடல், ஐம்புலன், கனவு,உறக்கம், பிரமம், சமுதாயம் ஆகிய இவற்றின் வேறாய் உடம்பினுள் உயிர் உண்டு.

தெளிவுரை :

இந்த மூன்றாம் சூத்திரம், கடவுளின் வேறாக, உலகின் வேறாக, உயிர் உண்டு என்பதை நிறுவுதற்கு எழுந்தது. இந்தச் சூத்திரம் ''பூட்டுவிற் பொருள் கோள் '' முறையை உடையது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அஃதாவது வில்லின் நுனியும் அடியும், கயிற்றினால் தொடர்புற்று இருத்தல் போல, 'ஆன்மா' என்னும் 'இறுதியும் 'உளது' என்னும் முதலும் சம்பந்தப்பட்டு, 'ஆன்மா உளது' என்னும் பொருளைத் தந்து நிற்றல் ஆகும்.

உயிர் கண்ணால் காணப்படும் பொருள் அன்று; அவ்வாறு காணப்படாத பொருள், 'உண்டு' என்று, சாதிக்க வேண்டுமாயின், அனுமானப் பிரமாணத்தினாலேயே நிறுவவேண்டும். அனுமானப்பிரமாணம் என்பது காரியத்தைக் கொண்டு, காரணம் உண்டு என்று நிச்சயிப்பது ஆகும். ஆகவே, காணப்படுகின்ற உடம்பின் போக்குவரத்து ஆகிய காரியத்தைக் கொண்டு, இக்காரியங்களின் நிகழ்ச்சிக்குக் காரணம் உடல் என்று கூற முடியாது. எனவே, காரணம் ஆகிய உயிரை, இவ்வுடம்பு உடையதாய் இருக்க வேண்டும் என நிச்சயிக்கப்பட்டது.

முதல் சூத்திரத்தில் உலகின்மேல் வைத்துக் கடவுள் உண்டு என்று கூறியவாறே, இந்தச் சூத்திரத்தில் உடம்பின்மேல் வைத்து உயிர் உண்டு என்று கூறப்பட்டது.

மற்றைச் சூத்திரங்களில், மேற்கோளைச் சாதிக்கும் ஏது, வேறாகக் கூறப்பட்டது; இந்தச் சூத்திரத்தில் ஏதுவே, மேற்கோளாகவும் ஏதுவாகவும் அமைந்திருக்கிறது. இந்நிலை ஆறாம்அதிகரணம் வரை உள்ளது. ஏழாம் அதிகரணத்தில் ஏது, மேற்கோளின் வேறாக உள்ளது. ஆறாம்அதிகரணம் வரை, ஒவ்வொரு மேற்கோளுக்கும் ஆசிரியர் பொழிப்புரை உரைத்திருக்கிறார். பொழிப்புரைக்குப் பிறகு , எடுத்துக்காட்டு வெண்பாக்கள் உள்ளன.

இந்தச் சூத்திரத்தில் ஏழு அதிகரணங்கள் உள்ளன. அவை வருமாறு :

1. இலது என்றலின் ஆன்மா உளது.
2. எனது உடல் என்றலின் ஆன்மா உளது,
3. ஐம்புலன் அறிதலின் ஆன்மா உளது,
4. ஒடுக்கம்அறிதலின் ஆன்மா உளது.
5. கண்படில், உண்டி வினை இன்மையின் ஆன்மா உளது.
6. உணர்த்த உணர்தலின் ஆன்மா உளது

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

7. மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா உளது.

மூன்றாம் சூத்திரம் முதல் அதிகரணம்
மேற்கோள்

ஈண்டு இலது என்றலின் ஆன்மா உளது என்றது.

இதன் பொருள் :

'இது ஆன்மா அன்று' இது ஆன்மா அன்று என உணரும் பொருள் ஒன்று உண்டு ஆகுமாகலின், அன்று என்று அறியப்படுவனவற்றின் வேறாய். அவ்வாறு அறியும் ஆன்மா ஒன்று உண்டு.

மேற்கோளை விளக்கும் பொழிப்புரை

எவற்றினையும் அன்று அன்று என விட்டு, ஆன்மா இலது என்று நிற்பது உளது ஆகலின், அதுவே அவ்வான்மாவாம் என்றது.

இதன் பொருள் :

சூனியமே ஆன்மா என்று கூறும் சூனிய ஆன்ம வாதிகளும் முயலுக்குக் கொம்பு இல்லை என்பது போல், சும்மா சொல்லவில்லை. அஃதாவது, முயலினிடத்துக் கொம்பு இல்லை என்பது கண்டு சொல்லப்படுவது ஆகும். அதுபோல, ஆன்மா இல்லை என்பது கண்டு, அஃது இல்லை என்று சொல்லாமல், உடல் பொறி முதலியவற்றை ஆராய்ந்து, இஃது ஆன்மா அன்று, இஃது ஆன்மா அன்று என ஒவ்வொன்றாகக் கழித்து, இனி இவற்றின் வேறாய் ஒன்றும் காணப்படாமையால், சூனியமே ஆன்மா என்பர்.

ஒவ்வொன்றாக விட்டு நீங்கியும் நீங்கிய பிறகு, ஒன்றும் காணவில்லை என்று அறியும் அறிவு ஒன்று உண்டு அவ்வறிவே, இரண்டாம் சூத்திரத்துள் 'அவையே' என்பதனால் சாதித்த ஆன்மா ஆகும், ஆதலால், 'ஈண்டு இலது என்றலின் ஆன்மா உளது' என மேற்கோள் கூறியது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை :

ஒன்றும் காணவில்லை என்று அறியும் அறிவு சூனியமே என்று கூறினால் அஃது 'என்னை ஈன்றவள் மலடி' என்பதைப் போன்றதாகும். எனவே, அது பொருந்தாது. 'சூனியம்' என்பது, உள்ளதும் இல்லதும்ஆகிய அவற்றின் வேறும் அன்று எனப்படும் 'வெறும் பாழ்' என்பது ஆகும்.

(1) எடுத்துக்காட்டு வெண்பா

அன்று அன்று என நின்று, அனைத்தும் விட்டு, அஞ்செழுத்தாய்
நின்று, ஒன்று உளது; அதுவே நீ, அனைத்தும் - நின்று இன்று
தர்ப்பணம் போல் காட்டலால், சார்மாயை நீ அல்லை;
தற்பரமும் அல்லை; தனி.

(கொண்டு கூட்டு) அனைத்தும் நின்று, அன்று அன்று என விட்டு, அஞ்செழுத்தாய் ஒன்று நின்றுளது; அதுவே நீ, சார்மாயை அனைத்தும் நின்று இன்று, தர்ப்பணம்போல் காட்டலால், நீ அல்லை; தற்பரமும் அல்லை; தனி.

இதன் பொருள் :

அனைத்தும் நின்று - உடல் பொறி விடயம் முதலியவற்றோடு கூடி அது அது தானாக நின்று, **அன்று அன்று என விட்டு** - பின்பு அவற்றை இது நான் அன்று, இது நான் அன்று என ஒவ்வொன்றாகக் கண்டு, நீக்கிய பொழுது, **அஞ்செழுத்தாய் ஒன்று நின்று உளது** - அவ்வாறு நீக்கியதாயும் அகரம் முதலிய சூக்கும பஞ்சாக்கர ரூபமாய் நின்று, அறிந்து வந்ததாயும் உள்ள ஓர் அறிவு நிலை பெற்று இருக்கும்; **அதுவே நீ** - அந்த அறிவே ஆன்மா ஆகிய நீ; அவ்வறிவும் ; நான் அன்று ' என நீக்கினால், அவ்வாறு நீக்கும்அறிவு வேறு உண்டு எனப்பட்டு, மேலும் வரம்பு இன்றி ஓடும். ஆதலால், சூக்கும பஞ்சாக்கர ரூபமாய் நின்று, உடல் பொறி முதலியவற்றை அறிந்து வந்த , அந்த அறிவுதானே நீ என அறிவாயாக.

மாயா காரியமும் சிவமும் உள என, மேல் இரண்டு சூத்திரங்களால் சாதிக்கப்பட்டமையால், அந்த மாயா காரியமும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சிவமுமே பஞ்சாக்கர ரூபமாய் நின்ற அவ்வறிவினையும் அறிந்து, நீக்கும் என்றல் கூடும்ஆதலால், வரம்பின்றி ஓடுமாறு இல்லை என்று சொல்வாய் ஆயின், அது பொருந்தாது; எதனால் எனின், **சார்மாயை** - உன்னால் பொருந்தப்பட்ட மாயை, **அனைத்தும் நின்று இன்று தர்ப்பணம்போல் காட்டலான், நீ அல்லை** - நிலம் முதலிய காரியங்களாய் நின்னோடு விரவி நின்று, கண்ணுக்குத் துணையாய் நின்று விளங்கும் கண்ணாடி போல், இந்த அஞ்ஞான காலத்தில், உனக்கு அறிவை விளக்கி நிற்கமட்டும் செய்யுமே அன்றி, அந்த மாயை தானே ஒன்றையும் அறிவது இல்லை.

தற்பரமும் இல்லை - ஆதலால் நீ மாயை அன்று; மாயா காரியத்தால் அறிவு விளங்கப் பெற்று, அறியும் தன்மை உடைய நீ, அவ்வறிவுக்கு அதீதம் ஆகிய சிவமும் அன்று ; **தனி** - ஆகவே நீ மாயை, சிவம் என்னும் இரண்டின் வேறு ஆவாய்.

தெளிவுரை :

உடல் முதலியவற்றை 'நான் அன்று ' என அறிந்து நீக்கிய பொழுது, அவ்வாறு அறிந்து நீக்கிய அறிவே நீ; அவ்வறிவு மாயையும் அன்று; சிவமும் அன்று.

'சூக்கும பஞ்சாக்கரம்' என்பது அகரம், உகரம், மகரம், நாதம், விந்து என்பன ஆகும். ஆன்மா அஞ்செழுத்தாய் நின்று அறியும் முறைமையை நான்காம் சூத்திரத்தில் காணலாம்.

'தற்பரம்' என்பது , ஆன்மாவுக்கு அதீதமாய் நிற்கும் சிவத்தைக் குறிக்கும். தன் + பரம் = தற்பரம். தன் - ஆன்மா; பரம் - அதீதம், தற்பரம் - சிவம்.

மூன்றாம் சூத்திரம் - இரண்டாம் அதிகரணம்

மேற்கோள்

இனி எனது உடல் என்றலின் ஆன்மா உளது என்றது.

இதன் பொருள் :

நான் 'பருத்தேன், நான் சிறுத்தேன், நான் கரியேன், நான் மனிதன் , நான் பார்ப்பான் எனப் பகுத்தல் முதலிய உடம்பின் குண விசேடங்கள், உபசாரத்தால் உயிருக்கு ஏற்றி வழங்கப்பட்டு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வருகின்றன. வரினும், யான் உடம்பு, யான்கை, யான்கால், என வழங்கப்படுதல்இல்லை. என் உடம்பு, எனவேற்றுமைப்படவே யாவரும் வழங்கக் காண்கிறோம். எனவே அவ்வாறு வழங்கும் அதனால் இந்த உடம்பின் வேறாய் உயிர் எனப்படுவது ஒன்று உண்டு.

மேற்கோளை விளக்கும் பொழிப்புரை

என் பதி, என் மனை, என்றாற் போல, என் கை, என் கால் என நிற்பது உளது ; ஆகலின் , அதுவே அவ்வான்மாவாம் என்றது.

இதன் பொருள் :

இராகுவினது தலை என்றது போன்ற உவமை சிறுபான்மை வழங்கப்படும். ஆதலால் அது பொருந்தாது. என் வீடு, என் மனைவி என்றாற் போலப் பெரும்பாலும், தன்னின் வேறான பொருளையே 'எனது' என்னும் சொல்லால் வழங்கக் காண்கிறோம்; எனவே, என் உடல், என் கை, என் கால், என் பிராணன் என்றது கொண்டு, அவற்றின் வேறாய் ஒன்று உண்டு. அதுவே, இரண்டம் சூத்திரத்தில் ஆகமப் பிரமாணம் பற்றி, அவையே' எனக் கூறிய ஆன்மா ஆகும். ஆதலால், 'எனது உடல் என்றலின் ஆன்மா உளது' என மேற்கோள் கூறியது.

(2) எடுத்துக்காட்டு வெண்பா

எனது என்ற மாட்டின், எனது அலாது என்னாது,
உனது அலாது உன் கை கால் யாக்கை - எனது என்றும்
என் அறிவது என்றும் உரைத்து நீ நிற்றிகாண்;
உன்னில், அவை வேறாம் உணர்

(கொண்டு கூட்டு) - எனது அலாது என்னாது, எனது என்ற மாட்டின், உனது அலாது. . . . வேறாம் உணர்.

இதன் பொருள் :

எனது அலாது என்னாது, எனது என்ற மாட்டின் - கண்ணால் காணப்படும் உலகமும் உடலுமே அன்றி, இவ்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இரண்டின் வேறாய்க் கடவுளும் உயிரும்இல்லை எனவும், அவ்விரண்டனுள் உடலே உயிர் எனவும், அவ்வுடல் ஆகிய உயிருக்கு உலகம் அனுபவிக்கப்படும் பொருள் எனவும் உலகாயதர் கூறுவர்; இவர் கொள்கை உலகாயதர் கொள்கை எனவும், இவ்வாறு கூறும் நூல் உலகாயத நூல் எனவும் கூறப்படும். இவ் உலகாயத நூலை அறிவதற்கு முன்பு, உலகப் பொருள்கள் ஆகிய வீடு முதலிய பொருள்களையும், உயிர் எனவே எண்ணி, வீடு கெட்டால், நீ கெட்டது போலவும், மனைவி மாண்டால் நீ மாண்டது போலவும், இவ்வாறே உனக்கு வேறான பொருள்கள் எவற்றையும், உயிர் எனக் கொண்டு, மயங்கி நின்றாய் அல்லவா? அந்நிலையில் வீடு முதலியன உயிர் அன்று எனவும், அவை உயிருக்கு வேறு எனவும் காணாமல், ஒவ்வொன்றையும் தனித்தனி உயிர் என்றே கொண்டு, அப்பொருளின் வேறாக, நீ நின்றாற் போல,

உனது அலாது உன்கை , கால், யாக்கை, எனது என்றும், என் அறிவது என்றும், உரைத்து நீ நிற்றி காண் - உண்மை ஞானத்தை அறியாத இந்நிலையில், நீ அல்லாதது ஆகிய உன்னுடைய கை, கால், உடல் முதலியவற்றை நீ என்றும் அவ்வாறு அறிந்த பாச அறிவை, உன் அறிவு என்றும் கொண்டு, அவற்றின் வேறாய், நீ நிற்கின்றாய்; **உன்னில்** - உலகாயத நூலை ஆராய்ந்த பின்பு, உடலே உயிர் எனவும், வீடு முதலிய பொருள்கள் உனக்கு வேறு எனவும் கண்டாற் போல, வேறாய் இருப்பதால், என்கை என்கால் எனப்படுகின்றன என்னும் காரணத்தாலும், வேறாய் இருக்கும் வீடு முதலியவற்றை என்வீடு எனக் கூறுவது போன்ற எடுத்துக் காட்டினாலும், அவற்றின் இயல்புகளை ஆராய்ந்து பார்ப்பாய் ஆயின், **அவை வேறாம் உணர்** - அக்கை கால் முதலியன, உனக்கு அன்னியம் ஆகும் என்பதை அறிவாயாக.

தெளிவுரை :

தன்னோடு ஒற்றுமைப்பட்ட பொருளைத் **தற்கிழமை** எனவும், தன்னின் வேறுபட்ட பொருளைப் **பிறிதின் கிழமை** எனவும் கூறுதல் முறை. **' தன் '** என்பதற்கு **உடலைப்** பொருளாகக் கொண்டால், கை கால்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முதலியன, தற்கிழமை ஆகும். 'தன்' என்பதற்கு உயிரைப் பொருளாகக் கொண்டால், கை கால் முதலியன, பிறிதின் கிழமை ஆகும். இந்த அதிகரணம் உடலின் வேறாய் ஆன்மா உண்டு என்பதை நிறுவுகின்றது.

மூன்றாம் சூத்திரம் - மூன்றாம் அதிகரணம்

மேற்கோள்

இனி ஐம்புலன் அறிதலின் ஆன்மா உளது என்றது.

இதன் பொருள் :

ஐந்து விடயங்களையும் அறிகின்ற அனுபவம் காணப்படுவதால், ஒவ்வொரு விடயங்களையே அறியும் இந்திரியங்களின் வேறாய், உயிர் எனப்படுவது ஒன்று உண்டு.

மேற்கோளின் பொழிப்புரை

ஐம்புலன் ஆகிய சத்தப் பரிச ரூப ரசகந்தங்களை, இந்திரியங்கள் ஒன்று அறிந்தது, ஒன்று அறியாமையின் இவ்வைந்தினானும் ஐம்பயனும் அறிவது உளது ஆகலின், அதுவே அவ்வான்மாவாம் என்றது.

இதன் பொருள் :

ஐந்து விடயங்கள் ஆகிய ஓசை ஊறு ஒளி சுவை நாற்றங்களை இந்திரியங்கள் ஒன்று அறிந்தது ஒன்று அறியாது. அஃதாவது செவி, சத்தத்தை அறியுமே அன்றி உருவம் முதலியவற்றை அறியாது; கண், உருவத்தை அறியுமே அன்றி, ஒலி முதலியவற்றை அறியாது. இவ்வாறே ஒவ்வொரு பொறியும் தனக்குரிய ஒவ்வொரு விடயத்தை அறிவதே அன்றி எல்லா விடயங்களையும் அறிவது இல்லை. ஒலியை அறிந்தேன், உருவத்தை அறிந்தேன், ஊறினை (பரிசத்தை) அறிந்தேன் சுவையை அறிந்தேன் நாற்றத்தை அறிந்தேன் என ஐந்தினையும் அறிந்த அனுபவம், காணப்படுகின்றமையால், ஐந்து பொறிகளையும் துணையாகக் கொண்டு, ஐந்து பயனையும் அறிவது ஒன்று உண்டு, அவ்வாறு அறிவதுவே. இரண்டாம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சூத்திரத்தில் ஆகம அளவையால் பெறப்பட்ட ஆன்மா ஆகும்.

(3) எடுத்துக்காட்டு வெண்பா

ஒன்று அறிந்தது ஒன்று அறியாதாகி உடல் மன்னி
அன்றும் புலனாய் அவ் அஞ்செழுத்தை - ஒன்று அறிதல்
உள்ளதே ஆகில், அது நீ; தனித் தனி கண்டு
உள்ளல் அவை, ஒன்று அல்லை ஓர்.

(கொண்டு கூட்டு) உடல் மன்னி, ஒன்று அறிந்தது ஒன்று அறியாதாகி, அன்றும் புலனாய் அவ்வஞ்செழுத்தை அறிதல் ஒன்று உள்ளதே ஆகில், அது நீ; அவை தனித்தனி கண்டு உள்ளல், ஒன்று அல்லை ஓர்.

இதன் பொருள் :

உடல் மன்னி ஒன்று அறிந்தது, ஒன்று அறியாதாகி உடம்பில் நிலை பெற்று ஒரு விடயத்தை அறிந்த இந்திரியம், மற்றொரு விடயத்தை அறியாதது ஆகும்; **அன்றும் புலனாய் அவ் அஞ்செழுத்தை** - அவ்வாறு தம்முள் வேறுபடுகின்ற சத்தம் முதலிய விடயங்களையும் ஒவ்வொரு இந்திரியங்கள் தாமே அறிவது இல்லை; சூக்கும பஞ்சாக்கரம் செலுத்த, அவ்விந்திரியங்கள் விடயங்களில் சென்று அறியும்; அறியும்பொழுது அறிகின்ற அந்த இந்திரியங்களின் தொழிற்பாட்டை, **அறிதல் ஒன்று உளதே ஆகில்** - கண் உருவத்தை அறிவது, செவி ஓசையை அறிவது என, இவ்வாறு உணர்வு நிகழ்வதைக் காண்கிறமையால், அவ்வாறு உணரும் பொருள் இல்லதோ உள்ளதோ என வினாவும்பொழுது , இல்லது என்று கூறினால் அவ்வறிவு நிகழ்தல் கூடாது; ஆகவே, அவ்வாறு உணரும் பொருள் உள்ளதே ஆகும் என்று கூறினால்,

அது நீ - அவ்வாறு உணர்வது ஆகிய 'அதுவே நீ' ஆகிய ஆன்மா. கண் உருவத்தை அறிவது, செவி ஓசையை அறிவது என்று உணர்வன அந்த இத்திரியங்களே என்று சொன்னால், என்ன குற்றம் என்றால், **அவை தனித்தனி கண்டு உள்ளல்** - அந்த இந்திர்யங்கள் தத்தம் விடயங்களை வேறு வேறு கண்டு அறிய

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மட்டும் செய்யுமே அன்றி, யாம் அறிந்தோம் என்று அறிய மாட்டா; விடயங்களால் வரும் பயனையும் கொள்ள மாட்டா. இவை குற்றம் ஆகும். ஆகவே, **ஒன்று அல்லை ஓர்** - அந்த ஐந்து இந்திரியங்களைக் கொண்டு, ஐந்து விடயங்களை அறிந்தேன் என்று உணர்ந்து, அந்த விடயங்களால் வரும் பயனைக் கொள்பவனாகிற நீ அந்த இந்திரியங்களின் வேறு ஆவாய் என்பதனை ஆராய்ந்து அறிவாயாக.

தெளிவுரை :

இந்த அதிகரணத்தில், இந்திரியத்தின் வேறாய் ஆன்மா உண்டு என்பது சாதிக்கப் பட்டது. மூன்றாம் சூத்திரத்து முதல் மூன்று அதிகரணங்களினாலும், **சாக்கிரத்தில் நிகழும் இயல்பு** பற்றிச் **(1)** சூனியம் ஆன்மா அன்று; **(2)** உடல் ஆன்மா அன்று; **(3)** இந்திரியம் ஆன்மா அன்று எனக் கூறி, இவற்றின் வேறாய் ஆன்மா உண்டு என்பது நிறுவப்பட்டது.

மூன்றாம் சூத்திரம் - நான்காம் அதிகரணம்

மேற்கோள்

இனி ஒடுக்கம் அறிதலின் ஆன்மா உளது என்றது.

இதன் பொருள்

ஐந்து பொறிகளும் புறத்தில் தொழிற்படாமல், ஒடுங்கின சொப்பனத்தில் நிகழ்ந்த சொப்பனங்களை அறிவதால், அவற்றை அறியும் ஆன்மா வேறு உண்டு.

மேற்கோளின் பொழிப்புரை

நனவின் கண், கனவு கண்டாம் என்றும் கண்டிலம் என்றும் நிற்பது உளது ஆகலின், அதுவே அவ்வான்மாவாம் என்றது.

இதன் பொருள் :

கனவைக் கண்டோம் என்றும், கனவைக் கண்டோமில்லை என்றும் நனவு நிலையில் மயங்கி அறியும்பொருள் உண்டு; ஆகவே அவ்வாறு மயங்கி அறியும் பொருளே, இரண்டாம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சூத்திரத்தில் உரை அளவை பற்றிச் சாதித்த ஆன்மா என்றவாறு ஆகும். ஆதலால், 'ஒடுக்கம் அறிதலின் ஆன்மா உளது' என மேற்கோள் கூறிற்று.

தெளிவுரை :

கனவில்நிகழ்ந்தவற்றைக், கனவு நிலயில் உயிருக்குக் கருவியாய் நின்று அறிவது நுண்ணுடலே ஆகும். நனவு நிலையில் கனவில் நிகழ்ந்தவற்றைக் கண்டவாறே அறியாமல் மயங்கி அறிவது நுண்ணுடலன்று. நனவிலும் அதனை நுண்ணுடலே அறியும் என்று கூறினால், அது மயங்கி அறிய வேண்டியிருக்காது. எனவே, நனவில் கனவை மயங்கி அறிவது உயிரே ஆகும்.

உயிர், சூக்கும உடம்பு போல், என்றும் ஒரு தன்மையாய் இருப்பது இல்லை. சில தத்துவங்களை விட்டு அகத்துச் செல்லுதலும், விட்ட அத்தத்துவங்களோடு கூடிப் புறத்துச் செல்லுதலும் ஆகிய வேறுபாடு உயிர்க்கு உண்டு. அந்த வேறுபாடு காரணமாக, கனவில் கண்டவற்றை நனவில் வேறு சில தத்துவங்களோடு கூடுதலால், உயிர் மயங்கி அறிதல் கூடும். ஆதலால் அவ்வாறு மயங்கி அறியும் உயிர், சூக்கும உடம்பின் வேறாய் உண்டு என்பது பெறப்படும்.

(4) எடுத்துக்காட்டு வெண்பா

அவ்வுடலின் நின்று உயிர்ப்ப ஐம்பொறிகள் தாம் கிடப்பச்
செவ்விதின் அவ்வுடலில் சென்று அடங்கி - அவ்வுடலின்
வேறுஒன்று கொண்டு விளையாடி, மீண்டு அதனை
மாறல் உடல் நீ அல்லை மற்று.

(கொண்டு கூட்டு) அவ்வுடலின் நின்று உயிர்ப்ப, ஐம்பொறிகள் கிடப்ப, அடங்கி அவ்வுடலில் சென்று அவ்வுடலின் வேறு ஒன்று கொண்டு விளையாடி, மீண்டு அதனை மாறல், நீ உடல் அல்லை.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இதன் பொருள்:

அவ்வுடலின் நின்று உயிர்ப்ப, ஐம்பொறிகள் கிடப்ப - ஆறாம் அதிகரணத்தால், உயிர் அன்று எனச் சாதிக்கப்பட்ட ஐம்பொறிகள் தூல உடம்பில் நின்று தொழிற்பட்டுப் பின்பு, அந்தத் தூல உடம்பில் தொழிற்படாமல் கிடக்க, **அடங்கி அவ்வுடலில் செவ்விதின் சென்று** அவ்வாறு கிடக்கும்பொழுது, புறத்து நிகழும் தொழிற்பாடு எல்லாம் அடங்க. நீ அந்தத் தூல உடம்பின் உள்ளாக வருத்தம் இன்றிச் சென்று, **வேறு ஒன்று கொண்டு விளையாடி** - அந்தத் தூல உடம்பு போல, அதனின் வேறு ஆகிய சூக்கும உடம்பை எடுத்துக் கொண்டு, தூல உடம்பில் நின்று தொழில் செய்வது போலல்லாமல், அதிவேகமாய்க் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று விளையாடி, **மீண்டு அதனை மாறல்**-மீண்டும் அந்தச் சூக்கும உடம்பினின்று மாறி,தூல உடம்பைச் சேர்கின்றாய்; ஆதலால், **நீ உடல்அல்லை** - தூல உடம்பைக் கொண்டு **புறத்து** நிகழ்கின்றவற்றை அறிவது போலச், சூக்கும உடம்பைக் கொண்டு, **அகத்து** நிகழ்கின்ற வற்றை அறியும் நீ, அந்தச் சூக்குமதேகம் அல்ல. அதனின் வேறு ஆவை.

தெளிவுரை :

''தாம் கிடப்ப '' என்றதில் உள்ள தாமும், இறுதியில் உள்ள மற்றும்அசை. 'மாறலால்' என்பது ஈறு குறைந்து, மாறல் என நின்றது. இந்த அதிகரணத்தில், சூக்கும தேகத்தின் வேறாய், சொப்பனத்தில் நிகழும் இயல்பு பற்றி, உயிர் உண்டு என்பது நிறுவப்பட்டது.

மூன்றாம் சூத்திரம் - ஐந்தாம் அதிகரணம்

மேற்கோள்

இனிக் கண்படில், உண்டி வினை இன்மையின் ஆன்மா உளது என்றது.

இதன் பொருள் :

சுழுத்தி ஆகிய நித்திரையில், பிராணவாயு இயங்கிக் கொண்டு இருக்கும்; ஆயினும் விடயங்களின் வழியாய் வரும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இன்பதுன்ப அனுபவமும், உடம்பு தொழிற்படுதலும்இல்லை; ஆதலால், இன்பத்துன்ப அனுபவத்தையும், உடம்பின் தொழிற் பாட்டையும் உடைய ஆன்மா, இந்தப் பிராணவாயுவின் வேறாய் உண்டு.

மேற்கோளின் பொழிப்புரை

ஒடுங்கின இடத்து, இன்பத்துன்பம், சீவனம்.பிரகிருதிக்கு இன்மையின், ஒடுங்காத இடத்து, இன்பத்துன்பம் சீவியா நிற்பது உளது; ஆகலின், அதுவே அவ்வான்மாவாம் என்றது.

இதன் பொருள் :

உண்டி என்றது, உறக்கத்தில் உண்டாகும் சுகத்தைஅன்று, விடயங்கள் இடமாக வரும் இன்பத்துன்ப அனுபவத்தை; வினை என்றது, பிராணவாயுவின் இயக்கத்தைஅன்று; உடம்பு தொழிற்படுதலை. ஒடுங்கிய உறக்கத்தில், பிராணவாயு மட்டும் இயங்குகிறது; இன்பத்துன்ப அனுபவமும் உடல் தொழிற்படுதலும் ஆகியஇவ்விரண்டும் நிகழவில்லை. ஏனைய கருவிகள் ஒடுங்காத விழிப்பு நிலையில் இவ்விரண்டும் நிகழ்வதைக் காண்கிறோம். ஆகையால். விழிப்பு நிலையிலும் உறக்க நிலையிலும் வேறுபாடு இன்றி இயங்கிக் கொண்டு இருக்கும் பிராணவாயுவின் வேறாய், உண்டி வினைகளின் **இன்மைக்கு** ஏதுவாய், உறக்கத்தில் கருவிகளை ஒடுக்கியும், அவ்விரண்டின் **உண்மைக்கு** ஏதுவாய், விழிப்புநிலையில் கருவிகளை ஒடுக்காமலும் நிற்பது எதுவோ, அதுவே உயிர்ஆகும்.

தெளிவுரை :

சீவனம் - சீவித்தல் - தொழிற்படுதல்.

நித்திரை செய்யும்போதும் விழித்திருக்கும்போதும் வேறுபாடு இன்றி, ஒரு தன்மையாகவே தூல உடம்பு இருக்கும். எனவே, தூல உடம்பைப் **'பிரகிருதி'** என்றார். பிரகிருதி - இயல்பாய் இருத்தல். பிரகிருதி என்பதற்குப் பிராணவாயுவையும் சித்தத்தையும் கொள்ளுதல் பொருந்தும்; ஆயினும், தூல உடல் என்று கொள்வதே சிறப்பு ஆகும். ஏனென்றால் துரியத்தில் சித்தம் இல்லை; துரியாதீதத்தில் பிராண

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வாயு இல்லை; தூல உடம்பு துரியாதீதம் வரையும், ஒரு தன்மையாய் இருக்கும் ஆதலான் என்க.

(5) எடுத்துக்காட்டு வெண்பா

கண்டு அறியும் இவ்வுடலே காட்டுஒடுங்கக் காணாதே
உண்டிவினை இன்றி உயிர்த்தலால் - கண்டு அறியும்
உள்ளம் வேறு உண்டு; ஆய்; ஒடுங்காது உடல் நண்ணில்
உள்ளதாம் உண்டிவினை ஊன்.

(கொண்டு கூட்டு) கண்டு அறியும் இவ்வுடலே, காட்டுக் காணாதே ஒடுங்க, உண்டிவினை இன்றி உயிர்த்தலால், கண்டு அறியும் உள்ளம் வேறு உண்டு; ஒடுங்காது உடல் நண்ணில், ஊன் உண்டிவினை உள்ளதாம்; ஆய்.

இதன் பொருள் :

கண்டு அறியும்இவ்வுடலே - விடயங்களைக் கண்டு அறிதற்கு ஆதாரமான இந்த உடலில், **காட்டுக் காணாதே ஒடுங்க** - அறிதற்குத் துணை ஆகிய கருவிகள், தொழில் செய்யாமல் ஒடுங்கவும், **உண்டிவினை இன்றி** - அந்தக் கருவிகள் உறக்க நிலையில், இன்பத் துன்ப அனுபவமும், போக்கு வரத்து ஆகிய தொழிலும் உடலுக்கு இல்லை; அந்நிலையில், **உயிர்த்தலான்** - பிராணவாயு நிலைபெற்று இயங்கிக் கொண்டு இருக்கும். அந்தப் பிராண வாயுவே உயிர் ஆயின், அது நிலைபெற்று இருக்கும் பொழுது, இன்பத்துன்ப அனுபவமும் செயலும் உடம்பிற்கு இல்லாமல் போக வேண்டாம்; ஆதலால், **கண்டு அறியும் உள்ளம் வேறு உண்டு** - விடயங்களைக் கண்டு அறியும் உரிமையை உடைய உயிர் பிராணவாயுவின் வேறாய் உண்டு; **ஒடுங்காது உடல் நண்ணில் ஊன் உண்டிவினை உள்ளதாம்** - அந்த உயிர் ஒடுங்காமல், தூல உடலில் பொருந்துமானால், அந்த உடம்பும் கருவிகளும் தொழிற்பட்டு, அதனால் இன்பத்துன்ப அனுபவமும் தொழிலும் உடையது ஆகும். **ஆய்** - அதனை ஆராய்ந்து அறிவாயாக.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை :

உறக்கத்திலும் நனவிலும் பிராணவாயு, ஒரு தன்மையாய் நிலைபெற்று இருந்தும், உறக்கத்தில் இன்பத்துன்ப அனுபவமும் உடலின் தொழிலும்இல்லாமையால், உயிர் பிராணவாயுவின் வேறு என்பது பெறப்படும்.

'ஊன்' என்பது ஊனை உடைய உடம்பைக் குறிக்கும். இந்த அதிகரணம், உறக்க நிலையிலும் பேருறக்க நிலையிலும் (துரியம்) உயிர்க்கு நிகழும் இயல்பு பற்றி உயிர் உண்மை சாதிக்கப்பட்டது.

இரண்டாம் அதிகரணம் முதல் ஐந்தாம் அதிகரணம் வரை. மாயா காரியங்கள் உயிர் அல்ல என்று கூறியதால், முதல் அதிகரணத்து எடுத்துக்காட்டு வெண்பாவில் கூறிய ''சார்மாயை நீ அல்லை'' என்பது வலியுறுத்தப்பட்டது. இந்த அதிகரணத்தில் பிராணவாயுவின் வேறாய் ஆன்மா உண்டு என்பது நிறுவப்பட்டது.

மூன்றாம் சூத்திரம் - ஆறாம் அதிகரணம்

மேற்கோள்

இனி உணர்த்த உணர்தலின் ஆன்மா உளது என்றது.

இதன் பொருள் :

கருவிகள் இல்லாத துரியாதீதம் ஆகிய கேவலத்தில் அறியாமலும், சகலத்தில் கலை முதலிய கருவிகளைக் கொண்டு அறிவதுமாய் நிற்கும் உயிர், என்றும் ஒரு தன்மையாய்த் தானே அறியும் பிரமம் ஆகாது; ஆகவே பிரமத்தின் வேறாக உயிர் உண்டு எனப்பட்டது.

மேற்கோளின் பொழிப்புரை

அவன் அறிந்தாங்கு அறிவன் என்று அறிவிக்க அறிந்து உபதேசியாய் நிற்பது உளது ஆகலின், அதுவே அவ்வான்மாவாம் என்றது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இதன் பொருள்:

'உணர்த்த உணர்தல்' என்றதற்குக் கருவிகளோடு கூடிய பொழுது அறிதல் என்பது பொருளாகும். கருவிகளோடு கூடிய பொழுதும், விடயங்களை அறிவதே அன்றித் தன்னையும் முதல்வனையும் அறிவது இல்லை. முதல்வன் பேரறிவு உடையவன் எனவும், தான் அடிமை எனவும் வேதாகமங்களில் அறிவிக்க அறிந்து, அறிந்தவாறே அனுபவம் உண்டாகும் பொருட்டு, ஆசிரியன் உபதேச மொழியைப் பெறுவதாய்க் காணப்படுவதால், அது முதல்வன் ஆக மாட்டாது.

அவ்வாறு நிற்பதும் முதல்வனே என்றால், அறியாமையில் கட்டுப்பட்டுத் தன்னை அறியாமல், பின்னர் அறிவிக்க அறியும் தன்மை உடைய பொருளுக்கு முதன்மை எவ்வாறு சித்திக்கும்? மேலும், அறியாமையை எதற்காகப் பொருந்திற்று? அநாதியே பொருந்திற்று எனின், அவ்வாறாயினும் முதன்மை சித்திக்காது. இடைப்பட்ட காலத்தில் விளையாட்டாகப் பொருந்திற்று எனின், நீங்கிய பின்னரும் பொருந்தும் ஆகலின், நீங்குதற்கு முயல வேண்டுவது இல்லை. ஆதலால், அறிவிக்க அறியும் தன்மை உடைய அதுவே, இரண்டாம் சூத்திரத்தில் ஆகமப் பிரமாணத்தால், அவையே எனக் கூறிய **உயிர்** ஆகும்.

தெளிவுரை :

'அறிந்தவாறே அறிவது பிரமம்; அதுவே அஞ்ஞானத்தோடு கூடிய பொழுது, தத்துவங்களைத் துணையாகக் கொண்டு வேறு வேறாய் அறியும்; எனவே, பிரமத்தின் வேறாய் உயிர் உண்டு என்பது பொருந்தாது' என்று கூறும் ஏகான்மவாதியின் கொள்கையை,

''அவ்வளவின்அவன் மகிழ்க''

என்னும் நியாயத்தால், 'உணர்த்த உணர்தலின்' என்று கூறிய தன் நோக்கத்தைத் தெளிவுபடுத்துகிறார்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

(6) எடுத்துக்காட்டு வெண்பா

அறிந்தும் அறிவதே ஆயும் அறியாது
அறிந்ததையும் விட்டு அங்க அடங்கி - அறிந்தது
எது, அறிவும் அன்று ஆகும்; மெய்கண்டான் ஒன்றின்
அது அது தான் என்னும் அகம்.

இதன் பொருள் :

அறிந்தும் அறிவது ஆயும் அறியாது - கருவிகள் எல்லாவற்றோடும் கூடிச் சாக்கிரத்தானம் ஆகிய புருவ நடுவில் நின்று, விடயங்களை அறியும் பொழுது எல்லா விடயங்களையும் ஒருசேர அறிய மாட்டாது. ஒன்றனையே அறியும்; அறியும்பொழுது, பிறிது ஒன்றனை அறியச் செல்லும்; செல்லும்பொழுதுமுன் அறிந்து வந்ததைஅறியாது ஒழியும். **அறிந்ததையும் விட்டு அங்கு அடங்கி** - இவ்வாறு ஒவ்வொன்றாக அறியப்பட்ட விடயத்தையும் விடாமல் அறிவது இல்லை; விட்டு விட்டு அறியும்; அஃதாவது, சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம் என்னும் ஐந்து அவத்தைப்பட்டு ஒரு அவத்தையில் அறிந்ததைப் பிறிதொரு அவத்தையில் அறியாது அடங்கி, **அறிந்தது எது** - மீண்டும் துரியாதீதத்தில் நின்று முறையே வெளி வந்து அறியும்; இவ்வாறு அறியும் என்பது நடைமுறை என்பதால், அவ்வாறு அறிந்து வந்த பொருள் யாதோ, அது சடம் அன்று என்பது இந்தச் சூத்திரத்தின் இரண்டாம்அதிகரணம் தொடங்கிக் காட்டப்பட்டது.

இன்னும் வருகிற ஏழாம் அதிகரணத்தும் காட்டப்படும். **அறிவும் அன் று**- பேரறிவு ஆகிய பிரமப் பொருளே அவ்வாறு அறியும் என்று கூறினால், அப்பொருள் எல்லாவற்றையும் ஒரு சேரத் தானாக அறியும் தன்மை உடையது. ஆதலால் அதுவும் அன்று ஆகும்.

மெய் கண்டான் ஒன்றின் - இனி மெய் ஆகிய சித்தாந்த நெறியினை உணர்ந்தோன் அவ்வாறு அறியும் பொருள், வேறு என்னவோ என மனம் ஒடுங்கி ஆராய்ந்தால், **அது அது தான் என்னும் அகம் ஆகும்** - ஒரு பொருளைக் கண் காணும் பொழுது,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சூரியன் ஒளியைக் காட்டக் காணும்; அவ்வாறு காண்பது, காட்டுகின்ற சூரியன் ஒளிக்கு வேறு ஆகிய கண் ஒளியே ஆகும். அது போலப் பேரறிவு ஆகிய பிரமப் பொருளிற்கு வேறாய்ச், சார்ந்த பொருளின் வண்ணமாய் நின்று அறியும் இயல்பு உடைய உயிரே அப்பொருள் ஆகும் என்பது நன்கு விளங்கும்.

தெளிவுரை :

கருவிகளோடு கூடி விடயங்களை அறியும் பொழுது ஒன்றனையே அறிந்தும் அதனையும் விட்டு விட்டு அறிந்தும் வருதல் நடைமுறையில் உள்ளதால், அவ்வாறு அறியும் பொருள் சடமும் அன்று; கருவிகளோடு கூடாது தானாக அறியும் பிரமப் பொருளும் அன்று; ஆகவே, பிரமத்தின் வேறாய், உயிர் உண்டு என்பது பெறப்படும்.

ஓதியதனை ஓதிய பொழுதே உணர்ந்தும், பலகால் ஓதி உணர்வதாயும், பலகால் ஓதியும் உணர்தல் இன்றியும், உணர்ந்த தனையும் பின்னர் மறந்து ஒழிந்தும் இவ்வாறு ஓதி உணர்ந்தது எது? அதுவே உயிர் ஆகும். ஓதாது உணர்ந்தது எதுவோ அது பிரமப் பொருள் ஆகும். இவ்வாறு பிரமத்தின் வேறாய் ஆன்மா உண்டு என்பது நிறுவப்பட்டது.

மூன்றாம் சூத்திரம் - ஏழாம் அதிகரணம்

மேற்கோள்

இனி மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா உளது என்றது.

இதன் பொருள் :

மாயையின் காரியங்கள் ஆகிய தத்துவங்களால் கட்டப்பட்டுப் பொருந்திய சூத்திரப்பாவை போன்ற உடம்பில் அத் தத்துவங்களின் வேறாய் ஆன்மா உண்டு.

ஏது

அவை தாம் வெவ்வேறு பெயர் பெற்று நிற்றலான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இதன் பொருள் :

சித்தமும் சித்தப் பகுதியும் ஆகிய ஐந்து கந்தமும் மாயா காரியங்களே ஆகும்; அல்லவாயினும், அவை ஆன்மா எனப்பெயர் பெறுமாறு இன்றி, வேறு வேறு பெயர் பெற்று நிற்பன ஆகலின், அவை ஆன்மா. அல்ல. ஆதலால், 'மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா உளது' என மேற்கோள் கூறியது.

தெளிவுரை :

ஐந்து கந்தங்கள் ஆவன, உருவம், வேதனை, ஞானம், குறி, வாதனை என்பன ஆகும்.

(1) எடுத்துக்காட்டு வெண்பா

கலையாதி மண் அந்தம் காணில், அவை மாயை,
நிலையாவாம்; தீபமே போல - அலையாமல்
ஞானத்தை முன் உணர்ந்து நாடில், அது தனுவாம்
தானத்தின் வேறு ஆகும் தான்.

(கொண்டு கூட்டு) காணில் கலை ஆதி மண் அந்தம்(ஆம்); அவை மாயை நிலையாவாம்; ஞானத்தை அலையாமல் முன் உணரந்து நாடில், அது தீபமே போலத் தனுவாம்; தான் அத்தின் வேறு ஆகும்.

இதன் பொருள் :

காணில் கலை ஆதி மண் அந்தம் (ஆம்) - மேலே கூறியவாறு, சமுதாயம் ஆவதற்கு உரியவை யாவை என்று பிரமாணங்களால் அறியும் பொழுது, காலதத்துவம் முதல் பிருதிவி தத்துவம் முடிவு ஆகிய தத்துவங்களே ஆகும். **அவை மாயை நிலையாவாம்** - அவை அனைத்தும் மாயையின் காரியங்கள்; ஆதலால், நிலைத்து இருப்பதின்றிச் சிலகாலம் நின்று அழிவனவாம்; **ஞானத்தை அலையாமல் முன் உணர்ந்து நாடில்** - அவை யாவும் கூடிய சமுதாயத்தில் விளங்கித் தோன்றுவது ஆகிய ஞானத்தின் இயல்பை, மனதை ஒடுக்கி அசையாமல் முன்பு உணர்ந்தால், அது கருவி ஞானமே ஆகும், பின்பு அக்கூட்டத்தை யாது என்று ஆராய்ந்தால், **அது**

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தீபமே போலத் தனுவாம் -அக்கூட்டம், கண்ணுக்கு விளக்கு கருவி ஆதல் போல, உயிருக்குத் தூல சூக்கும காரணம் உடம்பு ஆகிய கருவி ஆகும். **தான் அத்தின் வேறு ஆகும்** - ஆகவே கண் விளக்கின் வேறு ஆயினாற்போல, உயிர் அந்த உடம்பின் வேறு ஆகும்.

தெளிவுரை :

அத்தின் - அதனின் என்பதன் மருவிய நிலை.

மாயை - மாயையின் காரியங்கள். சமுதாயம் உடம்பு எனப்பெயர் பெற்றது; உடம்பு, உயிருக்கு அறிதல் தொழில் நிகழ்தற்குக் கருவி ஆகும். ஆகவே, உடலின் வேறாய் ஆன்மா உண்டு என்பது ஆகும்.

இந்த அதிகரணம், சமுதாயம் ஆன்மா அல்ல என்றமையால், முதல் அதிகரணத்து வெண்பாவில் 'தனி' என்றது வலியுறுத்தப்பட்டது.

இந்தச் சூத்திரத்தின் தொகைப் பொருள்

இரண்டாம் சூத்திரத்தில் ''அவையே'' என்று ஆகமப் பிரமாணத்தால் எடுத்துக் கொண்ட உயிர், அனுமானப் பிரமாணத்தால், சூனியம், உடல்; இந்திரியம், சூக்குமதேகம், பிராணன், பிரமம், சமுதாயம் என்னும் இவற்றின் வேறு என மூன்றாம் சூத்திரத்தால் கூறப்பட்டது. இதில் உள்ள ஏழு அதிகரணங்களிலும் நிறுவப்பட்ட தொகைப்பொருள் வருமாறு;

1. ஆன்மா என்று ஒரு பொருள் இல்லை; அது, சூனியம் என்று அறிகின்ற அறிவு ஒன்று உண்டு ஆதலால் அவ்வறிவே ஆன்மா.

2. 'என் உடல்' எனக் கூறும் அனுபவத்தால், உடம்பின் வேறாய் ஆன்மா உண்டு.

3. ஐம்பொறிகளும் ஒன்று அறிந்ததைப் பிறிதொன்று அறியவில்லை. அந்த ஒன்றையும் அறிவதே அன்றி, அறிந்தேன் என்று உணரவில்லை. ஐந்து இந்திரியங்களையும் கொண்டு, ஐந்து விடயங்களையும் அறிந்து, 'அறிந்தேன்' என உணர்வது இந்திரியங்களின் வேறு ஆகிய ஆன்மா.

4. சொப்பனத்தில் சூக்குமதேகமாய் நின்று அறிந்ததை,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

விட்ட கருவிகளோடு மீட்டும் கூடிச் சாக்கிரத்தில் வந்து, மயங்கி அறிவது ஒன்று இருத்தலால், அதுசூக்கும தேகத்தின் வேறான உயிர்.

5. சாக்கிரத்தில் இருந்தது போலவே, சுழுத்தி துரியங்களிலும் பிராணவாயு இயங்கிக் கொண்டு இருக்கிறது. ஆனால், சாக்கிரத்தில் போல, சுழுத்தி துரியங்களில் இன்பத்துன்ப அனுபவமும் உடம்பு தொழிற்படுதலும் இல்லை. கருவிகளை ஒடுக்கிய பொழுது, அனுபவமும் தொழிலும் இல்லை; ஒடுக்கிய கருவிகளோடு மீண்டும் கூடும்போது, அவை உள்ளன. ஆகவே இவ்விரு வேறுபட்ட நிலைகளிலும்அவ்வாறு நிற்பது பிராணவாயுவின் வேறான உயிர் என்பது சாதிக்கப்பட்டது.

6. கருவிகளோடு கூடி அறிவதாலும், ஆசிரியன் உபதேசத்தினால் அறிவதாலும், கருவிகளோடு கூடிய சாக்கிரத்திலும் ஒருசேர அறியாமல், ஒன்றனையே அறிவதாலும், அதையும் விட்டு விட்டு அறிவதாலும், கருவிகளோடு கூடாமல் எவற்றையும் ஒருசேர அறிந்தவாறே அறியும் பிரமத்தின் வேறாய் உயிர் உண்டு.

7. உடம்பு முதலிய சமுதாயத்திற்குத் தனித்தனி பெயர் இருப்பதாலும், அனைத்தும் கூடிய கூட்டத்திற்கு ஆன்மா என்னும் பெயர் இல்லாமல், உடம்பு என்னும் பெயர் இருப்பதாலும், அஃது உயிர்க்குக் கருவி ஆதலாலும், சமுதாயத்தின் வேறாய் ஆன்மா உண்டு என்பது நிறுவப்பட்டது.

இவ்வாறு முதல் மூன்று சூத்திரத்தாலும், பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மை அனுமானப் பிரமாணத்தால் சாதிக்கப்பட்டது. ஆகமப் பிரமாணமே போதும்; என்றாலும் அனுமானப் பிரமாணம் புறச்சமயிகள் பொருட்டே அன்றிச் சைவ சமயிகளுக்குச் சிந்தித்தல் பொருட்டும் வேண்டப்படும்.

இந்த மூன்றாம் சூத்திரத்தோடு வைத்துச் சிந்திக்கத்தக்க சித்தியார்ப் பாடல்கள் வருமாறு:

பாடல் எண்		தொடக்கச் சொற்கள்
188	-	உடலின் வேறு உயிர் ஏன்
214	-	தோற்பாவைகூத்தும் தொல்லை
215	-	என் உடல் பொறி பிராணன்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

216	-	பொன் அணி ஆடை மாலை
217	-	உடலியான் அல்லேன்
218		புந்தியை மனமது என்றும்
189	-	அறிவது ஐம்பொறியே என்னின்
190	-	அறிந்திடும் பிராணவாயு
220	-	கண்டுணர் புருடன் வேறு
233	-	அறிந்திடும் ஆன்மா ஒன்றை
219	-	அறிவு உடல் சிந்தை ஆன்மா

- மூன்றாம் சூத்திரம் முற்றிற்று

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இலக்கண இயல்

நான்காம் சூத்திரம் உயிர் இயல்பு

அந்தக் கரணம் அவற்றின் ஒன்று அன்று; அவை
சந்தித்தது ஆன்மாச் சகச மலத்து உணராது
அமைச்சு அரசு ஏய்ப்ப நின்று அஞ்சு அவத்தைத்தே.

இதன் பொருள் :

ஆன்மா - ஆன்மா, **அந்தக் கரணம் அவற்றின்** - அந்தக் கரணங்கள் ஆகிய மனம், புத்தி; அகங்காரம், சித்தம் என்னும் நான்கனுள், **ஒன்று அன்று** - ஒன்று அன்று; ஆயினும் **அமைச்சு அரசு ஏய்ப்ப நின்று**-அரசன், தனக்கு நுணுகிய அறிவு இல்லாமையினால், ஆலோசனைத் துணைவர் ஆகிய அமைச்சரோடு கூடி நின்று, தன்னுடைய அரச காரியத்தை நடத்துமாறு போல **சகச மலத்து உணராது** - அனாதியே-இயல்பாகக் கூடியிருக்கும் ஆணவ மலத்தினால் அறிவு இன்றிக் கிடக்கும் ஆன்மாவிற்குச் சட்டை போன்ற கலை முதலிய தத்துவங்களால் பொது வகையால் உணர்வுநிகழ்ந்தாலும், சிறப்பு வகையால் உணர்வு நிகழாமையால், அது நிகழுதற்கு ஆலோசனைத் துணை ஆகிய, **அவை சந்தித்தது** - அந்தக்கரணங்களோடு கூடி நின்று, **அஞ்சு அவத்தைத்தே** - சாக்கிரம்முதலிய ஐந்து அவத்தையைப் பொருந்தும்.

தெளிவுரை :

மூன்றாம் சூத்திரத்திற்கும் நான்காம் சூத்திரத்திற்கும், 'ஆன்மா உண்டு' எனச் சாதிக்கும் சம்பந்தம் உடைமையை, உணர்ந்து கொள்ளுதற் பொருட்டு, இந்தச் சூத்திரத்திற்குக் கருத்துரை வழங்கிய சிவஞானசுவாமிகள், ''இதுவும் அது'' என மேலைச் சூத்திரத்தோடு **மாட்டெறிந்து** உரைத்தார். **''மாட்டெறிதல்''** என்பது ஓர் உத்தி ஆகும். அஃதாவது, ஒன்றற்குச் சொன்ன விதியைப் பிறிது ஒன்றற்கு மாட்டி விடுதல் ஆகும்.

அனுமானப் பிரமாணம் என்பது, மலையில் உள்ள

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நெருப்பு, கண்ணுக்குக் காணப்படாது இருப்பினும், அதன் புகையைக் கொண்டு, நெருப்பு உண்டு என்று நிச்சயிப்பது ஆகும், மறைந்திருக்கும் புகை இல்லாத நெருப்பை, வெப்பத்தால் உண்டு என்று நிச்சயிக்கலாம். இவ்வாறு பொருள் உண்மையை, அப்பொருளின் இயல்பினாலும் தெளிவு பெறலாம். எனவே, ஒரு பொருள் உண்டு என்பதை நிச்சயிப்பதற்கு அனுமானப் பிரமாணமும் இலக்கணமும் சாதனம் ஆகும்.

அனாதியே இயல்பாகக் கூடியிருக்கும் ஆணவமலத்தினால், அறிவின்றிக் கிடக்கும் ஆன்மாவிற்குச், சட்டை போன்ற கலை முதலிய தத்துவங்களினால் **பொதுவகையால்** உணர்வு நிகழ்ந்தாலும், **சிறப்பு வகையால்** உணர்வு நிகழாமையால், அது நிகழ்தற் பொருட்டு ஆன்மா அந்தக்கரணங்களோடு கூடி நின்று ஐந்து அவத்தையைப் பொருந்தும் என்று மேலே பொருள் உரைக்கப்பட்டது.

''**பொது வகையால் உணர்வு நிகழ்தல்**'' என்பது, அறியாமையில் நின்று நீங்கி, அறிவு சிறிது விளங்கப் பெற்றுப் பகுத்தறிவு இன்றி நிற்கும் நிலையைக் குறிக்கும். '**சிறப்பு வகையால் உணர்வு நிகழ்தல்**'' என்பது, பகுத்தறிவோடு கூடி நிற்கும் நிலை ஆகும். இவற்றிற்கு எடுத்துக்காட்டாகக் கீழ்க்காணுமாறு கூறலாம்; நித்திரையில் நின்று நீங்கி, விழிக்கும்போது உள்ள அறிவு **பொது அறிவு;** தொழில் செய்யும் போது உள்ள அறிவு **சிறப்பு அறிவு.**

''**ஆன்மா**'' என்னும் சொல்லுக்குப் பொருள். 'வியாபகம்' என்பதும், சித்தசித்து' என்பதும் ஆகும். சித்தோடு கூடினால் சித்தாயும், அசித்தொடு கூடினால் அசித்தாயும் நிற்றற்கு உரிமை உடைமையால், ஆன்மா, 'சித்தசித்து' எனப்பட்டது (சித்து - அறிவுடையது; அசித்து - அறிவற்றது) அந்தக் கரணங்களோடு கூடி நின்று, அஞ்சவத்தைப் படுதல், உயிர்க்குத் தடத்த **இலக்கணம்**. எனப்படும் **பொது இயல்பு** ஆகும். இந்தச் சூத்திரத்தினுள் மூன்று அதிகரணங்கள் உள்ளன; அவை வருமாறு.

1. **அந்தக்கரணம் அவற்றின் ஒன்று அன்று என்றது.**
2. **சகசமலத்து உணராது, அமைச்சு அரசு ஏய்ப்ப அவை**

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சந்தித்தது.

3. அமைச்சு அரசு ஏய்ப்ப நின்று அஞ்சவத்தைத்தே,

நான்காம் சூத்திரம் - முதல் அதிகரணம்
மேற்கோள்

ஈண்டு இவ்வான்மா ஆவது, அந்தக் கரணங்களால் உள்ள மனோ புத்தி அகங்கார சித்தங்களில் ஒன்று அன்று என்றது.

இதன் பொருள்:

இந்தச் சூத்திரத்தில் வரும் மூன்று அதிகரணங்களுள், முதல் அதிகரணம் ஆகிய இதில், மூன்றாம் சூத்திரத்தில்கூறிச்சென்ற உயிர், புற அந்தக்கரணங்கள் ஆகிய மனம், புத்தி, அகங்காரம், சித்தம் ஆகிய இவற்றின் வேறு ஆகும்.

தெளிவுரை :

'அந்தக்கரணம்' என்பது அகத்தே இருக்கும் கருவி ஆகும். அஃது, உள் அந்தக் கரணம், புற அந்தக்கரணம் , என இருவகைப்படும். அவற்றுள், **'உள் அந்தக் கரணம்'** என்பது கலை, வித்தை, அராகம், புருடன் முதலிய வித்தியா தத்துவங்களைக் குறிக்கும். **'புற அந்தக் கரணம்'** என்பது. மனம், புத்தி, அகங்காரம், , சித்தம் ஆகியவற்றைக் குறிக்கும். இந்திரியத்தை நோக்க, மனம் முதலியன அகத்தில் இருப்பதால், அந்தக்கரணம் எனப்படுகின்றன. இவை, கலை முதலிய தத்துவங்களுக்கு புறத்தே இருப்பதால், புற அந்தக்கரணம் எனப்பெயர் பெற்றன. கலை முதலிய தத்துவங்கள், மனம் முதலிய அந்தக் கரணங்களுக்கும் உள்ளாய் இருப்பதால், 'உள் அந்தக்கரணம்' எனப்பட்டது.

ஏது

அவை தாம் பிரகாசமாய் நின்றே, அப்பிரகாசமாய் நிற்றலான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இதன் பொருள்:

இந்த அந்தக்கரணங்கள், தம்மில் கீழ் உள்ள இந்திரியங்களை நோக்கி, அந்த இந்திரியங்கள் தம்மைக்கொண்டே அறிவதால், சித்தாய் நிற்கின்றன; தம்மைத்தாம் அறியாமையால் **தம்மை நோக்கி** அசித்தாகவும் நிற்கின்றன. எனவே, **தன்னை நோக்கிச்** சித்தாய் நிற்கும் இந்த ஆன்மா, அந்தக்கரணங்களாய் உள்ள மனோ புத்தி அகங்கார சித்தங்களில் ஒன்று அன்று என்று மேற்கோள் கூறியது.

தெளிவுரை:

கண்ணினால் ஒரு பொருளைக் காணும் பொழுது, ஆன்மா மனத்தோடு கூட, மனம் கண்ணோடு கூட, கண் எதிர்ப்பட்ட பொருளைக் காணும்; இவ்வாறே ' செவி ' முதலிய ஒவ்வொரு இந்திரியங்களும் ஆகும். ஆகவே, இந்திரியங்களால் விடயங்கள் அறியப்படும் பொழுது உயிர் அந்தக்கரணங்களைச் செலுத்த, அவ்வந்தக்கரணங்கள் இந்திரியங்கள் வழியாக, விடயத்தை அறியும். ஆக, விடயங்களை அறிவதற்கு இந்திரியங்கள் வாயிலாக இருந்தனவே அன்றி அந்த இந்திரியங்கள் தாமே அறியவில்லை என்பது தெளிவாகிறது.

சித்தம் ஒரு பொருளைப் **பிண்டமாக**, யாதோ ஒன்று தோன்றுகிறது எனச் சிந்தித்து அறியும்; அறியினும் தான், 'சிந்தித்தேன்' என்று அறியமாட்டாது. சித்தம் பிண்டமாக அறிந்த பொருளை, **மனம்** 'இது கட்டைதான்' என்று சங்கற்பித்தும், 'கட்டையோ அன்றி வேறு எதுவோ' என்று விகற்பித்தும் அறியும்; மனம், தான் 'சங்கற்ப விகற்பம் செய்தேன்' என்று அறியாது. (சங்கற்பம் - நிச்சயித்தல்; விகற்பம் - வேறுபடுதல்) அதன் பிறகு **அகங்காரம்** அந்தப்பொருளை இன்னது என நிச்சயிப்பேன் என்று ஒரு வழிப்பட்டு அகங்கரித்து அறியும். அதுவும் தான் 'அகங்கரித்தேன்' என்று அறியாது; பின்பு அந்தப் பொருளை **புத்தி** இன்னது தான் என்று நிச்சயித்து அறியும். அதுவும் தான் 'நிச்சயித்தேன்' என்று அறியாது.

ஆகவே, ஆன்மா விடயங்களை அறிவதற்கு இந்திரியங்கள் வாயிலாக இருத்தல் போல, அந்தக்கரணங்கள் கருவியாக இருந்தன என்பது பெறப்படும். படவே, இந்திரியங்களை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நோக்க, அந்தக்கரணங்கள் அறிவுடைப் பொருள்கள் ஆயினும், அவை தம்மை நோக்க ஆன்மாவிற்குக் கருவி ஆகலின் அந்தக் கரணங்கள் அறிவில்லாத பொருள் ஆகும் என்பது பெறப்பட்டது.

ஆன்மா தன்னை நோக்கியும் சித்தாய் நிற்கும்; எனவே தனக்குக் கீழ் உள்ளவற்றை நோக்கியும், சித்தாய் நிற்கும் என்பது பெறப்படும்; எவ்வாறு என்றால், அந்தக்கரணங்களோடு ஆன்மா கூடாத பொழுது, அந்தக்கரணங்கள் சிந்தித்தல் முதலிய தொழில்களைச் செய்வதில்லை. ஆகவே, பிறவற்றை நோக்கி, ஆன்மா சித்து ஆதல் பெறப்பட்டது.

ஆன்மா, அந்தக்கரணங்களோடு கூடி, யான் சிந்தித்தேன், பற்றினேன், அகங்கரித்தேன் , நிச்சயித்தேன் என்று அறியும்; அறிந்தபின் நிச்சயித்த புத்தி, சாந்த ரூபம் ஆகிய சத்துவ குணத்தோடு கூடி இருந்தால், அறிந்த அப்பொருள் சுக ரூபமாய் ஆன்மாவுக்குத் தோன்றும்; பிரவிருத்தி ரூபம் ஆகிய இரா்சத குணத்தோடு கூடி இருந்தால், அப்பொருள் துக்க ரூபமாக ஆன்மாவுக்குத் தோன்றும்; அந்தப் புத்தி, மோக ரூபம் ஆகிய தமோ குணத்தோடு கூடியிருந்ததால், அப்பொருள் மோக ரூபமாய் ஆன்மாவுக்குத் தோன்றும் இவ்வாறு, குணத்துக்கு ஏற்ப மாறுபட்டுத் தோன்றும் விடயங்களைக், கலை முதலிய தத்துவங்களுடன், ஆன்மா கூடிநின்று, இது சுகம், இது துக்கம், இது மோகம் என்று அறியும்.

இவ்வாறு ஆன்மா அறிவதற்குத் துணையாய் இருந்த கலாதி தத்துவங்களும், தாம் கருவிகளாய் இருப்பன அன்றிக், கருத்தாக்களாய் இருந்து, தனித் தனியே யான் சுகித்தேன், யான் துக்கித்தேன், யான் மோகித்தேன் என்று அறிவதில்லை. ஆன்மாவே இவற்றை அறியும், எனவே , கருவிகளைச் செலுத்துவதனால், பிறவற்றை நோக்கிச் சித்தாயும், கருவிகளால் 'யான் அறிந்தேன் என்று உணர்வதால், தன்னை நோக்கிச் சித்தாயும் ஆன்மா நிற்கும். இவ்வாறு நிற்கும் ஆன்மா, பிறவற்றை நோக்கிச் சித்தாயும், தம்மை நோக்கிச் சித்தாகாமலும் நிற்கும் அந்தக்கரணங்களுள் ஒன்று அன்று என்பது தெள்ளிதின் பெறப்படும்;

அந்தக் கரணங்களைச் சித்து என்று கூறுவது எல்லாம்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஏனையோரைவிட மந்திரி, அரசனோடு நெருங்கி இருக்கும் உரிமை உடையவன் ஆதலினாலேயே ஆகும். புறக்கருவிகளைவிட அகக்கருவிகள் ஆகிய மனம் முதலிய அந்தக்கரணங்கள், ஆன்மாவோடு நெருங்கி இருக்கும் உரிமை உடையன ஆகலின், அச்சிறப்புப்பற்றி உபசரித்துக் கூறினார். அவ்வளவே அன்றி, உண்மையில் அந்தக்கரணங்கள் சித்து அல்ல என்பது அறியப்படும்;

பிரகாசமாய் - சித்தாய்; அப்பிரகாசமாய் - அசித்தாய்.

(1) எடுத்துக்காட்டு வெண்பா

மனம்ஆதி யால், உணர்தல் மன்னு புலன்கள்,
மனம் ஆதி மன் புலனின் அல்லன் - மனம்மேல்
உதித்த ஒன்றை உள்ளம் உணர்தல், அதனின்
உதிக்கும் கடல் திரையை ஒத்து.

(கொண்டு கூட்டு) மனம் ஆதியால் உணர்தல், மன்னு புலன்கள் உள்ளம் உணர்தல் மனம்மேல் உதித்த ஒன்றை, கடல் திரையை ஒத்து உதிக்கும் அதனின் மனம் ஆதி புலனின் அல்லன்.

இதன் பொருள் :

மனம் ஆதியால் உணர்தல் மன்னு புலன்கள் - சத்தம் முதலிய புறத்து விடயங்களைச் செவி முதலிய இந்திரியங்களும், இந்திரியங்கள் வாயிலாக அந்தக் கரணங்களும் உணரும்; **உள்ளம் உணர்தல் மனம் மேல் உதித்த ஒன்றை** - அவ் அந்தக்கரணங்களுள் மனத்துக்கு மேல் ஆகிய புத்தியில் தோன்றிய இன்பத்துன்பம் முதலியவற்றை ஆன்மா அறியும்; **கடல் திரையை ஒத்து உதிக்கும்** இந்திரியங்களின் அறிவும் அந்தக் கரணங்களின் அறிவும்ஆகிய இருவேறு அறிவும் ஒன்றன்பின் ஒன்றாக, ஆன்மாவை வந்து பொருந்துதல், கடலில் உண்டாகிக் கரையைப் பொருந்தும் அலைபோல் ஆகும். **அதனின்மனம் ஆதி புலனில் அல்லன்** - ஆகவே, விடயங்களை இந்திரியங்களால் உணரும் மனம் முதலியன, அவ் இந்திரியங்களின் வேறு ஆயினாற் போல, அந்தக் கரணங்களால்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அவ்விடயங்களில் உள்ள இன்பதுன்பம் முதலானவைகளை உணரும் ஆன்மா, அவ் அந்தக்கரணங்களின் வேறு ஆகும்.

தெளிவுரை :

அலைபோல் உணர்வு ஒன்றன் பின் ஒன்றாக, ஆன்மாவில் வந்து தோன்றுவது எவ்வாறு என்றால், முதலாவது இந்திரியத்தால் காணும் உணர்வு தோன்றும். அஃதாவது விடயத்தைப் **பிண்டமாக அறிதல்** ஆகும். அதன் பின்பு, மனத்தால் காணும் உணர்வு தோன்றும்; அஃதாவது பிண்டமாகக் கண்ட விடயத்தைப் **பகுத்து, இன்னது** எனக் **காண்டல்** ஆகும். அதன்பிறகு, தன்வேதனையால் காணும் உணர்வு தோன்றும்; அஃதாவது பகுத்துக் கண்ட விடயத்தை, **இன்ப துன்ப மோக வடிவாய் காண்டல்** ஆகும்.

விடயம் கடலுக்கு உவமை; இந்திரிய உணர்வு மானத உணர்வு, தன் வேதனை உணர்வு ஆகிய மூன்றும் அலைக்கு உவமை; ஆன்மா கரைக்கு உவமை. ஆகவே, விடயம் ஆகிய கடலில், ஆன்மா இந்திரிய உணர்வு ஆகிய அலை, மானத உணர்வு ஆகிய அலையைத் தள்ள, மானத உணர்வு ஆகிய அலை, தன்வேதனை உணர்வு ஆகிய அலை, ஆன்மா ஆகிய கரையைச்சாரும் என்பது, இவ்வெண்பாவால் எடுத்துக்காட்டப்பட்டது.

''தன்வேதனை'' என்பது ஆன்மாவின் இன்ப துன்ப மயக்கங்களைக் குறிக்கும். தன் - ஆன்மா; வேதனை - இன்ப துன்ப மயக்கம். தன்வேதனை உணர்வு, நிச்சயத்தினாலேயே உண்டாகும்; எனவே தன்வேதனைக் காட்சியை வேறு கூறாமல், புத்தியில் தோன்றியது ஒன்றையே ஆன்மா அறியும் என்றனர்.

அந்தக்கரணம் தனக்குக் கீழ்உள்ள இந்திரியத்தை நோக்கிச் சித்தாயும், தனக்கு மேல் உள்ள கலாதிகளையும் ஆன்மாவையும் நோக்கி, அசித்தாயும் நிற்கும்; உயிர் அவ்வாறின்றி இந்திரியம், அந்தக்கரணம், கலாதி முதலியவற்றை நோக்கியும், தன்னை நோக்கியும் சித்தாகவே நிற்கும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

(2) எடுத்துக்காட்டு வெண்பா

சிந்தித்தாய்ச் சித்தம், தெளியாதாய் ஆங்காரம்,
புந்தியாய் ஆய்ந்து மனம் ஆகிப்-பந்தித்து
வெவ்வேறு தானே துணிந்து உள்ளம் இவ்வேறாம்;
அவ்வேறாம் போதுபோல் ஆங்கு.

(*கொண்டு கூட்டு*) - உள்ளம் ஆங்குச் சித்தம் ஆய்ச் சிந்தித்து, மனம் ஆகிப் பந்தித்து ஆங்காரம் ஆய்த்தெளியாது, புந்தி ஆய் ஆய்ந்து, வெவ்வேறே துணிந்து இவ்வேறாம்போது, அவ்வேறாம் போல்.

இதன் பொருள் :

உள்ளம் - கலாதி தத்துவங்களின் உள்ளீடாய் நின்ற காரணத்தால் ''உள்ளம்'' என்று கூறப்பட்ட 'புருடதத்துவம்' ஆகிய உயிர், **ஆங்கு** - இந்திரியங்களின் உணர்வால் கண்ட விடயங்களில் ஒன்றனை, மனம் முதலிய அந்தக்கரணங்களால் உணரும் மானத உணர்வும்ஒன்றுபோல் இன்றி, வேறு வேறு விதமாய்நிகழும் ; எவ்வாறு எனின், **சித்தமாய்ச் சிந்தித்து** - சித்தமாய் நின்று ஒரு பொருளைப் பிண்டமாக இஃது யாதோ ஒன்று தோன்றுகின்றது என்று சிந்தித்து அறியும்; **மனமாய்ப் பந்தித்து** - அதன் பின்னர் மனமாய் நின்று, பிண்டமாய் அறியப் பட்ட அப்பொருளை, இஃது இன்னது ஆகும் எனவும், அவ்வாறு ஆகுமோ ஆகாதோ எனவும் பற்றி அறியும்;

ஆங்காரமாய்த் தெளியாது - அதன்பின் ஆங்காரமாய் நின்று அதனை இன்னது எனத்துணிவேன் என அகங்கரித்து அறியும்; **புந்தியாய் ஆய்ந்து** - அதன் பிறகு புத்தியாய் நின்று அதனை இன்னது என நிச்சயித்து அறியும். **வெவ்வேறே துணிந்து இவ்வேறாம்** - அந்தக்கரணங்களுள் சித்தம், மனத்தின் தொழிலைச் செய்யவும் மாட்டாது; அறியவும் மாட்டாது; மனம் சித்தத்தின் தொழிலைச் செய்யவும் மாட்டாது; அறியவும் மாட்டாது; இவ்வாறே பிறவும் ஆகும், உயிர் அந்நான்கின் தொழிலையும் அறிவதால், அஃது அந்தக்கரணங்களின் வேறு ஆகும். **போது அவ்வேறாம் போல்** - அந்தக் கரணங்களோடு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கூடி நின்றும், உயிர் வேறு ஆதல், எதுபோல என்றால், கால்லத்தத்துவம், சூரியன் சந்திரன் நட்சத்திரங்களோடு கூடி நின்று, நாழிகை, நாள், பட்சம்,மாதம் வருடம் முதலியனவாகப் பாகுபட்டு வேறுபடினும், அந்தச்சூரியன் முதலியவற்றின், காலத்தத்துவம் வேறு ஆயினாற்போல ஆகும்.

தெளிவுரை :

மேற்கண்ட உரையில் காலத்தத்துவம் உயிர்க்கு உவமை. சூரியன் சந்திரன் முதலியன அந்தக்கரணங்களுக்கு உவமை, காலத்தத்துவம், சூரியன் முதலியவற்றின் வேறு ஆயினாற்போல, உயிர் மனம் முதலியவற்றின் வேறு ஆகும்.

சித்தம், மனம், அகங்காரம், புத்தி என்று முறையாய் வைக்க வேண்டும்; ஆயினும் செய்யுள் ஆக்லின், சித்தம், அகங்காரம், புத்தி, மனம் என முறை பிறழ வைத்தார்.

(3) எடுத்துக்காட்டு வெண்பா

அகார உகாரம் அகங்காரம் புத்தி
மகாரம் மனம் சித்தம் விந்துப் - பகாது இவற்றை
நாதம் உள வடிவாம்; நாடில் பிரணவமாம்;
போதம் கடல் திரையே போன்று.

(கொண்டு கூட்டு) அகாரம், அகங்காரம், உகாரம், புத்தி, மகாரம், மனம்,விந்து, சித்தம், நாதம், உள வடிவு, கடல் திரையே போன்று, போதம்ஆம் பகாது இவற்றை நாடில் பிரணவமாம்.

இதன் பொருள் :

அகாரம் அகங்காரம் - அகரம் அகங்காரத்தினையும், **உகாரம் புத்தி** - உகரம் புத்தியினையும், **மகாரம் மனம்** - மகரம் மனத்தினையும், **விந்து சித்தம்** - விந்து சித்தத்தினையும், **நாதம் உள வடிவு** - நாதம் உயிரினையும் செலுத்துவதனால், **போதம்** - மகா சகலம் ஆகிய மத்தியால் அவத்தையில், கணம் தோறும் மனம் முதலியவற்றின் உணர்வு, **ஆம்** - புதிது புதிதாய் உதித்தும் ஒடுங்கியும் வரும். அவ்வாறு வருதல் எது போல எனின், **கடல்**

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

திரையே போன்று - கடலில் அலை புதிது புதிதாய்த் தோன்றியும் ஒடுங்கியும் வருமாறு போல் ஆகும்; **பகாது இவற்றை நாடில் பிரணவமாம்**- மேற் சொன்ன அகாரம்முதலிய எழுத்துக்களைப் பகுக்காமல் ஆராய்ந்தால், அவற்றின் கூட்டம் பிரணவம் ஆகும்.

தெளிவுரை :

அகரம், உகரம், மகரம் , விந்து, நாதம் ஆகி ஐந்தும், முறையே அகங்காரம், புத்தி, மனம், சித்தம், உயிர் ஆகிய ஐந்தையும் செலுத்தும், இந்த எழுத்துக்களின் கூட்டம், பிரணவம் ஆகும்.

சகல நிலையில் நிகழும் ஐந்தவத்தை மூவகைப்படும். அவை, கீழால் அவத்தை மேலால் அவத்தை, மத்தியால் அவத்தை ஆகும். இவற்றுள் எல்லாக் கருவிகளும் தொழிற்படும் அவத்தை, மத்தியால் அவத்தை ஆகும்; ஆகவே 'மகாசகலம்' எனப்பட்டது.

அகரம் முதலிய பஞ்சகலை வடிவாய் நின்று, உயிர் அந்தக் க்ரணங்களை வேறு வேறு செலுத்துவதால், உயிருக்கு கணந்தோறும் **நினைப்பு** ஆகிய சகலமும், **மறப்பு** ஆகிய கேவலமும் மாறி மாறி நிகழும்; இஃது எது போல எனின், அதி நுட்பமாய்க் காற்றில் சுழலும் ஓலை போல் ஆகும். மகாசகலம் ஆகிய சாக்கிரத்தில், கணந்தோறும் அவ்வாறு உணர்வு உதித்தும் ஒடுங்கியும் வருதல், சமுத்திரத்தில் புதிது புதிதாய் அலை தோன்றியும் ஒடுங்கியும் வருமாறு போலும் என்பது நினைவில் கொள்ளத் தக்கது.

அகரம் உகரம் மகரம் விந்து நாதம் என்னும் ஐந்தும் பஞ்ச கலைகள் ஆகும். இவற்றுள், தூல வைகரி வாக்கு நிவர்த்தி கலையைப் பற்றி 'அ' கர வடிவாய் நிற்கும்; சூக்கும வைகரிவாக்கு பிரதிட்டா கலையைப் பற்றி 'உ' கர வடிவாய் நிற்கும்; மத்திமை வாக்கு வித்தியாகலையைப் பற்றி 'ம' கர வடிவாய் நிற்கும்; பைசந்தி வாக்கு சாந்திகலையைப் பற்றி விந்து வடிவாய் நிற்கும்; சூக்குமை வாக்கு சாந்தியதீத கலையைப் பற்றி நாத வடிவாய் நிற்கும்.

அக்கரங்கள் அந்தக்கரணங்களைச் செலுத்தும்முறை வருமாறு;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பிறர்க்குக் கேட்கும்படி சொல்லுதல் ஆகிய தூல வைகரி வாக்கு, வாயைத் திறப்பதனால் உண்டாகும்; ஆகவே, வாயைத் திறத்தல் ஆகிய அங்காத்தால் தோன்றும் அகரம் ஆகிப்பிறருக்குத் தெரிவிப்பேன் என்ற விருத்தி, அகங்காரம்ஆகியதால் , அகரம் அகங்காரத்தைச் செலுத்திற்று எனப்பட்டது.

பிறர்க்குச் சொல்லும் சொல்லைத் தன்னுள் நிச்சயித்தல் ஆகிய சூக்கும வைகரி வாக்கு, கண்டத்தானத்தில் அடங்கி வாயைச் சிறிது அசைத்தலினால் உண்டாகும். ஆகவே, வாயைச் சிறிது அசைத்தல், உகரம் ஆகி நிச்சயித்த விருத்தி, புத்தி ஆகி உகரம் புத்தியைச் செலுத்திற்று எனப்பட்டது.

சொல்லுக்குரிய எழுத்துக்களைப் பகுத்துக் காட்டும் மத்திமை வாக்கு, இருதயத்தில் மவுனமாய் இருப்பதால், மவுனம் மகரம் ஆகிப் பகுத்த விருத்தி, மனம் ஆகி மகரம் மனத்தைச் செலுத்திற்று எனப்பட்டது.

எழுத்துக்களை வேறுபாடு இன்றிக் காட்டும் பைசந்தி வாக்கு, உந்தியில் ஒரு குறி வடிவாய் இருப்பதால், குறி விந்து ஆகி, நிருவிகற்ப விருத்தி சித்தம் ஆகி விந்து சித்தத்தைச் செலுத்திற்று எனப்பட்டது. (நிரு.விகற்பம் - வேறுபாடின்மை).

ஒலி அளவில் நிற்கும் சூக்கும வாக்கு, நாபியில் ஒலி வடிவாய் நிற்பதால் ஒலிநாதம் ஆகி உயிர்த்தல் ஆகிய விருத்தி புருடன் ஆகி, நாதம் புருடனைச் செலுத்திற்று எனப்பட்டது. (புருடன் - உயிர்)

இதுகாறும் கூறிய வற்றிலிருந்து, சூக்குமை வாக்கு முதலிய ஒலி, நிவர்த்தி கலை முதலிய பஞ்சகலைகளின் பற்றுக்கோட்டால், அகரம் முதலிய எழுத்துக்களின் (அக்கரங்கள்) வடிவாய், அகங்காரம் முதலிய அந்தக்கரணங்களைத் தொழிற்படுத்தும் என்பது அறியப்படும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

(4) எடுத்துக்காட்டு வெண்பா

எண்நிலவு ஓங்காரத்து ஈசர் சதாசிவமாம்
நண்ணிய விந்துவொடு நாதத்துக் - கண்ணில்
பகர்அயன் மாலொடு பரமன், அதி தெய்வம்
அகர உகரம் மகரத்து ஆம்

(கொண்டு கூட்டு) எண் நிலவுஓங்காரத்து நண்ணிய நாதத்து, விந்துவொடு அதிதெய்வம் கண்ணில் சதாசிவம் ஈசராம் மகர உகரஅகரத்து (அதிதெய்வம் கண்ணில்) பரமன் மாலொடு பகர் அயனாம்.

இதன் பொருள் :

எண் நிலவு - மனத்தால் அறியப்படுவதாய் அகத்து விளங்கிய, **ஓம்காரத்து நண்ணிய** - பிரணவத்தில் பொருந்திய, **அதிதெய்வம் கண்ணில்** - எழுத்துக்களுக்கு அதிதேவதையைக் கருதும் பொழுது, **நாதத்து சதாசிவம், விந்துவொடு ஈசராம், மகர பரமன் உகர மாலொடு, அகரத்துப் பகர் அயனாம்** - நாதத்திற்குச் சதாசிவமும் விந்துவிற்கு மகேசனும், மகரத்திற்கு உருத்திரனும் உகரத்திற்கு விட்டுணுவும், அகரத்திற்குப் பிரமனும் அதிதெய்வங்கள் ஆகும்.

தெளிவுரை:

நிவர்த்திகலை பிரமனை அதிட்டித்து நின்று படைத்தல் தொழிலைச் செய்யும் ; பிரதிட்டைகலை விட்டுணுவை அதிட்டித்து நின்று , காத்தல் தொழிலைச் செய்யும்; வித்தைகலை உருத்திரரை அதிட்டித்து நின்று அழித்தல் தொழிலைச் செய்யும்; சாந்திகலை மகேசுவரரைஅதிட்டித்து நின்று, மறைத்தல் தொழிலைச் செய்யும்; சாந்தியதீதகலை சதாசிவரை அதிட்டித்து நின்று, அருளல் தொழிலைச் செய்யும். என்வே, இந்த வெண்பாவில் அகரம் முதலிய எழுத்துக்களுக்கு முறையே பிரமன் முதலியோர் அதிதெய்வம் என்று கூறப்பட்டது.

'அக்கரம்' என்பது ஒலியின் பேதமே ஆகும். ஒலியே வாக்கு ஆகும். வாக்கு ஆகிய ஒலி நிவர்த்தி முதலிய பஞ்சகலைகளும்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பிரமன் முதலிய ஐந்து அதிதெய்வங்களும் இயக்க, ஐந்துவகையாக இயங்கி, மனம் முதலிய அந்தக்கரணங்களையும், புருடனையும் விடயங்களில் செலுத்தும்.

பிரம விட்டுணு உருத்திரர் ஆகிய மூவரும், சுத்தமாயா காரியம் ஆகிய சுத்தவித்தையில் இருப்பவரும், அசுத்தமாயா தத்துவத்தில் இருப்ப்வரும் என இருவகைப்படுவர். வாக்கு, சுத்தமாயையின் காரியம் ஆனதால், வாக்கினை இயக்கும் தெய்வங்களும், சுத்தமாயா காரியம் ஆகிய சுத்தவித்தையில்இருப்பார்கள். எனவே, இங்குக் கூறப்பட்ட பிரம விட்டுணு உருத்திரர் ஆகிய மூவரும் சுத்தவித்தையில் வைகுவர் ஆவர் என்பது அறியப்படும்.

இந்த அதிகரணத்துடன் வைத்துச் சிந்திக்கத்தக்க சிவஞான சித்தியார்ப் பாடல்கள்:

பாடல் எண்		-தொடக்கச் சொற்கள்
191	-	**உணர்வன கரணம் என்னில்**
148		**சித்தமாம் அவ்வியத்தம்**
149	-	**ஆங்காரம் புத்தியின் கண்**
150	-	**மனமது தைசதத்தின்**
192	-	**கருவியா மனமும்புத்தி**
193	-	**அவ்வுடன் உவ்வும் மவ்வும்**
161	-	**தத்துவ ரூபம் ஆகும்**
194	-	**அயன் அரி அரனும் ஈசர்**

நான்காம் சூத்திரம் - இரண்டாம் அதிகரணம்

மேற்கோள்

இனி இவ் ஆன்மாச் சகச மலத்தினால் உணர்வு இன்று என்றது.

இதன் பொருள் :

அந்தக்கரணங்களில் ஒன்று அன்று என்று சாதிக்கப்பட்ட

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆன்மா, இறைவனைப் போல், அந்தக்கரணம் முதலியவற்றின் வேறு ஆகிய அறிவுடைப் பொருள் ஆயினும் செம்பினிடத்துக் களிம்பு அநாதியே உடனாய் நிற்றல் போல, வேறு காரணம் இன்றி ஆணவமலம் அநாதியே, தன்னோடு உடனாய் நிற்றலின், தன் இயல்பால் உணருமாறு இன்றிக் கருவிகளைக் கூடி நின்று உணர்வது ஆயிற்று.

தெளிவுரை :

ஆணவம் கன்மம் மாயை என்னும்மலங்கள் மூன்றனுள், கன்மமும் மாயையும் ஆன்மாவை இடையே வந்து கூடின ஆகும். ஆணவம்அநாதியே கூடி நின்றது. எனவேதான் மேற்கோளில், 'மலத்தினால்' என்று கூறாமல் 'சகசமலத்தினால்' என்று கூறியது.

மாயை கன்மங்களினால் ஆன்மாவிற்கு உணர்வு உண்டாவதே அன்றி, உணர்வு தடைப்படுவது இல்லை; ஆதலால், உணர்வைத் தடை செய்யும் மலம், இடையேவந்து பொருந்தின மாயை கன்மங்கள் அல்ல என நீக்குவதற்குச் 'சகச மலம்' எனக் கூறினார். இடையே வந்து கூடியது வேறு, அநாதியே கூடினது வேறு என்பதை விளக்குதல் பொருட்டும் சகசமலம் என்று கூறினார்.

மாயா கன்மங்கள் இடையே வந்து கூடின என்றால், அவை அநாதி அன்று எனக் கொள்ள வருமே வரின், 'ஆதி' என்று ஆகி, ஆதி ஆகிய மாயா கன்மங்கள் எப்பொழுது தோன்றின என்னும் கேள்விக்கு இடம்ஆகும். மேலும், ஆணவமலத்தின் நீக்கத்தின் பொருட்டுக் கன்மத்துக்கு ஏற்றவாறு, மாயையில் இறைவன் செய்யும் ஐந்தொழிலும் அநாதி அன்று எனக் கொள்ள வரும். ஆகவே, இன்ன காலத்தில் தோன்றின என்பது இன்றி, ஆணவமலமும் உயிரும்கூடின அன்றே, உள்ளனவாகி, மாயா கன்மங்களும் அநாதியே ஆகும். ஆகவே, **ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களும் அநாதியே உள்ளன** என்பது பெறப்படும்.

மாயை கன்மங்கள், இறைவனுக்கு உடைமைப் பொருளாய் இறைவனுக்குள் அடங்கி இருந்து, இறைவனால் உயிர்க்குக் கூட்டப்படுவதால், ஆகந்துகம் எனப்பட்டன. அகந்துகம் - இடையே வந்து கூடியன. மாயையின் காரியம் ஆகிய

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தனுகரணபுவன போகங்களும், அவற்றிற்கு விதிக்கப்பட்ட கன்மத்தின் காரியம் ஆகிய இன்பத்துன்பங்களும், இறைவன் ஆணையின் வண்ணமே வருதலால், மாயை கன்மங்கள் மட்டும்அல்லாமல், அவற்றின் காரியங்களும் இறைவனுக்கு உடைமை ஆயினவாறு அறியப்படும்.

'உடைமை' என்பதன் பொருள் உடையதாம் தன்மை என்பதாகும். உடையானுக்கு உரிமைப் பொருளாய் இருத்தலால், உடைமை எனப்பட்டது. **உரிமைப்பொருள் அறிவு உடையதும், அறிவு இல்லாததும் என இரு வகைப்படும்.** அவற்றுள் அறிவுடைப்பொருள் ஆகிய உடைமை, **அடிமை** என்றும், அறிவில்லாத பொருளாகிய உடைமை, **உடைமை** என்றும் பகுத்துக் கூறப்படும்.

இறைவனுக்கும் உயிருக்கும் உள்ள முக்கிய வேறுபாடு, இந்த அதிகரணத்தின் மூலம் அறியப்படுகிறது. அஃதாவது இறைவனுக்கு அநாதியே மலம்இல்லாமையினால், அந்தக் கரணங்களோடு கூடாமல் அறிவு நிகழும்: உயிருக்கு அநாதியே மலம் இருத்தலினால், கருவிகளோடு கூடியபொழுது அறிவு நிகழும்: அதுவும் சிற்றறிவு ஆகும்.

மாயா மலம், கன்ம மலம், இறைவனிடத்து அடங்கி இருந்தும்அவனைப் பந்திக்காவோ என்னும் தடை எழுவது இயல்பு, இவ்விரண்டும் இறைவனது உடைமைப் பொருள்கள். பாம்பினிடத்து அடங்கி இருக்கும் விடம், அஃது அதன் உடைமைப் பொருளாய் இருப்பதால், அந்தப் பாம்பைக் கொல்லாமையில் வைத்து,இத்தடைக்கு விடை காணலாம்.

ஆணவமலத்தின் இலக்கணம், சிறப்பு, பொது என இருவகைப்படும். அவற்றுள் சிறப்பு இலக்கணம், கேவலத்தில் உயிருக்கு அறியாமையைச் செய்வது ஆகும். பொது இலக்கணம் சகலத்தில் கருவிகளோடு கூடின இடத்து, விபரீத உணர்வைச் செய்வது. சிறப்பு இயல்பு என்பது தன்இயல்பு எனப்படும். கேவலத்தில் கருவிகள் இன்றித் தனித்து நின்று, உயிர்க்கு அறியாமையைச் செய்வதால், ஆணவத்திற்கு அது சிறப்பியல்பு எனப்பட்டது; சகலத்தில் கருவிகளோடு கூடி விபரீத உணர்வைச் செய்வதால், அது பொது இயல்பு எனப்பட்டது.

'விபரீத உணர்வு' என்பது ஒன்றைப் பிறிது ஒன்றாக அறிதல்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆகும்; கருவிகளோடு கூடிச் சாக்கிரம் முதலிய அவத்தைகள் நிகழும் பொழுது, தான் அல்லாத கருவிகளைத் தானாகக் கொண்டு, கண் கண்டதை நான் கண்டேன் என்றும், காது கேட்டதை நான் கேட்டேன் என்றும் அறிவதைப் போன்றதே, விபரீத உணர்வு ஆகும்.

ஏது

அதுதான் ஞானதிரோதகமாய், மறைத்துக் கொடு நிற்றலான்.

இதன் பொருள்:

ஆணவமலம், ஞானத்தின் தொழிலை நிகழ ஒட்டாது செய்வதாய், அந்த ஞானத்தை ''இல்லை'' என்னும்படி, மறைத்துக் கொண்டு நிற்பதால், 'இனி இந்த ஆன்மா சகசமலத்தினால் உணர்வு இன்று ' என மேற்கோள் கூறியது.

தெளிவுரை :

இல்லை என்று எண்ணும்படி மறைத்தலினால், அறிவு நிகழாமையே அன்றி அறிவு இல்லாமல் போகவில்லை; அந்நிலையில் நிகழாது இருந்த அறிவு, பின்பு கருவிகளோடு கூடி நிகழ்ந்தது என்பது பெறப்படுவதால், சற்காரிய வாதத்திற்கு முரண் இல்லை என்பது தெளிவாயிற்று. திரோதம், மறைப்பு என்பன ஒரு பொருட் சொற்கள். 'ஞானத் திரோதகம் ' என்பது, ஞானத்திற்கு மறைத்தலைச் செய்வது என்பது ஆகும்.

இந்த இடத்தில் ஒளியையும் இருளையும் குறித்துச் சிந்திக்க வேண்டி உள்ளது. **ஒளியும் இருளும்** முற்றிலும்மாறுபட்ட செயலை உடைய பொருள்கள். ஒன்று தொழிற்படும் பொழுது, மற்றொன்று தொழிற்படாமல் அடங்கி இருக்கும். தொழிற்பட்டது அடங்கிய போது, அடங்கியது தொழிற்படும். இவ்வாறே **ஞானமும் அஞ்ஞானமும்** முற்றிலும் மாறுபட்ட செயலை உடைய பொருள்கள் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். **ஞானம் இல்லாமையே அஞ்ஞானம் என்பது சற்காரிய வாதத்திற்குப் பொருந்தாது. ''ஞானம் நிகழாமையே அஞ்ஞானம் என்பது'' சைவ சித்தாந்தக் கொள்கை** என்பதைக் கருத்தில் கொள்க. இல்லாமை வேறு; நிகழாமை வேறு.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

(5) எடுத்துக்காட்டு வெண்பா

மாயா தநு விளக்கா மற்று உள்ளம் காணுதேல்
ஆயாதாம்ஒன்றை; அது அதுவாய் - வீயாத
வன்னி தனைத்தன்னுள் மறைத்து ஒன்றாம்காட்டம் போல்
தன்னை மலம்அன்று அணைதல் தான்.

(கொண்டு கூட்டு) உள்ளம் மாயா தனுவிளக்காக் காணுதேல், ஒன்றை ஆயாது; மற்று மலம் தன்னை அன்று அணைதல், அது அதுவாய் வீயாத வன்னிதனைத் தன்னுள் மறைத்து ஒன்றாம் காட்டம் போல்.

இதன் பொருள் :

உள்ளம் மாயா தனுவிளக்காக் காணுதேல் ஒன்றை ஆயாது- உயிர் மாயாகாரியம் ஆகிய உடம்பை விளக்காகக் கொண்டு விடயங்களைக் காணும்; உடம்பு ஆகிய விளக்கு இல்லை ஆயின்,' ஒரு விடயத்தையும் உயிர் அறிவது இல்லை. 'விளக்கு இல்லை ஆயின்' என்றதனால், இல்லாத காலமும் உண்டு என்பது பெறப்படும். உடம்பு இல்லாத காலத்து அறிவு நிகழ ஒட்டாமல் செய்வது ஆணவ மலம். **மற்று மலந்தன்னை அன்று அணைதல்** - சகசமலம் ஆகிய ஆணவ மலம் உயிரை அநாதியே பற்றி நிற்கும். அவ்வாறு பற்றி நிற்றல் எது போலும் என்றால், **அது அது ஆய் வீயாத வன்னிதனைத் தன்னுள் மறைத்து ஒன்றாம் காட்டம் போல்** - விறகு. கல், இரும்பு முதலியவற்றில், கடைவதற்கு முன்பு அக்கினி, அது அதுவாய்க் கேடு இன்றி நின்றும், கேடு இல்லாத அந்த அக்கினியை, விறகு முதலியன தம்முள் மறைத்து வைத்து அந்த அக்கினியோடு ஒன்றேயாய் நிற்பது போல் ஆகும்.

தெளிவுரை :

மாயை விளக்கு போன்றது ; ஆணவம், இருள் போன்றது. ஆணவம் உயிரை அநாதியே கூடி நிற்றல், அக்கினியை விறகு அநாதியே கூடி நிற்றல் போல் ஆகும்.

விளக்காய் நின்று விடயங்களை அறியும் வண்ணம், உயிருக்கு அறிவை விளக்குதல், மாயையின் செயல்;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

விடயங்களை அறிய ஒட்டாமல் அறிவைத் தடை செய்துகொண்டு நிற்றல், ஆணவமலத்தின் செயல். மாயையும் ஆணவமும் ஆகிய இவ்விரண்டும், இவ்வாறு முறையே ஒளியும் இருளும் போல மாறுபட்டு நிற்பன ஆகலான், **ஒளி போன்றது** ஆகிய மாயை, இருள் போன்றது ஆகிய ஆணவம் ஆகாது 'என்பது பெறப்பட்டது.

விறகு, தன்னுள் அக்கினியை மறைத்தல் எவ்வாறு என்றால், அக்கினி விறகின் உள் இருந்தும், இருப்பதாகத் தெரிய ஒட்டாது, இல்லை என்று சொல்லும்படி, அந்த அக்கினியைப் பொதிந்து கொண்டு, விறகே ஆய் நிற்றல் ஆகும். அக்கினி இருந்தும், அஃது இருப்பதாகத் தெரிய ஒட்டாமல், விறகு மறைத்து வைத்தல் போல, உயிர் இருந்தும், அஃது இருப்பதாகத் தெரிய ஒட்டாமல் ஆணவமலம் மறைத்து நிற்கும். விறகு ஆணவ மலத்திற்கு உவமை; அக்கினி உயிருக்கு உவமை.

விறகும் அக்கினியும் பொருளால் இரண்டே ஆயினும், ஒன்றே என்னும்படி அத்துவிதம் ஆதல்போல, ஆணவமும் உயிரும் பொருளால் இரண்டே ஆயினும், ஒன்றே என்னும்படி அத்துவிதமாய் நிற்கும். கடைதலினால், அக்கினி வெளிப்பட்டுத் தோன்றி, விறகைக் கெடுப்பதுபோலக், கருவிகளோடு கூடிச் சகலாவத்தை சுத்தாவத்தைகளை அடைந்து, உயிர் ஆணவ மலத்தைக் கெடுக்கும்.

அக்கினி தனித்து நிற்பது இன்றி, யாதானும் ஒன்றைப் பற்றி, அதுவதுவாய் நிற்பது போல, உயிர் தனித்து நிற்பது இன்றி, யாதானும் ஒன்றைப்பற்றி அதுவதுவாய் நிற்கும். இக்கருத்துப் பற்றியே உயிரை.

''வசித்திட வரும் வியாபி''

என்று சிவஞானசித்தியார் பேசுகின்றது. உயிர் ஆணவமலத்தோடு ஒன்றாய் அத்துவிதமாய் நிற்றலை

''ஆணவத்தோடுஅத்துவிதம் ஆனதுபோல்''

என்று தாயுமான சுவாமிகள் கூறியதனாலும் அறியலாம்.

மாயை கன்மங்கள் இறைவனுக்கு உடைமைப் பொருள் ஆதலால், அவற்றிற்கு இடம் இறைவன்; ஆணவத்திற்கு இடம் உயிர். ஆகவே, **இடத்தால்** ஆணவமலத்திற்கும், மாயை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கன்மங்களுக்கும் வேற்றுமை உண்டு என்பது பெறப்படும். மாயை கன்மங்கள் உயிரை அநாதியே கூடவில்லை; இடையே கூடின. எனவே, இவ்விரு வேறுவகைப் பொருள்களுக்கும் காலத்தாலும் வேற்றுமை உண்டு என்பது பெறப்படுகிறது.

ஆணவமலத்தின் இலக்கணம் பற்றிச் சிவஞானசித்தியாரில் (170) தெளிவாகக் காணலாம். சிவஞானபோதச் சிற்றுரையில், ஆணவமலத்தின் இயல்பைச் சிவஞான சுவாமிகள் கீழ்க்காணுமாறு கூறுகிறார்கள் :

1. உயிரின் அறிவை மறைக்கும் தனிப்பொருள்

2. அறியாமையை குணமாக உடையது

3. செம்பிற்குக் களிம்பு குற்றம் ஆவதுபோல் , உயிருக்குக் குற்றமாய், அநாதி பந்தமாய் இருப்பது

4. அறிவில்லாத சடமாய் இருப்பது

5. பலவாய் இருந்தால் நாசம் அடையும் ஆகலின், ஒன்றாய் (ஒரே பொருளாய்) இருப்பது.

6. விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னும் உயிர்ப் பாகுபாட்டிற்கு ஏதுவாய் இருப்பது

7. உயிர்கள் தோறும் தனித்தனி வேறுவேறு விதமாய் மறைத்து நின்று, நீங்க வேண்டிய காலத்தில் நீங்குவனவாகிய சத்திகள் பலப்பல உடையது.

8. உயிர்கள் கேவலம், சகலம், சுத்தம் என்னம் மூன்று அவத்தைகளை அடைவதற்கு மூலகாரணமாய் இருப்பது.

9. நித்தமாயும் வியாபகமாயும் இருப்பது.

10. வியாபகத் தன்மை உடைய உயிர், அணுத்தன்மையைப் பொருந்தும் வண்ணம் செய்தலினால் ஆணவம் என்னும் பெயர் உடையது.

11. பசுத்துவம், பசு நீகரம், மிருத்தியு, மூர்ச்சை, மலம், அஞ்சனம், அவித்தை, ஆவிருதி என்பன முதலான காரணக்குறிகளை உடையது.

பசுத்துவம்	-உயிருக்குப் பாசத்தன்மையைச் செய்தல்
பசு நீகரம்	-உயிரின் அறிவை மூடல்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மிருத்தியு	-உயிரைச் சீவிக்க ஒட்டாது செய்தல்
மூர்ச்சை	-மயங்கிக் கிடக்கச் செய்தல்
மலம்	-அசுத்தம் ஆக்கல்
அஞ்சனம்	-இருள் போல் நிற்றல்
அவித்தை	-அறியாமையைச் செய்தல்
ஆவிருதி	-மறைத்தல்

படலம் ஆகிய மாசு படர்ந்த கண், சூரியன் சந்தியில் நிற்பினும், படலத்தால் சூரியன் ஒளியை இழந்து, இருளில் அழுந்துமாறு போல, ஆணவ மலத்தால் பந்திக்கப்பட்ட உயிர், இறைவன் சந்நிதியில் அநாதியே நிற்பினும், படிமுறையாக அறிவிக்க அறியும்தன்மை உடையதாய், அநாதியே அறிவித்தால் அறியமாட்டாதாய், அவ்வாறு அறியமாட்டாமையினால், இறைவனால் உண்டாகும் அறிவை இழந்து, ஆணவ மலத்தினால் உண்டாகும் அறியாமையாய் அழுந்துதலின், ஆண்வமலம் உயிர்க்குப் பந்தம்ஆயிற்று.

அநாதியே மலத்தின் நீங்குதல், இறைவனுக்கு இயல்புஆயினும், அஃது இறைவன் வினையாய், அநாதி முத்தத் தன்மை என எண்குணங்களும் வைத்து எண்ணப்படுவது சிவாகமங்களுக்கு எல்லாம் ஒப்ப முடிந்தால் போல, **அநாதியே மலத்தைப் பற்றுதல் உயிர்க்கு இயல்பு ஆயினும், அஃது உயிரின் வினையாய், உயிர்க் குற்றங்களுள் வைத்து எண்ணப்படுவது** என்பதும், அந்தச் சிவாக மக்களுக்கு எல்லாம் ஒப்பமுடிந்தது. இவ்வாறு உயிர்க்கு அநாதியே ஏற்பட்ட குற்றத்தைச் சிற்றுரையில் சிவஞான சுவாமிகள் தெளிவாக அருளிச் செய்துள்ளார்கள்.

அநாதியே மலத்தைப்பற்றுதல் ஆகிய உயிர்க்குற்றமே, மூலகன்மம் எனப்படும். படவே, கன்ம மலமும் அநாதியே உள்ளது என்பது பெறப்பட்டது. இவ்வுண்மையைச் சிவஞான சித்தியார் - 129

'கன்ம மூலம் காட்டிக் காமிய மலமாய் நிற்கும்'' என்று தெளிவுறுத்துகிறது.

''அநாதி'' என்பது, ஆதி இல்லாது, ஆதி என்பது, காலத்தால் வரையறுக்கப்படுவது; ஆகவே, அநாதி என்பது, **காலத்தால்**

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வரையறுக்கப்படாதது; ஆணவமலம் வியாபகப் பொருள் ஆகலின், அஃது **இடத்தாலும்** வரையறுக்கப்படாதது ஆகும்.

விஞ்ஞானகலர், பிரளயாகலர் சகலர் என்னும் மூவகை ஆன்மாக்களைப் பற்றிய விளக்கத்தைச் சிவஞான சித்தியார் எட்டாம் சூத்திரத் தெளிவுரையில் காணலாம்.

அநாதியே உயிர்க்கு ஏற்பட்ட அறியாமையை இறைவன் ஏன் அநாதியே போக்க வில்லை என்னும் கேள்வி எழலாம். இதற்கு விடை வருமாறு: தந்தை ஒருவன் தன் மகனுக்குப் , பிறந்த அன்றே தன் உரிமையைக் கொடுத்தால், அந்த உரிமையை ஏற்று வகிக்க முடியாமல் மகன் இருப்பது போல, அநாதியே ஆணவமலத்தைப் பற்றி நின்ற உயிரும் ·எளிய நிலையில் இருந்ததனாலேயே ஆகும்.

எல்லா வல்லமையும் உடைய இறைவன், உயிரின் ஆணவமலம்பற்றை அநாதியே போக்காதது, அவனது வல்லமைக்கு **இழுக்கு அல்லவா** என்று வினவலாம். இதற்கு விடைவருமாறு. இயற்கைக்கு மாறாகச் செய்தல் வல்லபத்துக்கு இலக்கணம் அன்று. உயிர்க்கு வேண்டுவனவற்றை முட்டு இன்றிச் செய்தலே , வல்லபுத்திற்கு இலக்கணம் ஆகும். ஆணவமலத்தின் ஆற்றல் சிறிது சிறிதாகக் குறையும் ஆயின், அதற்கேற்ப ஆன்ம அறிவு சிறிது சிறிதாக வளரும். எனவே, வல்லமைக்கு இழுக்கு இல்லை என்பது பெறப்பட்டது.

அநாதியே மலத்தின் நீங்குதல், இறைவனின் வினை என்று கூறியதற்கு விளக்கம் வருமாறு: குணம், வினையை உடையது ஆதலால், குணம் வினை என்று கூறப்படும். எடுத்துக்காட்டாக அக்கினியின் குணம் சூடு; சூடு சுடுதல்தொழிலை உடையது; ஆதலால் **சூட்டை உடையது அக்கினி** என்றும் சுடுதல், **தொழிலை உடையது அக்கினி** என்றும் வழங்கி வருகின்றன. சுடுதல் தொழிலை உடையதுஅக்கினி என்னும் பொழுது, சுடுதல் **அக்கினியின் வினை** ஆயிற்று. அவ்வினை, அக்கினி உள்ள அன்றே அநாதியாய், அக்கினியின் இடத்தில் உள்ளது; இவ்வாறே, **அநாதியே மலம் இல்லாமை ஆகிய அநாதி முத்தத் தன்மை, இறைவனுக்குக் குணம்.** மலம் இல்லாமை ஆகிய குணம், மலத்தின் நீங்குதல் ஆகிய தொழிலை உடையது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எனவே. மலத்தின் நீங்குதலை உடையவன் இறைவன் என்னும் பொழுது, **நீங்குதல் முதல்வன் வினை** ஆயிற்று.

இது போலவே, அநாதியே மலத்தைப் பற்றுதல் உயிரின் வினை எனப்படும். ஆனால் **மலம் உயிருக்குக் குணம் அன்று;** அவ்வாறாயின் குணத்தையே வினைபோலக் கூறிய, இறைவன் இலக்கணத்தோடு மட்டும் அஃது எவ்வாறு பொருந்தும் என்னும் தடை எழும். அதற்கு விடை வருமாறு: **உயிருக்குக் குணம், அறிவு; குற்றம், பற்றும் தன்மை.** இது செம்பிற்குக் குணம் பிரகாசமும், குற்றம் களிம்பைப்பற்றுதலும் போல் ஆகும். இஃது **அநாதி செயற்கை.** குற்றம் என்பது குணத்திற்கு எதிர்மறை யாதலால், இறைவனுடைய எண்குணங்களுக்கு எதிர்மறையான எட்டும், உயிரின் குற்றம் ஆகும். அவற்றுள் பற்றுதல் ஆகிய குற்றம், பற்றுதல் தொழிலை உடையது.

ஆதலால் **பற்றும் தன்மை உடையது உயிர், பற்றுதல் தொழிலை உடையது உயிர்** என வழங்கப்படும். பற்றுதல், என்றதனால், பற்றப்படும் பொருள் உண்டு என்பது, தானே பெறப்படும். பொருள் இல்லையேல் பற்றுதல் தொழிலும் இல்லை. ஆகவே, பற்றுதல் தொழில் ஆகிய குற்றமும், பற்றப்படும் பொருள் ஆகிய **மலமும், அநாதியே உள்ளனவாய், அநாதியே மலத்தைப் பற்றுதல், உயிரின் வினையாய் உயிரின் குற்றம் என்றாயிற்று.** இஃது இயல்பாகவே பாசங்களின் நீங்குதல் ஆகிய இறைவனின் குணத்திற்கு எதிர்மறை ஆகிய குற்றம் ஆகும். திருக்குறளில் ''பற்றற்றான்'' என்றதற்குப் பொருள், இயல்பாகவே பாசங்களில் நீங்கி நிற்கும் இறைவன் என்பதாகும்.

. உயிர்க்கு மலம் குற்றம், குணம் அன்று என்று கூறுவதற்குக் காரணம், **மலம் உயிரின் வேறு ஆகிய ஒரு பொருள்** என்பதும் இங்குச் சிந்திப்பதற்கு உரியது.

இந்த அதிகரணத்தோடு வைத்துச் சிந்திப்பதற்குரிய சித்தியார்ப் பாடல்கள் வருமாறு:

	பாடல் எண்	தொடக்கச் சொற்கள்
சித்தியார்	**173**	**-பருதியை முகில் மறைப்ப.**
,,	**174**	**-போத காரியம் மறைத்து.**

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

,,	175	-புருடன்தன் குணம் அவித்தை
சிவப்பிரகாசம்	37	-புகலும் மலம் ஒழிதற்கு

நான்காம் சூத்திரம் - மூன்றாம் அதிகரணம்
மேற்கோள்

இனி இவ்வான்மாச் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதமாய் உள்ள பஞ்ச அவத்தினனாய் நிற்கும் என்றது.

இதன் பொருள் :

அந்தக் கரணங்களோடு கூடிய ஆன்மாச் சகசமலத்தினால், அறிவு தொழிற்படாது இருந்தமையால், அவ் அந்தக் கரணங்களும் ஆன்மாவும், மந்திரியும் அரசனும் போல் நிற்கின்றன; ஆதலால், மந்திரி முதலிய படைகளுடன் உலாப்போன அரசன், தன் மாளிகைக்குள் செல்லும் பொழுது, வாசல்தோறும் நிறுத்த வேண்டியவர்களை நிறுத்திக் காவலும் வைத்து, அந்தப்புரத்தில்செல்லுமாறு போல, தத்துவங்களைக் கூடிப் பிரியும் முறையில், சாக்கரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதமாய் உள்ள ஐந்து அவத்தை உடையவனாய், ஆன்மா நிற்பன்.

தெளிவுரை :

இருளில் அகப்பட்ட கண், விளக்கோடு கூடிய பொழுது, விடயங்களைக் காண்டல் ஆகிய ஒன்றே அன்றி வேறு வேறு அவத்தைப்படுவது இல்லை; அதுபோல, ஆணவமலத்தில் அகப்பட்ட உயிர், கருவிகளோடு கூடிய பொழுது, ஒரு தன்மையாய் அறிவதே பொருத்தம்ஆகும். அவ்வாறின்றி, ஐந்து நிலைகளை அடையும் என்பதையே இந்த மேற்கோள் கூறுகின்றது. மேற்கோளில் சொல்லப்பட்ட அரசன், உயிருக்கு உவமை; அந்தக்கரணம் அமைச்சருக்கு உவமை, இந்திரியம் முதலியன பிற பரிசனங்களுக்கு உவமை.

ஏது

அதுதான் மல சொரூபத்தின் மறைந்து, அருப

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சொரூபியாய் நிற்றலான்.

இதன்பொருள் :

உயிர், தான் மலவடிவில் மறைப்புண்ட பொழுது, அரு உடம்பாகிய தத்துவ வடிவாய் நிற்பதால், அந்தத் தத்துவங்கள் தொழிற்படும் நிலைவேறுபாடு பற்றி, இனி இந்த ஆன்மா, நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படக்கமாய் உள்ள ஐந்து நிலையினை உடையவனாய் நிற்கும் என்று மேற்கோள் கூறிற்று.

தெளிவுரை :

உயிர் வியாபகப் பொருள் ; ஆயினும், இறைவன்போல் சருவவியாபகம் இன்றிச், சார்ந்த பொருள் அளவில் வியாபித்து நிற்கும். **குணத்தின் நிறைவே குணி, உயிரின் அறிவு தங்கின இடமே உயிர்க்கு இருப்பிடம்,** உயிர் அந்தந்த அவத்தையில் நிற்கும் கருவிகளோடு கூடியும், பிறிதொன்றைக் கூடாமலும், அதன் அறிவு இருக்கின்ற இடமே உயிர்க்கு இடம் ஆகலின், கருவிகளோடு வியாபித்தல் உயிர்க்கு உண்டு என்பது பெறப்படும். உயிர் ஒவ்வொரு அவத்தையோடும் பொருந்துவதால் வியாபகம் ஆதலும், ஒரு அவத்தையைப் பொருந்தும் பொழுது, பிறிதொரு அவத்தையைப் பொருந்தாது; ஆதலினால் ஏகதேச வியாபகம் ஆதலும் உயிருக்கு உண்டு என்பது பெறப்படும்.

(6) எடுத்துக்காட்டு வெண்பா

ஒன்று அணையா மூலத்து; உயிர் அணையும் நாபியினில்
சென்று அணையும் சித்தம் இதயத்தின் - மன்ற ஏய்
ஐ ஐந்தாம் நன்னுதலின்; கண்டத்தின் வாக்காதி
மெய்யாதி விட்டு அகன்று வேறு.

இதன் பொருள் :

ஒன்று அணையா மூலத்து -துரியாதீத நிலை ஆகிய மூலாதாரத்தில், ஆன்மா ஒன்றையும் அறியாமல் விளக்கம் இன்றிக்கிடப்பன்; **உயிர் அணையும் நாபியினில்** - துரிய நிலை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆகிய நாபித் தானத்தில், பிராணவாயுவைப் பொருந்தி நிற்கும்; **சென்று அணையும் சித்தம் இதயத்தில்** - அந்த நிலையை விட்டு நீங்கிச் சென்று சுழுத்தி நிலை ஆகிய இதயத் தானத்தில், சித்தத்தைக் கூடும்; **மன்றவே ஐ ஐந்தாம் கண்டத்து** - நிச்சயமாக சொப்பன நிலை ஆகிய கண்டத்தானத்தில், இருபத்தைந்து கருவிகளுடன் நிற்கும்; **நல் நுதலில் வாக்கு ஆதி மெய் ஆதி ஆம்** - சாக்கர நிலை ஆகிய நல்ல நெற்றியிலே, வாக்கு முதலிய செயற்கருவிகள் ஐந்தும், மெய் முதலிய அறிகருவிகள் ஐந்தும் ஆகிய பத்துடன் (சொப்பனத்தில் உள்ள இருபத்தைந்தும் கூட்ட) முப்பத்தைந்து கருவிகளுடன் நிற்கும். **விட்டு அகன்று வேறு** - உணர்த்தும் முறையில் கூடி நின்ற சிவம், சத்தி முதலிய சுத்த தத்துவங்கள் ஐந்தையும், காலம், நியதி, முதலிய வித்தியாதத்துவங்கள் ஆறையும், பிருதிவி, அப்பு முதலிய பஞ்ச பூதங்களையும் **விட்டு நீங்கி, உயிர் ஐந்தவத்தை உறும்.**

தெளிவுரை :

இந்த வெண்பா, சாக்கிரம் முதலிய ஐந்து அவத்தைகளிலும் உயிரோடு கூடி நிற்கும் கருவிகளைக் குறித்துப்பேசுகின்றது, அதன் விபரம் வருமாறு :

	ஐந்தவத்தை	தொழிற்படும் கருவிகள்
1	சாக்திரத்தானம்	ஞானேந்திரியம் ஐந்து
	ஆகிய புருவமத்தி	கன் மேந்திரியம் ஐந்து
	(இலாடதானம்)	சத்தாதி விடயம் ஐந்து.
		வசனாதி விடயம் ஐந்து
		பிராணாதி வாயு பத்து
		அந்தக் கரணம் நான்கு
		புருடன் . . . . ஒன்று
		ஆக முப்பத்தைந்து கருவிகள்.
2.	சொப்பனத் தானம்	சத்தாதி விடயம் ஐந்து
	ஆகிய கண்டம்	வசனாதி விடயம் ஐந்து

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பிராணாதி வாயு பத்து
அந்தக் கரணம் நான்கு
புருடன் . . . . ஒன்று
ஆகஇருபத்தைந்து கருவிகள்.

3. சுழுத்தித் தானம் ஆகிய இருதயம்	பிராணன், சித்தம், புருடன் ஆகிய மூன்று கருவிகள்
4. துரியத் தானம் ஆகியநாபி	பிராணன், புருடன் என்னும் இரண்டு கருவிகள்
5. துரியாதீதத் தானம் ஆகிய மூலாதாரம்	புருடன் ஒன்றே ஆகும்.

சத்தாதி தன் மாத்திரை வேறு; சத்தாதி விடயம்வேறு; பெயர் ஒற்றுமையால் இரண்டும் ஒன்று என எண்ணக்கூடாது. தன் மாத்திரை, பூதங்களின் தோற்றத்திற்குக் காரணமாய் உள்ளது; விடயம் பூதங்களின் குணமாய் உள்ளது. தன் மாத்திரை அகப்பூதம் எனவும் சூக்கும பூதம் எனவும் கூறப்படும்.

சைவசித்தாந்தத்தில் தத்துவங்கள் முப்பத்து ஆறும். தாத்துவிகங்கள் அறுபதும் ஆகத் தொண்ணூற்று ஆறு கருவிகள் பேசப்படுகின்றன. இவற்றுள், சிவதத்துவம் ஐந்தும் வித்தியா தத்துவம் ஏழனுள் புருடன் நீங்கிய கலாதி த்ததுவம் ஆறும் ஆகப் பதினொரு தத்துவங்களும் அவத்தைக்கு ஏது ஆகாமையின், இப்பதினொன்று நீங்கிய எண்பத்தைந்து கருவிகளிலே வைத்து, ஐந்தவத்தை நிகழ்வதைக் குறித்து, இனிக் காண்போம்.

இந்த எண்பத்தைந்து கருவிகளுள் சாக்கிரத்தில் மேற்கூறியவாறு முப்பத்தைந்து கருவிகள் மட்டுமே தொழிற்படுகின்றன. ஆக ஐந்தவத்தையில் தொழிற்படாமல் நிற்கும் எஞ்சிய ஐம்பது கருவிகள் வருமாறு:

பிருதிவியின் கூறு ஐந்து, அப்புவின் கூறு ஐந்து, தேயுவின் கூறு ஐந்து, ஆகாயத்தின் கூறு பத்து, அகங்காரத்தின் கூறு மூன்று மனத்தின் கூறு ஐந்து, குணத்தின் கூறு மூன்று, வாக்கின் கூறு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நான்கு - ஆக நாற்பது கருவிகளும் பூதங்கள் ஐந்து, தன்மாத்திரைகள் ஐந்து - ஆகப் பத்துக் கருவிகளும் கூடிய ஐம்பது கருவிகள். (இவை என்னனென்ன என்பதை மைய வெளியீடு தடை விடை நூலில் காண்க) இந்த ஐம்பது கருவிகளும் கீழ்நோக்கிய சாக்கிரத் தானத்தில் தமது ஆற்றல் மடங்கி நிற்பதால், வினைக்கு ஈடாகத் தொழிற்படாது ஒழிகின்றன.

கலாதிகளோடு கூடிய உயிரே புருடத்தத்துவம் ஆதலாலும், அவத்தைக்கு ஏதுவாக இருப்பது புருடத்தத்துவம் புருடத்தத்துவம் ஆவதற்கு ஏதுவாய் இருப்பது கலாதிகள் ஆதலாலும், கலாதி தத்துவம் ஆறும், அவத்தைக்கு ஏது ஆதல் இல்லை. சிவதத்துவம், கலாதி தத்துவங்களோடு கூடிய புருடன் தொழிற்படுவதற்கு ஏதுவாய் இருப்பதே அன்றித், தானே தொழிலுக்கு ஏதுவாக இருப்பது இல்லை; எனவே, சிவதத்துவமும் அவத்தைக்கு ஏது ஆகவில்லை. இவ்வாறு பதினொரு கருவிகளும் ஐந்தவத்தையில் இடம் பெறவில்லை.

கீழ்நோக்கிய சாக்கிரம் தானத்தில் முப்பத்தைந்து கருவிகள் தொழிற்படும் என்று கூறப்படுவதால், எல்லாக் கருவிம் ெ ாழிற்படும் சாக்கிரம் ஒன்று உண்டு என்பது பெறப்படும்; ப வே, கீழ்நோக்கிய ெ சாக்கிரம் மேல்நோக்கிய சாக்கிரம், இரண்டும் நோக்காத சாக்கிரம் எனச் சாக்கிரம்மூன்று வகைப்படும், **அவை வருமாறு:**

கீழ் நோக்கிய சாக்கிரம் என்பது, சொப்பனம் முதலிய அவத்தைக்கு உரியது ஆகும். அஃதாவது, புறத் தொழிலை விட்டு, நித்திரைக்குச் செல்ல எண்ணிப் படுத்து இருக்கும் பொழுது, நித்திரை வருவதற்கு முன்புள்ள சாக்கிரம் ஆகும். (Drowsy stage) இந்த சாக்கிரத்தில், தொழிற் பாட்டிற்கு உரியனவாய், மேற்கூறிய ஐம்பது கருவிகளும், தமது ஆற்றல் மடங்கிக் கிடக்க, நித்திரை வரும் வரையில்முப்பத்தைந்து கருவிகளும் தொழிற்படும். என்றாலும் ஞானேந்திரிய கன்மேந்திரியங்களின் தொழில், புறத்து விடயங்களை அனுபவிக்கும்போது நிகழ்வதுபோல் அன்றி, மெதுவாய் நிகழும். ஏனைய இருபத்தைந்து கருவிகளின் தொழிலில் வேற்றுமை கிடையாது. இந்தச் சாக்கிரம் இலாடத்தானத்திலிருந்து. கண்டம் முதலாகக் கீழ்நோக்குதற்கு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உரியதாய் நிற்பதால் கீழ் நோக்கிய சாக்கிரம் எனப்பட்டது. இந்தச் சாக்கிரம் முதலான ஐந்து அவத்தைகளைக் **''கீழால் அவத்தை''** என்பர்.

மேல் நோக்கிய சாக்கிரம் என்பது இருதயம், கண்டம், நாக்கின் அடி, இலாடம், பிரமரந்திரம்என்னும் ஐந்தனுள், இருதயத் தானத்தில் யோக சாதனமாய், மேல் நோக்குதற்கு உரியதாய் நிகழ்வது ஆகும். இந்த ஐந்து அவத்தைகளையும் **''மேலால் அவத்தை''** என்பர்.

இரண்டும் நோக்காத சாக்கிரம் என்பது, புறத்து விடயங்களை அனுபவித்தற்கு உரியதாய், இலாடத்தில் நிகழ்வது ஆகும். இதில் எல்லாக் கருவிகளும் (அஃதாவது எண்பத்து ஐந்து கருவிகளும்) தொழிற்படும். கீழ்நோக்கிய சாக்கிரத்திற்கும், இந்தச் சாக்கிரத்திற்கும் தானம் ஒன்றே ஆகும். (அத்தானம் இலாடத்தானம் ஆகிய புருவமத்தி). இதிலும் ஐந்து அவத்தை உண்டு. இவற்றை **''மத்தியால் அவத்தை''** என்பர். அரசன் அத்தாணி மண்டபத்தை (அரசு இருக்கை இருக்கும் மண்டபம்) பிரதானமாக வைத்துக் கொண்டே, உலாப்போதலும் பின்பு அந்த மண்டபத்திற்கு வந்தே உட்புகுதலும் போல, உயிர் இலாடத்ததானத்தில் நின்றே, விடயங்களில் செல்லுதலும், அந்தத் தானத்தில் நின்றே உள்ளே புகுதலும் செய்யும். எனவே, கீழால் அவத்தை மத்தியால் அவத்தை ஆகிய இரண்டுக்கும் தானம் ஒன்று ஆயிற்று. இந்த ஐந்து அவத்தைகளைப் பற்றிய செய்திகள் இன்னும் விரிவாகச் சிவஞான சித்தியாரில் காணலாம்.

(7) எடுத்துக்காட்டு வெண்பா

இலாடத்தே சாக்கிரத்தை எய்திய உள்ளம்
இலாடத்தே ஐந்து அவத்தை எய்தும் - இலாடத்தே
அவ்அவ இந்திரியத்து அத்துறைகள் கண்டு, அதுவே
அவ்அவற்றின் நீங்கல், அது ஆங்கு;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இதன் பொருள் :

இலாடத்தே சாக்கிரத்தை எய்திய உள்ளம் - இலாடத்தானத்தில் நின்றும் நீங்கிக், கண்டம், இருதயம், நாபி, மூலாதாரம் ஆகிய தானங்களில் அவத்தைப்பட்டுக் கீழ் நோக்கிச் சென்ற பின்பு, மீண்டும் மூலாதாரத்தில் நின்றும்நீங்கி, மேல் நோக்கி ஒவ்வொரு தானத்திலும், அந்தந்த தானத்திற்கு உரிய அவத்தையை அடைந்து, இலாடத்தானத்தில் உணர்த்தும் முறைமையினை உடைய சாக்கிரத்தைக் கூடிய உயிர், **இலாடத்தே ஐந்து அவத்தை ஏய்தும்** - அவ்வாறு உணர்த்தும் முறைமை சாக்கரத்துச் சாக்கிரம் சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் ஆகிய ஐந்து அவத்தையை அறியும்; இலாடத்தே **அவ்அவ் இந்திரியத்து அத்துறைகள் கண்டு** அந்த அவத்தைகள் ஆவன: உணர்த்தும் முறைமைச் சாக்கிரம் ஆகிய அந்த இலாடத்தானத்தில், அந்த அந்த இந்திரியங்களினால், அந்த அந்த விடயங்களை உணர்ந்து, **அதுவே** - உணர்ந்த அப்போது, அப்பொழுதே, **அவ்அவற்றின் நீங்கல்** - அந்தந்த விடயங்களில் நின்று நீங்குதல் ஆகும்; **அது ஆங்கு** - இனி அடுத்துக் கூறப்படும் சுத்தாவத்தையிலும்இவ்வாறே சாக்கிரம்முதலாக ஐந்து அவத்தைப்படும்.

தெளிவுரை :

உணர்த்தும் முறைமைச் சாக்கிரம் பற்றிய விளக்கம்: கீழ் நோக்கிச் செல்லும் காலத்தும், இலாடத்தில் சாக்கிர அவத்தை நிகழும்; மேல் நோக்கி மீளும் காலத்தும் இலாடத்தில் சாக்கிர அவத்தை நிகழும். ஆயினும் கீழ் நோக்கிய சாக்கிரம் விடயங்களை உணர்த்தாது; மேல் நோக்கி மீளும் காலத்து உண்டாகும் சாக்கிரம் விடயங்களை உணர்த்தும். ஆதலால் இதனை 'உணர்த்தும் முறைமைச் சாக்கிரம்' என்றார், இதனை 'பிரேரக அவத்தை' என்றும் கூறுவர் 'பிரேரகம்' என்பது செலுத்துதல் ஆகும். ஆகவே, கீழ் நோக்கிய சாக்கிரம், நித்திரைக்குச் செல்லும் போது நிகழும்; மீளும் காலத்து உண்டாகும் சாக்கிரம். நித்திரை நீங்கிய பொழுது நிகழும். இவ்விரண்டு சாக்கிரத்திற்கும் இடம் ஒன்றே ஆகும்.

''உணர்ந்த அப்போது அப்பொழுதே நீங்குவது'' என்பது, விடயங்களைக் கண்ட கண்ட அந்தப் பொழுதிலேயே அயர்த்து

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

விடுதலைக் குறிக்கும். இவ்வாறு அயர்த்து விடுவதாலேயே ஐந்து அவத்தைகளும் நிகழ்கின்றன. அயர்த்து விடுதல் என்பது சோர்வு உறுதல் ஆகும். இந்த நுட்பத்தை அறிந்து கொள்ளுதற்குச் சிவஞான சுவாமிகள் ''தூலாருந்ததி நியாயம் பற்றிக் கைப்பற்றிக் கைப்பொருளை வீழ்த்தித் தெளிதல்'' என்று விளக்கியருள்கிறார்கள்.

''**தூலாருந்ததி நியாயம்**'' என்பது, தூலம் ஆகவுள்ள பெரிய நட்சத்திரத்தைக் காட்டிச் சூக்குமமாயுள்ள அருந்ததி நட்சத்திரத்தைக் காட்டுதல் ஆகும். இவ்வாறே கைப்பொருளை வீழ்த்தித் தெளிதல் ஆகிய தூலத்தில், ஐந்து அவத்தை உண்டு என்பதைக் காட்டிச் சாக்கிரத்தில் சாக்கிரம் முதலிய ஐந்தவத்தை உண்டு என்று உணர்த்துதல், தூலாருந்த நியாயம் எனப்படும்.

இந்த **ஐந்தவத்தை எவ்வாறு நிகழ்கிறது** என்றால், தன் கையில் இருந்த ஒரு பொருள், தன்னை அறியாமல் விழுந்த பிறகு, அது விழுந்தது என உணர்ந்து, பிராணவாயு இயக்கம் இன்றி மூர்ச்சித்தல் **துரியாதீதம்** ஆகும்; அந்த மூர்ச்சை தெளிந்து சற்றே பிராணவாயு இயங்குதல் **துரியம்** ஆகும்; எந்த இடத்தில் அப்பொருள் விழுந்ததோ என எண்ணுதல் **சுழுத்தி** ஆகும்; விழுந்த இடம் இதுவோ அதுவோ என எண்ணுதல் **சொப்பனம்**ஆகும்; விழுந்த இடத்தை நிச்சயித்தலும் கண்டு எடுத்தலும்**சாக்கிரம்**ஆகும். இவ்வாறே சுக துக்கங்களைக் கேட்ட அளவிலேயே திடுக்கிட்டுப் பிராணவாயு இயங்காமல் மூர்ச்சித்து மயங்கி நிற்றல் **துரியாதீதம்,** சுக துக்கம் தோன்றாமல் பெருமூச்செறிந்து நிற்றல் **துரியம்;** சுக துக்கத்தில் மூழ்கி நிற்றல் **சுழுத்தி;** சுகதுக்கம் வந்த விதத்தை நினைந்து மனத்தில் சஞ்சரித்து நிற்றல் **சொப்பனம்;** சுகதுக்கங்களை அனுபவித்தல் **சாக்கிரம்.**

இந்த அதிகரணம்தத்துவ சொரூபியாய் நிற்றலினால் உணடாகும் ஐந்து அவத்தையின் இயல்பு கூறுவதற்கு எழுந்தது. எனவே, சுத்தத்தில் உள்ள ஐந்தவத்தை பற்றிக் கூறுவதற்கு இதில் இடமில்லை. ஏனெனில் இந்த அதிகரணத்தில் கூறப்படும் ஐந்தவத்தை, தத்துவங்களின் நீக்கத்தால் உண்டாவது. அது பற்றிப் பின்பு கூறப்படும்.

இந்த அதிகரணத்தில் உள்ள இரண்டு வெண்பாக்களிலும் மூவகை அவத்தைகள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் மேல்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நோக்கிய ஐந்தவத்தை, **சகலத்தில் சுத்தம்** எனப்படும்; மத்தியில் நிகழும் ஐந்தவத்தை, **சகலத்தில் சகலம்** எனப்படும்; கீழ்நோக்கிய ஐந்தவத்தை **சகலத்தில் கேவலம்** எனப்படும். இவற்றிலிருந்து உயிர்க்குக் கேவலம், சகலம் , சுத்தம் என்னும் **மூல அவத்தைகள் மூன்று** உண்டு என்பது பெறப்படும். இம்மூன்றனுள், உயிர் கருவிகளோடு கூடாமல் , தனித்து நிற்பது ஆகிய தன் உண்மை எனப்படும் சேகவலத்தின் இயல்பு, ''சகசமலத்து உணராது'' எனக் கூறியதால், இந்தச் சூத்திரத்தில் பெறப்பட்டது. உயிர்க்குள்ள சகலத்தின் இயல்பு ஐந்தாம் சூத்திரத்திலும், சுத்தத்தின் இயல்பு ஆறாம் சூத்திரத்திலும் கூறப்படும்.

இந்த அதிகரணத்தோடு வைத்துச் சிந்திப்பதற்குரிய சிவஞான சித்தியார்ப் பாடல்கள் வருமாறு:

பாடல் எண்		தொடக்கச் சொற்கள்
சித்தியார்ப் பாடல்:		
221	-	புருடனே அறிவன் ஆகில்
222	-	படைகொடு பவனி போதும்
223	-	சாக்கிரம் முப்பத்தைந்து
287	-	சாக்கிரத்தே அதீதத்தை
228	-	அறிவிலன் அமூர்த்தன் நித்தன்
229	-	உருவினைக் கொண்டு போக
230	-	இருவினைச் செயல்கள் ஒப்பில்
195	-	ஆன்மாவின் வடிவு தானும்
208	-	எங்கும்தான் வியாபியாய் நின்று
210	-	அசித்தரு வியாபகம் போல்
211	-	மாயையின் வயிற்றில் மன்னி
215	-	சூக்கும தேகியாகி
சிவப்பிரகாசப் பாடல் :		
62	-	நீக்கம் இலது அதீத மாசு
80	-	பொற்புறு கருவி யாவும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இந்தச் சூத்திரத்தின் தொகைப் பொருள்

1. உயிர் அந்தக்கரணங்களில் ஒன்று அன்று.

2. ஆணவமலத்தோடு கூடியதால் ஏற்பட்ட அறியாமையை நீக்குதல் பொருட்டு, உயிர் அந்தக்கரணங்களைக் கூடிற்று.

3. அவ்வாறு கூடிய பொழுது, உயிர் ஐந்து அவத்தைகளை அடைந்தது. ஐந்தவத்தை அடைதலே உயிர்க்குப் பொது இயல்பு ஆகும்.

4. இந்திரியங்களை நோக்க, அந்தக்கரணங்கள்அறிவுடையன; ஆயினும் உயிரை நோக்கவும்அவை தம்மை நோக்கவும் அறிவுடையன அல்ல. அந்தக் கரணங்கள் உயிர்க்குக் கருவியாய் இருப்பதால், அந்தக்கரணம் உயிரன்று.

5. உயிர் அந்தக்கரணங்களைக் கூடிய பொழுது, இருள் நீங்கப் பெறுகிறது; அந்நிலையில் உயிர் பொருளை ஒரேவிதமாய் அறியாமல், வெவ்வேறு விதமாய் ஐந்து அவத்தைப்பட்டு அறியும்

6. கருவிகள் கூடிப் பிரிந்து, இல்லையாகின்ற முறையில் சாக்கிரம்முதலாக வெவ்வேறு அவத்தை உயிர்க்கு நிகழும்.

7. இந்தச் சூத்திரம், உயிர்க்குள்ள மூல அவத்தைகள் ஆகிய கேவலம், சகலம், சுத்தம் என்னும் மூன்றனுள். கேவலத்தில் உயிர் தனித்து நிற்கும் நிலை பற்றிக் கூறியது.

ஐந்தாம் சூத்திரம்

தளை இயல்பு

விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண்மூக்கு
அளந்து அறிந்து அறியா; ஆங்கு அவை போலத்
தாம் தம் உணர்வின் தமி அருள்,
காந்தம் கண்ட பசாசத்து அவையே

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இதன் பொருள் :

விளம்பிய உள்ளத்து மூன்றாம் நான்காம் சூத்திரங்களினால், கருவிகளின் வேறாயும், கருவிகளோடு கூடி அவத்தைப் படும் எனவும், கூறி முடிக்கப் பெற்ற உயிரினால், **மெய் வாய் கண் மூக்கு** - மெய் , வாய், கண், மூக்கு, (செவி) என்று கூறப்படும் இந்திரியங்கள், **அளந்து அறிந்து அறியா** - தத்தமக்கு உரிய விடயங்களை, இஃது இன்னது என்று அளவிட்டு அறியும்; ஆயினும், விடயங்களை அறியும் தம்மையும், தம்மை இடமாகக் கொண்டு நின்று, விடயங்களில் தம்மைச் செலுத்துகின்ற உயிரையும் அறியமாட்டா; **ஆங்கு அவை போல்** - அவ்வாறு அறிய மாட்டாத அந்த இந்திரியங்கள் போல், **தம் உணர்வின் தமி அருள்** - உயிர்களும் தமது அறிவிற்குத் துணை ஆகிய இறைவனுடைய சிற்சத்தியால், மேலைச் சூத்திரத்தில் கூறி முடித்தவாறு கீழால் அவத்தையில் படும். அஞ்சவத்தை, புருவ நடுவில் படும் அஞ்சவத்தைகளில் நின்று,வினைப்பயன்களை அறிந்து அனுபவிக்கும்; ஆயினும், அனுபவிக்கும் தம்மையும், தம்மை விடயங்களில் செலுத்துகின்ற திருவருளையும் அறியமாட்டாவாம். **அவையே** - இந்திரியங்களைச் செலுத்தும் உயிர், அந்த இந்திரியங்களால் அறியப்படும் விடயங்களால், வேற்றுமைப்படுமாறு போல, உயிரைச் செலுத்தும் முதல்வன் திருவருளும், அவ்வுயிரால் அறியப்படும் விடயங்களால் வேற்றுமைப் படுமோ எனின் படாது; எதனால் எனின், **காந்தம் கண்ட பசாசத்து** - இரும்பு காந்தத்தின் சந்நிதி மாத்திரையில் இழுத்துக் கொள்ளப்படுமாறு போல, காரணத்தால் அன்றிச் சங்கற்ப மாத்திரத்தால், உயிரை அதிட்டித்து நிற்கும் முதல்வன் சந்நிதி மாத்திரையால், அவ்வுயிர்கள் செலுத்தப் படுதலினாலேயே ஆகும்.

தெளிவுரை:

''**அதிட்டித்தல்** ''என்பது, கர்த்தா ஒன்றின்இடமாக நிற்றல் ஆகும். அது சரீரத்தோடு கூடி நிற்றல், சங்ற்ப மாத்திரையாக நிற்றல் என இருவகைப்படும். சரீரத்தோடு கூடி நின்றால், அதிட்டிக்கப்பட்ட பொருள் அசையும் பொழுது, தானும் அசைய வேண்டிவரும்; சங்கற்பமாத்திரையாகநின்றால், அப்பொருள் அசைந்தாலும்தான் அசைய வேண்டுவதில்லை.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இதனை ஓர் உவமையால் விளக்கலாம், ஓர் அரசன் ஒரு காரியத்ததைத் தான் நேரே செய்தால், விகாரி ஆவான்; மந்திரி முதலாயினாரை சங்கற்ப மாத்திரையால் அதிட்டித்து, அவரைக் கொண்டு செய்விப்பானாயின். அவர் அடையும் விகாரத்தைத் தான் அடையான். இவ்வாறே, உயிர்களிடத்து இறைவன் சங்கற்ப மாத்திரையால் கர்த்தாவாய் இருக்கின்றான். ஆதலால், உயிர்கள் அடையும் வேறுபாடு, முதல்வனை அடையாது, முதல்வன் அளவில்லாத ஆற்றல் உடைய வியாபகன் ஆகலின், சங்கற்ப மாத்திரையால் எவற்றையும் அவனால் செலுத்த முடியும் என்பது ஆயிற்று.

'செவி' என்ற சொல் சூத்திரத்தில் இல்லை; மெய் வாய் கண் மூக்குக்கு, இனம் ஆகிய அந்தச் சொல் எஞ்சி நின்றமையால், அது சொல்லெச்சமாக வருவிக்கப்பட்டது.

''அருட்சத்தி'' என்பது, பராசத்தி, திரோதான சத்தி, இச்சா சத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி என ஐவகைப்படும், அவற்றுள் **பராசத்தி** என்பது, பொதுவாக உயிர்களுக்கு அருள் செய்ய வேண்டும் என நிற்பது. **திரோதான சத்தி** என்பது, மலம் பக்குவம் ஆதல் பொருட்டுப் பஞ்சக் கிருத்தியம் செய்ய வேண்டும் என நிற்பது; இந்நிலை கன்மத்திற்கு ஏற்றவாறு, உயிர்களைச் செலுத்தவும், போகங்களைத் தோற்றுவிக்கவும் எண்ணியது என்று ஆகி, அவற்றிற்கு வேண்டுவனவற்றைச் சிறப்பாக அறியாமலும் அறிவிக்காமலும் நிற்றலால், திரோதானம் என்றவாறு ஆயிற்று.

இச்சாத்தி என்பது, சிறப்பாக உயிர்களுக்கு அருள் செய்ய, வேண்டும் என நிற்பது; அஃதாவது பக்குவமான உயிரை அறிந்து அருள் பாலிக்க எண்ணுவது. **'ஞானசத்தி'** என்பது, செய்ய வேண்டுவனவற்றை அறிவது. **கிரியாசத்தி** என்பது, செய்ய வேண்டுவனவற்றைச் செய்வது. இந்த சத்திகளும் இறைவனுக்குப் பிரிப்பில்லாத சத்திகளே ஆகும். அவற்றுள் **பராசத்தி ஒன்றே சொரூபம்,** ஏனைய எல்லாம், அந்தப் பராசத்தியின் வியாபார பேதமான **தடத்தம்,** இஃது எது போல எனின், சுடுதல் சத்தி ஒன்றே, அக்கினியினிடத்தில் சொரூபமாய் இருந்து, அச்சத்தியின் வியாபார பேதத்தால், நீறு செய்தல், பாகம் செய்தல், வற்றச் செய்தல் முதலியன, தடத்தம் ஆயினாற் போல் ஆகும். அருட்சத்தி, திருவருள், அருளாற்றல் என்பன

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஒருபொருட் சொற்கள். இந்தச் சூத்திரத்தில், 'ஏற்புழிக் கோடல்' என்னும் உத்தியால், அருள் என்பது திரோதான சத்தியைக் குறித்து நின்றது.

இந்தச் சூத்திரம் இரண்டு அதிகரணங்களை உடையது அவை வருமாறு;

முதல் அதிகரணம்: **விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண் மூக்கு அளந்து அறிந்து அறியா என்றது.**

இரண்டாவது அதிகரணம்: **ஆங்கு அவை போலத் தாம்தம் உணர்வின் தமி அருள், காந்தம் கண்ட பசாசத்து அவையே என்றது.**

ஐந்தாம் சூத்திரம் - முதல் அதிகரணம் மேற்கோள்

ஈண்டு ஐயுணர்வுகள் ஆன்மாவால் உணரும் என்றது.

இதன் பொருள்:

உயிரின் உணர்வு நிகழ்வதற்கு ஏது ஆகிய ஐம்பொறிகள், உயிரால் விடயங்களை அறியும்.

தெளிவுரை:

உயிர், அறிவுடைப் பொருள் ஆயினும், தனித்து நின்று ஒன்றையும் அறியாது; யாதானும் ஒன்றைப் பற்றி நின்றே அறியும். இஃது எது போல எனின், கண், ஒளியுடைப் பொருள் ஆயினும், தானே காணுமாறு இன்றிச், சூரியன் முதலிய பிற ஒளிகளின் துணைக்கொண்டே. காணுமாறு போல் ஆகும். இந்த மேற்கோள், கருவிகள் ஆன்மாவினால் அறியும் என்பதைத் தெளிவுறுத்த எழுந்தது.

ஏது

அவற்றினான் ஆன்மா ஒற்றித்துக் காணின் அல்லது, அவை ஒன்றையும் விடயியா ஆகலான்.

இதன் பொருள்:

மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் அந்த

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஐம்பொறிகளோடும், உயிர் ஒற்றுமைப்பட்டு நின்று அறிந்தால் அல்லது, அந்த இந்திரியங்கள் ஒரு விடயத்தையும் அறிய மாட்டாவாகும். ஆகவே, இந்த அதிகரணத்தில், ஐயுணர்வுகள் ஆன்மாவால் உணரும் என மேற்கோள் கூறியது.

தெளிவுரை:

'அவற்றினான்' என்னும் சொல்லுக்கு, அந்த **ஐம்பொறிகளோடும்'** என்று பொருள் கூறப்பட்டதற்குக் காரணம், உடன் நிகழ்ச்சிப் பொருளில் அஃது அமைந்திருப்பதாலேயே ஆகும். **'உடன் நிகழ்ச்சி'** என்பது, ஒன்று நிகழும்பொழுதே பிறிதொன்றும் உடனாக நிகழ்தல் ஆகும். எடுத்துக்காட்டாக, ''தூங்குகையான் ஓங்கு நடைய'' என்ற இடத்தில், நடத்தல் ஆகிய காலின் தொழில் கைக்கும் யானைக்கும் ஒரே சமயத்தில் நிகழ்தலைக் கொண்டு அறியலாம். 'தூங்குகை' என்பது துதிக்கை.

(1) எடுத்துக்காட்டு வெண்பா

ஐம்பொறியை ஆண்டு அங்கு அரசாய் உளம் நிற்ப
ஐம்பொறிகள் உள்ளம் அறியாவாம் - ஐம்பொறியில்
காணுதேல் காணுது காணும் உளம் காணுதேல்
காணு கண் கேளா செவி.

இதன்பொருள்:

அரசு ஆய் - அரசன் வீற்றிருப்பதற்குரிய மண்டபத்தில், அரசன் இருந்து தன் ஆணையின் கீழ் அடக்கி, அதிகாரம் செய்பவரை அவரவர்க்குரிய அதிகாரங்களை நடத்தும்படி செய்து, உலகத்தை ஆளும் முறைமை போல, **உளம் ஐம்பொறியை ஆண்டு அங்கு நிற்ப** - உயிர் சாக்கிரத்தில் இருத்தற்குரிய இலாடத்தானம் ஆகிய புருவ நடுவில் நின்று, ஐந்து இந்திரியங்களும், அந்தந்த இந்திரியங்களுக்கு உரிய விடயங்களை அறியும்படி செய்யும்; **ஐம்பொறிகள் உள்ளம் அறியாவாம்** - அரசனால் ஏவப்பட்ட அதிகாரிகள். அரசன் ஏவிய கருமத்தை மட்டும் செய்தலே அன்றி, அதிகமாய்ச் செய்ய

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முடியாதவாறு போல, உயிரினால் ஏவப்பட்ட அந்த ஐம்பொறிகள், ஏவியவாறு விடயங்களை அறிதலே அன்றி உயிரை அறியமாட்டா ஆயின; அவ்வாறாயின், ஐம்பொறிகள் உயிரை இன்றி, விடயங்களை அறிய முடியாது. ஆயினும், உயிர் ஐம்பொறிகள் இன்றியும் விடயங்களை அறிதல் கூடுமோ என்றால், கூடாது; அஃது எது போல எனின், **ஐம் பொறியில் காணுதேல், காணுது காணும் உளம், காணுதேல் காணு கண், கேளா செவி** - அரசரை இன்றி அமைச்சர் ஒரு காரியத்தையும் செய்ய முடியாமையும், அமைச்சரை இன்றி அரசர் ஒரு காரியத்தையும் செய்ய முடியாமையும் போல் ஆகும்; ஆகவே, உயிரை இன்றி ஐம்பொறிகள் விடயங்களை அறியமாட்டா; ஐம்பொறியை இன்றி உயிர் விடயங்களை அறிய மாட்டாது.

தெளிவுரை :

அரசன் உயிருக்கு உவமை; அமைச்சர் இந்திரியத்திற்கு உவமை. நான்காம் சூத்திரத்தில் அந்தக்கரணங்களை, அமைச்சர் பேர்ல் எனக் கூறி, இந்தச் சூத்திர்தில் ஐம்பொறிகளை அமைச்சர் என்று கூறியது முரணுகாதோ என்றால் முரண் ஆகாது. ஏனென்றால், அந்தக்கரணங்களும் இந்திரியங்களும் உயிர்க்குக் கருவியாகும் என்பதில் வேற்றுமை இல்லாததால் ஆகும்

இந்த அதிகரணத்தோடு வைத்து சிந்திப்பதற்குரிய சிவஞான சித்தியார்ப் பாடல்கள் வருமாறு :

பாடல் எண்	தொடக்கச் சொற்கள்
196	அறிவு இச்சை செயல்கள்
231	பொறிபுலன்கரணம் எல்லாம்.

ஐந்தாம் சூத்திரம் - இரண்டாம் அதிகரணம்
மேற்கோள்

இனி இதுவும் தமது மூதலாலே உணரும் என்றது.

இதன் பொருள் :

இந்த ஆன்மாவும்இறைவனாலே அறிவிக்க அறியும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை :

சூத்திரத்தில் 'தமி' என்று கூறாமல், 'தம் உணர்வின் தமி' என்றதால், அறிவிக்க அறியும் தன்மை, தமக்கு ஒரு முதலை உடைய பொருட்கே அன்றி ஏனைப் பொருட்கு இல்லை என்பது பெறப்படும். அஃதாவது, அறிவிக்க அறியும் தன்மை உடைய உயிர்க்கு, இறைவனை அன்றி வேறு எவரும் இல்லை ஆகலின், இறைவன் அறிவிக்க உயிர் அறியும் என்பது தெளிவாயிற்று.

ஏது

இவ்வான்மாத் தன்னாலே உணரும் இந்திரியங்களைப் போலத், தானும் தன்னை உணராது நிற்றலான்.

இதன் பொருள் :

இந்திரியங்கள் சடம்; உயிர் சித்து இரண்டும் வெவ்வேறு பொருள்கள். எனவே, இந்திரிய்ங்களைப் போல் உயிரைக்கூற முடியாது; ஆயினும், உயிர்களால் விடயங்களை அறியும் இந்திரியங்கள் தம்மையும் .உயிரையும் அறியமாட்டா. அவ்வாறே, முதல்வனால் விடயங்களை அறியும் உயிரும், தன்னையும் முதல்வனையும் அறியாது நிற்கும். ஆதலால், ''அறியாது நிற்கும் அந்த ஒப்புமை பற்றி'' இதுவும் தமது முதலாலே உணரும் என மேற்கோள் கூறியாது.

(2) எடுத்துக்காட்டு வெண்பா

மன்னுசிவன் சந்நிதியின் மற்று உலகம் சேட்டித்தது
என்னும் மறையின் இயல் மறந்தாய்;- சொன்ன சிவன்
கண்ணு உளம் வினையால் கண்டு அறிந்து நிற்கும்காண்;
எண்ணுன் சிவன் அசத்தை இன்று.

(கொண்டு கூட்டு) மன்னு சிவன் சந்நிதியின், உலகம் சேட்டித்தது என்னும் மறையின் இயல் மறந்தாய்; உளம் சொன்ன சிவன் கண்ணு வினையர்ல் கண்டு அறிந்து நிற்கும் காண்; இன்று

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

(ஆதலால்) சிவன் அசத்தை எண்ணான்.

இதன் பொருள்

மன்னு சிவன் சந்நிதியின், உலகம் சேட்டித்தது என்னும் மறையின் இயல் மறந்தாய் - (உயிர் முதல்வனால் அறியும் என்பதற்கு, இந்த அதிகரணத்தில், இந்திரியங்கள் உயிரால் அறிவதை எடுத்துக் காட்டிய அனுமானப் பிராமணமே அன்றி) நிலைபெற்ற முதல்வனுடைய சந்நிதியில் உயிர்கள் தத்தம் தொழிலைச் செய்யும் எனக்கூறுவது ஆகிய ஆகமப் பிரமாணத்தையும் அறியாது பிணங்குகின்ற பேதாய், **உளம் சொன்ன சிவன் கண்ணு வினையால் கண்டு அறிந்து நிற்கும் காண்** - இந்திரியங்கள் தமக்கு என ஓர் காரணம் இன்றி, உயிரின் பொருட்டே அறியும்; அவற்றைப்போல் அன்றி, வேதத்துள் கூறப்படும் இறைவன், உயிர்க்குத் துணையாகி நிற்க உயிர்தான் செய்த வினைக்கு ஈடாக, ஒன்றனை அறிந்து நிற்கும்; இந்திரியங்கள் உயிரின் பொருட்டு அறிதலும், உயிர் தன் பொருட்டு அறிதலும் ஆகிய இவ்வேறுபாடு அறிவாயாக.

இன்று (ஆகலான்) சிவன் அசத்தை எண்ணான் - இறைவன் துணையாக நிற்பதால், இறைவனும் . உயிர்போல இன்பத்துன்பங்களை அனுபவிப்பானோ எனின், துணையாக நிற்பினும், தன் சந்நிதியில் அசத்து ஆகிய உலகம் எல்லாம்சூனியம்ஆதலால், அசத்து என்னும் அமங்கலம் இல்லாத மங்கல வடிவினன் ஆகிய இறைவன், அசத்து ஆகிய அமங்கலத்தைச் சுட்டி அறிந்து அனுபவிக்கும் உயிர் போல, அனுபவியான்.

தெளிவுரை :

இந்த வெண்பாவில் , **மன்னு சிவன், சொன்ன சிவன், எண்ணான் சிவன்,** எனக் கூறியது ஒரு சிவனையே ஆகும். இவ்வாறு கூறியதற்குப் பொருள் வருமாறு.

மன்னு சிவன்:

நிலைபெற்ற சிவன் என்று பொருள். உயிர்கள் நிலைபெறாமல் இறந்து பிறப்பதால், இன்பதுன்பம் அடைகின்றன. சிவபெருமான், அவ்வாறின்றி, என்றும் இன்ப வடிவினன் ஆகலின், அவனை அடைந்தாலே எவர்க்கும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நிலைத்த இன்பம் உண்டாகும். நிலைபேறில்லாத உலகங்கள் தொழிற்படுவதற்கு, நிலைபேறுடைய பொருளின் துணை வேண்டும். எனவே 'மன்னுசிவன்' என்றார்.

சொன்ன சிவன் :

வேதத்துள் புகழ்ந்து சொன்ன சிவன் என்பது பொருள். தன்னின் மேம்பட்டது ஒன்றைப் புகழ்தலே அன்றித், தன்னோடு ஒத்ததையாவது கீழ்ப்பட்டதையாவது, புகழ்வது எவ்விடத்தும் இல்லை. மேம்பட்டது ஆவது, தன்னையும் அடக்கி நிற்றல் ஆகும். வேதத்தைச் செய்தவன் இறைவன்; எனவே வேதம் முதல்வனுள் அடங்குவது. இறைவன் முற்றுணர்வு உடையவன்; உயிர் சிற்றறிவு உடையது. உயிர் அறிதற்கு இறைவன் துணை வேண்டும். எனவே 'வேதம் சொன்ன சிவன்' எனப்பட்டது.

எண்ணுன் சிவன்:

அசத்து ஆகிய உலகத்தை எண்ணுன் இறைவன் என்பது இதற்குப் பொருள்; அசத்து எல்லாம் மாயையின் காரியம். அவை இறைவன் முன் முனைத்துத் தோன்றா; அதற்குக் காரணம், முனைத்துத் தோன்றவதால் பக்குவப்பட வேண்டிய ஆணவமலம் அவனுக்கு இல்லாமையே ஆகும். ஆணவமலம் இல்லாமையால், எவற்றையும் வேறாய் நின்று சுட்டி அறிதல் இன்றி உடனாய் நின்று ஒருசேர அறியும் இயல்புடையவன் என்பது பெறப்பட்டது. எனவே இறைவன் உயிரைப் போன்று, உலகத்தை எண்ணுன் எனப்பட்டது, இவ்வாறு, சிவபெருமான் பேரின்ப காரணன், முற்றுணர்வினன், தூயதன்மையன் என்னும் முப்பெரும் பெயர்க்குரியனாவன்.

இந்த வெண்பாவில், உலகம் என்றது உயிர்களைக் குறிக்கும். மற்று - அசை.

''சந்நிதி'' என்பதன் பொருள், சிவனுடைய வல்லபம் ஆகிய சிவசத்தி, உயிர்களின் பொர்ருட்டுச் செய்ய வேண்டுவதாகிய, அந்தந்தக் க்ாரியங்களில் நோக்குதல் ஆகிய சங்கற்பமே ஆகும்; ஆகவே '**சந்நிதி**' என்பதற்குச் **சத்தி சங்கற்பம்** என்பதே பொருள் இறைவன் எங்கும் வியாபகன் ஆகலின், எல்லா இடத்தும் எக்காலத்தும் அவன் சந்நிதியே ஆகும். ஆகவே **''இறைவன் சந்நிதியை அடைதல்''** என்பதற்குப் பொருள், ''திருவருள் நோக்கத்தைப் பெறுதல்'' என்பதே ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இந்த வெண்பா, உயிர் இறைவனருளாலேயே உணரும் என்பதை எடுத்துக் காட்டியது.

(3) எடுத்துக்காட்டு வெண்பா

வெய்யோன் ஒளியில் ஒடுங்கி விளங்காது;
வெய்யோனை ஆகாத மீன்போல - மெய் அவனில்
கண்டு கேட்டு உண்டுஉயிர்த்து உற்றறியும் ஐம்புலனைக்
கண்டு உடனாய் மன்னுதலைக் காண்.

இதன் பொருள் :

வெய்யோன் ஒளியில் ஒடுங்கி விளங்காது, வெய்யோன் ஆகாத மீன்போல - நட்சத்திரங்கள் ஒளியுடையனவாய் விளங்கித் தோன்றும்பொழுது, சூரியன் ஒளியின் வேறாய் விளங்கித் தோன்றாமலும், சூரியனே ஆகாமலும், அச்சூரியன் ஒளியில் அடங்கி விளங்கித் தோன்றுமாறு போல, **கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலனை மெய் அவனில் கண்டு** - உயிர், கண்டும் கேட்டும் உண்டும் முகந்தும் தீண்டியும் அறியப்படும் ஐவகை விடயங்களை, மெய்ப்பொருள் ஆகிய இறைவனால் உணர்ந்து, உணரும் பொழுது **உடனாய் மன்னுதலைக் காண்** இறைவனின் வேறு ஆதலும் ஒன்று ஆதலும் இன்றி, அவ்விரண்டிற்கும் பொதுவாய், இறைவனில் அடங்கி. இறைவனோடு உடனாய் நிலைபெற்று இருக்கும் என்பதை அறிவாயாக.

தெளிவுரை:

சூரியன் இறைவனுக்கு உவமை; நட்சத்திரங்கள் உயிர்களுக்கு உவமை. நட்சத்திரம், சந்திரன் முதலியவற்றிற்கு இயற்கை ஒளி கிடையாது; அவற்றின் ஒளி எல்லாம், சூரியன் ஒளியால் உண்டாகிய ஒளியே ஆகும் என்பது வேத நூல் துணிபு. எனவே, இங்கு நட்சத்திரம் உயிருக்கு உவமை ஆயிற்று.

இந்த வெண்பா உயிர்இறைவனோடு நின்று உணரும் முறைமை விளக்கிக் கூறியது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

(4) எடுத்துக்காட்டு வெண்பா

அருள் உண்டாம்ஈசற்கு அதுசத்தி அன்றே
அருளும் அவன் அன்றி இல்லை - அருள் இன்று
அவன் அன்றே இல்லை; அருட்கண்ணோர் கண்ணுக்கு
இரவிபோல் நிற்கும் அரன் ஏய்ந்து,

(கொண்டு கூட்டு) - அருள் ஈசற்கு அன்றே உண்டாம்; அது சத்தி; அருளும் அவன் அன்றி இல்லை; அவன் அருள் இன்று இல்லை;அருட்கண்ணோர்கண்ணுக்கு இரவிபோல் ஏய்ந்து நிற்கும் அரன்.

இதன்பொருள்:

அருள் ஈசற்கு அன்றே உண்டாம் - உயிர்கட்கு அநாதியே கூடியிருந்த,ஆணவமலத்தின்தடையால்ஏற்பட்ட பசுத்தன்மயை நீக்கிப் பிரிப்பின்றி நிற்கும் சிவமாம் தன்மையை விளக்க வேண்டும் என்ற இரக்கம் இறைவனுக்கு அநாதியே உள்ளது, **அது சத்தி** - அந்த இரக்கம்இறைவனைவிட வேறு பொருள்ன்று; இறைவனுக்கு உளதாகிய வல்லமையே ஆகும். **அருளும் அவன் அன்றி இல்லை; அவன் அருள் அன்று இல்லை** - இரக்கம் குணமும், இறைவன் குணியும் ஆதலால், அந்த இரக்கமும் இறைவனை இன்றித் தனித்து நில்லாது; இறைவனும் அந்த இரக்கத்தை இன்றித் தனித்து நில்லாதவன் ஆகின்றான்.

அருட் கண்ணோர் கண்ணுக்கு இரவிபோல், ஏய்ந்து நிற்கும் அரன் - இவ்வாறு நிற்றல் எது போல எனின், சூரியன் தன் ஒளியோடு பிரிப்பின்றி நிற்றல் போல் ஆகும். மாசில்லாத கண்ணுக்கு ஒளியோடு பிரிப்பின்றி நிற்கும் சூரியன், விளங்கித்தோன்றுமாறு போல, ஆணவமலம்இல்லாத அருட்கண்ணை உடையார் கண்ணுக்கு, அருளோடு பிரிப்பின்றி நிற்கும் இறைவன், விளங்கித் தோன்றுவான், ஆதலால் தன் வயத்தன் ஆகிய இறைவன், விகாரம் இன்றி நின்றே, தனது சத்தி சங்கற்ப மாத்திரையினால் அனைத்தும் செய்தல் கூடும்.

தெளிவுரை:

உயிர்க்கு உணர்த்தும் வேறுபாட்டால், இறைவன் விகாரி

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆகான் என்பதை இந்த வெண்பா எடுத்துக் காட்டுகிறது.

இறைவனைத் 'தன் வயத்தன்' என்று உரையில் குறிப்பிட்டதற்கு விளக்கம் வருமாறு: கண்ணுக்கு ஒளி விளங்குவதற்குச் சூரியன் ஒளியின் துணை வேண்டும்; அதுபோல சூரியனுக்கு ஒளி விளங்குவதற்குப் பிறிது ஒன்றின் துணை வேண்டாம். உயிர் அறிவதற்கு இறைவன் அறிவிக்க வேண்டுவது போல், இறைவன் அறிவதற்குப் பிறிது- ஒன்று அறிவிக்க வேண்டாமையின், இறைவன் தன்வயத்தன் எனப்படுகிறான்.

கண், வேறு வேறு விதமாய் அறிந்து விகாரப் படுவது போலச் சூரியன் விகாரப்படான். அதுபோல, உயிர்வேறு வேறு விதமாய் அறிந்து விகாரப்பட்டாலும், அறிவிக்கும் இறைவனும் விகாரப்படான். சூரியன் விகாரம் இன்றி நின்றாலும், சூரியன் ஒளியின் துணையால், கண் வேறு வேறு விதமாய் அறிகிறது; அதுபோல, இறைவன் விகாரம் இன்றி நிற்பினும், அவன் அருள் அறிவிப்பதால் உயிர் வேறு வேறு விதமாய் அறிகிறது. எனவே இறைவன் தனது சத்தி சங்கற்ப மாத்திரையால் அனைத்தும் செய்தல் கூடும் எனப்பட்டது.

அருளும் இறைவனும் பிரிப்பின்றி நிற்கும் இயல்பு, சைவ சித்தாந்த நெறி உணர்ந்தார்க்கு அன்றி, ஏனையோருக்கு விளங்காது. எவ்வாறு எனின், சித்தாந்தம் அல்லாத பிறநெறியில் நிற்போர் எல்லாம், இறையருளைப் பெற்றுடையாரையே தெய்வமாகக் கொண்டு வழிபடுவர், அந்தத் தெய்வங்கள் எல்லாம் உயிர் வருக்கம் ஆகலின், உற்பத்தி நாசங்களை உடையன ஆகும். ஆண் தன்மையும் பெண் தன்மையும் ஆன இரு தன்மைகளை உடைய ஒரு வடிவம் என்றும் உற்பத்தி ஆதல் இல்லை. ஆதலால் சித்தாந்தம் அல்லாத பிற நெறியில் நிற்பார் வணங்கும் தெய்வங்கள் எல்லாம் 'சத்தி வேறு, கடவுள் வேறு' ஆக இருவடிவங்களாகவே காணப்படுகின்றன.

சித்தாந்த சைவர்கள் வணங்கும் தெய்வம், அதிகார மூர்த்திகளாகப் பல இருப்பினும், தலைமையான மகாலிங்கம் சத்தியும் சிவமும் ஆன ஒரு வடிவமாகவே இருக்கின்றது. பீடம் சத்தி; லிங்கம் சிவம். இஃதன்றி, அதிகார மூர்த்திகளுள்ளும், பாதி உமையும் பாதி சிவமும் ஆன ஒரு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வடிவம் இருக்கின்றது. இதனை அர்த்த நாரீசுவர வடிவம் என்பர். ஆகவே, சத்தியும் சிவமும் பிரியாது, கலந்து நிற்கும் நிலையை, அறிதற்கு உரியார் சித்தாந்த சைவரே ஆவர் என்பது நன்கு விளங்கும்.

சித்தாந்த சைவர் அறிவதும், சூரியனையும் ஒளியையும்அவ்வொளியினால் அறிவது போலச், சிவசத்தியினாலேயே அச்சத்தியையும்அதனோடு பிரிப்பின்றி நிற்கும் சிவனையும்அறிவர். இக்கருத்துப் பற்றியே

''அவன் அருளாலே அவன்தாள் வணங்கி''

என்று அருளிச்செய்தார் மணிவாசகப் பெருந்தகை. எனவே, சிவமும் சத்தியும் பிரிப்பின்றி நிற்கம் நிலை சித்தாந்த சைவருக்கே விளங்கும்; ஏனையோருக்கு விளங்காது. இவ்வுண்மையையே வெண்பா, ''அருட்கண்ணுர் கண்ணுக்கு'' என்று ஓதியது.

இந்த அதிகரணத்தோடு சிந்திக்ககத்ததக்க சித்தியார் பாடல்கள் வருமாறு:

பாடல் எண்		தொடக்கச் சொற்கள்
232	-	இறைவனே அறிவிப்பானேல்
233	-	அறிந்திடும் ஆன்மா ஒன்றை
234	-	கருவியால் பொருளால் காட்டால்
236	-	இறைவன் தன் சந்நிதிக் கண்
237	-	உலகமே உருவமாக
238	-	தெரிந்து கொண்டொரோ
239	-	அருளது சத்தியாகும்

இந்தச் சூத்திரத்தின் தொகைப் பொருள்

1. இந்திரியங்கள், உயிரால் விடயங்களை அறிந்தும், அந்த இந்திரியங்கள்தம்மையும் உயிரையும் அறியமட்டா. அவ்வாறே உயிர், இறைவனுடைய மறைப்பாற்றலால், ஐந்தவத்தைப்பட்டும், அவ்வுயிர் தன்னையும் இறைவனையும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அறியாது.

2. இறைவனால் உயிர் அவ்வாறு அறிவது, காந்தத்தின் முன் இரும்பு தொழிற்படுவதைப் போன்றது ஆகும்; ஆகவே இறைவன் விகாரி ஆதல் இல்லை.

3. இந்திரியங்கள் விடயங்களை உணர்வது. ஆன்மாவினாலேயே அன்றிப், புத்தி தத்துவத்தினால் அன்று. புத்திதத்துவம் சடம்; எனவே, இந்திரியங்கள் புத்தியைக் கொண்டு விடயங்களை அறிய முடியாது.

4. தமக்கு ஒரு முதல் உடைய பொருளுக்குப் பிற பொருளின் துணை வேண்டுமே அன்றித், தமக்கு ஒரு முதல் இல்லாத பொருளுக்குப் பிற பொருளின் துணை வேண்டாம். உயிர் தமக்கு முதல்ல உடையது; இறைவன் தனக்கு வேறு முதல் இல்லாதவன். எனவே உயிர் இறைவனர்லேயே அறியும்.

5. உயிர் அறியும் காலத்து, இறைவனோடு உடனாய் அடங்கி நின்று அறியும்; வேறுபாடு காரணமாக, இறைவன் விகாரப்படான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆறாம் சூத்திரம்

இறை இயல்பு

**உணர் உரு அசத்து எனின் உணராது இன்மையின்
இரு திறன் அல்லது சிவசத்தாம் என
இரண்டு வகையின் இசைக்கும் மன்னுலகே**

(கொண்டு கூட்டு) உணர் உரு எனின் அசத்து; உணராது (எனின்) இன்மை; இருதிறன் அல்லது, இரண்டுவகையின் சிவசத்து ஆம் என இசைக்கும் மன்னுலகே.

இதன் பொருள்:

உணர் உரு எனின் - ஐந்தாம் சூத்திரத்தில் கூறிய தம் உணர்வின் தமி ஆகிய முதற்பொருள், பிரமாணங்களால் அறியப்படுமோ, படாதோ என்னும் ஐயம் நிகழும் அல்லவா? அது பிரமாணங்களால் அறியப்படும் தன்மை உடையது என்றால், **அசத்து** - பிரமாணங்களால் அறியப்படும் பிரபஞ்சம், அழிவது போல், முதற்பொருளும் அழிபொருள் ஆகிய அசத்து ஆகும். **உணராது எனின்** இனி அஃது எந்த வகையாலும் அறியப்படாத தன்மை உடையது என்றால், **இன்மையின்** - அவ்வாறு அறியப்படாத முயற்கொம்பு சூனியம் ஆதல்போல, முதற்பொருளும் சூனியம் ஆகும். ஆகவே, **இருதிறன் அல்லது** - அறியப்படுதல், அறியப்படாமை ஆகிய இந்த இரு பகுதியும் அன்றி, ஒரு வகையால் அறியப்படாமையும், ஒருவகையால அறியப்படுதலும் ஆகிய, **இரண்டு வகையின் சிவசத்தாம் என** - இருவகை இயல்பினை உடைய 'சிவசத்து' முதற்பொருள் ஆகும் என்று **இசைக்கும் மன் உலகே** - உண்மை அறிவில் நிலைபெற்ற உயர்ந்தோர் கூறுவர்.

தெளிவுரை :

'சிவசத்து' ஆகிய முதல்வன், ஒருவாற்றான் அறியப்படாமை ஆவது, பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் அறியப்படாமை ஆகும்; ஒருவாற்றான் அறியப்படுதல் ஆவது, 'சிவஞானம்' ஒன்றினாலேயே அறியப்படுதல் ஆகும், இந்த

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மூவகை ஞானங்களின் இயல்பு, ஒன்பதாம் சூத்திரத்தில் கூறப்படும்,

பாசஞானத்தாலும் பசு ஞானத்தாலும் அறியப்படுவது சடப்பொருளே ஆகும்; ஆகவே, அவ்விரண்டினாலும் அறியப்படாத பொருள் ''சிவம்'' ஆதலும், பதிஞானம் ஆகிய சிவஞானத்தால் அறயப்படும் பொருள் அநித்தம் ஆகாமையால், ''சத்து'' ஆதலும் பெறப்படும். **'சிவசத்து'** என்பது சிவம் ஆகிய சத்து என்னும் பொருளை உடையது.

பதி, பசு, பாசம் என்னும் மூன்றும் நித்தப்பொருள் ஆகலின், மூன்றும் சத்தே ஆகும். அம்மூன்றனுள் பதியும் பசுவும் சித்துப் பொருள்; பாசம் சடப்பொருள். பசு தனித்து நிற்பது இல்லை; பாசத்தையேனும் பதியையேனும் சார்ந்தே நிற்கும். எனவே, பாசம் **'சடசத்து'** எனவும், பதி **'சிவசத்து'** எனவும், பசு **'சிற்சடசத்து'** எனவும் பெயர் பெறும். பெற்றாலும், மூன்றுசத்தும் சடசத்து, சிவசத்து என்னும் இரண்டனுள் அடங்கும். அவ்விரண்டனுள் சடசத்தினின்றும் நீக்குதற்குச் 'சிவசத்து' என்றார்.

'சிவ' என்னும் சொல்லில், **'சி'** கரம் எவற்றையும் தன்னுள் அடக்கிக் கடந்து நிற்றலையும், **'வ'** கரம் எவற்றுடனும் கலந்து நிற்றலையும் குறிக்கும். குறிக்கவே, கடந்தும்கலந்தும் நிற்பது வியாபகம் எனப்படும். வியாபகம் சடமாகிய ஆகாயத்திற்கும் மலத்திற்கும் இருப்பதால் அந்த வியாபகத்தைப் போல் அன்றி, சிவம் அறிவுடையது ஆதலின், சிவம் என்பது சித்து என்னும் பொருளைக் குறிக்கும். குறிக்கவே, சிவசத்து என்பது, **'சித்துச்சத்து'** என்பது ஆகும், உயிரும் சித்துச் சத்து எனப்படும்; ஆயினும், உயிர் தனித்து நிற்க மாட்டாத குறை உடையது. ஆதலால், 'சித்துச்சத்து' என்பது உயிர்க்குச் சிறப்பாகச் செல்லாது. செல்லாதாகவே, குறையே துன்பத்திற்கு ஏது ஆகலின். குறையில்லாத இந்தச் சித்துச்சத்தே இன்பப் பொருள் ஆகும். ஆகவே, பாசத்திற்குச் சத்துத் தன்மை மட்டுமே உண்டு; பசுவுக்குச்சித்துச் சத்துத் தன்மை பொதுவாக உண்டு. பதிக்குச் சித்துச் சத்து ஆனந்தம் என்னும்மூன்றும் சிறப்பாக உண்டு, எனவே, இறைவன் சச்சிதானந்தப் பொருள் எனப்படுகிறான்; சத்து + சித்து + ஆனந்தம் = சச்சிதானந்தம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இந்தச் சூத்திரம் இறைவனுக்குச் சிறப்பு இலக்கணம் கூற எழுந்தது ஆகும். இரண்டாம் சூத்திரத்தில்அவனது பொது இயல்பு கூறப்பட்டது. உயிர்களோடு ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நிற்றல், இறைவனுக்குப் பொது இலக்கணம். **சித்துச் சத்தாய் நிற்றல் அவனுக்குச் சிறப்பு இலக்கணம்.**

இறைவனுக்குள்ள சிறப்பு இயல்பு குணங்கள் எட்டு. அவை வருமாறு : **தன்வயத்தன் ஆதல், தூய உடம்பினன் ஆதல், இயற்கை உணர்வு உடையனாதல், முற்றுணர்வுடையன் ஆதல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருள் உடைமை, முடிவிலாற்றல் உடைமை, வரம்பிலின்பம் உடைமை** ஆகியன. இந்த எண்குணங்களும் ''சத்து சித்து ஆனந்தம்'' என்னும் மூன்றனுள் அடங்கும். ஆயினும், சித்தை இன்றி ஆனந்தம் இல்லாமைால், எல்லாக் குணங்களும் 'சத்து, சித்து'' என்னும் இரண்டனுள் அடங்கும்.

எவ்வாறு என்றால்,எக்காலத்தும் ஒருதன்மையாய் இருக்கும் சத்துக்குத்தான், **தன்வயம் ஆம் தன்மை** கூடும். ஆதலால், 'தன்வயம்' சத்தில்அடங்கிற்று, தூய உடம்பு' சித்து எனப்படும். அந்தச்சித்தின் பேதமே, இயற்கையா உணர்தல், முற்றும் உணர்தல் இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருள், முடிவிலாற்றல், வரம்பிலின்பம் என்னும் ஆறு வகை ஆயினவாகும். ஆகவே, ஏழு குணங்கள் சித்தில் அடங்கும். திருவாசகத்தில்,

''ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பமே''

என்னும் மணிவாசகப் பெருந்தகையின் அருள்வாக்கினால், இன்பம் சித்தில் அடங்கும் என்பது பெறப்படும். இந்தத் திருவாக்கில் உள்ள **'கடந்த'** என்ற சொல், பாச ஞான, பசுஞானங்களைக் கடந்த ''சித்து'' என்று ஆகி, **''கடந்த இன்பமே''** என்றதனால் **சித்து ஆகிய இன்பமே** என்று அருளியவாறு ஆகும்.

''சத்து'' என்பது முக்காலத்தும், ஒரு தன்மையாய் உள்ளது; ''அச்சத்து'' என்பது முக்காலத்தும் ஒரு தன்மையாய் இல்லாதது. இவ்வளவே - சத்து, அசத்து என்பதற்குச் சைவ சிந்தாந்தத்தில்கூறப்படும் பொருள். எனவே, 'உள்ளது காரியப்படும்' என்று கூறும்சைவ சித்தாந்தத்தில், 'அசத்து'

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

என்பது, சத்துக்கு மறுதலையான இன்மை அன்று, 'சத்து' என்பது நிலையில் என்றும் மாறுபடாதது; 'அசத்து' என்பது, நிலைமாறுபாடு உடையது ஆகும்.

கருவிகள் பாசம் ஆதலால், அவற்றின் வழியாக நிகழும் ஞானம், **பாசஞானம்** ; கருவிகள் தன்கீழ் அடங்கியன என்று அறிந்து, அவற்றை நீக்கினபொழுது **தன்னைப் பிரமம் என்று உணர்தல், பசுஞானம்** இவ்வாறு உணரப்பட்ட பாசத்தின் இயல்பும், பசுவின் இயல்பும் பொது இயல்பே ஆகும். பசுவும் பாசமும் சிறப்பு இயல்பு பற்றிச், சிவஞானத்தால் உணரப்படுவதோடு, பொது இயல்பு பற்றிப் பசுஞானத்தால் உணரப்படும். படவே சிவஞானம் ஒன்றால் அன்றிப் பசுபாச ஞானங்களால், இறைவன் உணரப்படான் என்பது பெறப்படும்.

பசுபாசங்கள் பொது இயல்பால் அசத்து ஆகும்; சிறப்பு இயல்பால் சத்து ஆகும். காரியப் பிரபஞ்சம் அவ்வாறின்றி; பொது இயல்பு சிறப்பு இயல்பு இரண்டாலும், கண்ணல் காண்பதற்கு விடயமாய், இவ்வளவு காலம் நிற்கும் என்று நம் போன்றோரால் அறிய முடியாமல், நிலைபெறும். அதுபோலவே அது தோன்றி விரைவில் கெட்டு மறைந்து. போகும் சிறப்புஉடையது.எனவே, அந்தக்காரியப் பிரபஞ்சமே இந்தச் சூத்திரத்தில் ''உணர் உரு அசத்து'' என்று கூறப்பட்டது.

காரியப் பிரபஞ்சம், பொது இயல்பு சிறப்பு இயல்பு இரண்டானும் கண்ணல் காண்பதற்கு விடயம் ஆவது எவ்வாறு என்றால், ஒருவனை மனிதன் எனக் காண்பது பொது இயல்பு; தமிழன் முதலிய இனத்தைக் காண்பது சிறப்பு இயல்பு. இவ்வாறே எல்லாப் பொருளிலும் கண்டு தெளிவு பெறலாம்.

இந்தச் சூத்திரம்இரண்டு அதிகரணங்களை உடையது; அவை வருமாறு:

1. உணர்உரு அசத்து எனின் உணராது இன்மையின்.

2. இருதிறன் அல்லது சிவசத்தாம் என இரண்டு வகையின் இசைக்கும் மன் உலகே.

இந்தச் சூத்திரத்துடன் வைத்துச் சிந்திக்கத்தக்க, சிவஞான சித்தியார்ப் பாடல்கள்:

பாடல் எண்		தொடக்கச் சொற்கள்
240	-	அறிவுறும் பொ[illegible]ளோ ஈசன்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

241 - ஆவதாய் அழிவதாகி
243 - உணராத பொருள் சத்து

ஆறாம் சூத்திரம் - முதல் அதிகரணம்

மேற்கோள்

ஈண்டு அறிவினால்அறியப்பட்ட சுட்டு அசத்து என்றது.

இதன் பொருள் :

இந்த முதல் அதிகரணத்தில், மனத்தால் கருதி, அறிவது ஆகிய சுட்டறிவினால் அறியப்பட்ட சுட்டுப் பொருள் எல்லாம் அசத்து என்றவாறு.

தெளிவுரை:

''அறிவது ஆகிய சுட்டு அறிவினால்அறியப்பட்ட'' என்னும் தொடரில் உள்ள 'அறிவு' என்ற சொல், சுட்டி அறியும் அறிவைக் குறிக்கும்; கருவிகளோடு கூடி அறியும் அறிவுதான் அறிவு என்று கூறப்படும். கருவிகளின் நீங்கி நின்று, மெய்ப்பொருளை அறிவதைத் திருவள்ளுவர் 'மெய்யுணர்தல்' என்னும் அதிகாரத்திலும்ம் கருவிகளோடு கூடி நின்று, உலகப்பொருளை அறிவதை 'அறிவுடைமை' என்னும் அதிகாரத்திலும் வைத்துப் பேசுவதால் இதை அறியலாம். அறிவு வேறு; ஞானம் வேறு. உலகியல் அறிவு, தத்துவஞானம் என்னும் தொடர்களிலிருந்து இவ்வுண்மையை அறியலாம்.

''அறிவினால் அறிவது'' என்பது, ஒருபொருளை முதலில் அதுவதுவாகச் சுட்டிக் காணும் கருவிகளோடு கூடிய அளவை அறிவினைக் குறிக்கும். இதனை

''அறிவினால் அறிந்த யாவும் அசத்து ஆதல்அறிதி''

என்னும் சிவப்பிரகாசத்தால் (55) அறியலாம்.

ஏது

அவைதாம் பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய் நிற்றலான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இதன் பொருள் :

மேற்கோளில் கூறிய அச்சுட்டுப்பொருள்கள் ஆகிய பிரபஞ்சம், பிரமாவினால் படைக்கப்பட்ட பொழுது, 'உள்ளது' என்று உணரும் உணர்விற்கு விடயமாய்க் காணப்படும். அந்தப் பிரபஞ்சம் தானே, உருத்திரனால் அழிக்கப்பட்ட பொழுது, 'இல்லை' என்று உணரும் உணர்விற்கு விடயமாய்க் காணப்படாமல் இல்லை, ஆகவே, உள்ளதென்று உணரும் பிரபஞ்சம், இல்லை என்று உணரவும் படும் ஆதலால், ஈண்டு அறிவினால் அறியப்பட்ட சுட்டு அசத்து என மேற்கோளில்கூறப்பட்டது.

தெளிவுரை:

'பிரகாசம்' என்பது உண்டு என்று உணரும் உணர்வைக் குறிக்கும்; 'அப்பிரகாசம்' என்பது, இல்லை என்று உணரும் உணர்வைக் குறிக்கும். உள்பொருள் ஆகிய பிரபஞ்சத்தைச் சுட்டப்படும் அளவில்அசத்து என்பது எப்படிப் பொருந்தும் என்னும் வினா எழும், அதற்கு விளக்கம் வருமாறு:

சுட்டி. அறியப்படும் பொருள்கள் எல்லாம், காரியப் பொருளாய் விளங்கும்நிலையில், தூலமாய் விளங்கி நின்றே காணப்படும் பொருளாய் இருக்கும்; ஆயினும் அவ்வாறே என்றும் இராமல் சடுதியில்மறைந்து, சூக்குமமாய்க் காரணப் பொருளாய் நிற்கும் நிலையில் விளங்காது ஆகும். இவ்வாறுவிளங்குதல், விளங்காமை ஆகிய வேற்றுமை உடைமையால், காரண நிலையில் சுட்டப்படாமை நோக்கிக், காரிய நிலையில் சுட்டப்படும் பிரபஞ்சம் அசத்து ஆதல் கூடும்; ஆகவே பிரகாசம் என்பதற்கு விளக்கமும்,அப்பிரகாசம் என்பதற்கு விளக்கம் இல்லாமையும் பொருள் ஆகும். குடம் தோன்றும் நிலை, காரியநிலை; குடம்தோன்றாமல் மண்ணில் ஒடுங்கி, மண் மட்டும் தோன்றும் நிலை. காரண நிலை. இவ்வாறே பிரபஞ்சம் தோன்றும் நிலை காரிய நிலை; பிரபஞ்சம் தோன்றாமல், மாயையில் ஒடுங்கி, மாயை மட்டும் தோன்றும் நிலை காரண நிலை.

காரியம் சுட்டப்படுவதாய் நிலையில்லாத அசத்து ஆகும்; காரணம் சுட்டப்படாததாய், நிலையுடைய சத்து ஆகும். காரணத்தை இன்றிக் காரியம் இல்லாமையால், எல்லாப்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பொருளும் ''சத்து'' என்று சைவசித்தாந்தம் கூறுகிறது. இவ்வளவே அன்றிக், காரியப் பொருள்கள் ''அசத்து'' என்பதைச் சைவசித்தாந்தம் மறுக்காது.

(1) எடுத்துக்காட்டு வெண்பா

அசத்து அறியாய் கேள் நீ; அறிவு அறிந்த எல்லாம்
அசத்து ஆகும்; மெய்கண்டான் ஆயின் - அசத்து அலாய்
நீரில் எழுத்து, நிகழ்கனவும், பேய்த்தேரும்,
ஓரில் அவை இன்றாமாறு ஒப்பு.

(கொண்டு கூட்டு) அசத்து அறியாய் நீ கேள்; மெய் கண்டான் ஆயில், அறிவு அறிந்த எல்லாம் அசத்து ஆகும்; அசத்து அலாய் அவை இன்றாமாறு ஒப்பு ஓரின், நிகழ் நீரில் எழுத்தும், கனவும் பேய்த் தேரும்.

இதன் பொருள்

அசத்து அறியாய் கேள் நீ - அசத்தின் இயல்பு இஃது என்று அறியும் அறிவில்லாதவனே, யாம் கூறும் விளக்கத்தைக் கேட்பாயாக; **மெய் கண்டான் ஆயில், அறிவு அறிந்த எல்லாம் அசத்து ஆகும்** - சததின் இயல்பை அறிந்தோன் ஆராய்ந்தானாகில், சுட்டறிவினால் அறியப்பட்டன எல்லாம் அசத்தே ஆகும். **அசத்து அலாய்** - அசற்காரியவாதி அல்லாத சற்காரியவாதி ஆகிய அறிவு உடையோனே **அவை இன்று ஆம் ஆறு ஒப்பு ஓரின்** - ஏதுவில் இரண்டாவது பொருளாய்க் கூறியபடி, தோன்றி மறைவதாகிய பிரபஞ்சம் அசத்து ஆகும் என்பதற்கு உவமை ஆராயும் பொழுது, **நிகழ் நீரில் எழுத்தும் கனவும் பேய்த் தேரும்** - நிகழ்கின்ற நீர்மேல் எழுத்தும், கனவில் கண்டதும், கானல் நீரும் ஆகும்.

தெளிவுரை:

சத்தின் இயல்பு உணர்ந்தவர்க்குத்தான் அசத்தின் இயல்பு உணரமுடியும்; சத்தின் இயல்ப்பு உணராதார்க்கு அசத்தின் இயல்பு உணரமுடியாது என்பதைக் கூற வேண்டி ''மெய்கண்டான்''

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

என்றார். இஃது ஆராய்தல் அருமை என்பதைக் கூற வேண்டி "ஆயின்" என்றார்.

பிரபஞ்சம் அசத்து என்பதற்கு உவமையாகக் கூறிய மூன்று பொருள்களைப் பற்றிய விளக்கம் வருமாறு:

1. நீரில் எழுதியபோது, அப்பொழுதே அந்த எழுத்து அழிந்து விடுகிறது.

2. கனவு காணும்போது உண்மைபோல் தோன்றி, அப்பொழுதே சடுதியில் மறைந்து விடுகிறது.

3. கானல் உள்ள போது இருப்பதாகத் தோன்றும் நீர், உடனே மறைந்துபோய் விடுகிறது.

இவை இவவாறு சடுதியில்மறைந்து விடுவதைப்போல், இந்தப் பிரபஞ்சமும் அசத்து என்பது பெறப்பட்டது.

கானல் நீர் எப்படி ஏற்படுகிறது? கோடைக் காலத்தில் வெயில் அடிக்கையில், மணல் பரப்பில் தூரத்தில்இருந்து பார்க்கும் போது, தண்ணீர் ஓடுவதுபோல் தோன்றும், அருகில் நெருங்கிப் பார்த்தால் நீர் இருக்காது. இதுவே கானல் நீர் எனப்படும். இஃது எப்படி ஏற்படுகிறது என்றால் சூரிய வெப்பத்தால், நிலப்பரப்பில் உள்ள காற்று சூடாக்கப்படுகிறது. சூடான காற்றுக் கண்ணாடிபோல் இருக்கிறது; வானத்தின் நீல நிறம் அந்தக் காற்றுக் கண்ணாடியில் பிரதிபலிக்கும் பொழுது. நீர் போலத்தோன்றுகிறது. கானலே நீர் போல் தோன்றுவதால் கானல் நீராயிற்று.

பிரபஞ்சம் அசத்து என்பதற்கு மூன்று உவமைகள் கூறியதற்குக் காரணம் வருமாறு.

1. நீரில் எழுதும்போதே எழுத்து அழிதல் போல, பிரபஞ்சம் தோன்றும் போதே அழிந்து போகும்.

2. கனவில் கண்ட காட்சி , விழித்து எழும் முன்பு இடையிலேயே மறைந்து விடுதல் போல, பிரபஞ்சமும் என்றும் நிலைத்திருப்பது போலத் தோன்றி மறைந்து போகும்.

3. கானல் நீர் இடையில்தோன்றி இடையிலேயே மறைதல் போல, பிரபஞ்சமும்இடையில் தோன்றி மறைந்து விடும்.

இந்த அதிகரணத்துடன் வைத்துச்சிந்திக்கத் தக்க சித்தியார்ப்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பாடல் வருமாறு

பாடல் எண்	தொடக்கச் சொற்கள்
242	-மண்தனில் வாழ்வும் வானத்து
243	-உணராத பொருள் சத்து என்னில்

ஆறாம் சூத்திரம் - இரண்டாம் அதிகரணம்

மேற்கோள்

இனி இவ்விரண்டு தன்மையும் இன்றி, வாக்கு மனாதீத கோசரமாய் நின்ற அதுவே, சத்தாய் உள்ள சிவம் என்று உணரற்பாற்று.

இதன் பொருள்:

உணரப்படும் பொருள் போல்அசத்து ஆகும் தன்மையும்; உணரப்படாத பொருள் போல் சூனியம் ஆகும் தன்மையும் இன்றி, இறைவனின் வேறாய் நின்று உணரும் பாச ஞானத்திற்கும் பசு ஞானத்திற்கும் எட்டாததாய், அவ்விரண்டு ஞானங்களின் விருத்தியைக் கடந்து நின்று, இறைவனோடு ஒற்றுமைப்பட்டு நின்று உணரும் அனுபவஞானத்திற்கு மட்டுமே, எட்டுவதாய் நிற்கின்ற அந்த முதற் பொருள் இஃது என்று , பிரமாணங்களால் அறியப்படாமை பற்றி, அதுவே என ம்கா வாக்கியத்தால் கூறப்படும். அப் பதிப்பொருள் சத்து ஆகிய சிவமே என்று உணரும் தன்மை உடையது.

தெளிவுரை:

தத்துவங்களின் வாயிலாக ஆன்மாவிற்கு நிகழும் ஞானம், பாச ஞானம் ஆகும். பிருதிவி முதல் நாதம்வரையுள்ள எல்லாம் பாச ஞானமே. இதனை,

''நாதம் முடிவான எல்லாம் பாச ஞானம்

என்று சித்தியார் (293) பேசுகின்றது. எனவே, 'வாக்கு' என்பதற்குப் 'பாசஞானம்' எனப்பட்டது.

யாதானும் ஒன்றைப் பற்றி நின்று அறியும் ஆன்மா, தத்துவங்களை நீங்கிய பொழுது, பதியைச் சாராமல்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தத்துவங்களைக் கடந்து நிற்பதால், 'நானே முதல்வன்' என உணரும். அவ்வாறு உணர்வதற்குக் கருவியாய் நிற்பது மனமே ஆகும். ஆயினும், மனம் கருவியாய்க் காணப்படாமல், சூக்குமமாய் அடங்கி ஆன்மாவாகவே நிற்கும்; அந்நிலையும் ஒரு கணப்பொழுதில் மாறிவிடும். மாறியதும், எல்லாத் தத்துவங்களுடனும் கூடும்; எனவே, **மனத்தைக் கருவியாகக் கொண்டு ''யானே முதல்வன்'' என உணர்தல் பசுஞானம் ஆகும்.** ஆகவே, மனம் என்பதற்குப் 'பசு ஞானம்' என உரை செய்யப்பட்டது. இதனை,

''நான் பிரமம் என்னும் ஞானம், பசு ஞானம்''

என்னும்சித்தியார் (293) வாயிலாகவும்,

''சிந்தையைச் சிவன் என்றும், சிவனைச் சிந்தை என்றும்''

என்னும் சித்தியார் (218) வாயிலாகவும் அறியலாம்.

''வாக்கு மனாதீத கோசரமாய்'' என்ற தொடரில் உள்ள 'வாக்கு' பாச ஞானத்தையும், 'மனம்' பசு ஞானத்தையும் குறிக்கும்; 'அதீதம்' என்ற செல் 'எட்டாதது' என்ற பொருளையும், 'கோசரமாய்' என்ற சொல் 'எட்டுவதாய்' என்ற பொருளையும் தரும். அஃதாவது 'வாக்கு மனம் என்னும்இரண்டன் விருத்திகளைக் கடந்து, அவ்விரண்டின் வேறாய் ஒற்றுமைப்பட்டு, நின்று உணரும் அனுபவ ஞானம் மட்டுமே விளங்கி எட்டும்' என்பது இத்தொடருக்குப் பொருளாகும்.

இவ்வாறு பாசஞான பசுஞானங்களுக்குஎட்டாத தாய்ப், பதிஞானத்திற்கு மட்டுமே எட்டுவதாய் நின்ற பொருள் இஃது என்று, காண்டல், கருதல், நூல் என்னும் மூவகை அளவைகளாலும் அறிய முடியாதது ஆகும்.

அறியக் கூடியதை **இஃது** என்று சுட்டிக் கூறுவதும், அறிய முடியாததை **அஃது** என்று சுட்டிக் கூறுவதும் உலக வழக்கு அஃது என்று சுட்டும் பொழுது, பொருளைப் பகுத்துக் காண முடியாமையால், அது **பொது வகையாய்** விளங்கும்; அவ்வாறு அஃது என்று **பொதுவாகக்** கூறிய பொருள், சத்து ஆகிய சிவமே என்று **சிறப்பாக** உணர்ந்து கொள்ளும் வகையில், ''அதுவே சிவம்'' என்று மேற்கோளில் கூறினார்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இந்தச் சிவப்பொருள் என்னும் சொல், அளவையின் அறியவாராது; உணர்வால் அறிவதும்அருமை என்னும் உண்மையை உணர்த்தும் பொருட்டு, உணர்க என்று கூறாமல் 'உணரற்பாற்று' என்றார். அஃதாவது, உணரும் முறையால் உணரும் தன்மையை உடையது என்று பொருள். உணரும் முறை ஆவது, அனுபவ ஞானமே ஆகும்.

ஏது

பிரகாசத்தினுக்குப் பிரகாசிக்க வேண்டுவது இன்மையானும், அப்பிரகாசத்தினுக்குப் பிரகர்சம் இன்மையானும்.

இதன் பொருள்:

உறுதியாய் இன்ன தன்மை உடையது என்று வாக்கினால் ஓதப்படுவதாயும், மனத்தினால் உணரப்படுவதாயும் உள்ள பொருளுக்கு, பின்பு சாதன இயலில் கூறப்படும் சாதனங்களை எல்லாம் கொண்டு அறியப்படுதல் தேவை இல்லை. இன்ன தன்மை உடையது என்று அறியப்படாத பொருள், உறுதியாய்ச் சொல்ல முடியாத பொருள் ஆதலால், அப்பொருளுக்குச் சாதன இயலில் கூறப்படும் சாதனத்தைக் கொண்டு அறியப்படும்தன்மை இல்லை. எனவே 'இனி இவ்விரண்டு தன்மையும் இன்றி வாக்கு மனாதீத கோசரமாய்'' நின்ற அதுவே, சத்தாகியுள்ள சிவம் என்று உணரற்பாற்று'' என்று மேற்கோள் கூறியது.

தெளிவுரை:

விளங்கித் தோன்றும் பொருளைப் 'பிரகாசம்' என்றார்; விளங்கித் தோன்றாத சூனியத்தை 'அப்பிரகாசம்' என்றார்.

(2) எடுத்துக்காட்டு வெண்பா

எண்ணிய சத்து அன்று, அசத்து அன்று என்றால், என்
கண்ணி உளது என்றல், மெய்கண்டான் - எண்ணி
அறிய இரண்டாம்அசத்து ஆதல் சத்தாம்
அறிவு அறியா மெய்சிவன்தாள் ஆம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

(கொண்டு கூட்டு) எண்ணிய சத்து அன்று, அசத்து அன்று என்றால், உளது என்றல் என் கண்ணி? - மெய்கண்டான் எண்ணி அறிய இரண்டு அசத்து ஆம்; - ஆதல் சத்து ஆம் அறிவு அறியா மெய் சிவன்தாள் ஆம்.

இதன் பொருள்:

எண்ணிய சத்து அன்று, அசத்து அன்று என்றால், உளது என்றல் என் கண்ணி? - விவகாரத்தில் தான் சத்து அசத்து என்று தோன்றுவன அன்றி, முத்திநிலையில் பரமார்த்தம் ஆகிய பரப்பிரமப் பொருள், சத்தும் அன்று அசத்தும் அன்று என்றால், அந்த இரண்டும் இல்லாத ஒரு பொருள் உண்டு என்று எந்தப் பிரமாணத்தைக் கொண்டு கூறுவது என்று கேட்டால், பிரமாணம் உண்டு என்று கூறினால், அந்தப் பிரமாணத்தினால் அளக்கப்படும் பொருளாய் அறியப்படுவது ஆகும். படவே, அசத்து என்று கூற வரும். அதற்கு அஞ்சிச் சத்தும் அன்று அசத்தும்அன்று என்றுகூறுவதற்குப் பிரமாணம் இல்லை என்று கூறுவாயாயின், **மெய்கண்டான் எண்ணி அறிய இரண்டு அசத்து ஆம்** - பிரமாணங்களால் அறியப்படாதது சூனியமாய் அசத்தே ஆகும்; இவ்வாறு பிரத்தியட்சம் முதலிய பிரமாணங்களால் அறியப்படுவதும் அறியப்படாததும் ஆகிய இரண்டும், முதல் அதிகரணத்தில் கூறியபடி, உண்மை இயல்பை உணர்ந்தவன் ஆராய்ந்து அறியும் பொழுது அசத்தே ஆகும்.

ஆதல் சத்து ஆம் அறிவு அறியா மெய் சிவன் தாள் ஆம் - ஆதலால் சாந்தோக்கியம் முதலிய உபநிடதங்களுள், சத்து என்று கூறப்படுவதாயும், சுட்டறிவு ஆகிய அளவைகளால் அறியப்படாததாயும், உள்ள மெய்ப் பொருள், சைவ உபநிடதங்களிலும் சைவ ஆகமங்களிலும், அந்நியம் இன்றி நின்று உணரும், அனுபவ ஞானத்திற்கு எட்டுவது என்று கூறப்படும் **சிவன் அருள்** ஆவதே அன்றிச் சூனியம் அன்று.

தெளிவுரை :

'அசத்து அன்று ஆம்' என்றதில் உள்ள 'ஆம்' அசை. வேதங்களில் 'சத்து' என்று ஓதப்படும் பரப்பிரமப்பொருள், சிவஞானம் ஆகிய உண்மை ஞானத்திற்கு எட்டப்படும். அது நாம் கூறும் சிவமே அன்றிச் சூனியம் அன்று. சூனியமும்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அழிகின்ற பொருளும் ஆகிய இரண்டும் அசத்தே ஆகும். பிரமப்பொருள் உண்டு என்பதற்குப் பிரமாணம் கூறினால், பிரமாணத்தால் அளக்கப்படும் பொருள் யாவும் அழிகின்ற பொருள் ஆகலின், பிரமப் பொருள் சிவஞானம் ஆகிய உண்மை ஞானத்தால் மட்டுமே அறியப் படுவதாகும் என்பது பெறப்படும்.

(3) எடுத்துக் காட்டு வெண்பா

உணர்ப அசத்து ஆதல் ஒன்று உணராது ஒன்றை
உணரும் நீ தான் உணராய் ஆயின் - உணரும் உனில்
தான் இரண்டாம் மெய்கண்டான் தன்னால் உணர்தலால்
தான் இரண்டாய்க் காணுன் தமி.

இதன் பொருள்:

உணர்ப அசத்து - உன்னுடைய ஏவலால் விடயங்களை அறியும் கருவிகள் எல்லாம் அசத்து ஆகும்; அசத்து என்பதால், அறிவில்லாதவை என்பதும் பெறப்படும், **ஆதல் ஒன்று ஒன்றை உணராது** - ஆதலால் அவற்றுள் ஒரு கருவியும் ஒன்று ஆகிய முதற்பொருளை அறிய மாட்டாது; **உணரும் நீ தான் உணராய் ஆயின்** - அக்கருவிகளால் விடயங்களை அறிந்து வருகின்ற நீயும் அம்முதற்பொருளை அறிய மாட்டாய்; நீயே அதனை ஆய்ந்து அறிவாய் ஆயின்; **உணரும் உனில் இரண்டு ஆம்** - கருவிகளால் அறியப்படும் பொருள், அறிகின்ற உனக்கு வேறு ஆவதுபோல; முதற்பொருளும் உனக்கு வேறு ஆகும். **மெய்கண்டான் தன்னால் உணர்தலால் இரண்டாய்க் காணுன் தமி**-பொருளின் தன்மையால் முதல்வன் வேறு, உயிர் வேறு; ஆயினும், முதல்வன் உயிர்க்கு உயிராய் நின்று அறிவிப்பன்; ஆதலால், உயிர்க்கு அறிவு விளங்கும் உண்மையை அறிந்தவன், தன் அறிவு சிவனருளில் அடங்கி, அவ்வருளாய் நின்று, அந்த அருளினாலே அந்தச் சிவத்தை அறிவன். ஆகவே, ஏனைப்பொருள்களை வேறாய் நின்று அறிவது போல, அந்தத் தனிமுதற்பொருளை வேறாய் நின்று அறியமாட்டான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை :

தான் - அசை.

தனிமுதற்பொருள் ஆகிய சிவம், ஒன்றையும் பற்றாமல் தனியாய் நிற்பது. அந்த முதற்பொருளைக் காண்பவன், சிவத்தோடு கலந்து நின்றே காணமுடியும்என்பதையே, பதிஞானம் ஒன்றினாலேயே சிவத்தை அறிய முடியும் என்று கூறப்படுகிறது. உலகப் பொருளோடு கலந்து நிற்கும் பொழுது உயிர்க்கு அஞ்ஞானத்தால் உண்டாகும் சுக துக்கம் ஏற்படும். சிவத்தோடு மட்டும் கூடி நிற்கும் போது, நிலையான அற்புதமான இன்பம் உண்டாகும். எனவே, உலகப் பொருள்களைக் காண்பதுபோல், சிவத்தைக் காணமுடியாது என்பது பெறப்படும்.

(4) எடுத்துக்காட்டு வெண்பா

பாவகமேல், தான் அசத்தாம்; பாவ நா தீதம் எனில்,
பாவகமாம்; அன்று என்னின், பாழ் அதுஆம்-பாவகத்தைப்
பாவித்தல் தான் என்னில் பாவகமாம்; தன் அருளால்
பாவிப்பது பரம்; இல் பாழ்.

இதன்பொருள்:

பாவகமேல் தான் அசத்து ஆம் - தியான பாவனை என்று நீ கூறும் பாவனை, உலகப் பொருள்களைப் பாவிக்கும் ஏனைப் பாவகங்களைப்போல், மனம் முதலிய கருவிகளோடு கூடி நின்று பாவிக்கும் பாவகம் என்றால், அந்தக் கருவிகளால் அறியும் அறிவு சுட்டறிவு ஆகும். அந்தச் சுட்டறிவினால் அறியப்பட்ட பொருள் சுட்டுப் பொருள்ஆகும். ஆகவே அந்தப் பாவனையால் அறியும்பொருள் அசத்து ஆகும். **பாவனாதீதம் எனின் பாவகம் ஆம்** - அந்தப் பாவனை, கருவிகள் நீங்கிநின்று பாவிப்பது ஆகலின், கருவிகளோடு கூடிச்செய்யும் பாவனையைக் கடந்தது என்று சொன்னால், கருவிகள் நீங்கியபொழுது, ஒன்றும் அறியுமாறு இன்றித், துரியாதீதம் ஆகிய கேவலநிலை உண்டாகும்; ஆதலால், பாவிப்பது என்ற அது பாவக அளவில்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உள்ளதே அன்றிப் பயன்படுமாறு இல்லை. **அன்று என்னில் அது பாழ் ஆம்**-கருவிகளோடு கூடுதல் கூடாமை ஆகிய இந்த இரு நிலைகளும் இன்றி, வரையறுத்துச் சொல்லக்கூடாத விதமாகப் பாவிக்கப்படுவது என்றால் அவ்வாறு பாவிக்கப்படுவது வெற்றுப்பொருள் ஆகும். **பாவகத்தைப் பாவித்தல் என்னின் பாவகம் ஆம்** - அவ்வாறாயின், பாவனைக்கு எய்தாத பொருளை, எய்தியதாக வைத்துப் பாவகம் செய்தல் என்றால் அவ்வாறு பாவிப்பது போலிப் பாவனை ஆகும். ஆகவே, பாவனாதீதம் போலப் பாவனை அளவிலேயே அன்றிப்பயன்படுமாறு இல்லை. இந்த இடத்தில் கூறிய நான்கு உபாயங்களினாலும், முதற்பொருள் ஆகிய கடவுள் பாவிக்கப்படாதது என்று சுறினால், ஒரு வகையிலும் பாவனைக்கு எட்டாதது பாழ் ஆகும். **தன் அருளால் பாவிப்பது பரம்; பாழ் இல்** - இவ்வாறு கூறுவதால் மேற்கூறிய பாவகங்களை விட்டு ஒழித்து, முதல்வனின் திருவருளால் அம்முதற்பொருள் பாவிக்கப்படுவது ஆகும். ஆகலின் நீ கூறிய பாவனைக்கு எட்டாமை பற்றி, முதற்பொருள் பாழ்ஆதல்இல்லை.

தெளிவுரை :

பாவகம் என்ற சொற்குப் பொருள் பாவித்தல் என்பதாகும். பாவித்தல் - எண்ணுதல் - கருதுதல் - பாவனை செய்தல்.

பாவனை நான்கு வகைப்படும்: 1. கருவிகளோடு கூடிநின்று பாவித்தல்; 2. கருவிகளை நீங்கிநின்று பாவித்தல்; 3. இவ்விரு திறனும் இன்றிப் பாவித்தல்; 4. எட்டாத பொருளை எட்டியதாக எண்ணுதல் (பாவித்தல்). இந்த வெண்பா இறைவன் பாவனைகளுக்கு எட்டாதவன் என்பதைத் தெளிவுறுத்தியது.

(5) எடுத்துக் காட்டு வெண்பா

அறிய இரண்டு அல்லன்; ஆங்கு அறிவு தன்னால்
அறியப் படான்; அறிவின் உள்ளான் - அறிவுக்குக்
காட்டாகி நின்றானைக் கண்அறியா மெய்என்னக்
காட்டாது அறிவு அறிந்து கண்டு.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

(கெண்டு கூட்டு) அறிய இரண்டு அல்லன்; அறிவின் உள்ளான் ஆங்கு அறிவுதன்னால் அறியப்படான்; அறிவுக்குக் காட்டு ஆகி நின்றானை, அறிவு கண்டு அறிந்து காட்டாது; மெய் அறியாக் கண் என்ன.

இதன் பொருள்:

அறிய இரண்டு அல்லன் - சிவாகமங்களில் உயிரும் முதல்வனும் அத்துவிதம் என்று கூறுவதால், உயிர் தன் அறிவால் முதல்வனை அறிவதற்கு, முதல்வன் உயிரின் வேறு அல்லன். **அறிவின் உள்ளான் ஆங்கு அறிவுதன்னால் அறியப்படான்** - அத்துவிதமாய்க் கலந்து இருப்பதால், உயிரும் முதல்வனும் சமம் ஆகுமோ என்றால், சமம் ஆதல் இல்லை; வேறு எவ்வாறு நிற்கும் என்றால், உயிர் தூலமாய் வெளிப்பட்டு நிற்கும்; முதல்வன் சூக்குமமாய் வெளிப்படாமல், உயிரின் அறிவுக்கு உள்ளாக நிற்பன்; ஆகவே, மலம் நீங்கிய பொழுது, உயிரின் அறிவால் முதல்வன் அறிய வாரான். **அறிவுக்குக் காட்டாகி நின்றானை** - இவ்வாறு வேறு அல்லாமையாலும், தூல சூக்கும முறையாலும், உயிரின் அறிவுக்குத் துணையாய் நின்று அறிவிக்கின்ற உயிர்க்குயிர்ஆகிய முதல்வனை, **அறிவு கண்டு அறிந்து காட்டாது** - உயிரின் அறிவு தான் கண்டு அறிந்து, அந்த அறிவைக் குணமாக உடைய குணிப்பொருள் ஆகிய உயிருக்கு எட்டும்படி காட்டமாட்டாது. **மெய் அறியாக் கண் என்ன** - இஃது எதுபோல எனின், உயிர் கண்ணொளியின் வேறின்றி, கண்ணுக்குள்ளாக நின்று , கண் பொருளை அறிவதற்குத் துணையாய் நிற்கிறது; அவ்வாறு நிற்கின்ற உயிரைக் கண்ணொளி காணமாட்டாதவாறு போல் ஆகும்.

தெளிவுரை :

இறையருளின் உதவி இன்றி, ஆன்மா இறைவனை அறிய மாட்டாது என்பதை இவ்வெண்பா எடுத்துக்காட்டுகின்றது.

கண்ணின் ஒளி, கண்ணின் வேறான பொருளை எல்லாம் அறியும்; கண்ணின் உள்ளாய் நிற்கும் உயிரை அறியாது; அதுபோல, உயிரின் அறிவு, உயிரின்வேறான பொருளை எல்லாம் அறியும்; உயிரின் உள்ளாய் நிற்கும் முதல்வனை அறியாது.

உயிர், தானே அறியும் தன்மை இல்லாமையால் தூலம்;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முதல்வன் தானே அறியும் தன்மை உடைமையால் சூக்குமம். சூக்குமம் தூலத்தை அறியுமே அன்றித் தூலம் சூக்குமத்தை அறியாது. சூக்குமத்தின் உதவியாலேயே தூலம் அறியும். கண் தூலம்; உயிர் சூக்குமம்; முதல்வனை நோக்க உயிர் தூலம்; உயிரை நோக்க முதல்வன் சூக்குமம்.

(6) எடுத்துக் காட்டு வெண்பா

அது என்னும் ஒன்று அன்று; அது அன்றி வேறே
அது என்று அறி அறிவும் உண்டே - அது என்று
அறிய இரண்டு அல்லன்; ஆங்கு அறிவுள் நிற்றல்
அறியும் அறிவே சிவமும் ஆம்,

இதன் பொருள் :

அது என்னும் ஒன்று அன்று - (சத்து ஆகிய சிவம் அறியப்படும் பொருளாய், பசு பாசங்களால் ஆகிய குணத்தை உடையதாய், விசிட்டமாய் (மேன்மையான பசுபதியாய்) நிற்பது என்று கூறுவது, சிவாத்துவித சைவர், சுத்தசைவர் ஆகிய உமக்கும் பொருந்தும்; ஆதலால் அந்தச் சிவம் இன்ன தன்மை உடையது என்று உறுதியாய்க் கூற முடியாத, அநிர்வசனமாய் நிற்பது ஆகிய ஒரு சாதாரணப் பொருள் எனக் கொண்ட மாயாவாதத்தைப் போல, அஃது என்று உறுதியாய்ச் செல்லி முடியாததொருவெறுமை (சூனியம்) அன்று; ஆகவே, **அது அன்றி வேறு அது என்று அறி அறிவும் ஆங்கு உண்டே** - அருளால் அறியப்படும் அச்சிவப்பொருள் மாத்திரமே அன்றி, அப்பொருளின் வேறாக வாக்கு மனாதீதமாய் நிற்பது அம்முதற்பொருள் என்று அறிகின்ற உயிரும் அம்முத்தி நிலையில் உள்ளதே ஆகும்.

அவ்வாறு முதல்வனும் உயிரும் முத்தியில் உண்டு என்றால், ஒன்று ஆதல் பெறப்படாதே என்றால், பெறப்படும்; எவ்வாறு என்றால், **அது என்று அறிய இரண்டு அல்லன் அறிவுள் நிற்றல் அறியும் அறிவு சிவமும் ஆம்** - உலகத்துப் பொருள், அஃது என்று சுட்டி அறியப்படுமாறு, உயிரின் வேறாய் நிற்பது போல,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முதல்வன் உயிரின் வேறு அல்லனாய்த், தண்ணீரைச் சார்ந்த உப்பு அத்தண்ணீராகக் கலந்து விளங்குவது போல, முதல்வனைச் சார்ந்த **உயிரின் அறிவின்கண்**, முதல்வன் கலந்து வேற்றுமை தோன்றாமல் நிற்பதால் சுட்டி அறியும் அறிவு இறந்து, அவன் அருளால் அறிகின்ற அவ்வுயிர் சிவமே ஆகலின் ஒன்று ஆதல் பெறப்படும்.

தெளிவுரை :

இந்த வெண்பா, உயிரின் அறிவால் அறியப்படாத இறைவன் அவன் அருளாலும் அறியப்படுமாறு இல்லை என்பவரை மறுத்து, அவனருளால் அறியப்படுவன் என்பதை வலியுறுத்துகின்றது. இஃது எதுபோல எனின் சூரியனை அறிய விரும்பிய கண், சூரியன் ஒளியை ஊடுருவிச் சென்று, அந்தச் சூரியனாகவே நின்று, அதன் ஒளியால் அதனை அறிவதுபோல் ஆகும்.

இந்த இரண்டாம்அதிகரணத்தில் உள்ள ஐந்து வெண்பாக்களில் உள்ள செய்திகள் சிலவற்றை இங்குக் காண்போம். இறைவன் வாக்கு மனத்திற்கு எட்டாமல் நிற்கும் இயல்பினை உடையவன் என்பதை, பல்வேறு சமயக் கொள்கைகளை மறுத்து, ஐந்து வெண்பாக்களிலும் விளக்கி அதனை ஒரு பொருள்மேல் வைத்துக் கூறினார்.

நான்காம் சூத்திரத்தில், 'சகச மலத்து உணராது' கிடக்கும் ஆன்மாவின் **கேவல அவத்தை**யையும், ஐந்தாம் சூத்திரத்தில், 'கருவிகளோடு கூடி விடயங்களை அறியும்' ஆன்மாவின் **சகல அவத்தை**யையும், ஆறாம் சூத்திரத்தில், 'பாச ஞான பசு ஞானங்களைக் கடந்து பதிஞானத்தால் அறியும்' ஆன்மாவின் **சுத்த அவத்தை**யையும் தெளிவுபடுத்தினார்.

கேவலம் சகலம் சுத்தம்என்னும் மூன்றனுள், கேவலம் 'மருட்கேவலம், **சகலகேவலம்**, **பிரளயகேவலம்**, விஞ்ஞானகேவலம் ,அருட்கேவலம் என்று ஐந்து வகைப்படும். அவற்றுள்:

1. **'மருட்கேவலம்'** என்பது, அ[illegible]வ மறைத்து மயக்கத்தைச் செய்யும் ஆணவமலத்தோடு, உயி[illegible]நாதியே கூடி அறிவு இன்றிக் கிடக்கும் அநாதி கேவலத்தைக் [illegible]க்கும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

2. **'சகலகேவலம்'** என்பது , அநாதி கேவலத்தில் நின்றும் நீங்கிச் சரீரம் பெற்று, அதுவும் அழிக்கப்பட்டபிறகு, புதிய படைப்புக்கு ஏதுவாய் ஒடுங்கி இருக்கும்பொழுது, அப்பொழுது மும்மலங்களோடும் கூடிப்படும் சகலருக்கு உரிய கேவலத்தைக் குறிக்கும். அந்நிலையில் ஆன்மா சூக்கும ஐந்தொழிற் பாட்டுக்கு உட்பட்டு நிற்கும். **'சூக்கும ஐந்தொழில்'** என்பது வருமாறு:

'அருளல்' என்பது, பேரூழிக் காலத்தில் மலபரிபாகத்தின் அளவுக்குத்தக்கபடி, அறிவிக்கத் தக்கவர்களுக்கு அறிவித்தல் ஆகும்.

'மறைத்தல்' என்பது, மறைக்கத் தக்கவர்களுக்கு மறைத்தல் ஆகும்.

'அழித்தல்' என்பது, ஆன்மாக்களின் சஞ்சித கன்மங்களைப் பக்குவப்படுத்துதல் ஆகும்;

'காத்தல்' என்பது, மாயாகாரியங்களை வெளிப்படுவதற்குத் தகுந்தவைகளாகச் செய்தல் ஆகும்;

'படைத்தல்' என்பது, தோன்றுவதற்கு உரிய சித்துப் பொருள், சடப்பொருள்களைப் பார்த்துக் கொண்டுஇருத்தல் ஆகும்.

3. **'பிரளய கேவலம்'** என்பது , அநாதி கேவலத்தினின்றும் நீங்கிச் சரீரம் பெற்றுச் சங்கரிக்கப்பட்ட பிறகு, புதிய படைப்புக்கு ஏதுவாய் ஒடுங்கி இருக்கும் பொழுது, மாயையோடு பொருந்தாமல் ஆணவம், கன்மம் என்னும் இரண்டு மலங்களோடும் கூடிப் படுகின்ற பிரளயாகலர் ஆன்மாவுக்கு உரிய கேவலம் ஆகும்.

4. **விஞ்ஞான கேவலம்** என்பது, அநாதி கேவலத்தினின்றும் நீங்கிச் சரீரம் பெற்றுச் சங்கரிக்கப்பட்ட பிறகு, புதிய படைப்புக்கு ஏதுவாய் ஒடுங்கி இருக்கும் பொழுது, மாயை, கன்மம் என்னும் இரண்டு மலங்களோடும் பொருந்தாமல், ஆணவ மலத்தோடு கூடிப்படுகின்ற விஞ்ஞானகலர் ஆன்மாவுக்கு உரிய கேவலம் ஆகும்.

ஆணவமலத்தோடு கூடிய அநாதி கேவலத்திற்கும், ஆணவமலத்தோடு கூடிய விஞ்ஞான கேவலத்திற்கும் வேற்றுமை என்ன என்றால் , அநாதி கேவலத்தினின்றும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சகலராய்த் தோன்றுதலும், விஞ்ஞானகேவலத்தினின்றும். விஞ்ஞானகலராய்த் தோன்றுதலுமே ஆகும்.

ஆகவே, அநாதியே ஆணவமல மறைப்பின் வேறுபாடு காரணமாக, அநாதியே விஞ்ஞானகலருக்குரிய கேவலம், அநாதியே பிரளயாகலருக்கு உரிய கேவலம், அநாதியே சகலருக்குரிய கேசலம் என மூன்று எனப்பட்டு அம்மூன்றும்தோன்றுதற்கு உரியது, **அநாதி மருட்கேவலம். இங்குக் கூறிய விஞ்ஞானகேவலம், சகலராய்நின்று பக்குவப்பட்டுச் சங்கரிக்கப்பட்டவர்க்குப், பின்னர் உண்டாகும் கேவலம் ஆகும்.** ஆகவே, அநாதியே ஆணவமல மறைப்பின் வேற்றுமையால் உண்டாகும் விஞ்ஞான கேவலத்திற்கும், இடையே மாயாமல கன்மமலங்கள் நீங்கப்பெற்றதால் உண்டாகும் விஞ்ஞான கேவலத்திற்கும் வேற்றுமை உண்டு என்பது பெறப்படும். **அநாதி விஞ்ஞான கேவலர், படைப்பால் பக்குவப்படாதவர்; ஆதி விஞ்ஞானகேவலர் படைப்பால் பக்குவப்பட்டவர். ஆதி விஞ்ஞானகேவலர் என்பவர், சகலரிலிருந்து பக்குவப்பட்டுச் சென்றவர் ஆவர்.**

5. **'அருட்கேவலம்'** என்பது, தத்துவங்கள் எல்லாம் நீங்கிய பிறகு, அருளோடுகூடிப் படும் கேவலம் ஆகும். இந்நிலையில், பாசஞான பசு ஞானங்களின்றி, அருளாய் நிற்றலால் அருட் கேவலம் எனப்பட்டது. அருளால் உண்டாகும் கேவலம் அருட்கேவலம். சூரியன் நிங்கிய ஆகாயம், இருளோடு கூடி இருளாயே இருந்தவாறு போல, அருள் நீங்கிய ஆன்மா ஆணவ மலத்தோடு கூடி, ஆணவமலமாயே இருக்கிறது. அம்மலம் நீங்க, இப்பொழுது அருளோடு கூடி அருளாயே இருக்கிறது. இந்நிலை, தன் செயல் அற்று இருப்பதால், 'அருட்கேவலம்' எனப்பட்டது. இஃது எது போல எனின், அனாதி கேவலம் ஆகிய மருட்கேவலத்தில் அறிவு தொழிற்படாமல், ஆன்மா கேவலப்பட்டது போல, அருட்கேவலத்தில் ஆன்மா தன் செயல் தொழிற்படாமல் இருக்கிறது. இக் கருத்துப்பற்றியே,

> **"ஆணவத்தோடு அத்துவிதம் ஆனதுபோல், மெய்ஞ் ஞானத்தாணுவினோடு அத்துவிதம் சாருநாள் எந்நாளோ"**

என்றருளிச்செய்தார், தாயுமான சுவாமிகள்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இனிச் சகலமும், **சகலத்தில் கேவலம், சகலத்தில் சகலம் சகலத்தில் சுத்தம்** என மூவகைப்பட்டு, ஒவ்வொன்றும் சாக்கிரம் , சொப்பனம், சுழுத்தி, துரீயம். துரீயாதீதம் என ஐவகைப்படும். அவற்றுள், 'சகலத்தில் கேவலம்' என்பது. இந்நூல் நான்காம் சூத்திரத்தில், ''ஒன்று அணையா மூலத்து'' என்னும் வெண்பாவில் கூறியவாறு, 'புருவநடு முதல் மூலாதாரம் வரை, கீழ்நோக்கிச் செல்லும் அவத்தை ஐந்தும் ஆகும்.

'சகலத்தில் சகலம்' என்பது, இந்நூல் நான்காம் சூத்திரத்தில் ''இலாடத்தே சாக்கிரத்தை'' என்ற வெண்பாவில் கூறியவாறு, சாக்கிரத் தானம் ஆகிய புருவ நடுவில் அடையும் அவத்தை ஐந்தும் ஆகும்.

'சகலத்தில் சுத்தம்' என்பது, சிவஞானசித்தியார் 226 ல் ''யோகில் தருவதோர் சமாதி'' என்று கூறியவாற்றால், இருதயம். கண்டம். நாக்கின் அடி, புருவ நடு பிரமரந்திரம் என்னும் ஐந்து தானங்களில் ஏற்படுகின்ற அவத்தை ஐந்தும் ஆகும்.

இனிச் சுத்தமும், **சீவன் முத்தி, அதிகார முத்தி, போக முத்தி, லய முத்தி, பர முத்தி என ஐவகைப்பட்டு, முறையே நின் மலசாக்கிரம், நின்மல சொப்பனம், நின்மல சுழுத்தி, நின்மலதுரியம், நின்மல துரியாதீதம்** எனப் பெயர் பெறும். இந்த ஐவகை முத்திகளைக் குறித்துப் பின் வரும்ஏழாம் சூத்திரம் முதல் வகுத்துக் கூறுவார்கள். இவற்றின் தன்மை குறித்து ஒரு சிறிது இங்குக் காண்போம்.

1. சீவன் முத்தி என்பது, சீவத்தன்மை விடுபடுதல். இது சிவஞான போதம் ஏழாம் சூத்திரம் தொடங்கிப் பன்னிரண்டாம் சூத்திரத்தில் முற்றுப்பெறுகிறது.

2. 'அதிகார முத்தி' என்பது. அதிகார சிவத்தை அடைந்து உடற்பற்றை விடுதல் ஆகும். சகல வர்க்கத்து ஆன்மாக்களுக்கு அதிகார சிவம், குருவே ஆகும். இஃது எட்டாம் சூத்திரத்தில் ''தம் முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த விட்டு '' என்றதனால் உணர்த்தப்படுகிறது.

3. 'போக முத்தி' என்பது போக சிவத்தை அடைந்து, உலகப்பற்றை விடுதல் ஆகும். போகசிவம் என்பது 'பதி' யே ஆகும். அப்பதியைப் பதிஞானத்தால் அடைந்து, உலகத்தில் உள்ள போகத்தை விடுவதே போகமுத்தி ஆகும். இஃது

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஒன்பதாம் சூத்திரத்தில், ''பதியை - ஞானக்கண்ணினில் சிந்தைநாடிப்....... பாசம் ஒருவ '' என்றதனால் விளங்கும்.

4. இலய முத்தி' என்பது, இலயசிவத்தை அடைந்து, மலம் மாயை, கன்மங்களை விடுதல் ஆகும். சகல வர்க்கத்து ஆன்மாக்களுக்கு, இலய சிவம் தற்போதம் அடங்கின நிலையில், ஏகன் ஆகிப் பிரகாசிப்பதே ஆகும். இது பத்தாம் சூத்திரத்தில், '' ஏகனாகி இறைபணி நிற்றல் மலமாயை தன்னொடு வல்வினை இன்றே'' என்பதனால் கூறப்படுகிறது.

5. பரமுத்தி' என்பது, பரசிவத்தை அடைந்து, பாசப்பபற்றை விடுதல் ஆகும். இது பதினொராம் சூத்திரத்தில், ' அயரா அன்பின் அரன் கழல் செலுமே'' என்பதனால் தெளிவாகும்.

பத்து, பதினோராம் சூத்திரங்களுக்கிடையேயுள்ள வேறுபாடாவது **பாசநீக்க வேறுபாடும் பாசப்பற்று நீக்க வேறுபாடும் ஆகும். பற்று ஆன்மாவினிடத்தில் என்றும் உள்ளது. அப்பற்று பாசம் நீங்கினாலும் இருக்கும். அந்தப்பற்றினால் மீண்டும் விட்ட பாசத்தைப் பற்றாதபடி, இறைவன் திருவடியை இடையறாது பற்றவேண்டும்.** இத்னைத் தெளிவுறுத்தற் பொருட்டே, ''அயரா அன்பின் அரன் கழல் செலுமே'' என்றார். எனவே, பத்தாம் சூத்திரம் **பாசநீக்கமும்**, பதினொராம் சூத்திரம் **பாசப்பற்று நீக்கமும்** ஆகிய வேறுபாடு உடையன என்பது நினைவில் கொள்ளத் தக்கது. **பாசப்பற்று நீக்கத்தில் சிவனைப் பற்றி நிற்கையினால் அது சிவப்பேறு எனப்படுகிறது.**

இந்த ஆறாம்சூத்திரன் இரண்டாம் அதிகரணத்தின் கருதது, முதல்வனும் ஆன்மாவும் அத்துவிதமாய் நிற்பதால், முத்தியில் ஆன்மா அவன் அருளால் அவனை அறிதல் கூடும் என்பதே ஆகும்.

இந்த அதிகரணத்தில் வைத்துச் சிந்திக்கத்தக்க சித்தியார்ப் பாடல்கள்.

பாடல் எண்		தொடக்கச் சொற்கள்
244	-	**தத்துவம் சத்தசத்து**
245	-	**அறிபொருள் அசித்தாய்**
2.5	-	**பாவிப்பது என்னில் பாவம்**

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

247 - அந்நியம் இலாமையானும்

248 - ஒன்று எனும் அதனால்

சிவப்பிரகாசம்

86 -பாவிக்கின் மனாதி வேண்டும்.

இந்தச் சூத்திரத்தின் தொகைப்பொருள் வருமாறு

1. பதிக்குச் சிறப்பு இலக்கணம் கூறுகிறது

2. அளவைகளால் அறியப்படும் பொருள் அசத்து; எனவே இறைவன் அளவைகளால் அறியப்படான்

3. இறைவனும் ஆன்மாவும் அத்ததுவிதமய் நிற்பதால், இறைவனருளால் ஆன்மா இறைவனை அறியும். எனவே இறைவன் சித்துச்சத்து எனப்படுகிறான்.

- ஆறாம் சூத்திரம் முற்றிற்று -

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உண்மை அதிகாரம்

சாதன இயல்

சாதித்தற்குரிய அதிகாரியின் இயல்பு

ஏழாம் சூத்திரம்

யாவையும் சூனியம் சத்தெதிர் ஆகலின்
சத்தே அறியாது; அசத்து இலது; அறியாது;
இருதிறன் அறிவுளது; இரண்டலா ஆன்மா.

இதன் பொருள் :

சத்து எதிர் யாவையும் சூனியம் ஆகலின் - மேலைச் சூத்திரத்தில் கூறி முடித்த சிவசத்து அசத்து என்னும் இரண்டனுள், வாக்கு மனதிற்கு எட்டாத சிவசத்தின் சந்நிதியில், பாசஞான பசு ஞானங்களால் உணரப்படும் பொருள் ஆகிய அசத்து எல்லாம் பாழ்; ஆதலால், **சத்தே அறியாது** - சத்து ஆகிய சிவம், அசத்து ஆகிய பிரபஞ்சத்தை அறிதல் செய்யாது; **அசத்து இலது; அறியாது** - அசத்து ஆகிய பிரபஞ்சம் அறிவில்லாத சடம்; ஆதலால் சத்து ஆகிய சிவத்தை அறிதல் செய்யாது; ஆதலால் பாரிசேட அளவையால், **இருதிறன் அறிவு உளது; இரண்டு அலா ஆன்மா** - சத்து அசத்து ஆகிய இரண்டையும் அறியும் அறிவை உடையது, ஒன்று உண்டு என்பது பெறப்படுகிறது; ஆகலின், அந்த அறிவுடைப் பொருளே, சத்து ஆதல் தன்மையும், அசத்து ஆதல் தன்மையும் ஆகிய இரண்டும் இன்றி, அந்த இரண்டனையும் அறியும் உரிமையால், சதசத்தாய் உள்ள உயிர் ஆகும்.

தெளிவுரை :

''**பாரிசேட அளவை**'' என்பது, சிவமும் பிரபஞ்சமும் ஆகிய இரண்டும், ஒன்றனை ஒன்று அறியாது என விலக்கவே, மேல் ஆறு சூத்திரங்களால் கூறி முடித்த முப்பொருள்களுள், எஞ்சிய உயிர்ப் பொருளே, அவ்விரண்டனையும் அறியும் என்று கூறுதல் ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உயிர் சத்து அசத்து ஆகிய இரண்டனையும் அறியும் உரிமை பற்றிச் சதசத்து எனப்பட்டதே அன்றி, சத்தும் அசத்தும் ஆகிய மாறுபட்ட இரண்டு தன்மையை உடையது என்பது அன்று. அவ்வாறாயின், உயிருக்குத் தனித்த இலக்கணம் யாது என்றால், சார்ந்த பொருளின் தன்மையாய் நிற்றலே ஆகும். சாரப்படும் பொருள், சத்து, அசத்து, என்னும் இரண்டுமே ஆகும். ஆகவே, சத்தொடு கூடிச் சத்து ஆகியும், அசத்தொடு கூடி அசத்து ஆகியும் நிற்றல் பற்றிச் ''சதசத்து'' எனப் பட்டமை கருதத்தக்கது.

இந்த இடத்தில், **சத்தின் தன்மையையோ, அசத்தின் தன்மையையோ, உயிர் உடைமையாகக் கொள்ளாது என்பது நினைவில் இருத்திக் கொள்ளத்தக்கது; இரண்டனையும் சார்ந்து, அவற்றின் தன்மையே தன் தன்மையதாக ஆகி நிற்கும் என்பதை நுணுகி நோக்க வேண்டும் 'உடையது ஆதல்' வேறு; 'தன்மையது ஆகி நிற்றல்' வேறு;** ஆகவே உயிர், அவ்விரண்டின் வேறு ஒரு பொருள் என்பது பெறப்படும். சத்தினிடத்து அசத்துப் பிரகாசியாது; அசத்தினுக்கு உணர்வு இன்று; ஆதலால் 'இருதிறன் அறிவு உளது; இரண்டு அலா ஆன்மா' எனப்பட்டது.

ஒரு பொருளை அறியும் பொழுது, அறியப்பட்ட அந்தப் பொருளினால் நமக்கு உண்டாகும் பயனைப் பெறுவதற்கு எண்ணி, அதற்கான முயற்சி செய்ய வேண்டும். அப்போது அந்த முயற்சியைச் செய்யும் தகுதி நமக்கு உண்டு என்பதும், அதனைச் செய்வதால் வரும்பயன் **இது** என்பதும், பயனைப் பெறுதற்கு உரிய **முயற்சி இது** என்பதும், அந்த முயற்சி **வரும்வழி இஃது** என்பதும், அறிந்தால் அன்றி, அந்தப் பயனைப் பெற வேண்டும் என்னும் **மன எழுச்சி** உண்டாகாது; ஆகவே, சாதனம் செய்து பயன் பெறுதற்கு உரிமை உடையது உயிர். எனவேதான் இந்தச் சூத்திரம் 'சாதித்தற்கு உரிய அதிகாரியின் இயல்பு கூறுவது எனப்பட்டது. **பொருளை அறிந்து அனுபவிக்கும் உரிமை மட்டுமே உயிர்க்கு உரியது; அந்தப் பொருளை உடைமையாக்கும் உரிமை உயிர்க்கு இல்லை** என்பது எண்ணிப் பார்க்கத்தக்கது.

'தூலாருந்ததி நியாயம்' என்று ஒரு நியாயம் உண்டு. அஃதாவது, வானத்தில் உள்ள தூலமான நட்சத்திரத்ததைக் காட்டிச் சூக்குமமான அருந்ததி நட்சத்திரத்தைப் பிறகு காட்டுவது போல, பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களின்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பொது இயல்பை முன் ஆறு சூத்திரங்களில் காட்டி, அவற்றின் சிறப்பு இயல்பைப் பின்ஆறு சூத்திரங்களில் காட்டப்படுவது ஆகும். **சிறப்பு இயல்பு** என்பதும் **உண்மை இயல்பு** என்பதும் ஒன்றே ஆகும். பொது இயல்பு தூலம்; உண்மை இயல்பு சூக்குமம்; தூலத்தை ஆராய்ச்சி செய்து உணர்த்திய ஆசிரியர், சூக்குமத்தைச் சாதனம், பயன் என்னும் இரண்டின் வழியாலும் அனுபவ அடிப்படையில் உணர்த்துகிறார்.

சத்து ஆகிய சிவத்தை அடைதற்கு உரிய உரிமை, தனக்கு உண்டு என்னும் அறிவுடைமையே, சாதன வகையில் உயிருக்குச் சிறப்பு இலக்கணம் ஆகும்.

'சத்தே அறியாது' என்ற இடத்திலும், 'இருதிறன் அறிவு உளது' என்ற இடத்திலும், ''**அறிதல்**'' சாதன இயலுக்கு ஏற்ப 'ஏற்புழிக்கோடல்' என்னும் உத்திபற்றி, அனுபவ அறிவைக் குறித்து நின்றது. ஆகவே 'சத்தே அறியாது' என்பதற்குத் 'தன் அனுபவத்தின் பொருட்டு அறியாது'' என்பது பொருள் ஆகும். ஆயினும் **சத்தாகிய சிவம், உயிரின் பொருட்டு ஒன்றாய் நிற்றலின், ஒருசேர அறியும்; வேறாய் நிற்றலின், உயிர்க்கு அறிவித்தற்பொருட்டுஅறியும்; உடனாய் நிற்றலின் உயிரின் அனுபவத்தின் பொருட்டு அறியும்** என்பன பெறப்படும்.

உயிரின் அறிவு பல்வேறு வகைப்படும்; ஆயினும் அவை எல்லாம் **ஆராய்ச்சி அறிவு, அனுபவ அறிவு** என்னும் இருவகையினுள் அடங்கும். அவற்றுள் 'ஆராய்ச்சி அறிவு' என்பது, ஒரு பொருளைக் கருவிகளால் அறிவதைக் குறிக்கும்; 'அனுபவ அறிவு' என்பது, ஒரு பொருளை **நேரே அறிவதைக்** குறிக்கும். ஆகவே ''இருதிறன் அறிவுளது'' என்றதற்குச் சத்து, அசத்து ஆகிய இரண்டையும் உயிர் அனுபவமாக அறியும் அறிவு உடையது என்பது பெறப்படும்.

இந்தச் சூத்திரம் மூன்று அதிகரணங்களை உடையது. அவை வருமாறு:

1. யாவையும் சூனியம் சத்து எதிர் ஆகலின், சத்தே அறியாது.

2. அசத்து இலது; அறியாது

3. இருதிறன் அறிவுளது; இரண்டு அலா ஆன்மா;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஏழாம் சூத்திரம் - முதல் அதிகரணம்

மேற்கோள்

ஈண்டுச் சத்தினிடத்து அசத்துப் பிரகாசியாது என்றது

இதன் பொருள் :

ஒவ்வொன்றாகச் சுட்டி அறிதல் இன்றி, எவற்றுடனும் கலந்து நின்று, ஒருசேர அறியும் சிவசத்தின் முன்னர்ச், சுட்டி அறியப்படும் அசத்து ஆகிய பிரபஞ்சம், விளங்கித் தோன்றாது.

தெளிவுரை :

இந்தச் சூத்திரத்தில் "சூனியம்" என்றது, இல்லாமையைக் குறிக்கவில்லை; விளங்காமையைக் குறித்து நின்றது. 'பிரகாசியாது' என்றது, இது குடம், இஃது ஆடை என்று நம்மால் சுட்டி அறியப்படுவது போன்று, முதல்வனால் சுட்டியறியப்படுவது இல்லை என்பதைக் குறிக்கும். குடம், ஆடை முதலியன நம்மில் வேறாக இருப்பதுபோல, முதல்வனில் வேறாக நிற்றல் இல்லை. எனவே, "**சூனியம்**" என்றதற்கு, வேறு நில்லாமை பற்றியே அன்றிப் பொருள் இல்லாமை பற்றி அன்று என்பது கருதத்தக்கது. பிரபஞ்சம் முதல்வனுக்குத் திருமேனி என்பதை "**இருநிலனாய்த் தீயாகி**" என்னும் திருத்தாண்டகத்தினால் உணரலாம்.

ஏது

மெய்யின் இடத்துப் பொய் அப்பிரகாசமாய் நிற்றலான்,

இதன் பொருள்:

முதல்வனுக்கு இயல்பாகவே உள்ள சிறப்புக் குணங்கள் எட்டனுள், ஒன்று ஆகிய இயற்கை உணர்வின் முன்னர்க், கருவிகளோடு கூடுவதால் உண்டாகும் பொது இயல்பு ஆகிய செயற்கைச் சுட்டுணர்வு, பிரகாசித்து நில்லாமையால், ஈண்டுச் சத்தினிடத்து அசத்துப் பிரகாசியாது என மேற்கோள் கூறியது.

தெளிவுரை:

இயற்கை உணர்வு என்பது, கருவிகளின் துணை இன்றித் தானாக அறியும் அறிவு. செயற்கை உயர்வு என்பது, கருவிகளின்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

துணையால் அறியும் அறிவு. இந்தச் செயற்கை உணர்வு இயற்கையாக உணரமுடியாத உயிருக்கே வேண்டப்படும். இயற்கை உணர்வு உடைய முதல்வனுக்குச் செயற்கை உணர்வு வேண்டப்படமாட்டாது. இயற்கை உணர்வு எக்காலத்தும் நிலை பெற்று இருக்கும் தன் இயல்பு ஆகும். செயற்கை உணர்வு நேர்ந்த பொழுது உண்டாவது; சுதந்தரமாய் இல்லாதது; எனவே அது தோன்றி மறைவது ஆகிய பொது இயல்பு ஆகும். ஆகவே, நிலைபெற்ற தன் இயல்பு 'மெய்' எனப்படும்.' தோன்றி மறைவதான பொது இயல்பு பொய் எனப்படும். 'பொய்' என்பது நிலையாமையைக் குறித்து நின்றது. இந்த அதிகரணத்தில் வரும் மெய், பொய் என்னும் சொற்களுக்கு, மெய்யறிவு; பொய்யறிவு என்பது பொருள் ஆகும். ஆகவே, மெய்யறிவின் முன்னர் பொய்யறிவவு அதற்கு இணையாக விளங்கி நிற்கமாட்டாது. எனவே மெய்ப்பொருளின் முன்னர்ப் பொய்ப் பொருள் பிரகாசிக்க மாட்டாது என்பது பெறப்படும். இயற்கை உணர்வின் முன்னர்ச் செயற்கைச் சுட்டுணர்வு பிரகாசித்து நிற்காது. (பிரகாசித்து - விளங்கி).

முதல்வனுக்குச் செயற்கைச் சுட்டுணர்பு இல்லை. அதனால், பிரபஞ்சம் அவனால் சுட்டி அறியப்படுதல் இல்லை; முதல்வன் எல்லாப் பொருளையும் ஒருசேர அறியும் முற்றுணர்வு உடையவன் என்பது கருத்தில் கொள்ளத்தக்கது.

(1) எடுத்துக்காட்டு வெண்பா

அன்னியம் இல்லாமை அரற்கு ஒன்று உணர்வு இன்றாம்;
அன்னியம் இல்லான் அசத்தைக் காண்குவனேல் - அன்னியமா
காணான்; அவன் முன், கதிர்முன் இருள்போல
மா ணா அசத்து இன்மை மற்று

இதன் பொருள் :

அன்னியம் இல்லாமை அரற்கு ஒன்று உணர்வு இன்று ஆம்- தன்னுள் அடங்கி இருப்பது ஆகிய பசு பாசங்களோடு,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வேற்றுமை இன்றி உடனாய் நிற்கின்ற முதல்வனுக்குச், சுட்டி அறியும்படி வேறாய்க் கிடப்பது ஒன்று இல்லை. அன்னியம் இல்லான் அசத்தைக் காண்குவனேல், அன்னியமாக் காணுன் - ஆதலால் எல்லாப் பொருள்களோடும் கலந்து, உடனாய் நிற்கும் தன்மையன் ஆகிய அம்முதல்வன், அசத்து ஆகிய பிரபஞ்சத்தை அறிய வேண்டுமானால், உடனாய் நின்று எல்லாப் பொருள்களையும் ஒருசேர அறிவனே அன்றி, நம்மனோர் போல வேறாய் நின்று, ஒவ்வொன்றாய்ச் சுட்டி அறிய மாட்டான். கதிர் முன் இருள் போல், அவன்முன் மாணு அசத்து இன்மை - எதனால் என்றால், சூரியன் முன் இருள் முனைத்துத் தோன்றாதவாறு போல, முதல்வன் சந்நிதியில் நன்மை இல்லாத பிரபஞ்சம் விளங்கி நில்லாது ஆதலினாலேயே ஆகும்.

தெளிவுரை :

சூரியன் முன் இருள் விளங்கித் தோன்றாதவாறு போல, முதல்வன் சந்நிதியில் பிரபஞ்சம் விளங்கித் தோன்றாது. எனவே, பிரபஞ்சத்தை முதல்வன் சுட்டி அறியான். சுட்டி அறிகின்ற ஏகதேச அறிவு, ஒருசேர அறியும் முற்றுணர்வைத் தடுப்பது ஆகும்; ஆகவே அந்தச் சுட்டுணர்வு இல்லாமை, முற்றுணர்விற்கு மேம்பாடு ஆவது அன்றிக் குறை ஆகாது.

மாணு - மாணுமை - மாட்சி இல்லாமை - வியாபக உணர்வு ஆகிய பேரறிவிற்கு அறியப்படும் மாட்சி இல்லாமை. எனவே 'மாணு அசத்து' என்பது, நன்மை இல்லாத பிரபஞ்சம் என்று பொருள் உரைக்கப்பட்டது. இன்மை - விளங்காமை. மற்று - அசை.

ஓர் அரசன் தன் ஆணைக்குள் இருக்கும் பூமியைப் பிரித்து அறியாமல், ஒருசேர அறிவதுபோல், முதல்வன் தனக்குள் அடங்கி இருக்கும் பிரபஞ்சத்தைச் சுட்டி அறியாமல், ஒருசேர அறிவன். இஃது எவ்வாறு எனின், அரசன் குடிமக்களோடு கலந்து நின்று, செய்ய வேண்டுவனவற்றைச் செய்வானே அன்றி பூமியோடு கலந்து நின்று தொழில் செய்வதில்லை. அவனுடைய குடிமக்கள் பூமியோடு கலந்து தொழில் செய்வர். அதுபோல, இறைவன் உயிர்களோடு கலந்து நின்று, பிரபஞ்சத்தை அறிவித்தல், அறிதல் ஆகிய தொழில்களைச் செய்தலே அன்றிப் பிரபஞ்சத்தோடு கலந்து, அறிதல் தொழிலைச் செய்வதில்லை.

அவ்வாறாயினும், பூமி அரசனது உடைமை ஆமாறு போல,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இறைவன் பிரபஞ்சத்தைச் சுட்டி அறியாது இருந்தாலும், பிரபஞ்சம் இறைவனது உடைமையே ஆகும். ஆகவே, பிரபஞ்சத்தை இறைவன் சுட்டி அறியான்' என்பதற்கு, இறைவன் பிரபஞ்சத்துடன் கூடித்தொழில் செய்வதில்லை என்பது பொருளே அன்றிப் பிரபஞ்சம் நிலைத்தற்கு இறைவன் உதவி வேண்டப்படுவதில்லை என்பது பொருள் அன்று என்பது கருத்தில் கொள்ளத் தக்கது.

'கதிர் முன் இருள்' என்னும் உவமை, இந்த இடத்தில் சூரியனின் முன்னர் இருள் முனைத்துத் தோன்றாது என்னும் பொருளை மட்டுமே தரும்; சூரியன் முன் இருள் இல்லை என்ற பொருளைத் தராது என்பது நுணுகி நோக்குதற்கு உரியது. சூரியன் மறைந்த பொழுது இருள் விளங்குவதால் சூரியன் உள்ள பொழுதும் இருள் உண்டு என்று அனுமானித்து அறிய வேண்டும்.

இந்த அதிகரணத்தோடு வைத்துச் சிந்திப்பதற்கு உரிய சிவ ஞான சித்தியார்ப் பாடல்கள்;

பாடல் எண்	தொடக்கச் சொற்கள்
249	அனைத்தும் சத்து என்னில்

ஏழாம் சூத்திரம் - இரண்டாம் அதிகரணம்

மேற்கோள்

இனி - அசத்தினுக்கு உணர்வு இன்று - என்றது

இதன் பொருள் :

அசத்து ஆகிய தத்துவப் பிரபஞ்சத்திற்கு அறிவு இல்லை.

தெளிவுரை:

பொதுவாகத் தனு கரண புவன போகங்கள் அனைத்துமே அறிவற்ற சடப்பொருள்களே ஆகும்; ஆயினும், இந்த அதிகரணத்தில் 'அசத்து' என்று குறிப்பிட்டது கரணத்தை மட்டுமே ஆகும். அவ்வாறு கூறுவதற்குக் காரணம், கரணம் ஆள்மாவுக்குக் கண்ணாடி போல்வது. கண்ணாடியுள் ஒன்றும் இல்லை; ஆயினும், எதிர்ப்பட்ட பொருள்கள் அதில் விளங்கித்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தோன்றுகின்றன. அது போல கரணம் சடம் ஆயினும், ஆன்மாவின் முன்னிலையில் கரணத்தில் ஆன்ம அறிவு உளது ஆகும்; என்றாலும் கரணம், சத்து ஆகிய சிவத்தை அறியுமாறு ஆன்மாவுக்கு ஒருபோதும் உதவாது.

ஏது

அது தான் நிரூபிக்கின் இன்று ஆகலான்

இதன் பொருள்:

'பாச அறிவு' என்பது மேற்போக்காக நோக்கும் பொழுது, அசத்து ஆகிய அக்கருவிகட்கு அறிவு உள்ளது போல் தோன்றும்; என்றாலும், ஐயம்திரிபு இன்றிக் குற்றமற்ற காட்சியால் ஆராயும் பொழுது, அக்கருவிகளிடத்தில்அறிவு இல்லை என்பது விளங்கும். எனவே, இனி அசத்தினுக்கு உணர்வு இன்று என மேற்கோள் கூறியது.

தெளிவுரை:

'காட்சி' என்பது, நிருவிகற்பக் காட்சி, ஐயக்காட்சி, விபரீதக் காட்சி, சவிகற்பக்காட்சி என நான்கு வகைப்படும். அவற்றுள் ஒரு பொருளைப் பிண்டமாகக் காண்டல், **'நிருவிகற்பக் காட்சி'** எனப்படும். (பிண்டமாக - மொத்தமாக). அதுவோ இதுவோ என்று சந்தேகப்பட்டுத் காண்டல் **'ஐயக்காட்சி'** எனப்படும். ஒன்றைப் பிறிது ஒன்றாகக் காண்டல், **'விபரீதக் காட்சி'** எனப்படும். உள்ளவாறு விளங்கக் காண்டல், **'சவிகற்பக் காட்சி'** எனப்படும். சவிகற்பம் என்பது, விகற்பத்தோடு கூடியது ஆகும். விகற்பம் என்பது, பொருளின் உண்மைத்தன்மையைக் குறிக்கும். இந்தச் சவிகற்பக் காட்சியே குற்றம் அற்ற காட்சி ஆகும். இந்தக் குற்றமற்ற காட்சியால் ஆராயும் பொழுது. கருவிகட்கு அறிவு இல்லை என்பது புலப்படும். எனவே, கருவிகள் ஆகிய இந்திரியம். அந்தக் கரணங்களின் வழியாக உயிரினிடத்து உண்டாகின்ற ஞானத்தைக் , கண்கண்டது, மனம் நினைத்தது, என அந்தக் கருவிகளின்மேல் ஏற்றிப் 'பாசஞானம்' என்று உபசரித்துக்கூறப்படும். அவ்வளவே அன்றிப் பாசத்துக்கு உள்ள ஞானம் என்று கூறுவது, ஆராயாத பொழுது ஏற்படும் அறியாமையே அன்றிப் பிறிது இல்லை.

கண் ஒரு பொருளைக் காணும் பொழுது, காணும் தொழில்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நிகழ்கின்றது என்று மட்டும் காண்பது நிருவிகற்பக் காட்சி; கண்கண்டதோ உயிர் கண்டதோ என்று காண்பது ஐயக் காட்சி; கண்ணே கண்டது எனக் காண்டல், விபரீதக் காட்சி; கண்ணின் வழியாக உயிர் கண்டது எனக் காண்டல், குற்றமற்ற சவிகற்பக் காட்சி. இந்தவிதமாக ஒவ்வொரு பொருளினிடத்தும் கண்டுகொள்ள வேண்டும். எனவே, கரணத்திற்கு அறிவு இல்லை என்பது தெளிவாயிற்று.

(2) எடுத்துக்காட்டு வெண்பா

பேய்த்தேர் நீர் என்று வரும் பேதைக்கு, மற்று அணைந்த பேய்த்தேர் அசத்து ஆகும் பெற்றிமையின்- வாய்த்து அதனைக் கண்டு உணர்வார் இல்வழியின் காணும் அசத்து இன்மை கண்டு உணர்வார் இல்லது எனக் காண்.

இதன் பொருள்:

பேய்த்தேர் நீர் என்று வரும் பேதைக்கு, மற்று அணைந்த பேய்த்தேர் அசத்து ஆகும் பெற்றிமையின் - தண்ணீரும் மரஞ்செடி முதலியனவும் இல்லாத பாலை நிலத்தில் காணப்படுகின்ற கானலை, நீர் என்று எண்ணி, அந்த நீரை உண்ண வருகின்ற அறிவில்லாதவனுக்குத்; தண்ணீர் என்று கருதி, அந்தக் கானலை நெருங்கிய பொழுது, அந்தக் கானல் தண்ணீராகாமல் பொய் ஆகும் தன்மை போல, வாய்த்து-ஆசிரியர் உபதேசிக்கும் உபதேச மொழி கிடைக்கப்பெற்று, **அதனைக் கண்டு உணர்வார் இல்வழியின் அசத்து இன்மை காணும்** - அந்த அசத்தின் தன்மையை ஆராய்ந்து அறிவார் இல்லாத பொழுது, உண்மையினை அறியும் தன்மை இல்லாத அவர்க்கு, அசத்து ஆகிய கருவியினிடத்து, அறிவுடையத்தாய் மதிக்கப்படும் சத்து ஆகும் தன்மையே காணப்படும். **கண்டு உணர்வார் இல்லது எனக் காண்** - அந்த உபதேச மொழி கிடைக்கப் பெற்று, அசத்தின் தன்மையை ஆராய்ந்து அறிய வல்லார்க்கு, அந்த அசத்து ஆகிய கருவி அறிவு இல்லாததே ஆகும் என்பதை அறிவாயாக.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை :

அறியாதவனுக்குக் கானல், நீராய்த் தோன்றும். ஆயினும் நெருங்கிப் பார்க்கும் பொழுது, நீர் இல்லாததைக் காண்பான். அதுபோல, ஆராய்ந்து அறியாதபோது, கருவி அறிவுடையது போலத் தோன்றும், ஆயினும் அறிந்த பொழுது கருவி அறிவில்லாததே என்பது தெளிவாகும்.

'இல்லது எனக் காண்' என்பது, பொருள் இல்லை என்னும் கருத்தில் இல்லை; அறிவில்லை என்னும் கருத்தில் நின்றது என்பது கருதத்தக்கது.

ஏழாம் சூத்திரம் - மூன்றாம் அதிகரணம்

மேற்கோள்

இனி இருதிறன் அறிவுளது; இரண்டு அலா ஆன்மா என்றது.

இதன் பொருள்:

சத்து, அசத்து என்னும் இரண்டின் இயல்பை அறியும் அறிவு உடையது உயிர்; எனவே, உயிர் சத்தும் அன்று; அசத்தும் அன்று; உயிர் 'சதசத்து' ஆகும்.

தெளிவுரை:

இந்த அதிகரணத்தின் மேற்கோளுக்கு, வேறு 'ஏது' கூறாமல், அதற்குப் பொழிப்புரை கூறியிருக்கிறார் ஆசிரியர், இதற்குக் காரணம், முந்திய இரண்டு அதிகரணத்தின் மேற்கோள்களே இந்த மேற்கோளுக்கு 'ஏது' வாக இருப்பதனாலேயே ஆகும். இதற்கு விளக்கம் வருமாறு,

''இரண்டு அலா ஆன்மா, இருதிறன் அறிவுளது'' என்பது இந்த அதிகரணத்தின் மேற்கோளாகும். ''சத்து எதிர் நில்லாத அசத்தும், சத்தும் தம்முள் ஒன்றால் ஒன்று அறியப்படாமையால்'' என்பது ஏது ஆகும். சூரியனைப் பொருள்கள் **அனுபவியா;** பொருள்களைச் சூரியன் **அனுபவியான்;** இவ்வாறு ''ஒன்றால் ஒன்று அனுபவிக்கப்படாத சூரியனையும் பொருள்களையும், அனுபவிக்கும் கண் போல'' என்பது எடுத்துக் காட்டு, எனவே, ''இருதிறன் அறிவு உளது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இரண்டு அலா ஆன்மா'' வே ஆகும். ஆகவே, இவ்விரண்டும் உயிரால் அறியும் தன்மை உடையன என்பது பெறப்பட்டது.

மேற்கோளின் பொழிப்புரை

இவ்விரண்டினையும் அறிவதாய், உபதேசியாய் நின்ற அவ்வறிவு, இரண்டன்பாலும் உள்ள அதுவே, அவ்வான்மாவாம் என்றது.

இதன் பொருள்:

மேல் இரண்டு அதிகரணங்களால் கூறி முடித்த சத்து ஆகிய சிவத்தையும், அசத்து ஆகிய பிரபஞ்சத்தையும் அறியும் தன்மை உடையதாய், அவ்வாறு அறிவதும் தானே அறிதல் இன்றி, அறிவிக்க அறியும் தன்மை உடையதாய்ச் சத்து அசத்து ஆகிய அவ்விரண்டின் கண்ணும், அது அதுவாய் நின்று அழுந்தும், நிலைபெற்ற அனுபவ அறிவு உடையதாய் உள்ள பொருள் யாது? அதுவே சத்தும் அசத்தும் அல்லாத 'சதசத்து' ஆகிய உயிர் ஆகும். ஆகவே, ''இருதிறன் அறிவு உளது இரண்டு அலா ஆன்மா'' என மேற்கோள் கூறப்பட்டது.

தெளிவுரை :

''இருதிறன் அறிவு'' என்பது வேற்றுமை உருபு அடங்கி இருக்கும் தொகைச்சொல், இச்சொல் மூன்று உருபுகள் விரிந்து பொருள் தரும் வகையில் நின்றது. அவை வருமாறு!

1. இரண்டாம்வேற்றுமை ''ஐ'' உருபை விரித்து இருதிறனையும் அறியும் அறிவு என்னும் பொருள் பற்றி, **இவ்விரண்டினையும் அறியும் அறிவதாய்** எனவும்,

2. மூன்றாம் வேற்றுமை 'ஆல்' உருபை விரித்து, இருதிறனால் விளங்கிய அறிவு என்னும் பொருள் பற்றி, **உபதேசியாய்** எனவும்,

3. ஏழாம் வேற்றுமை 'இல்' உருபை விரித்து, இருதிறனிலும் உள்ள அறிவு என்னும் பொருள் பற்றி நின்ற அறிவு, **இரண்டன் பாலும் உளதாய்** எனவும் உரைக்கப்பட்டன.

இந்த அதிகரணத்தில் **ஆன்மாவின் சிறப்பு இலக்கணம்** கீழ்க்காணுமாறு தெளிவுறுத்தப்படுகிறது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

1. ''இரண்டினையும் அறிவதாய்'' என்றதால், ஆன்மாவின் அறிவு, சத்துப் போல் **ஒருசேர அறியும் தன்மையும்** அசத்துப் போல் **அறியாத தன்மையும்** இன்றி, இருளின் தன்மையும் ஒளியின்தன்மையும் அல்லாத கண்ணின் தன்மை போல, ஏகதேசமாய் அறியும் வேறு ஆயதோர் தன்மையது என்பதும்,

2. ''உபதேசியாய்'' என்றதால், அந்த ஏகதேச அறிவும், ஆகாயத்தின் குணம் ஆகிய ஓசை, துணை உள்ள இடத்து விளங்குவது போலப், **பெத்தத்தில் கருவியையும் முத்தியில் திருவருளையும் துணையாகக் கொண்டு விளங்கும்தன்மையது** என்பதும்,

3. ''இரண்டன்பாலும் உளதாய்'' என்றதால், துணையைக் கொண்டு விளங்கும் ஏகதேச அறிவும், சார்ந்த பொருளின் வண்ணமாய் விளங்கும் படிகம் போல, அசத்தோடு சார்ந்த இடத்து அசத்தாயும், சத்தோடு சார்ந்த இடத்துச் சத்தாயும் இவ்வாறு சார்ந்ததன் **வண்ணமாய் அழுந்தும் தன்மையது** என்பதும் பெறப்பட்டன.

(3) எடுத்துக்காட்டு வெண்பா

அரு உருவம் தான் அறிதல் ஆயிழையாய், ஆன்மா
அரு உருவம் அன்று ஆகும் உண்மை - அருவுருவாய்த்
தோன்றி உடன் நில்லாது; தோன்றாது நில்லாது;
தோன்றல் மணம் போல் தொக்கு.

(கொண்டு கூட்டு) ஆய் இழையாய், ஆன்மா அருவுருவம் அறிதல் அருவுருவம் அன்று ஆகும்; உண்மை அருவுருவாய்த் தோன்றி, உடன் நில்லாது தோன்றாது நில்லாது, மலர் மணம் போல் தொக்குத் தோன்றல்,

இதன் பொருள்:

ஆய் இழை ஆய், ஆன்மா அருவுருவம் அறிதல், அருவுருவம் அன்று ஆகும் - நுணுகிய நூல்களை ஆராய்வது

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆகிய உயிரே, சத்து அசத்து என்னும்இரண்டினையும் அறிவது ஆகும். ஆகவே, அவ்வுயிர் அவ்விரண்டும் அன்றி, அவ்விரண்டின் வேறு ஆகும்.

அவ்வாறாயின், அவ்விரண்டினையும் அறியும் உயிர்க்குத், தன் உண்மை அறியப்படுமோ படாதோ எனறு கேட்பவருக்கு அறியப்படும் என்று விடை கூறினால். தன்னோடு கூட மூன்றனையும் அறிவது என்று கூறாமல், இரண்டனையும் அறிவதாய் என்று கூறியது பொருந்தாது; அறியப்படாது என்று விடைகூறினால், அறியப்படாத பொருள் சூனியம் எனப்பட்டுக் குற்றம் ஆகும்.

உண்மை அருவுருவாய்த் தோன்றி உடனில்லாது, தோன்றாது நில்லாது. மலர் மணம் போல் தொக்குத் தோன்றல்

-இனி முடிபுதான் யாது என்றால், அந்த ஆன்மாவின் உண்மைத் தன்மை என்பது, சத்து அசத்து ஆகிய அவ்விரண்டும் போல விளங்கித் தோன்றி, அந்த இரண்டனோடு சமமாய் நிற்பதும்அன்று; விளங்காது சூனியமாய் நிற்பதும் அன்று. சத்தைச் சார்ந்த பொழுது சத்தாயும், அசத்தைச் சார்ந்த பொழுது அசத்தாயும், இவ்வாறு **சார்ந்த பொருளின் வண்ணமாய் அடங்கித் தோன்றுவதோர் இயல்பு ஆகும்.** இஃது எது போல் எனின், மலரில் உளள மணம், அந்த மலரைப் போல விளங்கித் தோன்றுதலும் அன்று; விளங்காது சூனியமாய் நிற்பதும் அன்று; இந்த இருவகையும் அன்றி, அந்த மலரில் அடங்கித் தோன்றும் மணம் போல் ஆகும். ஆகவே உயிர், சத்தும் அசத்தும் போலத் தனித்து அறியப்படுவது அன்றி, அந்த இரண்டனையும் அறியும் வழியால் அறியப்படுவது ஆகும்.

தெளிவுரை:

உயிர், சத்து அசத்து ஆகிய இரண்டையும் - அறியும் முறையில் தன்னையும் அறியும். 'அரு' என்பது சத்தைக் குறிக்கும்; 'உரு' என்பது அசத்தைக் குறிக்கும். சத்து சுட்டி அறியப்படாமைால் 'அரு' எனப்பட்டது; அசத்து சுட்டி அறியப்படுவதால் 'உரு' எனப்பட்டது. ''அருவுருவந்தான்'' என்பதில் உள்ள 'தான்' என்பது அசை ''ஆய் இழை ஆய்'' என்பதில் உள்ள ''இழை '' என்பது நூல் எனப்பட்டு, இங்குச் சாத்திரத்தைக் குறித்து நின்றது. முதலில் வரும் ய்'' என்பது

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

''நுணுகுதல்'' என்னும் பொருளைத்தரும்; பின் உள்ள ''ஆய்'' என்பது 'ஆராய்வது' என்னும் பொருளை உடையது ஆகும். ஆகவே, 'ஆயிழையாய்' என்னும் சொல், பெண்ணை முன்னிலைப் படுத்தி விளிக்கும் பொருளில் இங்கு அமையவில்லை.

(4) எடுத்துக்காட்டு வெண்பா

மயக்கமது உற்றும் மருந்தின் தெளிந்தும்
பெயர்த்து உணர் நீ சத்து ஆகாய் பேசில் - அசத்தும் அலை
நீ அறிந்து செய்வினைகள் நீ அன்றி வேறு அசத்துத்
தான் அறிந்து துய்யாமை தான் .

(கொண்டு கூட்டு) மயக்கமது உற்று மருந்தின் தெளிந்தும், பெயர்த்து உயர் நீ பேசில், சத்து ஆகாய்; நீ அறிந்து செய்வினைகள் நீ அன்றி வேறு அசத்து தான் அறிந்து துய்யாமை அசத்தும் அலை வேறு.

இதன் பொருள்:

மயக்கமது உற்றும் மருந்தின் தெளிந்தும் - உன்னுடைய அறிவை விளக்குதற்கு உரிய துணை இல்லாத பொழுது, ஒரு பொருளை இன்னது என்று அறியமுடியாமல் மயக்கம் அடைவாய்; பசிநோய் தீர்வதற்கு, அன்னம் (சோறு) மருந்து ஆவதுபோல, அந்த மயக்கநோய் தீர்வதற்குக் கருவி என்னும் துணை, மருந்து ஆகும். துணை உள்ளபொழுது, அந்த மயக்கம் நீங்கி, அந்தப் பொருளை இன்னது என்று நிச்சயிப்பாய். **பெயர்த்து உணர் நீ பேசில் சத்து ஆகாய்** - இவ்வாறு துணை இல்லாத பொழுது மயங்கியும், துணை உள்ள பொழுது மயங்காமல் நிச்சயித்தும், மாறி மாறி அறிந்து வருகின்ற நீ, சொல்லுமிடத்து, என்றும் ஒரு படித்தாய்த் துணை இன்றி இயல்பாக அறியும் இறைவன் போல அறியும், சத்தியை உடையாய்.அல்லை; அவ்வாறாயின், யான் அசத்தன் ஆவனோ எனில்,

நீ அறிந்து செய்வினைகள் நீ அன்று வேறு; அசத்து தான்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அறிந்து துய்யாமை அசத்தும் அலை - துணை உள்ள போதும், நீ முன் அறிந்து செய்த வினைகள் பலனுக்கு வரும்பொழுது, அந்த வினைப்பயன்களை, இப்பொழுது நீயே அறிந்து , அனுபவிக்கும் வல்லமை உடையாய்; அன்றி உன்னின் வேறாய் உள்ள அறிவு இல்லாத பாசம், அறிந்து அனுபவிக்க மாட்டாது; ஆதலால், நீ அசத்தனும் ஆகாய். வேறு - ஆகவே ஆகாயத்தில் உள்ள குணம் ஆகிய ஓசை, துணை உள்ளபோது விளங்கித் துணை இல்லாதபோது விளங்காதவாறு போல, உன்னிடத்தில் உள்ள குணம் ஆகிய அறியும் தன்மை துணையுள்ளபொழுது அறியும் ஆற்றல் இருப்பதாகவும், துணையில்லாதபொழுது அறியும் ஆற்றல் இல்லாததாகவும் காணப்படும்; படவே அறிதல் அறியாமை ஆகிய இரண்டும் உடைய நீ, துணை இன்றி அறியும் சத்தும், துணை உள்ளபொழுதும் அறியாத அசத்தும், ஆகிய அவ்விரண்டற்கும் வேறாய்ச் சித்து அசித்து என்னும் இரண்டு தன்மையை உடைய பொருள் ஆவாய்,

தெ ரிவுரை :

சத்தியை உடைய பொருள் சத்தம்; சத்தி இல்லாத பொருள் அசத்தம். சத்தம் ''அசத்தம்'' என்னும் வடமொழிகள், தமிழில் 'அம்' கெட்டு, 'சத்து', 'அசத்து' என நின்றன, இதற்கு எடுத்துக்காட்டாக, ''வாதம்'' என்ற சொல் ''வாது'' என்று, 'வாது செயத் திருவுள்ளமே'' என்னும் திரு ஆலவாய்ப் பதிகத்தில், சம்பந்தப் பெருமான் அருளியவாற்றால் அறியலாம்.

(5) எடுத்துக்காட்டு வெண்பா

மெய்ஞ்ஞானம் தன்னில் விளையாது அசத்து ஆதல்
அஞ்ஞானம் உள்ளம் அணைதல்காண் - மெய்ஞ்ஞானம்
தானேஉளது அன்றே தண்கடல் நீர் உப்புப்போல்
தான் ஏய் உளம் உளவாத் தான்.

(கொண்டு கூட்டு) அஞ்ஞானம், மெய்ஞ்ஞானம், தன்னில் அசத்து ஆதல் விளையாது: மெய்ஞ்ஞானந்தானே உளது அன்றே தான் ஏய் உளம் உளவா உள்ளம் அணைதல் தண்கடல் நீர்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உப்புப்போல் காண்.

இதன் பொருள்:

அஞ்ஞானம் - மேலை வெண்பாவில், உயிர்க்கு உண்டு என்று கூறிய மயக்கம், **மெய்ஞ்ஞானம் தன்னில் அசத்து ஆதல் விளையாது** - வேறு வேறாகவும் விட்டு விட்டும்அறியாமல், எவற்றையும் ஒரு தன்மையாகவும் நீங்காமலும் அறிகின்ற அறிவுருவாகிய இறைவன் சந்நிதியில் நிற்பது இல்லை: அஃது எது போல எனின், சூரியன் முன் இருள் நில்லாதவாறு போல் ஆகும்; **மெய்ஞ்ஞானம் தானே உளது அன்றே** - அந்த மயக்கம் இறைவனிடத்து ஏற்படாமல், வாலறிவனாகிய இறைவன் உள்ள அன்றே **தான் ஏய் உளம் உளவா** - உயிரினிடத்து உள்ளது. **உள்ளம் அணைதல்** - இவ்வாறு இந்த மயக்கம், இறைவனைப் பற்றாமல் உயிரைப் பற்றி நிற்றல் எது போல எனின், **தண்கடல் நீர் உப்புப் போல் காண்** - குளிர்ச்சி பொருந்திய நீர்க்கு, இடம் கொடுத்து இருக்கும் ஆகாயத்தில் (அஃதாவது கடலின் கண்) உப்பு உளதாகாமல், அந்தக் கடலில் உளதாகிய நீரை, அந்த உப்பு பற்றி நிற்பது போல் ஆகும்.

தெளிவுரை :

உப்பு, நீர்க்கு இடம் கொடுத்து, இருக்கும் ஆகாயத்தைப் பற்றுவது இல்லை; நீரைப்பற்றியே நிற்கும். அதுபோல, அஞ்ஞானம் (மயக்கம்), மெய்ஞ்ஞானமே வடிவாகிய இறைவனைப் பற்றுவது இல்லை; அஃது உயிரை அநாதியே பற்றி நிற்கும்.

சிவஞானபோதம் நான்காம் சூத்திரத்தின் இரண்டாம் அதிகரணத்தில் கூறியவாறு, **உயிரினிடத்து உள்ள பற்றும் தன்மை** காரணமாகவே, அஞ்ஞானம் உயிரைப் பொருந்துவதற்கு உரிமையுடையது ஆகிறது.

"**தண்கடல் நீர் உப்புப் போல்**" என்னும் உவமையிலிருந்து வியாபக இலக்கணம் கூறப்படுகிறது. அது வருமாறு!

கடல் போலப் பதி, பூரண வியாபகம் உடையது.

நீர் போலப் பசு, ஏகதேச வியாபகம் உடையது.

உப்புப் போலப் பாசம், நீரின் அளவில் வியாபித்து இருப்பது. 'ஏக தேச வியாபகம்' என்பது **வியாப்பியம்** ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நீரின் அளவில் வியாபித்து இருப்பது வியாத்தி ஆகும். **வியாப்பியம்** அடங்கிய நிறைவையும், **வியாத்தி** சம நிறைவையும் குறிக்கும். கடல் என்பது நீர் தங்கும் இடமாகிய ஆகாயம் (வெளி) ஆகும். நீருக்குக் கடல் ஆகிய ஆகாயத்தினிடத்தும், உப்பினிடத்தும் சம்பந்தம் உள்ளது; அதுபோல, உயிருக்குப் பதியினிடத்தும் பாசத்தினிடத்தும் சம்பந்தம் உள்ளது. ஆகவே, சத்து அசத்து ஆகிய இரண்டன் பாலும் உயிர் உளது என்பது இவ்வெண்பாவால் வலியுறுத்துப் பெற்றது.

உயிர், சத்தோடு கூடிச் சத்தாயும், அசத்தோடு கூடி அசத்தாயும் நின்று அறிவதால், சதசத்து ஆகிய உயிர் அறியும் பொருள் என்பது பெறப்பட்டது. உயிரின் அறிவு ஆகிய ஞானசத்தியே அஃது அறிதற்குக் கருவி ஆகும். அந்த அறிவின் வியாபாரமே அறிதல் ஆகும்.

சத்து அசத்து என்னும். இரண்டனுள், அசத்தால் உயிரின் அறிவு விளங்கும் பொர்ழுது, அசத்தின் வேறாய் நின்று விளங்கும். அந்நிலையில், பிரத்தியட்சம் (காண்டல்) அனுமானம் (கருதல்). ஆகமம் (உரை) எனப்படும் பாசஞானம் மூன்றும், ஆன்ம அறிவிற்குத் துணைகள் ஆகும். சத்தால் உயிரின் அறிவு விளங்கும் போது சத்தின் வேறாக நிற்காமல் தனக்கு ஆதாரமாய்த் தன்னோடு உடனாய் நின்று விளக்கும் சிவஞானம், ஆன்ம அறிவிற்குத் துணை ஆகும். ஆகவே, மேற் கூறிய மூவகைப் பிரமாணங்களால் ஆகிய பாச ஞானத்தைத் துணையாகக் கொண்டு பாசத்தையும், சிவ ஞானத்தைத் துணையாகக் கொண்டு சிவத்தையும் உயிர் அறியும் என்பது பெறப்படும். படவே, பாச ஞானம் உயிர்க்கு வேறாயும், சிவஞானம் உயிரோடு உடனாயும் நிற்கும் என்பது விளங்கும்.

இனிச் சத்து அசத்து இரண்டனையும் உயிர் அறிவதால், தான் உண்டு என்று அறியும் உயிர், இரண்டு இடத்தும் கேடு இன்றி, அசத்தால் விளங்கி, அச்தை அறியும் பொழுது, அசத்தின் கண்ணும், சத்தால் விளங்கிச் சத்தை அறியும் பொழுது, சத்தின் கண்ணும், அது அதுவாய் அழுந்தும் என்பது தெளியல் ஆகும்.

இந்த அதிகரணத்தோடு வைத்துச் சிந்திக்கத் தக்க சித்தியார்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சிவப்பிரகாசப் பாடல்கள் வருமாறு:

பாடல் எண்		தொடக்கச் சொற்கள்
சித்தியார்:		
250	-	சத்தசத்து அறிவது ஆன்மா
251	-	சுத்த மெய்ஞ்ஞான மேனி
சிவப்பிரகாசம்:		
57		சத்து இது என்று அசத்து

இந்தச் சூத்திரத்தின் தொகைப் பொருள் வருமாறு

1. இறைவன் தானே அறியும் இயற்கை உணர்வு உடையவன்; அவன் முன்னர், செயற்கைச் சுட்டுணர்வு விளங்கித் தோன்றாது. எனவே, அசத்து ஆகிய பிரபஞ்சத்தை அறியாததால், முதல்வனின் முற்றறிவிற்குக் குறை ஆகாது.

2. கருவி கரணங்களுக்கு அறிவு உள்ளது போலத் தோன்றும். ஆராயும் பொழுது. அவற்றிற்கு அறிவு இல்லை என்பது பெறப்படும். பிரபஞ்சத்திற்கு அறிவு உண்டு என்று கூறுவது, கானலில் நீர் உண்டு என்று கூறுவதைப் போன்றதாகும்,

3. அறிவற்ற சடப் பொருள் ஆகிய பிரபஞ்சம் முற்றறிவுடைய சத்துப் பொருள் ஆகிய இறைவனை அறியாது.

4. சத்து அசத்து ஆகிய அவ்விரண்டினையும், அவ்விரண்டினலும், அவ்விரண்டின் கண்ணும் அதுவதுவாய் நின்று அறிவது உயிர் ஒன்றே ஆகும்.

5. சத்து அசத்து ஆகிய அவ்விரண்டையும் அறியும் உயிர், சத்தும் அன்று; அசத்தும் அன்று அவ்விரண்டின் வேறாகிய அறிவுடைய பொருள் ஆகிய சதசத்து ஆகும். சார்ந்ததன் வண்ணமாம் தன்மை ஆகிய உயிரின் சிறப்பு இலக்கணம் இவ்வாறு இந்தச் சூத்திரத்தில் விளக்கப்பட்டது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எட்டாம் சூத்திரம்

ஆன்மா செய்ய வேண்டிய சாதனமும், அந்தச் சாதனம் வரும் வழியும், சாதித்ததனால் பெறப்படும் பயனும் கூறப்படுகிறது.

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து எனத்,
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த, விட்டு,
அன்னியம் இன்மையின், அரன்கழல் செலுமே.

இதன் பொருள் :

உயிர், தான் முன் பிறப்புக்களில் செய்த புண்ணியச்சிறப்பின் பயனாக, இதுவரைத் தனக்கு (அந்தரியாமியாய்) உள் நின்று சரியை கிரியா யோக மார்க்கங்களை உணர்த்தி வந்த பரம்பொருளே இப்பொழுது ஞானமார்க்கத்தை அருளும் பொருட்டுக், குருவடிவம் கொண்டு எழுந்தருளி வந்து, சிவ தீக்கை செய்து தன்னைப் பார்த்து, ''அரச குமாரன் ஆகிய நீ, ஐம்பொறிகள் ஆகிய வேடருக்கு உட்பட்டு வளர்ந்து, உன் பெருமைகளை அறியாமல் மயங்கித் துன்பப்பட்டாய்; உன் பெருந்தன்மை இத்தன்மையது' என்று அறிவிக்கிறது; அந்நிலையில் , அவ்வுண்மையை அறிந்து, அறிந்த அப்பொழுதே அந்த வேடரை விட்டு நீங்கி, முதல்வன் ஆகிய அரசனோடு அந்நியம் இன்றி, (அநன்னியமாய்ப்) பிரிக்க முடியாத தன்மையில், நிலை பெற்று முதல்வன் திருவடிகளை அணையும்.

தெளிவுரை :

இந்தச் சூத்திரத்தைத் 'தவத்தினில் தம்முதல் குருவுமாய், ஐம்புல வேடரின் வளர்ந்து அயர்ந்தனை என உணர்த்த, விட்டு, அரன் கழல் செலுமே' என்று இயைத்துக் கொள்க.

'ஐம்புலம்' என்பது, ஐம்புலனையும் அறிகின்ற ஐம்பொறிகளைக் குறித்து நின்றது. (ஐம்புலன் ஆவது, கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் ஐந்து விடயங்கள் ஆகும்.) இவற்றை முறையே ரூபம், சத்தம், இரதம், கந்தம்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பரிசம் என்று வடமொழியில் கூறுவர். ஐம்பொறி ஆவது, மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து இந்திரியங்கள் ஆகும்.

'ஐம்புல வேடரின் வளர்ந்து அயர்ந்தனை' என்பது வளர்ந்தமையால் அயர்ந்தனை' எனப் பட்டு, ''வளர்தல்'' காரணமும் ''அயர்தல்'' காரியமும் ஆய் நின்றது. 'தம்முதல்' என்பது, எல்லா உயிர்க்கும் பொதுவாகிய முதல்வனைக் குறிக்கும். 'குருவுமாய்' என்பது, உயிர்க்கு உயிராய் உள் நின்று உணர்த்துவதைக் குறிக்கும். 'உள் நின்று உணர்த்துவது' என்று இங்குக் கூறியது, விஞ்ஞானகலர்க்கு உணர்த்துவது போல் அன்று; சரியை, கிரியா, யோகங்களை உணர்த்தும் குருவினால் அறிவிக்கப்படுவதை, அறிந்து கொள்ளும்படி **உள் நின்று சகலர்க்கு உபகரித்தலையே** உள் நின்று உணர்த்தியது என்று கூறப்பட்டது.

அன்னியம் இன்மை' என்பது, பிரிக்க முடியாத அத்துவிதத்தைக் குறிக்கும், அஃதாவது, ஐம்பொறிகளை விட்ட இடத்து, அரன் திருவடிகளை அடைவதற்கு, ஏதுவாய் நின்ற பிரிக்க முடியாத சம்பந்த விசேடம் ஆகும். திருவடியோடு உயிர் என்றும் பிரிப்பின்றி நிற்பதால், ஐம்பொறிகளை விட்ட பொழுது, திருவடியை அடையும் என்பது பெறப்படும்.

''அடைதல்'' என்பது முதல்வனைப் பிரிந்து நின்று அடைதல் என்பது பொருளன்று. உயிர், அரன் திருவடியோடு என்றும் பிரிப்பின்றி நிற்கிறது என்றாலும், அவ்வாறு நிற்கின்றோம்என்பதை,ஐம்பொறியின் கூட்டத்தால் மறக்கும்; பின்பு ஆசிரியர் உபதேசித்ததும், அவ்வாறு நிற்பதை அறியும். அவ்வாறு அறிதலே, **''திருவடியை அடைதல்''** என்பதற்குப் பொருள் ஆகும். திருவடி என்பது திருவருள் ஆகிய சிற்சத்தியைக் குறிக்கும். **''அருளைப் பெறுதல்'' என்பதற்குப் பொருள், பொறி புலன்களை மறந்து, திருவருளை மட்டுமே அழுந்தி அறிதல் ஆகும்.**

இந்தச் சூத்திரத்தில், முதல்வனை மன்னன் ஆகவும், ஆன்மாவை மன்னவ குமாரன் ஆகவும், ஐம்பொறிகளை வேடர் ஆகவும் உருவகம் செய்யப்பட்டுள்ளது.. மன்னவ குமாரன், மன்னவனுக்கு உரிய செல்வங்களை அனுபவிக்கும் சுதந்தரம் உடையவன்; மன்னவ சாதியும் ஆவன்; ஆயினும், மன்னவன் ஏவல்வழி நின்றே அனுபவிப்பான். அதுபோல, உயிரும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முதல்வன் அருள்வழி நின்றே, சிவானந்தத்தை அனுபவிக்கும் என்பது பெறப்படும்.

இந்தச் சூத்திரம் நான்கு அதிகரணங்களை உடையது. அவை வருமாறு:

1. தவத்தினில் உணர்த்த

2. தம்முதல் குருவுமாய்

3. ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து என

4. விட்டு, அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே

எட்டாம் சூத்திரம் - முதல் அதிகரணம்
மேற்கோள்

ஈண்டு இவ்வான்மாக்களுக்கு முற் செய் தவத்தான் ஞானம் நிகழும் என்றது.

இதன் பொருள்:

ஏழாம் சூத்திரத்தில் கூறி முடித்தபடி, சத்து அசத்து இரண்டினையும் அறியும் இயல்பு உடைய ஆன்மாக்களுக்கு இந்த ஒரு பிறவியில் செய்த தவத்தில் ஆகாமல் முன் பிறவிகளிலே ஒன்றன் பின் ஒன்று ஆகிய படிமுறையால், செய்து வந்த தவம் ஆகிய சரியை கிரியா யோக விசேடத்தால், குரவன் உணர்த்திய வண்ணம், சிவஞானம் கண்ணுக் கொண்டு அறிவது ஆகிய சாதன அறிவு, ஐயம் திரிபு இன்றி விளங்கும்.

ஈண்டு - இந்தச் சூத்திரத்தின் முதல் அதிகரணத்தில்

என்றது - என்றவாறு கூறிற்று.

தெளிவுரை :

''முற்செய்தவத்தால்'' என்பது, முன்பு பல்வேறு பிறப்புக்களில் செய்த தவத்தால் என்பதைக் குறிக்கும்; அஃதாவது ' இந்த ஒரு பிறவியில் செய்த தவத்தால் ஞானம் நிகழாது' என்பதை அறிவிக்க வேண்டி, 'தவத்தால்' என்று கூறாமல், 'முற்செய்தவத்தால்' என்றார். சரியை முற்றிய பின் கிரியையும், கிரியை முற்றிய பின் யோகமும், இவ்வாறு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஒன்றன்பின் ஒன்றாக, முற்பிறவிகளில் செய்த தவத்தால் ஞானம் நிகழும் என்பது வலியுறுத்தப் பெற்றது.

இந்த மேற்கோளில் **''ஞானம்''** என்றது, அனுபவ ஞானத்தை அன்று; ஆசிரியர் அறிவித்த வண்ணம், சிவஞானம் கண்ணுகக் கொண்டு, அறிவது ஆகிய சாதன அறிவையே ஆகும். **''சாதன ஞானம்''** என்பது, சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற சாதனம் நான்கனுள் ஒன்று ஆகிய ஞானத்தைக் குறிக்கும். அந்தச் சாதன ஞானத்தால் உண்டாவது, **''அனுபவ ஞானம்''**. ''ஞானம் நிகழும்'' என்றதில், 'நிகழ்தல்' என்பது, அந்தச் சாதனஞானம் ஆசிரியர் அறிவித்தவாறே, சந்தேகம் இன்றியும் மாறுபாடு இன்றியும் விளங்குதல் ஆகும். ஆக, அனுபவஞானம் வேறு; சாதன ஞானம் வேறு என்பது பெறப்படும்.

ஏது

மேற் சரியை கிரியா யோகங்களைச் செய்துழி, நன்னெறி ஆகிய ஞானத்தைக் காட்டியல்லது மோட்சத்தைக் கொடா ஆகலான்.

இதன் பொருள்:

முற்பிறவிகளில் சரியை கிரியா யோகங்கள் ஆகிய தவங்களைச் செய்து, முற்றுப் பெற்ற இடத்து, அத்தவங்கள் தாம் முத்திக்கு நேர்நெறி ஆகிய சன்மார்க்கம் என்னும்ஞானத்தை உண்டு பண்ணும். பண்ணவே, அந்த ஞானம் காரணமாகச் சன்மார்க்கம் முத்தியைத் தருமே அன்றி, அத்தவங்களே நேராக முத்தியைத்தரமாட்டா. ஆதலால் 'ஈண்டு இவ்வான்மாக்களுக்கு முற்செய்தவத்தால் ஞானம் நிகழும்' என்று மேற்கோள் கூறியது.

தெளிவுரை :

''தவம்'' என்பது, உண்டி சுருங்குதல் முதலியவற்றால் சரீரத்தை வாட்டுதல், துன்பத்தைச்சகித்தல் முதலிய பிறதவங்கள் அல்ல என்பதை அறிவிக்க வேண்டி, ஏதுவில் சரியை, கிரியா யோகங்களை என்று பெயர் சொல்லிச் சிறப்பித்துக் கூறினார். இந்த இடத்தில்,

''வீடும் ஞானமும் வேண்டுதிரேல் விரதங்களால்
வாடின் ஞானம் என் ஆவதும்?'' *(2-2-11)*

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

என்னும் சம்பந்தப் பெருமான் அருள்வாக்கு சிந்திக்கத் தக்கது.

சரியைக்கு சமயதீக்கையும், கிரியை யோகம் இரண்டற்கும் விசேட தீக்கையும் உரித்து ஆகலின் அவ்வுரிமைப்படி, கிரியை யோகம் இரண்டினையும் **கிரியாயோகம்** என ஒரு தொடராகக் கூறிச் சரியை என்னும் சொல்லைத் தனியாகக் குறிப்பிட்டார்.

''சரியை, கிரியாயோகம்'' என்பன, **''உபாயச் சரியை, கிரியா யோகம்'', ''உண்மைச் சரியை கிரியா யோகம்''** என இருதிறப்படும். **உபாயம்** என்பது உலகப்பொருளை நோக்கிச் செய்வது ஆகும்; **'உண்மை'** என்பது, முத்தி கரணமாகச் செய்வதைக் குறிக்கும். சரியை முதலியன ஞானத்தைக் காட்ட, அந்த ஞானம் மோட்சத்தைக் கொடுக்கும்அன்றிச், சரியை முதலியனவே நேராக மோட்சத்தைக் கொடுக்கமாட்டா; ஞானம் நன்னெறி எனப்படும். 'நன்னெறி' என்பது நன்மைக்கு ஏது ஆகிய நெறி என விரியும் ; **நன்மை என்பது இங்கு முத்தியைக் குறிக்கும்.**

நன்னெறி ஆகிய ஞானம், மேலானநெறி ஆகும்; ஆகவே சரியை கிரியாயோகங்கள், ஞானத்திற்குக் கீழான நெறிகள் என்பது பெறப்படும். சரியை முதலிய நெறிகள் ஞானத்தைக் காட்டும் நெறிகள்; ஆகவே அவற்றின் வாயிலாக ஞானத்தைப் பெற்று முத்தியை அடைய வேண்டும். எடுத்துக்காட்டாக, இரதவீதி போன்றது ஞானம்; புறவீதிகள் போலச் சரியையாதிகள். முத்தியைப் போன்றது ஆலயம். ஆலயத்திற்குச் செல்லும் ஒருவன். புறவீதிகளில் எந்த வீதியின் வழியாகச் சென்றாலும் இரத வீதிக்குச் சென்று, ஆலயத்துள் செல்லக்கூடுமே அன்றி, இரதவீதிக்குள் செல்லாமல், ஆலயத்துள் செல்ல முடியாது; அதுபோலச் சரியை கிரியாயோகங்களைச் செய்து ஞானத்தில் சென்று அதன்வழியாக முத்தியை அடையவேண்டும் என்பது பெறப்படும்.

ஞானமும் உபாயம் , உண்மை என்று இருவகைப்படும். படவே, சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கும், **முத்தி காரணமாகச் செய்யும் உண்மைச் சிவ புண்ணியம்** எனவும் **உலகப்பொருள் காரணமாகச் செய்யும் உபாயச் சிவ புண்ணியம் எனவும்** இருதிறப்பட்டு, அந்த இருதிறத்தாலும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஒவ்வொன்றும் நான்காகச், **சிவ புண்ணியம் எட்டுவகைப்படும்** என்றவாறு ஆயிற்று. அந்த எட்டும், சரியையில் சரியை, சரியையில் கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம், கிரியையில் சரியை, கிரியையில் கிரியை முதலாக ஒவ்வொன்றும் நான்கு நான்காக, முப்பத்திரண்டாய் விரியும், அவற்றின் விவரம் வருமாறு;

1. சரியையில் சரியை- திருக்கோயிலில் உள்ள குப்பைகளை அப்புறப்படுத்துதல்(அலகிடுதல்), மெழுகல் முதலியன.

2. சரியையில் கிரியை - சிவ வடிவங்கள் இருபத்து ஐந்தனுள் ஒன்றை உபாசன மூர்த்தமாகக் கொண்டு வழிபடுதல்.

3. சரியையில் யோகம் - நெஞ்சத்தாமரையில் சிவபெருமானின் உருவத்திருமேனியைத் தியானம் செய்தல்

4. சரியையல் ஞானம் - மேற்குறிப்பிட்ட தியானத்தில்உறைப்பு ஏற்படுகையில் , அதனால் ஓர் அனுபவ உணர்வு நிகழ்தல்.

5. கிரியையில் சரியை - சிவபூசைக்கு வேண்டிய பொருள்களைச் சேகரித்தல்.

6. கிரியையில் கிரியை - பூத சுத்தி, தான சுத்தி, திரவிய சுதி, மந்திர சுத்தி, லிங்க சுத்தி ஆகிய செய்து, சிவலிங்க வடிவில் செய்யும் பூசனை; அஃதாவது சிவபூசை.

7. கிரியையில் யோகம் - அகத்தே பூசை, ஓமம், தியானம் என்னும் மூன்றற்கும் முறையே இருதயம் , நாபி, புருவநடு என்னும் மூன்று இடங்களை வகுத்துக் கொண்டு செய்யும்அந்தரியாக பூசை; (அகவழிபாடு)

8. கிரியையில் ஞானம் - அந்த அந்திரியாக பூசையின் உறைப்பால், ஓர் அனுபவ உணர்வு நிகழ்தல்.

9. யோகத்தில் சரியை - இயமம், நியமம், ஆதனம் , பிராணுயாமம் என்னும் நான்கினையும் பழகுதல்.

10. யோகத்தில் கிரியை - பிரத்தியகாரம், தாரணை என்னும்இரண்டனையும் பழகுதல்,

11. யோகத்தில் யோகம் - தியனம் செய்தல்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

12. யோகத்தில் ஞானம்- சமாதி கூடுதல்.

(இந்த அட்டாங்க யோகங்களின் இலக்கணங்களைச் சிவஞான சித்தியார் - **(273)** ஆவது பாடலுக்குக் கீழ் வரும் தெளிவுரையில் காண்க).

(இந்த யோகம், சாலம்பம், நிராலம்பம் என இருவகைப்படும். **சாலம்ப யோகம்** என்பது, சிவலிங்கம் முதலிய வடிவத்தைப் பற்றிச் செய்வது கும். **நிராலம்ப யோகம்** என்பது. அகண்டா கார ஒளியைப் பற்றிச் செய்வதாகும். சாலம்பம் என்பது ஆலம்பத்தோடு கூடியது. ஆலம்பம் - ஆதாரம் நிராலம்பம் - ஆதாரமற்றது).

13: ஞானத்தில் சரியை - ஞான சாத்திரப் பொருளைக் குருவிடம் **கேட்டல்.**

14. ஞானத்தில் கிரியை - அப்பொருளைக் காரணகாரிய இயைபு படுத்தி, எடுத்துக் காட்டுக்களுடன் **சிந்தித்தல்.**

15. ஞானத்தில் யோகம் அப்பொருளை ஐயம்திரிபு இன்றித் **தெளிதல்.**

16. ஞானத்தில் ஞானம் - சிவபெருமானோடு அபேதமாய்க் கலந்து **நிட்டை கூடுதல்** அஃதாவது, சிவபெருமானை விட்டு எந்நேரமும் நீங்காமல் நின்று, அவனையே நினைத்து இருத்தல்.

இந்தப் பதினாறு வகைச் சிவ புண்ணியங்களுள், **ஞானத்தில் ஞானத்திற்குப் பயன், சாயுச்சியம்** ஆகிய பரமுத்தி ஆகும். எஞ்சியுள்ள பதினைந்து வகைச் சிவ புண்ணியங்களுக்குப் பயன், **சாலோக, சாமீப, சாரூபம்** என்னும் பதமுத்திகள் ஆகும். இப்பயன்கள் உண்மைச் சிவ புண்ணியதிற்கு உரியன.

உபாயச் சிவ புண்ணியம் ஆகிய உலகப் பொருள்களில் பற்றுக் கொண்டு செய்யும் சிவ புண்ணியத்திற்குப் பயன், இந்த புவனம் முதல் சுத்தமாயா புவனம் வரை உள்ள புவனங்களில் சென்று, அங்குள்ள போகங்களை அனுபவித்தல் ஆகும்.

''சாலோகம்'' என்பது, புவன பதிகளின் உலகங்களை அடைந்து, ஒருவர் வீட்டில் பணி செய்யும் அகத்தொண்டர்களுக்கு உள்ள உரிமைபோல, அந்த உலகத்திலுள்ள எல்லா இடத்திலும் தடை இன்றிச் சஞ்சரித்து, அங்குள்ள போகங்களை அனுபவித்து

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வாழ்தல் ஆகும்.

''சாமீபம்'' என்பது, புத்திரர்க்கு உள்ள உரிமை போல, அந்தப் புவன பதிகளுக்கு நெருங்கினவராய் இருந்து, அவர் போகங்களை அனுபவித்து வாழ்தல் ஆகும்.

''சாரூபம்'' என்பது, தோழர்களுக்கு உரிய உரிமை போல, அந்தப் புவன பதிகளோடு ஒத்த வடிவமும், ஒத்த ஆபரணமும், ஒத்த போக அனுபவமும் பெற்று வாழ்தல் ஆகும்.

''சாயுச்சியம்'' என்பது, சரியையில் ஞானம், கிரியையில் ஞானம், யோகத்தில் ஞானம் என்னும் மூவகை ஞானங்களுக்குப் பயனாகிய சாயுச்சியமும், ஞானத்தில் ஞானத்திற்குப் பயனாகிய சாயுச்சியமும் என இரு திறப்படும். அவற்றுள் சரியை, கிரியை, யோகம் ஆகிய மூன்றிலும் உள்ள ஞானத்திற்குப் பயன் ஆகிய சாயுச்சியம் என்பது, புவனபதிகளால் அதிட்டிக்கப்பட்டு, அந்தப் புவனபதிகள் செய்யும் அதிகாரங்களை, அவர் போலவே செய்து கொண்டு வாழ்தல் ஆகும். **முடிபு ஆகிய ஞானத்தில் ஞானத்திற்குப் பயன் எனப்படும் சாயுச்சியம் என்பது, சிவபெருமான் திருவடியில் இரண்டறக் கலந்து, சிவானந்தத்தை அனுபவித்தல் ஆகும்.**

(1) எடுத்துக்காட்டு வெண்பா

தவம் செய்தார் என்றும் தவலோகம் சார்ந்து
பவம் செய்து பற்று அறுப்பார் ஆகத் - தவம்செய்த
நற்சார்பில் வந்து உதித்து ஞானத்தை நண்ணுதலைக்
கற்றார் சூழ் சொல்லுமாம் கண்டு

இதன் பொருள்:

தவம்செய்தார் சரியை கிரியை யோகங்கள் ஆகிய தவங்களைச் செய்தவர், **தவலோகம் என்றும் சார்ந்து** - சரியையின் பலனை அனுபவிப்பதற்குச் சாலோக பதத்தையும், கிரியையின் பலனை அனுபவிப்பதற்குச் சாமீப பதத்தையும், யோகத்தின் பலனை அனுபவிப்பதற்ச் சாரூப பதத்தையும்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உறுதியாகப் பொருந்தி, அந்தப் பதங்களில் உள்ள இன்பங்களை அனுபவித்து **பற்றுப் பவம் செய்து அறுப்பார் ஆக** - அனுபவிக்க வேண்டிய காலம் கழிந்த பின், அப்பதங்களை விட்டுப் பிரிந்து, முன்பு மண்ணுலகத்தை விட்டு உடம்பு இறக்கும் சமயம், சுவர்க்க நரக அனுபவத்திற்குப் பின், இந்த மண்ணுலகத்தைப் பொருந்துதற்கு உரியதாய்த் தான் செய்த வினையினால், தன் மனத்தின் கண் பற்றி எழுந்த அவாவினை, மீண்டும் இந்த மண்ணுலகத்தில் பிறந்து அனுபவித்து நீக்கிக் கொள்ளுதல் பொருட்டு, **தவம் செய்த நற்சார்பில் வந்து உதித்து ஞானத்தை நண்ணுதலை** - இந்த உலகத்தில் தவம் செய்வதற்கு உரிய உயர்ந்த குலத்தில் வந்து பிறந்து, தவக்குறையை நிறைவேற்றுவதால், முன்வினையால் உண்டாகிய விடயப்பற்று வளராவண்ணம், அறுத்து தத்துவ ஞானத்தை அடைவர்; **கற்றார் சூழ் கண்டு சொல்லும்** - இதனைத் வீட்டு நூல்களைக் கற்றவரது நுண்ணறிவு, அந்நூற்கருத்தை உணர்ந்து சொல்லும்.

தெளிவுரை :

சரியை முதலிய தவங்களைச் செய்பவர்கள் இறக்கும் பொழுது, மனைவி மக்கள் மீது பற்று வைத்திருந்தாராயின், அந்தப் பற்றுக்காரணமாக அப்பற்றின் பயனை அனுபவித்தல் பொருட்டு, மீண்டும் இந்த உலகத்தில் பிறக்க வேண்டி வரும். எனவே, சரியை முதலிய தவங்களைச் செய்பவர்கள், **இறக்கும் பொழுது இத்தகைய உலகப் பற்று இல்லாது இறந்தால்,** சாலோகம் முதலிய பதங்களில் இருந்தவாறே, ஞானத்தை அடைவர் என்பது நினைவில் கொள்ளத்தக்கது.

தவத்தால் செய்யும் வினை ஆயினும், தவம் அல்லாத முறையில் செய்யும் பிற வினை ஆயினும், இந்த உலகத்தில் உடம்போடு கூடி நின்று செய்த வினைகள் எல்லாம், அவற்றின் பயனை அனுபவிப்பதற்கு உரிய உலகத்தில் செலுத்தி, அந்த வினைக்கு உரிய போகங்களை அனுபவிக்கும்படி செய்தேவிடும். ஆதலால், அவ்வாறு அனுபவிப்பனவற்றை வினை செய்தவர், எக்காலத்தும் அனுபவிக்காமல் தப்பித்துக் கொள்ள முடியாது. இவ்வுண்மையை உணர்த்தவே வெண்பாவில் ''தவலோகம் சார்ந்து'' என்றார்.

சாலோகம் முதலிய பதங்களை அடைவ ற்கு முன்பு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

செய்யும் சரியை முதலிய தவங்கள், கடவுள் பற்றுக்கு ஏதுவாய் நிற்கும். அந்நிலையிலும் கடவுள் உண்மையை அறியாமையினால், சாலோகம் முதலிய பதங்களை அடைந்த பிறகும் திரும்பப் பூமியில் பிறக்க வேண்டிய நிலை ஏற்படும்.

மீண்டும் பூமியில் பிறந்து செய்யும் சரியை முதலிய தவங்கள் விடயப்பற்று அறுவதற்கு ஏதுவாய் அமையும். அந்நிலையில், விடயப்பற்று நீங்கிய உண்மை ஞானம் உண்டாகும். முன் பிறப்பில், கடவுள் உண்மை அறியாமல் செய்யும் பொழுது, ஒவ்வொரு தவத்தையும் கால நீட்டிப்புடன், அரிதின் முயன்று செய்வன்; சாலோகம் முதலிய பதங்களில் சென்று மீண்டும் பிறந்தவன் சரியை முதலிய தவங்களைச் செய்யும்பொழுது, ஞான நாட்டம் உடையவனாக இருப்பான்; எனவே, கால நீட்டிப்பும் அரிதின் முயன்றும் செய்ய வேண்டி இருக்காது.

இஃது எது போல எனின், ஒரு மாணவன் ஒரு பாடத்தைத் தொடங்கும் பொழுது, அப்பாடத்தை நீண்டநாள் அரிதின் முயன்று படித்து வருவான்; சில நாட்கழித்துப் பின்பு, அந்தப் பாடத்தைத் தொடங்கும் பொழுது, எளிதில் விரைந்து படிப்பான். அதுபோல சாலோகம் முதலிய பதங்களுக்குச் சென்று, மீண்டும் பூவுலகில் பிறந்திருப்பவன் செய்யும் சரியை முதலிய தவங்களை எளிதாக விரைந்து செய்வான். அது மட்டுமன்று; மீண்டும் இப்பூவுலகில் வந்து பிறந்து விடாதவாறு, ஞான நாட்டத்தில் உறைப்புக் கொண்டு, இறையுண்மை அறிந்து செய்வான்.

(2) எடுத்துக்காட்டு வெண்பா

பசித்து உண்டு பின்னும் பசிப்பானை ஒக்கும்
இசைத்து வரு வினையில் இன்பம் - இசைத்த
இருவினை ஒப்பில் இறப்பில் தவத்தான்
மருவுவனாம் ஞானத்தை வந்து.

(கொண்டு கூட்டு) இசைத்து வருவினையில் இன்பம், பசித்து உண்டு பின்னும் பசிப்பானை ஒக்கும்; இசைத்த இருவினை இறப்பு இல் தவத்தான் ஒப்பில், வந்து ஞானத்தை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மருவுவன்.

இதன் பொருள்:

இசைத்து வருவினையில் இன்பம் - ஒரு நல்வினை செய்யத் தொடங்கி, அற நூலை ஆராயும் பொழுது ஆராய்பவனது அறிவில், அந்நூலில் வேள்வி முதலிய தவங்கள் அறம் எனத் தோன்றும்; அப்பொழுதே, அவற்றால் உண்டாகும் சுவர்க்கம் முதலிய காமியப் பயனும் காணப்படும். இவ்வாறு கூறப்படும் வேள்வி முதலிய அறங்களின் பயன் ஆகிய இன்பம் எதற்கு உவமை ஆகும் என்றால், **பசித்து உண்டு பின்னும் பசிப்பானை** - முன்னர்ப் பசியால் உண்டு, அவ்வுணவு சீரணமாகப் பின்னும் பசியை உடையவனுக்குப் பசியை நீக்கும் அந்த உண்டியால் வரும் இன்பத்தைப் போன்றது ஆகும்; **இசைத்த இருவினை இறப்பில் தவத்தான் ஒப்பில்** - ஆதலால் சுவர்க்கம் முதலிய காமிய இன்பத்தைத் தரும் அறமும், நரகம் முதலிய துன்பத்தைத்தரும் பாவமும், ஒருவனுக்கு ஞானத்தைப் பிரகாசிக்க ஒட்டாமல் செய்து, பந்தத்தில் அழுத்தும்; எனவே, இவை இரண்டும் **பொன் விலங்கும் இரும்பு விலங்கும்** போல்வன ஆகும். ஆகவே, இவ்வாறு விலங்கு போலச் சமப்படுத்தி உணரப்படும் அறம் பாவம் இரண்டும், தத்தம் பலனைத் தந்த அளவிலேயே கெடும். சரியை முதலிய தவங்களோ, தத்தம் பயனைத் தந்த அளவில் கெடாமல், ஞானத்தைத் தந்து மோட்சத்தைத் தரும். ஆதலால், மேன்மேல் முறுகி வளர்வன ஆகிய சரியை முதலிய தவங்களால் மேற் கூறிய அறம் பாவம் இரண்டும்நேராக ஒத்தால், **வந்து ஞானத்தை மருவுவன்** - அந்தச் சரியை முதலிய தவத்தின் முதிர்ச்சியால், ஞான குருவைத் தேடி அடைந்து, ஞானத்தை அடைவன்.

தெளிவுரை:

சரியை முதலிய தவத்தால் அன்றி, வேள்வி முதலிய தவத்தால் ஞானம் உண்டாகாது என்பதை இந்த வெண்பா எடுத்துக்காட்டுகிறது.

பசி நீக்கும் உணவினால் உண்டாகும் இன்பம், நிலைபெறாமல் மீண்டும் பசி உண்டாகும்போது கெடுவதுபோல, வேள்வி முதலிய தவத்தா உண்டாகும் சுவர்க்க இன்பம், நிலைபெறாமல் மீண்டுப் பூமியிலோ

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நரகத்திலோ வரும்போது கெடும். எனவே, கெடுதல் இல்லாத சரியை முதலிய தவங்களால் இருவினை ஒப்பு வந்தால், ஞான குருவை அடைந்து ஆன்மா ஞானத்தைக் கூடுவன்.

வேள்வி முதலிய தவங்கள் எல்லாம் அழியும் தன்மை உடையன. அவை ஞானத்தை உண்டு பண்ண மாட்டா; அது மட்டுமன்று; தீவினையைப் போல ஞானத்தை விளங்க ஒட்டாமல் தடைசெய்தும் நிற்கும். எனவே வேள்வி முதலிய நல்வினையும் ஏனைய தீவினையும் நீங்குதலே, ஞானத்தைப் பெறுதற்கு வழி ஆகும்.

நல்வினை தீவினை இரண்டும், **பசு நல்வினை, பசுத்தீவினை பதிநல்வினை, பதித்தீவினை,** என ஒவ்வொன்றும் இருதிறப்படும். அவற்றுள் ''பசுநல்வினை'' என்பது, உயிரை நோக்கிச் செய்யும் நல்வினை என்றும் உயிர்த்தன்மை கெடாத நல்வினை என்றும் கூறப்படும். ''பசுத்தீவினை'' என்பது, உயிரை நோக்கிச் செய்யும் தீவினை என்றும் உயிர்த்தன்மை கெடாத தீவினை என்றும் கூறப்படும். ''பதி நல்வினை'' என்பது இறைவனை நோக்கிச் செய்யும் நல்வினை என்றும், இறைத்தன்மையை அடையச்செய்யும் நல்வினை என்றும் கூறப்படும். ''பதித்தீவினை'' என்பது, இறைவனை நோக்கிச் செய்யும் தீவினை என்றும், இறைத்தன்மையைக் கெடுக்கும் தீவினை என்றும் கூறப்படும். இவ்வினைகளுக்கு உள்ள விளக்கம் வருமாறு:

பசுவை நோக்கிச் செய்யும் நல்வினை - பிற உயிர்களுக்கு நன்மை செய்தல்; பசுத்தன்மை கெடாத நல்வினை - சுவர்ப்பம் முதலிய பயனை விரும்பி நன்மை செய்தல், பசுவை நோக்கிச் செய்யும் தீவினை - பிற உயிர்களுக்குத் துன்பம் செய்தல்; பசுத்தன்மை கெடாத தீவினை - காமம், குரோதம் முதலிய கெட்ட குணங்களை உடையவன் ஆதல்.

இறைவனை நோக்கிச் செய்யும் நல்வினை - சிவாலயத்திற்கும் சிவனடியார்க்கும் தேசிகருக்கும் வேண்டும் திருப்பணி செய்தல்; இது சரியையில் அடங்கும். (தேசிகர் - குருநாதர்) இறைத்தன்மையை அடையச் செய்யும் நல்வினை - ஞான குருவை வழிபட்டு, ஞான சாதனங்களைக் கேட்டு, அவற்றை அனுட்டித்தல், இது கிரியை யோகம் ஞானங்களில்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அடங்கும்.

இறைவனை நோக்கிச் செய்யும் தீவினை - சிவ திரவியம், அடியார் திரவியம், குருத்திரவியங்களை அபகரித்தல்; அந்த மூன்று இடங்களிலும் வேண்டத் தகாதனவற்றைச் செய்தல். இறைத் தன்மையைக் கெடுக்கும் தீவினை - இறைவனும் தானும்அநன்னியம் என்பதை விளங்க ஒட்டாமல், உடம்பைத் தான் என்றும், பிறபொருளைத் தன்னுடைமை என்றும் கருதுதல். (அநன்னியம் - அன்னியம் இன்மை).

இவ்வாறு நல்வினை தீவினை இரண்டும், பசுவைப் பற்றியும் பதியைப் பற்றியும் நிகழும் என்று கூறியவாறு, பாசத்தைப் பற்றியும் நிகழும் என்று கொள்ள வேண்டும். அவற்றுள், **'பாச நல்வினை'** எனபது, மனைவி மக்கள் முதலியோர்க்கு நன்மை செய்தலைக் குறிக்கும்; **'பாசத் தீவினை'** என்பது, மனைவி மக்கள் முதலியோர்க்குத் தீவனை செய்தலைக் குறிக்கும்.

இருவினை ஒப்பும், **பசு இருவினை ஒப்பு, பதி இருவினை ஒப்பு** என்று இருவகைப்படும். **''இருவினை ஒப்பு''** என்பது மலபரிபாகக் குறியும் சத்திநிபாதக் குறியும் ஆன்ம அறிவில் விளங்குவது போல, நல்வினை தீவினை என்னும் இரு வினைகளும், பொன்விலங்கும் இரும்பு விலங்கும் போன்று பிறப்பு இறப்புக்களில் கட்டுப்படுத்தும் தன்மையில் சமம் உடையன ஆகும் என்று ஆன்ம அறிவில் விளங்கி, அந்த இருவினைகளையும் ஒன்றாகக் கருதி வெறுத்து விடுதல் ஆகும். ஆகவே, பிற உயிர்களுக்குத் தீமை செய்யக் கூடாது என்பது போல, நன்மையும் செய்யக் கூடாது என்பது கருத்தன்று; நரகத் துன்பத்துக்கு அஞ்சித் தீமை செய்யக் கூடாது என்று எண்ணுவது போல, பிறப்புத் துன்பத்திற்கு அஞ்சிச் சுவர்க்க இன்பத்தைக் கருதி நன்மை செய்யக்கூடாது என்பதே கருத்து. பிற உயிர்களுக்குச் செய்ய வேண்டிய நன்மையைப் பயன் கருதாது, தன் கடமை என்று எண்ணிச் செய்ய வேண்டும் என்பதே கருத்தில் கொள்ளத் தக்கது.

இந்த இருவினை ஒப்பு எவ்வாறு வரும் என்றால், இச்சை அறிவு செயல்களைக் குணமாக உடைய உயிர், ஏதேனும் ஒன்றை இச்சித்து, அந்த இச்சை நிறைவேறும் வழியை அறிந்து, அந்த

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முறையைச் செய்வதே இயல்பு ஆகும். ஆகவே, சுவர்க்கம் முதலிய பலனை இச்சித்து, வேள்வி முதலியவற்றைச் செய்யும் போது, விருப்பம் நீங்க வேண்டுமாயின், சிவபெருமான் திருவடியை அடைவதில் விருப்பம் உடையவனாய், அத்திருவடியை அடையச் செய்வதற்கு உரிய வழி சரியை முதலிய தவங்கள் என அறிந்து, அந்தத் தவங்கள் ஆகிய சிவ புண்ணியத்தைச் செய்ய வேண்டும்; அவ்வாறு செய்வதால், இருவினை ஒப்பு உண்டாகும். இதுவரை கூறியது பசு இருவினை ஒப்புப்பற்றியது ஆகும்.

பதி இருவினை ஒப்பு என்பது பதித் தீவினை விரும்பப்படாதவாறு போலப் பதிநல்வினையும் பசு போதம் கெடாத சாலோகம் முதலிய பதம் கருதி விரும்பப்படாமல் நீங்குதல் ஆகும். அஃதாவது சாயுச்சியம் ஒன்றே விரும்பப்படுதற்கு உரியது என்பது பெறப்படும்.

''மலபரிபாகம்'' என்பது, மலத்தின் ஆற்றல் தேய்தல் ஆகும்; அஃதாவது, ஆணவமலத்தின் காரியம்ஆகிய மோகம் முதலாகக் கூறப்படும் **கெட்ட குணங்கள், ஆன்ம அறிவை விட்டு நீங்குதல் ஆகும்.**

''சத்திநிபாதம்'' என்பது, திருவருட்சத்தி பதிதல் ஆகும்; அஃதாவது, சிவபெருமான் திருவடியை அடைய வேண்டும் என்னும் நாட்டத்தால் ஆன்ம அறிவில் சிவசத்தி பதிதல் ஆகும். சத்திநிபாதம் என்னும் சொல்லுக்குப் பொருள், சத்தியினது வீழ்ச்சி என்பதாகும். அஃதாவது, ஒரு சபையில் ஒரு கல் வந்து வீழ்ந்தால், அந்தக்கல் அங்கு உள்ளவர்களை, அந்தச் சபையிலிருந்தும் அஞ்சி ஓடச் செய்யுமாறு போல, ஓர் ஆன்மாவிற்குத் திருவடியை அடைய வேண்டும் என்னும் சத்திநிபாதம் நிகழ்ந்தால், அந்தச்சத்திநிபாதம் அந்த ஆன்மாவை மனைவி மக்கள் முதலிய உலகப் பொருளிலிருந்தும் அஞ்சி ஓடிச் சற்குருவைத் தேடும்படி செய்யும்.

இந்தச் சததிநிபாதமும் **மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிர தரம்**-என நான்கு வகைப்படும். அவற்றுள், **மந்ததர சத்திநிபாதம்** என்பது, உலகப்பற்று நான்கில் ஒரு கூறு விட்டுத் திருவருட் சத்தி நான்கில் ஒரு கூறு பதிதல் ஆகும்; **''மந்த சத்திநிபாதம்''** என்பது, உலகப் பற்று இரண்டு கூறுவிட்டுத்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

திருவருட் சத்தி நான்கில் இரு கூறு பதிதல் ஆகும்; ''தீவிர **சத்திநிபாதம்**'' என்பது, உலகப்பற்று மூன்று கூறுவிட்டுத் திருவருட் சத்தி நான்கில் மூன்று கூறு பதிதல் ஆகும். ''தீவிரதர **சத்தி நிபாதம்**'' என்பது உலகப்பற்று அறவே விட்டுத் திருவருட்சத்தி முற்றும் பதிதல் ஆகும். இவ்வாறே, மலபரிபாகமும் நால்வகைப்படும் என்றவாறு ஆயிற்று.

''**இறப்பில் தவம்**'' என்பது அழிவு இல்லாத சரியை, கிரியா யோகம் ஞானம் ஆகிய சிவபுண்ணியங்களைக் குறிக்கும். ஏனைய உணவுகள் பசியைப் போக்குவதோடு நின்றுவிடும்; அமிழ்தம் ஆகிய உணவு, பசியை நீக்கிப் பின்னர் நரை முதலியவற்றை நீக்கும். அவ்வாறே வேள்வி முதலியன, சுவர்க்காதி பலனைத் தந்து நின்று விடும்; சரியையாதிகள், சாலோ காதி பலனைத் தந்து, பின்னர் ஞானத்தையும் தரும். எனவே, **சரியை முதலானவற்றை ''இறப்பில் தவம்'' என்றார்; ஆதலால், வேள்வி முதலியன ''இறக்கும் தவம்' என்றவாறு ஆயிற்று.** இவ்வுண்மையைச் சிவஞானசித்தியார் 277 ஆவது பாடலிலும் காணலாம்.

இந்த அதிகரணத்தோடு வைத்துச் சிந்திக்கத்தக்க சிவஞான சித்தியார்ப் பாடல்கள் வருமாறு:

பாடல் எண்		தொடக்கச் சொற்கள்
253	-	**மன்னவன்தன் மகன்**
263	-	**புறச்சமய நெறி நின்றும்**
270	-	**சன்மார்க்கம் சக மார்க்கம்**
271	-	**தாத மார்க்கம் சாற்றில்**
272	-	**புத்திர மார்க்கம் புகலில்**
273	-	**சகமார்க்கம் புலன் ஒடுக்கி**
274	-	**சன்மார்க்கம் சகலகலை**
277	-	**தானம் யாகம் தீர்த்தம்**
278	-	**சிவஞானச் செயல் உடையோர்**
279	-	**ஞானத்தால் வீடு என்றே**
280	-	**சூரிய காந்தக் கல்**

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

281 - மிக்கதொரு பக்குவத்தின்

283 - புண்ணியம் மேல் நோக்குவிக்கும்.

264 - இம்மையே ஈரெட்டு ஆண்டு

எட்டாம் சூத்திரம் - இரண்டாம் அதிகரணம்

மேற்கோள்

இனி இவ்வான்மாக்களுக்குத் தமது முதல் தானே குருவுமாய் உணர்த்தும் என்றது.

இதன் பொருள் :

முதல் அதிகரணத்தில் கூறியவாறு, சரியை கிரியை யோகம் ஆகிய மூன்று தவங்களும் முறையாய் அனுட்டித்து, முற்றுப்பெற்ற பின்பு, அம்மூன்றும் முற்றுதலால் மலபரிபாகமும் சத்தி நிபாதமும் தோன்றும்; அந்நிலையில் உண்மை ஞானத்தை அடைய விரும்புகின்ற உயிர்கட்கு அப்பருவத்தை அறிந்து, இதுவரையும் தமக்கு உள் நின்று உணர்த்தி வந்த முதல் ஆகிய பரம்பொருளே, குருவடிவுமாய் எழுந்தருளி வந்து, விரும்பிய உண்மை ஞானத்தை உணர்த்துவர்.

தெளிவுரை :

சரியை முதலிய தவங்களால் நிகழக்கூடிய ஞானம், ஓர் ஆசிரியன் உணர்த்த நிகழுமே அன்றித் தானே நிகழாது. ஏனெனில், பசுத்துவம் உடைய நம்மனோர்க்குப் பதியின் தன்மையை விளக்க முடியாது, எனவே, கடவுளே குருவுமாய் வருவர் என்று கூறப்படுகிறது. படவே, கடவுள் அல்லாத ஏனைய உயிர்கள் குருவாய் வந்து ஞானத்தை உணர்த்துமாறு இல்லை என்பது பெறப்படும். இவ்வுண்மையையே திருவருட்பயன்,

''அகத்துறு நோய்க்கு உள்ளினர் அன்றி அதனைச்
சகத்தவரும் காண்பரோ தான்''

என்று அருளிச் செய்தது.

ஒருதடை: குருவினால் ஞானம் நிகழுமா? அல்லது தவத்தினால் ஞானம் நிகழுமா? இதற்கு விடை வருமாறு: தவம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இல்லை ஆயின், குருவருதலும்இல்லை; குரு வந்து உணர்த்தினும் ஞானம் நிகழ்தலும் இல்லை. எனவே, ஞானம் நிகழ்வதற்குச் சரியை முதலியன முதற்காரணமும், குரு உணர்த்துதல் துணைக்காரணமும் ஆகும். துணைக்காரணம் பல ஆதல் கூடும் ஆதலின், நற்குலத்தில தோன்றுதலும் துணைக்காரணம் என்பது மேலே கூறப்படும் (குலம் - சார்ந்திருக்கும் கூட்டம்)

ஏது

அவன் அந்நியம் இன்றிச் சைதன்னிய சொரூபியாய் நிற்றலான்.

இதன் பொருள்:

தமது முதல் ஆகிய சிவபெருமான், பாலினிடத்து நெய் விளங்கித் தோன்றாமல், பாலின் வேறாய் மறைந்து நிற்றல் போலக், குருவினிடத்து வேறாய் மறைந்து நிற்றல் இன்றித், தயிரினிடத்து நெய் அத்தயிராகவே விளங்கித் தோன்றுதல் போல, குரு ஆகிய **சுத்தான்ம சைதன்னியமே** தனக்குச் சொரூபமாகக் கொண்டு, அந்த ஆன்மாவினிடத்து விளங்கி நிற்றலால், 'இவ்வான்மாக்களுக்குத் தமது முதல்தானே குருவுமாய் உணர்த்தும்' என மேற்கோள் கூறியது.

தெளிவுரை :

கடவுள் குருவினிடத்து நிற்றல் எவ்வாறு? எங்கும்தங்கி நிற்கும் பொதுவான அதிட்டானம் அன்றிப், பேய் பிடி உண்டவனிடத்து, அப்பேய் விளங்கித் தோன்றும் ஆவேசம் போலச் சிறப்பான அதிட்டானமாய்க் கடவுளே, குருவின் ஆன்மாவை ஆவேசித்து நிற்பர். இவ்வுண்மையை உணர்த்தித் **தமது முதல் தானே குருவுமாய் உணர்த்தும்**என்ற மேற்கோளை வலியுறுத்தியது.

தடை:

குருவாய் நின்று உணர்த்துதல், அதிட்டானமாய் நின்றா? அல்லது ஆவேசமாய் நின்றா?

விடை:

அதிட்டானம் பொது சிறப்பு என இருதிறப்படும்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அவற்றுள், ஞானகுரு அல்லாத ஏனைய உயிர்களின் இடத்து, மறைந்து வேறாய் நிற்றல் பொதுவான அதிட்டானம் ஆகும். ஞானகுருவின் இடத்து அவர் தமக்கு விளங்கி ஒன்றாயும், பொருளின் தன்மையால் வேறாயும், நிற்றல் சிறப்பான அதிட்டானம் ஆகும்.

இவ்விருவகை அதிட்டானத்திற்கும் **பாலில்நெய்** வேறாக மறைந்து இருத்தலே உவமை ஆகும். அவ்வாறு மறைந்து நின்று செலுத்தப்படும் இருவகை அதிட்டானத்துள்ளும், ஞான குருவினிடத்து நிற்கும்அதிட்டானம் அவர்க்கு விளங்கி நிற்றலால், சிறப்பான அதிட்டானம் எனப்படும். இந்தச் சிறப்பானஅதிட்டானத்தையே ஆவேசபக்கம் எனவும், அதற்குப் பேய் பிடியுண்டதை உவமையாகவும் கூறப்பட்டது.

முதல்வன் உயிர்களோடு கலந்து நிற்கும் நிலை - ஒன்றாய் நிற்றல், வேறாய் நிற்றல், உடனாய் நிற்றல் என முத்திறப்படும். இவ்வாறு நிற்றல் பெத்தம் (பிறப்பு நிலை) முத்தி (வீடு பேற்றுநிலை) இரண்டிலும் உண்டு. ஆயினும், பெத்தத்தில் உயிர்கள், இறைவன் அவ்வாறு நிற்றலை உணராமையும் முத்தியில் உயிர்கள் உணர்தலுமே வேற்றுமையாகும்.

முத்தர் ஆகிய ஞானகுருவினிடத்தில் ஒன்றாய் நிற்றல் பற்றி, ஆவேச பக்கமாகவும், வேறாய் நிற்றல் பற்றி அதிட்டான பக்கமாகவும் ஆகமங்கள் கூறுகின்றன. எனவே, ஒன்றாய் நிற்கும் கலப்பு பற்றித்தமது முதல் தானே குருவுமாய் வருவர் என்று கூறப்பட்டது. ஞானகுரு ஆகிய அந்த ஆன்மா, மும்மலங்கள் ஆகிய மாசு நீங்கப் பெற்றது என்பதை உணர்த்தும் பொருட்டே, 'சைதன்னிய சொருபியாய் நிற்றலால்' என்று ஏது கூறிற்று. **குருவின் வடிவம் மாயா காரியம் ஆயினும், குரு ஆகிய ஆன்மா, மாசு நீங்கிச் சைதன்னிய சொரூபமாய் விளங்குவதால், அந்த ஆன்மாவையே திருமேனியாக் கொண்டு, கடவுள் குருவாய் வருவார் என்பதாகும்.** முதல்வனுக்குத் திருமேனி ஆகிய ஆன்ம சைதன்னியம், முதல்வனைச் சார்ந்தும் முதல்வன் தன்மையை அடைந்த பொழுது, அவ்வுயிர் தங்கும் இடம்ஆகிய அந்த உடம்பும், முதல்வன் அருள்மயமே ஆகும், ஆகவே, **ஞான குருவின் திருமேனியையும் அருட்டிருமேனி எனக் கொள்வதே பொருந்தும்.**

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

(3) எடுத்துக்காட்டு வெண்பா

மெய்ஞ்ஞானம் தானே விளையும் விஞ்ஞான கலர்க்கு
அஞ்ஞான அச்சகலர்க்கு அக்குருவாய் - மெய்ஞ்ஞானம்
பின் உணர்த்தும் அன்றிப் பிரளயாகலருக்கு
முன் உணர்த்தும் தான் குருவாய் முன்,

(கொண்டு கூட்டு) விஞ்ஞானகலர்க்குத் தானே மெய்ஞ்ஞானம் விளையும்; அன்றிப் பிரளயா கலருக்குத் தான் குருவாய் முன் உணர்த்தும்; அஞ்ஞான அச்சகலர்க்கு அக்குருவாய் பின் மெய்ஞ்ஞானம் உணர்த்தும் முன்.

இதன் பொருள் :

விஞ்ஞான கலர்க்குத் தானே மெய்ஞ்ஞானம் விளையும்- முதல்வன் குருவாய் வந்து உணர்த்தும் பொழுது, விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னும் மூவகை ஆன்மாக்களுள், விஞ்ஞான கலர் ஆயினார்க்கு அறிவுக்குள் அறிவு ஆகிய தன்மையில் நின்றவாறே, தத்துவ ஞானத்தைத் தோற்றுவிப்பன்; **அன்றிப் பிரளயாகலருக்குந் தான் குருவாய் முன் உணர்த்தும்** - பிரளயா கலர் ஆயினார்க்குத் தன்மையில் நின்று உணர்த்தாமல், நான்கு தோளும், மூன்று கண்ணும், காள கண்டமும் முதலிய உறுப்புகளுடன், முத்தொழில் நடாத்தி நின்ற தன் இயற்கை வடிவமே, குரு வடிவமாகக் காட்டி, முன்னிலையாக நின்று, தத்துவ ஞானத்தை உபதேசித்து உணர்த்துவன்; **அஞ்ஞான அச்சகலர்க்கு அக்குரு வாய்ப் பின் மெய்ஞ்ஞானம் உணர்த்தும்** - அவிச்சையை உடைய சகலர் ஆயினார்க்கு அந்தச் சகலர் வடிவு போலும் வடிவு உடைய குரு வடிவில் மறைந்து நின்று (படர்க்கை) தத்துவ ஞானத்தை உணர்த்துவன்; **முன்** - இவ்வாறு முதல்வன் குருவுமாய் வந்து உணர்த்தும் வேறுபாட்டை அறிவாயாக.

தெளிவுரை :

அஞ்ஞானம் என்றது ஆணவமலத்தைக் குறிக்கும்; ஆயினும், அது சகலர்க்கே அடையாகக் கூறியதனால், அவிச்சையைக் குறித்தது எனப்பட்டது. 'அவிச்சை' என்பது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மாயாமலத்தின் காரியம் ஆகிய மயக்கம் ஆகும். ஆகவே, இந்த இடத்தில் அஞ்ஞானம் என்றது மாயாமலம் என்றபடி ஆகும்.

இந்த வெண்பா. விஞ்ஞானகலர்க்குத் **தன்மையிலும்**, பிரளயா கலர்க்கு **முன்னிலையிலும்**, சகலர்க்குப் **படர்க்கையிலும்** நின்று இறைவன் உணர்த்துவான் என்பதை வரையறுத்துக் கூறுதற்கு எழுந்தது, இவ்வாறு உணர்த்தும் வேறுபாடு மூன்றனுள். விஞ்ஞான கலர்க்குக் கொள்ளும் **அறிவுத்திரு மேனியும்**, பிரளயா கலர்க்குக் கொள்ளும் **உருவத்திரு மேனியும்** முதல்வனுக்குச் சுதந்திரம் ஆகலின், அந்த இரு திருமேனிகளும் **நிராதரம்** எனப்படும். சகலர்க்கு, அவர் வடிவு போன்ற வடிவத்தை ஆதாரமாகக் கொண்டு நிற்றலால், அது **சாதாரம்** எனப்படும்.

நிராதாரமாய் நின்று உணர்த்துவதை **நிராதார தீக்கை** எனவும் சாதாரமாய் நின்று உணர்த்துவதைச் **சாதார தீக்கை** எனவும் கூறப்படும். நிராதாரம் என்பது ஆதாரம் இல்லாதது. சாதாரம் என்பது ஆதாரத்தோடு கூடியது. இந்தத் தீக்கை முறைகளையும் பாகுபாடுகளையும் சிவஞான சித்தியார் எட்டாம் சூத்திரத்தில் விளக்கமாகக் காணலாம்.

(4) எடுத்துக்காட்டு வெண்பா

அறிவிக்க அன்றி அறியா உளங்கள்
செறியுமா முன்பின் குறைகள் - நெறியில்
குறை உடைய சொல் கொள்ளார்; கொள்பவத்தின் வீடு என்
குறைவு இல் சகன் சூழ்கொள் பவர்க்கு,

(கொண்டு கூட்டு) உளங்கள் நெறியின் அறிவிக்க அன்றி அறியா; குறைவு இல் சகன் சூழ் கொள்பவர்க்கு, குறைகள் முன் பின் செறியுமாம்; குறை உடைய சொல் கொள்ளார் கொள்பவத்தின் வீடு (ஆம்) என்.

இதன் பொருள் :

உளங்கள் நெறியின் அறிவிக்க அன்றி அறியா - உயிர்கள் எல்லாம், தமக்கு உரிய பக்குவ முறையில் வைத்து, முதல்வன்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அறிவிக்க அறியும் தன்மை உடையன; அவ்வாறு அன்றி, எல்லா உயிர்களும் ஒன்றுபோல் அறிவித்தால், அறியும் தன்மையினை உடையனவல்ல. ஆதலால், **குறைவு இல் சகன் சூழ் கொள்பவர்க்கு** - அறிவித்தால் அறியக்கூடிய குறைபாடு உடைய அறிவு இன்றித், தானே அறியும் இயல்பு உடைய உலக கருத்தா ஆகிய உருவத் திருமேனியை உடைய கடவுளாலும், குரு மூர்த்தியாலும் உபதேச மொழியைக் கொண்டு, உணரும் தன்மை ஆகிய குறை உடைய பிரளயாகலருக்கும் சகலருக்கும் **குறைகள் முன்பின் செறியுமாம்** - அந்த உபதேச மொழிகள் முன்னிலையிலும் பின்னிலையிலும் (படர்க்கையிலும்) நிகழ்வன ஆகும்; **குறை உடைய சொல் கொள்ளார் கொள்பவத்தின் வீடு (ஆம்) என்** - உருவத்திருமேனி உடைய கடவுளாலும் குருவாலும் உபதேசிக்கப்பட்டு அறியவேண்டிய குறை இல்லாத விஞ்ஞானகலருக்கு, முதல்வன் உண்மைத் திருமேனி ஆகிய அறிவுருவால், வீட்டைத் தருதற்கு உரிய அறிவு உண்டாகும் என்று அறிவாயாக.

தெளிவுரை :

உயிர்கள், அவரவர் பக்குவத்திற்கு ஏற்றவாறு, அறிவித்தால் அறியும் தன்மை உடையன. இந்த வெண்பா, இறைவன் மூன்று வகையாய் நின்று உயிர்களுக்கு உணர்த்துவதற்குக் காரணம் காட்டும் பொருட்டு எழுந்தது. இந்த வெண்பாவில் வரும் ''குறை'' என்ற சொற்குப் பொருள், ''அறிவித்தால் அன்றி அறிவுநிகழாத இன்றியமையாமை'' என்பது ஆகும். அஃதாவது, உயிரின் அறிவு தானே நிகழ்வது அன்று; பிறர் உதவியால் மட்டுமே நிகழ்வது; இது குறைபாடு தானே?

உயிர்கள், தமக்கு உரிய பக்குவ முறையில் வைத்து, அறிவித்தால் அன்றி அறியா என்னும் உண்மையைக் கருவூர்த் தேவர் திருவிசைப்பாவில், திருவிடைமருதூர்ப் பதிகம் (5) ஆவது செய்யுளில்,

''பந்தமும் பிரிவும் தெரி பொருட் பனுவல்
படிவழி சென்று சென்று ஏறி''

என்று அருளிச் செய்திருப்பதிலிருந்து உணரலாம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

(5) எடுத்துக்காட்டு வெண்பா

இல்லா முலைப்பாலும் கண்ணீரும் ஏந்திழைபால்
நல்லாய் உளவாமால் நீர்நிழல்போல் - இல்லா
அருவாகி நின்றானை யார் அறிவார் தானே
உருவாகித் தோன்றானேல் உற்று.

(கொண்டு கூட்டு) நல்லாய், ஏந்து இழைபால் முலைப்பாலும் கண்ணீரும் இல்லா உள ஆம் நீர்நிழல்போல் இல்லா அரு ஆகி நின்றானை ஆரறிவார் தானே உருவாகி உற்றுத் தோன்றானேல்.

இதன் பொருள் :

நல்லாய் - அறிவால் நன்மை உடைய மாணுக்கனே, **ஏந்து இழைபால் முலைப்பாலும் கண்ணீரும் இல்லா உள ஆம்** த்தாங்கிய அணிகலன்களை உடைய பெண் ஒருத்திக்குத் தன் குழந்தையினிடத்து வைத்துள்ள அன்பு, பிறருக்கு வெளிப் படையாகத் தெரியாது இருப்பினும், அந்த அன்பின் உருவாய் அவளிடத்து உண்டாகும் முலைப்பாலும் கண்ணீரும், அவ்வன்பைப் பிறர் அறியுமாறு வெளிப்படுத்தும். அவ்வாறு வெளிப்படுத்தும் அந்த முலைப்பாலும்கண்ணீரும், குழந்தையைக் காணும் முன்பு இல்லாதனவாய்க், கண்டபின்பு உள ஆகும்; அதுபோல, **நீர்நிழல் போல், இல்லா அரு ஆகி நின்றானை, ஆர் அறிவார், தானே உருவாகி உற்றுத் தோன்றானேல்?** - நீரில் உள்ள நிழல் வெளிப்பட்டு வேறாக நில்லாமல், அந்த நீருடன் கலந்து நிற்றல் போல உயிர்களிடத்து வெளிப்பட்டு வேறாக நில்லாமல், உயிர்களுடன் கலந்து அருவமாய் நிற்கும் முதல்வன், உயிர்களிடத்தில் பக்குவம் காணும் முன்பு தோன்றமாட்டான்; அவனே குருவடிவாய் வந்து தோன்றி நின்று உணர்த்தானாயின், அம்முதல்வனை யார்தாம் அறிவார்?

தெளிவுரை :

இந்த வெண்பா, கடவுள் சகலர்க்குக் குருவாய் வருவார் என்பதை எடுத்துக்காட்டுதற்கு எழுந்தது. 'உளவாமால்'

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

என்பதில் உள்ள ஆல் - அசை.

நீரின் கண், நிழல் அந்நீரின் வேறாய் வெளிப்பட்டுத் தோன்றாமல், அந்நீருடன் கலந்து நிற்கிறது, அதுபோல, முதல்வன் உயிரின் வேறாய்த் தோன்றாமல், அவ்வுயிருடன் கலந்தே நிற்பன். அவ்வாறே அன்பும் தாயின் வேறாய்த் தோன்றாமல் அத்தாயுடன் கலந்து நிற்கும். நிரினிடத்து நிழல் எப்போதும் இருப்பது போல, உயிரினிடத்து முதல்வன் எப்போதும் இருப்பன், அவ்வாறே தாயினிடத்து அன்பு எப்பொழுதும் இருக்கும் என்பதாகும்.

ஒரு பொருளின் நிழல், அப்பொருளின் வேறாகக் காணப்படுவது ஆகும். நீரின் இடத்துள்ள நிழல், அந்நீரின் வேறாய்க் காணப்படுவது இல்லை. ஆதலால், நீருக்கு நிழல் உண்டு என்றல் எவ்வாறு கூடும் என்றால், நீர் தன் உள்ளே சஞ்சரித்துக்கொண்டு இருக்கும் உயிர்கட்கு, இடம் கொடுப்பதாய்க் காணப்படுகிறது; அதனால் இடம் கொடுக்கும்படியான வெளி உண்டு என்று கருதப்படும். வெளி உண்டாகவே, அவ்வெளியில் நீரின் நிழல் உண்டு என்பது பெறப்படும். அந்த நிழல், ஏனைப் பொருள்களின் நிழல் அப்பொருள்களின் வேறாய் நிற்பது போல், நீரில் வேறாய் நிற்பது இன்றி, அந்த நீரோடு கலந்து நிற்கிறது. எனவே, நீர் வெளிப்பட்டு விளங்குவது போல் அதன் நிழல் வெளிப்பட்டு விளங்காது ஆயிற்று.

அவ்வாறே சிவ சைதன்னியமும், யான்என்னும் அறிவிற்குப் பொருள் ஆகிய ஆன்மசைதன்னியத்தோடு கலந்து நிற்பது ஆகும். இவ்வுண்மையை உணர்த்த வேண்டி, வேறு உவமை கூறாது, **''நீர் நிழல் போல் இல்லா அருவாகி நின்றானை''** என்றார்.

இரண்டாம் அதிகரணத்துடன் வைத்துச் சிந்திக்கத்தக்க சிவஞான சித்தியார்ப் பாடல்கள்

பாடல்எண்		தொடக்கச் சொற்கள்
254	-	**உரைதரும் இப்பசு வர்க்கம்**
255	-	**பலவிதம் ஆசான் பாசமோசனம்**
256	-	**பாலரொடு வாலீசர்**

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

257	-	ஓதி உணர்ந்து ஒழுக்கநெறி
258	-	அழிவிலாக் கிரியையினால் ஆதல்
259	-	மந்திரங்கள் முதல் ஐந்தும்
260	-	வித்தையில் மந்திரம் இரண்டு
261	-	சாந்தியாதீத கலை தன்னின்
262	-	மூன்று திறத்து அணுக்கள்
264	-	இம்மையே ஈரெட்டு ஆண்டு
265	-	ஓது சமயங்கள் பொருள்
266	-	அருமறை ஆகமம் முதனூல்
267	-	வேதநூல் சைவநூல் இரண்டே
268	-	சிந்தாந்தத்தே சிவன் தன்
269	-	இறைவன் ஆவான் ஞானம்

எட்டாம் சூத்திரம் - மூன்றாம் அதிகரணம்

மேற்கோள்

இனி இவ்வான்மாக்கள் ஐயுணர்வுகளான் மயங்கித் தம்மை உணரா என்றது.

இதன் பொருள் :

தானே அறியும் இயல்பு இன்றிப், பிறிது ஒன்று அறிவிக்க அறியும் இயல்பினை உடைய உயிர்கள் , ஐம் பொறிகளால் மயக்கத்தை அடைந்து, அதனால் தமது சொரூபத்தை அறியா.

தெளிவுரை :

இந்த மேற்கோள், ஐம்பொறிகள் தத்துவ ஞானத்தை விளங்காமல் மறைக்கும் என்பதைக் கூறுகிறது.

ஏது

அவைதான் பளிங்கில் இட்ட வன்னம் போல்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

காட்டிற்றைக் காட்டி நிற்றலான்.

இதன் பொருள் :

பளிங்கின் இடத்துப் பதிந்த பல்வேறு வகைப்பட்ட நிறங்கள் அந்தப் படிக ஒளியைக் கீழ்ப்படுத்தித் தத்தம் நிறங்களையே காட்டி நிற்கும். அதுபோல, ஆன்மாவின் இடத்துக் கருவியாய் இருக்கும் ஐம்பொறிகள், அந்த ஆன்ம சொருபத்தைக் கீழ்ப்படுத்தி. எந்த எந்த இந்திரியம் எந்த எந்த விடயத்தை விளக்கக் கூடுமோ, அந்த அந்த இந்திரியம் அந்த அந்த விடயத்தையே, அந்த ஆன்மாவுக்குக் காட்டி நிறகும். ஆதலால், ' இனி இவ்வான்மாக்கள் ஐயுணர்வு களான் மயங்கித்தம்மை உணரா' என்று மேற்கோள் கூறியது.

தெளிவுரை :

விடயங்களுள், எல்லா விடயங்களையும் எல்லா இந்திரியங்களும் காட்டமாடட்டா, ஒவ்வொரு இந்திரியமும் அதற்கு உரிய ஒவ்வொரு விடயத்தையே காட்டும்; கண் உருவத்தையே காட்டும் ஓசை முதலியவ்றறைக் காட்டாது. இவ்வாறே பிற இந்திரியங்களும் ஆகும். ஆகவே, ஒரு இந்திரியம் ஒரு விடயத்தையே காட்டும் என்பதை அறிவிக்க வேண்டி, ஏதுவில் ''காட்டிற்றைக் காட்டி நிற்றல்'' என்று ஒருமை வாசகத்தால் கூறினார். கூறவே ஒன்று அறிந்தது ஒன்று அறியாதாயும்'' ஆன்மாவின் இயல்பை மயக்கி விடயக்காட்சிக்கே ஏதுவாயும் உள்ள ஐம்பொறிகளால், ஆன்மாவின் இயல்பு விளங்குமாறு இல்லை. எனவே, ஆன்ம சொருபத்தை உணர்த்துவதற்குக் குரு வேண்டும் என்பது பெறப்படும்.

(6) எடுத்துக்காட்டு வெண்பா

பன்னிறம் காட்டும் படிகம்போல் இந்திரியம்
தன் நிறமே காட்டும் தகை நினைந்து - பன்னிறத்துப்
பொய்ப்புலனை வேறுணர்ந்து பொய்பொய்யா மெய்கண்டான்
மெய்ப் பொருட்குத் தைவமாம் வேறு,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இதன் பொருள்:

பல்நிறம் காட்டும் படிகம் போல், இந்திரியம் தன் நிறமே காட்டும் தகை நினைந்து - பளிங்குக் கல்லின் இடத்துப் பொருந்திய பலநிறங்களின் தன்மையையே அப்பளிங்குக்கல் தன்னிடத்துக் காட்டி நிற்கும். நிறங்களின் தன்மை பளிங்கின் இடத்தில் விளங்குவது, பளிங்குக்குப் பொது இயல்பு, இந்தப் பொது இயல்பு உடைய படிகம் போல, ஆன்மாவின் இடத்துப் பொருந்திய இந்திரியங்களின் தன்மையையே, அவ்வான்மா தன்னிடத்தில் விளங்கி நிற்கும். இவ்வாறு சார்ந்த இந்திரியத்தின் வண்ணமாய் நிற்றல், ஆன்மாவுக்குப் பொது இயல்பு, இந்தப் பொது இயல்பை முன்னர்ச் சிந்தித்து அறிந்து கொண்டு, **பல்நிறத்துப் பொய்ப் புலனை வேறு உணர்ந்து** - பின்னர்ப் பளிங்கின் இடத்தில்தோன்றிய அந்நிறங்கள், பளிங்குக்கு வேறு என்று அறியுமாறு போல, பல்வேறு வகையான தன்மை உடைய அப்பொது இயல்பை உண்டுபண்ணும் இந்திரியங்களை, ஆன்மா தன்னின் வேறு எனத்தெளிந்து,

பொய் பொய்யா மெய்கண்டான் - அந்த இந்திரியங்களினால் உண்டாகிய அந்தப் பொது இயல்பு, பொய்யாய் ஒழியுமாறு தனது சிறப்பு இயல்பை ஆன்மா உணர்ந்தான் ஆயின், **வேறு மெய்ப் பொருட்குத் தைவம் ஆம்** - அந்த உணர்ச்சி பொது இயல்பை உண்டு பண்ணும் அசத்து ஆகிய அந்த இந்திரியங்களுக்கு வேறு ஆகிய சிவசத்தின் இயல்பு தன்னிடத்து விளங்கச் செய்யும், அவ்வாறு விளங்குவதால், ஆன்மா சிவம் ஆகிய சத்துக்கு அடிமை ஆகும்.

தெளிவுரை :

சிவமாம் தன்மை விளங்கப் பெற்ற சிறப்பு இயல்பை, அடிமை என்று கூறியதன் கருத்து வருமாறு: அடிமை ஆவது, அடியவன் ஆம் தன்மை, அஃதாவது, தனக்கு என ஒரு செயலும் இன்றிக் கருத்தாவின் அருள்வழி அடங்கி நிற்றல் ஆகும்.

ஆன்மா கருவிகளைக் கழித்த பின்னர்க் கழிக்கப்படாமல் என்றும் உடனாய் நிற்கும் சிவத்துடன் கலந்து நிற்கும் பொழுதும், சிவம் வியாபகமாகவும், தான் அந்தச் சிவத்துள் வியாப்பியமாய் அடங்கியும் நின்று, சிவனருளால் சிவானந்தத்தை அனுபவிக்கும், ஆதலால் அந்தச் சிறப்பு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இயல்பை அடிமைத்திறம் என்று கூறினார்.

இந்த வெண்பாவில் 'பொய்' என்ற சொல் பொது இயல்பையும் மெய் என்ற சொல் சிறப்பு இயல்பையும் குறித்து நின்றன. 'தைவம்' என்றசொல், தேவனது உடைமை என்னும் பொருளில் சிவத்துக்கு அடிமை என்பதைக் குறித்து நின்றது..

அடிமையும் உடைமையும் என உடைமை இருவகைப்படும். அவற்றுள் அடிமை உயிரையும், உடைமை பாசத்தையும் குறிக்கும். ஆயினும், இந்த இடத்தில், உயிரை உடைமைப் பொருளில் தேவனது உடைமைப் பொருளில் தேவனது உடைமை என்றது, பொதுவாக இரண்டும் உடைமை என்பது பற்றியே ஆகும்.

இந்த அதிகரணத்தோடு வைத்துச் சிந்திக்கத்தக்க சிவஞான சித்தியார்ப் பாடல்கள் வருமாறு:

பாடல் எண்		தொடக்கச் சொற்கள்
282	-	அறியாமை அறிவு அகற்றி
284	-	ஞாலமதின் ஞான நிட்டை
285	-	தேசம் இடம் காலம்திக்கு
289	-	பன்னிறங்கள் அவைகாட்டும்

எட்டாம் சூத்திரம்- நான்காம் அதிகரணம்

மேற்கோள்

இனி இவ்வான்மாத் தன்னை இந்திரியத்தின் வேறாவான் காணவே, தமது முதல் சீபாதத்தை அணையும் என்றது.

இதன் பொருள்:

ஐந்துவித உணர்வைச்செய்யும் இந்திரியங்களால் மயங்கித், தன்னை உணராது என மூன்றாம் அதிகரணத்தில் கூறப்பட்ட ஆன்மா, அறிவாகவும் வியாபகமாகவும் உள்ள தனது சிறப்பு இயல்பை, அறிவு இல்லாததும் ஏகதேசமாயும் உள்ள இந்திரியத்திற்கு வேறு என உணருமாயின்; அந்த வியாபக உணர்விற்கு, வேறு எனக் கழித்த இந்திரியத்தால் ஆகக் கூடியது ஒன்றும் இல்லை. ஆதலால் சற்குருவால் தன்னை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இந்திரியங்களின் வேறு என உணரவே வேறு காரணம் வேண்டாது, வேறு என உணர்ந்த அக் காரணத்தினாலேயே, தனக்கு ஆதாரம் ஆகிய முதல்வனது திருவடியை அணையும்.

ஏது

ஊசல் கயிறு அற்றால் தாய் தலையேயாம் துணையான்.

இதன் பொருள்:

ஒருவன் ஏறி இருந்து ஆடுவதற்கு ஆதாரமான ஊஞ்சல், கயிறு அறுந்த பொழுது, துன்பம் உற்ற இடத்துத் தாங்கும் தாய் போல, ஊஞ்சலில் இருந்தவனுக்குத் தாரகம் ஆவது தரையே அன்றிப் பிறிது இல்லை. அது போல இந்திரியத்தின் வேறாகத் தன்னைக் காணவே, கண்ட அந்த ஆன்மாவுக்குத் தாரகம் ஆவது, முதல்வன் திருவடியே அன்றிப் பிறிது இல்லை. ஆதலால், 'இனி இவ்வான்மா தன்னை இந்திரியத்தின் வேறாவான் காணவே, தமது முதல் சிபாதத்தை அணையும், என மேற்கோள் கூறியது.

தெளிவுரை:

ஆன்மா வியாபகப் பொருள் ஆதலால், ஒரு பொருளையும் நீக்க முடியாது. எனவே, இந்திரியங்களின் பற்று அறுதல்ஆகிய அதனால், தன்னை வேறு எனக் காணும் காட்சியின் விசேடமே இந்திரியத்தின் நீக்கம் ஆகும். ஆகவே, ஊசல் கயிறு அறுதல், இந்திரியத்தினை வேறாகக் காணும் பற்று அறுதலுக்கு உவ்மை ஆயிற்று. ஊஞ்சல், இந்திரியத்திற்கு உவமை; தரை, திருவடிக்கு உவமை; ஊஞ்கலில் ஆடுதல் இந்திரியங்களை நுகர்தற்கு உவமை,

(7) எடுத்துக்காட்டு வெண்பா

சிறை செய்ய நின்ற செழும்புனலின் உள்ளம்
சிறை செய்ய புலன் உணர்வில் தீர்ந்து - சிறை விட்டு
அலைகடலில் சென்று அடங்குமாறு போல் மீளாது
உலைவுஇல் அரன் பாதத்தை உற்று.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

(கொண்டு கூட்டு) சிறை செய்ய நின்ற செழும் புனலின் உள்ளம், சிறைவிட்டு அலை கடலின் சென்று அடங்கும் ஆறு போல், சிறை செய்புலன் உணர்வில் தீர்ந்து, உலைவு இல் அரன் பாதத்தை உற்று மீளாது.

இதன் பொருள் :

சிறை செய்ய நின்ற செழும் புனலின் உள்ளம் - ஒருவன் ஆற்றின் இடத்து அணையை உயர்த்திக் கட்டி, நீரைத் தடை செய்ய, அந்த அணையில் தடைப்பட்டுத் தேங்கி நின்ற அந்த ஆற்று நீர் போல, கருவிகளினால் ஏற்பட்ட பாச ஞானம், உயிர் ஆகிய தனது வியாபகத்தைத் தடை செய்ய, அந்தப் பாச ஞானத்தின்கண் ஏகதேசமாய் அடங்கித் தடைப்பட்டு நின்ற அந்த உயிர், **சிறை விட்டு அலை கடலின் சென்று அடங்கும் ஆறு போல்** - ஆற்று நீரைத் தடை செய்த அந்த அணை முரிந்து தடை தீர்ந்த பொழுது, அந்த ஆற்று நீர் யாதொரு தடையும் இன்றிக் கடலின் இடத்து வேகமாய்ச் சென்று, அக்கடல் நீரே ஆய்க், கடலுள் அடங்கி, மீண்டும் வாராதவாறு போல, **சிறை செய் புலன் உணர்வில் தீர்ந்து** - கருவிகளால் ஏற்பட்ட பாச ஞானத்தடையின் நின்றும் உயிர் நீங்கிய பொழுது, **உலைவு இல் அரன் பாதத்தை உற்று மீளாது** - அந்த உயிர் கேடு இல்லாத சிவபெருமானது திருவடியைப் பொருந்தி, அந்தத் திருவடி நிறைவே ஆய், சிவபெருமானின் வியாபகத்தில் அடங்கிப், பின்பு கருவிகள் இடத்து மீண்டும் செல்லாது.

தெளிவுரை :

கருவிகள் நீங்கிய பொழுது, உயிர் முதல்வன் திருவடியை அடையும்; அதன் பிறகு உயிர் கருவிகளிடத்து மீண்டும் வாராது என்னும் உண்மையை இந்த வெண்பா உவமைகள் வாயிலாக எடுத்துக் கூறுகிறது.

இந்த வெண்பாவில் வரும் ஆற்று நீர், உயிருக்கு உவமை, நீரைத் தடைசெய்யும் அணை பாசஞானத்திற்கு உவமை. கடல் நீர், திருவருளுக்கு (திருவடி) உவமை, கடல் சிவபெருமானுக்கு உவமை.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

(8) எடுத்தக்காட்டு வெண்பா

எவ்வுருவும் தான் என்னில் எய்துவார் இல்லைதாள்
இவ்வுருவின் வேறேல் இறை அல்லன் - எவ்வுருவும்
கண்போல் அவயவங்கள் காணுஅக் கண்இல்லார்
கண்பேறே காணக் கழல்

(கொண்டு கூட்டு) எவ்வுருவும் தான் என்னின், தாள் எய்துவார் இல்லை. இவ்வுருவின் வேறேல் இறை அல்லன்; எவ்வுருவும், அவயவங்கள் கண்போல் காணு, அக்கழல் அக்கண் இல்லார் கண்பேறே காண்.

இதன் பொருள் :

எவ்வுருவும் தான் என்னின், தாள் எய்துவார் இல்லை - திருவடியை அடைவதால் உயிரின் அறிவு சிவம் ஆகிறதே அன்றி, விடயங்களை அறியும் கருவிகளின் அறிவு சிவம் ஆவது இல்லை; கருவிகளின் அறிவும் சிவமே ஆகும் ஆனால்/ கருவிகளால் ஆகிய பாசஞானத்தைவிடத் திருவடியை அடையும் பதிஞானத்திற்குச் சிறப்பு இல்லையாதலால் கருவிகளின் வழிச் செல்லும் சகல நிலையைக் கைவிட்டுத் திருவடியை அடைய வேண்டாம் என்று எண்ணவேண்டிவரும். எனவே, ஒருவரும்திருவடிய்ய அடைவார் இல்லையாய் முடிந்து, வேதாகமங்களில் கூறியன ய்ாவும் போலியாய் முடியும்.

இவ்வுருவின் வேறேல் இறை அல்லன் - ஆகவே, முதல்வன் கருவிகளின் அறிவோடு பொருந்தாமல், அக்கருவிகளின் வேறாய் நிற்பன் என்றால், அக்கருவிகளின் அறிவிற்கு முதல்வனால் ஆகவேண்டிய உபகாரம் ஒன்றும் இல்லை எனப்பட்டு,அக்கருவிகளுக்கு இறைவன் அல்லன் என்று ஆகி முதல்வனுடைய முதன்மைக்கு இழுக்காய் முடியும். இவ்வாறாயின் கருவிகளின் இயல்புதான் யாது என்றால், எவ்வுருவும் - முதல்வனுடைய கலப்பினால் உயிரின் உணர்வு சிவம் ஆதல்போல,கருவிகளின் உணர்வும் சிவமே ஆயினும், இரண்டும் தம்முள் ஒரே தன்மை உடையன அல்ல, வேறு எவ்வாறு எனின், **அவயவங்ள் கண்போல காணு** - மெய் வாய்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கண் மூக்குச் செவி என்னும்ஐம்பொறிகளினும் உயிர் ஒன்றாய்க் கலந்து நின்றாலும், அவற்றுள் கண் நீங்கிய ஏனைய நான்கும், தம் இடத்து வந்த விடயத்தை அறிதலே அன்றித் தூரத்தில் உள்ள தத்தம் விடயத்தை, உயிரின்அறிவோடு கலந்து சென்று அறியமாட்டா; கண் மட்டும் ஒளி உடைய பொருள் ஆகலின், உயிரின் அறிவோடு கலந்து சென்று, தூரத்தில் உள்ள விடயத்தை வியாபித்து அறியும். இவ்வாறே முதல்வன் கலப்பு பெற்ற கருவிகளும், உயிர்போல வியாபித்து அறியமாட்டாதனவாய், தத்தம் விடயங்களை ஏகதேசமாய் அறியும் தன்மை உடையனவே ஆகும்.

அக்கழல் அக்கண் இல்லார் கண் பேறே காண் - ஏனைய இந்திரியங்களின் நின்றும் கண் இந்தியத்திற்கு, விடயங்களைச் சென்று அறியும் மேம்பாடு உண்டு என்பதை,மாசு மிகுதியால் கண் இழந்தவரிடத்துக் காண முடியாது, அந்த ஒளியினை இழந்தவர் மாசு நீங்கிக் கண் பெற்ற பொழுது, தூரத்தில் உள்ள பொருளை அறிவதிலிருந்து இவ்வுண்மையைப் புரிந்து கொள்ளலாம்.

தெளிவுரை :

ஐம்பொறிகளில் கண் மட்டும், பொருள்களைச் சென்று அறியும்; ஏனைய பொறிகள் நின்று அறியும். இந்திரியங்கள் ஐந்துடனும் உயிர் வியாபித்து இருப்பினும் கண் மட்டும் சென்று அறிதலும், ஏனைய நான்கும் இருந்த இடத்தல் வந்ததை அறிதலும் அகிய வேற்றுமை காணப்படுமாறு போல, பசு பாசங்களிடத்தில் சிவம் வியாபித்து இருப்பினும் பசுவுக்கு வியாபித்து அறிதலும், பாசத்திற்கு ஏகதேசமாய் அறிதலும் ஆகிய வேற்றுமை காணப்படும். ஆதலால், திருவடியை அடைந்து வியாபக அறிவாய் விளங்கும் உயிர், பின்னர்க் கருவிகளோடு கூடி ஏகதேசமாய் அறியும் என்று கூறுவது குற்றம் ஆகும்.

கழல் என்பது, காலில் அணிந்து இருக்கும் வெற்றியைக் காட்டும் மணி வடம் ஆகும். ஆகவே, கழல் என்பது, மணிவடத்தைக் காலில்அணிந்திருப்பவருக்கு உள்ள வெற்றியைக் குறித்து நின்றது.

முதல்வன், பசு பாசம் இரண்டினும் சமமாகவே கலந்து நிற்கின்றான்; ஆயினும், உயிரின் உணர்வு வியாபகம் ஆவது

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

போலப், பாசத்தின் உணர்வு வியாபகம்ஆகாமல், ஏகதேச விளக்கம் ஆகும். (ஏகதேசம் - ஓரளவு) உயிரின் உணர்வு வியாபகம் ஆவது ஆகிய மேம்பாட்டைப் பாசத்தால் வியாபக உணர்வை இழந்து நிற்கும் உயிரினிடத்து அறிய முடியாது; ஆயினும், பாசம் நீங்கிச் சிவப்பேறு அடைந்த உயிரினிடத்து அம்மேம்பாடு அறியப்படும்.

உயிரும் கருவிகளும் சிவனால் வியாபிக்கப்பட்டுச் சிவமே ஆயினும், கருவிகளின் அறிவு **ஏகதேச விளக்கம்** ஆவது அன்றி, உயிரின் அறிவு போல **வியாபக விளக்கம்** ஆவது இல்லை. எனவே, திருவடியைப் பெற்ற உயிர் மீண்டும் கருவிகளோடு கூடி ஏகதேசமாய் அறியும் என்று கூறுவது குற்றம் ஆயிற்று.

(9) எடுத்துக் காட்டு வெண்பா

ஐம்பொறியின் அல்லை எனும் அந்ததர சிவனை
ஐம்பொறியை விட்டு அங்கு அணை சகலன் - ஐம்பொறியின்
நீங்கான்; நீர்பாசிபோல் நீங்கும்மல கன்மம்வரின்
நீங்கானை நீங்கு நினைந்து.

(கொண்டு கூட்டு) ஐம்பொறியின் அல்லை எனும் அந்ததர, அங்கு ஐம்பொறியை விட்டுச் சிவனை அணைசகலன் ஐம்பொறியின் நீங்கான்; நீர்ப்பாசிபோல் நீங்கும் மல கன்மம் வரின் நீங்கானை நினைந்து நீங்கும்.

இதன் பொருள்:

ஐம்பொறியின் அல்லை எனும் அந்ததர - நீ வியாபக அறிவை உடைய பொருள் அன்றி, ஐப்பொறிகள் போல ஏகதேச அறிவை உடைய பொருள் ஆகமாட்டாய் - என்று உபதேசிக்கப்படும் சித்தாந்த மகாவாக்கியத்தை பெற்றிருக்கும் மாணுக்கனே, **அங்கு ஐம்பொறியைப் விட்டுச்சிவனை அணை சகலன் ஐம்போறியின் நீங்கான்** - 'சிறை விட்டு அலைகடலில் சென்று அடங்குமாறு போல்' என மேலை வெண்பாவில் கூறியபடியே, ஐம்பொறிகளால் உண்டாகும் உலகப் பொருளை அறியும்அறிவை விட்டுச் சிவபருமான் திருவடியை அடைந்த

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சகலவர்க்கத்தில் உள்ளவன், மீண்டும் ஐம்பொறிகளை அடைந்து சிவபெருமான் திருவடியை நீங்கமாட்டான். **நீர்ப்பாசி போல் நீங்கும் மல கன்மம் வரின், நீங்காளை நினைந்து நீங்கும்** - கல் எறியும்பொழுது நீரில் உள்ள பாசி நீங்கிக், கல் எறியாதபொழுது அந்தப் பாசி பரக்கும். அது போலத் திருவடியை அடைவதால் நீங்கிய ஆணவம் கன்மம் மாயைகள், பழைய வாசனையால் திருவடியை மறந்தபொழுது, வந்து பொருந்தும். அவ்வாறாயின், அந்த வாசனை காரணமாக, அந்த மலகன்ம மாயைகள் விருத்தி ஆவதற்கு உரிய இந்திரியங்களைப் பொருந்தாமல், அந்த வாசனை வந்து தாக்கியபொழுதும், தன்னைவிட்டு நீங்காத இறைவனை, பஞ்சாக்கர செபம் முதலிய உபாயத்தால் சிந்தித்து நீக்கிக் கொள்ளுவன்.

தெளிவுரை :

கடல் நீரை அடைந்த ஆற்று நீர், மீண்டும் ஆற்றுக்குத் திரும்பும்போது கடல்நீராகவே திரும்பி, மீண்டும் அந்தக் கடலில் சென்று அடங்கும். அதுபோல, சிவபெருமான் திருவடியை அடைந்த ஆன்மா, பழைய வாசனையால் மீண்டும் கருவிகளைக் கூடுதற்கு வந்தால், திருவடியை மறவாத உபாயத்தால் , அந்தக் கருவிகளை விட்டு மீண்டும் திருவடியை அடைந்து, அந்தத் திருவடியில் அடங்கும்.

வெண்பாவில் உள்ள ''மல கன்மம் வரின்'' என்ற தொடரில் உள்ள ''வரின்'' என்ற சொற்கு விளக்கம் வருமாறு:-

கடல் நீரை அடைந்த ஆற்று நீர், மீண்டும் சிறிது தூரம் ஆற்றுக்கு வந்து, கடலில் சென்று அடங்குமாறு போலச், சிவன் திருவடியை அடைந்த உயிர், கருவிகளிடத்துத் திரும்புதல் உறுதி அன்று; வாசனை இருப்பின் திரும்பும்; வாசனை இல்லையாயின் திரும்பாது என்பது பெறப்படும்.

''அந்ததர' என்னும் தொடரில் உள்ள **''அந்தம்''** சித்தாந்தத்தைக் குறிக்கும்; **''தரம்''** என்பது சித்தாந்தத்தில் உள்ள ஒரு சிறந்த வார்த்தை ஆகிய மகா வாக்கியத்தைக் குறிக்கும். எனவே, 'அந்ததர' என்பதற்குச் **சித்தாந்த மகா வாக்கியம்** எனப் பொருள் செய்யப்பட்டது. அந்த மகா வாக்கியம், **''ஆன்மா ஆகிய நீ வியாபக அறிவை உடையவன்;** ஐம்பொறிகள்போல **ஏகதேச அறிவை உடையவனல்லன்''** என்பதே ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இந்த அதிகரணத்தில் கூறிய மூன்று எடுத்துக்காட்டு வெண்பாக்களும் ஒன்றுக்கு ஒன்று தொடர்பு உடைய ஒரு பொருள் மேல் வந்தன ஆகும். அப் பொருள் வருமாறு:-

1. திருவடி ஞானத்தைப் பெற்ற உயிர், கருவிகளால் ஆகிய பாச ஞானத்தை மீண்டும் அடைவது இல்லை.

2. அவ்வாறுபாசஞானத்தைமீண்டும் உயிர் அடையும் என்று கூறுவது குற்றம் ஆகும்.

3. ஏகதேச வியாபகத்தில் பழைய வாசனை காரணமாக, பாச ஞானத்தில் மீண்டும் உயிர் வருமாயின், அவ்வாறு வாராதவாறு செய்து கொள்ள வேண்டும்.

அடுத்துத் ''தாய் தரையே '' என்று ஏதுவில் உள்ள சொற்றொடருக்கு விளக்கம் வருமாறு:-

ஊஞ்சல் கயிறு அறுந்தால், அந்த ஊஞ்சலில் இருந்தவர்களுக்கு, அந்த ஊஞ்சல் ஆதாரம் ஆகாமல், தரையே தாய்போல் ஆதாரமாகும். அதுபோல, பாச ஞானத்தின் நின்றும் நீங்கிய உயிருக்குத் தாரகம் சிவபெருமான் திருவடியே ஆகும். ஆகவே, ஆன்மா தன்னை இந்திரியத்தின் வேறு ஆவான் காணவே முதல்வன் சீபாதத்தை அணையும் என்பது பெறப்பட்டது.

இந்த அதிகரணத்தில் வைத்துச் சிந்திக்கத்தக்க சிவஞான சித்தியார்ப் பாடல்கள்:-

பாடல் எண்		தொடக்கச் சொற்கள்
286	-	இந்நிலைதான் இல்லையே
287	-	சாக்கிரத்தே அதீதத்தை
288	-	கருவி கழிந்தால் காணார்
290	-	எங்கும்தான் என்னின்னும்
291	-	பாசிபடு குட்டத்தில் கல்லினை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இந்தச் சூத்திரத்தின் தொகைப் பொருள் வருமாறு

1. சத்து அசத்து ஆகிய இரண்டனையும் சார்ந்து அவ்விரண்டனையும் அறியும் அறிவை உடைய ஆன்மா, ஐம்புலன் ஆகிய வேடரைச் சார்ந்து தன்னையும் தலைவனையும் அறியாது மயங்குகிறது.

2. தலைவனே குருவாய் வந்து உபதேசிக்க, அந்த உபதேசத்தால் ஐம்புலனை விட்டுத் தலைவன் திருவடியை அடைகிறது.

3. சரியை கிரியை யோகங்களே, அத்தகு உபதேச அறிவை ஆன்மா பெறும்படி செய்யும்.

4. வேள்வி முதலாயின சுவர்க்கம் முதலிய பதங்களையே தரும்; வீடுபேற்றைத் தரமாட்டா.

5. சிவபெருமானே மானுடச் சட்டை தாங்கி குருவாய் வந்து உபதேசிக்கின்றான். அவ்வடிவம் உண்மையே; உபசாரம் அன்று.

6. ஒவ்வொரு உயிருக்கும், அதனதன் மலசத்தியின் மறைப்புக்கு ஏற்ப, தனித்தனித் தன்மையில் முதல்வன் உணர்த்துவான்.

7. ஐம்பொறிகள் மயக்கத்தைச் செய்யுமே அன்றிச், சிவ பெருமானை அறியும் உணர்வை விளக்க மாட்டா.

8. ஐம்பொறிகள் நீங்கும்பொழுது, கேவலநிலை கூடுமாகலின் அப்பொறிகள் உள்ளபொழுதே அப்பொறி உணர்வைப் பொய்யாகக் காணவேண்டும்.

9. பொறி உணர்வைப் பொய் என்று கண்டபொழுது, ஆன்மா இறைவன் திருவடியை அடையும்.

10. பழைய வாசனை காரணமாகப் பொறிகள் மீண்டும் பொருந்துமாயின், சிவபெருமான் திருவடியையே நினைந்து, அவ்றறைவிட்டு நீங்கவேண்டும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஒன்பதாம் சூத்திரம்

குருவினால்உபதேசிக்கப்பட்டசாதனத்தை அனுட்டிருக்கும் முறை கூறப்படுகிறது.

ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினில் சிந்தை நாடி
உராத்துனைத் தேர்த்து எனப் பாசம் ஒருவத்
தண்நிழலாம் பதிவிதி எண்ணும் அஞ்சு எழுத்தே,

(கொண்டு கூட்டு) ஊனக்கண் பாசம் உணராப் பதியை, ஞானக் கண்ணினில்சிந்தை நாடி, பாசம் உராத்துனைத் தேர்த்து என ஒருவ பதி தண் நிழலாம், அஞ்செழுத்தே விதி எண்ணும்.

இதன் பொருள்:

ஊனக்கண் - துணை இன்றி அறியமுடியாத பசு அறிவாலும், **பாசம்** - துணை ஆகிய கருவி கரணங்களால் உண்டாகும் ஏக தேசம் ஆகிய பாச அறிவாலும், **உணரா** - பதியை அறியமுடியாது. **பதியை** - அவ்விரு அறிவாலும் அறியமுடியாத முதல்வனை **ஞானக்கண்ணினில்** - அந்த முதல்வனுடைய திருவடி ஞானத்தால், **சிந்தை நாடி** - உயிர் ஆகிய தன் அறிவின்கண்ணே ஆராய்ந்து அறிக **(அவன் திருவடி ஞானத்தால் அவனை அறிக என்னும் இக்கருத்தே பற்றி, " அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்று அருளிச்செய்தார் மாணிக்க வாசகப் பெருமான். "அடி" என்பதும் "அருள்" என்பதும் ஒரு பொருள் ஆகும்)** அத்திருவடி ஞானத்தால் முதல்வனை அறிவதோடு, **பாசம்** - நிலம் முதல்நாதம் ஈறாகிய பாசக்கூட்டத்தை, **உராத்துனை தேர்த்து என ஒருவ** - கானல் நீர் போலத் தோன்றிப் பொய்யாய்க் கழியுமாறு போலக் கழிவது என்று அறிந்து, அந்தப் பாசக் கூட்டத்தினின்றும் நீங்கவே, **பதி** - அத்திருவடி ஞானம் ஆகிய பதி ஞானம் பிறவித்துயர் ஆகிய வெப்பத்துக்கு, **தண் நிழலாம்** - குளிர்ந்த நிழலாய் வெளிப்பட்டு விளங்கும். அவ்வாறு பாசத்தில் நின்றும் நீங்கித், திருவடி ஞானத்தைப் பெற்று, அத் திருவடி ஞானத்தால் முதல்வனைக்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கண்ட காட்சி, சலியாது நிலைத்தற் பொருட்டுப், பாசத்தில் நீங்கி முதல்வனை அடைதல் ஆகிய பொருளைத் தருகின்ற அஞ்செழுத்தே - திரு அஞ்செழுத்தை அறிந்து. விதி எண்ணும் - அப் பஞ்சாக்கரம் விதிப்படி செபிக்கப்டும்.

தெளிவுரை :

''உராத்துனை'' என்பதில், 'உரா' என்பது, 'உலாவல்' என்னும் கருத்தில் பரந்து திரிதலையும், 'துனை' என்பது 'வேகத்தை' யும் உணர்த்தி 'பரந்து திரிதலில் அதி வேகம் உடைய' என்னும் பொருளில் நினறது. உலாவலும் திரிதலும் ஒரு பொருளை உடைய இரு சொற்கள்.

எட்டாம் சூத்திரத்தில் கூறியவாறு தமது முதல், குருவுமாய் வந்து உபதேசிக்கக் கேட்ட உயிர், அந்த உபதேசத்தைச் சிந்திக்கும் முறை கூறி, ஐம்புல வேடருடன் கூடிவளர்ந்த அசுத்தத்தை நீக்கித், தன்னைத் தூய்மைப் படுத்தும் முறையையும் கூறி உணர்த்துவது, இந்த ஒன்பதாம் சூத்திரத்தின் கருத்து ஆகும்.

ஆடைக்கு அழுக்கு நீக்கமே சுத்தி ஆமாறு போல உயிர்க்குப் பாச நீக்கமே சுத்தி ஆவது அன்றி வேறு அன்று, 'இந்திரியத்தின் வேறாகத் தன்னைக் காண்டல்ஆகிய அக்காட்சியே உயிருக்குச் சுத்தி ஆகும். இந்திரியத்தின் வேறாகத் தன்னைக் காணும் முறையில், அதிதீவிர பக்குவம், தீவிரதரம், உடையாருக்கு, மூவகைக் காட்சி நிகழும். அஃது ஆசிரியன் உபதேசித்ததைக் கேட்ட மாத்திரத்தே நிகழும், அஃது ஒன்றன் பின் ஒன்றாக விரைவில் நிகழும். அம்மூவகைக் காட்சி வருமாறு: நிருவிகற்பக் காட்சி, சந்தேகக் காட்சி, தெளிவுக்காட்சி என்பன ஆகும்.

மந்ததரம், மந்தம், தீவிரம் ஆகிய பக்குவம் உடைய ஏனையோருக்கு, உபதேசத்தைக் கேட்ட மாத்திரத்தே, அந்த மூன்று காட்சியும் நிகழமாட்டா. அவர்களுக்குக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்னும் படிமுறையான சாதனத்தால், அம்மூன்று காட்சியும் நிகழும். எவ்வாறு என்றால், கேட்டலினால் நிருவிகற்பக் காட்சியும், சிந்தித்தலினால் சந்தேகக் காட்சியும், தெளிதலினால் தெளிவுக்காட்சியும் நிகழும்.

தீவிரதர பக்குவம் உடையவருக்கு எட்டாம் சூத்திரத்தில்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கூறியதே போதும்; ஆயினும், தீவிரதரம்அல்லாத ஏனைய பக்குவம் உடையாருக்கு, எட்டாம் சூத்திர்த்தில் கூறியவாறு, **சிவரூபத்தில் நிகழும் ஆன்ம தரிசனமும்**, அதன் பின்னாக இந்தச் சூத்திரத்தில் கூறியவாறு, **சிவதரிசனத்தில் நிகழும் ஆன்மசுத்தியும்** உறுதியாய் வேண்டப்படுமாதலின், எட்டாம் சூத்திரத்தின் பின்னாக இந்த ஒன்பதாம் சூத்திரம் கூறப்பட்டது. எனவே, பழைய வாசனையால், சிவத்தின் இடத்தும் கருவிகளின் இடத்தும் நிலை பெறாமல் அலைபவருக்கு, அந்த வாசனையை நீக்கும் உபாயத்தை இந்தச் சூத்திரத்தில் கூறுகிறார்.

தத்துவங்களின் வேறாகத் தன்னைக் கண்டபிறகும், தன் உண்மை நிலையை அறியாமையே **நிருவிகற்பக் காட்சி** ஆகும். தன் உண்மை நிலையை அருளோடு பிரிப்பின்றி நிற்பது என அறிந்தும், அவ்வருளில் அடங்காமல், அருளிலும் கருவிலும் மாறி மாறிப் போக்கு வரத்தாய் நிற்றல், **ஐயக்காட்சி** ஆகும். அருளில் அடங்கி அடிமையாய் நிற்றல், **தெளிவுக்காட்சி** ஆகும். இந்த மூன்று வகைக் காட்சியும், தத்துவ ரூபம் முதல் சிவபோகம் ஈறாகிற பத்து செயல்பாடுகளும் உடன் நிகழ்வாக தசகாரியத்தில் வைத்துக் காணலாம்.

இந்தச் சூத்திரத்தில் மூன்று அதிகரணங்கள் உளளன. அவை வருமாறு :

1. ஊனக்கண் பாசம் உணராப் பதியை ஞானக் கண்ணினில் சிந்தை நாடி.

2. உராத்துனைத் தேர்த்து எனப்பாசம் ஒருவத் தண்ணிழலாம் பதி.

3. விதி எண்ணும் அஞ்செழுத்தே.

ஒன்பதாம் சூத்திரம் - முதல் அதிகரணம்

மேற்கோள்

ஈண்டு அம்முதலை ஞானக் கண்ணாலே காண்க என்றது இதன் பொருள் :

இந்த முதல் அதிகரணத்தில் , பாசஞானத்தாலும்பசு ஞானத்தாலும் அறியப்படாத முதல்வனைப் பதி ஞானத்தாலே

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அறிக.

தெளிவுரை:

'ஞானக் கண்ணுல்' என்று கூறாமல், 'ஞானக்ண்ணுலே' என்று கூறியதால், முதல்வனைப் பதிஞானத்தால் அன்றிக் காண முடியாது என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

ஏது

அவன் வாக்கு மனாதீத கோசரமாய் நிற்றலான்.

இதன் பொருள் :

முதல்வன், பிருதிவி முதல் நாததத்துவம் முடிவான பாசத்தால் உண்டாகும் ஞானத்தின் விருத்தியையம், தற்போத முனைப்பு ஆகிய பசு ஞான்த்தின் விருத்தியையும், கடந்து அதீதமாய் நின்று, அந்த முதல்வனோடு பிரிப்பு இன்றி நின்று உணரும் பதி ஞானத்திற்கு மட்டுமே விளங்கி அறியப்படுவன். ஆதலால் 'ஈண்டு அம்முதலை ஞானக் கண்ணாலே காண்க' என மேற்கோள் கூறியது.

தெளிவுரை :

'பாச ஞானம்' என்பது, பாசம் ஆகிய கருவிகளால் ஆன்மாவினிடத்தில் நிகழும் ஞானத்தைக் குறிக்கும்.

'பசு ஞானம்'' என்பது தற்போத முனைப்பால் ஆன்மாவின் இடத்து நிகழும் ஞானத்தைக் குறிக்கும்.

'பதி ஞானம் '' என்பது, பதியின் அருளால் ஆன்மாவினிடத்து நிகழும் ஞானத்தைக் குறிக்கும்.

(1) எடுத்துக்காட்டு வெண்பா

நாடியோ, என்போ, நரம்புசிக் கோழையோ,
தேடிஎனை அறியேன் தேர்ந்தவ்கை - நாடிஅரன்
தன்னாலே தன்னையும் கண்டு தமைக்காணுர்;
என்னாம் என அறிவார் இன்று.

இதன் பொருள் :

நாடியோ என்போ நரம்பு சிக் கோழையோ தேடி எனை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அறியேன். தேர்ந்த வகை நாடி - காணப்படும் சரீரத்துள் நான் யார்? நாடியோ. நரம்போ, சீயோ, கோழையோ, இந்திரியங்களோ அந்தக்கரணங்களோ என்று என்னைத்தேடும்பொழுது, தேடினாலும் அறிகின்றிலேன். இவ்வாறு அறியேன் என்று தேர்கின்ற தெளிவான அறிவில், 'யான்' என்பதை எனக்கு அறிவிக்கின்ற ஓர் அறிவுப்பொருள், தெளிவான அந்த அறிவின் வேறாக உண்டு என்பதை ஆராய்ந்து நோக்கும்பொழுது, அரன் தன்னாலே தன்னையும் கண்டு தமைக் காணுர் - முதல்வனது திருவருள் விளங்கித் தோன்றும். அந்தத் திருவருள் ஆகிய திருவடி ஞானத்தால், முதல்வனையும் அறிந்து முதல்வனைவிட்டு நீங்காமல் நின்று, அம்முதல்வனை அறியும் பொருள் ஆகிய தம்மையும் அறியும். இவ்வாறு முதல்வனையும் தம்மையும் அறியாதவர், என் என அறிவார் இன்று - கருவி கரணங்கள் எல்லாம் விடுபட்ட முத்திக் காலத்தில், தனித்து நில்லாத தம்மை, வேறு எந்தத் தன்மை உடையவராக அறிய வல்லார்?

தெளிவுரை :

இந்த வெண்பா இறையருளாலேயே ஆன்மா இறைவனையும் தன்னையும் அறியும் என்பதைக் கூறுகிறது. 'நாடி' என்றது. இடை பிங்கலை சுழுமுனை என்னும் நாடிகளைக் குறிக்கும். நாடி வேறு; நரம்பு வேறு, 'சீ' என்பது, புண்ணிலிருந்து வெளிப்படும் நீரைக் குறிக்கும். அஃதாவது இரத்தம். கோழை என்பது சிலேட்டுமத்தைக் குறிக்கும்.

தன்னை யார் என்று ஆராய்ந்து வரும் நிலையில், இறைவன் அருள் விளங்கித் தோன்ற, அந்த அருளால் இறைவனை அறிந்து, பிறகு தன்னையும் அறியும். இதிலிருந்து ஓர் உண்மை புலப்படும். ஆன்மா, இறைவனை மட்டும்அன்றித் தன்னையும் இறைவன் அருளாலேயே அறியும் என்பதே அந்த உண்மை.

(2) எடுத்துக்காட்டு வெண்பா

காட்டிய கண்ணே தனைக்காணு; கண்ணுக்குக்
காட்டாய உள்ளத்தைக் கண்காணு - காட்டிய
உள்ளம் தனைக்காணுது; உள்ளத்தின் கண்ணாய
கள்வன்தான் உள்ளத்தில் காண்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இதன் பொருள்·

காட்டிய கண் தனைக் காணு - கண் ஒரு பொருளைக் காணும் போது, தானே காணமாட்டாது;உயிரால் காட்டப்பட்டுக் காணும், அவ்வாறு பொருளைக் காண்கின்ற கண், அதன் இயல்பை அறியமாட்டாது, **கண்ணுக்குக் காட்டு ஆய உள்ளத்தைக் கண் காணு** - அது மட்டும் அன்று; கண்ணுக்குப் பொருளைக் காண்பித்து, கண்ணைக் கருவியாகக் கொண்ட அதற்குக் கருத்தாவாய் நிற்கும் உயிரையும் கண் காணமாட்டாது; **காட்டிய உள்ளம் தனைக் காணுது** - அதுபோல நாடி முதலியவற்றுள், 'நான் யார்? என்று தேர்ந்து அறிகின்ற உயிர், தானே அவ்வாறு தேர்ந்து அறிய மாட்டாது; முதல்வன் மறைந்து நின்று அறிவிக்க அறியும். அவ்வாறு முதல்வனால் அறிகின்ற உயிர், கண்போலவே தன் இயல்பையும் அறியாது; தனக்கு அறவித்து நிற்கும் முதல்வனையும்அறியாது.

உள்ளத்தின் கண் ஆய கள்வன்தான் - என்றாலும், கண் சடம் ஆகலின், எக்காலத்தும் உயிரை அறியாது; உயிர், கண்போலச் சடம் அன்று; அஃது அறிவுப் பொருள் ஆகலின், நான் யார்? என்று தேர்கின்ற அந்தத் தேர்ச்சியறிவின் இடத்தும், முதல்வன் உடனாய் நின்று அவ்வாறு தேரும்படி செய்து மறைந்து கள்வனாய் நிற்பதாலே, **உள்ளத்தின் காண்** - அந்த முதல்வனை, அவன் அருளால் உன்னிடத்தில் உண்டாகும் தெளிந்த அறிவால், நாடித் தெளிவாயாக.

தெளிவுரை :

எதிர் முகமாகக் காணப்படும் பொருளையும், முதுகுப்புறமாகக் காணப்படும் பொருளையும் கண் காணும், அந்தக் கண்ணே, உள்ளே இருக்கின்ற தன் ஒளியையும் (கண்ணொளி) தன்னைச் செலுத்தும் உயிரையும் காணுது. அதுபோல உயிர், தன்னையும் முதல்வனையும் அறியமாட்டாது, ஆயினும் உயிர், கண்போல், சடம் அன்று; அறிவுப்பொருள்; எனவே, முதல்வன் அருளால் தன்னையும் தலைவனையும் அறியமுடியும்,

உயிர், கண்ணுக்குத் தோன்றாமல் மறைந்து நின்று' அக்கண்ணுக்குப் பொருளைக் காட்டுவதால் அந்தக் கண், தன்னையும் உயிரையும் அறியமாட்டாது ஆயிற்று; அதுபோல

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முதல்வன், இதுவரையும் உயிருக்குத் தோன்றாமல் மறைந்து நின்றே அவ்வுயிருக்கு அறிவித்ததால் அந்த உயிர், தன்னையும் முதல்வனையும் அறியமாட்டாதது ஆயிற்று எனவே முதல்வனைக் ''கள்வன்'' என்னும் குறிப்பு மொழியால் குறிப்பிட்டார். 'குறிப்பு மொழி' என்பது, குறிப்பினால் பொருளை உணர்த்தும் மொழி ஆகும்.

கண்ணுக்கு உள்நோக்கும் தன்மை இல்லை. உயிருக்கு உள்நோக்கும் தன்மை உள்ளது; எனவே உள்நோக்கி அறிய வல்லார்க்கு, தோன்றாது மறைந்து நிற்கும் கள்ளம் தீர்ந்து, தம்மையும் தலைவனையும் காண்டல் கூடும் என்பது பெறப்படும்.

ஒன்பதாம் சூத்திரம்-இரண்டாம் அதிகரணம்

மேற்கோள்

இனி அசத்தாய் உள்ள வன்ன பேதங்களை, அசத்து என்று காண, உளதாய் நிற்பது, ஞானசொரூபம் என்று உணரற்பாற்று

இதன் பொருள் :

நிலைத்து இருக்கின்ற பதிஞானம் ஆகிய தன்னுடைய சொரூபத்தைக் காட்டாமல் மறைத்து நிற்கின்ற நிலையில்லாத பிரபஞ்சங்களை, இவை நிலைத்து இருக்கும் பொருள்கள் அல்ல என்று விவேகித்து அறிந்தால், அவ்வாறு அறியும் பொழுது, ஒன்றிலும் பற்று இல்லாததாய் விளங்கித் தோன்றுவது பதிஞானத்தின் இயல்பு என்பதை அறிந்து கொள்வாயாக.

தெளிவுரை :

இந்தச் சூத்திரத்தின் முதல் அதிகரணத்தில், 'இறைவனை அவன் அருளால் அறிக' என்பது கூறப்பட்டது. இந்த அதிகரணத்தில், 'அந்த இறையருளைப் பெறும் முறை எவ்வாறு? என்பதற்கு விளக்கம் கூறப்படுகிறது.

''பாசம் ஒருவ'' என்று சூத்திரத்தில் கூறப்பட்டு இருக்கும் தொடருக்கு பொருள் 'தோன்றி அழியும் தனு கரண புவன போகம் என்னும் காரியப் பிரபஞ்சம், அசத்து என்று அறிந்து

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நீங்க' என்பது ஆகும். ஆகவே, பாசப்பொருளைப் பாசப்பொருள் என்று அறிந்து நீங்க வேண்டியது ஆன்மாவே என்பது பெறப்படும்.

ஆன்மா வியாப்கப் பொருள்; எனவே அஃது எதனையும் விட்டு நீங்க முடியாது. ஆகவே, வியாபகப் பொருளுக்கு நீங்குதல் ஆவது, அறிதலே அன்றி வேறு இல்லை. ஆதலால், இந்தப் பிரபஞ்சங்கள் நாமும் அல்ல, நம்முடையனவும் அல்ல என்று அறியும் அறிவின் விசேடமே அன்றிப் பொருளை விட்டு ஆன்மா நீங்குதல் இல்லை என்னும் உண்மை நினைவில் கொள்ளத்தக்கது. இதனைச் சிவஞான சுவாமிகள்,

''வியாபகப் பொருளுக்கு ஒருவுதல் ஆவது,
உணர்ச்சி விசேடமேயாம்''

என்ற அருளிச் செய்துள்ளார்.

ஆன்மாவோடு என்றும் பிரிப்பின்றி நிற்கும் சிவஞானம், என்றும் ''தண் நிழல்'' ஆகவே இருக்கும். இருப்பினும், பிரபஞ்சத்தைத் தானாகவும் தன்னுடையதாகவும் ஆன்மா எண்ணியதால், குளிர்ந்த நிழலாய் விளங்கும் அந்தச் சிவஞானம், விளங்கித் தோன்றுவது இல்லை. பிரபஞ்சம் தானும் அன்று, தன்னுடையதும் அன்று என்று அறியவே, அந்தச் சிவஞானம் விளங்கித் தோன்றும். எனவே, தண் நிழலாய் நிற்றல் என்பது புதிதன்று; என்றும் உள்ளது என்பது பெறப்படும்.

அறிவு வேறு; உணர்வு வேறு; அறிவது ஆராய்ச்சி; உணர்வது அனுபவம். சிவஞானம் தண் நிழலாய் விளங்கித் தோன்றுவதை, அனுப அறிவால் அறியலாமே அன்றி, ஆராய்ச்சி அறிவால் அறிய முடியாது. இவ்வுண்மையை ஆன்மாவுக்கு அறிவிக்க வேண்டியே, மேற்கோளில் ''உணரற்பாற்று'' என்று கூறினார்.

இந்த அதிகரணத்தில், ஏது மேற்கோளுடன் கூறப்பட்டுள்ளது. எனவே, அந்த ஏதுப்பொருளை மற்ற அதிகரணங்களில் கூறியதுபோல, மேற்கோளின் வேறாக வைத்துக் காணும் பொருட்டுச் சிவஞான சுவாமிகள், கீழ்க்காணுமாறு சிற்றுரையில் ஏது கூறியருளியுள்ளார். அது வருமாறு:-

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஏது

வேற்றியல்பாகிய வன்ன பேதங்களை, வேற்று இயல்பு என்று கண்டு கழிப்பின், உளதாய் நிற்பது படிக சொரூபமாம் துணையான்.

இதன்பொருள் :

படிகத்தின் முன் வைக்கப்பட்ட நீலம், செம்மை முதலிய பொருள்களின் நிறங்கள் படிகத்தில் பதிந்த பொழுது அந்த நிறங்கள் படிக ஒளியின் சொரூபத்தைத் தெரிய ஒட்டாமல் மறைத்து நிற்கும், அந்நிறங்களைப் படிக ஒளியின் வேறான நிலை இல்லாதவைகள் எனக் கண்டால், அவ்வாறு காணும்பொழுது நிலை உடையதாய் விளங்கி நிற்பது, படிக ஒளியின் சொரூபம் ஆகும்.

இந்த ஒற்றுமையால், நிலைத்திருக்கின்ற சிவஞானம் ஆகிய தன் சொரூபத்தைக் காட்டாமல் மறைத்து நிற்கும் நிலை இல்லாத பிரபஞ்சத்தை, நிலை உடையது அன்று என்று விவேகித்து அறிந்தால், அப்பொழுது நிராலம்பமாய் விளங்கித் தோன்றுவது, ஞான சொரூபம் என மேற்கோள் கூறியது.

தெளிவுரை :

ஆலம்பம் என்பது ஆதாரம்; நிராலம்பம் என்பது ஆதாரம்இல்லாததாய் இருக்கும். பற்றுக்கோடு இல்லாத பொருள் கடவுள் ஒருவரே. ஆகவே, 'நிராலம்பமாய் விளங்கித் தோன்றுவது ஞான சொரூபம்'' என்று கூறியதற்குப் பொருள் கடவுள் மயமாய் விளங்கித்தோன்றுவது ஞான சொரூபம் என்பது ஆகும்.

அசத்தாய் உள்ள பிரபஞ்சத்தை, அசத்து என்று காணும் முறை எவ்வாறு என்றால்,

ஆசிரியன் உபதேசித்த உபதேசப் பொருளில் உறைத்து நின்று , பிரமபதம் முதலிய எல்லாப் புவனங்களும், அப்புவனங்களில் உள்ள அனுபவப் பொருள்களும், கக்கின சோறு போலக் கண்டு, அருவருத்து விடல் என்பதாகும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

(3) எடுத்துக்காட்டு வெண்பா

நிர்க்குணனாய் நின்மலனாய் நித்தியா னந்தனாய்த்
தற்பரமாய் நின்ற தனி முதல்வன் - அற்புதம் போல்
ஆனா அறிவாய் அளவு இறந்து தோன்றானோ
வானே முதல்களையின் வந்து.

(கொண்டு கூட்டு) வானே முதல் களையின், அளவு இறந்து அற்புதம் போல் வந்து, ஆனா அறிவாய்த் தோன்றானோ.

இதன் பொருள் :

நிர்க்குணனாய் - முதல்வன், பிரகிருதி மாயா காரியம் ஆகிய சாத்துவிகம் இராசதம் தாமதம் என்னும் முக்குண ரூபமாய் அளந்து அறியப்படும் அசுத்துப் பிரஞ்சம் போல் அறியப்படாதவனுமாய், **நின்மலன் ஆய்** - முக்குணங்களையும் கடந்த ஆணவமல காரியம் ஆகிய மோகம் முதலியனவாகவும், கன்ம மல காரியம் ஆகிய இன்பம் துன்பம் முதலிய ரூபமாகவும், அளந்து அறியப்படும் சுத்தாசுத்த பிரபஞ்சம் போல் அறியப் படாதவனுமாய், **நித்திய ஆனந்தன் ஆய்** - மலகன்மங்களையும் கடந்த சிவ தத்துவ ரூபமாய் அளந்து அறியப்படும் சுத்தப் பிரபஞ்சம் போல் அநித்தியம் ஆகிய ஆனந்த ரூபனாய் அறியப்படாதவனுமாய்,

தற்பரமாய் நின்ற தனி முதல் - சுத்தம், சுத்தாசுத்தம், அசுத்தம் என்னும் இந்த மூன்று பிரபஞ்சங்களோடும், உயிர் கூடி நிற்கும் பொது இயல்பினால், குணரூபன் ஆகிய சகலராக அறியப்படுகிறது; மல கன்மங்களோடு கலந்து நிற்கும் பிரளயாகலராகவும், மாயை கன்மங்கள் இல்லாது ஆணவ மலத்தோடு கூடிய விஞ்ஞானகலராகவும் அறியப்படுகிறது. இறைவன்அவ்வாறு அறியப்படாமல், அவ்வுயிர்களுக்கு மேலாய் நிற்பன். இவ்வாறு பிரபஞ்சங்களையும் உயிர்களையும் கடந்து நிற்பதால், பிரபஞ்சங்களின் இயல்பு பற்றியாவது. உயிர்களின் இயல்பு பற்றியாவது அறியப்படாது தனித்து நிற்கும்இறைவன்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வான் முதல் களையின் - ஆகாசம் முதலிய பிரபஞ்சங்களை அசத்து என்று கண்டு: அவற்றின் நின்றும் நீங்கியபொழுது, **அளவு இறந்து அற்புதம் போல் வந்து** - அந்தப் பிரபஞ்சங்களோடு பழகி அறிந்து வந்த உயிர், தனது சுட்டறிவைக் கடந்து நிற்பதால், இன்னது என்று சொல்ல முடியாத சூனியப் பொருள் போல் முன்னர்த் தோன்றி **ஆனா அறிவாய்த் தோன்றானோ** - பின்னர்ச் சுட்டு இறந்து அறியும் தன் அறிவினிடத்தில் நீங்காது நிலைபெறுவதாய்ச், சோதிக்குள் சோதியாய் விளங்கித் தோன்றமாட்டானோ? (இறைவன் தோன்றுவன் என்றவாறு)

தெளிவுரை :

இறைவன் பிரபஞ்சங்களையும் உயிர்களையும் கடந்து தனித்து நிற்பவன். உயிர் பிரபஞ்சங்களை அசத்து என்று அறிந்து, அவற்றின் நின்றும் நீங்கி நிற்குமாயின், இறைவன் உயிரின் அறிவு ஆகிய சோதிக்குள், சோதிவடிவாய்த் தோன்றுவான் என்பதே இந்த வெண்பாவின் கருப்பொருள் ஆகும்.

'நிர்க்குணன்' என்பதற்கு, மாயா காரியம் ஆகிய சாத்துவிகம் இராசதம் தாமதம் என்னும் மூன்று குணமும் இல்லாதவன். என்பதே பொருள் அன்றி, ஒரு குணமும்இல்லாதவன் என்பது பொருள் அன்று. ஒரு குணமும் இல்லாதவன் ஆயின் தன் வயத்தன் முதலிய எண்குணங்கள் உடையான் இறைவன் என்பதனோடு முரணும். மேலும் குணம் இல்லாத குணியும் இல்லை எனப்பட்டுச் சூனியவாதமாய் முடியும்.

பிரபஞ்சங்களின் நின்றும் நீங்கிய பொழுது, இறைவன் முதலில் சூனியம்போல்தோன்றிப் பின்னர்ச் சோதிக்குள் சோதியாய்த் தோன்றுவன் என்னும் கருத்துப்பற்றிய விளக்கம் வருமாறு:-

பிரபஞ்சங்களோடு பழகிய அறிவைக் கடந்த பொழுது தோன்றும் இறைவன், இதுவரையும் அறிந்துவந்த பொருள்கள் ஒன்றனோடும் உவமித்துக் கூறமுடியாமல் விளங்குபவன் ஆகலின், இன்னது என்று அறியமுடியாத சூனியமோ என்று முதலில் எண்ணக்கூடும்; அறிவு ரூபமான சோதி என்று பின்னர் அறியக்கூடும் ஆகலின். அவ்வாறு கூறினார் என்பது பெறப்படும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

'தற்பரம்' என்பது தனக்குப் பரம் என விரியும்; 'தன்' என்பது உயிரைக் குறிக்கும்; ஆகவே, 'தற்பரம்' என்றதற்கு உயிர்க்கு மேலாய் என உரை செய்யப்பட்டது. 'அற்புதம்' என்பது, இதுவரையும் காணப்படாத அதிசயத்தைக் குறிக்கும்; ஆயினும், இந்த வெண்பாவில் சூனியத்தைக் குறித்து நின்றது.

(4) எடுத்துக்காட்டு வெண்பா

சுட்டி உணர்வதனைச் சுட்டி அசத்து என்னச்
சுட்ட இனிஉளது சத்தே காண் - சுட்டி
உணர்ந்த நீ சத்துஅல்லை உண்மையைத் தைவம்
புணர்ந்து அதனால் பொய்விட்டுப் போம்

இதன் பொருள்

சுட்டி உணர்வதனைச் சுட்டி அசத்து என்ன - ஒன்றை அறியும் பொழுது பிறிது ஒன்றனை அறிய முடியாத ஏகதேச அறிவினால், கருதி அறியப்படுவது ஆகிய பிரபஞ்சத்தை மேலை வெண்பாவில் கூறியவாறு, ஒவ்வொரு தத்துவமாக அறிந்து கண்டு, நீக்கிக் கொண்டு சென்ற பொழுது, **இனிச் சுட்ட உளது சத்தே காண்** - முடிவில் நிறைந்த பொருளாக அறியப்படுவது எதுவோ,அது தத்துவங்கள் ஆகிய அந்த அசத்தின் வேறான சத்தே ஆகும் என்பதை அறிவாயாக. அந்தச்சத்து இறைவன் அன்று, உயிரே ஆகும் என்றால், அதனால் ஏற்படும் குற்றம்யாது எனின்,

சுட்டி உணர்ந்த நீ சத்து அல்லை - இதுவரையும் அசத்தோடு கூடி நிலைத்தல் இன்றி, ஒவ்வொரு பொருளாகச் சுட்டி அறிந்து வந்த உயிர் ஆகிய நீ, அந்த அசத்தின் வேறாய் எக்காலத்தும் ஒரு தன்மையாய், நிலைத்த அறிவாய் விளங்கும் சத்து ஆகாய். ''அவ்வாறாயின், ஒவ்வொன்றாய்ச் சுட்டி அறியும் ஏகதேச அறிவு எனக்கு நீங்காமல், எக்காலத்தும் நான் அசத்தோடு கூடி அசத்தனாகவே இருப்பேனோ?'' என்றால், **தைவம்(ஆய்) உண்மையைப் புணர்ந்து** - அசத்தோடு கூடி நின்று அந்த அசத்தைச் சுட்டி அறிந்து வந்த நீ, அந்த அசத்தை நீங்கிய

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பொழுது, நிறைவான பொருளாய்த் தோன்றும் சத்தின் அடங்கி, அந்தச் சத்தினைக் கூடினால், **அதனால் பொய் விட்டுப் போம்** - அவ்வாறு கூடுவதாலே, சுட்டி உணர்வது ஆகிய அந்தப் பொது இயல்பு, உன்னைவிட்டு நீங்கும்; ஆகவே, நீ அசத்தும் ஆகாய்.

தெளிவுரை :

அசத்தை அசத்து என்று கண்டபொழுது, ஆன்மாவுக்குத் தோன்றுவது பதிஞானமே அன்றிப் பிறிது இல்லை என்பதை இந்த வெண்பா கூறுகிறது. சுட்டி அறியும் பொருள் உயிர்; சுட்டு இறந்து அறியும் நிறைபொருள் சிவம். எனவே உயிர் சிவம் ஆகாது. ஆகவே, அசத்து நீங்கிய பொழுது தோன்றுவது சிவமே என்பது பெறப்படும்.

''பொய் விடும்'' என்றாவது, ''பொய் போம்'' என்றாவது கூறினாலே போதியதாகவும், **''விட்டுப்போம்''** என ஒரு பொருளைத் தரும் இரு சொற்களைக் கூறிய கருத்து என்ன என்றால்,

ஒரு பொருளை விட்டாலும், அப்பொருளின் பற்று அறாது இருத்தல் கூடும்; பற்று அறாமையால் விட்ட பொருளை மீண்டும் கூடவும் நேரும்; ஆதலால், வேண்டாத பொருளாய் இருந்தால், அந்தப் பொருளை விடுதலோடு, அந்தப் பொருளின் பற்றும்ஒழிய வேண்டும் என்பதை அறிவிக்க வேண்டி, 'விடும்' என்றதோடு நில்லாது 'விட்டுப் போம்' என்று கூறினார்.

'விட்டு' என்றதில் உள்ள 'விடுதல்' பற்று நீக்கத்தையும், போம்' என்றதில் உள்ள போதல் பொருளின் நீக்கத்தையும் குறித்து நிற்கும். இவ்வுண்மையை அப்பரடிகள் அருளிய **''அருந்துணையை''** என்னும் திருத்தாண்டகத்தில் உள்ள **''வரும்பயனைப் போக மாற்றி''** என்று வரும் தொடரிலிருந்து உணரலாம். இதில் ''போக'' என்பதற்குப் பொருள் நீக்கத்தையும், 'மாற்றி' என்பதற்குப் பற்று நீக்கத்தையும் பொருளாகக் கொள்க.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

(5) எடுத்துக்காட்டு வெண்பா

கண்டதை அன்று அன்று எனவிட்டுக் கண்டு அசத்தாய்
அண்டனை ஆன்மாவில் ஆய்ந்து உணரப் - பண்டு அணைந்த
ஊனத்தைத் தான்விடுமாறு உத்தமனின் ஒண்கருட
சானத்தின் தீர்விடம் போல் தான்.

இதன் பொருள் :

கண்டதை அன்று அன்று எனக்கண்டு அசத்தாய் விட்டு - கருதி அறியப்படும் பிரபஞ்சத்தை ஒவ்வொரு பொருளாக நோக்கி, இது நிலை உடையது அன்று, இது நிலை உடையது அன்று, என்று எல்லாப் பொருளையும் நீங்கிய பொழுது, **ஆன்மாவில் அண்டனை ஆய்ந்து** - அவ்வாறு நீங்கிய தன் அறிவில் வியாபக அறிவாய் விளங்கும் சிவத்தை ஆராய்ந்து, **உணர** - அந்தச் சிவம் நான் எனப் பாவிக்க வேண்டும்; அவ்வாறு சிவோகம்பாவனை செய்வான் ஆயின், **உத்தமனின் பண்டு அணைந்த ஊனத்தைத் தான் விடுமாறு**- அநதப் பாவனையால் பாவன அதீதம் ஆகிய சிவபெருமான், பாவிப்பவனுடைய அறிவில் பிரிப்பின்றி விளங்கித் தோன்றுவன்; அவ்வாறு தோன்றும் இறைவனால், உயிருடன் அநாதியாய்க் கூடிநின்ற பொது இயல்பு ஆகிய ஆணவமலப் பற்றை விட்டு அவ்வுயிர் நீங்கும்; அவ்வாறு நீங்குவது எது போல எனின், **ஒண் கருட ஆசனத்தின் தீர் விடம் போல்** - பாம்பின் விடத்தால் துன்புறுகின்ற ஒருவன், பிரகாசம் பொருந்திய கருட தியானம் செய்து, அந்தத் தியானத்தால் தியானிப்பவன் மனதில், தெய்வத் தன்மை உடைய மந்திர கருடன் தோன்ற, அந்த மந்திர கருடனால், விடத்தை நீக்கிக் கொள்ளுமாறு போல் ஆகும்.

தெளிவுரை :

அசத்தை அசத்து என்று அறிந்து நீங்கிச் ,சத்து ஆகிய சிவத்தை அடைவதற்கு இவ்வெண்பா உபாயம் கூறுகிறது. பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொரு பொருளின் நிலையாமையை அறிந்து, பிரபஞ்சம் அனைத்தையும் நீங்கிச் சிவம் நான் எனப் பாவித்தால், அந்தப் பாவனையின் மூலமாகத் தன் அறிவில்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சிவம் விளங்கித் தோன்றும், அந்நிலையில் அநாதியாய்க் கூடிநின்ற ஆணவமலப் பற்று, ஆன்மாவை விட்டு நீங்கும்.

''கருட தியானம்'' என்பது உலகத்தில் உள்ள கருடனைத் தியானிப்பது அன்று. வேறு யாது? **ஆதி பௌதிக கருடன், ஆதி தைவிக கருடன், ஆதி ஆன்மிக கருடன்** எனக் கருடன் மூவகைப்படும். ஒவ்வொரு பொருளிலும் இவ்வாறே. பௌதிகம் தைவிகம், ஆன்மிகம் என மூன்றும் கொள்க. அஃதாவது **ஒவ்வொரு உயிருக்கும், உடல் ஒன்று, மந்திரம் ஒன்று, அம்மந்திரத்தில் நிற்கும் தெய்வத்தன்மை ஒன்று; ஆக மும்மூன்று உண்டு.** அம்மூன்றனுள், **உடல்** பூத காரியம் ஆகலின், **பௌதிகம்** என்றும், **மந்திரம்** தெய்வ சம்பந்தம் உடைமையால் **தைவிகம்** என்றும், **தெய்வத் தன்மை** சிவசத்தியின் காரியம் ஆதலால் **ஆன்மிகம்** எனவும் கூறப்படும்.

ஆகவே உலகத்தில் காணப்படும் கருடன் ஆகிய பறவையின் **உடல், ஆதி பௌதிக கருடன்** ஆகும்; அந்த கருட உடலின் உயிரில் அந்தரியாமியாய் இருக்கும் தெய்வ சம்பந்தத்தைக் குறிக்கும் **மந்திரம் ஆதிதைவிக கருடன்** ஆகும்; அந்த மந்திரத்தின் இடமாக நின்று மாந்திரிகனுக்குப் பயன் கொடுப்பது ஆகிய **சிவ சக்தி, ஆதியான்மிக கருடன்** எனப்படும். அந்த மூன்று கருடனுள் இந்த வெண்பாவில் ''கருடன்'' என்றது, தைவிகம் ஆகிய கருட மந்திரத்தை என்பது அறிதற்குரியது. **அந்த மந்திரத்தைச் சுத்த மனத்தால் பாவித்தலே, கருடபாவனை என்பது ஆகும்.**

மந்திர பாவனை செய்வது எவ்வாறு?

நாள்தோறும் பழகிவந்த பழக்க விசேடத்தால், மந்திர ரூபமேதான் ஆக, 'மந்திரம்' எனவும், 'தான்' எனவும் பேதம் இன்றித் தன் அறிவு, **அந்த மந்திரத்தின் வசமாய் உறைத்து நிற்றலே,** மந்திர பாவனை செய்யும் முறை ஆகும்.

அவ்வாறு உறைத்து நின்று, அந்த மந்திரக் கண்ணால் நோக்கினால், அந்த நோக்கு அந்த விட வேகத்தை மாற்றுவது துணிபு ஆகும். ஆகவே, அந்தக் கருடபாவனை, இங்குக் கூறிய

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

''சிவோகம்.பாவனை '' க்கு உவமை ஆயிற்று.

பறவை, மிருகம், மரம் முதலியவற்றிற்கு எல்லாம், மந்திரமும் அதி தெய்வமும் உண்டு என்பதும், மந்திரங்களைக் கணிப்பவன், சார்ந்த பொருளின் வண்ணம் ஆகும் படிகம் போல், மந்திர சொரூபி ஆவன் என்பதும், சர்வ ஞானனோத்தரம் முதலிய ஆகமங்களில் கூறப்பட்டுள்ளன.

இந்த வெண்பாவில், சிவோகம்பாவனையால் பிரபஞ்சம் ஆன்மாவை விட்டுப் போகும் என்பது தெளிவுறுத்தப்பெற்றது. மேலும் பாவனை பொய் அன்று; அது பயன்தரும் என்பதும் விளக்கப்பெற்றது.

முதல் அதிகரணத்தோடும் இரண்டாம் அதிகரணத்தோடும் வைத்துச் சிந்திக்கத்தக்க சிவஞான சித்தியார்ப் பாடல்கள் வருமாறு:-

பாடல் எண்		தொடக்கச் சொற்கள்
292	-	பாச ஞானத்தாலும் பசு ஞானத்தாலும்
293	-	வேத சாத்திரம் மிருதி புராண்கலை
294	-	கரணங்கள் கெட இருக்கை
295	-	சிவனை அவன் திருவடி ஞானத்தால்
296	-	கண்டிடும் காண் தனைக் காணு
297	-	குறித்து அடியில் நின்று அட்ட
298	-	கண்ட இவை அல்லேன் நான்.

ஒன்பதாம் சூத்திரம் - மூன்றாம் அதிகரணம்

மேற்கோள்

இனி இவ்விடத்து ஸ்ரீ பஞ்சாக்கரத்தை விதிப்படி உச்சரிக்க என்றது.

இதன் பொருள் :

மேல் இரண்டாம் அதிகரணத்தில் கூறியவாறு, பிரபஞ்சம் ஆகிய பாசத்தை நீக்கி, நீக்கியபொழுது குளிர்ந்த நிழலாய் வெளிப்பட்டுத் தோன்றும் ஞானக்கண்ணினால், உயிர் ஆகிய தன்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அறிவின் கண்ணே, சிவபெருமானை ஆராய்ந்து அறிந்த பின்னர், ஞானக் கண்ணால் பதியை அறிந்த அந்நிலையிலும், வாசனாமலம் நீங்குதல் பொருட்டுத் திருவைந்தெழுத்தையும் விதிப்படி கணிக்க வேண்டும்.

தெளிவுரை :

'பஞ்சாக்கரம்' என்பது, தூல பஞ்சாக்கரம், சூக்கும பஞ்சாக்கரம், அதி சூக்கும பஞ்சாக்கரம் என முத்திறப்படும், அவற்றுள் தூல பஞ்சாக்கரம், நகரத்தை முதலாக உடையது; சூக்கும பஞ்சாக்கரம், சிகரத்தை முதலாக உடையது; அதிசூக்கும பஞ்சாக்கரம், நகர மகரங்கள் இரண்டும் இன்றி, ஏனைய மூன்று எழுத்தும் முன்னும் பின்னுமாய் மாறுதலால், ஐந்து எழுத்து ஆகிச் சிகரத்தை முதலாக உடையது. அதிசூக்கும பஞ்சாக்கரம் காரண பஞ்சாக்கரம் எனவும், முத்தி பஞ்சாக்கரம் எனவும் கூறப்படும். இந்த மூவகைப் பஞ்சாக்கரத்துள், இந்த மேற்கோளில் **''ஸ்ரீ பஞ்சாக்கரத்தை''** என்று கூறியது. முத்தி பஞ்சாக்கரத்தை என்பது சிவஞான சுவாமிகள் கருத்து ஆகும்.

பஞ்சாக்கரத்தை உச்சரிக்கும் முறையை வகுத்துக் கூறாமல் ''விதிப்படி உச்சரிக்க'' என்று கூறியதன் நோக்கம், **பாசத்தை நீக்கி ஞானக்கண்ணால் சிவனை நாடுவதே பஞ்சாக்கரத்தின் பொருள்** என்பதைக் குறித்தே ஆகும், இரண்டாம்அதிகரணத்தில் பஞ்சாக்கரம் நிற்கும் முறை அஃதே என்று கூறிவிட்டமையால், நிற்கும் அந்த முறையே, ஓதும் முறையும் ஆகும் என்பதை அறிவிக்க வேண்டி, இந்த இடத்தில் அதனை வகுத்துக் கூறாமல் 'விதிப்படி' என்று இரண்டாம் அதிகரணப் பொருளையே, இந்த அதிகரணத்திற்கும் மாட்டேறவிட்டனர் என்பது அறியத் தக்கது. இதனைச் சிற்றுரையில்சிவஞான சுவாமிகள், **''விதிப்படி என மாட்டெறிந்து ஒழிந்தார்''** எனக் கூறுகிறார்கள்.

சைவசித்தாந்தத்தில் பஞ்சாக்கரம் நிற்கும் முறையும், ஓதும் முறையும், ஒன்றற்கு ஒன்று சம்பந்தம் உடையதாகவே இருக்கும். **'நிற்கும் முறை'** என்பது, உயிர் **பாசத்தை நீக்கி** ஞானக் கண்ணால் பதியை நாடுவது ஆகும்; ''ஓதும் முறை'' என்பது, **பாச எழுத்தை நீக்கி**, 'அருள் எழுத்தொடும் 'பதி' எழுத்தொடும் 'உயிர்' எழுத்து நிற்றல் ஆகும். இவ்வுண்மையைத் திருவருட் பயன், ஐந்தெழுத்து அருள்நிலை, ஒன்பதாவது பாட்டில்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

''ஆசுஇல்ந, வா நாப்பண் அடையாது; அருளினால்
வா சி யிடை நிற்கை வழக்கு '' (89)

என்று உமாபதிசிவம் அருளியவாற்றால் அறியலாம்.

சூத்திரத்தில் **'உச்சரிக்க'** என்று கூறாமல், **'எண்ணுக'** என்று கூறியதன் கருத்து வருமாறு :

மந்திரங்களை உச்சரித்தல், மானதம், மந்தம், உரை என மூன்று வகைப்படும். அவற்றுள் **'மானதம்'** ஆவது, மனத்தால் பாவித்தல்; **'மந்தம்'** ஆவது, சூக்கும வைகரி வாக்கால், தன் செவிக்கு மட்டும் கேட்கும்படி உச்சரித்தல் **'உரை'** ஆவது, தூல வைகரி வாக்கால், தனக்கும் பிறருக்கும் கேட்கும்படி உச்சரித்தல் ஆகும். இம் மூன்றனுள், தூல வைகரி வாக்கால் உச்சரிக்கும் பொழுது, மனம் கலவாது இருத்தல் கூடும்; இக்கருத்துப்பற்றியே, ' **நான் மறக்கினும் சொல்லும் நா நமசிவாயவே''** என்று சுந்தரர் பெருமான் அருளிச் செய்தார். சூக்கும வாக்கால் உச்சரிக்கும் பொழுது, மனமும் கலந்தே உச்சரிக்கப்படும். மானதமாய்ப் பாவிக்கும் பொழுது, வாக்கின் கலப்பு இன்றி, மனம் தனித்து அறிவு வடிவாய் நின்று பாவிக்கும். வாக்கின் கலப்பு இல்லாமையால், இந்தப் பாவனை **'சுத்த மானதம்'** எனப்படும். இந்தச் சுத்த மானதம் ஆகிய **''அறிவால் கணித்தலே''** இந்த அதிகரணத்தில் உச்சரித்தல் என்பதன் பொருள் என அறிவிக்க வேண்டிச், சூத்திரத்துள் 'உச்சரிக்க' என்று கூறாமல், 'எண்ணுக' என்றார். எண்ணுதல் மனத்தின் தொழில் ஆகும். இனிப் பஞ்சாக்கரத்தின்இயல்பை எல்லாம், உண்மை விளக்கம், திருவருட்பயன், சிவப்பிரகாசம், கொடிக் கவி நெஞ்சுவிடுதூது முதலிய நூல்களில் கண்டு தெளிவு பெறலாம்.

ஏது

இவ் வான்மாக்களுக்கு ஞானம் பிரகாசித்தும், அஞ்ஞானத்தை வேம்பு தின்ற புழுப்போல் நோக்கிற்றை நோக்கி நிற்கும் ஆகலின், அது நீக்குதற்கு எனக் கொள்க.

இதன் பொருள் :

வேம்பு தின்ற புழு, அந்த வேம்பை நீக்கிக் கரும்பைக் கூடி, அக் கரும்பின் சுவையை அறிந்து அனுபவித்த பொழுதும், நீண்ட நாள் பழகிய பழக்கவசத்தால், அந்தப்புழு முன்பு அனுபவித்த

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வேம்பின் சுவைஎய நோக்கி, அந்த வேம்பின் இடத்தே மீண்டும் வருவது போல, இரண்டாம் அதிகரணத்தில் கூறியவாறு, அசத்தாய் உள்ள பிரபஞ்ச பேதங்களை, அசத்து என்று கண்டு நீங்கிய உயிர்களுக்கு, அசத்தை நீங்கிய அதனால் ஞான சொரூபம் விளங்கி முதல் அதிகரணத்தில் கூறியாவாறு, அந்த ஞானக் கண்ணுக்குப் பதி விளங்கித் தோன்றிய பொழுதும், அவ்வுயிர்கள் பழக்க வசத்தால், பழைய சிற்றுணர்வு ஆகிய பிரபஞ்ச உணர்வை நோக்கி நிற்கும். ஆதலால், அந்தப் பழக்க வாசனையை நீக்குதல் பொருட்டு. இந்த இடத்தில் இந்த வழிபாடு வேண்டப் படுவதால், இனி ஸ்ரீ பஞ்சா‌ ரத்தை விதிப்படி உச்சரிக்க என்று மேற்கோள் கூறியது.

தெளிவுரை :

'ஸ்ரீ பஞ்சாக்கரத்தை உச்சரிக்க' என்று கூறி மேற்கோளில் இருந்தாலே போதுமே ''இவ்விடத்து'' எனறு கூறியது ஏன் என்றால், பஞ்சாக்கரத்தை உச்சரிக்க வேண்டிய இடம் வேறு உண்டு என்பதை அறிவித்தல் பொருட்டே ஆகும். அஃதாவது சிவனை அணைந்த சீவன் முத்தர், பிராரத்த வினையின் பயனை அனுபவிக்கும் காலத்து, அந்த வினைப்பயன் அவரைத் தாக்காது இருத்தல் பொருட்டு, **முத்தி பஞ்சாக்கரம் (சிவயசிவ)** உச்சரிக்கப்படுவது ஆகும். ஆகவே, இந்தப் பஞ்சாக்கர தியானம் அணைந்தோர் தன்மையைச் சார வைத்து ஓதப்படல் வேண்டும்; அதனைச் சிவோகம்பாவனை கூறும் இவ்விடத்து, சிவோகம்பாவனை நிலைத்தல் பொருட்டுக் கூறினார் ஆகலின், ''இவ்விடத்து'' என்றார்.

''நோக்கிற்றை நோக்கி நிற்கும்'' என்ற தொடரில் ''நோக்கு'' என்பது, இந்த இடத்தில் கண்ணுல் பார்வையிடப்படும் பார்வையைக் குறிக்காமல், மன எழுச்சியின் விசேடம் ஆகிய எண்ணத்தைக் குறித்து நின்றது. இந்த 'ஏது' வில் வரும் அஞ்ஞானம், ஞானத்திற்கு மறுதலை ஆகிய சுட்டுணர்வைக் குறிக்கும். 'சுட்டுணர்வு' என்பது, இது இன்னது என்று ஒவ்வொரு பொருளாகச் சுட்டிச் சுட்டி அறியும் அறிவு ஆகும். சுட்டுதல் - கருதுதல்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

(6) எடுத்துக்காட்டு வெண்பா

அச்செழுத்தால் உள்ளம் அரன் உடைமை கண்டு, அரனை அஞ்செழுத்தால் அர்ச்சித்து இதயத்தில் - அஞ்செழுத்தால் குண்டலியின் செய்து ஓமம் கோதண்டம் சானிக்கில் அண்டனாம் சேடனாம் அங்கு.

(கொண்டு கூட்டு) உள்ளம் அரன் உடைமை அஞ்செழுத்தால் கண்டு. இதயத்தில் அரனை அஞ்செழுத்தால் அர்ச்சித்து, அஞ்செழுத்தால் குண்டலியின் ஓமம் செய்து, கோதண்டம் சானிக்கில், அங்கு அண்டன் ஆம் சேடன் ஆம்.

இதன் பொருள் :

உள்ளம் அரன் உடைமை அஞ்செழுத்தால் கண்டு - உயிர் சிவனுக்கு உடைமைப்பொருள் ஆவதை, முத்தி பஞ்சாக்கரத்தை உச்சரிக்கும் முறையிலே வைத்து அறிந்து, **இதயத்தில் அரனை அஞ்செழுத்தால் அர்ச்சித்து** - புறத்தே ஞானபூசை செய்வதற்குப் **பூசைத் தானம், ஓமத் தானம், தியானத்தானம்** என வகுத்துக் கொண்டு பஞ்சாக்கரத்தினாலே அர்ச்சனை முதலியன செய்தல்போல், உடம்பின் உள்ளே **இதயத்தைப்** பூசைத்தானமாகவும், **உந்தியை** ஓமத்தானம் ஆகவும் **புருவநடுவை**த்தியானத் தானம் ஆகவும் கருதிக்கொண்டு, பூசைத்தானம் ஆகிய இதயதாமரையில் மேற்கூறிய முத்தி பஞ்சாக்கரத்தையே திருமேனியாக உடைய சிவபெருமான் வீற்றிருப்பதாகப் பாவித்துச், சிவபெருமானை அர்ச்சிப்பதற்குப் புறத்தில் அட்ட புட்பங்கள் இருப்பது போலக் **கொல்லாமை, ஐம்பொறி அடக்கல், பொறை, அருள் ,அறிவு, வாய்மை, தவம், அன்பு** என்னும் எட்டு மலர்களைக் கொண்டு அந்த முத்திப் பஞ்சாக்கரத்தால் அர்ச்சித்து, **அஞ்செழுத்தால் குண்டலியின் ஓமம் செய்து** - அதன்பிறகு அந்த முத்திப்பஞ்சாக்கரத்தாலே, குண்டலினி சத்தி வசிக்கின்ற இடம் ஆகிய உந்தியில் ஞானம் ஆகிய அக்கினியை எழுப்பி விந்துத்தானம் ஆகிய புருவ நடுவில், அந்த அக்கினியில் உண்டாகும் அமிழ்தம் ஆகிய நெய்யைச் சுழுமுனை நாடி இடை நாடி ஆகிய சிருக்குச் சுருவங்காளல் அந்த அக்கினியில் பெய்து ஓமம் செய்து, **கோதண்டம் சானிக்கில்** - அதன் பின்பு விந்துத்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தானம் ஆகிய புருவ நடுவில், **சிகார, யகார, வகாரங்கள்** மூன்றும் முறையே **தற்பதப்** பொருளும், **துவம்** பதப் பொருளும், அசி பதப்பொருளும் ஆன முறையை அறிந்து, **(தத் + துவம் + அசி = தத்துவமசி)**, அந்த முறைமையால், சிவம் நான் என்று சிவோகம் பாவனை செய்வானாயின், **அங்கு அண்டன் ஆம் சேடன் ஆம்** - அந்த பாவனையில், பாவிக்கப்படும் சிவபெருமான் விளங்கித் தோன்றுவான்; தோன்றவே அந்தப் பாவனை செய்தவன், சிவபெருமானை விட்டுத் தனித்து நில்லாத சேடபாவனையாலும், தன்னைச் சேடமாக உடைய சேடியம், முதல்வன் என்ற பாவனையாலும், அந்த முதல்வனுக்கு அடிமை ஆவான்.

தெளிவுரை :

சேடம் என்பது மிச்சப் பொருளைக் குறிக்கும். மிச்சம் என்பது யாதானும் ஒன்றன் மிச்சமாய் இருக்குமே அன்றித் தனித்து இருப்பது இல்லை. தனித்து இருந்தால் அது சேடம் ஆகாது. ஆகவே, உயிர்சிவனை இன்றித் தனித்து நில்லாமையை விளக்குவதற்குச் செய்யுளில் 'சேடன்' என்று கூறினார், எல்லா உயிரும் தனித்து நில்லாமையால், சிவனுக்குச் சேடமே ஆகும்; ஆயினும் அவ்வுயிர்கள் தம்மைச் சேடம் என அறிவதில்லை. சிவோகம்பாவனை செய்கிறவன் தன்னைச் **சேடன்** எனவும் , சிவபெருமானைச் **சேடியம்** எனவும் அறிகிறான்.

சிருக்கு, சுருவம் என்பன நெய்யைப் பெய்யும் துடுப்புகள் ஆகும். ஓமமும் தியானமும் பூசைக்கு **அங்கம்** எனவும் பூசை **அங்கி** எனவும் கூறப்படும்.

சாந்தோக்கிய உபநிடதத்தில் உள்ள **'தத்துவமசி'** மகாவாக்கியம், **தற்**பதம், **துவம்**பதம், **அசி**பதம் என மூன்று பதங்களை உடையது அந்த மூன்றனுள் 'தற்பதம்' இறைவனின் தடத்த நிலை ஆகிய பதித்தன்மையினையும், 'துவம்பதம்' உயிரின் தடத்த நிலை ஆகிய பசுதத்தன்மையினையும், 'அசிபதம்' அவ்விரு பொருள்களின் சொரூப நிலை ஆகிய ஐக்கியத்தையும் குறிக்கும். அஃதாவது, முத்தியில் உயிர் சிவனைச் சார்ந்து, சிவமாம் தன்மைபெறும் என்பதாகும். ஆகவே **'சி'** கரம் பதியையும், **'ய'** கரம் பசுவையும், **'வ'** கரம் அவ்விரண்டின் ஐக்கியநிலை ஆகிய அருளையும் குறிக்கும். ஆதலால்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

'சிவயசிவ' என்னும் இந்த முத்திபஞ்சாக்கரமும் சித்தாந்த மகாவாக்கியம் எனப்படுகிறது.

அசத்தை அசத்து என்று கண்டு, ஞான சொரூபம் விளங்கித்தோன்றி, எங்கும் தானாக நிட்டை கூடிய பொழுதும், பழைய பழக்க வசத்தால், புறத்தே பிரபஞ்சத்தில் சென்று, உயிர் சுட்டி உணரும்; எனவே அவ்வாறு உணரும் தன் அறிவைப், புறத்தே செல்ல ஒட்டாது மடக்கி, அகத்தே ஒரு குறியின்கண் நிறுத்தி, நிட்டை கூடும்படி முத்தி பஞ்சாக்கரத்தை உச்சரிக்கும் முறையில் வைத்துக் கண்டு, சிந்திக்கச் சிந்திக்க அந்தச் சிந்தனை அந்தப் புற நோக்கத்தைப் பற்று அறக் கெடுத்து, ஞான சொரூபத்தைச் செவ்வையாக விளக்கிப், பூரணநிலையில் கொண்டுபோய் விடும். ஆகவே, இந்த முத்தி பஞ்சாக்கர தியானம், பழைய பழக்க வாசனையை நீக்குவதற்குச் சிறந்த சாதனம் ஆயிற்று என்பது இனிதே பெறப்படும்.

(7) எடுத்துக்காட்டு வெண்பா

இந்துவில் பானுவில் இராகுவைக் கண்டாங்குச்
சிந்தையில் காணில் சிவன்கண்ணும் - உந்தவே
காட்டாக்கின் தோன்றிக் கனல்சேர் இரும்பு என்ன
ஆள்தான் ஆம் ஓது அஞ்சு எழுத்து.

(கொண்டு கூட்டு) இராகுவை இந்துவில் பானுவில் கண்டாங்குச், சிந்தையில் காணில் உந்தவே காட்டாக்கின் சிவன் தோன்றிக் கண் ஆம், தான் கனல் சேர் இரும்பு என்ன ஆள் ஆம் அஞ்செழுத்து ஓது.

இதன் பொருள் :

இராகுவை இந்துவில் பானுவில் கண்டாங்கு - வானத்தில் உலாவிக்கொண்டு இருக்கும் சூரியன் முதலாய ஒன்பது கிரகங்களுள், இராகு கேதுக்கள் நீங்கிய, ஏனைய ஏழு கிரகங்களும் நேரே அறியப்படும். இராகு கேதுக்கள் மட்டும் அவ்வாறு அறியப்படமாட்டா. நேரே அறியப்படாத இராகு கேதுக்களைக் கிரகண காலத்தில் சந்திரனிடத்தும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சூரியனிடத்தும் காண்டல் கூடும். அதுபோல, **சிந்தையில் காணில்** - பதி பசு பாசம் என்னும் முப்பொருள்களுள், யான் இதனை அறிந்தேன் அறிகின்றிலேன் என்ற இடத்தில், 'யான்' என்னும் உணர்விற்குப் பொருள் **ஆன்மாவும்**, 'இதனை' என்னும் உணர்விற்குப் பொருள் **பாசமும்** ஆகும். ஆகவே ஆன்மாவின் அறிவிற்கு, ஆன்மாவும் பாசமும் வேறாகக் காணப்படும். இறைவன் பசு பாசங்களைக் கடந்து நிற்பவன். எனவே, ஆன்ம அறிவிற்கு, வேறாகக் காணப்பட மாட்டான். வேறாகக் காணப்படாத இறைவனைத்தன் இதயத்தாமரையில், முத்தி பஞ்சாக்கரத்தைத் தியானிக்கும் முறையில் வைத்து ஆன்மா காணுமாயின், **உந்தவே காட்டாக்கின் சிவன் தோன்றிக் கண் ஆம்** - அவ்வாறு காணும் அறிவில் இறைவன் வெளிப்பட்டுத் தோன்றி, அறிவுக்கு அறிவாய் விளங்கி நிற்பன்.

இதயத்தாமரையில் இறைவன் வெளிப்பட்டுத் தோன்றுதல் எது போல எனின், விறகினிடத்துக் கோலை நட்டுக் கயிற்றினால் சுற்றிக் கடையவே, அந்த விறகில் நின்று அக்கினி தோன்றுமாறு போல் ஆகும். **தான் கனல்சேர் இரும்பு என்ன ஆள் ஆம்** - அவ்வாறு முதல்வனைக் கண்டபோது, அக்கினியைச் சேர்ந்த இரும்பு அக்கினியின் தன்மையாய்க், கறையும் கடினமும் நீங்கி, விளங்குமாறு போல முதல்வனைக் கண்ட ஆன்மாவும், மலமும் ஆன்மபோதமும் விட்டு , முதல்வனுக்கு அடிமை ஆகும். **அஞ்செழுத்து ஓது** - ஆகவே, அத்திருவைந்தெழுத்தை விதிப்படி உச்சரிப்பாயாக.

தெளிவுரை :

விறகினிடத்துக் கோலை நட்டுக் கடைந்த பொழுது அக்கினி தோன்றுவது போல, இதயதாமரையில் முத்தி பஞ்சாக்கரத்தால் தியானித்த பொழுது இறைவன் தோன்றுவான்.

இந்த உண்மையை,

''விறகில் தீயினன், பாலில்படு நெய்போல்
மறைய நின்றுளன், மாமணிச் சோதியான்
உறவுகோல் நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன்நிற்குமே''

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

என்னும் அப்பரடிகள் அருள் வாக்கினால் அறியலாம்.

இந்தத்தேவாரத்தில், ''விறகில் தீயினன்'' என்றதும், 'பாலில் படுநெய் போல்'' என்றதும் முறையே பாசத்தின் இடத்தும் பசுவின் இடத்தும் நிற்கும் இறைவனின் தடத்தநிலையை உணர்த்துகின்றது. ''மாமணிச் சோதியான்'' என்றது இறைவனின் சொருப நிலையை உணர்த்துகின்றது. இன்னும், இந்த வெண்பாக் கருத்தோடு, இந்தத் தேவாரக் கருத்தை ஒப்பிட்டு நோக்குகையில், **விறகு** இதயத்திற்கு உவமை என்பதும், **கோல்** பஞ்சாக்கரத்திற்கு உவமை என்பதும், **கடைதல்** தியானத்திற்-கு உவமை என்பதும், **பால்** ஆன்மாவுக்கு உவமை என்பதும் **நெய்** இறைவனுக்கு உவமை என்பதும் பெறப்படும்.

இந்தத் சூத்திரத்தில் இரண்டாம் அதிகரணத்து மூன்றாவது வெண்பாவில், அஃதாவது ''கண்டதை அன்று அன்று'' எனத்தொடங்கும் வெண்பாவில் வரும்.

''ஆன்மாவில் அண்டனை ஆய்ந்து உணர''

எனவரும் தொடர், இந்த இடத்தில் சிந்தித்துப் பார்ப்பதற்கு உரியது.

'காட்டாக்கி' என்ற சொற்குப் பொருள் வருமாறு: காஷ்டம் + அக்னி = காஷ்டாக்னி. இது வடசொல். இச்சொல், வடமொழிச் சிதைவாக நின்று 'காட்டாக்கி' என ஆயிற்று. காஷ்டம் = காட்டம் = விறகு ; அக்னி - நெருப்பு.

கேதுவும் இராகுவும் சாயையே அன்றித் தனிக் கிரகங்கள் அல்ல. எனவே கிரகண காலத்தல் தோன்றும் இராகு கேதுக்கள் என்றார். சோதிட நூலில் இவ்விரு கிரகங்களையும் சாயா கிரகங்கள் என்பர்; இவற்றிற்கு இராசிக் கட்டத்தில்ஆட்சி வீடு கிடையாது.

(8) எடுத்துக்காட்டு வெண்பா

மண்முதல் நாளம்மலர் வித்தை கலாரூபம்
எண்ணிய ஈசர் சதாசிவமும் - நண்ணில்
கலைஉருவாம் நாதமாம் சத்தி அதன் கண்ணும்
நிலைஅதிலாம் அச்சிவன் தாள் நேர்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

(கொண்டு கூட்டு) நண்ணில், மண்முதல் நாளம், வித்தை மலர் எண்ணிய ஈசர் சதாசிவமும், கலாரூபம் சத்தி கலை உருவாம் நாதம் அதன் கண்ணும், அதில் அச்சிவன்தாள் நிலையாம், நேர்.

இதன் பொருள் :

நண்ணில் - மேலை வெண்பாவில் கூறிய இதய தாமரையின் இயல்பு எவ்வாறு உளது என்பதை அறியும் பொழுது, **மண் முதல் நாளம்** - பூதம் ஐந்து, தன்மாத்திரை ஐந்து, ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து, அந்தக்கரணம் நான்கு ஆக இருபத்து நான்கு தத்துவமும் உந்தியில் நின்றும்தோன்றிய எட்டு விரல் அளவு நீளம் உள்ள தண்டு வடிவு ஆகும்; **வித்தை மலர்** - வித்தியாதத்துவம் ஏழும், சிவதத்துவத்தில் சுத்த வித்தை ஒன்றும் ஆக எட்டுதத்துவமும், அந்தத் தண்டின் மேல் உள்ள எட்டு இதழ் வடிவு ஆகும்; **எண்ணிய ஈசர் சதாசிவமும் கலா ரூபம்** கருதப்பட்ட ஈசுரம் சதாசிவம் என்னும் இரண்டு தத்துவமும், அந்த இதழுக்கு உள்ளாகிய அறுபத்து நான்கு பூந்தாது வடிவு ஆகும்; **சத்தி கலை உருவாம்** - சத்தி தத்துவம் அந்த பூந்தாதுவிற்கு உள்ளாகிய கொட்டை வடிவு ஆகும்; **நாதம் அதன் கண்ணும்** - சிவ தத்துவம் அந்தக் கொட்டையில் காணப்படும் ஐம்பத்து ஒரு பீச வடிவு ஆகும்; **அதில் அச்சிவன் தாள் நிலையாம்** - ஆதலால், அத்தன்மை ஆகிய இதய தாமரையில் முப்பத்தாறு தத்துவங்களையும் ஆசனமாகக் கொண்டு, அந்த ஆசனத்தில் சிவசத்தி நிலை பெற்று வீற்றிருக்கும். **நேர்** - அவ்வாறு சிவசத்தி வீற்று இருப்பதை அறிந்து, முத்தி பஞ்சாக்கரத்தால், இதயத்தில் அந்தச் சத்திமான் ஆகிய சிவபெருமானை அர்ச்சிப்பாயாக.

தெளிவுரை:

இந்த வெண்பா, இதய தாமரையின் இயல்பினைக் கூறிப் பஞ்சாக்கர தியானம், வாசனையை நீக்கும் என்பதை வலியுறுத்துகின்றது. **அண்டத்தில் உள்ள எல்லாம்பிண்டத்துள்ளும் உண்டு**'' என்னும் உண்மையைக் கோயில்புராணம். பதஞ்சலி சருக்கத்து (70) - ஆவது செய்யுளில், ''**அண்ட பிண்டம் அவை சமம் ஆதலால்**'' என்று கூறியதனால் அறியலாம். அண்ட வடிவு ஆகிய முப்பத்தாறு த்ததுவங்களும்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பிண்டத்துள் இதயத்தில் சூக்குமமாயும் தாமரை வடிவமாயும் விளங்கும். இறைவனுக்கு அண்டத்தில் முப்பத்தாறு தத்துவத்துக்கும் மேற்பட்ட **அந்நிலையே** பிண்டம் ஆகிய இந்த உடலில் உள்ள இதய கமலத்தின் மேலாகக் கண்டு பூசிக்கப்படும் **இந்நிலை** என்று இந்த வெண்பாவினால் தெளிவித்தருளப்பட்டது.

இந்த வெண்பாவில் உள்ள கருத்து, அந்திரியாக பூசையாகிய **அகப்பூசை** செய்யும் பொழுது, கடைப்பிடிக்க வேண்டியது ஆகும். இதயத்தில் தோன்றும் இந்தத் தாமரை, தண்டு முதலாக மேல் நோக்கித் தோன்றும் தடாகத்து தாமரைபோல் அன்றி ஞானேந்திரியம் முதலாக இருதயத்தில் கீழ் நோக்கித் தோன்றும் **தெய்வீக தாமரை** எனக் கொள்க. அஃதாவது, தாத்துவீகம் ஆகிய இடத்தில் தத்துவம் ஆகிய தாமரரைக்கு உள்ளீடாய், சிவம் விளங்கும் ஆகலின், **கீழ்நோக்கிய தாமரை** எனப்பட்டது.

இந்த அதிகரணத்தோடு வைத்துச் சிந்திக்கத்தக்க சிவஞான சித்தியார்ப் பாடல்கள்

பாடல் எண்		தொடக்கச் சொற்கள்
299	-	**அஞ்செழுத்தால் ஆன்மாவும்**
300	-	**நாட்டும் இதயம் தானும்**
301	-	**அந்தரியாகம் தன்னை**
302	-	**புறம்பேயும் அரன்**
303	-	**இந்தனத்தின் எரி பாலின்நெய்**

ஒன்பதாம்சூத்திரத்தின் தொகைப்பொருள்

1. பாச ஞான பசு ஞானங்களினால் இறைவன் அறியப்படான். எனவே திருவடிஞானத்தாலேயே அவனை அறிய வேண்டும்.

2. உலகத்தைக் கானல் நீர் போல. நிலை இல்லாதது எனக் கண்டு கழித்தால், அந்தத் திருவடி ஞானம் விளங்கித்தோன்றும்.

3. திருவடி ஞானத்தால் இறைவனைக் கண்ட பொழுதும்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பழக்க வாசனையால் மீண்டும் உலகத்தைப் பற்றாது இருத்தல் பொருட்டு, முத்தி பஞ்சாக்கரத்தை அறிவால் கணிக்கவேண்டும்.

4. தற்போதம் நீங்கிய நிலையிலும். அவனருளால் அன்றி அவனை அறியமுடியாது. ஆகவே, பதிஞானம் இன்றித் தனித்து இறைவனைக் காணும் தன்மை, ஆன்ம அறிவுக்கு இல்லை.

5. நிலையில்லாத உலகத்தை நிலை இல்லாதது என்று காணும்போது, உலகம் முழுவதும் சூனியம் போலத் தோன்றும்; ஆயினும் அத் தோற்றம் சூனியம் அன்று; அது ஞானசொரூபமே ஆகும்.

6. உலகப் பற்று நீங்கவேண்டுமாயின், உயிர் சிவோகம் பாவனை செய்யவேண்டும்.

7. இதயத்தில் தியானிக்கும்பொழுது, அண்டத்தில் காணப்படும் முப்பத்தாறு தத்துவங்களையும். பிண்டத்துள் இதயத்தில் தாமரையாகக் கொண்டு, அந்தத் தாமரையின்மேல் சிவபரம் பொருள் வீற்றிருக்கும் என்பது கூறப்பட்டது.

ஒன்பதாம் சூத்திரம் முற்றிற்று.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பயன் இயல்

பத்தாம் சூத்திரம்

-பாச நீக்கம் கூறுவது-

அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகன்ஆகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை இன்றே

இதன் பொருள்:

அவனே-மேல் ஒன்பதாம் சூத்திரத்தில் கூறியவாறு, ஞானக்கண்ணால் காணப்படும் அந்த முதல்வன், பிறப்பு நிலையில் உயிரோடு உடனாய் நின்று, உயிர் அறியும் வண்ணம் தான் அறிந்தும், அவ்வுயிருக்கு முதல்வன் இருக்கிறான் என வேறாகக் காணப்படாமல் உயிர், **தானே ஆகிய** -தானே அறிந்ததாக எண்ணும்படி, அந்த உயிரோடு ஒற்றுமைப்பட்டு நின்றான்; **அந்நெறி**-அதுபோலவே, முத்திநிலையில் உயிர் அந்த முதல்வனோடு உடனாய் நின்று, இன்பத்தை அனுபவித்தாலும் அனுபவிக்கின்ற தான் உண்டு என வேறாகக் காணப்படாமல், (**ஏகனாகி**-அந்த முதல்வனோடு ஒற்றுமைப்பட்டு அந்த முதல்வனே ஆய்,) **இறைபணி நிற்க**- அவன் அருள் வழி ஆகிய இறைபணியில், நிற்குமாயின், **மலம்மாயை தன்னொடு**-ஆணவமலம் மாயாமலம் என்னும் இரண்டனோடு, **வல்வினை இன்றே**-வலிய கன்மமலமும் இல்லையாய் ஒழியும்.

தெளிவுரை:

ஒன்பதாம் சூத்திரத்தில் சாதனம் செய்யும் முறை கூறப்பட்டது, இனி அந்தச் சாதனத்தால் உண்டாகும் பயன் கூறப்படுவதால் இது பயன் இயல் எனப்படுகிறது. அந்தப் பயன்கள் வருமாறு:

1. பாசத்தை விடுதல்

2. சிவனை அடைதல்

3. சிவனை அடைந்த பின்னர்த், தேகம் இருக்கும் வரை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பிராரத்துவ வாசனை தாக்காது இருத்தல்.

இந்த மூன்றையும் முறையே 10,11,12-ஆம் சூத்திரங்களில் கூறுகிறார். இந்தப் பத்தாம் சூத்திரம் பாசத்தை விடுதல் ஆகிய பயனைக் கூறுவது.

ஏழாம் சூத்திரத்தில் சாதிக்கும் அதிகாரி ஆன்மா என்பது கூறப்பட்டது. எட்டாம் சூத்திரத்தில் அந்த அதிகாரி செய்ய வேண்டிய சாதனம், பிரபஞ்ச நீக்கமும் பதிஞான உணர்ச்சியும் என்று கூறப்பட்டது. அத்தகு சாதனத்தால் முதல்வனே குருவாய் வந்து உணர்த்துவான் என்றும், அவ்வாறு உணர்த்தியதன் பயன் ஆன்மா பாசத்தை விட்டு முதல்வன் திருவடியை அடைதலே என்றும் கூறப்பட்டது. ஒன்பதாம் சூத்திரத்தில் சாதனத்தின் முறையை வகுத்துக் கூறினமையால், எட்டாம் சூத்திரத்தில் அதைத் தொகுத்துக் கூறினார். இனிவரும் மூன்று சூத்திரங்களிலும் சாதனத்தால் வரும் பயனை வகுத்து மூன்றாகக் கூறுகிறார்.

பாசத்தை விடுதலும் சிவனை அடைதலும் என்னும் பயன் இரண்டனுள், பாசநீக்கம் என்பது சுட்டி அறியும் அறிவினால் அறியப்படும் பிரபஞ்சப் பற்றை, ஒன்பதாம் சூத்திரத்தில் கூறியவாறு, முத்தி பஞ்சாக்கர உச்சரிப்பால் கெடுக்கும் பொழுது உண்டாகும் ஆன்மசுத்தியின் பயனைக் குறிக்கும்.

அந்தப் பாச நீக்கத்தைச் செய்து கொள்ளும் வண்ணம், இந்தச்சூத்திரத்தில் கூறுவதோடு, எட்டாம் சூத்திரத்தில் குருநாதன் உபதேசித்ததைக் **கேட்டல்** நெறியையும், ஒன்பதாம் சூத்திரத்தில் **சிந்தித்தல்** நெறியையும், பத்தாம் சூத்திரத்தில் **தெளிதல்** நெறியையும் காட்டுகின்றார்.

''**அவனே தானே ஆகிய அந்நெறி** '' என்னும் தொடரில் வரும் ''அவனே'' என்பது உயிர் முதல்வனை இன்றி அறியாது என்பதைக் குறிக்கும்; ''தானே'' என்பது, முதல்வன் உயிருடன் இருந்தும்; நிற்கின்றதாய்ச் சிறிதும் தோன்றாமல் உயிராகவே நிற்றலைக் குறிக்கும்; ''அந்நெறி'' என்பதில் உள்ள **''நெறி''** என்னும் சொற்குப் பொருள் **''போல''** என்பது ஆகும்; ஆகவே, **அந்நெறி** என்பது, **அதுபோல** என்னும் பொருளை உடையது ஆகும்.

இறைவனும் உயிரும் ஒற்றுமைப் பட்டு நிற்பதை எல்லா

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மதவாதிகளும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். ஆனால் அவர்கள் கூறும் பல்வேறு உவமைகளைச் சிவஞான சுவாமிகள் சிற்றுரையில் கூறி, **அவையெல்லாம் பொருந்தாதன** என விளக்கியருளியுள்ளார்கள். அவற்றுள் சில வருமாறு:

1. குடம் உடைந்தபோது, குடத்தில் வளைபட்ட குடாகாயமும், மகாகாயமும் ஒரு பொருள் ஆதல் போலப் பாச நீக்கத்தில் உயிரும் சிவமும் ஒரு பொருளாய் ஒற்றுமைப்படும்.

2. நாயகனும் நாயகியும் இன்ப அனுபவ அளவில் ஒற்றுமைப் படுதல் போலச் சிவானந்த அனுபவ அளவில் சிவனும் உயிரும் ஒற்றுமைப்படும்.

இந்த இரண்டு உவமைகளில் முதலாவது உவமை ஏகான்ம வாதக் கொள்கையை மறுத்து நிற்கிறது; இரண்டாவது உவமை வைணவ நெறிக்குரிய நாயக நாயகி உறவு முறை சைவத்திற்குப் பொருந்தாது என்பதைக் காட்டுகின்றது.

இனி, இந்தச் சூத்திரத்தில் உள்ள உவமை எத்தகையது என்பதை விளக்கும் பொருட்டு, கீழ்க்காணுமாறு கூறுகிறார்:

''அவனே தானே ஆகிய அந்நெறி'' எனப் பெத்த நிலையில் முதல்வன் உயிரோடு கலந்து இருத்தலை உவமையாக எடுத்துக் காட்டினார். பெத்த நிலையில் முதல்வன், உயிராய் ஒற்றுமைப்பட்டு நிற்றலும், முத்தி நிலையில் உயிர், சிவமாய் ஒற்றுமைப்பட்டு நிற்றலும் என்று கூறி, அத்தகு சம்பந்தம் அத்துவித சம்பந்தமே ஆகும் எனத் தெளிவுறுத்துகின்றார்.

முத்தி காலத்தில் உயிர், தான் என்னும் முனைப்பு இன்றி நிற்பதற்கு, வேறு எந்த உவமையும் பொருந்தாது என்பதைத் தெளிவுபடுத்தவே இந்த உவமைகளைக் கூறினார், என்பது கருத்தில் கொள்ளத்தக்கது. எனவே, **வேற்றுமையும் முனைப்பும் அற்று நிற்றலே,** சைவ சித்தாந்த முத்தி **இலக்கணம்** என்பது பெறப்படும்.

இந்தச் சூத்திரம் இரண்டு அதிகரணங்களை உடையது. அவை வருமாறு;

1. அவனே தானே ஆகிய அந்நெறி ஏகன் ஆகி,

2. இறைபணி நிற்க, மல மாயை தன்னொடு வல்வினை இன்றே.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பத்தாம் சூத்திரம்-முதல் அதிகரணம்

மேற்கோள்

ஈண்டுப் பரமேசுவரன் இவ்வான்மாவாய் நின்ற முறைமையான் அவனிடத்து ஏகனாகி நிற்க என்றது.

இதன் பொருள்:

இந்த முதல் அதிகரணத்தில், ஞானக் கண்ணால் காணப்பட்ட அந்த முதல்வன், பெத்த நிலையில் உயிரோடு உடனாய் நின்று அறியவும், அந்த முதல்வன் உயிரின் வேறாய்க் காணப்படாமல், உயிர் தானே அறிந்தேன் என்று எண்ணும்படி, அவ்வுயிரே ஆய் ஒற்றுமைப்பட்டு உயிரின் பின்னாக நின்றது போல, இந்த முத்தி நிலையில் அந்த முதல்வனோடு உடனாய் நின்று உயிர் அறியினும், அவ்வுயிர் முதல்வனின் வேறாகக் காணப்படாமல், அம் முதல்வனோடு ஒற்றுமைப்பட்டு நிற்க.

தெளிவுரை:

பதியைக் காண்பது முத்தி ஆகாது; பதியோடு ஒற்றுமைப்பட்டு நிற்பதே முத்தி ஆகும் என்பது சைவஸித்தாந்தக் கொள்கை ஆகும்.

ஏது

அவ்வாறு நிற்கவே, யான் எனது என்னும் செருக்கு, அற்று; அவனது சீபாதத்தை அணையும் ஆகலான்.

இதன் பொருள் :

மேற்கோளில் கூறியவாறு, சிவனிடத்து ஏகனாகி நின்றால் தான், உயிரை யான் எனவும் சிவப்பொருளை எனது எனவும் பகுத்துக் காணும் மயக்க உணர்விற்கு ஏது ஆகிய ஆணவமலம் நீங்கி, உயிர் சிவபெருமானுடைய திருவடி ஆகிய சிவானந்தத்தைப் பெறும். ஆகவே, அந்த மயக்க உணர்விற்கு ஏது ஆகிய மலம் நீங்குதற்குக் காரணம் ஆவது பற்றி, இந்த மேற்கோளில் பரமேசுவரன் இவ்வான்மாவாய் நின்ற முறை போல இவ்வான்மா அப்பரமேசுரன் இடத்து ஏகனாகி நிற்க எனக் கூறியது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

ஏகனாய் நில்லாத இடத்து, ஆணவமலம் அறாது; ஆணவ மலம் அறாத இடத்துச் சிவபெருமான் திருவடி அடைதல் கூடாது; எனவேதான் ஏதுவில் ''ஏகனாய் நிற்கவே'' என்று கூறப்பட்டது,'யான்''என்பது, அறியும் பொருள் ஆகிய உயிர் ஆகும். எனது என்பது, அவ்வுயிரின் அறிவையும், அந்த அறிவால் அறியப்படும் பொருள்களையும் குறிக்கும்.

'எனது' என்பது என்+ அது என்று பிரிக்கப்படும்,'அது' என்பது உரிமையை உணர்த்தும் ஆறாம் வேற்றுமை உருபு ஆகும். உரிமை பல்வேறு வகைப்படும், இந்த ஏதுவில் எனது என்றதில் உள்ள அது என்னும் உருபு, குணஉரிமை பற்றி அறிவையும், உணர்ச்சி உரிமை பற்றி உணரப் படும் பொருளையும் குறித்து நின்றது.

செருக்கு என்பது செருக்குக்கு ஏது ஆகிய மலத்தைக் குறித்து நிற்கிறது; எனவே செருக்கு என்பது மயக்கத்தைக் குறிக்கும். செருக்கு அறுவதால் ஆன்மா சீபாதத்தை அணையும், ஆகவே, செருக்கு அறுதல் காரணம்; சீபாதத்தை அணைதல் காரியம்.

(1) எடுத்துக்காட்டு வெண்பா

நான் அவன் என்று எண்ணினர்க்கும் நாடும் உளம் உண்டாதல்
தான் என ஒன்று இன்றியே தான் அதுவாய் - நான் என ஒன்று
இல் என்று தானே எனும் அவரைத் தன்அடிவைத்து
இல்என்று தானாம் இறை

(கொண்டு கூட்டு) ''தன் அடிவைத்து இல் என்று'' என்பதை ''தன் அடி இல் என்று வைத்து'' என்று கூட்டுக.

இதன் பொருள் :

நான் அவன் என்று எண்ணினர்க்கும் நாடும் உளம் உண்டாதல் தான் என ஒன்று இன்றியே தான் அது ஆய்-முதல்வன் இல்லை, யானே உளன் என்று எண்ணுபவர்க்கு அவ்வாறு எண்ணுவது அறியாமையால் முற்பட்டுத் தோன்றும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உயிர் உணர்வு ஆகும். அதுபோல, யான் என்றும் அவன் என்றும் முறையே தன்னையும் கடவுளையும் பகுத்து அறிந்து நிற்பவர்க்கு, அவ்வாறு எண்ணுவது, உயிரின் தற்போதத்தால் முற்பட்டுத் தோன்றுவதே ஆகும். ஆகவே, அவ்வாறு உயிரின் அறிவு முற்பட்டுத் தோன்றும் பொழுது, முதல்வன் தான் இருப்பதாகக் காணப்படாமல், தற்போதத்தால் முற்பட்டுத் தோன்றும் அந்த உயிரின் உணர்வே ஆய் நிற்பன். **நான் என ஒன்று இல் என்று தானே எனும் அவரைத் தன் அடி இல் என்று வைத்துத் தான் ஆம் இறை** - இனி யான் என்று ஒரு பொருள் தனித்துக் காணப்படுமாறு இல்லை என அறிந்து, எல்லாப் பொருளும் முதல்வனே என்று காணும் தெளிந்த அறிவு உடையவரை, முதல்வன் தன் திருவடி வியாபகத்துள் அடங்கி நிற்கும்படி செய்து எல்லாப் பொருளுமாய் நிற்பன்!

தெளிவுரை :

சிவ பெருமானிடத்து ஏகனாய் நின்றால்தான் மலம் அறும் என்று இந்த வெண்பா கூறுகிறது. ஆன்மா தனித்து நிற்கும் தன்மை உடையதன்று. எனவே தனித்து நில்லாத தன்னையும் தன்னின் வேறாக நில்லாத முதல்வனையும் ஆன்மா, பகுத்துக் காண்பது, மயக்க அறிவினாலேயே ஆகும்.

உயிரின் அறிவு முனைத்துத் தோன்றிய போது, முதல்வன் இல்லை ஆகிறது; உயிரின் அறிவு முனைத்துத் தோன்றாத பொழுது முதல்வன் விளங்கித் தோன்றுகிறான். அதனை ஓர் உவமையால் அறியலாம்.

கண் ஒளி, ஒரு துணையைக் கொண்டே காணும் தன்மை உடையது; அது தூல ஒளி, விளக்கு ஒளி தானே பிரகாசிக்கும் தன்மை உடையது; அது சூக்கும ஒளி. கண்ணொளியும் விளக்கொளியும் அத்துவிதமாய்க் கலந்து நிற்கும் நிலையை ஆராய்ந்து அறிய முற்பட்டால், அந்த இரு ஒளிகளும் வேறுவேறாகப் பிரித்து அறிய வாரா ஆகும். ஆகவே, காணும் தன்மை கண்ணுக்கே அன்றி விளக்குக்கு இல்லாததால், கண்ணொளிதான் உள்ளது என்று காணும் பொழுது, காணும் தன்மையே முற்பட்டுத் தோன்றும். அந்நிலையில் விளக்கொளி இருந்தும் இல்லை ஆயிற்று, அவ்வாறின்றி, விளக்கொளி இல்லாத பொழுது கண்ணொளி பொருளைக் காணாது ஆகலின்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

விளக்கு ஒளிதான் உள்ளது என்று காணும் பொழுது; விளக்கு ஒளியின் காட்டும் தன்மையே முற்பட்டுத் தோன்றும். அந்நிலையில் கண்ணொளி இருந்தும் இல்லை ஆயிற்று. ஆகவே **காணும் தன்மையால் கண் ஒளி உள்ளது; காட்டும் தன்மையால் விளக்கு ஒளி உள்ளது.** இந்த இரு ஒளிகளையும் பகுத்துக் காண எண்ணினாலும். அவ்வாறு காண்கின்ற கண்ணொளியின் தன்மையே முற்பட்டுத் தோன்றும், எனவே, அந்நிலையில் காட்டும் தன்மை உடைய விளக்கு ஒளியை, **மயக்க அறிவால் உளது என்று அறிதலே அன்றித், தெளிந்த அறிவால் உளது என்று காண்பது இல்லை.**

அதுபோல, பிறப்பு நிலையில் கருவி கரணங்களையும், முத்தியில் அருளையும், துணையாகக் கொண்டு அறியும் **தூலஅறிவு உடைய உயிரும்** துணை வேண்டாது தானே அறியும் சூக்கும **அறிவுடைய சிவமும்,** அத்துவிதமாய்க் கலந்து நிற்கும் நிலையும் வேறு வேறாகப் பிரித்து அறிய வாராமையால், அறிவுடைப் பொருள் ஆகிய உயிர், தான் உளது எனக் காணும்பொழுது, உயிரின் அறிவே முற்பட்டுத் தோன்றும், அந்நிலையில் அறிவிக்கும் அறிவை உடைய சிவம் இருந்தும் இல்லை ஆயிற்று; உயிர் ஆகிய யான், எக்காலத்தும் இருந்தும் நனவில் கண்டதைக் கனவில் காணமுடியவில்லை. கனவில் கண்டதை நனவில் அறிய முடியவில்லை. நனவிலும் பின்னர் வருவதை முன்னர் அறியமுடியவில்லை. முன்னர் அறிந்ததையும் மறவாது அறிய முடியவில்லை. இவ்வாறு ஒருசேர அறியும் தன்மை எனக்கு இல்லாமையால், எனக்கு அறிவிக்கும் பொருள் ஆகிய சிவமே உளது எனக் காணும்பொழுது, சிவமே முற்பட்டுத் தோன்றும். அந்நிலையில் உயிர் இருந்தும் இல்லை ஆயிற்று.

இனி, அறியும் தன்மையால் உயிர் உளது, அறிவிக்கும் தன்மையால் சிவம் உளது என இரு பொருளையும் **பகுத்து அறிய** எண்ணினாலும், அவ்வாறு அறிகின்ற தன்மையாகிய உயிரின் தன்மைதான் முற்பட்டுத் தோன்றும்; ஆதலால், அந்நிலையில் அறிவிக்கும் தன்மை உடைய சிவத்தை **மயக்க அறிவால்** அறிய முடியுமே அன்றித் **தெளிந்த அறிவால்** அறிய முடியாது. எனவே, **தான் ஒரு முதல் என்ற எண்ணம் எதுவரை இருக்கிறதோ, அதுவரை சிவம் விளங்குவதில்லை.**

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

யானே உளன், வேறு தலைவன் இல்லை என்று எண்ணுகிறவர்களுக்கும், யானும் இருக்கிறேன், என் தலைவன் ஆகிய சிவனும் இருக்கிறான் என்று எண்ணுகிறவர்களுக்கும், சிவம் வெளிப்பட்டு விளங்குவதில்லை. இவ்வுண்மையைச் சிவப்பிரகாசம், (58) ஆவது பாடல் தெளிவுற விளக்குகிறது. அதன் கருத்து வருமாறு; கண் ஒளியும் விளக்கு ஒளியும் கலந்து நிற்கும்; நிற்பினும் பொருள், ஒன்று அன்று; அதுபோல முதல்வனுடைய அருளில் உயிர் கலந்து நிற்க வேண்டும்.

வினா வெண்பா -11 ஆவது பாடல் இக்கருத்தை இவ்வாறு கூறுகிறது; காண்பவன், காட்டுபவன், காணப்படும் பொருள் என்னும் மூன்றனையும் கொண்ட இடத்தும் முத்தி இல்லை; விட்ட இடத்தும் முத்தி இல்லை; ஆகவே காண்பவனையும் காணப்படும் பொருளையும், காட்டுபவன் அருள் வழியாகக் கொள்வதே முத்தி என்பதாகும்.

கண்ணின் ஒளி எந்த எந்த ஒளியோடு கூடினாலும் அந்த அந்த ஒளி வடிவாய்க் காணப்படும் தன்மை உடையதே அன்றித் தனித்துக் காணப்படுவதில்லை; ஆகவே, அவ்வாறு தனித்துக் காணப்படாத கண்ணின் ஒளியை வேறாகத் தனித்துக் காண்பது, மயக்கக் காட்சி ஆகும்.

விளக்கு ஒளி சூரிய ஒளி சந்திரன் ஒளிகள், கண் ஒளியோடு கூடிய பொழுதும், கண் ஒளியாகக் காணப்படாமல், அந்த அந்த ஒளிகளாகவே காணப்படும்; ஆதலால் அவ்வாறு தனித்துக் காணப்படும் விளக்கு ஒளி முதலியனவாகக் கண் ஒளியைக் காணும் காட்சி, தெளிவுக்காட்சி ஆகும். இவ்வுண்மை, பிரத்தியட்சமாக அறியப்படுவதாகும்.

இதுபோலவே உயிரைத் தனித்துக் காண்பதும், சிவமேயாய்க் காண்பதும் என்னும் காட்சி இரண்டனுள், தனித்து நில்லாத உயிரைத் தனித்து நிற்பதாய்க் காண்பது மயக்கக் காட்சி; சிவம் உயிரோடு கூடிய போதும் சிவமாய் விளங்குவது அன்றி, உயிராய் விளங்காமையால், அந்தச் சிவமாய் உயிரைக் காண்பது, தெளிவுக் காட்சி ஆகும்.

கண் ஒளியை விளக்கு ஒளியாகக் காணாமல், விளக்கு ஒளியின் முன்னர்க் கண் ஒளியின் ஆற்றல் மடங்கிப் போயிற்று என்று கூறலாமா? அவ்வாறு கூறக்கூடாது. ஏன் எனில்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கண்ணொளியின் ஆற்றல் மடங்கிப் போயிற்று என்றால், விளக்கு ஒளியை அறிந்தது எது என்னும் கேள்வி எழும். எனவே விளக்கு ஒளியை அறிந்தமையால், விளக்கு ஒளியின் முன்னர்க் கண் ஒளியின் ஆற்றல் மடங்கிப் போயிற்று என்று கூறுவது பொருந்தாமை பெறப்படும்.

கண்ணின் ஒளி அதன் குணம் ஆகும்; ஆகவே கண்ணுக்கு ஒளி இல்லை என்று கூறுவது பொருந்தாது. விளக்கொளியின் துணை இன்றிக் கண்ணொளி விளங்காது; அவ்வளவே. கண்ணொளி எப்படி விளங்குகிறது? கண்ணொளிக்குத் துணையாய் இருக்கும் ஒளி சிறியதாய் இருந்தால் கண்ணொளியும் சிறிதாய் விளங்கும்; பெரிதாய் இருந்தால் கண்ணொளியும் பெரிதாய் விளங்கும் தன்மை உடையது.

இவ்வாறே உயிரின் அறிவு அதன் குணம் ஆகும், ஆகவே உயிர்க்கு அறிவு இல்லை என்று கூறுவது பொருந்தாது. தனித்து நின்று அறியும் தன்மை உயிர்க்கு இல்லை. அவ்வளவே, உயிரின் அறிவு எப்படி விளங்குகிறது? உயிர்க்குச் சிற்றறிவை உண்டு பண்ணும் தனுகரண புவன போகங்களுடன் கூடினால், உயிரின் அறிவு சிறிதாக விளங்கும்; உயிர்க்குப் பேரறிவை உண்டுபண்ணும் திருவருளோடு கூடினால், உயிரின் அறிவு பெரிதாக விளங்கும்.

ஒரு பொருளில் வீழ்கின்ற பல கண் ஒளிகளுள், ஒரு கண்ணொளி பிறிதொரு கண்ணொளியைக் காணுவது இல்லை; பிறிதொரு கண்ணொளிக்குக் காட்டுவதும் இல்லை. ஆகவே, கண்ணொளிகள் ஒன்றுடன் ஒன்று கூடுவதில்லை என்பது பெறப்படும்.

இவ்வாறு ஓர் உயிரும் பிறிதோர் உயிரும் கலப்பது இல்லை. இதற்குக் காரணம், உயிர்க்கு எல்லாம் அறியும் தன்மை மட்டும் உள்ளதே அன்றி, உள்ளீடாய் நின்று அறிவிக்கும் தன்மை இல்லை என்பதே ஆகும். சிவத்துக்கு உயிரின் உள்ளீடாய் நின்று அறிவிக்கும் தன்மை உண்டு, மேலும் உயிர் தனித்து நிற்கும் பொருளும் அன்று. ஆகவே, புறத்தே நின்று ஓர் உயிருக்குப் பிறிதோர் உயிர் அறிவிக்குமே அன்றி, அதற்கு உள்ளீடாய் நின்று அறிவிக்கும் தன்மை உடையது அன்று. உயிருக்கு அறியும் தன்மை இருப்பதாலும், சிவத்துக்கு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உள்ளீடாய் நின்று அறிவிக்கும் தன்மை இருப்பதாலும், சிவம் தனிப் பொருளாய் காணப்படுகிறது. படவே, உயிரும் உயிரும் கலந்து இருக்கும் தன்மை உடையனவல்ல; உயிரும் சிவமுமே கலந்து இருக்கும் தன்மை உடையன ஆகும்.

உயிர் தனித்து நிற்கும் தன்மை உடையதன்று ஆகலான், பிற உயிர்க்குத் தனித்து நின்று அறிவிக்கும் திறன் உடையதன்று. ஆயினும், உயிர் சிவத்தொடு கலந்துநின்றே தம்மையும் பிற உயிர்களையும் சிவமாகவே உணர்தல் கூடும். இவ்வுண்மையைப் பட்டினத்துப் பிள்ளையார்.

என்னையும் கண்டேன் பிறரையும் கண்டேன்
நின்னிலை அனைத்தையும் கண்டேன் - என்னே
நின்னைக் காணா மாந்தர் தம்மையும் காணாத் தன்மையோரே.

என்று திருவிடைமருதூர் மும்மணிக்கோவை 13-வது பாடலில் கூறியிருப்பதிலிருந்து உணரலாம்.

இந்த அதிகரணத்துடன் வைத்துச் சிந்திக்கத்தக்க சித்தியார், சிவப்பிரகாசப் பாடல்கள் வருமாறு:

பாடல் எண் :	தொடக்கச் சொற்கள்
சித்தியார்	**304 - இவன் உலகில் இதமகிதம்**
,,	**305 - யான் செய்தேன் பிறர் செய்தார்**
சிவப்பிரகாசம்	**58 - கண்ணொளி விளக்கு**
,,	**72 - தன் அறிவு அதனால்**
,,	**78 - இந்நிலை தன்னில் மன்னி**

பத்தாம் சூத்திரம் - இரண்டாம் அதிகரணம்
மேற்கோள்

இனி இறைபணி வழுவாது நிற்க என்றது

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இதன் பொருள்

ஏகனாய் நிற்கும் அம்முதல்வன் அருள் வழியில் சலியாமல் நிலைத்து நிற்க

தெளிவுரை:

''இறைபணி'' என்பது இறையருளின் வழியே நிற்றல் ஆகும். அஃதாவது அவன் அருளால் அல்லது ஒன்றையும் செய்யான் ஆகவே என்று ஏதுவில் விளக்கிக் கூறுவதால், அஃது இனிது விளங்கும். சிவபெருமான் அருள் வழி நிற்பதால், முன்வினைப் பயன் ஆகிய பிராரத்த வினையையும் முயற்சியையும் (ஆகாமிய வினையையும்) நீக்கக் கூடும் என்பது கருத்து.

ஏது

அவன் அருள் அல்லாது ஒன்றையும் செய்யான் ஆகவே, அஞ்ஞான கன்மம் பிரவேசியா ஆகலான்.

இதன் பொருள்:

உயிர் ஏதேனும் ஒன்றைச் செய்ய வேண்டுமாயின் முதல்வன் உயிருடன் உடனாய் நின்று செய்ய வேண்டும். அவ்வாறு முதல்வன் செயலை இன்றித் தனித்துத் தனக்கு ஒரு செயல் இல்லாத தன்மையை உடைய உயிர் செய்வன எல்லாம், அந்த முதல்வன் அருள்வழி நின்று ''நான் செய்கிறேன்'' என்னும் முனைப்பு இன்றிச் செய்யுமாயின், மாயா காரியம் ஆகிய **மயக்கத்தால் உண்டாகும் முயற்சியும்,** அந்த முயற்சி வாயிலாக வரும் கன்மத்தின் காரியம் ஆகிய **இன்ப துன்பப் பயன்களும்,** ஏகனாகி நிற்பதற்குத் தடையாக வந்து, தாக்க மாட்டா, ஆதலால் மாயாமல காரியமும் கன்மமல காரியமும் ஆகிய அவ்விரண்டும் தாக்காது இருப்பதற்காகச் செய்ய வேண்டும் உபாயம் இறைபணி நிற்றல் என்பது பற்றி, ''இனி இறைபணி வழுவாது நிற்க'' என மேற்கோள் கூறியது.

தெளிவுரை :

முதல் அதிகரணத்தில் கூறியவாறு ஏகனாகி நிற்றலே போதும், இறைபணி நிற்றல் எதற்காக என்றால், ஏகனாகி நிற்றலால் ஆணவமலம் அறுதலும், இறைபணி நிற்றலால் மாயா மலம் கன்ம மலம் அறுதலும், பயன் ஆகலின் இருவகை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நிலைகளும் இன்றியமையாதன ஆயின.

ஏகனாய் நின்று, ஆணவ மலத்தை நீக்கினாலும், உடம்பு காரணமாக வரும் மாயா மலம் கன்ம மலம் நீங்குவதற்காக, இறை பணி நிற்க வேண்டும் என்று இந்த ஏதுவில் கூறப்படுகிறது.

அஞ்ஞானம் என்பது ஆணவமலத்தைக் குறிக்கும்; ஆயினும், முதல் அதிகரணத்தில் ஆணவமலம் அறுதல் பெறப்பட்டமையின், இந்த அதிகரணத்தில் அஞ்ஞானம் என்பது, மாயையின் காரியம் ஆகிய மயக்கம் என்பது பெறப்படும்.

உடம்பு அறவே நீங்கும் வரைக்கும், முயற்சியும் பயனும் கெட மாட்டா; ஆயினும் உடம்பால் வரும் தாக்கம் ஏற்படாது. ஆதலால், அஞ்ஞான கன்மம் அறும் என்று கூறாமல் பிரவேசியா என்றார். இந்த ஏது பிராரத்த வினையையும் முயற்சியையும் நீக்க முடியாது என்பவரை மறுத்து உரைக்கும் சித்தாந்தத் துணிபு ஆயிற்று.

(2) எடுத்துக்காட்டு வெண்பா

நாம்அல்ல இந்திரியம்; நம் வழியின் அல்ல ; வழி
நாம் அல்ல ; நாமும் அரன் உடைமை - ஆம் என்னில்
எத்தனுவின் நின்றும் இறைபணியார்க்கு இல்லை வினை
முற்செய்வினை யும், தருவான் முன்,

இதன் பொருள்:

இந்திரியம் நாம் அல்ல - பிராரத்தவினைப்பயன்களை அனுபவிப்பதற்கும், அதற்காகச் செய்யும் முயற்சியால் மேலும் வினையைச் சம்பாதிப்பதற்கும். இந்திரியங்கள் இல்லாமல் முடியாது. கருவிகளாகிய இந்த இந்திரியங்கள் மாயையின் காரியம் ஆவன; அவற்றை அனுபவிக்கும் நாம் அவை அல்ல; **நம் வழியின் அல்ல** - அந்த இந்திரியங்கள் சடம்; ஆகவே அவை இறைவனருளால் தொழில் செய்யுமே அன்றி நம்மால் தொழில் செய்யா ; **வழி நாம் அல்ல**- பார்க்க வேண்டும் என்ற விருப்பம் இருந்தும், கண் குருடாக இருந்தால் பார்க்க முடியாது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இவ்வாறே இந்திரியங்கள் தொழிற்படுவதற்கு. அவற்றிற்கு முன்னிலை ஆக உலகப் பொருள்கள் வேண்டும்; அந்த உலகப் பொருள்களும் மாயா காரியமாவன ஆகலின் அவை முதல்வன் அருளால் விளங்கும் அன்றி, நம்மால் விளங்க மாட்டா.

நாமும் அரன் உடைமை - அந்த இந்திரியங்களோடும் உலகப் பொருள்களோடும் கூடி நின்று, வினைப்பயன்களை அனுபவிப்பதற்கும் மேல்வினையைச் சம்பாதிப்பதற்கும் உரிமை உடைய நாமும், முதல்வன் நம்மை அறியும்படி செய்தால் அன்றி, அறிய முடியாமையும் அவன் நம்மைச் செய்யும்படி செய்தால் அன்றி, எதையும் செய்யமுடியாமையும் உடையராய்க் காணப்படுகின்றோம். ஆதலால் நாம் அவன் அருள்வழி நிற்கும் தன்மை உடையோமே அன்றித் தனித்து நிற்கும் தன்மை உடையவர் அல்லோம்.

ஆம் என்னில் - இவ்வாறு உயிரின் இயல்பையும் பாசங்களின் இயல்பையும் உள்ளவாறு அறிந்து நாம் செய்யும் செயல்கள் எல்லாம் அவன் அருள் செய்யும்படி செய்வதால் செய்கின்றோம் என்பதைக் கண்டுகொண்டு இருப்பராயின், **இறை பணியார்க்கு எத்தனுவின் நின்றும் வினை இல்லை**- அவ்வாறு நிற்பது அடிமைத் திறம் ஆதலின், இந்த அடிமைத்திறம் உடையவர், எந்த உடம்பில் நின்று எந்த முயற்சிகளைச் செய்தாலும் அந்த முயற்சிகள் அவரைக் கட்டுப்படுத்துவது இல்லை. **முன் செய் வினையும் தருவான் முன்** - அந்த முயற்சி ஆகிய ஆகாமிய வினையை விட்டு நீங்காமல், அந்த முயற்சியை உடன் கொண்டு வருவது ஆகிய பிரார்த்த வினைப் பயனும் அவரைக் கட்டுப்படுத்தாமல் அந்த வினைப் பயனைக் கூடும்படி செய்த முதல்வன் அருளால், உடம்பின் அனுபவமாய்க் கழியும்.

தெளிவுரை:

தனு கரண புவன போகங்கள், மாயா காரியங்கள் ஆகலின், அவை இறைவன் அருளினாலே தோன்றுவன ஆகும். இறைவன் அருள் இல்லாமல் உயிருக்கு அவற்றால் எந்தச் செயலும் இல்லை. இந்த உண்மையை அறிந்து உயிர் இறைவன் அருள் வழி நிற்க வேண்டும். அவ்வாறு நின்றால், ஊழ்வினையின்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பயனாக வரும் உலக போகங்களும், அந்த போக அனுபவத்தில் வழியாகத் தன்னிடத்து நிகழும் முயற்சியும் (ஆகாமியவினை)அந்த உயிரைத் தாக்காது ஒழியும். ஒழியவே, வினைப்பயன்கள் ஆகிய **இன்ப துன்பங்கள்** அந்த **உயிரின் அனுபவம் ஆகாமல்** அந்த உயிர்க்குள்ள **உடலின் அனுபவமாய்க் கழியும்** என்பதே இந்த வெண்பாவில் கருப்பொருள் ஆகும்.

உடன் சடம் : எனவே அதற்கு அனுபவம் இல்லை. உடலோடு கூடிய உயிருக்குத்தான் அனுபவம் கூடும். அப்படி இருக்கும்போது, ஊழ்வினையின் பயன் உடனில் அனுபவமாய்க் கழியும் என்பது எப்படிப் பொருந்தும்? பொருந்துமாறு காட்டுதும்:

உடல் தனித்து அனுபவியாது : உயிரும் தனித்து அனுபவியாது; இரண்டும் கூடினபோதே அனுபவம் நிகழும். அந்த இரண்டனுள் உடல் தானே உயிரைக்கூடாது; உயிரும் தானே உடலை எடுத்துக் கொள்ளாது. ஆகவே இறைவன் அருள் கூட்டவே, உடலுடன் உயிர் கூடும். அவ்வாறு கூடி நின்ற உயிர், தன் செயலை இறைவன் அருட் செயலாக உணர்ந்தபொழுது அந்தச் செயலால் உண்டாகும் பயன். யான் செய்தேன், என்னும் முனைப்பு இல்லாமையால் தன்னைத் தாக்குதல் இல்லை.

உயிரைச் செய்யும்படி செய்து, **அது செய்வதற்காகத் தான் செய்தலே அன்றித்**, தானாகவே செய்யாமையால், அந்தப் பயன் இறைவனையும் தாக்காது. இவ்வாறு உயிரையும் தாக்காமல் இறைவனையும் தாக்காமல் நிற்கும் ஊழ்வினையின் பயன் இறைவன் முன்னிலையில், உடலையே தாக்கும்; அஃதாவது உடலின் அனுபவமாய்க் கழியும்.

இஃது எது போல எனின், அரசன் ஆணைவழி நிற்கும் அதிகாரி ஒருவன் செய்த செயலின் பயன், அந்த அதிகாரியையும் தாக்காமல், அரசனையும் தாக்காமல், அரசன் முன்னிலையில், அந்த அதிகாரத்தை தாக்குதல் போல் ஆகும்.

முன்செய்வினை என்பது சஞ்சித வினையையும் பிராரத்த வின்னயையும் குறிக்கும். என்றாலும் எட்டாம் சூத்திரத்தில் கூறியவாறு, முதல்வன் குருவாய் வந்து தீக்கை செய்த அளவிலே

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அக்கினியைச் சேர்ந்த வித்து மீண்டும் முளையாதவாறு கெட்டு ஒழிதல் போலச், சஞ்சிதவினை, பயனுக்கு வாராமல் கெட்டு ஒழியும் ஆதலால், இந்த வெண்பாவில் ''முற்செய்வினை'' என்றது ஏற்புழிக்கோடல் எனும் உத்தியால், பிரார்த்த வினையைக் குறித்து நின்றது.

''கழியும், என்ற சொல்'' எவ்வாறு கழியும் என்பதை அவாவி நிற்றலால், அந்த அவாய்நிலை பற்றி, **உடல் ஊழாய்க் கழியும்** என்பது வருவிக்கப்பட்டது.

''**ஏற்புழிக் கோடல்** ''என்பதுபலபொருட்குஉரிய ஒரு சொல் வரும்பொழுது, அந்த இடத்துக்கு ஏற்றவாறு பொருள் கொள்ளுவதைக் குறிக்கும்.

(3) எடுத்துக்காட்டு வெண்பா

சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடன் ஆதல்
சார்ந்தாரைக் காத்தும் சலம் இலனாய்ச் - சார்ந்து அடியார்
தான்தானாச் செய்து பிறர் தங்கள்வினை தான் கொடுத்தல்
ஆய்ந்தார் முன் செய்வினையும் ஆங்கு.

இதன் பொருள் :

சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடன் ஆதல் சார்ந்தாரைக் காத்தும் - ஒருவர் தன்னிடத்து அடைக்கலம் புகுந்தால் புகுந்த அவர்க்கு வரும் துன்பங்களை நீக்கி, ஆதரவாய் நின்று அவரைக் காப்பது, உயர்ந்த குணம் உடையவருக்குக் கடமை ஆகும். ஆதலால் இறைவனும் தன்னைச் சார்ந்து அடிமைத்திறம் உடையவராய் நில்லாதவரை விலக்கி, அவ்வாறு நிற்பவர்க்கு வரும் துன்பங்களை நீக்கி, ஆதரவாய் நின்று அவரைக் காப்பன், **சலம் இலன் ஆய்** - அவ்வாறு அவனைச் சாராதவரை விலக்கிச் சார்ந்தாரைக் காத்தல் பற்றி, ஒரு பக்கம் சாரும் அநீதி இல்லாதவன் ஆகி,

சார்ந்து அடியார் தானாய்ச் செய்து பிறர் தங்கள் வினை கொடுத்தல் - அவ்வாறு செய்வதால், தனக்கு விருப்பு வெறுப்பு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆகிய ஆகாமிய வினைச் சம்பந்தம் இல்லாதவாறு போலத் தன்னைச் சார்ந்து தன் அடித்தொண்டு செய்பவரைத் தன்போல் ஆகாமியவினைச் சம்பந்தம் இல்லாதவராகச் செய்து தன்னைச் சாராத பிறர்க்கு வரும் ஆகாமிய வினையை, அவர்க்குக் கொடுப்பன்; ஆதலால் **ஆய்ந்து ஆர் முன்செய் வினையும் ஆங்கு** - ஆகாமிய வினையை விலக்கியும் கூட்டியும் செய்வதுபோலத் தன்னைச் சார்ந்த அடியார்க்குச் சூக்குமமாய் வரும் பிரார்த்தவினையை அவர் அனுபவியாதபடி விலக்கியும், தன்னைச்சாராதார்க்குச் சூக்குமமாய் வரும் பிராரத்த வினையை, அவர் அனுபவிக்கும்படி கூட்டியும், இருவேறு வகைப்படச் செய்வன்,

தெளிவுரை:

இறைவன் தன்னைச்சார்ந்த அடியவர்க்கு வினைப்பயனைத் தாக்க ஒட்டாது, உடல் ஊழாய்க் கழியும்படி செய்தல், அவன் கடமை என்று இந்த வெண்பா கூறுகிறது. இவ்வாறு தன்னைச் சார்ந்தவர்க்கு மட்டும் வினைப்பயன் தாக்காதவாறு செய்வது, இறைவனுக்கு நடுவுநிலைமையன்று என்பவரை நோக்கி, அவ்வாறு செய்தலை உடன்பட்டுச் சமாதானம் கூறும் கருத்து உடையவராய்ச் **''சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடன்''** என்னும் பழமொழியை எடுத்துக் காட்டி அவ்வாறு செய்தல் கடமை என்பதை அறிவித்தார்.

இவ்வுண்மையைத் **''தன்னை அடைந்தார் வினை தீர்ப்பது அன்றோ தலையாயவர் தம் கடன் ஆவதுதான்''** என்றும்.

சலம் இலன் சங்கரன்; சார்ந்தார்க்கு
அல்லால் நலம் இலன்

என்றும் அப்பர் அடிகள் அருளிச் செய்தவற்றால் உணரலாம்.

ஆகாமிய வினை ஆகிய முயற்சி தூலமாய் அறியப்படுவது ஆகும்; அதுபோல பிராரத்த வினை வந்து கூடுவது, தூலமாய் அறியப்பட மாட்டாது. அது சூக்கமமாய் வந்து கூடும். ஆதலால், அந்த வினையின் இயல்பு அறிதல் அரிது என்பதை அறிவிக்க வேண்டி ஆய்ந்து ஆர் முன் செய் வினையும் என்றார்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

(4) எடுத்துக்காட்டு வெண்பா

**இங்குளி வாங்கும் கலம்போல ஞானியால்
முன்செய் வினைமாயை மூண்டிடினும் - பின்செய்வினை
மாயையுடன் நில்லாது ; மற்றுஅவன் தான் மெய்ப்பொருளே
ஆயவதனால் உணரும் அச்சு**

இதன் பொருள்

இங்குளி வாங்கும் கலம் போல- மண் பாண்டத்தில் பெருங்காயத்தை வைத்து எடுத்துவிட்டாலும், அந்தப் பெருங்காயத்தின் வாசத்தை மண்பாண்டம் விடுவது இல்லை. பெருங்காயம் இருந்த பழக்கம் காரணமாக உண்டாகும் அந்த வாசம். பெருங்காயம் இருந்த பொழுது, வீசுவது போல் வீசாமல், மங்கிப்போய் மெலிதாக வீசும், அதுபோல **ஞானியால் முன்செய் வினை மாயை மூண்டினும்** - இறைபணியில் நிற்கும் தத்துவ ஞானிக்கு, உடம்போடு கூடி இருந்த பழக்க வாசனையால் அந்த உடம்பு தான் அல்ல என நீங்கிய பொழுதும், ஒவ்வொரு சமயங்களில் உடம்பைத் தான் என எண்ணும் எண்ணம் உண்டாகும். உண்டாகவே, அதுபற்றி அந்த உடம்பிற்கு உரிய பிராரத்தவினையின் அனுபவமும், அந்த அனுபவத்துக்கு வழி ஆகிய தனு கரண புவன போகம் என்னும் மாயா காரியங்களும், மங்கிப் போய் மெலிதாய் வந்து தாக்கும், தாக்கினும்,

பின் செய்வினை மாயையுடன் நில்லாது-அந்தத் தாக்குதலுக்கு இன்றியமையாது வேண்டப்படுவது ஆகிய முயற்சி என்னும் ஆகாமிய வினை, மேலும் பிறவியைத் தருவதற்கு வித்தாய் நிலை பெற்றுவளராமல், அந்த முயற்சிக்கு வாயில் ஆகிய உடலோடு கெட்டு ஒழியும், **அவன் தான் மெய்ப் பொருளே ஆய அதனால் மற்று அச்சு உணரும்** - முயற்சியைச் செய்தாலும், அந்த முயற்சி ஆகாமியமாய் ஏறாமைக்குக் காரணம் என்ன என்றால், இறை பணி நிற்கும் முத்தன் மெய்ப்பொருளே ஆகிய சிவமேயாய் நிற்பதனால், ஏகதேசத்தில் பழக்க வாசனை பற்றிச் சிவமாம் தன்மையில் நின்று பிறழ நேர்ந்தாலும் பிறழ ஒட்டாமல் செய்யும் சிவம் ஆகிய அந்த அச்சினையே நோக்கி

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நிற்பன் அன்றி, உடம்பை நோக்கி நிற்க மாட்டான், ஆகலான், உடம்பு பற்றி வரும் ஆகாமிய வினை ஏறுதல் இல்லை.

(ஏகதேசத்தில் -ஒருவேளை)

தெளிவுரை :

இறைபணி நிற்கும் முத்தர்க்கு, அஞ்ஞானம் இல்லாது ஒழிந்தும் பழக்க வசத்தால் உடம்பு முதலியன மெலிதாய் வந்து கூடினாலும், அவர் சிவனையே நாடி நிற்பதால், உடம்பு முதலியவற்றால் உண்டாகும் முயற்சி ஆகிய ஆகாமியவினை, மேல் வினையாக ஏறாமல், உடம்பு உள்ளவரை அந்த முயற்சி நிகழ்ந்து, உடம்பு கெடும்போது, அந்த முயற்சியும் இல்லையாய் ஒழியும், இஃது எது போல எனின், சூரியன் முதலியவற்றின் ஒளி இருளைக் கெடுக்குமாறு போல் ஆகும்.

இங்குளி என்பதில் உள்ள ''இங்கு ''என்பது பெருங்காயம் ஆகும். உளி என்பது ஐந்தாம் வேற்றுமை உருபு ஆகிய இன் ஆகும். ஆகவே ''இங்குளி'' என்பதற்குப் பொருள் ''பெருங்காயத்தின் ''என்பது ஆகும்.

'மூண்டிடினும்' என்று கூறியதால், மூளுதல் உறுதியாய் உண்டு என்று கூற முடியாது என்பது விளங்கும். விளங்கவே வாசனை உள்ள பொழுது தாக்கும். வாசனை இல்லாத பொழுது தாக்காது என்பது பெறப்படும்.

வண்டிச் சக்கரத்தைப் பிறழ ஓட்டாமல் நிலைத்து இருக்கும் படி செய்யும், அச்சுப் போல வினைவயத்தால் ஞானியைப் பிறழ ஓட்டாது நிலைத்து இருக்கச் செய்வது மெய்ப்பொருள் ஆகும். ஆகவே, அந்த மெய்ப்பொருளை அச்சாக உருவகம் செய்தார்.

(5) எடுத்துக்காட்டு வெண்பா

நண் அனல் வேவர்த நற்றவர் தம்மினும்
படன் அமர மாச் செலுத்தும் பாகரினும் - எண்ணி
அரன் அடி ஓர்பவர் ஐம்புலனில் சென்றும்
அவர் திறல் நீங்கார் அதற்கு.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இதன் பொருள் :

நண் அனல் வேவாத நற்றவர் தம்மினும் பண் அமர மாச் செலுத்தும் பாகரினும் - அக்கினியின் நடுவே இருந்தும், அந்த அக்கினியினால், சுடப்பெறாமல் இருக்கும்படி செய்வது, அக்கினியின் சூட்டைத் தடுக்கும் சித்தி ஆகிய அங்கித் தம்பனம் ஆகும். அந்த அங்கித் தம்பனம் ஆகிய நல்தவம் உடையவர், அக்கினியின் உள்ளே கிடப்பினும், தன்னுடைய வலிமையின் நின்றும் நீங்கார். அது போலவும் நடக்கும் கதியின்படி, விரைவாக நடக்கக்கூடிய குதிரையை, அவ்வாறு நடக்கும்படி செலுத்தி, அந்தக் குதிரையின் மேல் ஏறிச் செல்லும் பொழுது, நடத்தும் முறையைக் கூறும் பாகநூல் கற்றுத் தேர்ச்சி அடைந்தவர் அந்தக் குதிரையின் வேகமான நடையினால் தன் தைரியத்தை விடார்; அதுபோலவும்,

எண்ணி அரன் அடி ஓர்பவர் - ஐம்புலன்களில் தான் கட்டுப்படாது இருப்பதற்கு உபாயம் யாது என்று ஆராய்ந்து, முதல்வன் திருவடியை உணர்தலே உபாயம் என்று எண்ணித், திருவடி ஆகிய அச்சை உணரவல்லவர் ஆகிய இறைபணியில் நிற்பவர்.

ஐம்புலனில் சென்றும் அதற்கு அவர் திறல் நீங்கார் - ஊழ் வினையின் பயனாக மாயா காரியங்கள் வந்து தாக்குவதால், சத்தம் முதல் ஆகிய ஐவகை விடயங்களில் பிரவேசித்தார் ஆயினும், அந்தப் பிரவேசத்தால் அவர், முத்தி ஆகிய தம் வெற்றிப்பாட்டில் நின்றும் நீங்கிக் கட்டுப்பட்டுத் தொடக்கு உற மாட்டார். (அங்கித் தம்பனம் - நெருப்பை அசைவு இல்லாமல் நிறுத்துதல். நடக்கும் கதி - நடக்கும் நடை; பாக நூல்-நடத்தும் முறை கூறும் நூல்; உபாயம்-வழி)

தெளிவுரை :

இறைவன் திருவடிடயை உணர்ந்தவர், ஊழ்வினை காரணமாக ஐம்புலன்களைக் கூடினாலும், திருவடியில் நின்றும் நீங்கி அந்த ஐம்புலன்களில் கட்டுப்படார் என்பதை இந்த வெண்பா தெளிவுறுத்துகிறது. நல்ல தவத்தை உடையவரும் குதிரைப் பாகரும்; அரனடியை ஓர்பவருக்கு உவமைகள் ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

(6) எடுத்துக்காட்டு வெண்பா

சதசத்தாம் மெய்கண்டான் சத்து அருளின் காணின்,
இதமித்தல் பாசத்தில் இன்றிக்-கதம்மிக்கு
எரிகதிரின் முன்இருள்போல் ஏலா அசத்தின்
அருகுஅணையார் சத்து அணைவார் ஆங்கு.

(கொண்டு கூட்டு) சதசத்தாம் மெய்கண்டான் சத்து அருளின் காணின், பாசத்தில் இதமித்தல் இன்றிச் சத்து அணைவார் கதம் மிக்கு எரிகதிரின் முன் இருள்போல ஆங்கு ஏலா அசத்தின் அருகு அணையார்.

இதன் பொருள்:

சதசத்தாம் மெய்கண்டான் சத்து அருளின் காணின் - சத்தைச் சார்ந்த இடத்துச் சத்தாயும், அசத்தைச் சார்ந்த இடத்து அசத்தாயும் நிற்பதனால்,'சதசத்து' எனப்படும் தன்மை தனக்கு உண்டு என்று அறிந்தவன், சத்து ஆகிய திருவருளைச் சார்ந்து அத்திருவருளால் அன்றி ஒன்றையும் காணாதவன் ஆகி அவ்வருளின் ஏவல் வழி நின்று ஐம்புலனைக் காண்பானாயின், **பாசத்தில் இதமித்தல் இன்றி -** அவ்வாறு காணும் நிலையில், பாசம் ஆகிய அந்த ஐம்புலன்களும், அப்புலன்களுக்கு உரிய இன்பத்தைச் செய்வது இல்லை. இன்பத்தைச் செய்யாமைக்குக் காரணம், **சத்து அணைவார் கதம்மிக்கு எரி கதிரின் முன் இருள் போல் ஆங்கு ஏலா அசத்தின் அருகு அணையார் -** சத்தின் முன் அசத்து முனைத்து நில்லாமையே ஆகும். அஃது எதுபோல எனின், மிகவும் ஓங்கி எரிகின்ற சுடரின் முன்னர். அந்தகாரம் ஆகிய இருள் முனைத்து நில்லாதவாறு போல் ஆகும். ஐம்புலன்களும் இன்பத்தைச் செய்யாமையால், சத்து ஆகிய முதல்வனைக் கூடிய முத்தர் சத்தின் முன்னர் முனைத்து நிற்கும் வலிமை இல்லாத அசத்து ஆகிய. அந்த ஐம்புலனில் கட்டுப்படார்.

தெளிவுரை :

இறைவன் திருவருளை அறிந்து அவ்வருள் வழி நிற்பவர், ஐம்புலன்களைக் கூடினாலும் அந்தப் புலன்கள் இன்பம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

செய்யாமையால், அந்தப் புலன்களில் கட்டுப்பட மாட்டார் என்பதை இந்த வெண்பா எடுத்துக்காட்டுகிறது.

'இதம் செய்தல்' என்று இருக்க வேண்டுவது இதமித்தல் என்று நின்றதற்குக் காரணம் இதம் செய்தல் என்பது இன்பம் உண்டாகும்படி பற்றுச் செய்தல் ஆகும்; இதமித்தல் இன்றி என்பது, இன்பம் செய்தல் இல்லை என்னும் பொருளைத் தருவது என்பதானலேயே ஆகும்.

பேரறிவாகிய சத்தும், சடம் ஆகிய அசத்தும் சமம் அல்ல; ஆதலால் சத்து ஆகிய அரன் அடியை அறிந்தவர், அசத்து ஆகிய ஐம்புலனில் சென்றாலும் சென்றது காரணமாக அரன் அடியை விட்டு ஐம்புலனில் கட்டுப்படமாட்டார் என்பதே இந்த வெண்பாவின் கருப்பொருள் ஆகும்.

இந்த அதிகரணத்துடன் வைத்துச் சிந்திக்கத் தக்க சிவஞான சித்தியார்ப் பாடல்கள் :

பாடல் எண்	தொடக்கச் சொற்கள்
306. -	**இந்திரியம் எனைப்பற்றி நின்றே**
307	**சலம் இலனாய் ஞானத்தால் தனை**
308	**நாடுகளில் புக்கு உழன்றும்**
309	**அங்கித்தம்பனை வல்லார்க்கு**

பத்தாம் சூத்திரத்தினால் பெறப்பட்ட தொகைப் பொருள்

1. பயன் இயலின் முதல் சூத்திரம் ஆகிய இந்தச்சூத்திரத்தில் ''பாசநீக்கம் ''கூறப்படுகிறது, அடுத்தசூத்திரத்தில் ''சிவப்பேறு ''கூறப்படும்.

2. பாசநீக்கம் ஏற்படுவதற்கு இரண்டு இன்றியமையாத வழிகள் கூறப்படுகின்றன. ஒன்று ஏகன் ஆகி நிற்றல்; மற்றொன்று இறைபணி நிற்றல்.

3. இறைவனுடன் ஏகனாகி நிற்றலின் பயன் ஆணவமல நீக்கமும் இறையருள் வழி ஆகிய இறை பணி நிற்றலின் பயன் மாயை கன்மங்களின் நீக்கமும் உண்டாகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

4. ஞானக்கண்ணால் இறைவனைக் கண்டாலும், அவனைக் கண்டோம் என்னும் தற்போதம் ஆன்மாவுக்கு இருக்கும். அந்தத் தற்போதமும் அறுதல் வேண்டும். எனவே 'யான்' எனது என்னும் செருக்கு ஆகிய மயக்கம் அறும் பொருட்டு, இறைவனோடு ஏகனாகி நிற்றல் இன்றியமையாதது ஆகும்.

5. யான் எனது என்னும் செருக்கு நீங்கினால் மட்டும் போதாது; இறைவன் திருவருளை இன்றித் தனக்குச் செயல் இல்லை என்று அறிந்து எந்தச் செயலையும் செய்தல் ஆகிய இறைபணியில் நிற்கவும் வேண்டும்; அப்போதுதான் மாயாகன்மங்கள் நீங்கும் ; ஊழ்வினை உயிரைத் தாக்காமல், உடல் ஊழாய்க் கழியும் ; ஆகாமியம் வறுத்த வித்துப் போல் மேற் பிறவியை ஏற்படுத்தாமல் கழியும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பதினோராம் சூத்திரம்

சிவபெருமான் திருவடியைப் பற்றுதல் ஆகிய சிவப்பேறு பெறுதல்

காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன் கழல் செலுமே

காணும் கண்ணுக்குக் காணக் காட்டிக் காணும் உளம் போல்- கண் ஓர் உருவத்தைக் காண வேண்டுமானால், உயிர் காட்டினால் அன்றிக் காணமாட்டாது. உயிர் காட்டக் காணும் தன்மை உடைய கண், உருவத்தைக் காண்பதற்கும் அந்தக் கண்ணோடு, கண் உருவத்தைக் காண்பதற்கும் அந்தக் கண்ணோடு, உயிர் கலந்து நின்று காண வேண்டும். அவ்வாறு கண்ணுக்கு உருவத்தைக் காணும்படி காட்டியும் அந்தக் கண்ணோடு கலந்து நின்று அவ்வுருவத்தைக் கண்டும் வருகின்ற உயிர் போல, **காணும் உள்ளத்தைக் காணக் காட்டிக் காண்டலின்**- அறிவிக்க அறியும் தன்மை உடைய உயிருக்குப் பொருளை அறியும்படி முதல்வன், அந்த உயிரோடு கலந்து நின்று, அறிவித்தும் அறிந்தும் வருவன்; ஆதலால் **அயரா அன்பின் அரன் கழல் செலுமே** - முதல்வன் உயிரோடு கலந்து நிற்கும் அந்த அத்துவித நிலையை மறவாது, உறுதியாகப் பற்றி நின்று அவனுக்கு அன்பு செய்ய வேண்டும். அந்த அன்பினாலேயே அந்த முதல்வன் திருவடி ஆகிய சிவானந்த அனுப்வத்தை உயிர் பெறும். (திருவடியைக் கூடும்)

தெளிவுரை :

இந்தச் சூத்திரத்தின் கருத்துரையில் சிவஞான சுவாமிகள் விரிவான விளக்கம் ஒன்றை அருளிச் செய்திருக்கிறார்கள். அந்த விளக்கத்தில் உள்ள செய்திகள் வருமாறு :

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பத்தாம் சூத்திரத்தில் கூறியவாறு அகத்தில் சிவனோடு ஒற்றுமைப்பட்டு **ஏகன் ஆகி நிற்றலும்,** புறத்தில் பிராரத்தவினை தாக்கும் பொழுது, அந்த வினை தாக்கா வண்ணம் **இறை பணி நிற்றலும்** செய்பவர்க்குத் தனக்கு எனச் செயல் இல்லாமையால், தன்னுடைய அறிவால் அறிதலும், இச்சையால் விரும்புதலும், செயலால் செய்தலும் இல்லையாய் முடியும்.

ஏகன் ஆகி இறைபணி நிற்பது **நின்மல துரிய நிலை** ஆகிய அருள் விளக்கமே ஆகும். அந்தத் துரிய நிலையில் பாசம் நீங்கிய உதவியால், சிவபெருமான் திருவடி ஆகிய **சுகத்தின் ஒளி** மட்டும் விளங்குவதன்றிச் சுகம் விளங்குவது இல்லை.

சிவபெருமான் திருவடியைக் கூடி இன்புறுதல் ஆகிய அந்தப் **பரம சுகம், நின்மல துரியாதீத நிலையிலே**யே விளங்கும் ஆதலால் **பரம சுக விளக்கம்** பத்தாம் சூத்திரத்து இரண்டாம் அதிகரணத்தின் ஏதுவில் கூறியவாறு **அவன் அருளால் அல்லது ஒன்றையும் செய்யாமை ஆகிய இறைபணி நிற்றல்** அளவிலேயே விளங்காது என்பது பெறப்பட்டது. படவே, அந்தப் பரம சுகம் விளங்குதற் பொருட்டு, இறைபணி நின்றதன் மேலும் செய்ய வேண்டியது உண்டு என்பது தானே விளங்கும். அந்தச் செயல் திருவடி அடைதலே ஆகும். ஆகவே திருவடி அடைதலைக் கூறும் இந்தச் சூத்திரம் வேண்டுவது ஆயிற்று.

இருள் நீங்கிய உடன் கண்ணுக்குப் பொருளின் விளக்கம் மட்டும் உண்டாகுமே அன்றிப் பொருளின் அனுபவம் உண்டாவது இல்லை; அதனால் ஆன்மா அந்நிலையில் இன்புறுதலும் இல்லை. அனுபவம் உண்டாகி இன்புறுவதற்குப் பொருளைக் கண் பற்றுதல் வேண்டும்.

இருள் நீக்கமே கண்ணுக்குப் பற்றும் முயற்சியை உண்டு பண்ணாது; உண்டு பண்ணும் ஆயின் இருள் இல்லாத இடத்தில் உள்ள பொருளை, அந்த இடத்தில் உள்ள எல்லாக் கண்களும் பற்றுதல் வேண்டும்; அவ்வாறு பற்றுவது இல்லை; ஆதலால் **இருள் நீக்கம் வேறு, பற்றும் முயற்சி வேறு** பற்றும் முயற்சிக்கு இருள் நீக்கம் உதவி ஆகும். அந்த உதவியைக் கொண்டு, பற்றும் முயற்சியைச் செய்தே பொருளால் ஆகிய இன்பத்தைக் கண் அனுபவிக்க வேண்டும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அவ்வாறே பாச நீக்கத்தினால் **அருள் விளக்கம்** உண்டாதலே அன்றி, **ஆனந்த விளக்கம்** உண்டாதல் இல்லை. **அருள் விளக்கம்** என்பது முதல்வனை இன்றித் தான் தனித்து நிற்பது இல்லை எனவும், முதல்வன் செயலை இன்றித் தனக்குச் செயல் இல்லை எனவும் காண்பது ஆகும். அவ்வாறு காணும் பொழுது, **ஆன்மாவின் அறிவும் செயலும் மட்டுமே தொழிற்படும்; இச்சை தொழிற்படுவது இல்லை. "ஆனந்த விளக்கம்"** என்பது முதல்வன் உடனாய் நின்று அறிவித்தலே அன்றித் தனக்காக அறிந்தும் வருகின்ற பேருபகாரத்தை நினைந்து, அவனிடத்து அன்பு மிகுதிப்பட அந்த அன்பு மிகுதியால், அவனோடு கலந்து அழுந்துதல் ஆகும். அவ்வாறு அழுந்தும்பொழுது, அறிவு இச்சை செயல் மூன்றும் தொழிற்படும்.

அருள் விளக்கத்தில் அறிவு செயலிரண்டும் தொழிற்படுதலும், ஆனந்த விளக்கத்தில் அறிவு இச்சை செயல் மூன்றும் தொழிற்படுதலுமே **அருள் விளக்கத்திற்கும் ஆனந்த விளக்கத்திற்கும் உள்ள வேறுபாடு ஆகும்.** ஆனந்த விளக்கத்திற்கு அருள் விளக்கம் உதவி ஆகும். ஆகவே, அந்த உதவியைக் கொண்டு முதல்வனைப் பற்றியே ஆனந்த விளக்கம் உண்டாகும் என்பது பெறப்படும்.

இனி இந்தச் சூத்திரத்தில் வரும் தெளிவுரையினைக் காண்போம்:-

அயரா அன்பு என்றது, அயராமையால் ஆகிய அன்பு என விரியும், விரியவே, அயராமை காரணம், அன்பு காரியம். இதனைச் சிவஞான சித்தியார் 310 ஆவது பாடலில், **"ஆயும் அறிவு உடையனாய் அன்பு செய்ய"** என்று அருணந்தி சிவம் அருளிச் செய்கின்றார். இதில் ஆயும் அறிவுடைமைஎன்பது அயராமையைக் குறித்து நின்றது ; அது காரணம், அன்பு செய்தல் காரியம் ஆகும்.

ஆன்ம அறிவின் தொழில் ஆகிய **அயராமையும்,** இச்சையின் தொழில் ஆகிய **அன்பும்,** செயலின் தொழில் ஆகிய **அரன் கழல் செல்லுதலும்** முறையே காரண காரியங்களாகும். எவ்வாறு எனின், அயராமை காரணம், அன்பு காரியம். அன்பு காரணம்; அரன் கழல் செல்லுதல் காரியம் ஆகும். ஆகவே,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அயராமையால் அன்பும், அன்பால் அரன் கழல் செல்லுதல் ஆகிய அந்த ஒரு பொருளின் மேல், அறிவு இச்சை செயல் என்னும் மூன்றின் தொழில்களும் **உடனாய் நிகழும்** என்பது பெறப்பட்டது.

உயிர், முதல்வனை இன்றித் தனித்து நில்லாது. எனவே அஃது ஒரு பொருளை அறியும் பொழுது, முதல்வனுடைய சிற்சத்தி, உயிரின் அறிவோடு கலந்து, தன் அறிவு என்றும் உயிரின் அறிவு என்றும் பிரிப்பின்றி உடனாய் நிற்கிறது. முதல்வனும் உயிருடன் அவ்வாறு கலந்து நின்று, உயிருக்கு அறிவித்த ஒரு பொருளை, அந்த ஆன்மா அறிந்தது என்றும், அந்த ஆன்மாவை இடமாகக் கொண்டு நின்ற தான் அறிந்தது என்றும் பிரித்து அறிய வாராது. உயிரின் அறிவும் முதல்வனின் அறிவும், **ஒன்றனை ஒன்று விடாமல் அத்துவிதமாகி இரண்டும் ஒன்றாகவே நிகழும்.** இவ்வாறு கலந்து நின்று காட்டியும் கண்டும் முதல்வன் செய்து வரும் இந்த உபகாரம், பெத்தம் முத்தி இரண்டினும் ஒரு தன்மையாய் நிகழும்.

பத்தாம் சூத்திரத்தில் கூறியவாறு, ஏகன் ஆகி இறைபணி நிற்கும் ஆன்மா, முதல்வன் அத்துவிதமாய்க் கலந்து நின்று, காட்டியும் கண்டும் உபகரித்து வரும் உரிமையை, நோக்கும் ஆயின், நோக்குந்தோறும் நோக்குந்தோறும், அந்த் முதல்வனிடத்துச் செல்லும் இச்சை அடங்காது அதிகப்படும், படவே, **அந்த இச்சையே பேரின்பமாகத் தோன்றும்.** அந்த பேரின்பத்தை ஆன்மா அனுபவித்தல் கூடும். கூடவே, அத்துவிதமாய் நிற்கும் உரிமையை நோக்குவதால் அறிவின் தொழிலும், இச்சை மீதூர்வதால் இச்சையின் தொழிலும் பேரானந்தத்தை அனுபவித்தலால் செயல் ஆகிய கிரியாசத்தியின் தொழிலும் நிகழும் என்பது பெறப்படும். இவ்வாறு ஆன்மாவின் அறிவு இச்சை செயல்கள் மூன்றும், முத்தியில் தொழிற்படினும், தொழிற்பட்டதாகப் பிரித்து அறிய முடியாத நின்மல துரியாதீத நிலையின் இயல்பு கூறப்பட்டது.

சம்பந்தம் இருவகைப்படும். ஒன்று தாதான்மிய சம்பந்தம்; மற்றொன்று அத்துவித சம்பந்தம். **ஒரு பொருள் குணம் என்றும் குணி என்றும் இருதன்மைப்பட்டு நிற்பது, தாதான்மிய சம்பந்தம் ஆகும். (TWO IN ONE) இரு பொருள்கள் பிரிக்க முடியாத கலப்பினால் ஒரு தன்மைப்பட்டு நிற்பது அத்துவித**

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சம்பந்தம் ஆகும். (ONE IN TWO)

முற்றறிவும் முற்றுத்தொழிலும் உடைய சிவமும், சிற்றறிவும் சிறுதொழிலும் உடைய ஆன்மாவும் வேறு வேறு அறிவும் தொழிலும் உடைய பேதப் பொருள்களாய்ப் பிரிக்க முடியாது கலந்து நிற்றல் பற்றிப் பேதப் பொருள்கள் இரண்டும் தம்முள் அபேதம் ஆதற்குரிய சம்பந்த விசேடம், **அத்துவிதம்** ஆகும்.

அக்கினி சூக்குமமாக எங்கும் இருந்தாலும், அது தன் தொழிலைச் செய்ய வேண்டுமானால், விறகு முதலிய யாதானும் ஒன்றில் தங்கி நின்று அல்லது, சுடுதல் முதலிய தன் தொழிலை நடத்தாது. அதுபோல முதல்வனும் எங்கும் வியாபகமாக இருந்தாலும், உயிரின் இடமாக நின்றே எந்தத் தொழிலையும் செய்வன். **உயிர் ஒன்றனை அறிய வேண்டுமாயின் முதல்வன் உடன் நின்று அறிந்தால் அன்றி, அவன் அறிவித்தால் மட்டுமே அறிய முடியாது.** ஆகவே, முதல்வன் தொழிலுக்கு உயிரும், உயிரின் தொழிலுக்கு முதல்வனும் வேண்டப்பட்டு, இருபொருளும் பிரிக்க முடியாதபடி அத்துவிதமாய் நிற்கும் என்பது பெறப்படும்.

இறைவன் உயிர்க்கு அறிவித்தல், காட்டும் உபகாரம் ஆகும். இறைவன் உயிரோடு உடனாய் நின்று அறிதல், காணும் உபகாரம் ஆகும். காட்டும் உபகாரத்தால் இன்னது செய்யலாம் என்று தோன்றும். காணும் உபகாரத்தாலேயே அவ்வாறு செய்தல் கூடும். எனவே இறைவனுடைய காணும் உபகாரத்தை இன்றி, உயிர் ஒன்றையும் காண முடியாது என்பது பெறப்படும். இவ்வுண்மையைத் திருமாளிகைத்தேவர், திருவிசைப்பா கோயில் பதிகப் பாடல்களில்.

''தொண்டனேன் நினையுமா நினையே''.
''விரும்புமா விரும்பே, தொடருமா தொடரே''
''நுகருமா் நுகரே''

என்று இவ்வாறு முத்தி நிலைபற்றி ஓதிய திருவாக்குகளால் அறியலாம் இந்த அத்துவித இயல்பு நோக்கியே காரைக்கால் அம்மையார் அற்புதத் திருவந்தாதி (20) ஆவது செய்யுளில்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

''அறிவானும் தானே அறிவிப்பான்தானே''

என்று ஓதிப் பின்னர்,

''அறிவாய் அறிகின்றான் தானே''

எனவும் ஓதினார். இந்தச் செய்யுளில் முதலாவது ''அறிவான்''என்று கூறியது உயிருக்கு அறிவித்தல் பொருட்டு அறிவிக்க வேண்டியதைக் தனித்து அறிதல் ஆகும். பின்னர் ''அறிவாய் அறிகின்ற'' என்றது, அறிவித்தபொருளது உயிர் அழுந்தி அனுபவிக்கும்படி செய்தல் பொருட்டு, உயிர் அறிவோடு கூடி நின்று இறைவன் அறிதலைக் குறிக்கும்.

இந்த இரண்டனுள் இறைவன் தானாய் நிற்கும் நிலை பற்றிச் செய்யும் உபகாரம், **காட்டும் உபகாரம்** எனப்படும். உயிரோடு கூடி அதுவாய் நிற்கும் நிலை பற்றிச் செய்யும் உபகாரம், **காணும் உபகாரம்** எனப்படும். அத்துவித நிலை இனிது விளங்குவதற்காகவே காணும் உபகாரத்தை முத்தி நிலை கூறும் இந்தச் சூத்திரத்தில் வைத்தார். அஃதாவது, இறைவன் உயிரின் பிறப்பு நிலையிலும் அத்துவிதமாக நிற்கின்றான். ஆயினும், அந்நிலையில் விளங்காமல் இருந்த அத்துவிதநிலை முத்தி நிலையில் நன்கு விளங்கும் என்பதாகும்.

காட்டும் உபகாரம் முன்பு நிகழ்ந்து, அதன் பிறகு காணும் உபகாரம் நிகழும் என்பதை அறிந்து கொள்ளும் பொருட்டே, இந்தச் சூத்திரத்தில் காட்டும் உபகாரமும் உடன் கூறப்பட்டது அன்றி, வேறு இல்லை. ஆதலால் இந்தச் சூத்திரத்திற்குக் காட்டும் உபகாரம் உணர்த்துதல் கருத்து அன்று என்பது கருத்தில் கொள்ளத்தக்கது.

இந்தச் சூத்திரத்தில் இரண்டு அதிகரணங்கள் உள்ளன. அவை வருமாறு.

1. காணும் கண்ணுக்குக் காட்டும் உளம் போல் காண உள்ளத்தைக் கண்டு காட்டல்.

2. அயரா அன்பின் அரன் கழல் செலுமே.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பதினோராம் சூத்திரம் - முதல் அதிகரணம்

மேற்கோள்.

ஈண்டு அவனும் அவற்றது விடயத்தை உணரும் என்றது.

இதன் பொருள் :

இந்த முதல் அதிகரணத்தில் இறைவனும் உயிர்களால் உணரப்பட்ட விடயத்தை , அந்த உயிர்களோடு உடன் நின்று உணருவான்.

தெளிவுரை :

''விடயம்'' என்பது பிறப்பு நிலையில் உலகப் பொருள்களையும், வீடு பேற்று நிலையில் சிவத்தையும் குறிக்கும். இந்த மேற்கோளில் அவனும் என்று வரும் சொல், உயிர்கள் மட்டும் தனித்து விடயத்தை உணர்தலோடு அமையாது, முதல்வனும் அவ்வுயிர்களோடு உடனாய் நின்று விடயத்தை உணர்வான் என்பதை வலியுறுத்தல் பொருட்டு ''உம்'' சேர்த்தார்.

இரண்டாம் சூத்திரத்தில் இறைவன் உயிர்களோடு ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நிற்கும் அத்துவித நிலை **பொதுவாகக்** கூறப்பட்டது. இந்தச் சூத்திரத்தில் அத்துவித நிலை **சிறப்பாகக்** கூறப்படுகிறது. வேறாய் நிற்றல் பற்றி அறிவது ஆகிய காட்டும் உபகாரத்தை, முத்திநிலையில் சிறப்பித்துக் கூறுவது பொருத்தம் அன்று; எனவே, இறைவன் ஆன்மாக்களோடு உடனாய் நின்று அறிவது ஆகிய **காணும் உபகாரம்** இந்தச் சூத்திரத்தில் சிறப்பாகக் கூறப்படுகிறது.

ஏது

இவ்வான்மாக்கள் அவனை இன்றி அமைந்து ஒன்றையும் விடயியா ஆகலான்.

இதன் பொருள் :

விளக்கு ஒளி, கண் ஒளியோடு கலந்து, உருவத்திலும் கலந்தால் மட்டுமே கண் காணும்; அவ்வாறு கலவாத பொழுது, கண் உருவத்தைக் காணமுடியாது. அதுபோல, இறைவன் அறிவித்தால் அறியும் தன்மை உடைய உயிர்களும், இறைவனுடைய அறிவு, **உயிரறிவு ஆகிய தம் அறிவோடு**

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கலந்து, பொருள்களிலும் கலந்து நின்றால் மட்டுமே. உயிரின் அறிவு விளங்கிப் பொருளை அறியும். இறைவன் அறிவு உயிரின் அறிவோடும் பொருளோடும் கலவாத பொழுது, உயிர்கள் தனித்து ஒன்றை அறியவும் மாட்டா; தனித்து நின்று ஒரு பொருளை அனுபவிக்கவும் மாட்டா. ஆகவே .உயர்க்கு அறிவு விளங்குவதற்கு மட்டுமன்று, உயிர் பொருளைப் பற்றுதற்கும் இறைவன் உயிருடன் நின்று அறியவேண்டும் என்பது துணியப்படும். படவே ஈண்டு அவனும் அவற்றது விடயத்தை உணரும் என மேற்கோள் கூறியது.

தெளிவுரை:

இறைவன் **உயிருடன் கலந்து நிற்பதால்,** உயிரின் அறிவு இச்சை செயல்களை விளங்கச் செய்யும் **காட்டும் உபகாரம்** இறைவனிடத்தில் உண்டு என்பது பெறப்படும். இறைவன் **பொருளுடன் கலந்து நிற்பதால்,** உயிரின் அறிவு இச்சை செயல்களைப் பொருளுடன் கலக்குமாறு செய்யும் **காணும் உபகாரமும்,** இறைவனிடத்தில் உண்டு என்பது பெறப்படும்.

கண் ஒளி உயிரின் அறிவுக்கு உவமை; விளக்கு ஒளி இறைவனின் உபகாரங்களுக்கு உவமை.

பரமுத்தியில், ஆன்மா சிவானந்தத்தை அனுபவித்து நிற்கும், அந்த அனுபவம், இறைவனை இன்றி ஆன்மாவுக்குக் கூடாமையால் இறைவனும் முத்தியில் அந்த அனுபவத்தை ஆன்மாவோடு கூடி நின்று அறிவது ஆகிய காணும் உபகாரத்தைச் செய்வான். காட்டும் உபகாரம், அனுபவத்திற்கு முன்பு நிகழக் கூடியது ஆகலின் **அனுபவத்தில் காணும் உபகாரம் ஒன்றே** நிகழும் - என்பது கருத்தில் கொள்ளத் தக்கது.

(1) எடுத்துக்காட்டு வெண்பா

ஐந்தையும் ஒக்க உணராது அவற்றுணர்வது
ஐந்தும்போல் நின்று உணரும் ஆகலான் - ஐந்தினையும்
ஒன்று ஒன்றாப் பார்த்து உணர்வது உள்ளமே எவ்வுலகும்
ஒன்றுஒன்றாப் பார்க்கும் உணர்ந்து.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

(கொண்டு கூட்டு)உள்ளமே அவற்று ஐந்தும்போல் நின்று உணர்வது உணரும் ஆகலான், ஐந்தையும் ஒக்க உணராதுஐந்தினையும் ஒன்று ஒன்றாகப் பார்த்து உணர்வது, ஒன்று எவ்வுலகும் ஒன்றா உணர்ந்து பார்க்கும்.

இதன் பொருள் :

உள்ளமே - மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐந்து பொறிகளும், தத்தம் விடயங்களை உணரும்போது , அந்த அந்தப் பொறி, அந்த அந்த விடயத்தை, அது அதுவாக நின்று உணர்ந்து, பிறிது ஒரு விடயத்தை உணராது. அது போல் ஆன்மாவானது, **அவற்று ஐந்தும் போல் நின்று உணர்வது உணரும் ஆகலான்** - சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐந்து விடயங்களை உணரும் பொழுது, அந்த விடயங்களாய் நிறைந்து நின்று, உணரக்கூடிய ஒரு விடயத்தையே உணரும் தன்மை உடையது; ஆதலால்.

ஐந்தையும் ஒக்க உணராது, ஐந்தினையும் ஒன்று ஒன்றாகப் பார்த்து உணர்வது- அந்த ஐந்து விடயங்களையும் ஒரே சமயத்தில் உணராமல், ஒவ்வொரு விடயங்களாய் உணர்ந்து அனுபவிப்பது ஆகும். **ஒன்று எவ்வுலகும் ஒன்றா உணர்ந்து பார்க்கும்** - அவ்வாறு அனுபவிப்பதால், சார்ந்த பொருளின் தன்மையே, தன் தன்மையாக உடைய அந்த ஆன்மா, சாரப்படும் பொருள் பல ஆதல் பற்றிப் பல தன்மையை அடையும். அந்த ஆன்மாவோடு உடனாய் நின்று அறியும் சிவம், அந்த உயிர் போலப் பல திறப்படுதல் இன்றி, எக்காலத்தும் ஒரே தன்மையாய், எல்லா உயிர்களுடைய எல்லா விடயங்களையும். அவ்வுயிர்களுடன் **கலந்து நிற்கும் தன்மை** பற்றிப் பொது வகையால் உணர்ந்து **உடனாய் நிற்கும் தன்மை** பற்றி அந்த விடயங்களைச் சிறப்பாகவும் அறியும்.

தெளிவுரை:

உயிர் தன்னால் சாரப்பட்ட ஒவ்வொரு விடயத்தையே பற்றிப் பல்வேறுவகைப்பட அறியும் சிவம் எல்லா உயிராலும் சாரப்பட்ட எல்லா விடயங்களையும் ஒரு தன்மையாக அறியும். இஃதே உயிருக்கும் சிவத்துக்கும் அறிதல் பற்றி உள்ள வேற்றுமை ஆகும். ஆகவே, உயிர் பந்தம் அடைவது போலச் சிவம் பந்தம் அடையாது. எனவே உயிர்கள் அறியும் எல்லா

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

விடயங்களையும் இறைவனும் உணர்வான் என்பது பொருத்தம் உடையதாயிற்று. இந்த வெண்பா, இறைவன் காணும் உபகாரத்தைச் செய்வான் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

(3) எடுத்துக்காட்டு வெண்பா

ஏகமாய் நின்றே இணை அடிகள் ஒன்று உணரப்
போகமாய்த் தான்விளைத்த பொற்பினான் - ஏகமாய்
உள்ளத்தின் கண் ஆனான் உள்குவார் உள்கிற்றை
உள்ளத்தால் காணானோ உற்று.

(கொண்டு கூட்டு) ஒன்று ஏகமாய் நின்று இணை அடிகள் உணரவே தான் போகமாய் விளைந்த பொற்பினான் உள்ளத்தின் கண் ஏகமாய் ஆனான், உள்குவார் உள்கிற்றை உள்ளத்தான் உற்றுக் காணானோ.

இதன் பொருள் :

ஒன்று ஏகமாய் நின்று இணை அடிகள் உணரவே தான் போகமாய் விளைந்த பொற்பினான் - முத்தி நிலையில் ஆன்மா, இறைவனைச் சார்ந்த பொழுது, இறைவன் தன்மையே தன் தன்மையாயும், இறைவன் பல்வேறு வகைப்படாமல் ஒரு தன்மை ஆகியவாறு போல ஒரு தன்மையாயும், அவனோடு ஒற்றுமைப்பட்டு நின்று, அவன் திருவடிகளை உணரும். அவ்வாறு உணர்கின்ற ஆன்மாவுக்கு இறைவன் பரபோகமாய், மேலும் மேலும் புதிது புதிதாய்த் தோன்றி வளர்கின்ற அழகினை உடையவன் ஆவன்.

உள்ளத்தின் கண் ஏகமாய் ஆனான் - அவ்வாறு இறைவனை ஆன்மா உணரும் போது இறைவன் அந்த ஆன்மாவின் அறிவில் ஒன்றுபட்டு, அந்த அறிவை விட்டு நீங்காமல் இருப்பான். இவ்வாறு பரபோகமாய்த் தோன்றுதல், **வேறாய் நிற்கும் தன்மை** பற்றி ஆகும். ஆன்ம அறிவில் ஒன்று பட்டு நிற்றல், **ஒன்றாய் நிற்கும் தன்மை** பற்றி ஆகும். ஆகவே, **உள்குவார் உள்கிற்றை உள்ளத்தால் உற்றுக் காணானோ** -

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆன்மாவோடு இறைவன் உடனாய் நிற்கும் தன்மை பற்றிக் கருதுவார் கருதியவாறு விளங்கித் தோன்றுவான், எனவே தன்னை அவ்வாறு கருதுகின்றவருடைய அறிவோடு கூடி நின்று இறைவன் அறிய மாட்டானோ? அறிவான்.

தெளிவுரை:

இந்த வெண்பா முத்தியிலும் இறைவன் ஆன்மாக்களோடு ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நிற்கிறான் என்பதை எடுத்துக் காட்டுகிறது. முத்தியில் இறைவன் ஆன்மாவோடு ஒன்றாய் நிற்பதால் ஆன்மாவின் அறிவோடு கலந்து நிற்கிறான், வேறாய் நிற்பதால் ஆன்மாவுக்குச் சிவபோகமாய் விளங்கித் தோன்றுகிறான், உடனாய் நிற்பதால் அந்தச் சிவபோகத்தை ஆன்மாவின் அறிவோடு உடன் நின்று அறிகிறான்.

''உள்குவார் உள்கிற்றை'' என்னும் தொடர் உயிர்களின் பிறப்பு நிலையில் கருதப்படும் உலகப்பொருள்களையும், முத்தி நிலையில் கருதப்படும் சிவப்பொருளையும் சிவபெருமான் உடன் நின்று அறிகிறான் என்பதைத் தெளிவுறுத்துகிறது. இவ்வுண்மையைத் திருநாவுக்கரசு சுவாமிகள்,

''உள்குவார் உள்கிற்று எல்லாம் உடன் இருந்து அறிதி''

என்று அருளிச் செய்வார் ஆயினார்.

இறைவன் கருதுவார் கருதிய பொருளாய் விளங்குவான், எனவே முத்தியில் ஆன்மாக்கள் அவனை அறியும் பொழுது, அவற்றிற்கு அறியப்படும் பொருளாகிறான், அந்நிலையிலும் அவனாலேயே ஆன்மாக்கள் உடன் நின்று, இறைவன் உணரப்படுவான்.

ஐம்பொறிகள் உயிரின் அனுபவத்தின் பொருட்டு, அவ்வுயிருடன் நின்று விடயங்களை உணர்கின்றன. அவ்வாறே இறைவன் ஆன்மாவின் அனுபவத்தின் பொருட்டுப்ர போகமாய் விளங்கும் தன்னை, ஆன்மாவுடன் நின்று உணர்கிறான்.

இந்த வெண்பாவில் ''போகமாய் விளைந்த பொற்பினான்'' என்று கூறியிருப்பதன் கருத்து வருமாறு:

உயிர்களின் பிறப்பு நிலையில் **விடயபோக** மாகவும், முத்திநிலையில் **சிவபோக** மாகவும் இறைவன் விளங்குகிறான். பிறப்பு நிலையிலும் இறைவன் உடனாய் நின்று விடய

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

போகத்தைக் கூட்டுவித்தால் அன்றி, உயிர் உலக போகத்தைத் துய்க்க முடியாது. முத்தி நிலையிலும் சிவபோகத்தை அவன் உடனாய் நின்று கூட்டுவித்தால் அன்றி, இறை இன்பத்தை அனுபவிக்க முடியாது. இவ்வளவே அன்றி இறைவனே உயிரின் வேறுபட்டுப் போகமாய்த் தோன்றுகிறான் என்னும் கருத்துப்பற்றி அன்று என்பது நினைவில் நிறுத்தற்குரியது.

ஏகான்மவாதிகள், இறைவனே தன் ஆனந்தத்தை அனுபவிப்பவன், உயிர் என்று ஒன்று இல்லை என்று கூறுவார்கள். **அழுந்தி அறிதலே, அனுபவித்தல்** என்னும் சொற்குப் பொருள் ஆகலின், அந்த இயல்பு ஆன்மாவுக்கே அன்றி இறைவனுக்கு இல்லை. **இறைவன் இன்ப வடிவினன் ஆகலானும், தானே தன்னைப் புதிதாக அனுபவித்தல் வேண்டாமையானும், இறைவன் செய்யும் செயல் எல்லாம் தன் பொருட்டு அன்றி ஆன்மாவின் பொருட்டே ஆகலானும், ஏகான்மவாதிகள் கூற்று பொருந்தாது** என்பது கருத்தில் இருத்திக் கொள்வதற்கு உரியது.

பெத்தம், முத்தி இரண்டிலும் ஆன்மா அறியும் பொருளை, இறைவன் உடன் நின்று அறிவன், ஆன்மா இச்சிக்கும் பொருளை, இறைவன் உடன் நின்று இச்சிப்பான், ஆன்மா செய்யும் செயலை இறைவன் உடன் நின்று செய்வன் என்பது **சைவசித்தாந்தக் கொள்கை.**

அவ்வாறாயின் தீமை தருவதற்கு ஏதுவாக ஆன்மாவின் அறிவு இச்சை செயல்கள் நிகழும் காலத்து, அதில் செல்ல ஒட்டாமல், ஆன்மாவைத் தடுக்காமல், அதற்கு உதவி புரிவது, இறைவனின் கருணைக்கும் ஆற்றலுக்கும் குறைவு ஆகாதா என்னும் தடை எழும். அத்தடைக்கான விடை வருமாறு.

அறிவு இச்சை செயல்கள் மூன்றும் ஆன்மாவின் குணம் குணம் ஆவது, இயற்கையாய்ப் பொருள் உள்ள பொழுதே உள்ளது ஆகும். ஆன்மாவின் குணம் ஆகிய அம்மூன்றும் ஆன்மா உள்ள பொழுதே உள்ளன ஆகும் அக்குணம், யாதானும் ஒரு துணையைக் கொண்டே நிகழும் தன்மையும் அப்பொழுதே உள்ளது. இஃது எது போல எனின், கண்ணின் இடத்து இயல்பாய் உள்ள ஒளி சூரியன் முதலியவற்றின் ஒளியின் துணையைக் கொண்டு விளங்குமாறு போல் ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உயிரினிடத்து உள்ள அறிவு இச்சை செயல் ஆகிய குணம் மூன்றும் நிகழ்வதற்கு வேண்டப்படும் துணையும், **புறத்துணை** **அகத்துணை** என இருவகைப்படும். அவற்றுள் புறத்துணை ஆவது, தூல சூக்கும உடம்பு முதலியன ஆகும். அகத்துணை ஆவது, இறைவனுடைய அறிவு இச்சை செயல்கள் ஆகும். புறத்துணை ஆகிய தனு கரணம் முதலியன சடம் ஆகலின் தாமே வந்து உயிரைக் கூடமாட்டா. உயிர் அறிவுடைப் பொருளே ஆயினும், அவ்வறிவுக்குத் தானே விளங்கும் தன்மை இல்லை, எனவே, உயிரும் தனு கரண புவன போகங்களைத் தானே எடுத்துக் கொள்ள மாட்டாது. ஆதலால் இறைவன்தான் உயிருக்குத் தனு கரணாதிகளைத் தரல் வேண்டும்.

இறைவனும் உயிர்களுக்குத் தனுகரணாதிகளைத் தன் விருப்பப்படி தருவன் என்று கூறினால், எல்லா உயிர்களுக்கும் ஒரே தன்மையான தனுகரணாதிகளைத் தரல் வேண்டும். அவ்வாறின்றி, உயிர்தோறும் வேறு வேறு தனுகரணாதிகள் காணப்படுகின்றமையால் இறைவன் அவ்வாறு வெவ்வேறான தனுகரணாதிகளைத் தருவதற்குக் காரணம் இருக்க வேண்டும். **அந்தக்காரணம், உயிர்களிடத்தில் குணமாக உள்ள இச்சையின் வியாபாரபேதம் ஆகிய விருப்பு வெறுப்பே ஆகும்.**

அந்த விருப்பு வெறுப்பும் அகத்துத் தன்னைப் பற்றி நிகழ்தலும், புறத்துத் தனுகரணாதிகளைப் பற்றி நிகழ்தலும் என இருவகைப்படும், **அகத்து நிகழ்தல் மூலகன்மம்** எனப்படும், **புறத்து நிகழ்தல் இருவினை ஆகிய ஆகாமியம்** எனப்படும், அகத்து நிகழும் விருப்பு வெறுப்பு ஆவது, துன்பத்திற்கு ஆற்றாது, இன்பத்தை விரும்புதலே அன்றித், துன்ப இன்பங்களைப் பகுத்து அறிந்து வெறுத்தலும் விரும்புதலும் செய்தல் இல்லை இந்நிலையில் தனுகரணாதிகள் உயிர்களுக்குக் கூட்டப்பெறாத நிலை ஆகும். இந்நிலைதான், துன்பத்தைச் செய்யும் ஆணவமலத்தோடு கூடிய கேவலம் எனப்படும். **இந்தக் கேவல நிலையில் மலத்தின் சேட்டைக்கு ஆற்றாது, உயிர் வருந்தும் பொழுதும், இறைவன் உடன் நிற்கிறான்,** நின்றாலும், மலத்தை நீக்கித் திருவடியை அப்பொழுதே உயிர்க்கும் கொடுக்கவில்லை. ஏன்?

அவ்வாறு கொடுக்காமைக்குக் காரணம், அந்தக்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கேவலநிலையில், உயிரிடமிருந்து ஆணவமலத்தை நீக்கினாலும், உயிரின் இடத்து உள்ள ஆணவமலப் பற்று அறாது. பற்று அறாத பொழுது, நீக்கிய மலத்தை, ஆன்மா மீண்டும் பற்றக்கூடும். அந்தப்பற்று, முற்றும் நீங்க வேண்டுமாயின் ஆன்மா இறைவனை இடைவிடாது பற்றல் வேண்டும். அவ்வாறு இறைவனைப் பற்றும் தன்மை கேவலத்தில் உயிருக்கு இல்லாமையால் அந்நிலையில் மலத்தை இறைவன் நீக்கவில்லை.

இறைவனைப் பற்றும் தன்மையையும், அந்தக் கேவல நிலையிலேயே உயிருக்கு இறைவன் கொடுக்கக் கூடாதோ என்னும் தடை எழலாம். இயல்பாகவே உயிர் மலத்தைப் பற்றாது இருக்கும் படி செய்யக் கூடாதோ என்று கேட்டால், என்ன விடை தரக்கூடுமோ, அந்த விடையே இந்தத் தடைக்கும் பொருந்தும். எனவே, உயிர் மலத்தைப் பற்றுதல் இயற்கை ஆயினவாறு போல இறைவனைப் பற்றுதலும் மலப்பற்று அற்றபொழுது, உண்டாகுதல் இயற்கையே ஆகும்.

மலப்பற்று அறுதற்கு இறைவன் தனுகரணாதிகளைத் தந்ததும் அன்றி, அவற்றைக் கொண்டு செய்ய வேண்டுவன இவை, செய்ய வேண்டாதன இவை என ஆன்மா அறிந்து கொள்ளுதல் பொருட்டு, வேதாகமங்களைத் தந்தருளினன். இவ்வாறு தனு கரணாதிகளையும் வேத ஆகமங்களையும், புறத்துணையாக இறைவன் தந்து அவற்றைப் பொருந்தி ஆன்மாவின் அறிவிச்சைசெயல்கள் தொழிற்படுதற்கு. அவற்றுடன் பிரிப்பின்றி அகத்துணையாகவும் இருக்கிறான். இந்த அகத்துணையே உலக வழக்கில் உளச்சான்று (Conscience) எனப்படுகிறது.

துணையைப் பயன்படுத்தும் தகுதி, உயிருக்குச சொந்தம் ஆகலின், தீய நெறியில் தனுகரணாதிகளைப் பயன்படுத்தினால, அஃது உயிரின் குற்றமே அன்றி இறைவன் கருணையின் குற்றம் ஆகாது என்பது பெறப்படும். படவே, தீய நெறிக்குத் தண்டத்தைத் தந்து தண்டத்துக்கு ஆற்றாது வருந்தும் பொழுது நன்னெறி காட்டித் திருவடியைத் தருகிறான்.

இவ்வாறு செய்தலினால் இறைவன் ஆற்றலுக்கு எந்தக் குறைவும் இல்லாமை பெறப்படும். எல்லாம் வல்ல இறைவன்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நம்மைத் தீயநெறியில் செல்ல விடாமல் தடுத்தால் என்ன என்று சிலர் கேட்கிறார்கள். எல்லாம் வல்ல தன்மை என்பதற்கு என்ன பொருள் என்பதை அறியாமலே அவர்கள் இவ்வாறு கேட்டிகிறார்கள். செய்ய வேண்டுவதைச் செய்து முடிப்பதுதான் எல்லாம் வல்ல தன்மை என்பதற்குப் பொருள்ஆகுமே அன்றி, செய்ய வேண்டாததைச் செய்து முடிப்பது, அதற்குப் பொருள் ஆகாது. துணையைப் பயன்படுத்தும் தகுதி உயிர்க்கு சுதந்திரம் ஆகும். இக்கருத்துப் பற்றியே திருவள்ளுவர்.

தனக்கு உவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது

என்று அருளிச் செய்தார். இந்தக் குறளில் ''சேர்ந்தார்'' என்று உயிரின் தன்வினையாகக் கூறியது இங்கே கவனிக்கத் தக்கது.

உயிருக்குத் துணை இன்றி அறியும் தன்மை இல்லை; ஆயினும் துணையைப் பயன்படுத்தும் உரிமை உண்டு. இது துணையைக் கொண்டு காணும் தன்மை கண்ணுக்கு சுதந்திரமாய் இருத்தல் போல் ஆகும். இக்கருத்துப்பற்றியே,

''நான் பாவியன் ஆனால் உன்னை நல்காய் எனலாமே''

என்று மணிவாசகர் அருளிச் செய்தார் (ஆனால் -ஆதலினால்) இவ்வுண்மையைத் திருமந்திரத்தில்.

''நெறியைப் படைத்தான், நெருஞ்சில் படைத்தான்,
நெறியில் வழுவின், நெருஞ்சின்முள் பாயும்,
நெறியில் வழுவாது இயங்க வல்லார்க்கு
நெறியில் நெருஞ்சின் முள்பாய இலாவே.''

என்று திருமூலர் அருளிச் செய்துள்ளார். இவ்வுண்மையை, ஓர் அரசன் ஆணையைப் பெற்று அதிகாரத்தை நடாத்தும் ஒருவன் சட்டத்திற்கு வழுவாது செய்யின் நன்மை பெறுவதிலும், வழுவினால் தண்டம் பெறுவதிலும் வைத்து அறிந்து கொள்ளலாம்.

அவ்வாறாயின் உயிரின் வினைப்பயன்களை இறைவன் ஏன்று கொள்வான் என்று, பத்தாம் சூத்திரத்து இரண்டாம் அதிகரணத்தின் முதல் வெண்பாவில் கூறப்பட்டுள்ளதே அஃது

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எப்படி பொருந்தும் என்னும் தடை எழும். அத்தடைக்கு விடை வருமாறு.

பிறப்பு நிலையில் (பெத்தத்தில்) இறைவன் உயிராக நின்று அறிகிறான் முத்தியில் உயிர் இறைவனாக நின்று, அறிகின்றது. ஆதலால் இறைவன் உயிராக நின்ற பெத்தத்தில், வினைப்பயன்கள் உயிருக்கு ஆயின. உயிர் இறைவனாக நிற்கும் முத்தியில், வினைப் பயன்கள் இறைவனுக்கு ஆயின. இதற்குக் காரணம் முத்தியில் உயிர் இறைவனை அனுபவிக்கின்ற நிலையில், உயிர்க்குச் சிவானுபவம் நிகழ்கின்றமையால் வினைப்பயன்கள் உயிர்களை விட்டு நீங்கி விடுகின்றமையாலேயே ஆகும்.

உயிர் இறைவனாகவே நிற்குமாயின் அந்த உயிர் செய்யும் வினை எதுவாக இருப்பினும், அவ்வினை உயிரைக் கட்டுப்படுத்தாது. இவ்வுண்மையைத் தெளிவாக அறிந்த சான்றோர்கள், தாம் ஒன்றனைப் பிறர்க்குக் கொடுக்கும் போதும், பிறரிடமிருந்து ஒன்றனைப் பெறும் பொழுதும், ''சிவார்ப்பணம் ''என்று கருதிச் செயல்படுகிறார்கள். ''கருதிச் செயல்படுவர்'' என்று கூறியதால், வார்த்தை அளவில் அவ்வாறு சொல்லிக் கொண்டு, தானே கொடுத்ததாகவும் தனக்கே தந்ததாகவும் கருதிச் செயல்பட்டால், அது குற்றமே ஆகும்; ஆகவே அவ்வாறு போலியாகச் செயல்படுபவர்கள் வினைப்பயனை அனுபவித்தே ஆக வேண்டும்.

எல்லாம் சிவன் செயலாகக் கொண்டு வாழ்பவருக்குச் சிவானுபவம் விளையும், அவர்களுக்கு வினைப்பயன் தாக்காமல் எல்லாம் சிவானந்தமாகவே விளங்கும். இவ்வுண்மையைத் தெளிவுறுத்தும் பொருட்டே, இந்நூல் பத்தாம் சூத்திரத்து இரண்டாவது அதிகரணத்தில்,

''எத்தனுவில் நின்றும் இறை பணியார்க்கு இல்லை
வினை - முற்செய் வினையும் தருவான் முன்''

என்று முதல் வெண்பாவில் மெய்கண்ட சிவம் அருளிச்செய்வாராயினார். இக்கருத்தை வலியுறுத்தும் வகையில் கீழ்க்காணும் அனுபவம் உடைய தேசிகர்களின் அருள் வாக்குகளும் இங்குச் சிந்திப்பதற்கு உரியன:

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

''பெற்ற சிற்றின்பமே பேரின்பமாக'' - திருவுந்தியார் 33

''உடம்புடைய யோகிகள் தாம் உற்ற சிற்றின்பம்
அடங்கத் தம் பேரின்பத்து ஆக்கி'' - களிறு 26

''காணும் கரணங்கள் எல்லாம் பேரின்பம்
எனப் பேணும் அடியார்'' - திருவாசகம்

''சார்ந்தனன் சார்த்தனன், சங்கிலி மென்தோள் தட முலை
ஆர்ந்தனன், ஆர்ந்தனன், ஆமாத்தூர் ஐயன் அருள் அதே''
- சுந்தரர் தேவாரம்.

இந்த அதிகரணத்தோடு வைத்துச் சிந்திக்கத்தக்க சிவஞான சித்தியார்ப் பாடல்கள்

பாடல் எண் :	தொடக்கச் சொற்கள்
310	காயம் ஒழிந்தால் சுத்தனாகி
311	பரஞானத்தால் பரத்தை
316	எவ்விடத்தும் இறையடியை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பதினோராம் சூத்திரம் - இரண்டாம் அதிகரணம் மேற்கோள்

இனிப் பத்தியினான் மறவாது ஏத்த

அவனது சீபாதத்தை அணையும் என்றது.

இதன் பொருள்:

உயிரோடு கலந்து நின்று , அறிவித்தும் அறிந்தும் வருகின்ற இறைவனுடைய அத்துவித நிலையை மறவாமல், அவனை உறுதியாகப் பற்றிச் செய்யும் அன்பினால், இறைவனை இன்றித் தனக்குத் தனிச்செயல் இல்லை என அறிந்து, எல்லாம் இறைவன் செயலே என்று, அவன் அருள் வழியில் நின்றால் அந்த இறைவன் திருவடி ஆகிய் சிவானந்த அனுபூதியை ஆன்மா கூடும் என்பது ஆகும்,

தெளிவுரை:

இந்த இரண்டாம் அதிகரணத்தில் 'நிட்டையின் இயல்பு' இஃது என்பது எடுத்துக் கூறப்படுகிறது. 'நிட்டை கூடுதல்' என்பது அத்துவித நிலையை மறவாது பத்தி செய்வதால், இறைவன் திருவடியைக் கூடுதல் ஆகும். நி - நிச்சயம்; ஸ்தா - நிற்றல்; நிஷ்டை - நிட்டை - கேட்டுச் சிந்தித்துத் துணிந்த பொருள் ஆகிய இறைவன் திருவடியுடன் பிரிவின்றி உறுதியாக நிற்றல்; அந்நிலையே திருவடியைக் கூடுதல் ஆகும்.

இந்தப் பதினோராம் சூத்திரம் பரமுத்தி நிலை குறித்தே பேசுகின்றது. பரமுத்தியில் ஆன்மாவின் இச்சை நிகழாத இடத்துச்சிவபோகம் அனுபவம் ஆதல் இல்லை; இச்சையோ பத்தி இன்றி நிகழாது. ஆகவே, பரமுத்தியில்பத்தி உண்டு என்பது நன்கு விளங்கும். இரண்டறக் கலத்தல் ஆகிய பரமுத்தியில் பத்தி உண்டு என்பதை, ''ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பமே, என்னுடைய அன்பே'' என்னும் திருவாசகம் வலியுறுத்தும்.

''பரமுத்தி'' என்பது பாசத்தை அறவே விட்டுப் பரமாய் நிற்றல் ஆகும். பரம்பொருளோ, தத்துவம் கடந்த இன்பப் பொருள் ஆகும். அதனை ''ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பமே'' என்றார். அப்பொருள் தத்துவம் கடந்து நின்றாலும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உயிரைக் கடந்து நிற்பது இல்லை; ஆயினும், தன்னோடு பிரிப்பின்றி நிற்கும் அப்பரம்பொருளை, அன்பினால் அன்றி உயிர் அறிவது இல்லை; எனவே அறியும் அனுபவத்தில், அன்பும் பிரிப்பின்றி உண்டு என்பதை அறிவித்தற் பொருட்டு, ''என்னுடைய அன்பே'' என்று அருளிச் செய்தார்.

ஏது

அவன் அந்நியம்இன்றிச் செய்வோர் செய்திப்பயன் விளைத்து நிற்றலான்.

இதன் பொருள்:

உயிர்களால் உணரப்படும் பொருள்களை உடன் நின்று உணரும் இறைவன், உயிரின் வேறு நில்லாது, உயிர் செய்வனவற்றை அறிந்து, அச்செயல்கள் இடையீடு இன்றி நிகழுமாயின் செய்த அப்பொழுதே பயனைக் கூட்டுவிப்பான். அச்செயல்கள் விட்டு விட்டு நிகழும் ஆயின், பிற்காலத்தில் பயனைக் கூட்டுவிப்பான்; ஆயினும் அவன் எக்காலத்தும் உயிர்களோடு உடனாயே நிற்பன். ஆதலால், '' இனிப் பத்தியினால் மறவாது ஏத்தவே, அம் முதல்வனது சீபாதத்தை அணையும் என்று மேற்கோள் கூறியது.

தெளிவுரை :

''செய்த அப்பொழுதே பயனைக் கூட்டுவிப்பான்'' என்பதைக்,

''குற்று ஒருவரைக் கூறை கொண்டு
கொலைகள் சூழ்ந்த களவெலாம்
செற்று ஒருவரைச் செய்த தீமைகள்
இம்மையே வரும் திண்ணமே'' *(7-35-4)*

என்னும் சுந்தரர் பெருமான் அருள்வாக்கால் அறியலாம். ''மறவாமை'' என்பது இடையீடு இன்மையைக் குறிக்கும். அதுவே பரமுத்தியும் ஆகும். ஆகவே, பத்தியினால் மறவாது ஏத்தவே திருவடி அடைதல் கூடும் என்று கூறப்பட்டது.

''பரமுத்தி'' என்பது உடம்பு நீங்கியபின் உண்டாகும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

என்பர் சிலர்; அது பொருந்தாது. சாதனம் முற்றுப் பெற்ற பொழுதே பரமுத்தி உண்டாகும், உடம்பு நீங்கிய பிறகு, முன்பு உண்டான பரமுத்தி நிலைத்தலே அன்றி, புதியதாக உண்டாவது இல்லை.

(3) எடுத்துக்காட்டு வெண்பா

அருக்கன் நேர் நிற்பினும் அல்இருளே காணார்க்கு
இருட்கண்ணே பாசத்தார்க்கு ஈசன் - அருட்கண்ணால்
பாசத்தை நீக்கும் பகல் அலர்த்தும் தாமரைபோல்
நேசத்தின் தன் உணர்ந்தோர் நேர்.

(கொண்டு கூட்டு) அருக்கன் நேர் நிற்பினும் காணார்க்கு அல் இருளே, ஈசன் பாசத்தார்க்கு இருட் கண்ணே, பகல் (நீக்கி) அலர்த்தும் தாமரை போல், நேசத்தில் தன் உணர்ந்தார் நேர் அருட் கண்ணால் பாசத்தை நீக்கி அலர்த்தும்.

இதன் பொருள்:

அருக்கன் நேர் நிற்பினும் காணார்க்கு அல் இருளே - மாசு காரணமாக ஒளி மழுங்கிய கண்ணுக்கும், மாசு இன்மையால் ஒளி மழுங்காத கண்ணுக்கும், சூரியன் சமமாய் நிற்கிறான்; என்றாலும், அச்சூரியன் ஒளி மழுங்காத கண்ணுக்கு விளங்கித் தோன்றுவது போல, ஒளி மழுங்கிய கண்ணுக்குத் தோன்றுவதுஇல்லை. அது மட்டுமா? ஒளி மழுங்கிய கண்ணுக்கு இரவில்உள்ள இருளாகவே தோன்றுவன்; அது போலவே, **ஈசன் பாசத்தார்க்கு இருட்கண்ணே** - உடம்பு உடைய எல்லோரிடத்தும் சமமாக இறைவன் கலந்து நின்றாலும், மலம் நீங்கிய முத்தர்க்கு விளங்கித் தோன்றி, மலம் உடைய பெத்தர்க்கு அம்மலத்தால் உண்டாகும் அறியாமையாகவே, இறைவன் தோன்றுவன். அப்படியானால், மலம் உடைய பெத்தருக்கும், மலம் நீங்கிய சீவன் முத்தருக்கும் ஏனைய பெத்தரைப் போலப், பாசம் உடையவர் என்றே சொல்லவேண்டும்; அஃதன்றி வேற்றுமை சொல்லக்கூடாது என்று கூறினால், **பகல் (நீக்கி) அலர்த்தும் தாமரை போல்** -

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மலரும் பக்குவம் இல்லாத தாமரைகளும், மலரும் பக்குவம் உடைய தாமரைகளும், சமமாய் ஓர் இடத்தில் நின்றாலும், சூரியன் பக்குவம் உடைய தாமரையை மட்டும், கூம்புதலை நீக்கி விரியச் செய்து, பக்குவம் இல்லாத தாமரைகளை விரியச் செய்வதில்லை. அதுபோல நேசத்தில் தன், உணர்ந்தார் நேர் **அருட்கண்ணால் பாசத்தை (நீக்கி) அலர்த்தும்** - முத்தரும் பெத்தரும் உடம்பொடு கூடி நின்றாலும், பத்தியினால் இடையீடு இன்றி, இறைவனை அறியும் பக்குவம் உடைய முத்தருக்கு, இறைவன் தன் திருவருட் பார்வையால், பாசத்தை நீக்கி அறிவை வியாபகமாய் விளங்கச் செய்து, பக்குவம் இல்லாத பெத்தருக்குப் பாச நீக்கத்தையும் அறிவு விளக்கத்தையும் செய்ய மாட்டான். ஆதலால், பெத்தரைப்போல் முத்தருக்கு உடம்பு உள்ளபோதிலும், அந்த முத்தர் பாசம்உடையவர் ஆகார்.

தெளிவுரை :

சூரியன், ஒளி உடைய கண்ணுக்கு ஒளியாயும் ஒளி மழுங்கிய கண்ணுக்கு இருளாயும் தோன்றுவன். அதுபோல, இறைவன் முத்தருக்கு அறிவு வடிவமாயும் பெத்தருக்கு அறியாமை வடிவமாயும் தோன்றுவன். ஆதலால், முத்தர் உடலை உடையவராக இருந்தாலும், பெத்தரைப்போல, அவர்கள் பாசம் உடையவர் ஆகார் என்பது பெறப்படும்.

சூரியன் இறைவனுக்கு உவமை; பக்குவம் உடைய தாமரை முத்தருக்கு உவமை; பக்குவம் இல்லாத தாமரை பெத்தருக்கு உவமை.

(4) எடுத்துக்காட்டு வெண்பா

மன்னும் இருளை மதிதுரந்தவாறு அன்பின்
மன்னும் அரனே மலம்துரந்து.- தன்னின்
வலித்து இரும்பைக் காந்தம் வசம்செய்வான் செய்தல்
சலிப்பில் விகாரி அலன் தான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

(கொண்டு கூட்டு) அன்பின் மன்னும் அரனே மன்னும் இருளை மதி துரந்தவாறு மலம் துரந்து, காந்தம் இரும்பைத் தன்னின் வலித்து வசம் செய்வான் செய்தல் சலிப்பு இல், விகாரி அலன் தான்.

இதன் பொருள் :

அன்பின் மன்னும் அரனே மன்னும் இருளை மதி துரந்தவாறு மலம் துரந்து - இறைவன், தன்னைப்போல் உயிரை ஆக்கிக் கொள்ள வேண்டும் என்ற கருணை மிகுதியினால்அநாதியே மலத்துடன் கூடிய உயிரோடு, இறைவனும் அநாதியே நிலைபெற்று விளங்குகிறான். கண்ணில் இருக்கும் இருளை, வளர்பிறைச் சந்திரன் நாள்தோறும் சிறிது சிறிதாக நீக்கிப் பௌர்ணமியில் அறவே ஓட்டுகிறான் அதுபோல உயிரினிடத்தில் உள்ள மலசத்தியைக் கருணைநிதி ஆகிய சிவபெருமான், உயிரினிடத்து உண்டாகும் பக்குவத்திற்கு ஏற்ப, அந்தந்தப் பருவம் தோறும் சிறிது சிறிதாகப், படிமுறையில் நீக்கி முதிர்ந்த பக்குவத்தில் அறவே நீக்குவன்.

காந்தம் இரும்பைத் தன்னின் வலித்து வசம் செய்வான் செய்தல் சலிப்பு இல் - காந்தக்கல் தனது முன்நிலையில் இரும்பைத் தன்னிடத்து இழுத்து, தன் வசமாகச் செய்துவரும் நிலையில், காந்தத்திற்குச் சலிப்பு ஏற்படுவது இல்லை; அதுபோலக் கருணை ஆகிய அருளினால், மலத்தைச் சிறிது சிறிதாக நீக்கி, நீங்குந்தோறும் நீங்குகின்ற தனது திருவருட்சத்தியைச், சிறிது சிறிதாகப் பதித்து, மலம் அறவே நீங்கிய பொழுது. தனது சத்தி முழுவதையும் பதியச் செய்து, உயிரைத் தன்னிடத்து இழுத்துத் தன் வசமாகச் செய்து வரும் செய்கையினால், இறைவனுக்கு ஒரு பொழுதும் சலிப்பு இல்லை. **விகாரி அலன் தான்** அவ்வாறு சலிப்பு இன்றிச் செய்வதால், இறைவன் வேறுபடவும் மாட்டான்.

தெளிவுரை :

'விகாரம்' என்பது, வேறுபடும் தன்மை ஆகும். காந்தம் இரும்பை இழுத்துக் கொள்வதால், காந்தத்தின் தன்மை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வேறுபடுவது இல்லை. அவ்வாறே இறைவன் உயிரை இழுத்துக் கொள்வதால், இறைவனின் தன்மை வேறுபடுவது இல்லை.

இரும்பு, காந்தத்தின் வேறாய் நிற்பதால் காந்தம் இரும்பை இழுத்தல் கூடும். உயிரும் இறைவனும் எக்காலத்தும் பிரிப்பின்றி நிற்பதால், உயிரை இறைவன் இழுத்துக் கொள்வான் என்பது எப்படிப் பொருந்தும்? இத்தடைக்கு விடை வருமாறு:

இறைவன் உயிரோடு பிரிப்பின்றி நிற்கிறான் என்பதை உயிர் அறியாமல் இருக்கிறது. உயிரைவிட்டு அந்த அறியாமையை நீக்கி, உயிரை அறியச் செய்தலே, இழுத்துக்கொள்ளுதல் என்பதற்குப் பொருள் ஆகும். இஃது எதுபோல எனின், 'மனதைத் தன் வசமாக இழுத்துக் கொண்டான்' என்று கூறும் பொழுது, மனம் புறத்தில் செல்வதைத் தடுத்து நிறுத்தித் , தன் ஆணைவழிநிற்கச் செய்வதைக் குறிக்குமாறு போல ஆகும். 'ஆணைவழி நிற்றல்' என்பது, அடங்கி நிற்றல்ஆகும்; ஆகவே காந்தத்திற்கு இரும்பு அடங்கி நிற்பது போல, இறைவனுக்கு உயிர் அடங்கி நிற்பதே, இறைவன் உயிரை இழுத்துக் கொள்ளுதல் என்பதற்குப் பொருள் ஆகும்.

பக்குவத்திற்கு ஏற்பப் படிமுறையில் மலத்தை நீக்குவன் என்று கூறியதனால் படிமுறை ஆகிய சத்திநிபாதமும் சிவபுண்ணியமும் நால்வேறு வகைப்பட்டு, அவை ஒவ்வொன்றும் நான்கு நான்காகப் பதினாறு வகைப்பட்டு, அந்தப்பதினாறும் ஒவ்வொன்றும் பல்வேறு வகைப்பட்டு பிரிந்தன ஆகும். அவற்றின் விரிவை முன்பு எட்டாம் சூத்திரத்தில்கூறியிருப்பதை இங்கு நினைவில் கொள்வது பயன் உடையது ஆகும்.

(5) எடுத்துக்காட்டு வெண்பா

நசித்து ஒன்றின் உள்ளம் நசித்தலால் ஒன்றா
நசித்து இலதேல் ஒன்று ஆவது இல்லை - நசித்து மலம்
அப்பு அணைந்த உப்பில் உளம்அணைந்து சேடமாம்
கப்பு இன்றாம் ஈசன் கழல்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

(கொண்டு கூட்டு) நசித்து ஒன்றின் உள்ளம் நசித்தலால் ஒன்றா நசித்திலலேல் ஒன்று ஆவது இல்லை; அப்பு அணைந்த உப்பில் மலம் நசித்து உளம் ஈசன்கழல் அணைந்து சேடம் ஆம்; கப்பு இன்று ஆம்.

இதன் பொருள் :

நசித்து ஒன்றின் உள்ளம் நசித்தலால் ஒன்றா நசித்து இல்லதேல் ஒன்று ஆவது இல்லை - சிவபெருமான் திருவடியை ஆன்மா கூடி ஒன்றாகும் காலத்தில், ஆன்மா கெட்டு ஒன்றாகுமோ கெடாது ஒன்றாகுமோ எனக் கேட்டபொழுது, கெட்டுக்கூடி ஒன்றாகும் என்ற கூறினால், ஆன்மா கெட்டபொழுது, கூடும் பொருளே இல்லை ஆதலால் ஒன்று ஆதலும் இல்லை; கெடாது கூடி ஒன்றாகும் என்று கூறினால், கெடாத பொழுது சிவபெருமானும் ஆன்மாவும் வேறு வேறு பொருளாய் நிற்பதால், ஒன்றாவது இல்லை.

ஆகவே, மல நீக்கத்தால் அன்றித் திருவடியைக் கூடி ஒன்று ஆதல் சம்பவியாது என்னும் அருத்தாபத்திப் பிரமாணத்தால் **அப்பு அணைந்த உப்பின் மலம் நசித்து, உளம் ஈசன் கழல் அணைந்து சேடம் ஆம்** - உப்பு தன்னிடத்தில் உள்ள கட்டியான தூலத்தன்மை நீங்கிய பொழுது, நீரோடு கூடி ஒன்று ஆமாறு போல் ஆன்மாவும் தன்னுடன் இயல்பாகவே கூடி இருந்த ஆணவமலம், கெட்டு ஒழிந்த பொழுது, சிவபெருமான் திருவடியைக் கூடி ஒன்றாகி அப்பெருமான் திருவடிக்கு அடிமை ஆகும். **கப்பு இன்று ஆம் -** அவ்வாறு அடிமை ஆகிய ஆன்மாவிற்குத், தனக்கு எனச் சுதந்திரமான செயல் இல்லாமையாலும், நின்மலன் ஆகிய சிவபெருமான் மலத்தைக் கூட்டான் ஆதலானும் , அந்த ஆன்மா மீண்டும் மலத்தைப் பற்றுவதில்லை.

தெளிவுரை :

ஒரு பொருளைப் பற்றித், தனக்கு எனச் சுதந்திரம் இன்றி நிற்பது சேடம் ஆகும். சேடம் என்றாலும் அடிமை என்றாலும் ஒக்கும். (ஒன்றே). அஃதாவது, ஆன்மா சிவபெருமான் திருவடியை அடைதற் பொருட்டுத், தனக்கு எனச் சுதந்திரம் இன்றி, அவன் அருள் வழி நின்று, திருவடியை அடைந்து சிவானந்தத்தை அனுபவிப்பதால், ஆன்மா சிவபெருமானுக்கு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அடிமை என்பது ஆகும்.

அடிமை 'பொது' எனவும், 'சிறப்பு' எனவும் இரு வகைப்படும். அவற்றுள் **பொதுவான அடிமை,** இறைவனை அறிவது இல்லை; அறியாமையால், இறைவன் அருள் வழி நிற்கும் பாசத்துக்கு அடிமையாகிப் பிறந்து இறந்து உழலும். **சிறப்பான அடிமை,** சிவபெருமானை அறிந்து சிவபெருமானுக்கே அடிமையாய்ப், பாசத்திற்கு அடிமை ஆவது இல்லை; அதனால் பிறந்து இறந்து உழல்தலும் இல்லை.

இறைவனும் பொதுவான அடிமையைப் பொதுவாகவும், சிறப்பான அடிமையைச் சிறப்பாகவும் நடாத்துகிறான். இஃது எதுபோல எனின், ஓர் அரசனுக்குக் குடிகள் எல்லாம் அடிமையே ஆயினும், குடிகளை அரசன் நேரே அறியாத பொழுது பொதுவாய் நடத்துவதும், நேரே அறிந்த பொழுது சிறப்பாய் நடத்துவதும் கொள்ளப்படுமாறு போல் ஆகும். இக்கருத்தே பற்றித் திருநாவுக்கரசு சுவாமிகளும்.

'' என்னை ஏதும் அறிந்திலன் எம்பிரான் ;
தன்னை நானும் முன் ஏதும் அறிந்திலன்;
என்னைத் தன் அடியான் என்று அறிந்தபின்
தன்னை நானும் பிரான் என்று அறிந்தெனே ''

என்று அருளிச் செய்வார் ஆயினார்.

பொதுவான அடிமையும், 'பொது' எனவும், 'சிறப்பு' எனவும் இரு திறப்படும். அவற்றுள், பாசத்தோடு கூடிய உயிர்கள் பொதுவான அடிமை; பாசம் நீங்குதற் பொருட்டுச் சாதனம் செய்யும் உயிர்கள் சிறப்பான அடிமை. அந்த உயிர்கள், பாசத்தோடு கூடிய ஏனைய உயிர்களை நோக்கச் சிறப்பு உடையன; ஆயினும் பாசம் அறவே நீங்கிச் சிவபெருமான் திருவடியில் இரண்டறக்கலத்தல் இல்லை. எனவே, மேலே ஒன்பதாம் சூத்திரத்தில் **சாதனம் செய்யும் முறை பற்றி அடிமைத் திறம்** கூறி, இந்தச் சூத்திரத்தில் **அனுபவ நிலை பற்றி அடிமைத் திறம்** கூறினார் என்று கருதப்படும்.

இந்த வெண்பாவுடன் முத்தி நிலை கூறி முடித்தமையால், மலம் நீங்கும் என்று கூறியதோடு, மீண்டும் மலம் பற்றுவது

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இல்லை என்று, பற்றாமைக்கு ஏது ஆகிய திருவடியைவிட்டு நீங்காமையையும் உடன் கூறினார்.

(6) எடுத்துக்காட்டு வெண்பா

பொன்வாள்முன் கொண்மூவில் புக்கு ஒடுங்கிப் போய் அகலத்
தன்வாளே எங்குமாம் தன்மைபோல் - முன் வாள்
மலத்தின் மறைந்து உள்ளம் மற்றுலகை உண்ணும்
மலத்து இரித்துச் செல்லும் வரத்து.

(கொண்டு கூட்டு) பொன் வாள் முன் கொண்மூவில் புக்கு, ஒடுங்கிப், போய் அகல எங்கும் தன் வாளே ஆம் தன்மை போல், உள்ளம் மன் வாள் மலத்துள் மறைந்து, மற்று (ஒடுங்கி) உலகை உண்ணும், (மற்று) மலத்து இரித்து (எங்குமாம் வாள்) வரத்துச் செல்லும்.

இதன் பொருள் :

பொன்வாள் முன் கொண் மூவில் புக்கு - சூரியன் காலைப் பொழுதில் மேகக் கூட்டத்துள் மறைந்து, **ஒடுங்கி** - ஒளி விளங்காமல், அந்த மேகக் கூட்டம்சிறிது நீங்கிய பொழுது, அந்தச் சூரியன் ஒளி சிறிது விளங்கித் தோன்றி, **போய் அகல எங்கும் தன் வாளே ஆம் தன்மை போல்** - பெருங்காற்றால் அந்த மேகக் கூட்டம் அடியுண்டு, முழுவதும் விட்டொழிந்த பொழுது, அந்தச் சூரியன் ஒளி எங்குமாய் விளங்கித் தோன்றும். அதுபோல, **உள்ளம் முன் வாள் மலத்துள் மறைந்து** - சார்ந்ததன் வண்ணமாம் தன்மை உடைய ஆன்மா, அநாதியே தன் அறிவு மலத்தைச் சார்ந்து, அறிதல் தொழில் இன்றிக் கேவலப்பட்டு'**மற்று (ஒடுங்கி) உலகை உண்ணும்** - பின்பு மல நீக்கத்தின் பொருட்டு, இறைவன் அருள், கருவிகளைக் கூட்ட, அக்கருவிகளோடு கூடிச் சிறிது அறிவு விளங்கப் பெற்று உலகப் பொருளை அறிந்து, **(மற்று) மலத்து இரித்து (எங்குமாம் வாள்) வரத்துச் செல்லும்** - பின்பு அந்த மலத்தை இறைவன் அருளால், அறவே நீக்கிப் பூரணமாய் அறிவு விளங்கப் பெற்று, சிவபெருமானது திருவடியைக் கூடிச் சுத்தப்படும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

சூரியன் மேகத்துடன் கூடின பொழுதும், மேகம் சிறிது நீங்கிய பொழுதும், மேகம் அறவே நீங்கிய பொழுதும், தன் தன்மையில் கெடாதவாறு, ஆன்மாவும் கேவலம் சகலம் சுத்தம் என்னும் மூன்று நிலையைக் கூடிய பொழுதும், சார்ந்ததன் வண்ணம் ஆகும் தன் தன்மையில் நின்றும் வேறுபடாது. ஆதலால், அநாதியே கூடியுள்ள மலத்தின் நின்றும் நீங்கிச் சுத்தப்படும் என்பது ஆகும்.

ஒரு பொருளின் தன்மை, அந்தப் பொருள் கெட்டால் தான் கெடும் ஆதலால், சூரியனின் ஒளி மேகத்தில் மறைந்தாலும், சூரியன் கெடாமையால், எங்குமாய் விளங்கும் தன்மையும் கெடாமல், அடங்கி இருந்தது என்று உணர்த்தினார்.

சூரியன் ஆன்மாவுக்கு உவமை.

மேகம் ஆணவ மலத்துக்கு உவமை.

சூரிய ஒளி ஆன்ம அறிவுக்கு உவமை. முன்வாள் என்றதில் உள்ள வாள், ஒளியை உடைய அறிவைக் குறிக்கும்.

'மலம் நசித்தல்' என்பது மலத்தினுடைய மறைத்தல் சத்தி மடங்கிக் கீழ்ப்படுதல் அளவிலேயே அன்றிப், பொருள் கெடுதல் இல்லை. எதனால் எனின், மலத்தோடு கூடிய ஆன்மாக்களும், இறைவனோடு அத்துவிதமாய்க் கலந்து நிற்கின்றன; நிற்பினும், உயிரைப் பற்றிநிற்கும் அந்த மலசத்தி இறைவனைப் பற்றுதல் இல்லை. இறைவனைப் பற்றாமல் சத்தி மடங்கி, உயிர்களைப்பற்றிப் பொருள் கெடாதவாறு போல, இறைவனோடு இரண்டறக் கலந்து நிற்கும் முத்தர்களைப் பற்றாமல் சத்தி மடங்கி, ஏனைப் பெத்தர்களைப் பற்றிப் பொருள்கெடாமல் நிற்கும் ஆதலினாலேயே ஆகும். மேகம் சூரியனை விட்டு நீங்கி, மறைத்தல் சத்தி மடங்கினாலும், மேக மண்டலத்தில் பொருள் கெடாமல் இருப்பதில் வைத்து, இவ்வுண்மையைப் புரிந்து கொள்ளலாம்.

இந்த அதிகரணத்தில் வைத்துச் சிந்திக்கத் தக்க சிவஞான சித்தியார்ப் பாடல்கள் வருமாறு :

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பாடல் எண்		தொடக்கச் சொற்கள்
318	-	சென்றணையும் நிழல் போல
319	-	செம்பிரத குளிகையினால்
320	-	சிவன் சீவன் என்றிரண்டும்
321	-	இரும்பைக் காந்தம் வலித்தாற் போல்
317	-	எங்கும் தான் நிறைந்து சிவன்
313	-	தெரிவரிய மெய்ஞ்ஞானம்

பதினோராம் சூத்திரத்தினால் பெறப்பட்ட தொகைப்பொருள்

1. பாசம் நீங்கப் பெற்றதனால் ஆன்மா, தன்னோடு இறைவன் அத்துவிதமாய் நின்று காட்டியும் கண்டும் வரும் உபகாரத்தை, இடைவிடாத அன்பால் நினைந்து, அவன் திருவடி ஆகிய சிவானந்தத்தை அடைதலே, சிவப்பேறு என்பது இந்தச் சூத்திரத்தின் கருப்பொருள் ஆகும்.

2. இறைவன் உயிர்களுக்கு அறிவித்தல் ஆகிய காட்டும் உபகாரத்தை மட்டும் அன்றி, அறிதல் ஆகிய காணும் உபகாரத்தையும் செய்வன்.

3. முத்தியிலும் இறைவன் உயிர்களோடு ஒன்றாயும், வேறாயும் உடனாயும் நிற்றல் ஆகிய அத்துவித நிலையில் நின்று காணும்உபகாரத்தைச் செய்வன்.

4. பாசம் நீங்கித் திருவடியை அடைதல், உடம்பு உள்ள போதே உயிர்க்குக் கூடும்.

5. ஆன்மா ஏகனாய் நிற்கும் நிலையில் மறவாமையும் அன்பு செய்தலும் திருவடியைக் கூடுதலும் நிகழும். எனவே சார்ந்ததன் வண்ணமாம் தன்மை உடைய ஆன்மாவின் சிறப்பு இயல்புக்குக் கேடு இல்லை என்பது பெறப்பட்டது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பன்னிரண்டாம் சூத்திரம்

சிவப்பேறு பெற்ற ஞானிகள் உடம்போடு கூடி இருக்கும் வரை எவ்வாறு இருப்பர் என்பதைக் கூறுவது.

செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ, அன்பரொடு மரீஇ,
மால்அற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரன்எனத் தொழுமே,

இதன் பொருள் :

அயரா அன்பின் அரன் கழல் அணைந்த முத்தன், வினைப்பயனை அனுபவிக்கப் புறத்துச் செல்லும் பொழுது, சீவன் முத்தன் எனப்படுவன். அந்தச் சீவன் முத்தன், புறத்துச் செல்லும் பொழுது செங்கமல மலர் போல் விரிந்து விளங்கிய இறைவனுடைய பொறுக்கும் திருவடியை அணைய ஒட்டாமல், அந்தத் திருவடியை மறக்கும்படி மும்மலங்களும் செய்விக்கும்.

ஆதலால் அவ்வாறு மறக்கும்படி செய்விப்பதை, இயல்பாக உடைய அந்த மும்மலங்கள் என்னும் அழுக்கை, ஞானம் என்னும்நீரினால் கழுவி, அவ்வாறு கழுவுவதால் மேலைச் சூத்திரத்தில் கூறியவாறு, அய்ரா அன்பு செய்யும் மெய்ஞ்ஞானிகளோடு கலந்து கூடி, மலத்தினால் உண்டாகும் மயக்கம் நீங்குவதால், இடைவிடாத அன்பினை உடைய அந்த மெய்ஞ்ஞானிகளுடைய திருவேடம் ஆகிய விபூதி உருத்திராக்கங்களையும், சிவாலயத்தையும் சிவபெருமான் எனவே கண்டு வழிபட்டு வாழ்வான்.

தெளிவுரை :

இடைவிடாத அன்பினால் இறைவன் திருவடியை அடைந்து, நிட்டை கூடிய முத்தர்க்குப், பிராரத்த அனுபவத்தின் பொருட்டு, நிட்டை கலைந்து பிரபஞ்சத்தை நோக்க நேரும். அவ்வாறு நேரும் பொழுது ஏற்படும் நிலை சீவன் முத்தி நிலை எனப்படும், அந்நிலையில், திருவடியை அடைந்திருக்கும் நிட்டையில் தொழிற்பட்ட அறிவு இச்சை செயல்கள் ஆகிய மூன்றும், ஒவ்வொரு சமயத்தில் புறத்தில் செல்லும் அவ்வாறு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

செல்லும் பொழுது, ஆன்மாவின் அறிவு இச்சை செயல்கள் இன்ன இன்ன இடத்தில் செல்லும் என்பதை உணர்த்தி, அவ்வாறு உணர்த்தும் முறைமையில், வாக்கிற்கும் மனத்திற்கும் எட்டாமல், அன்பிற்கு எட்டுவதாய் அந்த அன்பினால் மறவாமல், வழிபாட்டுக்கு உரியவனாய் நின்ற இறைவனை, வாக்கிற்கும் மனத்திற்கும் எட்டும்படி, சிவாலயத்திலும், சிவனடியார் இடத்தும், திருவேடத்தின் இடத்தும் தெளிவாய்க் கண்டு வழிபடும் முறையினை உணர்த்துதல் இந்தப் பன்னிரண்டாம்சூத்திரத்துக் கருத்தாகும். பதினாராம் சூத்திரத்தில் 'பரமுத்தி' கூறிப் பன்னிரண்டாம் சூத்திரத்தில் 'சீவன்முத்தி' கூறுகிறார்.

இந்தச் சூத்திரத்திற்குச் 'சீவன் முத்தன்' என்னும் எழுவாய், மேலைச் சூத்திரத்தின் நின்றும் வருவிக்கப்பட்டது. மேலைச் சூத்திரத்தில் 'அரன் கழல் செலுமே' என்று கூறப்பட்டதே அன்றி சிவன் முத்தன் என்று கூறப்படவில்லையே என்றால், **அரன் கழல் அணைந்த நிலை பரமுத்தியே** ஆயினும், அந்நிலை நின்றார் புறத்துச்செல்லும் பொழுது நிற்கும் முறை கூறும் இந்தச் சூத்திரத்திற்கு ஏற்ப, 'ஏற்புழிக்கோடல்' என்னும் உத்தியால், சீவன்முத்தன் என வருவிக்கப்பட்டது என்பது கருதத்தக்கது.

''**நோன் தாள்**'' என்பது, நோன்ற, நோற்கின்ற நோற்கும் தாள், என விரியும். ஆதலால் வினைத்தொகை ஆகும். நோன்றல்' என்பது பொறுத்தல் அஃதாவது **அடியார்களைத் தாங்கும் திருவடி** என்பதாகும். இதனையே திருவருட்பயன் **65** ''**எடுத்துச் சுமப்பானை**'' என்று ஓதியது. இவ்வுண்மையைத் தெளிவுறுத்தும் பொருட்டே,

> **''சிவனும் இவன் செய்தி எலாம் என்**
> **செய்தி என்றும், இவனுக்குச் செய்தது**
> **எனக்குச் செய்தது என்றும், பவம் அகல**
> **உடனாகி நின்று கொள்வன்''**

என்று சிவஞான சித்தியாரும் **(304)** அருளியது.

மலத்தை அழுக்காகவும், ஞானத்தை நீராகவும் குறிப்பால் உருவகம் செய்ததால் '**கழீஇ**'' என்றார். ''**மால் அற நேயம்**

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மலிந்தவர்'' என்பவர்' மலம் கழுவி அன்பரொடு மருவியவரின் நின்றும் வேறானவரல்லர். எனவே இத் தொடருக்குத் ''திருவேடத்தை'' என உரை செய்யப்பட்டது. ''நேயம் மலிந்தவர்'' என்று கூறியதால், அந்த மெய்ஞ்ஞானிகள் சிவபெருமானிடத்து அன்பு செய்தலே அன்றிச் சிவபெருமானை வழிபடுவது இல்லையோ என்றால், நேயம் மலிதலினாலேயே வழிபாடும் உண்டு என்பது தானே பெறப்படும்.

சீவன் முத்தருடைய அறிவு இச்சை செயல்கள் தொழிற்படும் முறை எவ்வாறு என்பதைக் கீழ்க்காணுமாறு காணலாம்; **''அம்மலம் கழீஇ''** என்றதனால் மலத்தை நீக்குதலிலேயே அவர்கள் **அறிவு** தொழிற்படும்; **''அன்பரொடு மரீஇ''** என்றதனால் அன்பர் கூட்டத்திலேயே அவர்கள் **இச்சை** தொழிற்படும்; **'' தொழும்''** என்றதனால் திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவன் என வழிபடுதலிலேயே அவர்கள் **''செயல்''** தொழிற்படும்; படவே, சீவன் முத்தர்க்கு இந்த மூன்று இடங்களை இன்றி, ஏனைய இடங்களில், அறிவு இச்சை செயல்கள் செல்லமாட்டா என்பதும் பெறப்பட்டது. இவ்வாறு கூறுவதற்குக் காரணம், ஒரு பொருளைப் பற்றிய முத்தன், வேறு வேறு பொருளைப் பற்றிய வேறு வேறு செயலை உடையவன் ஆக மாட்டான் என்பதனாலேயே ஆகும். எதனால் என்றால், சீவன் முத்தர்க்கு மல நீக்கம் காரணமாக அன்பர் கூட்டத்தில் பற்று நிகழும்; அப்பற்று காரணமாக அன்பரையும் அவர் வேடத்தையும் ஆலயத்தையும் வழிபடும் தொழிலும் பிரிப்பின்றி, **உடன் நிகழ்ச்சியாக நிகழ்வன** ஆகும். ஆகவேதான், மல நீக்கமும்அன்பரும்திருவேடமும் சிவாலயமும், சிவபெருமானையே குறித்து நிற்கின்றன.

பசுவின் பால், செல்வப் பெருக்கம் உடையவருக்கு **உணவாக** உள்ளது; **உடல்நோய்** இன்றி வளரச் செய்யும் **மருந்தாகவும்** உள்ளது,அதுபோல, சீவன் முத்தரிடத்து நிகழும் இந்த வழிபாடு, சிவானந்தத்தை மேன் மேல் வளரச் செய்யும் அனுபவமாகவும், மலவாசனை ஆகிய **உயிர்நோயைத்** தீர்க்கும் சாதனம் ஆகிய மருந்தாகவும் உள்ளது. எனவேதான் இந்தச் சூத்திரத்தின் கருப்பொருளாக ''மலங்களைக் களைக; சிவபத்தர்களோடு இணங்குக; திருவேடத்தையும் சிவாலயத்தையும் வழிபடுக '' என்னும் விதிகள்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அமைந்துள்ளன.

இந்தச் சூத்திரம் மூன்று அதிகரணங்களை உடையது. அவை வருமாறு:

1. செம்மலர் நோன்றாள் சேரல் ஒட்டா அம்மலம் கழீஇ

2. அன்பரொடு மரீஇ

3. மாலற நேயம் மலிந்தவர் வேடமும் ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே.

ஒழிபு அதிகரணம் என்னும் ஓர் அதிகரணம் நான்காவதாக உள்ளது

பன்னிரண்டாம் சூத்திரம் - முதல் அதிகரணம். மேற்கோள்

ஈண்டு ஆணவம் மாயை கான்மியம் என்னும் மலங்களைக் களைக என்றது.

இதன் பொருள் :

இந்த முதல்அதிகரணத்தில் ஆணவம், மாயை, கன்மம் என்னும்மும்மலங்களையும் நீக்குக என்று கூறியது.

தெளிவுரை :

சிவன் முத்தருடைய அறிவு புறத்தே செல்லும் பொழுது, அவர்கள் முதலாவது செய்ய வேண்டுவது மலங்களைக் களைதலே என்பது உறுதியாகக் கூறப்பட்டது. 'கான்மியம்' என்பது, மூலகன்மத்தின் தொடர்பு பற்றிக் கன்ம மலத்திற்கு வந்த பெயர் ஆகும். கன்ம மலம், நல்வினை தீவினை என்னும்இருவினைகள் ஆகும். இந்த இருவினைகளும், உயிர். கேவலத்தின் நின்றும் நீங்கி, உடம்பு பெற்ற பின்பு நிகழ்வன ஆகும். உடம்பால்இருவினையும், இருவினையால் உடம்பும் மாறி மாறி வரும், கேவலத்தில்நின்றும் நீங்கி, முதன் முதல் உடம்பைப் பெறுதற்கும் கன்மம் வேண்டும். அந்தக் கன்மமே

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மூலகன்மம் எனப்படும். அந்த மூலகன்மம் அநாதியே ஆன்மா தன் இச்சா சத்தியால் ஆணவமலத்தைப் பற்றியதால் ஏற்பட்டதாகும். உடலைப் பெறுதற்கு முன்பு ஏற்பட்ட மூல கன்மம், உடம்பைப் பெற்றபிறகு உயிர்க்குள்ள விருப்பு வெறுப்பு காரணமாக நல்வினை தீவினை என்னும் இருவினைகள் ஆகின்றன. இந்த மூலகன்மம் பற்றிய செய்திபற்றி இந்நூலின் நான்காம் சூத்திரம் இரண்டாம் அதிகரணத்தில் கூறி இருப்பதையும் கண்டு கொள்ளலாம.

ஏது

அவைதாம் ஞானத்தை உணர்த்தாது அஞ்ஞானத்தை உணர்த்தும் ஆகலான்.

இதன் பொருள் :

ஆணவம் கன்மம் மாயை என்னும்மும்மலங்கள், மெய் உணர்ந்து நிட்டை கூடினவரிடத்தும், ஏதேனும் ஒரு வழியால் நுழைந்து, தம் மெய் உணர்வைக் கீழ்ப்படுத்திப், பிறவிக்கு வித்து ஆகிய பழைய விபரீத உணர்வை மேற்படுத்துவன ஆகும். அது மெய் உணர்ந்து நிட்டை கூடினவர்க்கு ஆகாமையின், இந்த அதிகரணத்தில், 'ஆணவம், மாயை கான்மியம் என்னும்மலங்களைக் களைக' என்று மேற்கோள் கூறிற்று,

தெளிவுரை :

விபரீத உணர்வு என்பது, தான் அல்லாத உடம்பைத் 'தான்' எனவும் தனது அல்லாத பொருள்களைத் 'தனது' எனவும் எண்ணுதல் ஆகும். ஆகவே விபரீத உணர்வு உயிர்க்கு அஞ்ஞானத்தை ஏற்படுத்தும். இந்த மும்மலங்களும் எப்படி அஞ்ஞானத்தை ஏற்படுத்தும் என்றால், ஆணவம் உண்மையை அறிய ஒட்டாமல் மறைக்கும்; மாயை மயக்கத்தை உண்டு பண்ணும்; கன்மம் விருப்பு வெறுப்பை உண்டு பண்ணும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

(1) எடுத்துக்காட்டு வெண்பா

**புண்ணிய பாவம் பொருந்தும்இக் கான்மியமும்
மண்முதல் மாயைகாண் மாயையும் - கண்ணிய
அஞ்ஞானம் காட்டும், இவ் ஆணவமும்இம்மூன்றும்
மெய்ஞ்ஞானிக்கு ஆகா, விடு,**

இதன் பொருள்:

புண்ணிய பாவம் பொருந்தும் இக்கான்மியமும் - புண்ணியத்தின் பயன் ஆகிய இன்பமாயும், பாவத்தின் பயன் ஆகிய துன்பமாயும், புண்ணியத்திற்குக் காரணம் ஆகிய நல்வினையாயும், பாவத்திற்குக் காரணம் ஆகிய தீவினையாயும் பொருந்துவது உயிர்க்குள்ள விருப்பு வெறுப்பு ஆகிய கன்ம மலம் ஆதலால் இந்தக் கன்ம மலமும், **மண் முதல் மாயை காண் (இம்) மாயையும்** - பிருதிவி (மண்) த்த்துவம் முதல் ஆகிய ஆன்ம தத்துவம் இருபத்து நான்கும், காலம் முதல் அசுத்த மாயை வரையுள்ள வித்தியா தத்துவம் ஏழும் ஆக தத்துவம் முப்பத்து ஒன்றாகக் காணப்படுவது மாயாமலம் ஆதலால், இந்த மாயா மலமும், **கண்ணிய அஞ்ஞானம் காட்டும் இவ்வாணவமும்** - இந்த தத்துவங்களால் ஆகிய தனு கரண புவன போகங்களைச் சுட்டி அறிவது ஆகிய விபரீத உணர்வை உண்டு பண்ணுவது ஆணவமலம் ஆதலால், இந்த ஆணவமலமும், **இம்மூன்றும் மெய்ஞ்ஞானிக்கு ஆகாவிடு** - ஆகிய இந்த மலங்கள் மூன்றும் மெய் உணர்வை உடைய உனக்கு ஆகாமையால் அவற்றைவிட்டு நீங்குவாயாக.

தெளிவுரை :

இறைவன் திருவடியை அடைதல் ஆகிய நிட்டை கூடின முத்தர்க்கு ஆகாமிய சஞ்சித வினைகள் கெட்டு ஒழியுமே அன்றி, பிராரத்தவினை கெடுவது இல்லை. ஆதலால், பிராரத்தவினை உள்ளவரையும்உடம்பும், அந்த உடம்பு உள்ள வரையும் பிராரத்தவினையும் நிற்கும். அந்தப் பிராரத்த வினை, மெய் உணர்ந்து நிட்டை கூடிய முத்தரைப் பற்றுவது இல்லை. ஆயினும், அந்த முத்தருக்கு ஒவ்வொரு சமயத்தில் உடம்போடு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கூடி இருக்கும் பழக்க வாசனையால் வந்து தாக்கும்.

மலம் நீங்கியும், வாசனையால் பிராரத்த வினை தாக்குதல் எது போல என்றால், பெருங்காயம் வைத்திருந்த பாண்டத்தில் பெருங்காயம் இல்லாத பொழுதும், வாசனை தங்கி இருந்து, அந்தப் பாண்டத்தைத் தாக்குதல் போல் ஆகும். அவ்வாறு பிராரத்தவினை தாக்கும் பொழுது, அந்த வினைப்பயனை அனுபவிக்கும் நிலையில், செயல் வழியாகவே அனுபவம் நிகழும். அந்தச் செயலும் விருப்பு வெறுப்புகளின் வழியாக நிகழும். ஆகவே அனுபவம் காரணமாக உண்டாகும் செயலின் வழியாக, விருப்பு வெறுப்புக்கள் உண்டாகவே, பரமே பார்த்திருக்கும்அந்த முத்தர்க்குப் பிரபஞ்சப் பொருள்கள் அறியப்படும். படவே, அந்தப் பிரபஞ்சப் பொருள்களைச் சுட்டி அறிவது ஆகிய விபரீத உணர்வு மேம்பட்டு, மெய்யுணர்வைக் கீழ்ப்படுத்திப் பிறவிக்கு வித்து ஆகும். இவ்வாறு மும்மலமும் பிராரத்தவினை காரணமாக, திருவடியை மறக்கும் சமயம் பார்த்து, திருவடியைக் கூடிய அறிவு வந்து கூடும். இந்த மூன்று மலங்களும், சிவானந்தம் ஆகிய சிவபோகப் பெரு வாழ்வை இழக்கும்படி செய்யும்; ஆதலால் மெய்ஞ்ஞானிக்கு இவை ஆகா எனப்பட்டது.

இந்த மூன்று மலங்களும் மேன்மேல் முறுகி வளரும் தன்மையினை உடையன. இவற்றைத் தோன்றும் பொழுதே துடைக்க வேண்டும். இல்லை என்றால், சிவஞானத்தை முற்றும் கெடுக்கும். மேலும் தோன்றும் பொழுதே துடைக்காமல் முறுகி வளர்ந்த பின்னர்த்த துடைக்க எண்ணினால், துடைக்கும் தன்னையே அந்த மலங்கள் கெடுத்து விடும். இஃது எது போல எனின், முள் மரத்தை இளம் ப்ருவத்தில் களையாமல், முதிர்ந்த பருவத்தில் களையத்தொடங்கினால், களைபவரின் கையை அந்த முள் மரம் களைவது போல் ஆகும். இவ்வுண்மையைத் திருவள்ளுவர்.

''இளையதாக முள் மரம் கொல்க; களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து''

என்று அருளிச்செய்தார். எனவே, மேற்கோளில் ''களைக'' என்றதே வெண்பாவின், ''விடு'' என்று ஓதினார். பிராரத்த வினையை அனுபவித்தல் பொருட்டு ஏற்படும் தற்போதத்தால், ஆன்மாவிற்கு விருப்பு வெறுப்புகள் தோன்றுகின்றன. எனவே, அந்தத் தற்போதம் முளையாதவாறு ஒழிக்க வேண்டும். ''நான்'' என எழுகின்ற அந்தத் தற்போதம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இன்றித் தான் சிவஞானத்துள் அடங்கிச் சிவானுபவம். சுவானுபூதி ஆகும்படி ஞான நிலையில் உறைத்து நிற்பதே தற்போதம் முளையாதவாறு ஒழிப்பதற்கு வழி ஆகும்.

இந்த அதிகரணத்தோடு வைத்துச் சிந்திக்கத்தக்க சிவஞான சித்தியார்ப் பாடல்:-

பாடல் எண்	தொடக்கச் சொற்கள்
322	செங்கமலத் தாள் இணைகள்

பன்னிரண்டாம் சூத்திரம் - இரண்டாம் அதிகரணம் மேற்கோள்

இனிச் சிவ பத்தர்களோடு இணங்குக என்றது.

இதன் பொருள் :

இறைவன் அத்துவிதமாய் நின்று உபகரித்து வருவதை உணர்ந்து, மறவாது செய்யும் அன்பினால், அந்த இறைவன் அருளை இன்றித் தனக்குச் செயல் இல்லை என அவன் அருள் வழி நின்ற சிவன் முத்தர்களோடு நட்பு செய்க என்றது. (எனவே சிவ பத்தர் அல்லாத ஏனையரோடு இணங்கக் கூடாது என்பதும் பெறப்பட்டது)

ஏது

அல்லாதார் அஞ்ஞானத்தை உணர்த்துவர் ஆகலான்

இதன் பொருள்:

பத்தியினதால் மறவாது ஏத்தி, இறைவனது சீபாதத்தை அணையாத அஞ்ஞானிகள், எல்லாம் சிவமாய்ப் பார்க்கும் ஞானத்தைக் 'கெடுத்து ஒவ்வொன்றையும் இது இது எனச் சுட்டி உணர்வது ஆகிய விபரீத உணர்வை உண்டுபண்ணுவர்; எனவே 'இனிச் சிவபத்தர்களோடு இணங்குக' என்று மேற்கோள் கூறிற்று.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

சிவபத்தர் அல்லாத அஞ்ஞானிகள் மும்முலங்களிலும் மிகக் கொடியவர் ஆவர், எதனால் எனின், மும்மலங்களாவது தற்போதம் உண்டாகும் சமயம் வாய்க்கும்பொழுது அஞ்ஞானத்தை உணர்த்துவதற்கு ஏது ஆகும்; சிவபத்தர் அல்லாத அஞ்ஞானிகளோ, தற்போதம் உண்டாகும்படி செய்வதோடு, பல வகையான உபாயங்களினால், தம்மைப்போலவே நம்மையும் விபரீத உணர்வு உடையவராக மாற்றி விடுவர், எனவே, மும்மலங்களினும் கொடியவர் ஆகிய அவர்களை அஞ்சி, விட்டு ஒழிதலே மெய்ஞ்ஞானிகளுக்குப் பொருத்தமாகும்.

(2) எடுத்துக்காட்டு வெண்பா

மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்கும்
சிறப்பிலார் தம் திறத்துச் சேர்வை - அறப்பித்துப்
பத்தர் இனத்தாய்ப் பரன் உணர்வினால் உணரும்
மெய்த்தவரை மேவா வினை.

(கொண்டு கூட்டு) தம்மை மறப்பித்து மலங்களின் வீழ்க்கும் சிறப்பு இல்லார் தம் திறத்துச் சேர்வை அறப் பத்தர் இனத்துப்பித்து ஆய்ப் பரன் உணர்வினால் உணரும் மெய்த்தவரை, வினை மேவா.

இதன் பொருள் :

தம்மை மறப்பித்து மலங்களின் வீழ்க்கும் சிறப்பு இல்லார் தம் திறத்துச் சேர்வை அற - பதினொராம் சூத்திரத்தில் கூறியவாறு, காட்டியும் கண்டும் உபகரித்து நிற்கும் இறைவன் நிலையை மறவாமல் பற்றி நிற்கும் சீவன் முத்தர் , தமது ஞானக்கண்ணை மறைப்பித்துத், தீய நெறியின்கண் கொண்டு சென்று, அந்தத் தீய நெறியால் மலங்களால் உண்டாகும் பிறவிக்குழியில் விழும்படி செய்து, துன்பத்தை உண்டுபண்ணுபவர் ஆகிய சிவ புத்தர் அல்லாதார் கொள்கையில்,பண்டைக் காலம் தொட்டுப் பழகி வந்த சேர்க்கை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அறும்படி, **பத்தர் இனத்துப்பித்து ஆய்ப் பரன் உணர்வினால் உணரும் மெய்த்தவரை** - ஞானக் கண்ணை மறைத்த அந்த மறவியை மாற்றி, ஞானக் கண்ணை உதவிப் பிறவிக் குழியில் நின்றும் எடுத்து, நன்னெறியின் கண் செலுத்தி வாழ்விக்கும் சிவ பத்தரது கொள்ளையிலே பேரன்பு உடையர் ஆதல் வேண்டும்; அந்த அன்பு சார்பாக விளங்கும் சிவஞானக் கண்ணுல் அந்தஅத்துவித நிலையை உறுதியாகப் பற்றி, உண்மை உணர்ந்த மெய்த்தவர் ஆயினாரை, **வினை மேவா** - எல்லாத் துன்பங்களுக்கும்மூலமாயும், சிவபத்தர்அல்லாதார் சேர்க்கையை உண்டுபண்ணக் கூடியதாயும் உள்ள பிராரத்த வினைகள் தாக்க மாட்டா.

தெளிவுரை :

இந்த வெண்பா சீவன் முத்தர், சிவபத்தர் அல்லாதார் சேர்க்கையை விட்டு விலக வேண்டும் என்பதை மட்டு மன்றிச், சிவபத்தர்கள் ஆகிய சிவ ஞானிகளோடு இணங்கி நிற்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றது. இதற்குக் காரணம் வருமாறு :

பிராரத்த வினைப் பயனை அனுபவிப்பதற்காக, நிட்டையில் நின்று நீங்கி வெளியே வரும்பொழுது, ஏதேனும் ஒன்றைப் பற்றாமல் இருக்க முடியாது; அப்பொழுது சிவபத்தர்களோடு இணங்கவில்லை என்றால் சிவபத்தர் அல்லாதாரோடு இணங்க நேரும்; அல்லாதாரோடு இணங்காது இருத்தல் பொருட்டுச் சிவபத்தரோடு இணங்குதல் இன்றியமையாதது ஆயிற்று.

'அன்பு' என்பது மந்ததரம், மந்தம, தீவிரம், தீவிரதரம் என நான்கு வகைப்படும். அவற்றுள் **மந்ததர அன்பு** ஆவது, உலகப்பற்று முக்கால் பாகமும் கடவுள் பற்று கால்பாகமும் ஆதல்; **மந்த அன்பு** ஆவது, உலகப் பற்று பாதியும் கடவுள் பற்று பாதியும் ஆதல்; **தீவிர அன்பு** ஆவது, உலகப் பற்றுகால் பாகமும் கடவுள் பற்று முக்கால் பாகமும் ஆதல்; **தீவிரதர அன்பு** ஆவது, உலகப்பற்று அறவே இன்றி முழுவதும் கடவுள் பற்றே ஆதல். இந்தத் தீவிரதர அன்பையே இந்த வெண்பா, **சிறப்பு** என்கிறது இந்தத் தீவிரதர அன்பையே பதினோராம் சூத்திரம் **''அயரா அன்பு''** என்கிறது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இத்தகைய அயரா அன்பு கொண்டு நிற்கும் நிலையில், அத்தகைய அன்பு செய்யும் ஆன்மாவும், அத்தகைய அன்பும், அத்தகைய அன்பு செய்யப்பட்ட சிவமும் பிரிப்பின்றி, அத்து விதமாய்க் கலந்து நிற்கும். இக்கருத்தே பற்றித் திருமூலரும்,

அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்;
அன்பே சிவம் ஆவது ஆரும் அறிகிலார்;
அன்பே சிவம் ஆவதுஆரும்அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்து இருப்பாரே

என்று அருளிச் செய்தார்.

தீவிரதர அன்பு உடையவர், பித்து கொண்டவர் போலத் தன்னை மறந்து இருப்பர்; எனவே, அத்தகு அன்பைப் 'பித்து' என்று வெண்பா கூறலாயிற்று.

தவம், மெய்த்தவம் பொய்த்தவம் என்று இருவகைப்படும். **மெய்த்தவம்,** சரியை கிரியை யோகங்கள் ஆகும்; **பொய்த்தவம்** யாகம் விரதம் முதலியன ஆகும். மெய்த்தவம் எனப்படும் சரியை முதலியனவும், மலத்துடன் கூடி நின்று செய்யப்படுவனவே அன்றி,. மலம் அறவே நீங்கிச் செய்யப்படுவன அல்ல. ஆயினும், யாகம் முதலியனவற்றை நோக்க, மெய்த்தவம் எனப்பட்டன. பரன் உணர்வால் உணரும் சிவஞானம்' மலம்அறவே நீங்கிய செயல் ஆதலினாலும், மேல் செய்ய வேண்டியது இல்லாத, முடிந்த நிலை ஆதலினாலும், அந்தச் **சிவஞானம் ஒன்றே மெய்த்தவம்** எனப்படும். படவே,அதனை உடையவரையே இந்த வெண்பாவில் "**மெய்த்தவர்**" என்று கூறினார்.

வீட்டு உணர்வு ஆகிய சிவானுபவ உணர்வை, நிலைபெறச் செய்யும் சிவபத்தர்களோடு இணங்கினால் அன்றிப், பிராரத்தவினை காரணமாகப் பண்டைக்காலம் தொட்டுப் பழகிவந்த சிவபத்தர் அல்லாத சிறப்பு இல்லாதாருடைய இணக்கம் அறுபடாது. ஆகையால், சிவபத்தருடைய இணக்கம் இன்றியமையாது வேண்டப்படும்.

இந்த அதிகாணத்துடன் வைத்துச் சிந்திக்கத் தக்க சிவஞான

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சித்தியார்ப் பாடல் வருமாறு ;

பாடல் எண்	தொடக்கச் சொற்கள்
323	ஈசனுக்கு அன்பு இல்லார்

பன்னிரண்டாம் சூத்திரம் - மூன்றாம் அதிகரணம். மேற்கோள்

இனிப் பத்தரது திருவேடத்தையும் சிவாலயத்தையும் பரமேசுரன் எனக் கண்டு வழிபடுக என்றது.

இதன் பொருள் :

பதினோராம் சூத்திரத்தில் கூறியவாறு, அயரா அன்பி அரன் கழல் ஏத்தும் மெய் அன்பரது திருவேடங்களையும் சிவாலயங்களையும் சிவன் எனவே சந்தேகம் இன்றித் தெளிந்து வழிபாடு செய்க என்றது.

தெளிவுரை :

சிவாலயத்தில் திருமேனி கொண்டு எழுந்தருளியுள்ள சிவ மூர்த்திகளையும் சிவபத்தர்களையும் மட்டும் சிவன் எனக் கண்டு வழிபடுக என்று கூறாமல் சிவபத்தருடைய திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவன் எனக் கண்டு வழிபடுக என்று கூறியதற்கு என்ன காரணம்?

காமக் கிழத்தியர்ஆகிய விலைமகளிரின் உடலில் காணப்படும் ஆடை, சாந்து, ஆபரணம் முதலாயினவற்றைக் கண்ட அளவிலே, அவை காமுகரை வசப்படுத்தி, அந்தக் காமுகருக்கு இன்பம் செய்யும். அதுபோல, சிவபத்தர் அணிந்திருக்கும் திருவேடமும், சிவபெருமான் எழுந்தருளி இருக்கும் சிவாலயமும் காட்சி அளவிலேயே, மெய்யுணர்வு உடையவரை வசப்படுத்தி, அவர்க்கு இன்பம் செய்யும். எனவே திருவேடத்தையும் சிவாலயத்தையும் வழிபடுக என்று அவ்விரண்டைனையும் உபசரித்தார். விலைமகளிர் உடலில் காணப்படும் ஆடைமுதலியன போலச், சிவனடியாரிடத்துக் காணப்படும் திருவேடம் என்பதனைத் திருப்பல்லாண்டு எட்டாவது பாட்டில்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

''சேலும் கயலும் திளைக்கும் கண்ணார்''

என்னும் திருவாக்கால் அறியலாம். பெயரியபுராணத்தில்திருநாவுக்கரசு நாயனார் புராணத்தில். 140 ஆவது பாட்டில்,

''தூய வெண்ணீறு துதைந்த பொன்மேனியும் தாழ்வடமும்''

என்றும், திருஞானசம்பந்தர் புராணத்தில் 270-வது பாட்டில்,

''சிந்தை இடையறா அன்பும், திருமேனி தன்னில் அசைவும்
கந்தம் மிகையாம் கருத்தும், கைஉழ வாரப்படையும்,
வந்துஇழி கண்ணீர் மழையும், வடி விற்பொலி திருநீறும்,
அந்தமிலாத் திரு வேடத்து அரசும் எதிர்வந்த அணைய''

என்றும் கூறியருளியமையால், திருவேடத்திறனை அறியலாம்.

சிவாலயம் சிவனடியார்க்கு இன்பம் செய்யும் என்பதைச் 'சிவாலயத்தின் கோபுரத்தைத் தூரத்தே கண்ட அளவிலேயே பணிந்தார்' என்று பெரிய புராணத்தில் பல இடங்களில் காணப்படுவதால் சிவாலய வழிபாட்டின் இன்றியமையாமை தெளியப்படும்.

ஏது

அவன் மற்ற இவ்விடங்களில் பிரகாசமாய் நின்றே, அல்லாத இடத்து, அப்பிரகாசமாய் நிற்றலான்.

இதன்பொருள் :

ஆன்மாக்களோடு எக்காலத்தும் அத்துவிதமாய்க் கலந்து நிற்கும் இறைவன் எவ்விடத்தும் நிறைந்து நிற்பன்; ஆயினும் திருவேடம் சிவாலயம் என்னும் இரண்டு இடத்து மட்டும், தயிரின் இடத்து விளங்கித் தோன்றும் நெய்போல விளங்கித் தோன்றி ஏனை இடங்களில்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எல்லாம் பாலின் இடத்து வெளிப்படாது நிற்கும் நெய்போல மறைந்து நிற்பன். ஆதலால், 'இனிப்பத்தரது திருவேடத்தையும் சிவாலயத்தையும் பரமேசுவரன் எனக்கண்டு வழிபடுக' என்று மேற்கோள் கூறிற்று.

தெளிவுரை :

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச் செய்த **''இருநிலனாய்த் தீயாகி நீருமாகி''** எனத் தொடங்கும் நின்ற திருத்தாண்டகத்திலும், திருவுருத்திரத்துள் (ஸ்ரீருத்ரம்)ளும் ஓர் அறிவுடைய உயிர் முதல் ஐயறிவு உடைய உயிர்வரை உள்ள உயிர்ப் பொருளையும் உயிர் இல்லாத பொருளையும் தனித்தனியாக எடுத்து ஓதி அப்பொருள்கள் எல்லாவற்றையுமே பரமேசுரன் எனக் கண்டு வழிபடுமாறு வழிபாடு கூறி இருக்கையில், இந்தச் சூத்திரத்தில் திருவேடத்தையும் சிவாலயத்தையும் மட்டும் பிரித்து எடுத்துக் கொண்டு கூறியதற்குக் காரணம் எல்லா இடங்களிலும் பரமேசுவரன் நிற்கிறான் என்றாலும் இந்த இரண்டு இடங்களில் மட்டும் சிறப்பாக விளங்கித் தோன்றுவான் என்பதை வலியுறுத்தல் பொருட்டே ஆகும்.

(3) எடுத்துக்காட்டு வெண்பா

தன் உணர வேண்டித் தனது உருவைத் தான்கொடுத்துத்
தன் உணரத் தன்னுள் இருத்தலால் - தன் உணரும்
நேசத்தார் தம்பால் நிகழும் ததிநெய்போல்
பாசத்தார்க்கு இன்றாம் பதி

இதன் பொருள் :

பதி - சிந்தனைக்கு எட்டாது நிற்கின்ற பரம்பொருள், **தன் உணர வேண்டி** - அவ்வாறு நிற்பதால் உலகத்தார்க்கு ஒரு பயனும் இல்லாமையால், உலகத்தில் உள்ளவர்கள் தன்னை அறிந்து,பயன்படும் பொருட்டு **தனது உருவைத்தான்**

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கொடுத்து - திருநீறு, கண்டிகை (உருத்திராட்சம்) முதலிய திருவேடம் ஆகிய தனது திருவடிவத்தைத் தன்னுடைய அன்பர்க்குக் கொடுத்து, அவர்கள் இடமாக நின்று, தன்னை அறியும்படி செய்வதாலும், **தன் உணர** - அந்த அன்பர் சிவோகம்பாவனையில் தன்னை அறியும்படி செய்வதாலும்,

தன்உள் இருத்தலால் - அவ்வாறு சிவோகம்பாவனை ஆகிய ஒரு குறியில் நின்று உணர்கின்ற அன்பரை, 'உணர்கின்றோம்' என்னும் போதம் (உணர்வு) இறந்து, தனது வியாபகத்துள் அடங்கி நிற்கும்படி செய்வதாலும், **தன் உணரும் நேசத்தார் தம்பால் ததி நெய்போல் நிகழும்** - ஒரு குறியும் இன்றி நின்று, தன்னை உள்ளவாறு உணர்கின்ற அந்த அன்பர் இடத்தில், இறைவன் தயிரில் இடத்து நெய் விளங்கித் தோன்றுவது போல, விளங்கித் தோன்றுவன்; **பாசத்தார்க்கு இன்று ஆம்** - அவ்வாறு, உணரும் இயல்பு இல்லாத, பாசக்கட்டு உடையவர் இடத்தில் பாலில் நெய் விளங்கித் தோன்றாதது போல, விளங்காமல் நிற்பன்.

தெளிவுரை :

இந்த வெண்பாவில் ''தன் உணர'' என்னும் தொடர் மூன்று இடங்களில் வருகின்றது. முதலாவது வருவது உலகத்தில் உள்ளவர்கள் இறைவனை அறியும் பொருட்டு'' என்னும் பொருளைத் தரும். இரண்டாவது வருவது, ''சிவபோகம் செய்யும் அன்பர், அந்த பாவனையால் தன்னை அறியும்படி செய்தல் பொருட்டு'' என்னும் பொருளைத் தரும். மூன்றாவது வருவது, ''ஒரு குறியும் இன்றி நின்று தன்னை உள்ளவாறு உணரும் நேசத்தார்'' என்னும் பொருளைத் தரும்.

இந்த வெண்பா சிவவேடத்தில் இறைவன் ஒளிமயமாய் நிற்கிறான் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. சிவோகம்பாவனை முதலியன செய்ய முடியாத உலகத்தவர் இறைவனை அறிந்து கொள்ளுதல் பொருட்டுத், **திருநீறு கண்டிகை முதலிய தனது வடிவத்தை** உடைய திருவேடம் உடையவர் வாயிலாகத் தன்னை அறியும்படி செய்கிறான். எனவே **திருநீறும் கண்டிகையும் சிவபெருமானின் வடிவங்களே** என்பது இனிதே பெறப்படும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

(4) எடுத்துக்காட்டு வெண்பா

கண்டதொரு மந்திரத்தால் காட்டத்தில் அங்கிவேறு
உண்டல்போல் நின்று அங்கு உளதாமால் - கண்டஉருத்
தான் அதுவாய் அன்று ஆனான் தான் அதுவாய் தோன்றானோ
தான் அதுவாய்க் காணும் தவர்க்கு.

(கொண்டு கூட்டு) காட்டத்தின் அங்கி வேறு உண்டல் போல், கண்ட உருத் தான் அதுவாய் அன்று ஆனான்; கண்டது ஒரு மந்திரத்தால் நின்று அங்கு உளதாம்; அது தானாய்க் காணும் தவர்க்கு, அது தானாய்த் தோன்றானோ;

இதன் பொருள் :

காட்டத்தின் அங்கி வேறு உண்டல் போல் - விறகின் இடத்தில் தீ எப்பொழுதும் உண்டு; ஆயினும், கடைகோலினால் கடைந்த பொழுது, அந்தத் தீ விறகில் நின்றும் வேறாய் விளங்கித் தோன்றும்; கடையாத பொழுது விளங்கித் தோன்றுவது இல்லை; தோன்றாதது கொண்டு விறகில் தீ இல்லை என்று அறிவு உடையவர் எண்ணமாட்டார், அதுபோல, **கண்ட உருத்தான் அதுவாய் அன்று ஆனான்** - உயிர்களுக்குப் போக மோட்சங்களைக் கொடுத்தல் பொருட்டுக் காணப்பட்ட தாவரவடிவில் இறைவன், கலப்பினால் அந்த வடிவமே தானாயும், பொருளின் தன்மையால் அந்த வடிவத்தின் வேறாயும் நிற்கும்இயல்வு உடையவன். **கண்டது ஒரு மந்திரத்தால் நின்று அங்கு உளதாம்** - இந்த இருநிலைகளுள், அந்த வடிவத்தையே சிவபெருமானாகக் காணுதவர்க்கு, அவர் தம்மால் அறியப்பட்டது ஆகிய ஒரு மந்திரக்கிரியை உள்ள பொழுது, அந்த வடிவத்தில் விளங்கித் தோன்றி, மந்திரக் கிரியை இல்லாத பொழுது விளங்காமல் நிற்பன். **அது தானாய்க் காணும், தவர்க்கு அது தானாய்தோன்றானோ?** - மந்திரத்தால் காணும் தன்மை இன்றி '' அந்த வடிவமே சிவபெருமானாகக் காணும் உண்மைத் தவம் உடையவர்க்கு அந்த வடிவமே தானாக விளங்கித் தோன்ற மாட்டானோ? தோன்றுவன்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை :

சிவபத்தரது திருவேடம், சிவபெருமானை உலகத்தவர் அறியும் பொருட்டுச், சிவபெருமானாலேயே கொடுக்கப்பட்டது; அதனால், அந்தத் திருவேடத்தில் சிவபெருமான் விளங்கித் தோன்றுவன் என்பது பொருந்தும்.

அந்தத் திருவேடத்தை அணிந்திருக்கும் சிவபத்தர், சிவபெருமானை உள்ளவாறு உணரும் இயல்பு உடையவராய் இருப்பர். அவர்போலச் சிவாலயத்தில் உள்ள சிவலிங்கம் முதலிய வடிவங்கள், தாவர வடிவம் ஆகலின், அந்த வடிவங்களுக்கு அவ்வாறு உணரும் இயல்பு இல்லை. அந்தத் தாவர வடிவில், மந்திரம் கிரியை, பாவனை ஆகியவற்றால் பிறர் செயலுக்கு ஏற்றவாறு சிவபெருமான் விளக்கித்தோன்றுவானே அன்றி, மந்திரம் முதலிய கிரியைகள் இல்லாத இடத்தில் விளங்கித் தோன்றான். ஆகவே அந்த மூர்த்திகளை உடைய சிவாலயத்தையும் பரமேசுரன் எனக் கண்டு வழிபடுக என்று மேற்கோள் கூறிற்று.

உயிர்கள் உலக இன்பம் வீட்டு இன்பங்களை அடைதல் பொருட்டு, இறைவன் கொண்ட தாவர வடிவில்,மந்திர கிரியை இல்லாத இடத்தும், அந்தத் தாவர வடிவமே தானாக, உண்மைத்தவம் உடைய சிவபத்தர்க்குச் சிவபெருமான் விளங்கித் தோன்றுவான் என்பது இந்த வெண்பாவின் கருத்து.

இறைவன் கலப்பினால் 'அது வாயும்', பொருள் தன்மையால் ''அன்றாயும்' விளங்குவன் என்று, அவரவர் பாவனைக்கு ஏற்ப விளங்குவன். இறைவன் இவ்வாறு விளங்குதல், மூர்த்தம் ஆகிய தாவர வடிவிற்கு மட்டும் அன்றி, உயிர் ஆகிய சங்கம வடிவிற்கும் பொருந்தும்; எனவே சங்கமம் ஆகிய சிவபத்தர் வேடத்திலும் விளங்குகிறான் எனப்பட்டது. தாவர சங்கமம் ஆகிய இரண்டு இடத்திலும், அதுவாதலும் அன்றாதலும் ஒக்கும் என்பது அடுத்து அமையும் ஒழிபு அதிகரணத்தால் பெறப்படும்.

விறகில் தீ மறைந்து நிற்பது போல, சிவலிங்கம் முதலிய மூர்த்தங்களில் இறைவன் மறைந்து நிற்கிறான். இக்கருத்துப் பற்றியே திருநாவுக்கரசு சுவாமிகள்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

''விறகில் தீயினன் பாலில் படு நெய் போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்''

என்றருளிச் செய்தனர்.

இந்த அதிகரணத்துடன் வைத்துச் சிந்திப்பதற்கு உரிய சித்தியார்ப் பாடல்கள் வருமாறு;

பாடல் எண்		தொடக்கச் சொற்கள்
325	-	திருக்கோயில் உள்ளிருக்கும்
324	-	அறிவரியான் தனை அறிய

பன்னிரண்டாம் சூத்திரம் - ஒழிபு அதிகரணம் மேற்கோள்

இனி இவ்விடங்களில் வழிபடுக என்றது.

இதன் பொருள் :

மூன்றாம் அதிகரணத்தில் கூறிய்வாறு சிவபத்தரது திருவேடங்கள் இடத்தும், சிவாலயங்கள் இடத்தும் வழிபாடு செய்க.

தெளிவுரை :

இந்த அதிகரணம் முன் சொன்ன மூன்று அதிகரணங்களிலும் சொன்னவற்றை வலியுறுத்திச் சொல்வதற்காக எழுந்ததால், ஒழிபு அதிகரணம் எனப்படுகிறது. மலம் களைதல், சிவபத்தரோடு இணங்குதல், திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவன் எனக் கண்டு வழிபடுதல் என்னும் மூன்றும், சீவன் முத்தருக்கு இயல்பாகவே உள்ள இலக்கணம் ஆகும். முன் மூன்று அதிகரணங்களில் இம் மூன்றையும் விதியாகக் கூறி, இந்த அதிகரணத்தில் அவற்றை வலியுறுத்திக் கூறுகிறார்.

இது கூறியது கூறல் ஆகாதோ என்றால், ஆகாது. ஏனெனில் படுத்தல் ஓசை, எடுத்தல் ஓசை என்னும் ஓசை வேறுபாட்டால்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கூறியதனால் ஆகும். படுத்தல் ஓசை விதியையும், எடுத்தல் ஓசை விதியை வலியுறுத்தலையும் தரும். படுத்தல் ஓசை என்பது **மெல்லக் கூறுவதையும்**, எடுத்தல் ஓசை என்பது **உரத்துக் கூறுவதையும்** குறிக்கும். 'செய்' என்று முதலில் மெல்லக் கூறும்பொழுது விதியாகும்; அவ்வாறு கூறியதை மறுக்கும் பொழுது, உரத்துக் கூறும் நிலையில் 'செய்ய வேண்டும்' என்பதை வலியுறுத்தியது ஆகும்.

ஏது

நரம்பு நாடி முதலானவற்றைத் தான் அதுவாய் வரும் புருடன், அவை ஆகாவாறு அப்புருடனும் ஆகலான்,

இதன் பொருள் :

உயிர் நரம்பு நாடி என்பு தோல் முதலிய தூல சரீர தத்துவங்களில் கலந்து நிற்பதால் ஒவ்வொரு தத்துவமும் தானாய் நிற்கும், அவ்வாறு நிற்கும் உயிர், நாடியோ நரம்போ என்போ சீயோ கோழையோ என்று இவ்வாறு **பைம்மறித்துப்** பார்த்தால் போல, உள்நோக்காகப் பார்ப்பவருக்கு, அந்த நரம்புநாடி முதலியவை உயிர் ஆகாமல் அத்தத்துவங்களின் வேறாக உயிர் உள்ளது என்பது புரியும்.

அது போல, உயிர்க்கு உயிராகிய இறைவனும், உயிருடைய பொருள் ,உயிர் இல்லாத பொருள் ஆகிய எல்லாவற்றிலும் கலந்து நிற்பதால், அப்பொருள்கள் தானாகவும், பொருளின் தன்மை பற்றி அவற்றின் வேறாகவும் நிற்பன்.

கலப்பினால் சட சித்துக்கள் தானாய் நிற்கும் உண்மையை அறிந்த அறிவு பற்றித், திருவேடத்திலும் சிவாலயத்திலும் சீவன் முத்தர்க்கு உண்டாகும் வழிபாடு, பொருளின் தன்மையால் அவை அல்லன ஆகி, அவற்றின் வேறாய் நிற்றலை அறியும் பொழுது உண்டாகாது. ஆகவே, வேறாய் நிற்றலை அறியும் பொழுதும், வழிபாடு செய்விக்க வேண்டும். எனவே, 'இவ்விடங்களில் வழிபடுக, என விதியாக வைத்து மேற்கோள் கூறிற்று.

தெளிவுரை :

'பைம்மறித்துப் பார்த்தல்' என்பது பையைத் திருப்பிப்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பார்த்தல் ஆகும். அஃதாவது உள்ளே அசுத்தமாயும் வெளியே பளபளப்பாயும் உள்ள பையை (bag), வெளியே பார்க்கும் போது இச்சை உண்டாகும்; ஆயினும் அந்தப் பையைத் திருப்பி உள்ளே பார்க்கும் போது இச்சை உண்டாகாது; வெறுப்புஉண்டாகும்.

அவ்வாறே உடம்பை மேல் நோக்காகப் பார்க்கும் பொழுது, இச்சையல் அந்த உடம்பின் இடத்து 'நான் ' என்னும் புத்தியும், உள்நோக்கி அசுத்தமான தத்துவங்களைப் பார்க்கும் பொழுது, வெறுப்பால் 'நான் உடம்பு அல்லன்' என்னும் புத்தியும் ஒருவனுக்கு உண்டாகும். இக்கருத்துப் பற்றியே நாலடியார், தூயதன்மை (2) ஆவது பாட்டு.

தோல்போர்வை மேலும் தொளை பல வாய்ப் பொய்ம் மறைக்கும், மீப்போர்வை மாட்சித் துடம்பானால் - மீப்போர்வை, பொய்ம்மறையாக் காமம் புகலாது மற்றதனைப், பைம்மறியாப் பார்க்கப்படும்''

என்று கூறியது.

விதித்தல் மூன்று வகைப்படும். அவை வருமாறு:

1. முன் பொருந்தாதது ஒன்றைப் பொருந்த வேண்டும்.

2. முன் பொருந்தியது ஒன்று நீங்காமல் காக்கப்பட வேண்டும்.

3. பொருந்தியதில் ஒரு பாகத்தை விலக்க வேணடும்.

இம் மூன்றனுள், இயல்பாகவே வழிபடுதலை உடைய சீவன் முத்தருக்கு விதித்த விதி, ''முன் பொருந்தியது நீங்காமல் காக்கும் பயனை உடையது'' ஆகும். அஃதாவது, எல்லோரிடத்தும் பணிதல் வேண்டும் என்று முன்பு விதித்து, இந்த விதி மனைவி, மக்கள், இளையான், சத்துரு இவர்கள் இடத்தில் செல்லாது என்று விலக்குவது போல்வனவாகும். ஆகவே, திருவேடத்தையும் சிவாலயத்தையும் வழிப்டுக என்பது விதிக்கப்பட்டது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

(5) எடுத்துக்காட்டு வெண்பா

**அது இது என்றது அது அல்லான் கண்டார்க்கு
அது இது என்றதையும் அல்லான் - பொது அதனில்
அத்து விதம் ஆதல் அகண்டமும் தைவமே
அத்துவிதி அன்பின் தொழு.**

(கொண்டு கூட்டு) **கண்டார்க்கு,** அது இது என்றது (அல்லான்), அது (என்றது) அல்லான், **அது இது என்றதையும் அல்லான்,** பொது அதனில் அத்துவிதம்ஆதல் அகண்டமும் தைவமே, அத்துவிதி அன்பின் தொழு

இதன் பொருள் :

கண்டார்க்கு - இறைவன் உயிருடைய பொருள் உயிரில்லாத பொருள் எல்லாவற்றினும் கலந்து நின்றாலும் நிற்கும் நிலைமை பேதமோ, அபேதமோ பேதாபேதமோ என ஆராய்ந்து அறிந்தவர்க்கு, **அது இது என்றது அல்லான்** - பொருளை அறியும்போது கண்ணும் சூரியனும்கலந்து நின்றாலும், கண்வேறு சூரியன் வேறு காரியப்படுவது போல, அதுவும் இதுவும் எனப் பிரித்து ஓதப்படும் **பேத நிலைமை** உடையவனும் இல்லாதவனாய், **அது என்றது அல்லான்** - உடலும் உயிரும் பிரிக்க முடியாததுபோல, எல்லாம் இறைவனே என்று சொல்லப்படும் **அபேத நிலைமை** உடையவனும் இல்லாதவனாய், **அது இது என்றதையும் அல்லான்** - குணமும் குணியும் ஒருவாறு பேதமும் ஒருவாறு அபேதமும் ஆவது போல இறைவன் ஆகிய இந்தப் பொருள் என்று பிரிக்க முடியாமை காரணமாக, கூறப்படும் **பேதாபேத நிலைமை** உடையவனும் இல்லாதவனாய்,

பொது அதனில் அத்துவிதம் ஆதல் அகண்டமும் தைவமே - உயிரின் அறிவும் கண்ஒளியும் கலப்பால் அபேதமாயும், பொருளின் தன்மையால் பேதமாயும் உடனாகச் செல்லும் தன்மையால் பேதாபேதமாயும் நிற்பது போல, பேதம் அபேதம் பேதாபேதம் என்னும் மூன்றற்கும் பொதுவாய், அம்மூன்றும் ஆகிய அத்துவித நிலைமை உடையவனாய் நிற்பன்; ஆதலால்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எல்லாப் பொருளும் அவன் வடிவே ஆகும்; ஆயினும், அத்துவிதி அன்பின் தொழு - அந்தப் பொருள்கள் எல்லாவற்றின் உள்ளும் கண்ட அளவிலே அன்பு உண்டாகும் இடம் எதுவோ, அந்த இடத்தில் ''அத்துவித சித்தாந்தத்தைப் பெற்றுள்ள நீ'' வழிபடுவாயாக.

தெளிவுரை :

இறைவன் எல்லாப் பொருள்களிலும் பிரிக்க முடியாமல் கலந்து நிற்கிறான்; ஆயினும் ஒவ்வொரு பொருள்களும் வெவ்வேறு பெயராய்த் தோன்றுகின்றன. திருவேடமும் சிவாலயமும் மட்டும் கடவுள் பெயரால் தோன்றிக்கண்ட அளவிலே கடவுளிடத்து அன்பை உண்டு பண்ணும்; ஆதலால் இந்த இடங்களில் வழிபாடு செய்வாயாக என்று இந்த வெண்பாவில் எடுத்துக் கூறுகிறார்.

பசுவின் உடல் முழுவதும் நிரம்பி இருந்தும் காணப்படாத பால், கன்றை நினைந்த அளவிலே மடியில் விம்மி ஒழுகுவது போல, எங்கும் நிறைந்திருக்கின்ற இறைவன், அன்பர்களின் பொருட்டுத்திருக்கோயில் உள்ளிருக்கும் திருமேனியில்வெளிப்பட்டு அருளுவன். ஆதலால், அந்தத்திருமேனியில் தான் உயிர்கட்கு அன்பு விளையும். அவ்விடத்து அன்றி அன்பு விளையாது.

''அத்துவிதி அன்பின் தொழு'' என்று வெண்பாவில் கூறியதற்குக் காரணம் இறைவன் நமக்குச் செய்து வரும் எண்ணற்ற உபகாரங்களை நன்றியுணர்வோடு நினைந்து வழிபாடு 'செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தும் பொருட்டே ஆகும்.

(6) எடுத்துக்காட்டு வெண்பா

***வினையால் அசத்து விளைதலால், ஞானம்
வினை தீரின் அன்றிவிளையா - வினை தீர
ஞானத்தை நாடித் தொழவே அது நிகழும்:
ஆனத்தால் அன்பின் தொழு.***

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இதன் பொருள் :

வினையால் அசத்து விளைதலால், வினை தீரின் அன்றி ஞானம் விளையா - பிராரத்த வினை காரணமாக உடம்பு நிற்கும்; ஆதலால் அந்த உடம்பைப் பற்றி நிற்கும் பிராரத்த வினையால் உண்டாகும் வாசனை உயிரைத் தாக்கும்; அதுவரையும் அந்த வாசனையால் விருப்பு வெறுப்புகள் உண்டாகும். அந்த விருப்பு வெறுப்புக்களால், மண் முதல் மாயை வரை உள்ள தத்துவப் பொருள்களின் தோற்றம் உண்டாகும். அந்தப் பொருள்களின் தோற்றத்தால், எல்லாம் சிவ சொரூபமாய்ப் பார்க்கும் மெய்யுணர்வு மறைந்து, உலகமாய்ப் பார்க்கும் விபரீத உணர்வு நிகழும். நிகழவே, ஞானத்தால் பிரபஞ்சத்தை அசத்து என்று கண்டு நீங்கிய பொழுதும், பிராரத்த வாசனையால் விருப்பு வெறுப்புகளும் பிரபஞ்சத் தோற்றமும் விபரீத உணர்வும் வந்து கூடி மேம்படுவன ஆகும். **வினை தீர ஞானத்தை நாடித் தொழவே அது நிகழும்** - விருப்பு வெறுப்பு முதலிய அந்த அளவிற்கு, எல்லாம் மூலமாகிய பிராரத்த வாசனை பற்று அறக் கழிந்தால் அன்றி, அந்தப் பிரபஞ்சத்தைத் தோற்ற ஒட்டாமல் கீழ்ப்படுத்தி, எல்லாம் சிவமாய்ப் பார்க்கும் மெய் உணர்வு மேம்பட மாட்டாது; ஆகவே, உடம்பு தோற்றும் வரை அந்தப் பிராரத்த வாசனை, பற்றறக் கழிதல் பொருட்டு, அந்த வாசனை பற்றறக் கழிந்த மெய்யுணர்வு உடையவரைத் தேடி வழிபட்டால், அந்த வழிபாட்டினால் பிராரத்த வாசனை நீங்கி, எல்லாம்சிவமாய்ப் பார்க்கும் மெய் உணர்வு மேம்பட்டுத்தோன்றும். **ஆனத்தால் அன்பின் தொழு** - ஆனதனால், அந்த மெய் உணர்வு உடைய சிவனடியாரை அன்பினால் வழிபடுவாயாக.

தெளிவுரை :

இந்த வெண்பா, சிவனடியாரை வழிபட வேண்டுவதன் இன்றியமையாமையை எடுத்துக் கூறுகின்றது. ஞானத்தால் மெய்யுணர்வு உண்டான போதிலும், பிராரத்த வாசனை காரணமாக அந்த மெய்யுணர்வு கீழ்ப்படும்; எனவே, பிராரத்த வாசனை பற்றறக் கழிதல் பொருட்டு, மெய் உணர்வு உடைய சிவன்டியாரை வழிபட வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டது.

சிவனடியார் எனப்படுபவர், பிராரத்த வினை ஆகிய

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வேரினை அறுத்து, மெய்யுணர்வை நிலையாகப் பெற்ற தன்மை உடையவர் ஆவர். சார்ந்ததன் வண்ணமாம் தன்மை உடைய ஆன்மா மெய்யுணர்வு நிலையாகப் பெற்ற சிவனடியாரைச் சார்ந்து நின்று, அவரை வழிபடும் ஆயின், அந்த ஆன்மாவுக்குப் பிரார தவினை நீங்கி மெய்யுணர்வு நிலைபெறும். எனவே சிவனடியாரை வழிபட வேண்டுவது அவசியம் ஆயிற்று.

ஸ்ரீ பஞ்சாட்சரத்தை விதிப்படி உச்சரித்தலே பிராரத்த வினையைப் பற்றறக் கழியச் செய்யும் ஆகலின், அதுவே போதுமே சிவனடியாரை வழிபட வேண்டுமா என்னும் தடை எழலாம். அதற்கு விடை வருமாறு:

திருவைந்தெழுத்தை உச்சரிப்பதற்கும்பிராரத்தவினை தாக்காது இருத்தல் வேண்டும்; தாக்குமாயின் உச்சரிக்க முடியாது. ஆகவே, பிராரத்தவினை தாக்காது இருத்தல் பொருட்டு, ஒன்பதாம் சூத்திரத்தில் கூறியவாறு திருவைந்தெழுந்து உச்சரிப்பும், இங்குக் கூறியவாறு சிவனடியாரை வழிபடுதலும் ஆகிய இரண்டும் இன்றியமையாது வேண்டப்படும். மேலும் பஞ்சாக்கர உச்சரிப்பு வழிபாட்டை இன்றி முடியாது. ஆகவே, அகத்து வழிபாடு புறத்து வழிபாடு என்று இருவகைப்படும் வழிபாடுகளில் அகத்து வழிபாட்டை ஒன்பதாம் சூத்திரத்திலும் புறத்து வழிபாட்டை இந்தச் சூத்திரத்திலும் கூறினார் என்பதை அறிந்து கொள்வது நல்லது.

(7) எடுத்துக்காட்டு வெண்பா

தன்னை அறிவித்துத் தான்தானாய்ச் செய்தானைப்
பின்னை மறத்தல் பிழையலது - முன்னவனே
தானே தானாகச் செய்தும் தைவம் என்றும் தைவமே
மானே தொழுகை வலி

இதன் பொருள் :

தன்னை அறிவித்துத் தான் தானாய்ச் செய்தானைப் பின்னை மறத்தல் பிழை அலது - உயிரோடு பிரிப்பின்றி நிற்கும் இறைவன், ஆணவமல வல் இருளினால் மறைக்கப்பட்டு,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உண்மையை அறிய மாட்டாது குருடாய்க் கிடந்த உயிருக்குப், பலவகையான சாதனங்களை உணர்த்துவதால், குருட்டை நீக்கி இறைவனை அறியுமாறும். சிற்றறிவும் சிறுதொழிலும்உடைய அந்த உயிரை முற்றறிவும் முற்றுத் தொழிலும் உடைய இறைவன் தன்மையைப் பொருந்துமாறும் செய்து, காத்து அருளிய குருநாதரின் பெரியதோர் உதவியை, முற்றறிவும் முற்றுத் தொழிலும் பெற்ற பிறகு மறக்குமாயின், அவ்வாறு மறப்பது இதற்கு முன்பு அறியாமையால் மறந்த குற்றம் தீர்க்கப்பட்டவாறு போல, அறிந்தபின் செய்த இந்தக் குற்றம் தீரும் தன்மை உடையது அன்று.

முன்னவன் தானே தானாய்ச் செய்தும், தைவம் என்றும் தைவமே, மான் தொழிகையே வலி - அன்றியும், இறைவன் குருமூர்த்தியாய் வந்து மேற்கூறியவாறு, உயிரைத் தான் ஆகும் வண்ணம் செய்தாலும், இதுவரையும் தனக்குச் சுதந்திரம் இன்றி, இறைவனுடைய உதவியை இன்றி, ஒரு செயலும் செய்ய முடியாததாய் அடிமையாய் இருந்த உயிர், எக்காலத்தும் அவ்வாறு அடிமையே ஆகும். ஆகவே, **நன்றியை மறந்த குற்றம் தீர்க்க முடியாமையான்,** இறைத்தன்மையை அடையச்செய்த அந்தப் பெருமானை வழிபடுதலே இறைத்தன்மை பெற்ற ஆன்மாவுக்குப் பெருமை தருவது ஆகும்.

தெளிவுரை :

ஞானம் நிகழ்வதற்கு முன்பு வழிபடாது மறந்த குற்றம், அறியாமையால் நிகழ்ந்தது ஆகலின், அந்தக் குற்றம் நீக்கப்படும். ஞானம் தோன்றியபின்னர் வழிபடாத குற்றம் அதுபோல நீக்கப்படமாட்டாது. எனவேதான் வழிபாட்டின் இன்றியமையாமையை வலியுறுத்திய வள்ளுவப் பெருந்தகை,

''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வு உண்டாம்; உய்வு இல்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு''

என்று கூறியருளினார். வழிபாடு செய்யவில்லை ஆயின், உய்வு இல்லை என்றார். உய்தல் ஆவது ஈடேறுதல்.

''தான் தானாச் செய்தல்'' என்பதற்கு இறைவன் உயிரைத் தானாகச் செய்தான் என்பது பொருளே அன்றி, இறைவன் இறைவனாகச் செய்தான் என்பது பொருளன்று. இவ்வாறு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கூறுவதற்குக் காரணம், எதனை எதனைப் பற்றினாலும், அது அதுவாய் நிற்கும் தன்மை உடைய உயிர், இறைவன் ஆகி தன்னைப் பற்றிய பொழுது, **தனக்குரிய எண் குணங்களும் உயிரின் இடத்து நிறைந்து, தன் வண்ணமாகச் செய்தலே 'தான் தானாச் செய்தல்' என்பதற்குப் பொருள் ஆகும்.** பிறவற்றைப் பற்றி அப்பொருளாய் நிற்றல், உயிர்க்குத் தூலநிலை; இறைவனைப்பற்றி, இறைவனாய் நிற்றல் உயிர்க்குச் சூக்கும நிலை.

எண் குணங்களையும் இறைவன் உயிரின் இடத்தில்பதித்ததற்குப் பயன் என்ன என்றால், எண் குணங்களை உடைய இறைவன் இன்ப வடிவினனாய், பிறப்பு இறப்பு என்னும் துன்பம் இல்லாதவனாய் இருத்தல் போல, எண் குணங்கள் பதியப் பெற்ற உயிரும், இன்பவடிவினதாய்ப் பிறப்பு இறப்பு என்னும் துன்பம் இல்லாததாய் இருக்கும். அவ்வாறாயின், இறைவனும் உயிரும் சமம் ஆகாதோ? என்றால் ஆகாது, எதனால் எனின், இன்பவடிவு ஆதலும் பிறப்பு இறப்பு இல்லாது இருத்தலும் இறைவனுக்கு இயற்கையாய் உள்ளவை; உயிர்க்கு அவை செயற்கையாய் அமைந்தவை. அஃதாவது **இறைவன் அநாதியே முத்தன்; உயிர் இடையில் முத்தி பெற்றது.**

இறைவனுக்கும் உயிருக்கும் எண்குணங்கள் சமமாக நிறைந்து இருப்பதால், இறைவனிடத்து உள்ள எண்குணங்கள் பஞ்சகிருத்தியத்தைச் செய்வதற்கும், உயிரினிடத்து உள்ள எண்குணங்கள் பஞ்சகிருத்தியத்தைச் செய்யாது இருத்தற்கும் காரணம், மேற்கூறியவாறு 'இயற்கை செய்கை வேறுபாடே' ஆகும். அஃது எப்படி என்பதற்கு விளக்கம் வருமாறு :

உயிர் எக்காலத்தும் அடிமையே ஆதலால், முத்தி பெற்ற பொழுதும் அடிமைத்தன்மை நீங்காமையால், இறைவனைப்போல் பஞ்சகிருத்தியம் செய்யுமாறு இல்லை. குருடன் ஒருவனிடம் கண்ணொளி உடைய பிசாசு ஆவேசம் ஆயின் அந்தப் பிசாசுக்கு உரிய எல்லா ஆற்றல்களும், இந்தக் குருடனிடத்தில் விளங்கித் தோன்றும்; ஆயினும் அவனிடத்தில் உள்ள குருட்டுத்தன்மை நீங்காது; அதுபோல உயிர் முத்தியில் இறைத்தன்மையைப் பெற்றாலும், அதன் அடிமைத்தன்மை என்றும் நீங்காது. **ஆகவே, பஞ்சகிருத்தியம் செய்யும் ஆற்றல்**

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உயிர்க்கு இல்லை என்பது பெறப்பட்டது. இக்கருத்துப்பற்றியே,

''உயிர்தானும் சிவானுபவம் ஒன்றினுக்கே உரித்து''

என்று சிவஞான சித்தியார் முழக்குகின்றது.

(8) எடுத்துக்காட்டு வெண்பா

சிவம் என்னும் அந்ததர சிந்தைநேர் நோக்கப்
பவம் இன்றாம் கண் வாசகத்தின் - சிவம் உண்டாம்
ஒன்றும் இரண்டும் மலத்தார்க்கு இங்கு ஒண்குருவால்
இன்று இந்நூல் மும்மை மலர்க்கு,

(கொண்டுகூட்டு)சிவம் என்னும் அந்ததர ஒன்றும்இரண்டும் மலத்தார்க்குச், சிந்தை நேர் நோக்க கண் வாசகத்தின் பவம் இன்று ஆம் சிவம் உண்டாம், மும்மை மலர்க்கு இங்கு ஒண்குருவால் இன்று இந்நூல்.

இதன் பொருள் :

சிவம் என்னும் அந்ததர மேலை வெண்பாவில்கூறியவாறு, இறைவன் தானாகச் செய்ததனால், சிவன் என்னும் தன்மையில் நின்றும் நீங்கிச் சிவம் என்று ஓதப்படுகின்ற வேதாந்தத்தின் தெளிவு ஆகிய சித்தாந்தத்தை உடைய மாணவகனே, **ஒன்றும் இரண்டும் மலத்தார்க்கு சிந்தை நேர் நோக்கக் கண் வாசகத்தின் பவம் இன்றாம் சிவன் உண்டாம்** - ஆணவ மலம் ஒன்றே உடைய விஞ்ஞான கலர்க்கு, அவர் அறிவின்கண்நின்று-அருட்பார்வையால் நோக்குவதாலும். ஆணவம் கன்மம் என்னும்இரு மலங்களை உடைய பிரளயாகலர்க்கு, மான், மழு, நான்கு தோள்களை உடைய தேவகுருவாய், அந்தப் பிரளயாகலர் முன் நின்று செய்யும் திருநோக்கம், பரிசம், வாக்கு எனப்படும் தீக்கையாலும், பிறவிக்குக் காரணம் ஆகிய பசுத்தன்மை நீங்கிச்சிவமாம் தன்மை விளங்கும் ; ஆதலால்.

மும்மை மலர்க்கு இங்கு ஒண் குருவால் இன்று இந்நூல் -

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அந்த இருவகை ஆன்மாக்களுக்கும் இந்த நூ ல் வேண்டுவது இன்று; அவ்விருவரின் வேறாகிய ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களை உடைய சகலருக்கே, இந்த உலகத்தில் அனுபவம் உடைய தேசிகர் ஆகிய மெய்கண்டதேவ நாயனாரால் உபதேசிக்கப்படுகின்ற இந்தச் சிவஞானபோதம் என்னும் நூல் உரிமைஉடையது ஆகும்.

தெளிவுரை :

''**அந்தம்** '' என்பது வேதாந்ததையும், ''**அந்ததரம்**'' என்பது வேதாந்தத்தின் தெளிவு ஆகிய சைவசித்தாந்தத்தையும் குறிக்கும். எனவே மாணவனை ''அந்ததர'' என்று அழைத்தார். **சித்தாந்தமே சிவானுபூதியைத் தரும்.** எனவே, இந்தச் சிவானுபூதியைப் பெற்ற மாணுக்கனின் பெருமையைக் கூற எண்ணிச் 'சிவம் என்னும் அந்ததர'' என்றார்.

சித்தாந்தம் என்பது, வேதாந்தத்தின் வேறானதன்று என்பதை வலியுறுத்தும் பொருட்டே, 'வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தத்தை உடைய மாணவகனே' என்றார்.அவ்வாறாயின், வேதாந்தமே போதுமே, சித்தாந்தம் கூறியது மிகை ஆகாதோ என்றால், ஆகாது; ஏனென்றால் 'வேதாந்தம்' என்பது வேதத்தின் அந்தம் ஆகிய உபநிடதங்கள் ஆகும், ஏகான்மவாதமும் மாயாவாதமும் இடுகுறிப் பெயரால் 'வேதாந்தம்' என்று வழங்கப்படுகின்றன. என்றாலும், அவை வேதாந்தம் ஆக மாட்டா. உபநிடதங்களும் பலவாக உள்ளன. அவற்றுள் சில உபநிடதங்கள் நாராயணனையே பிரமம் என்கின்றன; வேறு சில உபநிடதங்கள் பிரமாவையே (அயனை) பிரமம் என்கின்றன; இவ்வாறு ஒவ்வொரு தெய்வத்தையும் பிரமம் என்று பல்வேறு உபநிடதங்கள் கூறுகின்றன. சுவேதா சுவதரம்முதலிய சில்உபநிடதங்கள் மட்டும்சிவபெருமானையே பிரமம் என்று கூறுகின்றன.

.கடவுள் வேறு; தெய்வம் வேறு. கடவுள் பிறப்பு இறப்பு கட்கு உட்படுவதில்லை. தெய்வம் பல்வேறு பிறப்புட்பட்டு இறுதியில் , கடவுள் தன்மையைப் பெறுகின்றது. அரசனது ஆணையைத் தாங்கியுள்ள ஒவ்வொரு அதிகாரிகளையும்,அரசன் என்று உபசரித்துக் கூறும் அவ்வளவே போலச், சிவபெருமானின் ஆணையைப் பெற்றுள்ள ஒவ்வொரு தேவர்களையும் பிரமம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

என்று உபசரித்து உபநிடதங்கள் கூறுகின்றன என்றாலும், அதிகாரிகள் உண்மையில் அரசர் ஆகார்; அது போல ஏனைய தேவர்கள் உண்மையில் பிரமம்ஆக மாட்டார்கள்.

அப்படி இருக்கும் பொழுது, ஏனைய தேவர்களையும் பிரமம் என்று கூறுவதற்கு என்ன காரணம் என்றால், தனக்கு மேல் முதல் இல்லை என்று எண்ணுகின்றவர்க்கு, ஒவ்வொரு படித்தரமாய் முதல் உண்டு என்று காட்டும் பொருட்டு, ஆகுபெயர்ப் பொருளில் அவ்வாறு கூறப்பட்டது. இவ்வாறு ஏனைய தேவர்களை ஆகு பெயரால் பிரமம் என்று கூறும் உபநிடதங்களும் **தெளிவாகச் சிவபரம் பொருளையே பிரமம் என்று** கூறுகின்றன. எனவே **உபநிடதங்களுக்கு எல்லாம் சிவமே பிரமம் என்பது தான் கருத்து ஆகும்.**

உபநிடதங்களும் வேதாந்தம் என்றே வழங்கப்படுவதால், இந்த உபநிடதங்களுள் எது மெய். எது பொய் என்னும் ஐயம் உண்டாகும் அல்லவா? அந்த ஐயத்தை நீக்குதல் பொருட்டுச், சிவபரம்பொருளையே பிரமம் எனக் கூறும் தெளிந்த பொருளைஉடைய வேதாந்தத்தைத் தனித்து எடுத்து, இதுவே முடிந்தபொருள் எனக் கூறியது சிவாகமங்கள் ஆகிய சைவசித்தாந்தம். ஆகவே, 'வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தம்' எனக் கூறியது மிகையாகாது.

இந்த இடத்தில் கருத்தில்இருத்திக்கொள்ளத் தக்க கருத்து ஒன்று உள்ளது, அது வருமாறு :- **சைவ சித்தாந்தம் கொள்கின்ற முப்பொருள் உண்மையைக் கொள்வதே வேதாந்தம் ஆகும்; முப்பொருள் உண்மையைக் கொள்ளாதது வேதாந்தம் ஆகாது; வேதாந்தம் என்ற பெயரில் முப்பொருள் உண்மையைக் கொள்ளாத மதம், ஏகான்மவாத அல்லது மாயவாத மதம் ஆகும்.**

வேதாந்தம், சிந்தாந்தம் என்று வேறாகக் கருதும் நிலை, சகலரிடத்தில் மட்டுமே உள்ளது. விஞ்ஞானகலர் பிரளயாகர்களிடத்தில் இல்லை. ஆகவே, இந்நூல் சகலர்க்கு உபதேசிக்கப்பட்டது என்று கூறப்படுகிறது.

இந்த அதிகரணத்துடன் வைத்துச் சிந்திக்கத்தக்க சிவஞான சித்தியார்ப் பாடல் பின்வருமாறு :-

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பாடல் எண்	தொடக்கச் சொற்கள்
328	பரம் பிரமம் இவன் என்றும்,

பன்னிரண்டாம் சூத்திரத்தினால் பெறப்பட்ட தொகைப் பொருள்

1. சீவன் முத்தர் உடம்போடு கூடி வாழும் காலத்தில், அவருடைய அறிவு இச்சை செயல்கள், புறத்துச் செல்லும் பொழுது, அவரது அறிவு மலத்தை நீக்குவதிலும், அவரது இச்சை அன்பரொடு கூடுவதிலும், அவரது செயல் திருவேடத்தையும் சிவ ஆலயத்தையும் வழிபடுவதிலும் செல்லும்.

2. விபரீத உணர்வைச் செய்யும் மும்மலங்களையும் களைவதே முதலில் செய்வேண்டுவது ஆகும்.

3. மலம் நீங்கப் பெறுதற்பொருட்டுச் சிவனடியாரொடு இணங்கி இருக்கவேண்டும். இஃது இரண்டாவது செய்ய வேண்டுவது ஆகும்.

4. சிவபெருமான் வெளிப்பட்டு விளங்கும் திருவேடத்தையும் சிவாலயத்தையும், சிவன் எனவே கண்டு வழிபடவேண்டும். இது மூன்றாவது செய்ய வேண்டுவது ஆகும்.

5. இம் மூன்றையும் செய்ய வேண்டுவது சீவன் முத்தர்க்குக் கடமை ஆகும்; ஆகவே இவற்றைச் செய்யாத பொழுது, நன்றி மறத்தல் ஆகிய குற்றம் உண்டாகும்.

இந்நூலுக்கு அதிகாரி சகல வருக்கத்து உயிர்களே என்பது ஒழிபு அதிகரணத்தில் தெளிவுறுத்தப் பெற்றது.

பன்னிரண்டு சூத்திரங்களும் முற்றுப் பெற்றன

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பாயிரம்

நூல்மரபு

எந்தை சனற்குமரன் ஏத்தித் தொழ இயல்பாய்
நந்தி உரைத்து அருளும் ஞானநூல் - சிந்தை செய்து
தான் உரைத்தான் மெய்கண்டான் தாரணியோர் தாம்உணர
ஏதுதிட் டாந்தத்தால் இன்று.

இதன் பொருள் :

நந்தி பெருமானை எமதுதந்தை ஆகிய சனற் குமார முனிவர், ஞானபாதப் பொருளை உபதேசித்து அருளும் பொருட்டுத் துதித்து வணங்கினார். சீகண்ட பர்மேசுரனிடத்துச் சிவஞான போத நூலைக் கேட்டு அருளிய நத்தி பெருமாவ், பரமேசுரனிடத்தில் தான் கேட்டவாறே, அந்நூலைச் சனற்குமார முனிவர்க்கு உபதேசித்து . அருளினார். சனற்குமார முனிவர் சத்திய ஞான தரினிகளுக்கும், சத்தியஞான தரிசினிகள் பரஞ்சோதி முனிவருக்கும், பரஞ்சோதி முனிவர் மெய்கண்ட தேவருக்கும் உபதேசித்தனர். மெய்கண்ட தேவ நாயனார் பரஞ்சோதி முனவரிடம் கேட்டவாறே சிந்தித்துத், தமிழ் கூறும் நல்லுலகம் அந்நூற்பொருளை அறிந்து நற்கதி அடைதல் பொருட்டுக் கருத்துரை, மேற்கோள், ஏது, எடுத்துக்காட்டு வெண்பாக்களுடன் இக்காலத்தில் அருளிச் செய்தார்.

தெளிவுரை :

'எந்தை' என்னும் சொல் என் தந்தை என்னும் பொருளைத் தரும். இங்கு, எல்லா உயிர்களையும் பேணும் மகானாய், நாம் எல்லாம் நல்வழி பெற்று உய்யும் பொருட்டு, ஞான பாதப் பொருளை நிலைபெற வைத்து அருளும் பேருதவியைச் செய்வதால், பெற்ற தந்தைக்கு ஒப்பானவர் என்னும் கருத்தில் நம் குருநாதரைக் கூறும் மரபு பற்றிச் சொல்லப்பட்டது.

'தாரணி' என்பது இங்குத் தமிழ் வழங்கும் நிலம் அனைத்தையும் குறிக்கும். இதற்குக் காரணம், தமிழ் நூலிலுள்ள சொற்பொருளை உணரும் திறன் தமிழ் மொழியைத் தாய்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மொழியாகக் கொண்டிருப்பவர்க்கே கூடும் என்பதனாலேயே ஆகும். ஆகவே, சிவஞானபோதம் என்னும் இந்நூற் பொருளை நுட்பமாக அறிந்து உணர விரும்புபவர்கள், தமிழ் மொழி கற்றுப் பின்பு இந்நூலைக் கற்பது, பெரிதும் பயன் உடையதாகும் என்பது பெறப்படும்.

முன்னையோர் தம் குருநாதரிடமிருந்து பெற்றவற்றைப் பின்னையோர்க்கும் பயன்படுமாறு உரைக்கத் திருவுளம் கொண்டதற்குக் காரணம். **'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்''** என்னும் திருமந்திரம் (85) அருளியதற்கு ஏற்ப **கருணை மிகுதியால்** அருளிச் செய்ததனாலேயே ஆகும்.

இந்த வெண்பாவால், கருத்துரை, மேற்கோள், ஏது, எடுத்துக்காட்டு வெண்பா ஆகியன மெய்கண்ட தேவநாயனாராலேயே அருளிச் செய்யப் பெற்றன என்பது பெறப்படுகிறது. இவற்றுள் ''கருத்துரை''யில் உள்ள செய்திகள், அந்தந்தச் சூத்திரத்தின் தெளிவுரையில் கூறப்பட்டுள்ளன. அக்கருத்துரைகள் வருமாறு.

சூ. எண்	கருத்துரை
1.	சங்கார காரணனாய் உள்ள முதலையே முதலாக உடைத்து இவ்வுலகம்
2.	புனர் உற்பவம் வருமாறு உணர்த்துதல்
3.	ஆன்மப் பிரகாசம் உணர்த்துதல்
4.	இதுவும் அது
5.	இவ்ஆன்மாக்கள் இடத்துத் தமது முதல் உபகாரம் உணர்த்துதல்
6.	சத்தும் அசத்தும் வரை செய்து உணர்த்துதல்
7.	மேலதற்கு ஓர் புறனடை உணர்த்துதல்
8.	ஞானத்தினை உணரும் முறைமையினை உணர்த்துதல்
9.	ஆன்ம சுத்தி பண்ணுமாறு உணர்த்துதல்
10.	பாச க்ஷயம் பண்ணுமாறு உணர்த்துதல்
11.	பரமேசுரனது சிபாதங்களை அணையுமாறு உணர்த்துதல்
12.	அசிந்திதனாய் நின்ற பதியைச் சிந்திதனாகக் கண்டு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வழிபடுமாறு உணர்த்துதல்.

இந்தக் "**கருத்துரை**" சூத்திரத்தின் கருப்பொருளை உணர்த்துவதால், அப்பெயர்பெற்றது. இது போலவே "**சூர்ணிக் கொத்து**" என்று ஒன்று உள்ளது. இஃது ஒவ்வொரு அதிகரணத்திற்கு ஒன்றாக, முப்பத்தொன்பது அதிகரணங்களுக்கும் உள்ளது, இது பொல்லாப்பிள்ளையார் அருளியது என்று கூறுகிறார்கள். சிவஞான சுவாமிகள் தம் உரையில், இந்தச் சூர்ணிக் கொத்தை எந்த இடத்திலும் எடுத்து ஆளவில்லை.

முப்பத்தொன்பது சூர்ணிக்கொத்து வருமாறு :

முதற் சூத்திரம்

அதிகரணம்

1. சகம் பிறப்பு இறப்பு ஆகிய முத்தொழிலை உடையது
2. அஃது அரனாலே உடையது
3. மற்றிருவரும் முத்தொழில் படுபவர்கள்

இரண்டாம் சூத்திரம்

1. அரன் உயிர்களின் இரண்டற நிற்பன்
2. உயிர்களுக்குக் கன்ம பலனை அரனே கொடுப்பன்
3. உயிர்கள் அச்சு மாறியே பிறக்கும்
4. அரன் சருவ வியாபகன்

மூன்றாம் சூத்திரம்

1. இல்லை என்ற அறிவுடனே சொல்லுகையினாலே அறி உயிர் உண்டு
2. எனது உடல் என்று பொருட் பிறிதின்கிழமையாகச் சொல்லுகையினாலே, உடற்கு வேறாய் உயிர் உண்டு
3. ஐந்தையும் ஒருவனே அறிதலின், ஒவ்வொன்றை மாத்திரம் அறிகிற ஐந்திற்கும் வேறாய் உயிர் உண்டு
4. கனவு உடலை விட்டு நனவு உடலில் வருகையினாலே, அக் கனவு உடற்கு வேறாய் உயிர்உண்டு
5. நித்திரையிலும் பிராணவாயுத் தொழில் பண்ணவும்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சரீரத்துக்குப் புசிப்பும் தொழிலும் இல்லாதபடியினாலே, பிராணவாயுவுக்கு வேறாய் உயிர் உண்டு

6. மறந்து மறந்து நினைக்கிறபடியினாலே மறவாமல், இருக்கிற அரனுக்கு வேறாய் உயிர் உண்டு

7. எல்லாத் தத்துவங்களுக்கும் வேறு வேறு பெயர் இருக்கையினாலே, அந்தத்தத்தத்துவங்களுக்கு வேறாய் உயிர் உண்டு

நான்காம் சூத்திரம்

1. அந்தக்கரணங்களுக்கு உயிர் உட்கூடினால் அன்றித் தொழில்இல்லாதபடியினாலே, அந்தக் கரணங்களுக்கு வேறாய் உயிர் உண்டு

2. மலமறைப்பால் உயிருக்கு அறிவு இல்லை

3. உயிர் மூன்று அவத்தைப்படும்

ஐந்தாம் சூத்திரம்

1. உயிராலே தத்துவங்கள் எல்லாம்தொழில் படும்.

2. அரனாலே உயிர்கள் எல்லாம் அறியும்

ஆறாம் சூத்திரம்

1. உயிர் அறிவினாலே அறியப்பட்டன எல்லாம்அழியும்

2. அப்பிரமேயமாக அறியப்பட்டவனே அரன்

ஏழாம் சூத்திரம்

1. அரன் பாசத்தை அநுபவியான்

2. பாசம் அரனை அநுபவியாது

3. உயிர் அவ் அரனை அடையும்; அனுபவிக்கும்

எட்டாம் சூத்திரம்

1. உயிருக்கு நல்லறிவு தவத்தினாலேயே வரும்

2. உயிருக்குச் சற்குருவாய் வருவது அரனே

3. உயிர் பஞ்சேந்திரியங்களைப் பற்றுகையினாலே தன்னையும் அறியமாட்டாது

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

4. . உயிர் பஞ்சேந்திரியங்களிலே பற்று அற்றால் தன்னையும் அறியும்.

ஒன்பதாம் சூத்திரம்

1. உயிர் அரன் ஞானத்தினாலேயேஅரனைக் காணும்
2. உயிர் பாசத்திலே பற்றற்றால், அரன் வெளிப்படுவன்
3. பஞ்சாட்சர செபம் பண்ணினால் வாசனாமலம் போகும்

பத்தாம் சூத்திரம்

1. அரனுடன் ஒன்றாகி நில்
2. உன் தொழில் எல்லாம் அரன்பணி என்று கொள்

பதினோராம் சூத்திரம்

1. ஞானிக்கு வருகிற விடயங்களை அரனே அநுபவிப்பன்

2. அரனை மறவாமல் அன்பு இருந்தால் அவனிடத்தில் ஐக்கியமாய்ப் போவான்.

பன்னிரண்டாம் சூத்திரம்

1. மும்மலங்களையும் களைக
2. சிவஞானிகளுடனே கூடுக
3. சிவஞானிகளையும் சிவலிங்கத்தையும் சிவன் எனவே தேறி வழிபடுக
4. வழிபடாமையை ஒழிக

சூர்ணிக் கொத்து என்பது, பொருள்களின் கருத்துத் தொகுப்பு ஆகும். ஆகவே, இந்தச் சூர்ணிக் கொத்தைச் சிவஞானபோதப் பன்னிரு சூத்திரங்களின் தொகுப்புரையாகக் கொள்ளலாம்.

- சிவஞான போதத் தெளிவுரை முற்றுப்பெற்றது -

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

N. m.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

PAPER FOR ALL KINDS
OF PHOTO COPIERS

Digitization by eGangotri-South Center

Digitization by eGangotri-South Center

New

bilt

IMA

COP

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.